2979

T.N.L.A Debates

Official Report

Vol 40 No 2

24th April 1987

D 1
V211,31 N87
N87.40.2
1365.4

வெளியீடு 3-5-1988 Issued 3-5-1988

2479

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 24, 1987–தொகுதி 40–எண் 2
Friday, the 24th April 1987–Volume 40–No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3 00 paise

(ஏ) சமயபுரம் அருகில் மாணிக்கபுரத்திற்கு இணைப்புப் பாலம் .. .. .. 426—427

(ஐ) மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்கள் பணி நீக்கப் பிரச்சினை .. .. 427—431

(ஒ) குமரி மாவட்டத்தில் தேன் விற்பனையில் தேக்கம் .. .. .. .. 431—434

5. அரசினர் சட்ட முன்வடிவு—

வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987 .. .. .. 434—436

6 வரவு—செலவுத் திட்டம், 1987–88—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள் .. 437

(ஆ) கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. 438

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. க. இராசாராம் | 437 438 543—549 |
| திரு. டி. என். முருகானந்தம் | 439—448 |
| திரு. தி. அன்பழகன் | 449—455 |
| திரு. பொன் முத்துராமலிங்கம் | 455—465 |
| திரு. கூடலூர் இ. வி. வேலு | 465—474 |
| திரு. ஜே. ஜெயமச்சந்திரன் | 474—482 |
| திரு. த. பழனி | 482—490 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 491—496 |
| டாக்டர் கே. சமரசம் | 496—505 |
| திரு. பெ. செங்கோட்டையன் | 505—514 |
| திரு. வி. பாலகிருஷ்ணன் | 514—520 |
| திரு. கே. அன்பழகன் | 520—526 |
| திரு. பொ. உத்திராபதி | 526—533 |
| திரு. ஜி. கே. ஜெ. பாரதி | 533—543 |

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 24, வெள்ளிக்கிழமை.

சித்திரை 11, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்".

இந்தத் தொழிலை இக் கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியைத் தனி தாலுக்காவாக உயர்த்துதல்.

474—(*வினா எண் 4307) திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியை தனி தாலுக்காவாக உயர்த்துவது குறித்த செயற்குறிப்பு அரசிடம் (ஆ) உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தாலுக்காவாக ஆக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரிய வட்டங்களைத் தேவையின் அடிப்படையிலும் அரசின் நிதி நிலைக்கேற்பவும் காலப் போக்கில் பிரித்தமைக்கலாமென்று அரசு கருதுகிறது. கடலாடி தனி வட்டமாக எப்பொழுது அமைக்கப்படுமென்று திட்டவட்டமாகக் கூறவியலாது.

[1987 ஏப்ரல் 24

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கடலாடி ஒன்றியம் 75 கிலோ மீட்டர் நீளமும் 30 கிலோ மீட்டர் அகலமும் உள்ள மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட ஒன்றியமாக இருக்கிறது. சட்டமன்றப் பேரவைத் தொகுதியினுடைய வாக்காளர்கள் 97,000 பேர்கள், உள்ளாட்சிமன்றத் தொகுதிகளில் 1,15,000 என்ற அளவிலே மிகப் பெரிய ஒன்றியமாக, 60 பஞ்சாயத்துக்கள் நிரம்பியிருக்கிற காரணத்தாலே, அதனுடைய நிர்வாக வசதிக்காகவும் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் பின் தங்கிய பகுதியாக இருக்கிற கடலாடி பகுதியை நடப்பாண்டிலே தாலுக்காவாக்க வேண்டுமென்ற எண்ணத்தை இந்த அரசு நிறைவேற்றுமா என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் வட்டம் மிகப் பெரியதாக இருக்கிற காரணத்தால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்துரு அரசின் ஆய்வுக்குக் கொண்டு வரப்பட்டு அதை அரசளவிலே ஆராய்ந்து இரண்டாகப் பிரிக்கலாம் என்ற அளவுக்கு ஒரு ஆய்வு நடத்தப்பட்டு ஒரு வட்டத்தினுடைய தலைநகராக முதுகுளத்தூரையும் மற்றொரு வட்டத்தினுடைய தலைநகராக கடலாடியை அமைப்பதா அல்லது சாயல்குடியை அமைப்பதா என்ற பிரச்சினை எழுந்து முதுகுளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது முடிவெடுக்கலாம் என்று அந்தக் கருத்துரு அங்கே அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கருத்துருவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது மறுபடியும் முடிவு கட்ட வேண்டும். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்தும் வட்டங்களைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பை முழுமைப்படுத்தும்போது அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டு இரண்டாகப் பிரிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படும். ஆனால் முதுகுளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கலாம் என்ற ஒரு கருத்தினுடைய அடிப்படையிலே ஆய்வு மட்டும் நடைபெறுகிறது.

526

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலிருந்து விவசாயிகள் அவசரத்திற்காக வட்டாட்சியரைப் பார்ப்பதற்காக வருவது என்றால் இரண்டு மூன்று பேருந்துகள் மாறித்தான் வரவேண்டும். அந்த அளவு ஏழை விவசாயிகள் வட்டாட்சியரைப் பார்ப்பதற்கு 70 கிலோ மீட்டர், 80 கிலோ மீட்டர் தூரம் அலைகின்ற அவல நிலையைப் போக்குகின்ற வகையில் இந்த ஆண்டு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து இதுபோன்ற கோரிக்கைகள்



1987 ஏப்ரல் 24]

வந்தாலும் கடலாடி தொகுதிக்கு மட்டும் முன்னுரிமை வழங்கி ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யும் வகையில் இந்த நடப்பாண்டிலேயே அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இது மாதிரி 12 செயற்குறிப்புகள் அரசினுடைய ஆய்விலே இருந்து வருகின்றன. முதுகுளத்தூர் ஆய்வு 6-வது செயற்குறிப்பாக முன்னுரிமை வரிசையிலே இருந்து வருகிறது. ஆகவே ஆய்விலே எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக படிப்படியாக நிறைவேற்றுகின்ற சூழ்நிலை ஏற்படும்போது முதுகுளத்தூர் பிரிக்கப்படுகின்ற தன்மையும் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே நீண்ட நெடுங்காலமாக இவையெல்லாம் தனி வட்டங்களாக அமைந்து, பணிகளை மேற்கொண்டுதான் வந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று மக்களுடைய நலன்கள், வசதிகள் பெருக வேண்டுமென்று கருதியும், அவர்களுடைய சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்று கருதியும், பணிகள் எல்லாம் விரைவாக, நன்றாக நடைபெற வேண்டுமென்று கருதியும்தான் இரண்டாகப் பிரிக்கின்ற நடவடிக்கை அண்மையிலே மேற்கொள்ளப்பட்டு 130, 132 வட்டங்கள் இருந்த இடத்தில் இப்பொழுது 168 வட்டங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டும் வட்டங்கள் பிரிக்கின்ற முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

## நிலவள வங்கிகளில் கடன் பெறுதல்.

475—(*வினா எண் 6197) திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளில் கடன்பெறும்போது அடமானம் செய்ய பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டணம் எந்த விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு நிறுவனங்களுக்கு, அவற்றின் அங்கத்தினர்கள் அவற்றிடமிருந்து பெறப்படும் கடன் தொகைக்குரிய அடமானப் பத்திரம் பதிவு செய்யப்படுவதற்கு, கடன் தொகை ரூ. 5,000 வரைக்கும் பதிவுக் கட்டணம் பாதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. ரூ. 5,000-க்கு மேற்பட்ட அட

மானப் பத்திரங்களுக்கு பதிவுக் கட்டணம் முழு விகிதத்தில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஆதி திராவிட மற்றும் மலை ஜாதி வகுப்பினைச் சார்ந்த (Scheduled Castes and Scheduled Tribes) கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள், எழுதித் தரும் அடமானப் பத்திரத்தில் கண்ட கடன் தொகை முழுவதற்கும் உச்ச வரம்பு ஏதுமின்றி பதிவுக் கட்டணம் வசூல் செய்யப் படுவதில்லை.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் இருந்து அரசாங்கக் கடன் பெறுகிறபோது அதற்குப் பத்திரம் பதிவு செய்யாமல் வேறு ஏதேனும் முறைகள் மூலமாகப் பத்திரங்களை வாங்கிக்கொண்டு இந்தக் கட்டணத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? விவசாயிகளுடைய வறுமையான காலங்களில் இதுபோன்ற கடன்கள் அத்தியாவசியப்படுகிற காரணத்தினாலே பரிவோடு அரசு இதைப் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குத் தேவையான நீண்டகாலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நபார்டு நிதியுதவியுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியாதாரங்கள் சாதாரண மற்றும் சிறப்பு வெளியீடுக் கடனீட்டு பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் மாநில நிலவள வங்கி நிதியைத் திரட்டுகிறது. நபார்டு இந்த நிபந்தனையைத்தான் வைத்திருக்கிறது. 1934ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத்தின்படி நிலம் பதிவுசெய்த அடமானப் பத்திரங்களை ஆதாரமாகக் கொண்டுதான் மாநில நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட முடியும். இந்த நிலையில் நில அடமானப் பத்திரங்கள் பதிவு செய்வது இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே அதிலே உள்ள கஷ்டங்களை வேறு வகையிலே மாற்றி அது சுமுகமாக நடைபெறமுடியும். அதிலே ஏமாற்றங்களோ, மோசடிகளோ. கடன் வசூலிப்பதில் திருப்பி வசூலிப்பதில் கஷ்டம் ஏற்படாத நிலை இருக்குமானால் அதற்கான யோசனை தரப்படுமானால் அதை நபார்டுக்கு எடுத்துச் சொல்லி இந்த நிபந்தனையை மாற்றுவதற்கு முயற்சி செய்யலாமே தவிர இப்போது இந்த விதிமுறைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளில் கடன் பெறும்போது அடமானம் செய்வதற்குப் பத்திரத்தைப் பதிவு செய்வதற்குப் பதிலாக பட்டா பாஸ் புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு அதன் மூலமாகக் கடன்களைக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற சட்ட விதிப்படி அதற்கு இடமில்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நில அடமான வங்கிகளிலே கடன்கள் வாங்கும்போது 13 ஆண்டுகளுக்கு வில்லங்க சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்தால் போதும் என்ற நிலையை உருவாக்கலாமல்லவா? அரிசனங்களுக்கு இல்லை, நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. மற்ற சாதி இந்துக்களுக்கு பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே 13 ஆண்டுகளுக்கு வில்லங்க சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்கலாம், அதை வைத்தே கடன் கொடுக்கலாம் என்ற நிலையை அரசு உருவாக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அத்தகைய கருத்தின் அடிப்படையில் நாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் 1934ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும். அதற்கு நபார்டு ஒப்புக் கொள்ள வேண்டும். அந்தக் கருத்து ஆக்கப்பூர்வமான அளவுக்கு நடைமுறைப்படுத்தமுடியுமானால் வேண்டுமானால் பரிசீலனை செய்யலாமே தவிர இப்போது நாம் நடைமுறைப்படுத்த இயலாது.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கிகளிடமிருந்து கடன் பெறுகிறபோது, கிணற்றுக்கோ பம்புசெட்டுக்கோ கடன்கள் பெறுகிறபோது பத்திரங்களை எழுதுகிற ரிஜிஸ்டிரார் ஆபீசிற்குச் செல்கிற நேரத்திலே அந்த வங்கிகள் மூலமாகச் செயல்படுகிற லீகல் அட்வைசர்கள் அந்தக் குடும்பத்திலே திருமணமாகி வேறு இடத்திலே இருக்கிற பெண்களைக்கூட அழைத்துவந்துதான் பதிவு செய்யவேண்டுமென்று தெரிவிக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆமென்றால் அந்த நிலை வராத அளவுக்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் சட்டப் பிரச்னைகளாக இருக்கின்றன. அவை பற்றிய யோசனைகளை வழக்கறிஞர்களும் சட்ட நிபுணர்களும்தான் எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின் அடிப்படையிலே யோசனைகள் சொல்வார்களானால் அவர்களுடைய யோசனைகளின் அடிப்படையிலே வேண்டும் என்றால்

சிலபல விதிமுறைகளை மாற்றி, அதற்கேற்ப ஆணைகளைப் பிறப்பிக்கலாம். ஆனால், அவர்களே சிலபல வழிமுறைகளைச் சொல்கிறபொழுது அதனை மீறி சட்ட நுணுக்கத்திற்கு அப்பாற்பட்டு நாம் எந்த அறிவுரையோ அல்லது ஆணையோ பிறப்பிக்க இயலாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியிலே கடன் பெற்ற விவசாயப் பெருமக்கள் தவணைகளைத் திருப்பிச் செலுத்துகின்ற நேரத்திலே, கடைசி தவணை பணம் செலுத்துவதற்குப் பதிலாக ஏற்கனவே வங்கிக்குச் செலுத்தியிருக்கிற பங்குத் தொகைகளைக் கழித்துக்கொண்டு எஞ்சிய தொகையைச் செலுத்துவார்களானால் கடன் கழிந்ததாகக் கருதி பத்திரத்தைத் திருப்பி வழங்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கடன், வட்டி, அவர்கள் செலுத்த வேண்டிய தொகை, அத்தனையையும் செலுத்திவிட்டால் அதைத் திருப்பித் தரவேண்டியதுதானே முறை. (குறுக்கீடு) அந்தக் கடன் வாங்கியவர் அத்தனையையும் செலுத்தியாகிவிட்டது; வட்டியோ அல்லது எதுவுமோ பாக்கியில்லையென்ற சூழ்நிலையேற்படும்போது, பத்திரத்தைத் திருப்பித் தரவேண்டுமென்பதுதான் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒன்று. ஆனால், அதிலே சிக்கல் இருக்குமானால், அதைத் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வருவீர்களானால் சிக்கல் என்ன, அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, சிக்கலை நீக்குவதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.

திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் கடன் பெறுகிறபொழுது அடமானம் செய்கிறபொழுது, பத்திரங்களை ரிஜிஸ்தர் செய்த பிறகுதான் கடன் பெறவேண்டுமென்ற நியதி இருக்கிறது. நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே நில மேம்பாடு திட்டத்தின்கீழ் ஒரு பதிவேட்டினை, முறையாக, அந்த விவசாயிக்கு என்ன என்ன, நிலபுலன்கள் இருக்கின்றன என்று பதிவு செய்து கொடுத்துவிட்டால், அதன் மூலமாக வங்கிகளிலே கடன் பெறுகிறபொழுது அந்த சர்வே எண்ணை வைத்துக் கடன் பெறுவதைக் குறித்து வைத்து, அதன் மூலமாக அந்த விவசாயிக்கு எவ்வளவு கடன் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளும் வகையில் எளிதாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் நில மேம்பாடு திட்டத்தை நாம் கொண்டுவந்து பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, அலுவலர்களை நியமித்து, பட்டா பாஸ் புத்தகம





வழங்கியிருக்கிறோம். ஆகவே, அந்தப் பட்டா பாஸ் புத்தகத்தையே வைத்துக் கொண்டு, எப்படி மோட்டார் வாகன வரியை ஆர். சி. வரி வசூல் செய்யும்போது, நாம் செலுத்துகிற புக்கிலேயே பதிவுசெய்து முத்திரையிட்டுக் கொடுக்கிறார்களோ, அதுபோல், பட்டா பாஸ் புத்தகத்திலேயே பெற்றிருக்கிற கடனையும் எழுதி, முழுமையாகக் கடனைக் கட்டிய பிறகு, கடன் தீர்ந்து விட்டது என்று குறித்துவிட்டால் அந்தப் புத்தகத்திலே இருக்கிற குறிப்புகளை வைத்துக் கொண்டு, பத்திரங்களை ரிஜிஸ்தர் செய்கிற செலவைத் தவிர்க்கலாம். ஏழை விவசாயிகளுக்கு பட்டா பாஸ் புத்தகத்தின் மூலமாக கடன் வழங்குகிற திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நில மேம்பாடு திட்டத்தின்கீழ் அப்படிப்பட்ட விவரங்கள் எல்லாம் அடங்கிய வகையிலும், அதிலே சங்கடங்கள் ஏற்படாத வகையிலும் ஆக்குவதற்காகத் தான் புதிய முறையில் பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிலபல வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பல இடங்களிலும் வழங்குவதற்கான முயற்சிகள் நில மேம்பாடு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அந்தத் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விளக்கமாகவும் எடுத்து தெரிவித்தார்கள். அதிலேயே குறிப்பிடுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால், பல்வேறு சர்ட்டிபிகேட்டுகள் கேட்கவோ, சான்றிதழ் கேட்கவோ, அத்தாட்சிகள், ஆதாரங்கள் கேட்கவோ, விவசாயிகளை, மற்றவர்களை அலைக்கழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அல்லது நில மேம்பாடு திட்டத்தின் அடிப்படையில் பட்டா பாஸ் புத்தகங்களை எந்த அடிப்படையில் கொண்டு வந்தால் அதைப் பார்த்தவுடனே எந்த அளவுக்கு அவருக்கு இருக்கிறது என்று ஒருவருடைய நிலையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் தான் அந்தப் பட்டா பாஸ் புக்கே கொண்டு வரப்படுகிறது நில மேம்பாடு திட்டத்தின்கீழ். அது சிலபல இடங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அது ஓரளவுக்கு வசதியாகவும் இருக்கிறது. வேறு பல இடங்களில் கொண்டு வருவதற்கான முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. எ. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் அவர்களே, எங்களுடைய விளாத்திகுளம் பகுதியில் நிலவள வங்கி மூலம் கடனாகப் பெற்ற டிராக்டருக்குரிய கடன் பாக்கிகளை முறையாகக் கட்டிய விவசாயி ஒருவர் தனது கடைசி பாக்கியான ரூ. 1,250-ஐ, அவர் தன்னுடைய டெப்பாசிட் தொகையிலிருந்து கழிவு செய்து கொள்ளவேண்டுமென்று சொல்லி, கோவில்பட்டி நிலவள

வங்கியின் தனி அலுவலர் அதைக் கழிவு செய்ய முடியாது என்று கூறி உள்ளார். முறையாக பாக்கித் தொகையைக் கட்டியவருக்கு ஒரு சலுகையும் கிடைக்கவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியிலே அப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சலுகை தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள், தன்மைகள் ஆராயாமல் இப்போது நான் பதில் கூறுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அது பற்றிய நிலைமைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் அது பற்றி கேட்டு, என்ன நிலைமையில் அது மறுக்கப்படுகிறது என்று நாம் அறிந்து கொண்டால் அதை மற்றவர்களுக்கும் தெரிவிக்க முடியும். எல்லாவற்றையும் கட்டிவிட்டேன், டெப்பாசிட் இருக்கிறது, அந்த டெப்பாசிட்டிலிருந்து கழித்துக்கொள்ளுங்கள், டெப்பாசிட்டிலிருந்து கடைசித் தொகையை கழித்துக்கொள்ளுங்கள் என்றால் அவர்கள் ஏன் கழித்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்பது தெரிய வேண்டும். மறுக்கிறார்கள் என்றால் அதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் நியாயமாக இருந்தால் அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நியாயமில்லையென்றால் அவற்றை மாற்றும் தன்மையின் அடிப்படையில் அதற்கான ஆணையிட வேண்டி வரும். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நில வள வங்கியின் ஆண்டு பட்ஜெட்டில் பெரும் பகுதியை பெரிய விவசாயிகள் வாங்கிக் கொள்வதால் அது சிறு விவசாயிகள் மோட்டார் பம்புசெட் போட கடன் வாங்குவதற்குத் தடையாக இருக்கின்ற காரணத்தால் சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை, பின்னுரிமை என்று பேதம் பிரிப்பதற்கில்லை. அரசு தருகிற பணத்தின் அடிப்படையில் சிறு, குறு விவசாயிகளுக்கு இவ்வளவு பெர்செண்டேஜ் ஒதுக்க வேண்டும் என்று ஒரு கணக்கீடு வைத்திருக்கிறோம். அந்தக் கணக்கீட்டின் அடிப்படையிலே அவர்களும் பெற்று வருகிறார்கள். எல்லாவற்றையும் பெரு விவசாயிகள் எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்று குற்றச்சாட்டு சொல்ல முடியாது. புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது இந்தக் குற்றச்சாட்டுக்கு இடமேயில்லை.





திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் வழங்கும் விவசாயக் கடன்களுக்கு அடமானப் பத்திரம் எழுதி வாங்கப்படுகிறது. தனியார்களைப் போல 13 வருடங்களுக்குச் செல்லும். அதற்கு மேலும் செல்லுமா ? காரணம் விவசாயிகள் அடமானப் பத்திரம் வைத்து கடன் வாங்கிவிட்ட பிறகு இருபது வருடங்கள் கழித்து விற்று விடுகிறார்கள். அதற்குப் பிறகு அரசு அதிகாரிகள் அந்த நிலத்தை வாங்கியவர்களிடம் கடனைக் கேட்கிறார்கள். இது எப்படி சரியாக இருக்கும் ? 13 வருடங்கள் என்ற காலம் முடிந்து விடுகிறது. ஆகவே நிலவள வங்கியில் வாங்கும் கடன்களுக்காக வைக்கப்படும் அடமானப் பத்திரங்களுக்கு எத்தனை ஆண்டுகள் உயிர் உண்டு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அது பற்றி விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரத்தைச் சொல்லுகிறேன்.

### குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்தல்.

476—(*வினா எண். 10620) திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கேற்பவும் தேவைக்கேற்பவும், காலப்போக்கில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்தலைப்பற்றி குறித்து ஆய்வு செய்யப்படும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தாலுக்கா மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. இதைப் பிரிக்க வேண்டும் என்பது குளத்தூர் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். மானிய கோரிக்கையின் போது, இந்த தாலுக்காவை இரண்டாகப் பிரித்து இலுப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுக்கா ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். எனவே இந்த ஆண்டிலேயே புதிதாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி 11 வகையான செயற்குறிப்புகள் இருக்கின்றன. அதிலே குளத்தூரை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை குளத்தூர் வட்டம் என்றும் மற்றொரு பகுதியை இலுப்பூர் வட்டம் என்றும் ஏவக்க செயற்குறிப்பு இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறையில் அதன் தன்மைகளைப் பொறுத்து, நிதி ஆதாரத்தைப் பொறுத்து, வேறு பல சூழ்நிலைகளைப் பொறுத்து முடிவு காண வேண்டும். இதன் விவரக் குறிப்புகள் சிறப்பு ஆணையாளரிடமிருந்து தலைமைச் செயலகத்தில் உள்ள செயலாளருக்கு வந்து வருவாய்த் துறை ஆராய்ந்து பார்த்த பிறகு முடிவு எடுக்கப்படும். இந்த ஆண்டிலேயே நடைபெறும் என்று உறுதி கூற முடியாது. என்றாலும் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு அதை ஆராய்ந்துதான் செய்ய முடியும்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் முடுவார்பட்டி பிர்க்கா.

477—(*வினா எண் 12196) திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் அலங்காநல்லூர் யூனியன் முடுவார்பட்டி பிர்க்காவை மதுரை தாலுகாவுடன் இணைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டி வட்டம் 7 குறுவட்டங்களையும் 78 கிராமங்களையும் உள்ளடக்கியது. மதுரை வடக்கு வட்டம் 12 குறுவட்டங்களையும் 182 கிராமங்களையும் கொண்டது. முடுவார்பட்டி குறுவட்டம் 13 கிராமங்களைக் கொண்டதாக வாடிப்பட்டி வட்டத்தில் இயங்கி வருகிறது. இக் குறுவட்டத்தை மதுரை வடக்கு வட்டத்துடன் இணைத்தால், மதுரை வடக்கு வட்டம் 13 குறுவட்டங்களையும் 195 கிராமங்களையும் கொண்டதாக மாறிவிடும். இதனால் மதுரை வடக்கு வட்டத்தின் ஆட்சி வரம்பும், பரப்பளவும் மிகுதியாவதோடு மக்களுக்குக் கூடுதலாக தொல்லைகளும் ஏற்படும். மேலும் இதனால் வாடிப்பட்டி வட்டம் 6 குறுவட்டங்களையும் 65 கிராமங்களையும் கொண்டதாகவும் குறைந்துவிடும். எனவே முடுவார்பட்டி குறுவட்டத்தை வாடிப்பட்டி வட்டத்திலிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்படவில்லை.



1987 ஏப்ரல் 24]

(முற்பகல் 10-20)

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாடிப்பட்டி தாலுக்கா உசிலம்பட்டி கோட்டத்தில் இணைவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. தற்போது அது மதுரைக் கோட்டத்தில் இணைந்துள்ளதால், அதை வலியுறுத்தவில்லை. முடுவார்பட்டி பிர்க்கா வாடிப்பட்டி வட்டத்தில் இருப்பது அந்த மக்களுக்கு மிகச் சிறப்பாக இருக்குமென்று கூறுகிறார்கள். அதோடு வாடிப்பட்டி தாலுக்கா என்று ஏற்படுத்திய பின்னாலே, அதற்குரிய நீதிமன்றங்கள், ஆஸ்பத்திரி வசதிகள் போன்றவைகள் அங்கே ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அங்கே தாலுக்கா அலுவலகம் திறக்கப்படவில்லை. இவை குறித்து சீக்கிரம் நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, வாடிப்பட்டி தனி வட்டமாக தகுதி உயர்த்தப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதனைச் செம்மைபடுத்துவதற்கும், அந்த வட்டத் தலைநகரிலே நடைபெற வேண்டிய நிர்வாகப் பணிகளை சீராக, செம்மையாக நடத்த முயற்சிகளை அந்தந்தத் துறையினர் மேற்கொள்கின்றனர். அது முறைப்படி மேற்கொள்ளப்படும். இந்தக் கேள்வியைப் பொறுத்து முழு விவரம் இல்லாததால் அதைச் சொல்வதற்கில்லை. ஆனால் வட்டத் தகுதி நிலையை உயர்த்த வருவாய்த் துறையினர் தக்கபடி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைத்தல்.

(478—*வினா எண். 893)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சேலத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) சேலத்தில் நிலம் கையகப்படுத்தி, தக்க கட்டிடங்கள் கட்டி கல்லூரியை ஆரம்பிக்கும் வரை, அங்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக 1985—86ஆம் கல்வி ஆண்டு முதலாக 77 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிகளில் படித்து வருகின்றனர்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்ற வினாவோடு, இன்றைக்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் தவன ஈர்ப்புத் தீர்மானமும் அது பற்றி வந்திருக்கிறது. இப்படி வருவதனால் அமைச்சர்களுக்கு நேரம் வீணாகிறது............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரத்தை வீணாக்க வேண்டாம். கேள்வி நேரத்தில் ஆலோசனை சொல்ல வேண்டாம்.

டாக்டர் ந. மாசிலாமணி : தற்போது சேலம் மருத்துவக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் சேர்த்திருக்கிறார்கள். அந்த மாணவர்களை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்திற்கு என்று தனியாக மாணவர்களை நாம் சேர்த்தாலும், ஏற்கனவே இருக்கின்ற எண்ணிக்கைக்குக் கூடுதலாக நாம் மாணவர்களை எடுக்கவில்லை. ஏற்கனவே செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியிலே படிக்கும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலே படிக்கும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலே படிக்கும் சில மாணவர்களை சேலத்திற்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். இந்தக் கல்லூரிக்காக தனித்தனியாக அங்கே மாணவர்களைச் சேர்க்கவில்லை.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் அமைக்க இருக்கும் மருத்துவக் கல்லூரிக்கு நிலம் ஆர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதா? எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது? எப்போது கட்டிடங்கள் கட்ட உள்ளார்கள்? எப்போது அது முழுமையாக நிறைவு பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்னும் இடத்தையே சரியாகத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. எங்கே நிலத்தைக் கையகப் படுத்துவது என்பது சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சேலத்திற்குச் சென்ற போது, அவரே நேரடியாகப்





பார்த்து, சேலம் ஸ்டீல் பிளாண்டுக்குப் பக்கத்தில் நிலத்தை இதற்காக ஒதுக்கித் தரலாம் என்றும், அங்கே கட்டலாம் என்றும் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நிலத்தைக் கையகப்படுத்த சேலம் மாவட்ட ரெயில்வே செஸ் பண்டிலிருந்து 56,81,000 ரூபாய் தருவதற்கு இசைந்திருக்கிறார்கள். அதை வைத்து நிலம் கையகப்படுத்திய பிறகு, கட்டிடம் கட்டும் வேலை தொடங்கப்படும்.

திரு. சு. சிவராஜ் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கையில் சேலத்திலே புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதைத் தவிர தமிழகத்திலே புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க உத்தேசமுள்ளதா? தனியார் யாராவது தொடங்க முன் வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் அன்றி, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையில் ஒன்று போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் துவக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. தனியார்கள் 3 கல்லூரிகளைத் துவக்க ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மற்றும் சிலர் மனு போட்டிருக்கிறார்கள். அவற்றை இப்போது அரசு பரிசீலிப்பதாக இல்லை.

மேட்டூர் நீர்த்தேக்கம் அருகிலுள்ள தொழிற்சாலை கழிவுநீர்.

479—(*வினா எண். 3189)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் நீர்த்தேக்கம் அருகில் உள்ள பகுதிகளில் தொழிற்சாலை கழிவுநீரின் ரசாயன கலவை கலந்துவிடுவதால் அங்கு தோண்டப்படும் ஆழ்துளை கிணறுகளிலிருந்து வரும் தண்ணீர் பயன்படுத்த முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தப் பகுதிகளில் குடிநீருக்கு அரசு செய்த மாற்று ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வீரக்கல் புதூர் பேரூராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ் விநியோகக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[1987 ஏப்ரல் 24

திரு. ரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இந்தத் திட்டம் தீட்டப் பட்டுள்ளது? மேலும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலமாக தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது இப்பகு நிலங்கள் எல்லாம் பாதிப்பு ஏற்படுமே என்ற விவரங்களை அவர் கள் எடுத்துச் சொல்வது கிடையாதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீருக்காக எவ்வளவு ரூபாய் செலவாகி இருக்கின்றது என்ற புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லை. குடிநீர் வடிகால் வாரியத் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வி போட்டால் பதில் தருவார். ஏற்கனவே தொடங்கப்பட்ட ஆலை களுக்கு சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் வாயிலாக, அவைகளை அமைத்து இருக்கின் றார்கள். மாசு கட்டுப்பாடு துறையின் அறிவுரைகளை ஏற்று அதன்படி தரத்திற்கேற்றவாறு தண்ணீரை வெளியேற்றுகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆற்றிலேயோ நிலத்திலேயோ கலந்து போவதால் அந்த ஆற்றிலுள்ள தண்ணீரும், நிலப்பகுதியும் கெட்டுப் போகின்ற காரணத்தினால் அந்தக் கழிவு நீரை ஆவியாக்கி மேலே போகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் வெளியேற்ற இற தண்ணீரை பரிசோதனை செய்து தரத்திற்கு அதிகமாக இருக்குமானால் அந்தத் தண்ணீர் பயன்படுத்த லாயக்கு இல்லை என்ற காரணத்தினாலே மறுக்கிறார்கள். அந்த தரத்திற்குக் கீழ் பட்டிருக்கின்றது என்றால் அந்தத் தண்ணீரை காவிரி ஆற்றிலே விட அனுமதிக்கிறார்கள். இப்போது சேலத்திலே இருக்கின்ற ஆலைகளுக்கு சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்கப்பட்ட காரணத் தினால் அதிலே வாய்ப்பு இல்லை என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கின்றது.

குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு.

480—(* வினா எண். 2965) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு ( Medical Gastro Entrology ) தமிழகத்தில் சென்னை பொது மருத்துவமனையில் மட்டும்தான் இருக்கிறது என்பது உண்மையா ?



1987 ஏப்ரல் 24]

(ஆ) ஆம் எனில், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இப்பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. மற்ற சில மருத்துவமனை களிலும் இச்சிறப்பு மருத்துவப்பிரிவு தற்போது உள்ளது.

(ஆ) ஆம்.

திருவாடானை ஒன்றிகத்தில் தாய்சேய் நல விடுதி.

481—(*வினா எண். 9279) திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவாடானை ஒன்றியத்தில் உள்ள புது பட்டணம், முள்ளிமுனை, காரங்காடு ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு தாய்-சேய் நலவிடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பட்டணம், காரங்காடு, முள்ளிமுனை ஆகிய இடங்களில் முழுக்க முழுக்க மீனவர்கள்தான் வாழ்ந்து வருகின் றார்கள். அந்தப் பகுதியிலே உள்ள முஸ்லீம் தாய்மார்கள், மீனவத் தாய்மார்கள் வைத்தியம் செய்துகொள்ள வேண்டுமென்றால், பிர சவத்திற்கு வரவேண்டுமென்றால் அவர்கள் தொண்டிக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. தொண்டிக்கும் அந்த ஊர்களுக்கும் இடை யிலே 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. முன்னர் அரசிடம் முள்ளிமுனையில் தாய்-சேய் நல விடுதி கட்ட இடம் பார்ப்பதாக கருத்துரு இருப்பதாகச் சொன்னார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் பரிசலனை செய்து தாய்-சேய் நல விடுதி கட்ட முன்வருவார்களா ?

[1987 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, புதுப்பட்டி நல்வாழ்வு இல்லங்கள் ஏற்
கெனவே புதுப்பட்டணம், முள்ளிமுலை, முகிழ்தகம் ஆகிய இரா
மங்களுக்கு எல்லாம் சேர்த்து பணியாற்றிக்கொண்டிருக்கின்
றார்கள். புதிதாக தொடங்கவேண்டிய அவசியம் இப்போது
இல்லை.

திரு. கா. சொர்ணலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தொண்டியிலுள்ள மருத்துவ மனையிலேகூட
பெண் மருத்துவர் இல்லாத காரணத்தினாலேயே அங்கே
பெண்கள் எல்லாம் வந்து மருத்துவம் செய்ய தயக்கம் காட்டு
கிறார்கள். முஸ்லீம் தாய்மார்கள், மீனவ தாய்மார்கள் கூச்சப்
பட்டுக்கொண்டு வைத்தியம் செய்துகொள்ள தயங்குகிறார்கள்.
எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பெண் டாக்
டர்களை நியமிக்கவேண்டும். அப்படியில்லை என்றால் மீண்டும்
அந்த இடத்தில் தாய்-சேய் நல விடுதி கட்ட ஆய்வு செய்வார்
களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அங்கே பெண் மருத்துவர் ஒருவரை நிய
மிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்.

482—(*வினா எண். 13021) திரு. செ. செம்மலை மற்றும்
திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் அரசிடம் உள்
ளதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கென்று தனி ஒதுக்கீடு செய்
யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) ஆம். மிகப் பிற்படுத்தப்பட்டோர்
பட்டியல் அரசிடம் உள்ளது.

(ஆ) அவர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு
ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1987 ஏப்ரல் 24]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் பரிசீலனையில்
இல்லை என்று சொன்னாலும் எதிர்காலத்திலேயாவது அப்படிப்
பட்ட வாய்ப்பு வரும் என்று எதிர்பார்க்கலாமா என்று தெரிந்து
கொள்வதோடு மிகப் பிற்பட்டோர்கள் பட்டியலில் எத்தனை
இனங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தையும்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிந்துகொள்ள
விரும்புகிறேன். ஏனென்றால் மிக பிற்படுத்தப்பட்டவர் பட்டியல்
என்று வைத்துக்கொண்டு பிற்படுத்தப்பட்டவர்களோடு அவர்
களை சரிசமமாக பாவிப்பது எப்படி சரியாக இருக்கும் என்று
நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். விளையாட்டுப்
போட்டிகளிலேகூட சீனியர், ஜூனியர், சப் ஜூனியர் என்றெல்
லாம் 3 பிரிவுகள் வைத்துத்தான் அவர்களுக்கு போட்டிகளையே
வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமையில்
இட ஒதுக்கீடுகளை ஒதுக்கித் தருவதற்கு காலதாமதம் ஆகும்
என்றாலும் மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், என்று பிற்படுத்தப்
பட்டவர்களிடமிருந்து வேறுபடுத்தி அவர்களுக்கு என்று தனிச்
சலுகைகளையாவது அளிக்க இந்த இடைக்காலத்திலே அரசாங்
கம் நடவடிக்கை எடுக்குமா என்பதைப் பற்றி அறிய விரும்பு
கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 39 இனங்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோர்
பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் எதிர்காலத்
தில் இடம் ஒதுக்கப்படுமா என்று கேட்டதைப் பொறுத்தவரை
யில் என்னால் ஆருடம் கூற முடியாது. உறுப்பினர் அவர்கள்
இங்கே சொல்லியதுபோல அவர்களுக்கு அரசு இடம் ஒதுக்க
இயலாது என்று சொன்னேனே தவிர மற்றபடி சலுகைகள்
எல்லாம் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டு வரு
கின்றன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 39
இனங்கள் இருப்பதாக இங்கே சொன்னார்கள். அந்த இனங்கள்
எவை எவை என்று அறிய விரும்புகிறேன். கர்நாடகா மாநிலத்
தில் சி, பி.சி.டி. என்று பிரித்து ஒவ்வொரு இனத்திற்கும் இவ்வளவு
இடங்கள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அடிப்படை
யில் இங்கேயும், அதேபோன்ற நடைமுறையை பின்பற்றினால்
குறிப்பாக சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள்,
வன்னியர்கள், வேட்டுவர்கள், சாணார், முக்குலத்தோர், மீனவர்,
நாயக்கர் போன்ற பொருளாதாரத்தில் மிகவும் பிற்படுத்தப்
பட்ட நிலையிலிருக்கின்ற மக்கள் பயனடைய வாய்ப்பாக இருக்
கும். ஆகவே அந்த நடைமுறையை இங்கேயும் மேற்கொள்ள
இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாநிலத்தில் இருப்பதுபோல செய்கின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. அவர் இங்கே கேட்ட பட்டியல் விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாக கேட்டால் விவரம் சேகரித்து தரப்படும்.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நாம் தாழ்த்தப்பட்டோர் என்றும் பிற்படுத்தப்பட்டோர் என்றும் பிரித்திருக்கிறோம். அதுபோல மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்ற வகையில் 39 இனங்கள் இருப்பதாக இங்கே சொன்னார்கள். இவர்களுக்கும் அந்த பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கின்ற சலுகைகள்தான் கொடுக்கப்படுகின்றன என்று இங்கே கூறினார்கள். அப்படி என்றால் எதற்காக இப்படி அநாவசியமாக ஒரு மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் ஒன்றை ஏற்படுத்தி நாட்டு மக்களிடத்தில் நாம் குழப்பத்தை உருவாக்க வேண்டும் ? ஆகவே, பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சலுகைகளையும், மானியங்களையும், பணங்களையும் அரசு வழங்க ஏற்பாடு செய்யுமா ? அப்படி இல்லையென்றால் அந்த மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலையாவது அந்தப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு ஏற்கெனவே விவரமாக பதில் சொல்லிவிட்டேன். உறுப்பினர் சரிவர கவனிக்கவில்லையோ என்னவோ? மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு அரசின் இட ஒதுக்கீடு தான் இல்லையென்று சொன்னேனே தவிர மற்றபடி சலுகைகளை அவர்களுக்கு தந்து கொண்டு தான் இருக்கிறோம். பிற்படுத்த பட்டோருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் கலை, விஞ்ஞானம், சட்டப் படிப்பு போன்றவற்றை படிக்கும்போது உதவித் தொகை வழங்குவதைப் பொறுத்த வரையில் பிற்படுத்த பட்டோர் என்றால் 60 ரூபாயும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்றால் 70 ரூபாயும் வழங்கப்படுகிறது. அது போல தொழில் கல்வி படிப்பவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு 60 ரூபாய் என்றால் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 75 ரூபாய். தொழில் நுட்பப் படிப்பிற்கு பிறபடுத்தப்பட்டோர் என்றால் 50 ரூபாய், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்றால் 60 ரூபாய். அதுபோல சென்னையைத் தவிர மற்ற இடங்களில கலை, விஞ்ஞானம், சட்டப் படிப்பு படிககின்ற மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 50 ரூபாய் என்றால் பிற்படுத்தப்பட்டோருக்கு 35 ரூபாயும், தொழில் கல்வி எனறால் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 70 ரூபாயும், பிற்படுத்தப்பட்டோருக்கு 55 ரூபாயும் வழங்கப்படு





கிறது. தொழில் நுட்பக் கல்வி எனறால் மிகப் பிற்படுத்தப் பட்டோருக்கு 55 ரூபாயும், பிற்படுத்தப்பட்டோருக்கு 50 ரூபா யும் என்கிற அளவில் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இப்படி சலுகைகளை எல்லாம் கல்வியிலும், தொழில் கல்வியிலும் வழங் கிக் கொண்டு தான் இருக்கிறோம். ஆகவே தனியாக சலுகைகள் வழங்கப்படவில்லை என்று சொல்ல முடியாது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் என்று சொல்லியும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று சொல்லியும் அரசிடத்தில் இருந்து சலுகைகள் பெறுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. இத னால் வளர்ந்து வருகின்ற இந்த சமுதாயத்தில் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே தான மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றி கேள்வி கேட்டார்கள். மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டுகிற போது இன்றைய தினம் தமிழக அரசைப் பொறுத்த வரையில் ஒன்றைச் சொல்கிறேன். கர்நாடகம், கேரளா போன்ற மாநிலங்களில் பார்வர்ட், பேக் வர்ட், மோஸ்ட் பேக்வர்ட் என்றும் பிரித்து வைத்திருக்கிறார் கள். அந்த அடிப்படையில் இன்றைய தினம் தமிழகத்தில் பல தரப்பு மக்களும், மக்கள் விகிதாசாரப்படி சலுகைகளை பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதை எல்லாம் மனதில் வைத்து, மற்ற மாநிலங்களிலுள்ள உதாரணங்களை பின்பற்றி, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலுள்ள நடைமுறை இங்கேயும் பின்பற்றப்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, வகுப்பு வாரி, ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு சதவீதம் என்று பிரித்து வைப்பது என்பது இயலாத காரியம். அதை இப்பொழுது அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னபொழுது மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் 39 இனங் கள் சேர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். அவைகளிலே நரிக் குறவர், முடி திருத்துவோர், சலவைத் தொழில் செய்வோர், மீனவர்கள், முத்தரையர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் மிகப் பிற்பட்டோர் பட்டியலில் நிச்சயமாக இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். இந்தச் சமுதாயங்களெல்லாம் மிகவும் பிற் பட்டவர்கள் மட்டுமல்ல, கல்வியிலோ அல்லது பொருளாதாரத் திலோ எந்த நிலையிலும் மேலே போக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுக்கென்று இருக்கின்ற அந்தச் சலுகைகளைக் கூட முற்பட்ட சமுதாயத்திலேயிருந்து

[1987 ஏப்ரல் 2;

பிற்பட்டோராக வர வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் வந்து
ஆக்கிரமித்து விடுகிறார்கள். ஆகவே, அதைத் தவிர்ப்பதற்காக
அரசானது அந்த மிகவும் பிற்பட்டோர் சமுதாயத்திலே உள்ள
எந்தவிதமான ஒரு சலுகையையும் அடைய முடியாத சமுதாயத்
திற்கு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கினால் தான் அவர்கள்
முன்னேற முடியுமென்ற நிலையில், அதற்கான நடவடிக்கையை
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய அந்தனை
சமூகமும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இருக்கிறது
என்று நினைக்கிறேன். இருக்கிறது. ஆனால் அவர்கள் கேட்பதி
ஒருந்து ஒன்று எனக்குப் புரிகிறது. கம்பார்ட்மெண்டலைசேஷன்
என்று ஒவ்வொரு வகுப்புக்கும் இத்தனை இடங்கள், இத்தனை
இடங்கள் என்று பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்
கள் அப்படிப் பிரிப்பது இயலாது என்று தான் நான் அரசு
சார்பில் சொன்னேன்

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவையின் தலை
நாயகர் அவர்களே, இங்கே பிற்பட்டவர்கள், பிற்பட்டவர்கள்,
மிகவும் பிற்பட்டவர்கள் என்றெல்லாம் பட்டியல்கள் தருவதை
விட தமிழக அரசு பொருளாதாரத்தின் அடிப்படையில்,
பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, முற்பட்டவர்
களாக இருந்தாலும் சரி, மோஸ்ட் பேக்வார்டாக இருந்தாலும்
சரி, அவர்களுக்கெல்லாம் ஒரு பட்டியலை மீண்டும் திருத்த
மாகச் செய்து, தமிழகம் இந்தியாவிற்கு ஒரு வழி காட்டியாக,
பொருளாதாரத்தின் அடிப்படையிலே இந்த இடவொதுக்கீடுகளை
ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை
அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர்
அவர்களே, வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்திற்காகப் பெரும்பாடு
பட்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள்
எல்லாம் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். உருவாக்கி வைத்து
இருக்கின்ற அவைகளை மாற்றியமைப்பது என்பது இந்த அரசி
னுடைய கொள்கையும் அல்ல, நோக்கமும் அல்ல. ஆனால்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இதே
வகுப்பினர்களுக்கு இடையிலே பொருளாதாரத் துறையிலே அவர்
களுக்குப் பிரித்துக் கொடுக்கலாமா என்றுதான் மாண்புமிகு
முதல் அமைச்சரவர்கள் ஒரு முயற்சி எடுத்தார்கள். அரசியல்
காரணமாக சில பேர் பலத்த எதிர்ப்பு தெரிவித்த காரணத்தால்
அது இப்பொழுது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.



1987 ஏப்ரல் 24]

திரு. கே. மூத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சீர் மரபினர்
சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என அறிய விரும்புவதோடு, அவர்
களெல்லாம் வாழ்க்கைத் தரத்திலேயும், பொருளாதாரத்திலே
யும் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு
ஆதி திராவிட மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப்
போல அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே
சீர் மரபினர் தனிப் பிரிவாக வைத்து, தனியாகக் கவனிக்கப்படு
கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும்.

ஆம்னி பஸ்கள்.

483—(*வினா எண். 9714) திரு. மு. மாரிமுத்து : மாண்பு
மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) ஆம்னி பஸ்களுக்கான அனுமதிகள் எந்த அடிப்படை
யில் வழங்கப்படுகின்றன ?

(ஆ) தமிழ்நாட்டில் எத்தனை பஸ்களுக்கு அனுமதி வழங்
கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) 1939-ஆம் ஆண்டு மோட்டார் வாகன
சட்டப் பிரிவு 51(1)-ன் படி ஆம்னி பஸ் அனுமதிகள் வழங்கப்
பட்டன. ஆனால் ஆம்னி பஸ்கள் அனுமதி ஏதும் நமது மாநிலத்
தில் தற்போது வழங்கப்படுவதில்லை.

(ஆ) புதியதாக அனுமதிகள் இப்பொழுது வழங்கப்படுவ
தில்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட மொத்த அனுமதிகள் 71
ஆகும்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற ஆம்னி பஸ்கள்
பெரும்பாலும் ரூட் பஸ்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அது
மட்டுமல்லாமல் இந்த ஆம்னி பஸ்களிலே கட்டணம் வேண்டிய
அளவிற்கு விரும்பிய அளவிற்கு அவர்கள் வசூல் பண்ணிக் கொள்
கிறார்கள். அதைப் போல பயணிகளையும் விரும்பிய அளவிற்கு
அவர்கள் ஏற்றிக் கொள்கிறார்கள். புறப்படுகின்ற இடங்களி
லேயும் எந்த நேரத்திற்குப் புறப்படுகின்றன என்ற விதியும் இல்
லாமல், சேருகின்ற இடங்களிலே எந்த நேரத்திற்குப் போய்ச்
சேருகின்றன என்ற நிலையுமில்லாமல் நிச்சயமற்ற தன்மை நிலவு

கிறது. இப்படிப் பல்வேறு குறைகள் இருக்கின்ற காரணத்தி னாலே அரசு இதை எல்லாம் கவனித்திலே கொண்டு இந்த ஆம்னி பஸ்களை வரைமுறைப்படுத்துவதற்கு ஏதாவது நட வடிக்கை எடுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, இப் பொழுது 71 உரிமங்கள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை point to point என்ற வகையிலே ஓட்டப்படக் கூடாது; அதாவது ரெகுலர் சர்விசாக இவைகள் ஓட்டப்படக் கூடாது. ஆங்காங்கே பொதுமக்கள் விரும்பினால், அவர்களை அழைத்துச் சென்று சுற்றுலா செல்வதற்காக பயன்படுத்துவதைப் போல அவர்கள் இதைப் பயன்படுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலே சில உண் மைகள் இருக்கின்றன. அவர்கள் முறையாக அதைப் பயன் படுத்தாமல் பல தவறுகள் நடக்கின்றன. கட்டணத்தைப் பொறுத்த வரையில் நாம் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. காரணம், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற கட்டணத்தை விட அதிகமாக வசூல் செய்தால் அவர்களுக்கு வசூல் ஆகாது என்ற காரணத்தினால் அவர்கள் முறையாக வைத்திருப்பார்கள்.

(முற்பகல் 10-40)

ஆனால் இன்றைக்கு அவற்றின் நடைமுறையில் இருக்கிற பிரச்சினைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இருந்தா லும் அதிகாரிகள் அவற்றை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இங்கே இருக்கிற 71 உரிமங்களையும் விட பக்கத்து மாநிலத்து வண்டிகள் பல தற்காலிக உரிமம் பெற்று வரக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால் நமக்கு பல பிரச்சனைகள் உருவாகின்றன. அவற்றைத் தடுக்க அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த ஆம்னி பஸ்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, வரு மானம் பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆம்னி பஸ்களைப் பொறுத்த வரையில் இதற்கு மேலும் அனுமதிக்கக் கூடாது என்று கருதுவதால் கூடுதலாக வருமானம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது. எதிர் காலத்திலே இப்படிப்பட்ட பிரச் சினைகள் இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. எம். எம். இராசரத்தினம் : தலைவரவர்களே, புதி தாக ஆம்னி பஸ்களை ஓட்டுகின்றவர்களுடைய வண்டிகளில் வீடியோ போன்ற சகல வசதிகளையும் அவர்கள் செய்திருப்ப தோடு குறைவான கட்டணமும் வசூல் செய்கின்ற காரணத்தால் மக்கள் அதிகமாக அந்த வண்டிகளிலே பயணம் செய்ய விரும்பு கிறார்கள். ஆகவே, தொலை தூரத்திலிருந்து வருகிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பெருந்துகள், நேசமணி போக்குவரத்துக் கழகப் பெருந்துகள் போன்றவற்றிலும் ஆம்னி பஸ்களில் இருப்பதைப் போன்று வீடியோ போன்ற எல்லா வசதி களையும் செய்து தர அரசு தகுந்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு வண்டியை ஒரு தனியார் இயக்குகிறபோது ஒரே வண்டியை அவர்கள் முழுமையாகக் கவனிக்கிற வாய்ப்பு இருக்கிறது. அதோடு அந்த வண்டிக்குத் தேவையான ஓட்டுநர், நடத்துநர் களை வைத்திருக்கிறார்களா என்பதுகூட சந்தேகம். அப்படிப் பட்டவர்களோடு ஒப்பிட்டு, அதைப் போன்று திருவள்ளுவர், நேசமணி போக்குவரத்துக் கழக வண்டிகளிலும் வீடியோ போன்ற எல்லா வசதிகளையும் செய்துதருவது நடைமுறையில் பல சிக்கல்களுக்கு காரணமாக அமையும். இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வண்டிகளை மாற்றி, புதிய புதிய பெருந்துகளை விடுகிறது. தனியார்களோடு போட்டியிடுகின்ற அளவுக்கு பெருந்துகளை இயக்குவதில் இருந்தாலும் சில பேர்கள் பழக்கத்தின் காரணமாக தனியார் பெருந்துகளில் பயணம் செய்கிறார்கள். ஆகையால் அவைகளைத் தடுக்க அந்தந்த போக்குவரத்துக் கழகமும், அரசும் நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தமிழ் நாட்டில் தனியார் பஸ்கள்.

484—(*வினா எண். 10831) திரு. ஆர். ரெங்கசாமி : கீழ்க்கண்ட வினாக்களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் தனியார் பஸ்கள் எத்தனை ஓடு கின்றன?

(ஆ) அவற்றை தேசியமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 5,313.

(ஆ) வழித்தடங்களைத் தேசியமயமாக்கும் விரைவுத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1987 ஏப்ரல் 24

இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி வரை விசைப்படகு.

485—(*வினா எண். 11180) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு விசைப் படகு விடப்படுகிறதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்வதற்கு பாதை கள் சரியாக இல்லாத காரணத்தாலும் கப்பல் போக்குவரத்து இல்லாத காரணத்தாலும் விசைப்படகுகள் செல்ல அனுமதியளிக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே. 1985 ஆம் ஆண்டு இந்தக் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்ட காரணத்தால் இந்தக் கப்பல் போக்குவரத்திற்கு உதவி யாகப் பயன்படுத்தப்பட்டு வந்த விசைப்படகுகள் நிறுத்தப் பட்டன. அதன் காரணமாக விசைப் படகுகளில் தொழில் புரிந்த வர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. அவர் களே இந்தப் போக்குவரத்திற்கு மனு செய்தபோது அந்த விசைப் படகுகளை இராமேஸ்வரத்திலிருந்து இயக்கலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னாலே அந்தப் படகுகள் கடலிலே ஓட தகுதி உள்ளவைதானா என்று பார்க்க வேண்டும் ; படகுகளுக்கு தகுதி சான்று பெற வேண்டும்; சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் படகுகளைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் படகுகளைக் காட்டுகிறபோது சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்துவிட்டு மீண்டும் கொண்டுவந்து காட்டுங்கள் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள், இன்னும் அவர்கள்கொண்டுவந்து காட்டவில்லை என்பதால் தடை செய்யப் பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தனி யாருக்கு நாம் உரிமம் கொடுத்து, அவர்கள் முறையாக விசைப் படகுகளை ஓட்டுகின்ற வாய்ப்பு இல்லாத காரணத்தால் அங்கே அரசாங்கமே விசைப் படகுகளை விட முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, சின்ன சின்ன இடங்களில் இப்படிப்பட்ட பொறுப்புகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறபோது நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சின்ன சின்ன இடங்களில் படகுகளை ஓட்ட தனியாரிடம் விடுவது தான் சரியாக இருக்கும். இப்போது கூட சம்பந்தப்பட்ட அதிகாரி களை வைத்து, அவர்கள் ஏன் அந்த படகுகளைக் கொண்டுவந்து காட்டவில்லை; என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, மீண்டும் அவர்கள் அந்த படகுகளை இயக்குவதற்குத் தூண்டு தலாக சில நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்.

486—(*வினா எண். 11738) திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் போக்குவரத்து கழகத்தை பிரித்து நீலகிரி மாவட்டம், உதகையை தலைமையகமாகக் கொண்டு நீலமலை போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நீலகிரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம், அங்கே யுள்ள பேருந்துகளைப் பொறுத்தவரையில் முழுமையாக தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகள் இருக்கின்ற ஒரு மாவட்டம், எனவே அங்கே தனியார் போட்டி என்பதே கிடையாது. ஆனால் தனியார் போட்டியுள்ள மாவட்டங்களில் எல்லாம் தனிப் போக்குவரத்துக் கழகங்கள் அமைத்து நடைபெற்று வரும்போது நீலகிரி மாவட்டம் முழுமையாக தேசிய மயமாக்கப்பட்ட பேருந்து களை உடைய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே தனிப் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துவது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்று சொன்னார்கள் அதை எப்படி ஏற்றுக் கொள்வது என்று தெரியவில்லை. நாமெல் லோரும் அங்குதான் போக விரும்புகிறோம். ஏறத்தாழ 289 பேருந்துகள் நீலகிரி மாவட்டத்தில் சேரன் போக்குவரத்துக் கழ கத்தால் இயக்கப்பட்டு வருகிறது. சேரன் போக்குவரத்துக்

கழகத்தில் இன்றைக்கு ஏறத்தாழ 1,114 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலைமையில் அதனை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற நிலைமை சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு இருந்தாலும் நீலகிரி மாவட்டத்திற்கு என்று தனியாக அமைக்கிற நிலைமை இல்லை. 300, 350 பேருந்துகளுக்கு மேலே இருந்தால் தான் புதிய போக்குவரத்துக் கழகமாக தனியாக நிறுவ வாய்ப்பு இருக்கும். இருந்தாலும் கூட 600 பேருந்துகளுக்கு மேலே போனால்தான் இரண்டாகப் பிரிப்பது நல்லது என்று நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது. என்றைக்கு 350 பேருந்துகளை இந்த மாவட்டம் எட்டிப் பிடிக்கிறதோ அன்றைக்கு இதைப்பற்றி ஆய்வு செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

**திரு. கே. உச்சி :** பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு எப்போதும் மக்கள் போக விரும்புகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். வெய்யில் காலத்தில்தான் குளு குளு ஊட்டிக்கு மக்கள் வருகிறார்கள். அந்த மாவட்டத்திற்கு தற்போது இருக்கின்ற289 பேருந்துகள் என்பவை போதுமானவை யாக இல்லை. இன்னும் அதிகமான பேருந்துகளை விட்டால் அந்தப் பகுதி மக்கள் சௌகரியமாகச் செல்ல உதவியாக இருக் கும். அதை அதிகப்படுத்துவதற்குரிய வாய்ப்பு உண்டு. எனவே அதை அனுசரித்தாவது மீண்டும் மறுபரிசீலனை செய்து புரட்சித் தலைவரின் ஆட்சிக்காலத்தில் அப்பேர்ப்பட்ட தனிப் போக்கு வரத்துக் கழகத்தை அங்கே ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை தான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, வெய்யில் காலத்திலே மட்டும் மக்கள் அங்கே போனா லும் குளிர் காலத்தில் எவ்வளவு வியாபாரம் ஆகவேண்டுமோ அதையெல்லாம் சேர்த்து வியாபாரம் ஆகிவிடுகிறது. என்றாலும் கூட அதிகமான பேருந்துகள் தேவை என்று சொன்னார் கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும், இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான்—நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரே நாளில் ஏறத்தாழ 30 பேருந்து களுக்கு மேலே ஊட்டியிலே மட்டும் இயக்கி வைத்துவிட்டு ன்றுார்கள். அந்த அளவுக்கு அதிகமான பேருந்துகள் மலைப் பகுதியிலே இந்த அரசு இயக்கிக் கொண்டு இருக்கிறது. வெகு விரைவில் 350 பேருந்துகளை எட்டிப் பிடித்துவிடும் என்று நான் கருதுகிறேன், எனவே அப்படி 350-ஐ எட்டிப் பிடிக்கிறபோது நீலகிரி மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கான வாய்ப்பு நிச்சயமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதுவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, திரு. உச்சி அவர்களுடைய கோரிக்கை நியாயமானது ன்ற முறையில், அப்படி பேருந்துகள் நீலகிரி மாவட்டத்தில் ருப்பது போதவில்லை என்றால் மேட்டுப்பாளையம் பணி னையில் இருக்கின்ற பேருந்துகளையும் இணைத்து மாவட்ட ளவில் அந்தப் போக்குவரத்துக் கழகத்தை அமைத்தால் சரியான ளவுக்கு பேருந்துகள் இருக்கும். ஆகவே அந்த வகையில் அந்த ம் இணைத்து ஒரு போக்குவரத்துக் கழகம் அமைப்பது குறித்து ரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏற் கனவே மேட்டுப்பாளையத்திற்கும் சேர்த்து தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் நீலகிரி மாவட்டத்தில் அமைக்கலாமா ன்பதைப் பற்றி ஆய்வு செய்தோம். ஆனால் வண்டிகளின் ண்ணிக்கை என்ற அளவில் அது வந்தாலும் கூட ஏரியா என்று பார்க்கிறபோது முறையாக இல்லை. இன்னொன்று, நீலகிரி பினைத் தலைமையிடமாக வைக்கிறபோது மேட்டுப்பாளையத் தில் இருப்பவர்கள் ஒவ்வொரு காரியத்திற்கும் அங்கேதான் செல்ல வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்குக் கூட அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும் என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் கூட ஆய்வு செய்வதிலே ஒன்றும் குறை இல்லை. மீண்டும் ஒருமுறை பரிசீலித்துப் பார்க் கலாம்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, தனியான ஒரு போக்குவரத்துக்கழகம் நீலகிரிக்கு உண்டாக்குவதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் பேருந்துகள் வேண்டுமென்று அமைச்சர் அவர் கள் கூறினார்கள். ஆனால் அந்தப் பிரச்சினையை விட மிக முக்கியமான பிரச்சினை இருக்கிறது. மலைப் பகுதிகளில் போக்கு வரத்திற்கு பேருந்துகள் போதாது என்பது ஒரு உண்மை. மலை முழுவதிலும் பல்வேறு இடுக்குகளிலும், கீழ்மட்டத்திலும் உள்ள கிராமங்களிலும் இருக்கின்ற அந்த மக்கள் போய் வருவதற்கு பஸ் ஒன்றுதான் போக்குவரத்து வசதியாக இருக்கிறது. வேறு போக்குவரத்து வசதி இல்லை. எனவே நீளம் குறைவான பஸ் களை அதிக எண்ணிக்கையில் நீலகிரி மலையிலும், வால்பாறை மலையிலும் விடுவதற்கு அரசு யோசித்துக் கொண்டிருந்தது. அதை இப்போது கவனத்தில் எடுத்துக் கொண்டு அதிக பஸ்களை விட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே எங்கெங்கே நீளம் குறைந்த வண்டிகள் தேவையோ அங்கங்கே அவற்றை இந்த அரசு இயக்கிக் கொண்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் மிக அதிகமான அளவுக்கு மலைப் பகுதிகளில் பேருந்துகளை விட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு

உறுப்பினர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். இன்னும் எங்கெங்கே தேவையோ, எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ அங்கெல்லாம் விட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உச்சி அவர்கள் சொல்லியதுபோல் அந்த மலைப்பகுதியைப் பொறுத்தவரையில் முழுமையான அளவுக்கு தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகள் உள்ள பகுதியாக இருப்பதால் இந்த அரசு தனியான கவனம் செலுத்தி பேருந்துகளைஇயக்குவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

இப்போது கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு ஒரு உத்தரவு இட்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக எல்லா இடங்களுக்கும் பஸ் வசதி செய்து தரப்படவேண்டும். அதற்கான திட்டத்தை முறைப்படி செயல்படுத்த வேண்டும் என்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். குறிப்பாக மலை வாழ் பகுதியிலிருக்கக் கூடிய மக்களுக்கு அதிகமான சலுகை காட்ட வேண்டும். அவர்கள் அதிகமான தூரம் நடக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை உணர்ந்து நாங்கள் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அந்த வகையிலே நீலகிரியில் இருக்கிற பிரச்னை விரைவாக தீர்க்கப்பட்டுவிடும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்க வேண்டும் என்றால் 350 பேருந்துகளுக்கு மேல் இருந்தால் உருவாக்கலாம் என்ற ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு 700-க்கு மேற்பட்ட பேருந்துகள் இருக்கின்றன. பட்டுக்கோட்டை போக்குவரத்துக் கழகத்திற்கு 600-க்கும் மேற்பட்டவைகள் இருக்கின்றன. திருவண்ணாமலையிலே இப்போது அதிகமான பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. திருவண்ணாமலை என்று சொன்னாலே மகாதீபம் என்று சொல்கிற அளவுக்கு பெயர் போன ஊர். மாண்புமிகு முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கூட வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களிலும் உபரியாக இருக்கும் பேருந்துகளை எடுத்து ஒரு தனி போக்குவரத்துக் கழகம் திருவண்ணாமலையை தலைமையாக வைத்து துவக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எவ்வளவோ முயற்சிகளை எடுத்து பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். எனவே ஒரு போக்குவரத்துக் கழகம் அப்படி உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்ன சொன்னாலும் அதற்கென்று காலம் வரும் போதுதான் செய்ய முடியும். மாண்புமிகு உறுப்பினர் இப்போது பேசும்போது மிக நல்லபடியாக திருவண்ணாமலையில் அதிகமான வண்டிகள் ஓடுகிறது என்று சொன்னார்கள். இதுவே பஸ் வேண்டும் என்று கேட்கும்போது, திருவண்ணாமலையில் பேருந்துகளே இல்லை என்று சொல்வீர்கள். எனவே எப்படி சௌகரியமோ அப்படிக் கேட்கிறீர்கள். இந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களையும் ஒன்றாக ஆக்கி 3 போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கலாமா என்று ஒரு ஆய்வையே அரசாங்கம் செய்து வருகிறது. என்றாலும் உடனடியாக அதை நிறைவேற்றும் உத்தேசம் இல்லை. ஏனென்றால் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க வேண்டுமானால் பல கோடி ரூபாய் மூலதனம் போட வேண்டியிருக்கிறது. பல அமைப்புகளை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் படிப்படியாக செய்து இந்த அரசின் நோக்கமாக இருக்கிற, ஒரு மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற இலக்கை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து சிதம்பரனார் மாவட்டத்திற்கு தூத்துக்குடியை மையமாக வைத்து ஒரு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொத்தமாக எல்லா மாவட்டங்களுக்கும், இப்போது கேட்டுவிடுவார்கள் போல் இருக்கிறது. மாவட்டமே இப்போதுதான் புதியதாக பிரிந்திருக்கிறது. இதையெல்லாம் பின்னால் பார்க்க வேண்டுமே தவிர இப்போது உத்தரவாதம் தர இயலாது.

நடமாடும் பாஸ் வழங்கும் வேன்.

487—(*வினா எண். 12611) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளி, கல்லூரி மாணவர்கள் வசதிக்கென ஒரு நடமாடும் பாஸ் வழங்கும் வேன் நகரில் உள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இத்தகைய ஏற்பாடு செய்யும் கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

[1987 ஏப்ரல் 24

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பாஸ் வழங்குவதற்கு எந்த முறையை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை அறிய விரும்புவதோடு மாணவிகள் சென்று பாஸ் வாங்கும்போது படுகிற சிரமத்தை போக்குகிற விதத்தில் அந்தந்த பள்ளிகளிலேயே குறிப்பிட்ட நாட்களில் பாஸ் வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பெண்களுக்காக பரிந்து பேசுகிறார்கள். அதிலே எனக்கு மகிழ்ச்சி தான். 24 இடங்களிலே இப்போது நாங்கள் இந்த டோக்கன் வழங்கிக் கொண்டிருக்கிறோம். 1,500 மாணவர்களுக்கு ஒரு பிரிவு என்று வைத்து ஒரு கவுண்ட்டர் வைத்திருக்கிறோம். அதிலேயும் 300 மாணவர்களுக்கு ஒரு தொகுதியாக பிரித்து 5 தொகுதிகள் ஏற்படுத்தி, இரண்டு நாட்களுக்கு ஒரு தொகுதி என்று அமைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக முதற் பிரிவிற்கு 1, 2 ஆம் தேதி என்றால், அவர்கள் அந்த தேதிக்குள் வாங்கவில்லை என்று சொன்னால் மீண்டும் 11 ஆம் தேதி வாங்கிக் கொள்ளலாம். 2, 8 ஆம் பிரிவுகள் 3, 4 ஆம் தேதி வாங்க வேண்டும். வாங்கவில்லை என்றால் 17 ஆம் தேதியன்று வாங்கவேண்டும் என்று இப்படி 5 பிரிவுகளையும் தனித்தனியாக பிரித்து வைத்திருக்கிறோம். 24 இடங்களிலேயும் ஆண்களுக்கு என்றும் பெண்களுக்கென்றும் தனித்தனியாக கவுண்ட்டர்கள் இயங்கி வருகின்றன. காலையில் 8-30 முதல் 10-30 வரையிலும் மாலையில் 3-30 முதல் 8-30 வரையில் இந்த கவுண்ட்டர்கள் இயங்கி வருகின்றன. இதிலே பெரிய சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் இதைத் திறக்க வேண்டும் என்று சொன்னால் ஏறத்தாழ 1,657 பள்ளிகளுக்கும் 158 கல்லூரிகளுக்கும் திறக்க வேண்டி வரும். இவ்வளவு இடங்களிலும் அதைத் துவக்குவது என்பது கடினமான காரியம். முதலில் பதிவு செய்கிறபோது, முதலில் அவர்கள் டோக்கனைப் பெறுகிறபோது, அந்தப் பள்ளியின் தலைமையாசிரியரை வைத்து கொடுக்கிறோம். ஆனால் 'ரெனியூ' செய்கிறபோது இந்த முறையில் செய்துகொள்வது தான் சிரமம் இல்லாமல் இருக்கும், பிரச்னையில்லாமல் இருக்குமென்ற அடிப்படையில்தான் இதனை கடைபிடிக்கிறோம்.

திருமதி பா. வளர்மதி : தலைவர் அவர்களே, நெரிசல் நேரங்களில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் சிரமத்தைப் போக்குகிற வகையில் பாயிண்ட்-டு-பாயிண்ட் பஸ்களை இயக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பல இடங்களில் ஏற்கனவே பெண்களுக்கான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதை விரிவாக்க வேண்டுமென்று சில இடங்களை ஆய்வுசெய்து நடவடிக்கையை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பள்ளிகளுக்குப் பக்கத்தில் போய் நாம் பார்க்கிறபோது அங்கேயிருந்து தனியாக பெண்களுக்கு என்றோ, மாணவர்களுக்கென்றோ பேருந்துகள் விடலாம் என்றே நமக்கு தோன்றும். ஆனால் அந்த மாணவர்கள் அங்கேயிருந்து பிரிந்து செல்கிறபோது ஆளுக்கு ஒரு பக்கமாகச் செல்கிறார்கள். தனியாக பேருந்து விட்டாலும் கூட ஒரு குறிப்பிட்ட பாதையில் 5, 10 பேர்களுக்கு மேல் பயணம் செய்ய முடியாது. எனவே அதனை மொத்தமாக ஆய்வு செய்கிறபோது தனித்தனியாக அவர்களுக்கு பேருந்து விடுவது சாத்தியமில்லை என்பதால்தான் குறிப்பிட்ட வழித் தடங்களில் எங்கெங்கு மாணவர்களோ, பெண்களோ அதிகமாக வருகிறார்களோ அவர்களுக்கு தனியாக பேருந்துகளை விட்டு வருகிறோம்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, பஸ் பாஸ் வழங்குவதில் உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா? தற்போது இந்த பஸ்களில் இரண்டு வழிகள் இருக்கின்றன. முன்பக்கம் ஒரு வழியும், பின்பக்கம் ஒரு வழியும் இருக்கிறது. முன்பக்கத்தில் பெண்களும், பின்பக்கத்தில் ஆண்களும் ஏறவேண்டுமென்ற முறையை கொண்டு வந்தால் இந்த இடநெரிசலைத் தவிர்க்கலாம். எனவே, இந்த முறை நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு வழியிலே ஏறி இன்னொரு வழியிலே இறங்குவதற்காக தான் அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெண்களுக்கென்று தனியாக முன்பக்கம் அமைப்பது என்பது சில சிக்கல்களை ஏற்படுத்திய காரணத்தால் தான் அது மீண்டும் கைவிடப்பட்டிருக்கிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். மாணவர்களைப் பொறுத்தவரையில் 300 பேருக்கு ஒரு தொகுதியாக இருக்கிறதால் உடல் ஊனமுற்றவர்கள் வருகிறபோது சிரமம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. வேண்டுமானால் அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு உடல் ஊனமுற்றவர்கள் வருகிறபோது முன்னாலே கொடுத்து அனுப்பவேண்டுமென்று சர்க்குலர் அனுப்புகிற நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ்களில் பயணம் செய்வதற்கு இலவச பாஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, திரு. ரஹுமான்கான் அவர்கள் இப்போதே அவசரப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். அது ஏற்கனவே ஒரு ஆய்விலே வந்தது. இருந்தாலும் அது மிகுந்த சிக்கலை ஏற்படுத்தும். இப்போதே நாம் சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சிட்டிங் எம்.எல்.ஏ. என்று போகிற போதே கூட சில சிக்கல்கள் வருகின்றன. எனவே அது பல சிக்கல்களை ஏற்படுத்தும். அதனால் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது சிக்கல்கள் வந்துவிடக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில் அது வேண்டாமென்று இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, எங்கெங்கெல்லாம் கல்லூரிகள் இருக்கின்றனவோ, அங்கே கிராமங்களிலிருந்து சென்று படிக்கக்கூடிய பெண்களுக்காவது, உதாரணத்திற்கு சொல்வதென்றால் பழனி தொகுதியில் நெய்க்காரப்பட்டியில் ஒரு கல்லூரி இருக்கிறது. அதற்கு கிராமங்களில் இருந்து போகிற பெண்கள் பஸ்களில் ஏறமுடியாமல் சிரமப்படுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அதாவது நெய்க்காரப்பட்டி போன்ற இடங்களுக்கு காலையிலும், மாலையிலும் உடனடியாக பஸ் விடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். கூடுதல் பேருந்துகள் வேண்டுமென்று சொல்வதாகத் தான் கருதுகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அந்த ரூட்டில் பஸ் போகவில்லை. அதனால் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது பாஸ் சம்பந்தமானது அல்ல. பஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுகுறித்து தனியாக எழுதிக் கொடுத்தால் நடவடிக்கையெடுக்கலாம்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் அப்ருவ்ட் டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்டில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு பஸ் பாஸ் வழங்கப்பட்டு வந்தது. குமரி மாவட்டத்தில் நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் இதனை வழங்க மறுக்கிறார்கள். ஆகவே அந்த மாணவ மாணவிகளுக்கு பாஸ் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே. சென்னையை தவிர மற்ற இடங்களில் 33 சதவீதம் சலுகையோடு பஸ்பாஸ் வழங்கப்படுகிறது. அதில் நிச்சயமாக தடையிருப்பதற்கு வாய்ப்பில்லை. 33 சதவீத சலுகையோடு அதனைப் பெற்றுக்கொள்வதில் அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இருக்காது என்று கருதுகிறேன். அதில் தடை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்தால், எனக்குச் சொன்னால் நடவடிக்கையெடுக்கலாம்.

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

வாகன வரிகள்.

488— (*வினா எண் 13830) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. யு. பி. மாதையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து வாகன வரிகளையும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே பெற்றுக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுதுள்ள மோட்டார் வாகன வரி வசூலிக்கும் முறை சீரிய முறையில் நடைபெற்று வருவதால், இம்முறையே தொடர்ந்து நீடித்து வரலாம் என அரசு கருதுகிறது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவாக்கல்

489— (*வினா எண் 8322)—திரு. பி. என். இராமச்சந்திரன் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி அங்கு திருக்குறள் ஆய்வகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

[1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவு படுத்தி திருக்குறள் ஆய்வு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) எழாது.

### பெரியகுளம் தொகுதி கும்பக்கரையை சுற்றுலா மையமாக்கல்

490—(*வினா எண் 9095) டாக்டர் கு. முகம்மது சலீம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதியில் உள்ள கும்பக்கரை நீர் வீழ்ச்சியை சீர்படுத்தி சுற்றுலா மையமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டத்தில் உள்ள கும்பக்கரை நீர் வீழ்ச்சிப் பகுதியை மாவட்ட உலாத்தலமாக மேம்பாடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஜெயங்கொண்டம் தொகுதி, மாளிகை மேடு தொல்பொருள் காட்சிக்கூடம்

491—(*வினா எண் 9928)—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள மாளிகை மேடு தொல் பொருள் காட்சிக் கூடத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். இதற்கான கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளது. மேலும் இக் காட்சிக் கூடத்தில் பார்வைக்கு வைப்பதற்காகப் பல அரிய தொல் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.



[1987 ஏப்ரல் 24]

### தமிழக போக்குவரத்துக் கழக வீடியோக்கள்

492—(*வினா எண் 12076) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக வீடியோக்கள் மூலம் தமிழக சுற்றுலாத் துறை முக்கிய இடங்களை படம் பிடித்துக் காட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

### சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியில் புதிய மின் நிலையம்

493—(*வினா எண் 12153) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியில் புதிதாக மின் நிலையம் அமைக்க மைய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### புன்னம்பட்டி கிராமத்தில் புதிய பால்வாடிக் கட்டிடம் கட்டும் திட்டம்.

1—வினா 1127—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், புன்னப்பட்டி கிராமத்தில் புதிய பால்வாடிக் கட்டிடம் கட்டித் தரும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

ஆம். 1986–87 ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நத்தம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புன்னம்பட்டியில் புதிய சத்துணவுக் கூடம் கட்டும் வேலையை எடுத்து செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சென்னை 127-வது வட்டத்திலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடம்

2.—வினா 1211—திரு. கே. [illegible]: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை நகரம் மைலாப்பூர் 127-வது வட்டத்தில் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான இடத்தைத் தனி நபர் ஒருவருக்கு 1982-83, 1983-84-ல் குத்தகைக்கு விட்டதில் அவர் வேலி போட்டு பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடைஞ்சல் ஏற்படுத்தியது உண்மையா?

(ஆ) ஆம் எனில், சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): சென்னை நகரம் மயிலை 127-வது வட்டத்திலுள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான புல எண் 3584/33-ல் 450 சதுர அடி பரப்பளவு இடத்தை நிரந்தரமான கட்டிடம் ஏதும் கட்டக்கூடாது என்றும், ஆனால் நிலத்தைச் சுற்றி வேலி போட்டுக் கொள்ளலாம் என்ற நிபந்தனையின் பேரில் 1-9-1981-ல் குத்தகைக்கு விடப்பட்டது.

நிபந்தனையின்படி குத்தகைக்காரர் நிலத்தைச் சுற்றி வேலி போட்டு அந்த இடத்தை மிக அழகாக தோட்டம் போட்டு பாதுகாத்து வந்தார். மேலும் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தியதாக தகவல் இல்லை.

எனினும், இதற்கிடையில் "லோட்டஸ் யாகம்" என்ற பொது நிறுவனமும், பொதுமக்களும் அந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டதால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளது என்று காரணம் காட்டி குத்தகையை ஆட்சேபிக்கவே, சென்னை மாநகராட்சி ஆணையரும், மற்ற அதிகாரிகளும் அந்த இடத்தைப் பார்வையிட்டு குத்தகை அனுமதி மறுக்கப்பட்டு, மேற்படி இடத்தை 1-2-1983 முதல் மாநகராட்சியே எடுத்துக் கொண்டது.



## திருநெல்வேலி மாவட்டம் சாலைகளை பழுது பார்க்கும் பணி

3—(வினா 1542)—மாண்புமிகு திரு. [illegible] வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகரப் பஞ்சாயத்து கீழச்செவல் மற்றும் நயினார்குளம், ஐந்தாங்கட்டளை ஊராட்சி ஒன்றியம், நாலாங்கட்டளை பகுதி வாழ் மக்களிடமிருந்து சாலை பழுது பார்க்கக் கோரி மனு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகரப் பஞ்சாயத்து, கீழச்செவல் மற்றும் நயினார்குளம், ஐந்தாங்கட்டளை ஊராட்சி ஒன்றியம், நாலாங்கட்டளை பகுதிவாழ் மக்களிடமிருந்து சாலை பழுது பார்க்கக் கோரி மனு எதுவும் வரவில்லை.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் பேரூராட்சியைச் சேர்ந்த கீழச்செவல் நயினார்குளம் செல்லும் சாலையில் மெட்டல் ரோடு போடும் பணி சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றியம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐந்தாங்கட்டளை, நாலாங்கட்டளை சாலை பழுது பார்த்தல் ஸ்தல சாலை மானியத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய திட்டமிடப்பட்டு மேற்படி பணி நடைபெற்று வருகிறது.

## பட்டம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்

4—வினா 2364—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதிக்குட்பட்ட பட்டம்பாளையத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது சப்-சென்டர் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

திருப்பூர் தொகுதிக்குட்பட்ட பட்டம்பாளையத்தில் ஏற்கனவே பல்நோக்கு சுகாதார திட்டத்தின்கீழ் ஒரு சப் சென்டர் ஜூலை 1984 முதல் இயங்கி வருகிறது.

### 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் இருந்து தமிழகத்திற்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகள்

5—வினா 2429—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து தமிழகத்திற்கு 1983 மற்றும் 1984 ஆம் ஆண்டுகளில் எத்தனை சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்?

(ஆ) அதன் மூலம் சுற்றுலா வாரியத்திற்கு கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

(அ) சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு 1983 ஆம் ஆண்டில் முறையே 13,888 மற்றும் 19,815 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். 1984 ஆம் ஆண்டில் முறையே 13,061 மற்றும் 18,304 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

(ஆ) அதன் மூலம் 1983 ஆம் ஆண்டில் ரூ. 1.51 இலட்சமும் 1984 ஆம் ஆண்டில் ரூ. 1.32 இலட்சமும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வருமானம் கிடைத்துள்ளது.

### ஊராட்சி ஒன்றியங்களில் பழுதுபட்டு பயனற்றுள்ள டிராக்டர்கள்

6—வினா 2976—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான பழுதுபட்டு பயனற்றுப் போய் இருக்கின்ற டிராக்டர்கள் எத்தனை ஒன்றியம் வாரியாக?

(ஆ) பழுதடைந்து இருக்கின்ற டிராக்டர்கள் எத்தனை?

விடை—

(அ) மற்றும் (ஆ): 134. பட்டியல்* வைக்கப்பட்டுள்ளது.

*231 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



### சின்னாளப்பட்டியில் காவல் நிலையம் அமைத்தல்.

7—வினா 3204—திரு. கே. சுப்புராயன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டியில் ஒரு காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

சின்னாளப்பட்டி மக்கள் தொகை சுமார் 30,000 பேராகும். மேலும் இப்பகுதி குற்றம் அதிகம் நிகழும் பகுதியல்ல. அம்பாத்துறை காவல் நிலையம் சின்னாளப்பட்டியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது.

மேற்கூறிய காரணங்களினால், சின்னாளப்பட்டியில் புதிதாக ஒரு காவல் நிலையம் அமைக்கும் தேவை ஏதும் தற்போது இல்லை.

### சிமெண்டுக்கான சுண்ணாம்புக்கல் தோண்டி எடுப்பதற்கு குத்தகைக்கு விடப்பட்ட அரசு நிலங்கள்.

8—வினா 3376—மாண்புமிகு திரு. வேடச்சந்தூர் [illegible] பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் சிமெண்டுக்கான மூலப் பொருளாகச் சுண்ணாம்புக்கல் தோண்டி எடுப்பதற்கான அரசு நிலங்கள் யார் யாருக்கு எந்த ஆண்டில் குத்தகை விடப்பட்டது?

(ஆ) குத்தகைக்கு எடுத்தவர்களில் பலர் பல ஆண்டுகாலமாக அந்த நிலத்தை உபயோகிக்காமல் உள்ளனர் என்பது உண்மையா?

விடை—

(அ) அரசு புறம்போக்கு நிலங்களில் சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்க சுரங்கக் குத்தகைகள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள், நபர்களின் விவரங்கள் **இணைப்பில் தரப்பட்டுள்ளன.

**580–583 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

(ஆ) சுரங்க உரிமைபெற்றவர் குத்தகை உரிமைப் பத்திரம் தாக்கல் செய்த ஓர் ஆண்டிற்குள் வேலையைத்தொடங்க வேண்டும். அப்படி தொடங்காவிட்டால் அவரிடம் சட்டரீதியாக காரணம் கேட்டு, அவர் சுரங்கவேலை செய்யமாட்டார் என்று கருதப்பட்டால், அவருடைய சுரங்கக் குத்தகை ரத்து செய்யப்படும். மேலும், 1957 ஆம் ஆண்டு சுரங்கம் மற்றும் கனிமங்கள் (முறைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி) சட்டத்தின் படியும், மற்றும் 1960 ஆம் ஆண்டு கனிம சலுகை விதிகளின் படியும், சுரங்க உரிமங்கள் செயல்படுகின்றனவா மற்றும் அரசுக்குச் சேரவேண்டிய உரிமைத் தொகை, வரிகள் முதலியவை சரியாக வசூலிக்கப்படுகின்றனவா என்பதை அரசு கண்காணித்து வருகிறது.

தரக்குறைவான கனிமங்கள் இருத்தல், தகுந்த ஆட்கள் கிடைக்காமை, குத்தகைதாரர் அமைத்த தொழிற்சாலைகளில் தகராறு, சந்தை நிலவரங்கள் சாதகமாக இல்லாமல் இருத்தல், இயந்திரங்களின் சேதம் போன்ற சில காரணங்களால், சில சமயங்களில் சுரங்க வேலைகள் நடைபெறுவதற்கு தடைகள் ஏற்படுகின்றன. பொதுவாக சுரங்க உரிமை பெற்றவர் வேலை செய்யாமல் இருந்தால் இயங்கா கால வாடகை (dead rent) நிலவரி, நீர்வரி போன்ற வரிகளை அரசுக்குச் செலுத்த வேண்டும். இதனால், அவருக்கு பண இழப்புதான் ஏற்படும். ஆகவே சுரங்கக் குத்தகைகள் பெற்றவர்களில் பலர் பல ஆண்டுகளாக சுரங்க வேலை செய்யாமல் இருப்பது என்பது அரிது.

### சங்கரன்பந்தல் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைத்தல்.

9—வினா 4206—திரு. என். [illegible] : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி தாலுக்கா இலுப்பூர் சங்கரன்பந்தல் பகுதியில் புதிதாக ஒரு காவல் நிலையம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

விடை —

தஞ்சை கிழக்கு மாவட்டம் தரங்கம்பாடி தாலுகாவில் உள்ள சங்கரன்பந்தல் கிராமம் குற்ற நிகழ்ச்சிகள் அதிகம் உள்ள பகுதியல்ல. இங்கு சொத்து சம்பந்தமான மற்றும் காயம் விளைவிக்கும் குற்றங்கள் சராசரியாக வருடத்திற்கு ஒரு வழக்கே நிகழ்கின்றது. எனவே, இங்கு தனியாக ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.





### ஆரணி நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக மாற்றும் திட்டம்

10—வினா 4134—திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆரணி நகராட்சியை "First Grade" (முதல் நிலை) நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றப்படும் ?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) ஆரணி நகராட்சியை முதல் நிலைக்கு உயர்த்துவதால் எந்தெந்தப் பணியிடங்களை உயர்த்த வேண்டும் என்றும், அவ்வாறு உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவு விபரங்களையும், அது தொடர்பான தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மன்றக் குழுவின் தீர்மான நகலுடன் திருத்திய பிரேரணையினை ஆரணி நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட பின்னர் அரசு அதனைப் பரிசீலித்துத் தக்க ஆணையிடும்.

### மங்கலம் கிராமத்தில் காவல் நிலையம் அமைத்தல்

11—வினா 4286—திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள மங்கலம் கிராமத்தில் காவல் நிலையம் திறக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கலசப்பாக்கம் தொகுதி மங்கலம் கிராமத்தில் ஒரு காவல் நிலையம் திறப்பதற்கான கருத்துரு காவல் துறையின் பரிசீலனையில் உள்ளது. அக்கருத்துரு அரசுக்குப் பரிந்துரை செய்து வரப்பெற்றால் அதனைப் பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

குறிச்சி பேரூராட்சி எல்.ஐ.சி. காலனியில் புறக்காவல் நிலையம் அமைத்தல்.

12—வினா 4332— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி குறிச்சி பேரூராட்சி எல்.ஐ.சி. காலனியில் புறக்காவல் போலீஸ் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சி எல்.ஐ.சி. காலனியில் புறக்காவல் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கி மூலம் வழங்கப்பட்ட ஐ.ஆர்.டி.பி. திட்டக் கடன் :

13—வினா 4774—திரு. பி. என். இராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் 1983–84-இல் வழங்கப்பட்ட I. R. D. P. திட்டக் கடன் எவ்வளவு ?

(ஆ) இவ்வங்கியின் மூலம் வழங்கிய குறுகியக் காலக்கடன் தொகை எவ்வளவு ?

(இ) இவ்வங்கியின் 1983–84இல் இலாபம் எவ்வளவு ?

விடை—

(அ) ரூ. 9.09 இலட்சம்.

(ஆ) ரூ. 172.08 இலட்சம்.

(இ) இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை.



உலக வங்கிக் கடன்கள் மீதான வட்டியை செலுத்துவதில் மாநில அரசுக்கு விலக்கு அளித்தல்.

14—வினா 5681—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கிக் கடன்கள் மீதான வட்டியை செலுத்துவதில் மாநில அரசுக்கு விலக்கு அளிக்குமாறு மைய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா ?

விடை—

இல்லை. ஆனால், மைய அரசு உலக வங்கியிடமிருந்து வாங்கும் கடன் முழுவதையும் எந்தக் கால வரையறை மற்றும் உடன்படிக்கையின்படி வாங்குகின்றதோ அதனைஅப்படியே அதே முறையில், மாநில அரசுக்கு வழங்க வேண்டுமென்று பல்வேறு காலங்களில் இவ்வரசு மைய அரசை வேண்டியுள்ளது. அவ்வாறு வழங்கும் கடன் மீது பணிக்கான கட்டணமாக ஒரு விழுக்காட்டிற்கு மிகையாகாமல் கடன் தொகையிலிருந்து கழித்துக் கொண்டு மீதமுள்ளத் தொகையினைக் கடனாக வழங்கலாம் என இவ்வரசு மைய அரசை வேண்டியுள்ளது. இக் கோரிக்கையைத் திட்டக் குழு ஏற்க மறுத்துள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வீட்டுவசதித்துறை மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

15—வினா 5767—திரு. பா. வளர்மதி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் வீட்டு வசதித் துறை மூலம் எவ்வளவு வீடுகள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது ?

(ஆ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) 1,41,653 வீடுகள்.

(ஆ) ரூ. 369.05 கோடி.

### தாடிக்கொம்பில் புதிய காவல் நிலையம் அமைத்தல்.

16—வினா 5941—திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியில் உள்ள தாடிக்கொம்பில் புதிய காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் தொகுதியில் உள்ள தாடிக்கொம்பில் புதிய காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### தென்காசி தாலுக்காவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

[illegible]—வினா 60[illegible]—திரு. [illegible] : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுக்காவில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன ?

(ஆ) அவற்றில் எத்தனை நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளன ?

(இ) அவற்றில் எத்தனை இயங்கும் நிலையில் உள்ளன ?

விடை—

(அ) நான்கு. அவை கீழ் வருமாறு :—

(1) ஆலங்குளம் (2) பாவூர் சத்திரம் (3) [illegible] பட்டி (4) வடகரை கீழ்ப்பிடாகை.

(ஆ) மேற்கண்ட நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளன.

(இ) நான்கும் இயங்கும் நிலையில் உள்ளன.



### விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் உள்ளூர் எழுத்தர்களை நிரந்தரமாக்குமாறு கோரிக்கை.

18—வினா 6115—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் 'உள்ளூர் எழுத்தர்களை' நிரந்தரமாக்க வேண்டும் என்னும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

### திண்டுக்கல் நகரின் மையப் பகுதியிலுள்ள குளங்களில் தேங்கும் சாக்கடை நீரை அப்புறப்படுத்துதல்.

19—வினா 611[illegible]—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரின் மையப் பகுதிகளில் அமைந்துள்ள, அரண்மனைக்குளம், அய்யன் குளம், கோபால் சமுத்திரம் குளம், மேட்டு ராஜக்காபட்டி குளம் ஆகிய குளங்களில் தேங்கும் சாக்கடை நீரை நகரத்தை விட்டு அப்புறப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

இந்நகராட்சி எல்லைக்குள் ஐந்து குளங்கள் உள்ளன. இவற்றில் அரண்மனைக் குளம், மேட்டு ராஜக்காபட்டி குளம் ஆகிய இரண்டும் (அரசு புறம்போக்கு) தாசில்தார் பொறுப்பில் உள்ளது. அய்யன்குளம், சொக்கலிங்கம்பிள்ளை குளம், கோபாலசமுத்திரம் குளம் ஆகிய மூன்றும் (அரசு புறம்போக்கு) நகராட்சி ஆணையர் பொறுப்பில் உள்ளவாகும். இவற்றில் வந்து தேங்கும் சாக்கடை நீரை வெளியேற்ற போதுமான நிலம் ஏதுமில்லை.

இதனைப் பயன்படுத்த மாற்று நிலப்பகுதியும் இல்லை. எனவே நகரிலிருந்து வெளியாகும் கழிவு நீர் தேங்கும் இக்குளங்களில் உள்ள கழிவு நீரை வெளியேற்ற பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாததால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை உள்ளது.

பெருந்துறை அருகே கண்டுபிடிக்கப்பட்ட புதையுண்ட நகரம்.

20—வினா 6436—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பெருந்துறை அருகே புதையுண்ட நகரம் 1985-ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இது குறித்து தமிழ் பல்கலைக் கழகத்திலிருந்து பெறப்பட்ட இரு அறிக்கைகளின் நகல்கள் தகவலுக்காக அவை முன் **வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் நகராட்சி நஞ்சப்பா மேல்நிலைப் பள்ளி.

21—வினா 6567—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி நஞ்சப்பா மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைகளும், மேஜைகளும் இல்லை என்பது அரசிற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

---

**584–589ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





விடை—

(அ) ஆம்.

(ஆ) திருப்பூர் நகராட்சி நஞ்சப்பா மேல்நிலைப் பள்ளி
யில் 1984–85 ஆம் ஆண்டில் நான்கு கூடுதல் வகுப்பறைகள்
ரூ. 1,83,407 செலவில் கட்டப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டில்
இரு வகுப்பறைகள் ரூ. 95,000 செலவில் கட்டப்பட்டன.
கூடுதலாக 2 வகுப்பறைகள் ரூ. 1 லட்சம் செலவில் கட்ட நட
வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்சொன்ன 2 வகுப்
பறைகளும் கட்டி முடிக்கப்பட்டவுடன் போதுமான இட வசதி
இருக்கும். மரச்சாமான்கள் வாங்க ரூ. 1 லட்சம் ஒதுக்கப்
பட்டுள்ளது. மேற்படி மேல்நிலைப் பள்ளிக்கு பள்ளி வசதிக்
கட்டணத்தில் ரூ. 30,000 மதிப்பில் மரச்சாமான்கள் வாங்கவும்
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள தமிழ்க் கல்லூரிகளின் மாணவர் எண்ணிக்கை.

22—வினா 7120—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள 11 தமிழ்க் கல்லூரிகளில் கடந்த சுமார் 10 ஆண்டுகளாக மாணவர்கள் எண்ணிக்கை தொடர்ச்சியாகக் குறைந்து வருவது உண்மையா?

(ஆ) 1984–85 ஆம் ஆண்டில் 11 கல்லூரிகளில் கல்லூரி வாரியாக மொத்த மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) மாணவர் குறையக் காரணம் யாது?

(ஈ) இதைத் தடுக்க அரசு நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ)—

| | மாணவர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| 1. ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி மயிலம். | 58 |
| 2. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர். | 69 |

| | |
|---|---|
| 3. கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் .. | 71 |
| 4. ஸ்ரீ கா.வா.சு. செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள். | 56 |
| 5. அரசர் கல்லூரி, திருவையாறு தமிழ் பயிலும் மாணவர் எண்ணிக்கை. | 200 |
| 6. கீழ்த்திசை மொழிக் கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை. | 34 |
| 7. கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலச்சிவபுரி | 32 |
| 8. இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி .. | 22 |
| 9. செந்தமிழ்க் கல்லூரி, மதுரை .. .. | 96 |
| 10. மோகனூர் சுப்ரமணியம் தமிழ்க் கல்லூரி, மோகனூர். | 25 |
| 11. (செந்தமிழ்க் கல்லூரி, பழனி அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது). | |

(இ) பொதுவாக இப்பொழுது வேலைவாய்ப்பு மிக்க வகுப்புக்களுக்கே மாணவர்களும் பெற்றோரும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். மேலும் பல கலைக் கல்லூரிகளிலும் இளநிலை (பி.ஏ) மற்றும் நிறை நிலை (எம்.ஏ) அளவில் தமிழ்ப் பட்ட வகுப்புகள் கடந்த பத்தாண்டு காலத்தில் புதிதாகவும் தொடங்கப் பெற்றுள்ளன. இதனால் மிகச் சிறிய எண்ணிக்கையில் உள்ள தமிழ்க் கல்லூரிகளைத் தேடி வரவேண்டி இருந்த நிலை மாறி அந்தந்தப் பகுதியிலேயே அமைந்துள்ள கலைக் கல்லூரிகளிலேயே இளநிலை/நிறை நிலை தமிழ் பட்ட வகுப்புக்களில் மாணவர்கள் சேர அதிக வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தமிழ்க் கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைய இவை காரணமாக உள்ளன.

(ஈ) தமிழ்க் கல்லூரிகள் அனைத்தும் (தஞ்சை அரசர் கல்லூரி தவிர) தனியார் நிர்வாகத்தில் உள்ளது. ஆகவே அதிகம் மாணவர்களைச் சேர்க்க குறிப்பாக ஏதும் சிரமங்கள் இருப்பதாகவோ அல்லது கல்லூரிக் கல்வித் துறையின் நடவடிக்கைகளைக் கோரியோ உதவி நாடப்பட்டால் விதிகளுக்குட்பட்டு ஆவன செய்யப்படும்.





## சென்னை நகரின் தினசரி குடிநீர் தேவை.

23—வினா 7288—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரின் தினசரி குடிநீர் தேவை எவ்வளவு?

(ஆ) தற்போதைய தண்ணீர் இருப்பு இன்னும் எத்தனை மாதத்திற்குப் போதுமானதாகும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சென்னை நகர பொது மக்களின் குடிநீர்த் தேவை நாளொன்றுக்கு சுமார் 53 மில்லியன் காலன்கள் ஆகும். தற்போது வழங்கப்படும் அளவில் இவ்வாண்டு 1986 இறுதி வரை நீர் வழங்க போதுமான அளவு, நீர்த் தேக்கங்களில் உள்ளது.

## சித்ரா நதி மீது கட்டப்படும் பாலம்

24—வினா 7749—திரு. டி. ஆர். வெங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்காசி தாலுகா இடையர் தவணையில் சித்ரா நதி மீது கட்டப்படும் பாலவேலை எப்பொழுது முடியும்?

விடை—

பாலம் கட்டும் பணி இவ் வருட இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிரியர் பயிற்சிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ள மேல்நிலைப்பள்ளிகள்

25—வினா 7764—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985–86 ஆம் கல்வி ஆண்டில் எத்தனை மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது? மாவட்ட வாரியாக.

(ஆ) இவற்றில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை? மாவட்ட வாரியாக.

விடை—

(அ) மற்றும் (ஆ) : 1985–86 ஆம் கல்வியாண்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்வி மொத்தம் 281 மேல்நிலைப் பள்ளிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் அரசு மேல்நிலைப் பள்ளிகள் 143 ஆகும். மாவட்ட வாரியாக பட்டியல் இணைப்பில் *தரப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டம் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

26—வினா 7816—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள அணைக்கரை வடவூர் தலைப்பு கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

தத்தனேரி—நெடுங்குளம் வரையுள்ள சாலைப் பணிகள்

27—வினா 7857—திரு. ச. குமரகுருபர ராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தத்தனேரி—நெடுங்குளம் வரையுள்ள சாலையில் ஏன் இன்னும் வேலைகள் துரிதமாக நடைபெற்று முடிக்கப்படாமல் உள்ளது?

(ஆ) விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்படுமா?

---

590*—ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பணிகள் யாவும் முழுவதுமாக 1986-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

நாச்சியார்கோவில்—பூந்தோட்டம் செல்லும் நெடுஞ்சாலையை செப்பனிடும் திட்டம்.

28—வினா 7940—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், நாச்சியார் கோவில்-பூந்தோட்டம் செல்லும் நெடுஞ்சாலையை செப்பனிட்டுத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இச்சாலையின் சில பகுதிகள் வெள்ள நிவாரணப் பணித் திட்டம் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளன. 1986–87-ம் ஆண்டு பராமரிப்பின் கீழ் ரூ. 1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெறவுள்ளன.

குடவாசல் கடமங்குடி நெடுஞ்சாலையை செப்பனிடும் திட்டம்.

29—வினா 7957—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல்-கடமங்குடி நெடுஞ்சாலையை செப்பனிட்டுத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் சாலையை செப்பனிட்டுத் தரும் திட்டமேதும் அரசிடம் இல்லை.

### திருவாஞ்சியம் சாலையில் வளப்பாற்றின் குறுக்கே வண்டிப் பாலம் அமைத்தல்.

30—வினா 7966—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், புளிச்சக்காடி-திருவாஞ்சியம் சாலையில் வளப்பாற்றின் குறுக்கே ஒரு வண்டிப் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

பரிசீலனையில் இல்லை.

### வேலமருதம்பட்டியில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்.

31—வினா 7978—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், வேலமருதம்பட்டியில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் பாலப் பணியைப் பற்றிய செயற்குறிப்பேதும் அரசிடம் இல்லை.

### தஞ்சை மாவட்டத்தில் நகரச்சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றல்.

32—வினா 7986—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மணப்பறவை-ஆரைக்கரூர்,-காங்கேயம் நகரச் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### சிதக்கமங்கலம் சாலையில் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே வண்டிப் பாலம் அமைத்தல்.

33—வினா 7987—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சேதனிபுரம்-சிதக்கமங்கலம் சாலையில் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே ஒரு வண்டிப்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### புரையூர் அருகில் பாலம் கட்டுதல்.

34—வினா 8026—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கடம்பா அருகாமில் புரையூர் சமீபமாக பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

(இ) மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### பிரகாசபுரம் நெடுஞ்சாலையின் குறுக்கே ஓடையில் பாலம் கட்டும் திட்டம்.

35—வினா 8029—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, பிரகாசபுரம் ஊருக்குள் நெடுஞ்சாலையில் குறுக்கே போகும் காட்டு ஓடையில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கட்டக் கோரும் இடத்தில் மழைக்காலத்தில் வெள்ளப் பெருக்கு அதிகமாக இருப்பதால் மக்கள் இக்குறுக்கேட்டைக் கடக்க இவ் விடத்தில் இரு வழித்தட சிறுபாலம்ஒன்று கட்டுவதற்கு ரூ. 2.00 இலட்சம் தேவைப்படும். மேற்படி பணி அரசின் அங்கீகரிக்கப் பட்ட திட்டங்கள் எதிலும் இதுவரை இடம் பெறவில்லை. எனி னும் இனி வரும் ஆண்டுகளில் அரசின் நிதிவளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பகுதி 2 திட்டத் தின்கீழ் மாநிலச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.

## குளத்து குடியிருப்பு—நாசரேத் வரையுள்ள சாலையை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்ளல்

36—வினா 8030—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கடையனோடை நாசரேத் ரோட்டில் குளத்துக் குடி யிருப்பிலிருந்து நாசரேத் வரையுள்ள ரோட்டை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் சாலை நெடுஞ்சாலைத் துறை யினால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

## பெத்தானேந்தல் கிராமம்—வைகை ஆற்றின் வடகரை வரையுள்ள சாலையை மேம்பாடு செய்தல்.

37—வினா 8176—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பெத்தானேந்தல் கிராமத்திலிருந்து வைகை ஆற்றின் வடகரை வரையுள்ள சாலையை மேம்பாடு செய்ய அரசு திட்டமேதும் வகுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை துவக்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ). இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.





## மணலூர் கிராமத்திற்கு அருகில் வைகை ஆற்றில் பாலம் கட்டுதல்.

38—வினா 8179—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

"பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மணலூர் கிராமத்திற்கு அருகில் வைகை ஆற்றின் மீது ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மணலூர் அருகே வைகை ஆற்றின் மீது பாலம் கட்ட சுமார் ரூபாய் 110 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பாலம் கட்டும் பணி அரசு அங்கீகரிக்கப்பட்ட எந்த திட்டத்திலும் இதுவரை இடம் பெற வில்லை. அரசின் குறுகிய நிதி வசதி காரணத்தால் இப்பணிகள் உடன் எடுத்து செய்ய இயலாது. எனினும் இனிவரும் ஆண்டு களில் அரசின் நிதிவளம் இடம் தரும்போது வேலையின் முக்கிய யத்துவம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு இப்பணியினை அரசு திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

## கரிசல்குளம் செல்லும் சாலையில் கிருதிமால் நதியின் மீது பாலம் அமைத்தல்.

39—வினா 8182—திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

"மானாமதுரைத் தொகுதியில் திருப்புவனம்—பழைய ஊர் சாலையிலிருந்து பிரிந்து வயல்சேரி வழியாக கரிசல்குளம் செல்லும் சாலையில் கிருதிமால் நதியின் மீது ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

வினாவில் குறிப்பிடப்படும் பாலப்பணிபற்றி செயற் குறிப் பேதும் அரசிடம் இல்லை.

[1987 ஏப்ரல் 21

### கன்னியாகுமரி நகரியத்திலுள்ள அரிசன சமுதாயக் கூடக் கட்டிடம்.

40—வினா 8535—திரு. மா. [illegible] : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி நகரியத்தில் விவேகானந்தா நூல் நிலையத்திற்கு பக்கத்திலுள்ள அரிசன சமுதாயக் கூடக் கட்டிடம் பூர்த்தி அடையாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்டி முடிக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

(இ) கட்டிடத்தை கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) சமுதாயக்கூடம் கட்டுமானப் பணிகள் முடிவுற்ற பின்பு செயல்பட இடையூறு விளைவிக்கும் வகையில் அதைச்சுற்றி அமைந்துள்ள பகுதியினை. கன்னியாகுமரி நகரியத்திடமிருந்து குத்தகை எடுத்துள்ளனர். குத்தகைத்தாரர்கள், காலி செய்ய மறுத்ததால், அது தொடர்பாக நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு முடிவு பெறாத நிலையில் தொடர்ந்து கொண்டிருந்தன. இக்காரணங்களால் கட்டுமானப்பணி. தடைபட்டது. இந்நிலையில் இச்சமூகக்கூடம் கட்டும் இடம் கன்னியாகுமரி நகரில் மிகவும் நெருக்கடியான வாணிபப்பகுதியில் அங்காடிகளால் சூழப்பட்ட இடத்தில் அமைந்துள்ளதால், அங்கு கட்டப்படும் கூடம் ஆதிதிராவிடருக்கு பயன்படாது என்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்தை அரசு ஏற்று மாற்று இடம் தெரிந்தெடுத்து அங்கு ஒரு சமூகக்கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### வெண்மான்கொண்டான் கிராமத்தில் தாய்சேய் நல விடுதி கட்டுதல்.

41—வினா 8831—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள வெண்மான் கொண்டான் கிராமத்தில் தாய் சேய் நல விடுதி கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?



1987 ஏப்ரல் 24]

விடை—

(அ) திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள வெண்மான் கொண்டான் கிராமத்தில் தாய் சேய் நல விடுதி கட்டும் திட்டம் தற்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

### ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.

42—வினா 8835—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி எத்தனை உள்ளன ?

விடை—

ஜெயங்கொண்டம் தொகுதியில் புனித பாலீஸ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆண் பெண் இருபாலருக்காகவும் புனித அன்னாள் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி பெண்களுக்காகவும் ஆக இரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனியாரால் நடைபெற்று வருகின்றன. இவை இரண்டுமே அரசால் அங்கீகரிக்கப்படாத சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் ஆகும்.

### கடையநல்லூர் பேருந்து நிலையம்.

43—வினா 9181—திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடைய நல்லூர் பேருந்து நிலையத்தை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் சீரமைக்கும் பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

விடை—

(அ) கடையநல்லூர் நகராட்சியில் பேருந்து நிலையத்தை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சீரமைக்கும் [illegible] ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில்கல்வி நிலையம் நிறுவுதல்.

44—வினா 9284—திரு. கா. சொர்ணம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு தொழில் கல்வி நிலையம் (பாலிடெக்னிக்) ஏதும் நிறுவியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் அரசு மானிய உதவியுடன் இயந்திர இயல் மற்றும் மின்னணுவியல் பாடத்திட்டங்களை நடத்தி முகமது சதக் பாலிடெக்னிக் என்ற பெயரில் ஒரு பாலிடெக்னிக் இயங்கி வருகின்றது.

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட தொழில்துறையில் பின்தங்கிய தாலுக்காக்களின் எண்ணிக்கை.

45—வினா 9331—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழிற் துறையில் பின்தங்கிய தாலுக்காவாக மத்திய அரசு அறிவித்தவை எத்தனை?

(ஆ) மாநில அரசு அறிவித்தவை எத்தனை?

விடை

(அ) மைய அரசு தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சலுகைகளை வழங்குவதற்காக இடங்களை எ,பி.சி. என மூன்று வகையாகப் பிரித்துள்ளது, தமிழ்நாட்டில் 'எ' பிரிவில் எந்த வட்டமும் இல்லை. 'பி' பிரிவின்கீழ் மைய அரசின் 15 சதவீதம் மானியம் பெறும் இனத்தில் 39 வட்டங்களும், 'சி' பிரிவின் கீழ் 10 சதவீதம் மானியம் பெறும் இனத்தில் 67 வட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) மாநில அரசு 15 சதவீதம் மானியம் வழங்குவதற்காக 33 வட்டங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.





காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சியம்மன் நூற்பாலை.

46—வினா 9493—திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ள காமாட்சியம்மன் நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறதா அல்லது லாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) இந்த ஆலையில் எவ்வளவு எடை நூல் ஒரு நாள் ஒன்றுக்கு உற்பத்தியாகிறது?

விடை—

(அ) காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ள காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறது.

(ஆ) இவ்வாலையில் நாள் ஒன்றுக்கு சுமார் 5,200 கிலோ (40-ம் நெ. நூல் கணக்கில்) வரை உற்பத்தியாகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டங்களின் கீழ் நிறைவேறிய பணிகள்.

47—வினா 9537—திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டங்களின் கீழ் நிறைவேற்றிய பணிகளும் அவற்றின் மதிப்பீடு பற்றிய விவரம் யாது?

[1987 ஏப்ரல் 24

விடை—

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி, குருவிகுளம் ஆகிய ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டங்களின்கீழ் நிறைவேற்றப்பட்ட பணிகளும் அவற்றின் மதிப்பீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| பணியின் பெயர். | பணிகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுத் தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய்). |
| **கோவில்பட்டி—** | | |
| 1. இணைப்புச் சாலைகள் .. | 36 | 12,00,410 |
| 2. சரளைப் பரப்புதல் .. | 26 | 1,88,277 |
| 3. சிறு பாலங்கள் .. .. | 124 | 22,99,492 |
| 4. தாய்-சேய் நலவிடுதி .. | 3 | 2,64,338 |
| 5. ஊரக மருந்தகங்கள் .. | 1 | 79,800 |
| மொத்தம் .. | 190 | 40,32,317 |
| குருவிகுளம்— | | |
| 1. இணைப்புச் சாலைகள் .. | 27 | 8,69,608 |
| 2. சிறு பாலங்கள் .. .. | 91 | 21,82,903 |
| 3. தாய்-சேய் நல விடுதி .. | 3 | 2,87,280 |
| 4. ஊரக மருந்தகங்கள் . | 3 | 2,72,824 |
| மொத்தம் .. | 124 | 36,12,615 |



1987 ஏப்ரல் 24]

## ஆரணி கால்நடை சந்தையை இடமாற்றம் செய்தல்.

48—வினா 9575—திரு. சின்னக்குழந்தை : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி கால்நடை சந்தை இடமாற்றம் செய்ய உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த இடத்தில் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்சமயம் கால்நடை சந்தை ஆரணி நகராட்சி அலுவலகத்திற்கு அருகிலுள்ள அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் தற்காலிகமாக நடைபெற்று வருகிறது. கால்நடை சந்தையை மாற்ற மாற்று இடம் முடிவு செய்ய நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் தீர்மானப்படி கால்நடை சந்தைக்கு இடம் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## தோப்பூரிலுள்ள மினரியர்ஸ் கூட்டுறவு நூற்பாலை.

49—வினா 9716—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோப்பூரிலுள்ள மினரியர்ஸ் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு என்ன ?

(இ) எப்போது விரிவாக்கும் பணி தொடங்கப்பெறும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திட்ட மதிப்பீடு சுமார் ரூ. 140 இலட்சம்.

(இ) இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் தொடங்கப்பெறும்.

[1987 ஏப்ரல் 24

திண்டுக்கல்லிலுள்ள குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் அலுவலகம்.

50—வினா 10576—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் செயல்பட்டு வந்த குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் பெரியகுளத்திற்கு மாற்றப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 212-ன்கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சர் அறிக்கை.

### அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத் துவக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 212-வது விதியின் கீழ், அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் 1-4-1987-ல் துவக்கப்பட்டதனை [illegible].

பொதுமக்களுடைய கோரிக்கைகள் மீது விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டி 600-க்கும் மேற்பட்ட போக்குவரத்துப் பேருந்துகளைக்கொண்ட போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க வேண்டும் என்றும் முடிவு எடுத்து, அதற்கேற்ப இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில், முதலில் பாண்டியன், சேரன், கட்டபொம்மன், சோழன் போன்ற



1987 ஏப்ரல் 24] [திரு. சு. முத்துசாமி]

போக்குவரத்துக் கழகங்களை இரண்டாகப் பிரித்து முறையே மருதுபாண்டியர், ஜீவா, நேசமணி என்ற போக்குவரத்துக் கழகங்கள் ஏப்ரல் 1983-ஆம் ஆண்டும், மற்றும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் ஏப்ரல் 1985-ஆம் ஆண்டிலும் துவக்கப்பட்டன.

மேலும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, அண்ணா மாவட்டத்திற்கு என்று திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு, 1-4-1986-லே ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்டது. இப்போது அண்ணா போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தர்மபுரியை தலைமையிடமாகக் கொண்டு, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் 1-4-1987 முதல் 332 பேருந்துகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அண்ணா போக்குவரத்துக் கழகம் 430 பேருந்துகளுடன் இயங்கி வருகிறது.

## 3. அறிவிப்பு

### அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 22-4-1987-அன்று [illegible] நாஞ்சிலார் அவர்கள் உரையாற்றும்போது, நாஞ்சிலார் அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க ஒரு குறிப்பிட்ட சொல்லை மட்டும் நீக்கினேன். மீதி நீக்கப்பட்ட பகுதிகளை நானே நீக்கிவிட்டேன் என்பதைச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

## 4. கவன ஈர்ப்பு

### (அ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நன்னிலம் விவசாயிகளுக்கு நிவாரணம்

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தில் 1985-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பன்னிரண்டு வட்டங்களில் நன்னிலமும் ஒன்றாகும் என்று அரசு ஏற்றும் அப்பகுதியிலுள்ள குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் இல்லாததால் பல பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1985ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள சில கிராமங்களில் பயிர்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. தஞ்சாவூர் மாவட்டத்தில், நன்னிலம் வட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன எனக் கருதி தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டம் 86 (தமிழ்நாடு சட்டம் 53, 86) இன்படி இப்பகுதியிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்களை குத்தகைத் தொகை செலுத்தாமைக்காக நில வெளியேற்றத்தினின்று 30–9–1986 வரை பாதுகாப்பு அளிக்க வகை செய்யப்பட்டது.

2. 1986-ஆம் ஆண்டில் எப்பகுதியும் வெள்ளத்தால் பாதிக்கப்படாததினால் இச்சட்டத்தின் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகை தாரர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. தமிழ்நாடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்டம், 30–9–1986 இல் காலாவதியானதைத் தொடர்ந்து நன்னிலம் வட்டத்தில் குத்தகைப் பாக்கித் தொகையினை பயிரிடு குத்தகைதாரர்களிடமிருந்து வசூல் செய்வதற்காக குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955-இன் கீழ் நிலச்சுவான்தாரர்களால் 464 மனுக்களும், பொதுப் பொறுப்புக் கழகச் சட்டத்தின் கீழ் 394 மனுக்களும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒரே [illegible] வெளியேற்ற உத்தரவு [illegible]ட்டும் 30–9–1986க்குப் பிறகு [illegible]க்குள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. சாகுபடி குத்தகைதாரர்களின் விளைச்சல் இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்குத் தகுந்த நிவாரணம் அளிக்க இயலும். மேலும் நிலச்சொந்தக்காரர் மற்றும் பொதுப் பொறுப்புக் கழகத்திற்கும் நேரவேண்டிய குத்தகைத் தொகையினைச் செலுத்திவிட்டால் நிலவெளியேற்றம் செய்ய இயலாது.





திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டத்திலே வெள்ளம் ஏற்படுகின்ற காலத்தில் திருமலைராஜன் போன்ற ஆறுகளின் வடிகால் சீர் இல்லாததால், தண்ணீர் சீராக வடியாமல், தண்ணீர் தேங்கி பயிர்கள் பாதிக்கப்பட்டு, பயிர்கள் எல்லாம் அழுகுவது வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே 1985-லே ஏற்பட்ட வெள்ளம் மிகவும் கடுமையான வெள்ளங்களில் ஒன்று. அப்படி ஏற்பட்ட அந்த வெள்ளத்தில் பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு, விளைச்சலே அற்றுப்போன நிலையில், அரசாங்கம் பரிசீலனை செய்துதான் அன்றைக்கு இந்தக் குத்தகை பாக்கியை வசூலிக்கவேண்டாம் என்று தற்காலிகமாக சட்டம் செய்தார்கள். அங்கே விளைச்சலே இல்லை. விளையவே இல்லை என்று அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், தற்காலிகமாக தள்ளி வைத்த பின்னாலே வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வழிவகை செய்திருப்பது நியாயமா என்பதை அரசும் அமைச்சர் அவர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே விளையாத அந்த ஆண்டுக்கு குத்தகை வசூலிக்கக் கூடாது என்று நிரந்தரமான நிலையை செய்யவேண்டும் என்றும், இதற்கு அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இப்படி நீங்கள் அறிவித்த நிலையில் அதை முழுமையாகத் தள்ளுபடி செய்யாமல், தற்காலிகமாக தள்ளி வைத்த பின்னாலே, இதை வசூல் செய்கிற வாய்ப்பு இந்த அறிக்கையிலே இருக்கிற காரணத்தாலே. அதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. '1986-ஆம் ஆண்டில் எப்பகுதியும் வெள்ளத்தினால் பாதிக்கப்படாததினால் இச்சட்டத்தின் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது'' என்று அறிவித்திருக்கிறீர்கள். எனவே அரசு பரிசீலனையில் உள்ள ஒரு விவகாரத்தில், இன்றைக்கு வழக்குமன்றங்களிலேகூட நிலத்திலிருந்து குத்தகைதாரர்களை வெளியேற்ற செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே அரசு ஒரு முடிவு எடுக்கப்படுவதற்குள்ளாக நீதிமன்றம் தீர்ப்பு சொல்லிக்கொண்டிருப்பதை வெளியேற்றிக் கொண்டிருப்பதை அரசு தடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த விளக்க அறிக்கையிலேயே தெளிவுபடுத்தப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் சட்டம், 30–9–1986-ல் காலாவதியானதைத் தொடர்ந்து, அதற்குப் பிறகு சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த நடவடிக்கை

எடுக்கக்கூடாது என்று சொல்லப்பட்ட காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காலாவதியானதற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே நிலச்சுவான்தாரர்களால் 464 மனுக்களும் பொதுப் பொறுப்புக்கழச் சட்டத்தின்கீழ் 394 மனுக்களும் வந்திருக்கின்றன. அதிலே ஒரே ஒரு நில வெளியேற்ற உத்தரவு மட்டும் முறைப்படி பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த வகையில் அதைத்தவறு என்று சொல்லி விடமுடியாது. அது சட்டப்படிதான் நடைபெற்று இருக்கிறது. 1986—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை தமிழ்நாடு சட்டம் 53, 86-ல் கீழ் குறிப்பிட்ட பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் இப்பகுதியிலுள்ள பல்வேறு குத்தகைதாரர்கள் சேர்ந்து அந்த குத்தகைத் தொகையினை தவணை முறையில் செலுத்துவதற்கு வகை செய்ய ஒரு சட்டமுன்வடிவு கொண்டு வருவதுபற்றி கருத்துரு நிலச் சீர்திருத்த ஆணையரிடமிருந்து வந்திருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றி அரசு தக்க முடிவு எடுக்கும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமலைராஜன் போன்ற ஆறுகளில் வடிகால் இல்லாததால் தொடர்ந்து வெள்ளம் வரும்போது பாதிப்பு ஏற்படுவதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். எனவே 1985-ல் பாதிக்கப்பட்டு, அழிவு ஏற்பட்டு பயிரே விளையாத நேரத்தில் விவசாயிகள் எப்படி குத்தகை திருப்பிக் கொடுக்க முடியும்? இவ்வளவு காலம் ஒரு சட்டத்தைத் தற்காலிகமாக கொண்டுவந்து திருப்பியும் வசூலிப்பதற்கு வகை செய்து கொண்டிருக்கிறீர்களே, இதை மறுபரிசீலனை செய்து இதை உடனடியாக தடுத்து, சட்டம் வருகின்ற வரையிலே ஒரு பாதுகாப்பு தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த விவகாரங்களையெல்லாம் தீர்ப்பதற்காகத்தான் பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகைத் தொகையைச் செலுத்துவதற்கு நிலச் சொந்தக்காரர்களும் மற்றும் பொது பொறுப்புக் கழகத்தைச் சார்ந்தவர்களும் தொகையை வசூல் செய்வதற்கு மிக ஏதுவாகும். எந்தெந்த வகைகளில் யார் செய்வது சரி என்பதையெல்லாம் முடிவு கட்டுவதற்காக விவகாரம் ஏற்படுமேயானால், தமிழ்நாட்டில் 11 வருவாய் நீதி மன்றங்கள் தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, பரமக்குடி, மதுரை, கடலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கோவில்பட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.



சாகுபடி குத்தகைதாரர்களின் வெள்ளச்சல் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு தகுந்த நிவாரணம் அளிக்க இயலும். மேலும் இந்த நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் பொது பொறுப்புக் கழகத்துக்குச் சேர வேண்டிய குத்தகைத் தொகையினை செலுத்திவிட்டால், நில வெளியேற்றம் செய்யாது, அவர்கள் முறையீடு செய்துகொள்ளவும், நீதி பெறுவதற்கும் வழிவகை இருக்கிறது.

(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதி நத்தம்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைகள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி நத்தம்பட்டி கிராம புறம்போக்கு ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தில் வீடு கட்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் தடை விதித்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், நத்தம் பட்டி கிராமம், புல எண். 447, நத்தம் புறம்போக்கில் தலா ஒரு சென்ட் வீதம் 20 ரோமன் கத்தோலிக்க ஆதி திராவிடர்களுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியரால், 14—9—1985ல் வீட்டு மனை ஒப்படை செய்ய ஆணையிடப்பட்டது. மேற்படி இடத்தை வீட்டு மனையாகக் கொடுப்பதற்கு பொது மக்களும், கிராம பஞ்சாயத்தும் ஆட்சேபணை தெரிவித்திருப்பதால், மேற்படி வீட்டு மனை ஒப்படை செய்ய ஆணையிட்ட இடத்தில் வீடுகள் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரால் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் ஆட்சேபணையைக் கருத்தில் கொண்டு, மாற்று இடத்தில் மேற்படி ஒப்படைதாரர்களுக்கு அவர்கள் ஒப்படை பெறத் தகுதியுள்ளவர்களாக இருந்தால் நிலம் ஒப்படை செய்ய காமராசர் மாவட்ட வருவாய் அலுவலரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், நத்தம் பகுதியில். நத்தம் புறம்போக்கில் 18—9—1985 ஆம்

தேதியன்று ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகை தந்த மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் வீடு இல்லாத மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களைக் கொடுத்தார். அவர்கள் முறைப்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து நெடும் நாள் காத்திருந்தவர்கள். பட்டா அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர் தடை வாங்கி இருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அந்த அரிஜன மக்களுக்கு பட்டா வழங்கி வீடு கட்டுவதற்கு ஆட்சேபணை தெரிவித்து இருக்கிறார். ஏற்கனவே அந்தப் பஞ்சாயத்துத் தலைவரும், பிற ஜாதியினரும் அந்த இடத்தில் பட்டா வாங்காமலேயே நிலத்தை ஆக்கிரமித்திருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைச்சர் வந்து பட்டா கொடுக்கிறார். அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தடை விதிக்கிறார். இதில் யாருக்கு அதிக அதிகாரம் என்பது தெரியவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலையிட்டு ஏழைகளுக்கு நியாயம் வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, மேற்படி இடத்தை வீட்டு மனைக்காகக் கொடுப்பதற்கு, பொதுமக்களும், கிராம பஞ்சாயத்துத் தலைவரும் ஆட்சேபணை தெரிவித்து இருக்கிறார்கள் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வீடு கட்ட மாவட்ட ஆட்சித் தலைவரால் 11–8–1986-இல் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை விதிப்பதற்குச் சொல்லப்பட்டிருக்கிற காரணங்கள். (1) மேற்படி நிலம் கிராம இளைஞர்கள் அனைத்து மக்களாலும் விளையாட்டு மைதானமாக உபயோகத்தில் இருந்து வருகிறது. (2) பொதுக் கூட்டங்கள் நடைபெறுகிற இடமாகவும் இருந்து வருகிறது. (3) பொது காரியத்துக்கு பயன்படுகிற இடமாக இருந்து வருகிறது. (4) பொது மக்களின் ஆட்சேபணையில் இருந்து வருகிறது. (5) நிலத்தில் பேருந்து நிலையம் மற்றும் பயணிகள் தங்குவதற்கு நிழல் குடை கட்டுவதற்கு கிராமப் பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. (6) வீட்டுமனை ஒப்படைப்பிற்கு கிராமப் பஞ்சாயத்து ஆட்சேபணை தெரிவித்து உள்ளது. (7) ஒப்படை செய்யப்படுவதற்குமுன் மேற்படி நிலம் எவ்வாறு பயன்படுகிறது என்பது பற்றி உறுதி செய்துகொள்ளப்படவில்லை. (8) பொது மக்கள் மற்றும் பஞ்சாயத்து ஆட்சேபணை உள்ளதா என்பது பற்றி விசாரணை செய்யப்படவில்லை. (9) ஒப்படை செய்யப்படுபவர்களுக்கு ஏற்கனவே வீடு உள்ளதா என்பதைப் பற்றி விசாரணை மேற்கொள்ளவும் இல்லை. (10) ஒப்படை செய்யவுள்ள இடம் விலை மதிப்பு உள்ளதா, இல்லையா என்று உறுதிப் படுத்திக்கொள்ளவும் இல்லை. (11) மேற்படி இடம் பொதுக் காரியத்துக்குத் தேவைப்படுகிறதா என்பது குறித்தும் வீட்டுமனைக்கு ஒப்படை செய்வதற்கு முன்பிராமத்தில்





வேறு மாற்று இடம் இருக்கிறதா என்பது குறித்தும் முறையாக விசாரணை செய்யாமல் ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட ஆட்சியாளரிடம் தவறாக ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்று காரணம் சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தடை ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 11–10)

ஆனால் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அந்தப் பிரச்சினையைக் கொண்டு வரலாம். இந்தக் காரணங்களில் ஏதாவது தவறு இருக்குமானால் இந்த 20 பேருக்கு ஒதுக்கித் தான் தீரவேண்டும் என்பதற்கான நியாயமான காரியங்கள் இருக்குமானால் அவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ அல்லது அந்த 20 பேர்களோ எழுதித் தருவார்களானால் தடை ஆணையில் தான் இருக்கிறது. மாற்று இடம் பார்க்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த தடை ஆணை இருக்கிற காலத்தில் அவர்கள் எழுதித் தருவார்களானால் விசாரித்துப் பார்த்து சொல்லலாம். மறுபடியும் முறைப்படி யாரிடத்தில் நியாயம் இருக்கிறது என்று பார்த்துச் சொல்லலாம்.

மாண்புமிகு அமைச்சர் ஒரு கூட்டத்தில் பட்டா வழங்கி விட்டார் என்பதற்காக அங்கே போகிற இடத்தில் 100 பட்டா என்று கொடுக்கின்றபோது எந்த அடிப்படையில் கொடுக்கிறார் என்பது தெரியாது. கொடுக்கச் சொல்கிறார்கள் தாங்கள் கொடுக்கிறோம். ஆகவே, அதனுடைய தகர தம்பங்களை அமைச்சர்கள் பார்த்துத் தருகிறார்கள் என்று சொல்ல முடியாது. அதில் விவகாரம் என்று வந்த பிறகு விவகாரத்தைத்தான் தீர்க்க வேண்டும். இப்போது அதை கொடுக்கக்கூடாது என்பதற்கான காரணங்களை நான் படித்தேன். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காதார கேட்டுக்கொண்டு இருந்தார்கள். ஆகவே அதில் அவர்களுக்கு நியாயம் இருக்குமானால் அதை எழுதி தரட்டும். இப்போது தடை ஆணையில் இருக்கிறது. எழுதித் தந்தால், அதன் அடிப்படையில் விசாரணை செய்து பார்க்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொல்வதில் நியாயம் இருக்குமானால் நியாயத்திற்கு உரிய தீர்ப்பை வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காரணங்களைச் சொன்னார்கள். சட்டசபையில் சொல்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த காரணங்களைப் புதிதாக தயாரித்துக் கொடுத்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், கவன ஈர்ப்புத் தீர்மானம் நான் கொடுத்த உடன்

சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், ஆர்.டி.ஓ., டி. ஆர்.ஓ., போலீஸ் அதிகாரிகள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போய் நீ வேறு இடத்திற்கு எழுதிக் கொடு, உனக்கு இந்த இடத்தில் கிடையாது. உன் மீது பொய் வழக்கு போடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் அந்த பட்டா கொடுக்கப்பட்ட இடம் அரிசனங்களுடைய காலனியை ஒட்டிய இடம். இப்போது அவர்கள் கொடுக்கக்கூடிய இடம் அரிசன காலனிக்கு வெளியே ஒரு சுடுகாட்டுக்குப் பக்கத்தில் ஒரு இடத்தை தேர்ந்து எடுத்து அவர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக நீங்கள் மறுபடியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் சொல்லி விசாரணை செய்தால் அதில் அரிசன மக்களுக்கும் எங்களுக்கும் நியாயம் கிடைக்காது. நீதி விசாரணை ஒன்றை அதாவது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சென்னையில் உள்ள நேர்மையான அதிகாரி மூலமாக நீதி விசாரணை வைத்து அந்த மக்கள் அனுபவிக்க வேண்டிய ஏற்பாட்டை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தில் எடுத்துச் சொன்னேன். அந்த பதில் எப்படி வந்தது என்று ஒரு காரணத்தைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காரணம் கற்பிக்கக் கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படி திரட்டினார், ஏன் திரட்டினார், அதற்குக் காரணம் என்ன தெரியுமா என்று காரண காரியங்களைக் கற்பிப்பது கேள்வி நேரத்திலோ, அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானத்திலோ முறை ஆகாது. நான் காரணங்களைச் சொன்னேன். இந்தக் காரணங்களில் தவறு இருக்குமானால் அதைச் சுட்டிக் காட்டுங்கள் என்று சொன்னேன். சுட்டிக்காட்டினால் அதன் அடிப்படையில் நான் விசாரிக்கிறேன் என்று சொன்னேன். இந்த காரணங்களைச் சொன்னவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். அப்படி நீங்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லும்போது அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை வைத்து கேட்க மாட்டேன் அவரை வைத்து மீண்டும் விசாரிக்க சொல்ல மாட்டேன் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். ஏன் என்றால் இந்த காரணங்களைச் சொல்லி இருப்பவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். இதற்கு மாறுபட்டக் கருத்துக்களை நீங்கள் சொல்வீர்களானால் அவர் தகுதிக்கு மேற்பட்ட ஒருவரை வைத்துத் தான் இதை விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, அதற்கான முறைகளில் தாங்கள் எழுதி தருவீர்களானால் அல்லது அந்த 20 பேர்கள் எழுதித் தருவார்களேயானால் விசாரித்துப் பார்த்து நியாயம் வழங்குவதற்கு உண்டான முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## (5) சென்னை புல்லாரெட்டி அவின்யூவிலுள்ள காய்கறிக் கடைகளில் தீ விபத்து

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "25–3–1987 அன்று அமைந்த கரை புல்லாரெட்டி அவின்யூவில் காய்கறி கடைகளில் தீவிபத்து ஏற்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்."

### அறிக்கை.

25–3–1987 அன்று இரவு சுமார் 7 மணியளவில் சென்னை-29 புல்லாரெட்டி அவின்யூ கிழக்கு சாலையில் உள்ள நடை பாதையில் காய்கறி விற்பதற்காக கோணிகளால் கூரை வேயப் பட்ட 11 கடைகள் தீ விபத்தில் சேதம் அடைந்தன. எவ்வித மான உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. இத் தீ விபத்து பெட் ரோமாக்ஸ் விளக்கிலிருந்து ஏற்பட்ட தீயினால் ஏற்பட்டது. தீ விபத்தினால் சேதமுற்ற கடைகளில் 3 கடைகள் அச்சம்பவத் தின்போது காலியாக இருந்தன. இத் தீ விபத்தில் குடியிருப்புகள் சேதமடையவில்லை என்பதால் அரசு நிவாரணங்கள் அளிக்கப் படவில்லை.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு மாற்று இடமாக நம்முடைய மாநகராட்சியின் சார்பில் அதை நல்ல கட்டிடமாகக் கட்டிக் கொடுத்தால் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாது என்றும் அதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சருடைய கவனத்தை ஈர்த்தேன். மாநக ராட்சியின் சார்பில் அவர்களுக்கு ஒதுக்கித் தந்தால் அண்ணா நகர் பகுதியில் உள்ள அத்தனை அண்ணா நகர் வாசிகளும் பசுமையான பொருட்களை வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும். இப்போது அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் தயவுசெய்து அவர்கள் அதைச் செய்து தருவார்களா என நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்கள் கட்டியிருந்த இடம் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட இடமாக அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த இடத்திற்கு, உரிமை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன] [1987 ஏப்ரல் 24

கொண்டாட முடியாது என்றாலும் அவர்களுடைய தொழில்
கருதி, வேறு இடத்தில் கடைகளைக் கட்டிக் கொடுக்க வாய்ப்பு
கள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன
தைப் போன்று மாநகராட்சித் தலைவரிடத்திலோ, அல்லது
மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலோ எடுத்துச் சொல்லி ஒரு
குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கித் தர வாய்ப்பு இருக்குமானால்,
நாம் கேட்கலாம். அதுபற்றி ஆராயும்படியாகவும் சொல்ல
லாம்.

(ஈ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே. ''சேலம் மருத்துவக் கல்லூரி தொடங்கப்
பட்டும், அந்தக் கல்லூரி இன்னும் சேலத்தில் அமைக்கப்படா
தது குறித்தும், அதை விரைவில் அங்கு அமைக்கப்பட வேண்டிய
அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட
அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

18–4–1984 அன்று மருத்துவத் துறைக்கான நிதி ஒதுக்கீட்
டினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்த போது சேலத்தில்
புதிதாக மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்கப்படும் என அப்
போதைய நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அறி
வித்தார்கள்.

2. சேலத்தில் நிலம் கையகப்படுத்தி, தக்க கட்டிடங்கள்
கட்டி முடித்து அரசினர் மருத்துவக் கல்லூரியை அங்கு துவங்கு
வதற்கு நாட்கள் செல்லும். ஆகவே சேலத்தில் சேர்த்துக்
கொள்ளப்படுவதற்காக 1985–86 ஆம் கல்வி ஆண்டு முதலாக
77 மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்குத் தேர்வு
செய்யப்பட்டு அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியிலும்
(26 மாணவர்கள்), ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும் (26
மாணவர்கள்), செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலும் (25
மாணவர்கள்) சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர்.
சேலத்தில் கல்லூரி செயல்பட ஆரம்பித்தவுடன இந்த 77
மாணவர்கள் அங்கு மாற்றப்படுவார்கள்.

3. சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்காகவே
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகததில் ஒரு தனி அலுவலர்
பதவி ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது. இததனி



1987 ஏப்ரல் 24] [திரு. ப. உ. சண்முகம்]

அலுவலர் சேலத்தில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான
அனைத்து நடவடிக்கைகளையும் மேறகொண்டு வருகிறார்.
இவருக்குத் துணை புரிவதற்காக அலுவலகப் பணியாளர்கள்
பதவிகளும் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

4. சேலத்தில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான இடத்
தைத தேர்வு செய்யும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டது.
அக்குழு சில இடங்களை நேரில் சென்று ஆய்வு செய்து அரசுக்கு
அறிக்கை அனுப்பியது. ஏற்காடு சாலையின் அருகில் உள்ள
கொண்டப்பநாய்க்கனபட்டி என்ற இடத்தை அரசு தேர்வு
செய்து, அந்நிலத்தை கையகப்படுத்தலாமென முதலில் முடிவு
செய்தது.

5. சேலத்தில் கொண்டப்பநாய்க்கன்பட்டியில் மருத்துவக்
கல்லூரி நிறுவுவதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக
சிறப்பு தாசில்தார் பதவியும் பிற பதவிகளும் ஏற்படுத்தப்பட்
டுள்ளன. இவர்கள் நிலம் கையகப்படுத்தும் பணியைத் துரிதமாக
மேற்கொண்டதன் பயனாக நிலம் கையகப்படுத்தும் சட்டத்
தின் பிரிவு 4 (1)-ன் கீழ் நிலம் கையகப்படுத்துவதற்கான அறி
விப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

6. இதற்கிடையே, கொண்டப்பநாய்க்கன்பட்டியில் உள்ள
விவசாயிகள், அங்குள்ள நிலத்தைக் கல்லூரிக்காக எடுத்துக்
கொண்டால், விவசாயம் பாதிக்கப்படும் என ஆட்சேபணை
தெரிவித்து மாற்று நிலம் கையகப்படுத்துமாறு கோரினர். இது
தொடர்பாக சேலம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை கோரப்
பட்டது. அவர் கொண்டப்பநாய்க்கன்பட்டியில் உள்ள நிலத்
தைக் கையகப்படுத்துவதற்குப் பதிலாக சேலம் உருக்காலைக்கு
வழங்கப்பட்டு அவர்கள் இன்னும் உபயோகப்படுத்தாமல் வைத்
துள்ள பெருவாரியான நிலத்தை மைய அரசுக்கு எழுதி, அவர்
களிடம் இருந்து நிலத்தை திரும்பப் பெற்று அங்கு மருத்துவக்
கல்லூரியை நிறுவலாம் எனப் பரிந்துரைத்தார். இதனடிப்படை
யில் புது டில்லியிலுள்ள ஸ்டீல் அதாரிட்டிக்கு எழுதப்பட்டுள்ளது.
அவர்கள் இவ்வரசு கேட்டுள்ள சுமார் 200 ஏக்கர் நிலத்தைத்
தர ஒத்துக் கொள்வதைப் பொறுத்து மேல் நடவடிக்கை தொடர
வேண்டியுள்ளது.

7. மேற்கூறிய நிலையில் சேலத்தில் நிலம் கையகப்படுத்தி
கட்டிடங்கள் கட்டி முடித்து மருத்துவக் கல்லூரியை அங்கு ஆரம்
பிக்க இன்னும் ஓரிரண்டு ஆண்டுக் காலமாவது ஆகலாமெனக்
கொள்ளலாம்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே தாங்கள் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில்சொல்கின்ற போதும் என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்திருக்கிற விவர அறிக்கையிலும் சேலததிலே அந்தக் கல்லூரியை கட்டுவதற்கான விரைவான நடவடிக்கையை இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. ஆரம்பிக்கப்பட்ட அந்த மருத்துவக் கல்லூரி சேலத்திலே விரைவிலே அமைக்கப்டட வேண்டுமென்று நான் விரும்புவதற்கும் வலியுறுத்துவதற்கும் காரணம் அப்படி அங்கே அமைக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு அது கிடைத்தால் மருத்துவ வசதி நவீன மருத்துவக் கருவிகள் வசதி போன்ற வசதிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் எல்லாம் ஏற்படும் என்ற அந்த விருப்பத்தில் தான் வற்புறுத்தி வருகிறோம். கொண்டப்பநாய்க்கன்பட்டியிலே நிலம் கையகப் படுத்துவதற்கு 4 (1) நோட்டிபிகேஷன் வெளியிட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் சேலம் ஸ்டீல் அதாரிட்டியிடம் சேலம் உருக்காலை கையகப்படுத்தியிருக்கிற நிலத்தைக் கேட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன. ஸ்டீல் அதாரிட்டியினருக்கு எழுதிக் கேட்டிருப்பதாலே இந்த கொண்டப்பநாய்க்கன்பட்டி நிலம் கையகப்படுத்தும் பணிகள் விடப்பட்டு விட்டதா அல்லது தொடர்ந்து நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் 'அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாக சேலம் ஸ்டீல் அதாரிட்டி பின்னாலே மறுத்துவிட்டால் இப்போது நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுவிடும். அதையும் அமைச்சரவர்கள் தெளிவாக விளக்க வேண்டும்.

இன்னொன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இப்படி திட்டப் பணிகள் ஏதாவது சில காரணங்களால் தடைப் பட்டிருக்குமானால் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி விரைவுபடுத்துவதற்கு Spec:al Commissioner for Project-Co-ordination and implementation என்று ஒரு தனி அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். இந்தப் பொறுப்பும் இந்தத் தனி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சேலம் மருத்துவக் கல்லூரி கொண்டப்ப நாய்க்கன்பட்டி நிலத்திலே முதலிலே அரசு ஆரம்பிக்க இருந்தது. ஆனால் சமீபத்திலே சேலத்திற்குச் சென்று வந்த முதலமைச்சரவர்கள் ஸ்டீல் பிளாண்டிற்குக் கொடுத்த இடத்திலேயே இதை நிர்மாணிக்கலாம் என்று கருத்துத் தெரிவித்ததற்கொப்ப ஸ்டீல் பிளாண்ட் அதாரிட்டியினரிடம் கேட்டு அவர்கள் அந்த நிலத்திற்கு ஒப்புதல் தந்து இருக்கிறார்கள். இது விஷயமாக 'Co-ordination Project Officer டில்லிக்குச் சென்று நேரில் ஆலோசித்து வந்திருக்கிறார். 4 (1) கீழ்போடப்பட்ட உத்தரவு வாபஸ் பெறப்படவில்லை.



(உ) காட்டுமன்னார் கோயில் தொகுதி ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ வசதியின்மை.

*திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ''காட்டுமன்னார் கோயில் தொகுதி யிலுள்ள ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போது மான மருந்துகள் வழங்கப்படாதது மருத்துவர்கள் பணி நேரத்தில் இல்லாமலிருப்பது மற்றும் மருத்துவர்கள் ஆதி திராவிடர்களை தொட்டு சிகிச்சை அளிக்காதது குறித்தும் உள்ள'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.—

அறிக்கை.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டொன் றுக்கு ரூ. 20,000 பெறுமான மருந்துகள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 1986-87 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 15,000-க்கான மருந்துகள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் ரூ. 5,000 அவசரத் தேவைக்கான மருந்துகள் வாங்குவதற்கான மேற்கண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநர் தெரிவித்திருக்கிறார். ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென உருவாக்கபபட்டுள்ள 3 மருத்துவர் பதவிகளும் நிரப்பப்பட்டு அவர்கள் பணியிலிருக்கிறார்கள். அவர்கள் பணி நேரத்தில் பணி நிலையத்தில் இல்லை எனபது பற்றிய புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை. அப்படி பணி நேரத்தில் மருத்துவர்கள் நிலையத்தில் இல்லாதது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அத்தகையவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது. மேலும் ஆதி திராவிட மக்களைத் தொட்டு சிகிச்சை அளிக்காதது பற்றிய புகார் எதுவும் பெறப்படவில்லை என ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

(முற்பகல் 11-20)

திரு. சா. ஜெயச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் ஒரு ஆண்டுக்கு ஆயக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 20,000 பெறுமானமுள்ள மருந்துகள் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ. 15,000-க்கான மருந்துகளும், மேலும் 5,000 அவசரத் தேவைக்கான மருந்துகளும் வழங்குவதற்கான உத்திரவு

வழங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது முற்றி
லும் தவறானது என்று நான் கருதுகிறேன். காரணம்
அங்கே விசாரிக்கின்றபோது அப்படியில்லை என்று அந்த
ஆஸ்பத்திரியில் பணிபுரிகின்ற டாக்டர்கள் கூறுகிறார்கள்.
அடுத்தபடியாக பணியாற்ற அவர்கள் உரிய நேரத்திற்கு
வருவதில்லை. இது சம்பந்தமாக மனுக்கள் எதுவும் வர
வில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த 15-2-87
அன்று ஆயங்குடி கிராமத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட பொது
மக்களும், அந்தப் பகுதியைச் சார்ந்த மற்ற பொது மக்களும்
எனக்கு ஒரு புகார் மனுவைக் கொடுத்தார்கள். அந்த புகார்
மனுவில் 3 குற்றச்சாட்டுகள் இருந்தன. நகல் என்று போட்டு,
மாவட்ட சுகாதார நல அதிகாரி, கடலூர் என்றும் ஆரம்ப
சுகாதார நல இயக்குநர், சென்னை என்றும், மாண்புமிகு முத
லமைச்சர் என்றும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்றும்
நான்கு பெட்டிஷன்களில் ஒரு பெட்டிஷன் எனக்கு வந்தது.
அதுசம்பந்தமாக கடந்த 22-2-1987 அன்று அந்த ஆயக்குடி
ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அந்தப் பகுதி மக்களுடைய
குறைகளைக் கேட்பதற்காக நான் சட்டமன்ற உறுப்பினர்
என்ற முறையில் சென்றேன். நான் அந்த ஆரம்ப சுகாதார
நிலையத்தினைச் சென்றடையும்போது சரியாக காலை
மணி 11-25 ஆனால் அங்கே ஒரு மணிவரை காத்திருந்தும்கூட
எந்த மருத்துவர்களும் வரவில்லை. ஆனால் அங்கே சுமார்
60-க்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நல அலுவலர்கள்
மெட்டர்னிட்டி அஸிஸ்டென்ட் உட்பட இருப்பதாகச்
சொன்னார்கள். மூன்று டாக்டர்கள் பணிபுரிவதாகச் சொன்
னார்கள். ஆனால் அங்கு யாருமே இல்லை. சுமார் 1 மணிக்கு
..........(குறுக்கீடு.)

மாண்புமிகு திரு. க. ராசாராம் : துணைத் தலைவர்
அவர்களே, கேள்வி தான் கேட்கலாம். 4 நகல்களில் 1 நகல்
எனக்கு வந்தது. மற்ற மூன்று நகல்கள் எங்கெங்கே போயின
என்பதையெல்லாம் சொல்கிறார். என்ன வேண்டும் என்
பதைக் கேளுங்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே,
அரசுக்கு எந்தப் புகார் மனுக்களும் வரவில்லை என்று விவர
அறிக்கையில் இருக்கிறது. ஆனால் பொதுமக்கள் மனு அனுப்பி
யிருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படியானால்
அந்த இயக்குநர் தவறான தகவலைக் கொடுத்திருக்கி
றாரா? இதையெல்லாம் களைவதற்கு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல்
........(குறுக்கீடு)





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். விவரம் கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்வார். இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கும்படி பெட்டிஷன் எழுதிக் கொடுங்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, 3 மருத்துவர்கள் ஆதிதிராவிடர்களைத் தொட்டுகூட வைத்தியம் பண்ணுவது கிடையாது. சரியான நேரத்தில் வருவது கிடையாது. காரணம் அந்த மருத்துவமனையில் பணிபுரிவதற்கு விருப்பம் இல்லை என்று நினைக்கிறேன்......(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று நடந்த மானிய கோரிக்கையில் பேசவேண்டியதை உறுப்பினர் அவர்கள் இப்போது பேசுகிறார். என்ன வேண்டும் என்று கேள்வியாக கேளுங்கள். உண்டா இல்லையா என்ற இரண்டில் ஒரு பதில் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் என்ன கேட்க விரும்புகிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. மருத்துவர்கள் வரவில்லை, மருந்து சரியாக கொடுக்கப்படவில்லை, ஆதிதிராவிடர்களைத் தொட்டு வைத்தியம் பார்ப்பதில்லை. ஒரு மணிக்கு உறுப்பினர் சென்றபோது மருத்துவர் வரவில்லை. இவற்றைப்பற்றி நான் தவறானத் தகவலைத் தரவில்லை. எனக்குக் கொடுக்கப்பட்ட தகவலிருந்துதான் கொடுத்தேன். உறுப்பினர் அவர்கள் விவரமாக எழுதிக் கொடுப்பார்களானால் நிச்சயமாகச் சொல்கிறேன், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆதிதிராவிடர்களை எந்த அதிகாரியாவது தொட்டு வைத்தியம் பார்க்கவில்லையென்று நிரூபிக்கப்படுமேயானால், அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

(ஊ) விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சை.

*திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "விபத்து காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்கும்போது சட்டபூர்வமான சடங்குகளுக்கு முதலிடம் கொடுத்து மருத்துவ சிகிச்சையினை இரண்டாம்பட்சமாக நடத்துவதால் பாதிக்கப்படுகிற பொது மக்களது கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 24

அறிக்கை.

விபத்தினால் காயமுற்றவர்கள் பிறரால் தாக்கப்பட்டு காயமுற்றவர்கள், தற்கொலை முயற்சி செய்ய முற்பட்டு பாதிக்கப்பட்ட ஆகியோர் அவசர சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்பொழுது அவர்களை சட்டம் சார்ந்து மருத்துவ கேசுகளாக (Medico legal cases) கருதப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் வந்தாலும் உடனடிக் கவனிப்புக்குரியவர்களாயிருப்பின் எந்தவித தாமதமும் இன்றி அவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. அவசரத் தன்மை நீங்கியவுடன் மற்ற நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது.

2. சட்டம் சார்ந்த மருத்துவ கேசுகளை கையாள வேண்டிய நடைமுறைகளை அறவே விட்டொழிக்க இயலாது. இந்த கேசுகளை உடனுக்குடன் கவனிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக இது போன்ற கேசுகள் அனுமதிக்கப்பட்டவுடன் நோயாளிகள் நிலைமை பற்றிய சான்றுகள் உடனுக்குடன் தயாரிக்கவேண்டியுள்ளது. இந்த சான்றுகள் காவல் துறையின் குற்றவியல் புலனாய்வு செய்வதற்கும் விபத்துக்குள்ளானவர்களுக்கு நஷ்ட ஈடு கோருவதற்கும் மிக முக்கியமான சான்றாக அமைகிறது. இந்த சான்றுகளுக்கு சட்ட ரீதியிலான முறைகளை அனுசரிக்கும் அதே நேரத்தில் மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் நோயாளிக்கு தேவைப்படும் சிகிச்சை அளித்து கொண்டுதான் இருப்பார்கள். சுய நினைவின்றி உள்ள நோயாளியை சுய நினைவிற்கு கொண்டு வருவதற்கு வேண்டிய எல்லா சிகிச்சை முறைகளும் கையாளுவார்கள்.

3. எனவே மருத்துவ சிகிச்சையை விட சட்ட ரீதியான முறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று கூறுவது முற்றிலும் தவறானது.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே மருத்துவச் சிகிச்சையை விட சட்ட ரீதியான முறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று கூறுவது முற்றிலும் தவறு என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் அறிந்த வரையில் நிச்சயமாக மதுரை மருத்துவமனையைத் தவிர, மற்ற அனைத்து மருத்துவமனைகளிலேயும் சட்டரீதியான சடங்குகளுக்கே முன்னுரிமை தரப்படுவதை நான் நேரடியாகப் பல நேரங்களில் கண்கூடாக கண்டிருக்கிற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். எனவே, அந்த சட்டரீதியான சடங்குகளுக்கு முதலிடம் தராமல் மனிதாபிமானத்திற்கு முதலிடம் தந்து அந்த சிகிச்சையைத் தந்து காயப்பட்டவர்களை விபத்துக்குள்ளான



1987 ஏப்ரல் 24] [திரு. க. சோலைராசு]

காப்பாற்றியதற்குப் பிறகு அந்த சடங்குகளை
வர்களைக் வேண்டும் என்று நினைவுபடுத்துகிற ஒரு
வைத்துக்கொள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் அரசு
சுற்றறிக்கையையாவது இன்றைக்கு தனியார்களுக்கு முதலுதவி
அனுப்புமா ? சான்றிதழ் வழங்கலாம் என்ற ஒரு உரிமை
சிகிச்சைக்கான மருத்துவமனைகளுக்கு நகரங்களில் ஆங்காங்கு
தனியார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல்
ஒரு சிலருக்குக் மற்ற அவசரக் காலங்களில் காயப்
விபத்துக் காலங்களில் தனியார் மருத்துவமனைகளில் பார்க்கலாம்
பட்டவர்களைத் சில புகழ் பெற்ற மருத்துவமனைகளுக்கு சான்றி
என்று சொல்லி அதோடு ஆங்காங்கே விபத்துக்
தழ் வழங்கப்படுமா ? பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக காப்பாற்ற
காலங்களில் நிலையங்களால்கூட, அப்படிப்பட்ட முதலு
ஆரம்ப சுகாதார அளித்த பிறகு அவர்களை மற்ற மருத்துவ
தவி சிகிச்சை அனுப்பி வைக்கப்படுவார்களா என்பதைப்
மனைகளுக்கு துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகி
பேரவைத்
றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே சட்டத்தைப் பற்றி பின்னால் தான் பார்க்க
வேண்டும். முதலில் மருத்துவம் செய்யவேண்டும் என்பதுதான்
அரசின் நோக்கம். அப்படி எங்காவது தவறாக இருக்கிறது
என்றால் மாண்புமிகு உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் அதைப்
பற்றி நடவடிக்கை எடுக்கலாம். தனியார்களுக்கு விபத்துக்
களைப் பற்றி சர்ட்டிபிகேட் சான்றிதழ் கொடுக்கிற உரிமையை
வழங்குவதில்லை. கொடுக்க முடியாது. காரணம் அது காவல்
துறையில் இருந்து வாங்கவேண்டியது. அரசுத் துறையில்
கொடுக்கப்படுகிற சான்றிதழ்களுக்கே சில நேரங்களில் சட்டப்
பிரச்சினை வந்து நீதிமன்றத்தில் கேள்வி கேட்கிறபோது,
தனியார்களுக்கு அந்த உரிமை வழங்கிவிட்டால் வேறு குழப்பம்
ஏற்படும்.

(எ) ஜவ்வாது மலை புதூர் நாட்டிற்குப் போக்குவரத்து வசதி நிறுத்தப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத்
திரு. எஸ். பி. மணவாளன் : வடாற்காடு மாவட்டம் ஜவ்
துணைத் தலைவர் அவர்களே, ''திருப்பத்தூரிலிருந்து இயங்கி
வாது மலை, புதூர் நாட்டிற்கு போக்குவரத்துக் கழக பேருந்து
வந்த பட்டுக்கோட்டை அழகிரி மலை வாழ் பழங்குடி மக்கள்
நிறுத்தப்பட்டதால் அப்பகுதி அவசரப் பொது முக்கியத்துவம்
படும் இன்னல்கள் குறித்த போக்குவரத்துத் துறை அமைச்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கொண்டு வருகிறேன்.
சரின் கவனத்திற்குக்

பேரவைத் துணைத்
மாண்புமிகு திரு. க. முத்துசாமி : கீழ்க்கண்ட அறிக்கை
தலைவர் அவர்களே, பேரவை முன்
ஒன்றை வைக்கிறேன்.

[திரு. க. முத்துசாமி] [1987 ஏப்ரல் 24

அறிக்கை.

திருப்பத்தூரிலிருந்து புதூர் நாட்டிற்கு மலைப் பாதையில்
பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆனால், தடுப்புச்
சுவர்கள் கட்டப்படாததால் அத்தடத்தில் பேருந்து இயக்கப்
பட்ட குறுகிய காலத்தில் இரண்டு பெரிய விபத்துக்கள் ஏற்பட்டு
விட்டன. பாதுகாப்பற்ற நிலையில் அத்தடத்தில் பணிபுரிய
ஊழியர்கள் அஞ்சுவதால், மேற்கண்ட தடம் இயக்குவது நிறுத்
தப்பட்டுள்ளது.

தடுப்புச் சுவர்கள் மேற்கண்ட தடத்தில் கட்ட தக்க நட
வடிக்கை எடுக்கும்படி வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்
கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவை கட்டி முடிக்கப்
பட்டவுடன் பேருந்து இயக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்
படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இது விவர அறிக்கையாக இல்லை. ஒரு
சிறு குறிப்பாகத்தான் கொடுத்துள்ளார்கள். இது 15,000
மலை வாழ் மக்களுடைய பிரச்சினை. அங்கே மலைக்குச்
செல்லுகின்ற சாலை 1982 ஆம் வருடத்திலேயேதான் போட்டு
முடிக்கப்பட்டது. ஆனால் அதனுடைய அகலமே 6 மீட்டர்
தான். தற்போதைய சாலைகள் எல்லாம் 7.50 மீட்டர் சாலை
களாகப் போடப்படுகின்றன. இது பற்றி மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்களிடம் நாங்கள் சொல்லி, அங்கு தடுப்புச்
சுவர் அமைக்கவும் சாலைகளை அகலப்படுத்தவும் ரூபாய் 30
இலட்சத்திலே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கோவை நெடுஞ்
சாலைத் துறை மலைப் பகுதி மேற்பார்வைப் பொறியாளருக்கு
அனுப்பப்பட்டுள்ளது. அது குறித்து அமைச்சர் அவர்களுக்குத்
தகவல் தெரியுமா ? நெடுஞ்சாலைத் துறையைக் கவனிக்
கிற அமைச்சரும் அவர்கள்தான் என்ற காரணத்தால் அதை
விரைவாக முடிக்க ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக விவரங்கள் தெரிந்
தவர் என்ற காரணத்தால்தான் சிறிய குறிப்பாக இருந்தால்
போதும், அவர் புரிந்து கொள்வார் என்பதற்காக வைக்கப்பட்
டிருக்கிறது. அது ஓரளவுக்கு சிறு குறிப்பாக இருந்தாலும்,
அதிலே தெளிவாகவே இருக்கிறது. என்ன சொல்லியிருக்கிறார்
கள் என்று சொன்னால், அங்கே இரண்டு விபத்துக்கள் ஏற்
பட்டு விட்டன. குறுகிய பாதையாக, மலைப் பாதையாக
இருக்கிறபோது, அதிகமாக விபத்துக்கள் ஏற்படக் கூடாது.
அதை தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த வண்டிகளை
நிறுத்த வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு விட்டது.



1987 ஏப்ரல் 24] [திரு. க. முத்துசாமி]

நல்ல வேளையாக, வண்டிகள் நிறுத்தப்பட்ட காரணத்தால்,
நீங்கள் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்
கிறீர்கள். விபத்துக்கள் பெரிதாக இருந்தால்; ஒத்தி வைப்புத்
தீர்மானமே நீங்கள் கொண்டு வர வேண்டிய நிலை ஏற்படும்.
எனவே, பெரிய பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும்
என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை. ஏற்கனவே சாலையை
விரிவு படுத்துவதற்காகவும்,பக்கச் சுவர் கட்டுவதற்காகவும் உள்ள
தகவல்கள் முழுவதையும் நீங்கள் அறிந்து வைத்திருக்கிறீர்கள்.
அது எப்போது முடிகிறதோ, அது முடிந்தவுடனேயே அல்லது
அதை விரிவு படுத்துவதற்கும் சேர்த்து நடவடிக்கை எடுத்து
அந்த பக்கச் சுவர் கட்டி முடிக்கப்பட்டவுடனேயே இந்தப்
பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இதை நான் ஏன் சொல்கிறேன்
என்றால், 1982 ஆம் வருடம்தான் அந்த சாலை போடப்பட்டது.
அப்படி போடப்பட்ட சாலை குறுகிய சாலையாகப் போடப்
பட்ட காரணத்தினால்தான், இன்று பேருந்துகள் இயக்கக் கூடிய
நிலைமை இல்லாமல் இருக்கிறது. தவிர, அது மலைவாழ்
மக்களுடைய பிரச்னையாக இருப்பதால்தான் நான் வலி
யுறுத்துகிறேன். அங்கு முக்கியமாக, நோயாளிகள் கீழே
இருக்கின்ற திருப்பத்தூருக்கு வருகின்ற வசதி கூட இல்லை.
நான் அதை இதற்கு முன்னமேயே கூட இந்தச் சபையில் சொல்லி
யிருக்கிறேன். நோயாளிகளைக் கட்டிலில் சுமந்து கொண்டு
வந்து, நடைபாதை வழியாக கொண்டு வருகிற நேரங்களில்
கூட, சில நோயாளிகள் இறக்கக் கூடிய சூழ்நிலையெல்லாம் இருக்
கின்றன.

(முற்பகல் 11-30)

இதையெல்லாம் கருத்தில் கொண்டு, உடனடியாக அந்த
மலைப் பாதையை அகலப்படுத்துவதற்கும் அங்கே தடுப்புச்
சுவர் கட்டுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை
பிறப்பிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே. இருக்கின்ற நிலைமை நிச்சயமாகவே
வேதனைக்குரிய நிலைமைதான். எனவே எவ்வளவு விரைவு
படுத்த முடியுமோ அந்த அளவுக்கு, அரசின் நிதிப் பிரச்சினை
யையும் மனதில் வைத்துத்தான் இதைச் செய்ய வேண்டி
யிருக்கிறது. விரைவாகச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம்
போடுகிற போதே அகலமாகப் பாதையைப் போட்டிருக்கலாம்
என்கிற எண்ணம்தான் எனக்குக் கூட ஏற்படுகிறது. அப்படி
அகலமாகப் போட்டாக வேண்டுமென்று முடிவெடுத்திருந்
தாலும் கூட அந்தப் பாதையை அமைப்பதற்கே கூட காலதாமதம்

ஏற்பட்டிருக்கலாம். முதலில் குறுகலாகப் பாதையை அமைத்து
விட்டார்கள். அதை அகலப் படுத்துவதற்கும் பக்கச் சுவற்றைக்
கட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தி
விரைவான நடவடிக்கையை எடுக்கச் சொல்லலாம்.

(ஏ) சமயபுரம் அருகில் மாணிக்கபுரத்திற்கு இணைப்புப் பாலம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, "சமயபுரம் அருகேயுள்ள மாணிக்கபுரத்
திற்கு இணைப்புப் பாலம் நீண்ட காலமாகக் கட்டப்படாதது
குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை,
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணி
யானது சமயபுரம் மாணிக்கபுரம் சாலையில் கி.மீ. 1/0ல் ஒரு
உயர் மட்டப் பாலம் கட்டும் பணியாகும். இச்சாலை மண்ணச்
நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு ஊராட்சி ஒன்
றியச் சாலையாகும். இச்சாலையின் நீளம் 2.8 கி.மீ. ஆகும்.
இச்சாலை கி.மீ. 0/0-1/0 வரை செஞ்சரள் சாலையாகவும்
கி.மீ. 1/0-2/8 வரை கற்சாலையாகவும் உள்ளது. இச்சாலை
யில் கி. மீ. 1/0ல் பெருவளை வாய்க்கால் குறுக்கிடுகின்றது.
இந்த வாய்க்காலின் நீர் வழிப்பாதையின் அகலம் 12 மீட்டர்
களாகும். இந்த இடத்தில் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டு
வதற்கு உத்தேசமாக ரூ. 5.00 இலட்சங்கள் தேவைப்படும்.
பகுதி 2 திட்டத்தில் இனிவரும் காலங்களில் எடுத்துச் செய்யும்
பொருட்டு தயாரிக்கப்பட்ட பணித் தொகுப்புப் பட்டியலில் இப்
பணியும் இடம் பெற்றுள்ளது.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, விவர அறிக்கையின் பகுதி 2-ல் தயாரிக்கப்
படும் பணித் தொகுப்புப் பட்டியலில் இப்பணியைச் சேர்த்திருப்ப
தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதற்காகப் புரட்சித் தலைவர் அரசுக்கும் மாண்புமிகு போக்கு
வரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி
யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக அந்தக் கால்வாய் 5,000 பேரரைக் கொண்ட
மாணிக்கபுரம் என்கிற கிராமத்தின் குறுக்கே ஓடுகிறது. அதனால்
அந்தப் பகுதி மக்கள் ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்குச்
செல்ல வேண்டுமெனறால் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர்
துரத்தைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கி
றார்கள். தென் கரையில் உள்ளவர்கள் வடகரைக்குச் செல்ல
வேண்டுமென்றால்— காரணம் அங்கேதான் சத்துணவு மையம்,
பள்ளிக்கூடம், ஆலயம் எல்லாம் இருக்கின்றன—இந்தக் கால்
வாயைக் கடந்தாக வேண்டியிருக்கிறது. மேலும் குறிப்பாக
சமயபுரத்துக்கு வரக்கூடிய வடபுறத்தில் இருக்கக்கூடிய கிராமங்
களில் அதாவது புறத்தாக்குடி, இருங்களூர், காந்தி நகர்
போன்ற கிராமங்களில் உள்ள 10,000-க்கும் மேற்பட்ட ஜனங்கள்
கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இகதத் திட்டத்தை இந்த ஆண்டு
நிறைவேற்றித் தருவதற்கும், இந்த ஆண்டே இதை எடுத்துக்
கொள்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை
வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர்
சொல்லுகிற பிரச்சனைகள் நியாயமானவைகளாக இருந்தா
லும்கூட அரசு நிதிப் பிரச்சனையின் காரணமாக இந்தப்
பணியை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள முடியாத நிலையில்
இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.
பகுதி 2 திட்டத்தில் இந்தப் பணியைச் சேர்த்தாக வேண்டு
மென்றுதான் இதற்கான திட்டங்களைத் தயார் செய்து, மதிப்பீடு
களையும் முழுமையாகத் தயார் செய்து அதை ஒரு தொகுப்புப்
பட்டியல் போன்று செய்கிறார்கள். அந்தப் பட்டியலில் இது
சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, வருகிற ஆண்டுகளில் பகுதி
2 திட்டத்தில் இதை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்
படுமே ஒழிய, இந்த ஆண்டே—அதுவும் எல்லா இடங்களையும்
முடிவு செய்துவிட்ட இந்தச் சூழ்நிலையில்—இதை ஏற்றுக் கொள்
வது என்பது அல்லது செயல்படுத்துவது என்பது கொஞ்சம்
சிரமமானதாக இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இருக்கிற
சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தப் பட்டியலில் இருந்து எடுத்துச்
செய்வதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

(ஐ) மாதவரம் பால்பண்ணைத் தொழிலாளர்கள் பணி நீக்கப்
பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள்
கே. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள்
குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்
களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்
துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "மாதவரம் பால் பண்ணையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 1,000 தொழிலாளர்களின் வேலை நீக்கப் பிரச்சினையை, தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர் சங்கம் சுமுகமாகப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

15—2—1980 அன்று 12(3) பிரிவு, தொழிற் தகராறு சட்டம் 1947 பிரகாரம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கும் தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்கள் சங்கத்திற்கும் ஒரு உடன்படிக்கை தனி துணை ஆணையர் தொழிலாளர்துறை அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப் பட்டது. அந்த உடன்படிக்கையில் தொழிலாளர்களுக்கு பெரிதளவு சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தது. சங்கமும், தங்களது பிரச்சினைகளைத் தீர்க்க நேரடி நடவடிக்கையில் இறங்குவது இல்லை என்று உறுதி கூறியிருந்தது.

2. அரசு ஆணை எண். 849, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை தேதி 20—6—1980-ன்படி 1—7—1980 முதல் இவ்விணையம் ஒரு அத்யாவசியமான நிறுவனமாக தெரிவிக்கப் பட்டது. 19/20—11—1980 அன்று பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பால்பண்ணை/பார்லர் டெப்போக்களில் வேலை செய்யும் 901 தொழிலாளர்கள் முன்னறிவிப்பு இன்றி வேலை நிறுத்தம் செய்து விட்டனர். தொழிலாளர் சங்கமும் இது சம்பந்தமாக யாதொரு முன்னறிவிப்பும் கொடுக்கவில்லை. இதற்குப் பிறகு மேலே சொல்லப்பட்ட தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லை. இதனால் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் வேறு தொழிலாளர்களை பணியில் அமர்த்தி தொடர்ந்து பால் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்தது. 15 மாதங்களுக்குப் பிறகு 15—2—1982 அன்று மேலே சொன்ன தொழிலாளர்கள் நிறுவனத்தின் முன்பாக ஆஜர் ஆனார்கள். அதன்பின் தனித்துறை ஆணையர், தொழிலாளர் துறை அவர்களால் சமரசப் பேச்சு நடத்தப்பட்டு 16—11—1982 அன்று சமரச முறிவு ஏற்பட்டது.



3. அரசு, தனது ஆணை 371, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, தேதி 14—2—1983-ல் இந்தப் பிரச்சினையை தீர்ப்பாயத்திற்கு விட மறுத்தது. சங்கம் உயர்நீதி மன்றத்தில் இவ்வாணையை எதிர்த்து வழக்கு போட்டது. சென்னை உயர் நீதி மன்றம் அரசாங்க ஆணைக்கு தடை விதித்து தொழிலாளர் களுக்கு வேலை அளிக்கும் பிரச்சினையை மறு பரிசீலனை செய்ய ஆணையிட்டது. இதனை எதிர்த்து தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையமும் மேல் முறையீடு செய்தது. இதனை விசாரித்த இரு நீதிபதிகள் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை சரியென்று கூறி அரசு இதனை இரண்டு மாதங்கட்குள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென உத்திரவிட்டது. அதனை யொட்டி அரசு தனது ஆணைகள் 873, தொழில் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 30—4—1985 மற்றும் 1856, தொழில் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 25—9—1986-ல் உள்ள ஆணைப்படி மேற்படி பிரச்சினையை தீர்ப்பாயத்திற்கு விட்டது. மேற்சொன்ன வழக்கு தற்போது தீர்ப்பாயத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும் மேற்கண்ட பிரச்சினை தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர் சங்கத்துடன் சுமுகமாக பேசி முடிவெடுக்கும் செயற்குறிப்பு இணைய நிர்வாக இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் வேலை நிறுத்தத் திற்கு முன்பாக தொழிலாளர்கள் முன் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருப்பதோடு, தொழி லாளர்கள் யாரும் வேலைக்கு வரவில்லை என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. அதே நேரத்தில் தொழிலாளர்கள் யாரும் வேலைக்கு வரவில்லை என்றால் இந்தியத் தொழில் தகராறு சட்டப்படி எத்தகைய நடைமுறைகளின் கீழ்அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க லாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் எவ்வித நோட்டீசும் கொடுக்கப்படாமல், பத்திரிகைகளில் செய்தியாக அறிவிக்கப்படாமல் எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் அவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். தொழில் தகராறு சட்டத்திற்கு விரோதமான முறையில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டுவதோடு, தற்போது நான் அமைச்சரிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்பு வது இதுதான். சட்ட மரபுகளுக்கும் நியாயத்திற்கும் விரோத மான முறையில் பழிவாங்கப்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிற தொழிலாளர் சங்கத்தோடு அரசு பேச்சுவார்த்தை நடத்து வதற்கு ஒரு தேதியை நிர்ணயித்து, குறுகிய கால வரம்பு ஒன்றையும் நிர்ணயித்து அந்தக் கால வரம்பிற்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று பேரவையில் இந்த அரசு உறுதி மொழியை அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் குற்றம் புரிந்தார்கள் என்று ஆய்வதைவிட சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பையொட்டி தீர்ப்பாயத்திற்கு இந்தப் பிரச்சினை விடப்பட்டிருக்கிறது. அந்த விசாரணை 5—5—1987 அன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பால்வளத் துறையின் சார்பில் சட்ட சபையில் பதில் அளிக்கும்போது, இணையம் தொழில் சங்கத்துடன் சுமுகமாக விரைவிலே பேசி முடிவெடுக்கும் என்று உறுதியளித்திருக்கிறேன். அதே உறுதியின் பிரகாரம் மே 1-ஆம் தேதிக்குள்கூட அந்த தொழிற் சங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தலாம். அவர்கள்தான் முதலில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை அழைத்துப் பேச வேண்டும். இதிலே நவம்பர் மாதம் இணையம் 390 பேருக்கு நோட்டீஸ் கொடுத்ததில் 204 பேர் தபாலைப் பெற்றுக் கொண்டதற்காகத் திரும்ப பதில் அளித்திருக்கிறார்கள். அதில் 3 பேர் வேலையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மற்றவர்களிடமிருந்து பதில் வரவில்லை. ஆகவே, யார், யார் எந்தெந்த முகவரியில் இருக்கிறார்கள் என்ற பட்டியலுடன் தொழிற் சங்கத் தலைவர்கள் இணையத்தின் நிர்வாக ஆணையாளருடன் எவ்வளவு விரைவிலே பேசலாமோ அவ்வளவு விரைவில் நேரிடையாகப் பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற போது மாதவரம் பால்பண்ணை தொழிலாளர்கள் பிரச்சினை 1-ஆம் தேதிக்குள் சுமுகமாகப் பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். சென்ற மாதம்கூட அந்தத் தொழில் சங்கத்தினுடைய தலைவரும், திரு. ஏ. என். கோபு அவர்களும் சந்தித்து மகஜரைக் கொடுத்தபோதும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். 15—2—1980-இல் தொடங்கி இவ்வாண்டு 1987 ஆம் ஆண்டு வரை இந்தப் பிரச்சினை தொடர்ந்து போனதால், உயர்நீதிமன்றம் வரைக்கும் சென்று இருப்பதால், முன்னாள் அமைச்சர் அவர்கள் பல தடவை பேசுவதாக இந்தச் சட்டமன்றத்திலே சொல்லப்பட்டு காலம் கடந்துவிட்டதால் 901 தொழிலாளர்களின் குடும்பங்கள் 7 ஆண்டுக் காலமாக பட்டினி கிடக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுப் பலபேர் இறந்துவிட்டார்கள். ஆகவே, இதைக் கணக்கிலே கொண்டு அமைச்சர் அவர்கள் 901 குடும்பத்தின் நலனைக் கருதி இந்த மே 1-ஆம் தேதிக்குள் பேசி தீர்க்கப்படும் என்ற வாக்குறுதியை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் சொல்லி—நாங்களும் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்களிடம் எடுத்துச் சொல்லுகிறோம்—வெகு விரைவில் முடித்து இந்தக் குடும்பங்களைப் பாதுகாக்கக் கூடிய நடவடிக்கையை எடுக்க உறுதியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மே 1-ஆம் தேதிக்குள் அல்லது தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ள 5—5—1987க்குள் எப்போது வேண்டுமானாலும் தொழிற் சங்கத்தின் சார்பில் இணையத்தின் நிர்வாக இயக்குநரோடு பேச்சுவார்த்தை நடத்தலாம். ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அரசு துறையின் சார்பில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே பேசுவதைக் காட்டிலும், அமைச்சர் அவர்களே பொறுப்பு எடுத்து இங்கே வைத்து இரண்டு பிரிவினரையும் அழைத்துப் பேச ஒரு தேதியைக் குறிப்பிட்டு சுமுகமாக பிரச்சினையைத் தீர்த்தால் சரியாக இருக்கும். அமைச்சர் அவர்கள் அதை அறிவிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் இணையத்தின் நிர்வாக இயக்குநர் ஆகிய இருவரையும் கலந்துகொண்டு நானே விரைவில் ஒரு தேதியை நிர்ணயிக்கிறேன் என்பதை சபையின் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஐ) குமரி மாவட்டத்தில் தேன் விற்பனையில் தேக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன், கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குமரி மாவட்டத்தில் லட்சக்கணக்கான மதிப்புள்ள தேன் விற்க முடியாமல் தேங்கி இருப்பதினால் அப்பகுதி மக்களிடம் ஏற்பட்டிருக்கும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

[திரு. ஆர். சௌந்திரராஜன]  [1987 ஏப்ரல் 24

அறிக்கை.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின கீழ் செயல்
படும், நாகர்கோவில் தேன் சேகரிப்பு நிலையம், மற்றும்
மார்த்தாண்டம் தேன் வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் ஆகியவை
கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன.

2. நாகர்கோவில் தேன் சேகரிப்பு நிலையம், கதர் அங்காடி
களுக்கு மட்டும் தேன் விநியோகித்து வருகிறது. இந்நிலையம்
1986-87 ஆம் வருடம் பிப்ரவரி மாத கடைசி வரை ரூ. 52
ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 3,060 கிலோ தேனை உற்பத்தி
செய்துள்ளது. இதில் ரூபாய் 76,000-க்கு 3,040 கிலோ தேன்
விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் தேன் சேகரிப்பு
செய்த வகையில் 20 கிலோ மட்டுமே இருப்பில் உள்ளது. தேன்
கொள்முதல் செய்யப்பட்டு உடனுக்குடன் விற்கப்பட்டு வரு
கிறது.

3. வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றொரு நிலைய
மான மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கம்
1986-87 பிப்ரவரி வரை சுமார் 88,272 கிலோ தேனைக் கொள்
முதல் செய்தது. இதில் விற்பனை செய்தது 50 ஆயிரம் கிலோ
வாகும். மீதம், இருப்பில் உள்ளது சுமார் 38,272 கிலோ
வாகும். இவ்விருப்புத் தேனும் உடனடியாக விற்பனை செய்யப்
பட்டுவிடும். தற்போதைய நிலையில் வாரியத்திற்கே (விற்
பனைக்கு) தேன் மேலும் தேவைப்படுகிறது.

4. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நாகர்கோவில்
உதவி இயக்குநருக்கு 1,00,000 கிலோ அளவுள்ள தேன் கொள்
முதல் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. தேன் சேகரிப்போரிட
மிருந்து உடனடியாக தேனை கொள்முதல் செய்யும் பொருட்டு,
ரூ. 3,00,000 (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நாகர்கோவில்
உதவி இயக்குநருக்கு முன் பணமாக அளிக்கப்பட்டுள்ளது. இன்
னும் மேற்கொண்டு அதிகமான தொகை உடனே தேவைப்படின்,
கூடுதலாக முன்பணம் வழங்க வாரியம் தயார் நிலையில் உள்ளது.
எனவே, தேன் கொள்முதல் செய்வதில் எவ்வித இடையூறோ
அல்லது தேன் தேக்க நிலையோ இல்லை எனத் தெரிவித்துக்
கொள்ளப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே,
விவர அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களே, 38,272
கிலோ தேன் தேங்கி கிடப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.
மேலும், ஏற்கெனவே வாங்கப்பட்ட ஐம்பதாயிரம் கிலோவிற்
குரிய பணம் உற்பத்தியாளர்களுக்கு போய்ச் சேரவில்லை என்று
சொல்லப்படுகிறது. வழியிலே எங்கே தேங்கி இருக்கிறது என்று
தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இங்கே தேன் தேவை





இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, மீத
முள்ள தேனை உடனடியாக வாங்குவதற்கும், ஏற்கெனவே
வாங்கப்பட்ட தேனுக்கு உரிய பணம் உற்பத்தியாளர்களுக்குப்
போய்ச் சேரக்கூடிய முறையிலே வேகமாக நடவடிக்கை எடுப்
பதற்கும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்
டத்தில் நாகர்கோவிலிலும், மார்த்தாண்டத்திலும் கதர்
கிராமத் தொழில் வாரியம் சார்பாக நடைபெறும் தேன் சேகரிக்
கின்ற இரண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. நாகர்கோவிலிலே
இருக்கின்ற அந்த நிறுவனத்திடமிருந்து நாம் கிட்டத்தட்ட
3,040 கிலோ தேனை வாங்கி, விற்பனை செய்திருக்கிறோம்.
அவர்களிடத்திலே 20 கிலோதான் பாக்கி இருக்கிறது. மார்த்
தாண்டத்திலிருந்து கிட்டத்தட்ட 50,000 கிலோ வாங்கி
யிருக்கிறோம். மீதி 38,272 கிலோதான் இருக்கிறது. அதுவும்
செலவாகிவிடும். தேவையிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது.
அவர்களுக்குப் பணம் வழங்க 3 இலட்சம் ரூபாய் அங்கே இருக்
கும் உதவி இயக்குநரிடத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும்,
பணம் தேவைப்பட்டால், உடனே வழங்க பணத்தைத் தயாராக
வைத்திருக்கிறோம். ஆகவே, தேன் தேவைப்படும் அளவுக்குத்
தான் இருக்கிறது. தேங்கிப் போகும் அளவுக்கு இல்லை என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, மார்த்தாண்டம் தேன் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவுச் சங்கம் நல்ல முறையிலே செயல்பட வில்லை என்
றும், ஒருசில அதிகாரிகள் சங்கத்தை நல்ல முறையில் செயலாற்ற
விடாமல், சில தில்லுமுல்லுகள் செய்வதாகவும் விற்பனையாளர்
களிடத்தில் ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து நன்கு
விசாரித்து, அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்
கிறவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் மேலே தகுந்த
நடவடிக்கை எடுத்து, கூட்டுறவுச் சங்கத்தைக் காப்பாற்ற
மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் : பேரவைத்
துணைத் தலைவரவர்களே, நான் கடந்த மாதம் நாகர்கோவில்
பகுதிக்குச் சென்றபோது, மார்த்தாண்டம் தேன் கூட்டுறவுச்
சங்கத்தைச் சேர்ந்த சிலரை அழைத்து, நேரடியாகப் பேசினேன்.
அங்கேயுள்ள கதர் வாரியத் துறை அதிகாரிகளுக்கும் அவர்
களுக்கும் பிரச்சினைகள், பிணக்குகள் இருப்பதாகத் தெரிய
வில்லை. அதை நேரடியாக அவர்களிடம் கேட்டுத் தெரிந்து

கொண்டேன. கதர் வாரியத் துறை அதிகாரிகள் எங்களோடு ஒத்துழைக்கிறார்கள் என்று அவர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஏதாவது பிரச்சினைகள் இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு.

### வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1977 ஆம் வருடம் மே மாதம் 11 ஆம் தேதியிலிருந்து இதுநாள் வரையிலும் இதை நீட்டித்துக்கொண்டே வருகிறார்கள் இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு தேர்தல் நடத்துவது அனேகமாக சரித்திரத்தில் இல்லாமல் போய்விட்டது. 10 வருஷங்கள் முடிந்து, 11–வது வருஷத்திற்கும் நீட்டித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்கிறார்கள். நல்ல காரியத்திற்காக எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதை நாங்கள் ஆதரிக்கத் தயார். இந்த நிலைமை அப்படியல்ல. விவசாயிகளுடைய விளைபொருள்களை விற்பனை செய்ய மிக நெருக்கடியான வர்த்தக பேரங்கள் நடக்கும் ஓர் இடம் அது. அப்படிப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், அதிகாரிகளே இருந்து தொடர்ந்து நடத்துவது என்ற நோக்கம்தான ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்சில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு வருடத்திற்கு தள்ளிப் போட வேண்டுமென்றுதான் இருக்கிறது. தேர்தலைச் சீக்கிரத்தில் நடத்துவோம் என்பது பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாது, தொடர்ந்து அதிகாரிகளைக் கொண்டே இப்படிப்பட்ட சங்கங்களை நடத்துவது என்பது மிகத் தவறானது. இதை ஆரம்பத்திலேயே எதிர்க்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவு செய்து இதை வாபஸ் பெற்று, எந்த சமயத்திலும் தேர்தலை நடத்தப் போகிறோமென்று சொல்லி, சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தால் ஆதரிக்கத் தயார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





*திரு. எ. எஸ். ஏ. அறுமுகம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு மே 11 ஆம்
தேதி கலைக்கப்பட்ட ரெகுலேட்டட் மார்க்கெட்டிங் கமிட்டி
களுக்கு எல்லாம் இன்னும் தேர்தல் நடத்தப்படாமல் இருக்
கிறது. உங்களுக்கு இருக்கிற அதிகாரம் ஓராண்டுக்குத்தான்
என்பதால் ஒவ்வொரு ஆண்டாக நீட்டித்து, 10 ஆண்டுகளுக்கு
நீடித்துவிட்டீர்கள். இன்னும் ஓராண்டு நீட்டித்துக் கேட்கப்
படுகிறது. இது தேவைதானா ? இவற்றுக்குத் தேர்தல் நடத்த
என்ன தயக்கம் ? இந்த ஆண்டே இவற்றுக்குத் தேர்தல் நடத்த
வேண்டுமென்று கேட்டு, இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்
கிறேன்

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட மார்க்
கெட்டிங் சொசைட்டி இப்போது 1987-ம் ஆண்டு மே 11-க்கு
மேலே ஒரு ஆண்டு என்பது 1988-ம் ஆண்டு வந்துவிடும். எனவே
11 ஆண்டுகாலம் அளவிற்கு மார்க்கெட்டிங் சொசைட்டிகளில்
விவசாயிகள் கொடுக்கக்கூடிய பொருள்களில் மற்ற காரியங்
களில் பல தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும்
இதிலே விதியைச் சேர்க்கப்போகிறோம் என்பது
பொருத்தமாக இருக்காது. காரணம் இப்படி விதியைச்
சொல்லியே காலம் கடத்தாமல் இந்த மசோதாவை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு உடனடி
யாக தேர்தலை அறிவிக்கவேண்டும் என்று கேட்டு இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆட்சேபணை செய்து அமர்கி
றேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மார்க்கெட்டிங் சொசைட்டி தேர்தல்
நடக்காத காரணத்தினால் பல தொல்லைகள் அனுபவித்து
வருவது என்பதும் பல ஆண்டுகாலமாக தொடர்ந்து வலியுறுத்திக்
கொண்டு வருவதும் தெரிந்ததொன்று. பெரும்பாலும்
விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதையும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். தொடர்ந்து
அவர்கள் பாதிப்புக்குள்ளாகும்போது, இந்த நிர்வாகத்திற்கு
ஏன் தேர்தல் நடத்தமுடியவில்லை? நான் ஒன்றைச் சொல்லிக்
கொள்கிறேன். காலம் நீடிக்கப்படுகிறது. விவசாயி
களுக்குக் கிடைக்கின்ற உரத்திலேகூட வித்தியாசம் இருக்கிறது.
ஒரு ஆண்டிலே பாமின்-லே வருகிறார்கள். பாமின்லே- வகை
யாக இருந்தால் பாமின்-இல் விளம்பரம் செய்கிறார்கள்.
பாமின்-இல் அதிகாரிகள் சரியாக இல்லை என்றால் ஸ்பிக்-லே
வந்துவிடுகின்றார்கள். அங்கே வேறு காரியம் நடக்கின்றது.
அதையும் பார்த்துக்கொள்கின்றார்கள். எனவே உர விநி
யோகத்திலேகூட மிக கேவலமான சிக்கலை உருவாக்கு
கின்றார்கள் அந்த நிர்வாகத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகள்.
அதோடு மட்டுமல்ல. இவர்கள் வாங்குவதோடு விவசாயி
களுக்கு இழப்பையும் உருவாக்கிவிடுகிறார்கள். தொடர்ந்து
10 ஆண்டு காலத்திற்கும் மேலாக இந்த இழப்புகளை உருவாக்கிக்
கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது சட்ட முன்வடிவு அறிமுக நிலை. டிமாண்டிலே பேசுகிற மாதிரி பேசுகிறீர்களே, எல்லோரும் எப்படி பேசுகிறார்கள் பாருங்கள். 2, 3 வரிகளிலே சுருக்கமாகப் பேசி இருக்கின்றார்கள்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக யோசனை செய்து அறிமுக நிலையிலேயே வேண்டாம் என்று சொல்லிவிட்டு வேறு ஒரு மாற்று சட்டத்தைக் கொண்டு வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையிலேதான் சொல்கிறேன். வேறு ஒன்றும் குறையே சொல்லவில்லை. எனவே அப்படி தொடர்ந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், இந்த நிர்வாகத்திற்கு தேர்தல் நடத்துவதில் ஏன் காலத்தைத் தள்ளி போடுகிறார்கள். அந்த காலத்தை குறைத்துவிட்டு வேறு சட்டத்தை அறிமுகப்படுத்தினால் நலமாக இருக்கும் என்ற காரணத்தினாலேயே இந்த சட்டத்தை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 11-3-1986 அன்று இதே சட்டமன்றப் பேரவையில், 'தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள்கள் விற்பனை சட்டமுன்வடிவு' சட்டமன்றப் பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த சட்ட முன் வடிவு குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுக்கு சென்றிருக்கிறது. அது வந்தபிறகு சட்டமாக்கப்படும். அதுவரையில் பொறுத்திருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அனுமதி கோருகிறோமே தவிர வேறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுப்பார்களேயானால் நியாயமான முறையில் நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டு இந்த அறிமுகத்தை அனுமதிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.





## 6. வரவு-செலவுத் திட்டம், 1987–88 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

### (அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,76,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் டேனிஷ் பேட்டையில் ஒரு சர்க்கரை ஆலையினை அரசு அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,76,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படும் உசிலம்பட்டி பகுதியில் பெருந்தொழில்கள் தொடங்கும் அடிப்படையில் புதிய சர்க்கரை ஆலை தொடங்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,76,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

Thiru J. Hemachandran : Hon. Deputy Speaker, Sir, to discuss the need to develop Indian Rare Earths at Manavalakurichi and to start new industries using the minerals produced there

I move—

"that the allotment of Rs. 7,76,46.000 under Demand No. 24—Industries be reduced by Rs. 100."

திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் தரமான ரப்பர் கிடைப்பதால் ரப்பர் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,76,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

[1987 ஏப்ரல் 24

(ஆ) கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு தலைப்பின் கீழ் ரூ. 10,07,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. கே. கல்லன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,07,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,07,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை* நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

---

*590—701ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1987-88 ஆம் ஆண்டுத் திட்டங்கள் குறித்த குறிப்புகள் அச்சடித்து ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பி னர்கள் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவற்றை எல்லாம் நான் இங்கே படித்ததாக அருள் கூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனைகளுக்குப் பிறகு புதிய தொழில்கள் தொடங்குவது குறித்தும், தமிழகத்தில் தொழில் ஏற்றம் பெற்றிருப்பது குறித்தும் நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : ஓர் அறிவிப்பு. பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1 மணி வரை நடைபெற்று, மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி குறித்தும், தொழில் வளர்ச்சிக்கான ஊக்குவிக்கும் ஸ்தாபனங்கள் பற்றியும், நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இதுவரை 6 ஐந்தாண்டுத் திட்டங்களை செயல்படுத்தியிருக்கி றோம். தமிழகத்திலே ஸ்டேட் பிளான் எக்ஸ்பென்டிச்சர் கமி ஷன் ரிப்போர்ட்டின்படி, 1951-56-ல் 80.39 கோடி ரூபாயும், 1956-61-ல் 187.76 கோடி ரூபாயும், 1961-66ல் 347.15 கோடி ரூபாயும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செலவு செய்யப் பட்டுள்ளது.

அது போல 1966-69-ல் 266.18 கோடி ரூபாயும், 1969-74-ல் 558.96 கோடி ரூபாயும், 1974-78-ல் 833.52 கோடி ரூபாயும் 1978-80-ல் 711.13 கோடி ரூபாயும், 1980-85-ல் 3,644.61 கோடி ரூபாயும் பிற்பாடு செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆக, முதல் கட்டம் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோதுள்ள நிலைமையை குறித்தும், இரண்டாவது கட்டம் காங்கிரஸ் அல் லாத ஆட்சிக் காலத்திலுள்ள நிலைமையை குறித்தும் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

The Ratio of Returns or the Ratio of Industrial Development in relation to expenditure is larger during the Congress Government.

திரு. டி. என். முருகானந்தம் [1987 ஏப்ரல் 24

After 1967, expenditure on Industry have increased abnormally. But the return on the expenditure, the benefits derived from the expenditure are definitely much less.

It means, Revenue granted by this House for Industrial Development have not brought the development to the extent expected out of the expenditure. The Government have either wasted the money or the Government have not sealed the leaks.

The expenditure was smaller during the Congress Rule compared to the subsequent non-Congress Governments. The Industrial climate of Tamil Nadu was bright during the First Three Five Year Plan periods during the Congress Rule than the subsequent non-Congress Governments Rule.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழிற்சாலைகளில் வேலை
செய்வதற்கு தேவையான வாய்ப்புகள் இருந்தன. தொழிற்
கல்வி காசுக்கு விற்கப்படவில்லை. Education system was not
thrown to sale. Job Oriented Education was
Investment climate for Industry was secured
தொழிற்சாலைகளை பொறுத்தவரை, முறையான hopeful.
அப் பிகர்ஸ் கொடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் பிரேக்
of Expenditure on Establishment கூட கொடுக்கப்பட வில்லை. Ratio

நாட்டினுடைய ஜனத்தொகையை எடுத்துக் கொண்டால்
நகரங்களை காட்டிலும் கிராமங்களிலேயே அதிகமாக ஜனத்
தொகை இருக்கிறது. ஆகவே ஜனத் தொகை எங்கு இருக்
கிறதோ அங்கு தான் தொழில்களை தொடங்க அரசு முன்வர
வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் எந்தெந்த இடங்களில்
மூலப் பொருள்கள், ரா மெட்டீரியல்ஸ், ஏராளமாக கிடைக்
கின்றனவோ அந்த இடங்களில் எல்லாம் தொழில் தொடங்க
அரசாங்கம் சிந்தனையோடு செயல்பட வேண்டும். ஆகவே,
லைசன்ஸ் கொடுப்பதற்கு முன்பு இவைகளை எல்லாம் சீர்தூக்கிப்
பார்த்து லைசன்ஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

உதாரணத்திற்கு மதுரையில் டி. வி. எஸ். கம்பெனி டயர்
தயாரிக்கின்றார்கள். ஆனால் டயருக்குத் தேவையான மூலப்
பொருள்கள் அதாவது ரப்பர் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்
கிறது. ஆனால் டயர் தயாரிப்புக்கான தொழிற்சாலை மதுரை
யிலே இருக்கிறது. இதனால் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு
விலை அதிகமாகத் தான் ஆகும். காரணம் கன்னியாகுமரியில்



1987 ஏப்ரல் 24] [திரு. டி.என். முருகானந்தம்]

கிடைக்கின்ற ரப்பரை மதுரைக்கு கொண்டு வந்து நாம் ரப்பர்
தயாரிக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே இதை எல்லாம்
கருத்தில் கொண்டு லைசன்ஸ் வழங்கும் போது கச்சாப் பொருள்
எங்கே கிடைக்கிறதோ அங்கே தொழிற்சாலையை தொடங்க
உரிமம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆசியாவிலேயே மிகப் பெரிய காகிதத் தொழிற்
சாலையை தொடங்கியிருக்கிறோம் என்று மார்தட்டி சொல்லி
இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால்
அதிலே full capacity–க்கு News print உற்பத்தி செய்யப்படு
கிறதா என்றால் இல்லை. நாளுக்கு நாள் அதன் விலை அதிக
மாகிக் கொண்டே போகிறது. ஏசியாவிலேயே பெரிய தொழிற்
சாலை அது என்று சொல்லுகின்ற நீங்கள் ஏசியா மார்க்கெட்டில்
அதன் விலையை உயராமல் கண்ட்ரோல் பண்ணுவதற்கான நட
வடிக்கையை ஏன் எடுக்கவில்லை? ஆக, அங்கேயும் தேவையான
ரா மெட்டீரியல்ஸ் இருக்கிறதா என்பதை பார்க்காமல் தொழிற்
சாலை தொடங்கப்பட்டிருப்பதால் அந்தத் தொழிற்சாலை புல்
கெப்பாசிட்டியுடன் இயங்காதது மட்டுமல்லாமல் இன்றைக்கு
காகிதத்தின் விலை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நீங்கள் விளம்பர பிரியர்களாக இருந்து விடாதீர்கள்
என்று கேட்டுக் கொள்கிறேன். Don't be publicity seekers but
seek Industrial Development. நாட்டின் வளர்ச்சியில் அக்கறை
யுள்ளவர்களாக இருங்கள். ஓசூரிலே 15 ஆண்டுகளுக்கு முன்
னால் ஒரு இண்டஸ்ட்ரீஸ் காம்பிளக்ஸ், தொழிற்பேட்டை
அமைக்கப்பட்டது. பின் தங்கிய ஏரியாவில் அதனை அமைத்தது
வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால் அந்த இடத்திலே ஒரு தொழிற்
பேட்டையை தொடங்குவதற்கு முன்னாலேயே இன்பிராஸ்ட்
ரக்சர்ஸ், (Infrastructures,) கிடைக்கின்றதா என்பது பற்றி சிந்தித்
துப் பார்த்து செயல்பட்டிருக்க வேண்டும். இன்றைக்கு எந்த
ஒரு புதிய தொழிற்பேட்டைக்கும் போக்குவரத்து தொடர்பு,
தண்ணீர் வசதி, தொழிற்சாலையை இயக்குவதற்கான சக்தி
இவை எல்லாம் கம்மியாக இருக்கிற ஓசூரிலே இன்றைய தினம்
அது தொடங்கப்பட்டிருக்கிறது.

தண்ணீர் இல்லாமல் அந்தத் தொழிற்சாலைகள் அங்கே
இயங்க முடியுமா என்பதை நீங்கள் சிந்துத்துப் பார்க்க வேண்டும்.
15 ஆண்டுகளுக்கு முன்னாலே தண்ணீருக்கான டிசைன்கள் செய்
யப்பட்டு இது நாள் வரையிலே எந்தவிதமான முன்னேற்றமும்
அங்கே செய்யப்படாமல் இருக்கிறது. இப்பொழுது தான்
கேளவரப்பல்லி அணைத் திட்டத்திற்கு நீங்கள் இங்கே லேன்ட்
அக்யூசேஷன்-ஆர்டினன்ஸைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதன்
மூலம்தான் ஓசூருக்குத் தண்ணீர் வர வேண்டும். ஆனால்
எப்பொழுது தண்ணீர் வரப் போகிறது என்பது இன்னும் தெரிய
வில்லை.

அதோடு மட்டுமல்லாமல், 15 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்ட இந்தத் தொழிற்பேட்டையிலே இதுவரையிலேயும் இரயில் டிராக்கே இல்லை. இரயில் போக்குவரத்து வசதி இல்லாத ஒரு இடத்திலே, அதற்கென எந்தவிதமான ஒரு முயற்சியையும் இது வரையில் நீங்கள் மேற்கொள்ளவில்லை. மத்திய அரசாங்கத்தோடு பேசியாவது இரயில் டிராக்கை நீங்கள் கொண்டு வந்திருக்க வேண்டும். இரயில் இல்லாமல், போக்குவரத்து இல்லாமல் இந்தத் தொழிற்பேட்டைகள் எப்படிச் சிறப்பாக அமையும் என்று கேட்க விரும்புகிறேன்.

Financial Institutions என்று இன்ஸ்டிடியூஷன்களை அமைத்து பணத்தை வட்டிக்குக் கொடுத்துத் திரும்பப் பெறுகின்ற ஒரு துறையாகத்தான் இந்த Financial Institutions இயங்கிக் கொண்டிருக்கின்றன. புதிய தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்திக்காக ஆக்க பூர்வமான வேலைகளில் ஈடுபடுவதில்லை. கடந்த ஓராண்டுக் காலமாக பத்திரிகைகளிலே வருகின்றபொழுது ''டிக்'' நிறுவனமானது புதிய தொழில் தொடங்குவதற்கு நிதி வழங்குவதை விட்டுவிட்டு ஏலக் கம்பெனியாக மாறிவிட்டது. ஏலம் விடுவதற்கான விளம்பரங்கள் தான் தொடர்ந்து செய்தித்தாள்களிலே வந்த வண்ணமாக இருக்கின்றன. பணத்தைக் கொடுப்பதும், வசூல் செய்வதும்தான் இந்த நிறுவனங்களினுடைய வேலை அல்ல. நான் ஒரு குற்றச்சாட்டை வைக்க விரும்புகிறேன். ''டிக்'' நிறுவனமானது செய்கின்ற எந்தத் தொழிலும் உருப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், அவர்கள் மூலதனம் செய்யும்பொழுது எந்தத் தொழிலுக்கு முறையாக மூலதனம் செய்ய வேண்டுமோ அதை விட்டுவிட்டு முறைப்படி அல்லாத தொழில்களுக்கெல்லாம் மூலதனம் செய்வதாக நான் அறிகிறேன். அதோடு மட்டுமல்லாமல் மூலதனம் செய்வதற்கு முன்னால் ஒழுங்காக அனலைஸ் செய்து அதற்கு மட்டும் மூலதனம் வழங்க முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் அமைச்சர் வாயிலாக ஒன்றை அறிந்துகொள்ள விரும்புகிறேன். T.I.I.C. நிறுவனமானது கடந்த ஐந்தாண்டுகளில் முதலீடு செய்த தொகை எவ்வளவு? எத்தனை ஸ்தாபனங்களுக்கு முதலீடு வழங்கப்பட்டிருக்கிறது. T.I.I.C. நிறுவனம் முதலீடு செய்த தொழிற்சாலைகளிலே எத்தனைத் தொழில்கள் சிக் யூனிட்டுகளாக மாறியுள்ளன? இது வரை முதலீடு செய்த தொகையில் எவ்வளவு ரீயிம்பர்ஸ்மெண்ட் ஆகியிருக்கிறது என்ற கணக்கை அமைச்சரவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து அரசாங்கத்தை வட்டிக் கடைகளாக மாற்றிவிடாதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு மட்டுமல்ல, அமைச்சர் வாயிலாக ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் முதலீடு செய்கிறீர்கள். தொழிற்சாலைகளுக்கு முதலீடுகள் செய்யப்படுகின்றன. ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் முறையாக இயங்கவில்லை என்று சொல்லி write off செய்கிறீர்கள். write off செய்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? எந்த அடிப்படையிலே நீங்கள் write off செய்கிறீர்கள்? You are ** a Temporary c.stodian of the Government. write off செய்கிறீர்கள் என்று சொன்னால் மக்களுடைய பணம் வீணாகவில்லையா? நீங்கள் முதலீடு செய்கிறீர்கள் என்று சொல்லும் பொழுது ஒழுங்கான தொழிற்சாலைகளுக்கு முதலீடு செய்ய வேண்டும். அப்படித் தொழிற்சாலைகள் முறையாக இல்லை என்று சொன்னால் முதலீடே செய்யக் கூடாது. முதலீடு செய்து விட்டு அதற்குப் பின்னாலே ரைட் ஆப் செய்கிறோம் என்று சொன்னால் மக்களுடைய வரிப்பணத்தை யாரோ இடையிலே இருக்கின்ற இடைத் தரகர்கள் பெறுவதற்காக இது போன்ற ஒரு வேலைத் திட்டத்தை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்று குறை சொல்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் பொருளாதார சமத்துவத்தை.................

மாண்புமிகு திரு. க. இராசாராம் : : துணைத் தலைவரவர்களே எதை write off செய்தார்கள் என்று சொன்னால் அந்தக் குற்றச்சாட்டு நன்றாக இருக்கும். குற்றச்சாட்டை பொதுவாக பொத்தாம் பொதுவிலே சொல்லிவிட்டுப் போவதில் புண்ணியம் இல்லை. எதை ரைட் ஆப் பண்ணியிருக்கிறார்கள் எனன சிபார்சிலே பண்ணியிருக்கிறார்கள் என்று ஏதாவது தகவல் இருந்தால் அதைச் சொல்லலாம். அதிலே ஒன்றும் குறைபாடு இல்லை.

திரு. டி. என். முருகானந்தம் : துணைத் தலைவர் அவர்களே நான் அமைச்சரவாகளிடத்தில் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் நீங்கள் இதுவரை ரைட் ஆஃபே செய்யவில்லையா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே ரைட் ஆப் செய்வது என்பது சிலவற்றிற்குச் செய்ய வேண்டியதாக இருக்கும். நீங்கள் ஏதாவது மனதிலே வைத்து இருந்தால் அதை எடுத்துச் சொல்லலாம். ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறீர்கள். விளம்பரப் பிரியராக இருக்கக் கூடாது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இரயிலைக் கொண்டு வந்திருக்க வேண்டும்: மத்திய அரசு கொண்டு வர வேண்டியதை நாங்களே கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறீர்கள். நல்லதுதான். எங்களுக்கு அந்த அதிகாரம் வந்துவிட்டால் பரவாயில்லை. எது என்று தெளிவாக சொல்லிவிட்டால் நல்லது.

திரு. டி. என். முருகானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்றுதான் நான் கேட்கிறேன். 15 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே அங்கே தொழிற்பேட்டை அமைத்திருக்கின்றீர்கள். ஆனால் 15 ஆண்டுக் காலமாக அங்கே இரயில் டிராக்கைக் கொண்டு வரவில்லை என்று சொன்னால்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் கேட்டது write off பண்ணுவதைப் பற்றிப் பேசினீர்கள். அது எது என்று ஸ்பெசிஃபிக்காகச் சொல்ல சொல்கிறார்கள். பிறகு, ஒரு சர்க்காரைப் பார்த்து** என்று சொல்லக்கூடாது என்று, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தைப் பார்த்து— உங்கள் சர்க்காரைச் சொன்னால் கூடக் கோபம் வரும். எனவே ** என்ற வார்த்தைகளை நீக்க உத்தர விடுகிறேன. நீங்கள் எது என்று ஸ்பெசிபிக்காகச் சொன்னால் அமைச்சருக்கு சௌகரியமாக இருக்கும் நடவடிக்கை எடுக்க. விளக்கம் சொல்வார்கள்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இந்த அரசாங்கத்தைக் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. மக்களுடைய வரிப் பணம் வீணாகப் போகிறது என்றுதான் சொல்கிறேன். write of என்று Specific ஆகச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். write off என்ற சிஸ்டத்தையே நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

(நண்பகல் 12–00)

திரு. செ. செம்மமை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாநில சர்க்கார் சில நிறுவனங்களுக்கு write off செய்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். 1985–86 ஆம் ஆண்டு மத்திய சர்க்கார் மத்திய அரசு நிறுவனங்களான (Public enterprises) 8 நிறுவனங்களுக்கு சுமார் 33 கோடி ரூபாயை ரத்து செய்திருக்கிறது, write off செய்திருக்கிறது. write off

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





என்கிறபோது மக்களுடைய வரிப் பணத்திலிருந்துதான் ஈடு செய்யப்படுகிறது. அந்த வகையில் மத்திய அரசு 8 நிறுவனங்களுக்கு 33 கோடி ரூபாயை write off செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. என். முருகானந்தன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனே மத்திய அரசுக்கு வந்துவிட்டார்கள். நான் குறிப்பிட விரும்புவது, மத்திய அரசாக இருந்தாலும் மாநில அரசாக இருந்தாலும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொன்னதால்தான் அவர் இடையிலே விளக்கம் சொல்ல வேண்டி வந்தது; நீங்கள் மாநில அரசை அப்படி சொல்லியிருக்கக்கூடாது; சொன்னதால் திருப்பிச் சொல்ல வேண்டிவருகிறது. பிரச்சனை இல்லாமல் தொடர்ந்து பேசுங்கள்.

திரு வி. பி. சிந்தன் : துணைத் தலைவரவர்களே, ஒரு வார்த்தை....

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எங்களுக்குள்ள பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்கிறோம். இடையிலே நீங்கள் வரவேண்டாம். (குறுக்கீடு).

திரு. டி. என். முருகானந்தம் : தமிழக அரசு பொருளாதார சமத்துவத்தை உருவாக்குவது எங்களுடைய அடிப்படை நோக்கம் என்று சொல்கிறது. அது நல்லதுதான். பொருளாதார சமத் துவத்தை அடைய வேண்டுமென்றால் கிராமப் புறங்களில் தான் தொழில்களைத் தொடங்க வேண்டும். அப்போதுதான் பொரு ளாதார சமத்துவத்தை அடைய முடியும் அதன் காரணமாகத் தான் மகாத்மா காந்தியடிகள் கூட கிராமப்புறங்களில் தொழில் களைத் தொடங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்

அது மட்டுமல்ல, தமிழ் நாட்டிலே நிதி நிறுவனங்கள் மூலமாக டி. வி. எஸ்., கோத்தாரி, சிம்சன் போன்ற பெரிய நிறுவனங் களுக்கு எவ்வளவு நிதி கொடுத்திருக்கிறார்கள் ? அதே நேரத்தில் புதிதாகத் தொழில் தொடங்குகிற new entrepreneurs-க்கு எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள் ? புதிதாகத் தொழில் தொடங்கு கிறவர்களுக்கு மாவட்டந்தோறும் நீங்கள் கொடுத்திருக்கிற முத லீடு எவ்வளவு என்ற விவரங்களை எல்லாம் அமைச்சர் அவர் களுடைய பதிலிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். இன்றைக்கு பெரிய நிறுவனங்களுக்குத் தான் அரசாங்க முதலீடு வழங்கப்படுகிறதே தவிர சிறிய நிறுவனங்களுக்கு வழங்கப் படுவதாகத் தெரியவில்லை. அதன் காரணமாக இந்த அரசு மிகப் பெரிய b siness house ஆக இருக்கிறது; மிகப் பெரிய வர்க்கப் போராட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

Business House *versus* New Enterpreneurs. The beginning and the end of the Government's Industrial policy enables the rich men to become richer and the new Enterpreneurs are not given any chance.

அதுமட்டுமல்ல. சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் என்ற நிறுவனத்தை தி. மு. க. காலத்தில் தொடங்கினார்கள். தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அந்தக் கம்பெனி இன்றுவரையில் நஷ்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அரசு அதுபற்றி சிறிது கூட சிந்திக்கவில்லை. அந்தக் கம்பெனியைப் பற்றி பல குற்றச்சாட்டு கள் வந்திருக்கின்றன. அங்கேயிருந்து Scraps வெளியே எடுத்துச் செல்லப்படுகிறது. அப்படி வெளியே எடுத்துச் சொல்லும் போது non-scraps materials கூட எடுத்துச் சொல்லப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு சொல்லப்படு கிறது. அந்தக் குற்றச்சாட்டை இந்த அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும். அதோடு அந்தக் கம்பெனியை இலாபத்தில் நடத்த ஏன் முயற்சி செய்யக் கூடாது ? அது பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று தொழில் நிறுவனங்களிலே சமூக விரோத சக்தியை தடுத்து நிறுத்த மத்திய அரசில் Industrial Security force என்ற ஒரு அமைப்பை ஆரம்பித்திருக்கிறார்கள். அதைப் போன்று மாநில அரசும் Industrial Security Force ஒன்றை ஏற்படுத்தி சமூக விரோத சக்திகளை தடுத்து நிறுத்த வேண்டும். மாநில அரசு அமைக்கின்ற அந்த அமைப்பில் இந்த மாநிலத்தைச் சேர்ந்த போலீசாரை சேர்க்கக்கூடாது. அதிலே மத்திய அரசு போலீசாரையோ அல்லது பிற மாநில போலீசா ரையோ சேர்க்க வேண்டும். அப்படியானால்தான் சரியாகச் செயல்பட முடியும் ; சமூக விரோத சக்திகளை தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது வரிக்கு வரி குறுக்கிடக்கூடாது. அடுத்து பேசுகின்ற உறுப்பினர்கள் தேவைப்பட்டால் பதில் சொல்லலாம் இரு பக்கங்களிலும் இந்த முறையைப் பின்பற்ற வேண்டும் தயவு செய்து அமருங்கள். வரிக்கு வரி குறுக்கிடுவதாக இருந் தால் ஒரு நாளைக்கு நான்கு உறுப்பினர்கள்தான் பேச முடியும்.

திரு. டி. என். முருகானந்தம் : அடுத்து, Women Finance Corporation ஒன்றைத் தொடங்கியிருக்கிறீர்கள் ; பாராட்டுகிறேன். நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கூட பெண்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப் படையில் Women Finance Corporation தொடங்கப்



பட்டிருக்கிறது. மத்திய அரசும் ஏராளமான gratuits வழங்கி யிருக்கிறது. இந்தக் கார்ப்பரேஷன் மூலம் பெண்களுடைய வாழ்க்கைத்தரம் முன்னேற்றமடைய எந்த எந்த தொழிலை ஆரம்பிக்கலாம், அது இலாபகரமாக இருக்கும் என்று சிந்தித்து செயல்பட வேண்டும். இப்போது படித்த பெண்கள் எல்லாம் சோப்பு, சீப்பு விற்றுக் கொண்டு தெருத் தெருவாக அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைத்து, பெண் கள் தொழில்களைத் தொடங்கி, வாழ்க்கையில் முன்னேற வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக TAMIN தமிழகத்திற்குச் சொந்தமான கனிம நிறுவனம். Sand Blast என்பது ஜப்பான் நாட்டுக்கு அதிக மாகத் தேவைப்படுகிறது. இவ்வாறு ஜப்பான் நாட்டிலே அதிக மாக விரும்பிப் பெறக்கூடிய அந்த Sand Blast-ஐ மத்திய அரசின் அனுமதியோடு நீங்கள் அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டும். தற்போது மத்திய அரசு இதற்கு அனுமதி வழங்க வில்லை. ஆனால் மைசூர் மினரல்ஸ் என்று சொல்லக்கூடிய கர்நாடக அரசுக்குச் சொந்தமான நிறுவனத்திற்கு இதை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியை, உரிமையை மத்திய அரசு வழங்கி இருக்கிறது. இது பற்றி மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி, மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருப்பதன் காரணத் தால் இந்த நிறுவனம் அதிக இலாபத்தில் இயங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும். இதன் மூல மாக அதிகப்படியான அன்னியச் செலாவணி இந்தியாவுக்கு வர வாய்ப்பு இருக்கிறது. அதோடு படித்த வேலை இல்லாத பட்ட தாரிகளுக்கு கருங்கல் பலகைகளை வழங்கி, மலைமேலே இருக் கின்ற கருங்கற்களை தனிப்பட்டவர்கள் ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கவில்லை என்றாலும் TAMIN நிறுவனம் எக்ஸ்போர்ட்ட ராக இருந்து கூட ஏற்றுமதி செய்யலாம். அதனால் நல்ல வரு மானம் ஈட்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

தொழில் துறை தமிழகத்தில் நன்றாக வளர்ந்திருக்கிறது என்பதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு [illegible]மச்சர் அவர்களின் * * * * * மிகவும் சந்தோஷம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையெல்லாம் சொல்லக்கூடாது. நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, ** ** Blood pressure க்காகக் கட்டப் பட்டிருக்கின்ற ஒன்று. இதைப் பற்றியெல்லாம் உங்க ளுக்குத் தெரியாது. அப்புறம் கட்சியிலே இருப்பவர்களை வைத்துத்தான் தம்பிக்கு விளக்கம் சொல்ல வேண்டி வரும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசு 1983-ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து 68 Letter of Intent பெற் றிருக்கிறார்கள். 1984-ல் 89 Letter of Intent பெற்றிருக்கிறார்கள். 1985-ல் 110 பெற்றிருக்கிறார்கள். 1986-ல் 104 பெற்றிருக்கிறார்கள். 1985-ல் 110 Letter of intent பெற்றிருக்கிற தமிழக அரசு ஏன் 1986-ல் 104 தான் பெற்றார்கள்.

அடுத்து உரிமங்களைப் பொறுத்தவரையில் 1983-ல் 76 லைசன்ஸ்தான் தமிழக அரசு பெற்றிருக்கிறது. 1984-ல் 85 உரிமங்களைப் பெற்றிருக்கிறது. 1985-ல் 177 உரிமங் களைப் பெற்றிருக்கிறது. 1986-ல் 61 தான் பெற்றிருக் கிறார்கள். இதற்கு என்ன காரணம்? ஏராளமான அப்ளி கேஷன்ஸ் தனிப்பட்டவர்களிடத்திலே இருந்து வந்தும் ஏன் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லவில்லை. அவர்களிடம் வாதாடி ஏன் உரிமங்களைப் பெறவில்லை. முறையாகப் பெறாததற்கு என்ன காரணம்? இந்த அரசு தவறிவிட்டதா? ஏன் இதுபோன்ற நிலைமையை அவர்கள் ஏற்படுத்த வேண்டு மென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ராணிப்பேட்டையில் இருக்கிற சிப்காட்டில் காவல் துறை நிலையத்தைக் கட்டித்தரவேண்டும். தீயணைப்பு நிலையம் இருக்கிறது. ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் தீயணைப்பு வண்டி இல்லை. Central Analytical Laboratory இல்லை. அதோடு மட்டுமல்லாமல் அமைச்சர் அவர்கள் ஆயிரம் வீடுகளை அங்கே இருக்கிற உழைக்கும் வர்க்கத்தினருக்காகக் கட்டித் தருவதாகச் சொல்லி இதுநாள் வரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை. அதை அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து கட்டித்தரவேண்டும்.

என்னுடைய தொகுதியில் சாராம் ஸ்பின்னிங் மில் என்ற ஒரு மில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த மில்லுக்கு பவர் வழங்குவதில் அரசாங்கம் முன்னுரிமை தந்து அந்த மில் இலாப கரமாக இயங்க வழிவகை செய்யவேண்டுமென்று சொல்லி வாய்ப்பினை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1987 ஏப்ரல் 24]

திரு. இ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற தொழில் துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மனித சமுதாயத்தினுடைய நவீன சாதன மாகவும், உலக வளர்ச்சியிலே பெரும் பங்கேற்கிற துறை யாகவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துகிற துறை யாகவும் இருப்பது இன்றைக்குத் தொழில் துறைதான். இந்தத் துறையின்மூலம்தான் நிலையான வேலை வாய்ப்பினை மக்களுக்குக் கொடுக்க வாய்ப்பு ஏற்படுகிறது. தொழில் துறையிலே முன்னேறியுள்ள மாநிலங்களில் தமிழகம் தொடர்ந்து முன்னணியில் இருக்கிறது என்பதை அனைவரும் நன்றாக அறிவார்கள். வழங்கப்பட்ட தொழில் உரிமங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே தமி ழகம் மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கி அதன் மறுநிதி உதவித் திட்டத்தின் கீழ் மாநில வாரியாக நிதியுதவி அளித்துள்ள விவரத்தின்படி மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக தமி ழகம் இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

எனக்கு முன்பு பேசிய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அருமை சகோதரர் முருகானந்தம் அவர்கள் காங்கிரஸ் ஆட்சிப் பிறகு தமிழகத்தில் தொழில் துறை பின் தங்கி இருக் கிறது என்று சொல்லி தொழில் வளர்ச்சியே முழுமையாக இல்லை என்பதுபோல் பேசினார்கள். அதற்கு நான் பதில் சொல்வதை விட சமீபத்திலே மத்திய அரசின் அமைச்சர் மாண்புமிகு வெங்கல் ராவ் அவர்கள் தமிழகத்தில் தொழில் துறை மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் அவருடைய நினை வுக்கு நான் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அரசு பற்றி விமர்சிக்கிறபோது பல குற்றச்சாட்டுகளை சொல்லுகிற அளவுக்கு இங்கே பேசினார்கள். ஏதோ தமிழ கத்தில் பெரிய தொழில்களே வரவில்லை என்பது போலவும் மற்ற தொழில் வளர்ச்சியும் வரவில்லை என்பது போலவும் பேசினார்கள். அதற்கு முழு காரணம் யார் என்று சொன் னால் தயவுசெய்து அவர் கோபித்துக் கொள்ளக் கூடாது. எந்த உரிமையோடு அவர்கள் பேசுகிறார்களோ, அதே உரிமையோடு நாங்கள் பேசுவதற்கும் நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

[திரு. கி. அன்பழகன்] [1987 ஏப்ரல் 24

இன்றைக்குத் தொழில் துறைக்கு அனுமதி வழங்கக் கூடிய
முழு அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதை தயவு
செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். லைசன்ஸ் அத்தாரிட்டி
எக்ஸ்போர்ட்டாக இருந்தாலும் இம்போர்ட்டாக இருந்
தாலும், ஃபாரின் லோனாக இருந்தாலும் தேசிய வங்கிகளிடம்
கடன் வாங்குவதாக இருந்தாலும் அதைச் செய்கிற பொறுப்பு
எந்த அரசிடம் இருக்கிறது என்பதை தயவுசெய்து எண்ணிப்
பார்க்க வேண்டும். அது மட்டும் அல்ல, இன்றைக்கு ஏறத்தாழ
90 சதவீதத்திற்கும் அதிகமான தொழில்களுக்கு உரிமம் வழங்கு
கிற ஒரு பெரிய பொறுப்பு மத்திய அரசு எடுத்துக் கொண்டு
செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. சட்ட வல்லுநர் பால்கிவாலா
அவர்களே சொல்லி இருக்கிறார்கள். அரசியல் சட்டத்தை
திருத்தாமல் நாடு எங்கும் தொழில் அமைக்கக் கூடிய உரிமையை
மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். அந்த வகையிலே பார்க்கிறபோது முழு பொறுப்
பில் இருக்கிற மத்திய அரசுதான். பெரிய தொழில்களாக
இருந்தாலும் சரி, மாநிலங்களுக்கு உரிமம் கொடுக்கின்ற
வகையிலே எடுத்தாலும் சரி, அவர்கள் தான் முன் நின்று செய்ய
வேண்டுமே தவிர மாநில அரசை குற்றம் சொல்வதில் எந்தவித
பயனும் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்த வரையில் மைய அரசின்
தொழிற் கொள்கை மாநிலங்களின் தொழில் வளர்ச்சியை
தடுப்பதாகத்தான் இருக்கிறது என்பதை நான் கோடிட்டுச்
சொல்ல விரும்புகிறேன். தொழில் துறையை வளர்க்க வேண்டும்
என்று சொன்னால் தொழில் முதலீடும் மின்சாரமும்,
போக்குவரத்தும் சிறப்பாக அமைய வேண்டும். இன்றைக்கு
தொழில் முதலீட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்
றக் கழகம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், மத்திய
அரசின் முதலீடுகள் போன்ற பல வகைகளிலும் முதலீடு
களைப் போட்டு அரசு சிறப்பாக செயலாற்றிக்கொண்டிருக்
கிறது. அந்த வகையில் மத்திய அரசின் முதலீடு தமிழ்நாட்
டில் அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன். மின்சாரத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தில்
எவ்வளவு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை
அனைவரும் அறிவார்கள். மின் துறையில் பற்றாக் குறை
மாநிலமாக இருந்தாலும் புதிய திட்டங்களைப் போட்டு,
அவைகளைச் சிறப்பாக செயல்படுத்தித்தான் இந்த அரசு
பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் பார்க்கிற
போது மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கும் பெரும்
பேரனல் மின் நிலையங்களான நெய்வேலி, கல்பாக்கம்
போன்ற நிலையங்களில் உற்பத்தி ஆகக் கூடிய முழு மின்



1987 ஏப்ரல் 24] [திரு. கி. அன்பழகன்]

சாரத்தையும் தமிழகத்திற்கு தருவார்களேயானால், தமிழகம்
மின் வளர்ச்சியில் சிறப்பாக முன்னேற்றம் அடையும். அதே
நேரத்தில் தமிழகத்தில் அனல் மின் நிலையங்களையும், அணு
மின் நிலையங்களையும் துவங்க மத்திய அரசு உதவிட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில் மாண்பு
மிகு முருகையந்தம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொன்
னார்கள். ஏதோ ஓசூர் பகுதியிலே தொழிலை துவங்குவதற்கு
ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தித் தரவில்லை என்று குறை
பட்டுக் கொண்டார்கள். அதே கேள்வியைத்தான் இன்
றைக்கு பல முறை கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய
அரசு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும்.
எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கரூர்-திண்டுக்கல் அகல
ரயில் பாதை. அதே மாதிரி தமிழ்நாட்டில் இருக்கிற மீட்டர்
கேஜ் ரயில் பாதைகளையெல்லாம் அகல ரயில்பாதையாக
மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்
கிறது. இப்படிப்பட்ட காரியங்களை மத்திய அரசு செய்து
தருமானால் தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு
அது ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில் மத்திய அரசினுடைய
தொழில் கொள்கை தமிழகத்திற்கு எந்த அளவிற்கு பாதிப்பை
ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல
விரும்புகிறேன். மத்திய அரசு தொழில்களுக்கு உதவி செய்
வதில் புதிய தொழில்கள் தொடங்குவதானாலும் சரி,
தொடங்கப்பட்டிருக்கிற தொழில்களுக்கு சலுகை அளிப்பதா
னாலும் சரி ஒரு சில கொள்கைகளை வைத்திருக்கிறது. பின்
தங்கிய மாவட்டம் என்றும், தொழிலே இல்லாத மாவட்டம்
என்றும் அதாவது ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட் என்று
பகுதிகள் இருந்தால்தான் சலுகை என்று வைத்திருக்கிறது.
இந்தக் கொள்கையின் காரணமாக தமிழகம் எந்த அளவுக்கு
பாதித்து இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.
எந்த தொழிலும் இல்லாத மாவட்டத்தில் தான் மைய அர
சின் மானிய உதவித் தொகையுடன் புதிய தொழில் துவங்க
தகுதியான இடம் என்று மைய அரசு இன்றைக்கு சொல்லிக்
கொண்டிருக்கிறது. அதிலே பல கேட்டகரிகளைப் பிரித்து
உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். 30 கோடி
ரூபாய்க்கு மேல் முதலீட்டில் ஏதாவது ஒரு தொழில் மாவட்
டத்தில் அமைக்கப்பட்டிருக்குமானால் அந்தப் பகுதியில் மேலும்
தொழில் நடத்துவதற்கு மத்திய அரசின் மானியம்
கிடையாது. அந்த வகையில் பார்க்கிறபோது எங்களுடைய
வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை பகுதியில் பெல்
கம்பெனி இருக்கிறது. ஏறத்தாழ 30 கோடி ரூபாய் அளவிற்கு
முதலீடு போடப்பட்டு இன்றைக்கு அது நடந்து வருகிறது.
அந்தப் பகுதியில் புதியதாக தொழிலைத் துவங்க வேண்டுமென்
றால் அதற்கு மத்திய அரசு மானியம் கிடைக்காது. இப்படிப்
பட்ட இக்கட்டான சூழ்நிலை இருப்பதை இந்த நேரத்தில்

[திரு. க. அன்பழகன்] [1987 ஏப்ரல் 24

இன்றைக்குத் தொழில் துறைக்கு அனுமதி வழங்கக் கூடிய
முழு அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதை தயவு
செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். லைசன்ஸ் அத்தாரிட்டி
எக்ஸ்போர்ட்டாக இருந்தாலும் இம்போர்ட்டாக இருந்
தாலும், ஃபாரின் லோனாக இருந்தாலும் தேசிய வங்கிகளிடம்
கடன் வாங்குவதாக இருந்தாலும் அதைச் செய்கிற பொறுப்பு
எந்த அரசிடம் இருக்கிறது என்பதை தயவுசெய்து எண்ணிப்
பார்க்க வேண்டும். அது மட்டும் அல்ல, இன்றைக்கு ஏறத்தாழ
90 சதவீதத்திற்கும் அதிகமான தொழில்களுக்கு உரிமம் வழங்கு
கிற ஒரு பெரிய பொறுப்பு மத்திய அரசு எடுத்துக் கொண்டு
செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. சட்ட வல்லுநர் பல்கிவாலா
அவர்களே சொல்லி இருக்கிறார்கள். அரசியல் சட்டத்தை
திருத்தாமல் நாடு எங்கும் தொழில் அமைக்கக் கூடிய உரிமையை
மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். அந்த வகையிலே பார்க்கிறபோது முழு பொறுப்
பில் இருக்கிற மத்திய அரசுதான், பெரிய தொழில்களாக
இருந்தாலும் சரி, மாநிலங்களுக்கு உரிமம் கொடுக்கின்ற
வகையிலே ஏடுத்தாலும் சரி, அவர்கள் தான் முன் நின்று செய்ய
வேண்டுமே தவிர மாநில அரசை குற்றம் சொல்வதில் எந்தவித
பயனும் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்த வரையில் மைய அரசின்
தொழிற் கொள்கை மாநிலங்களின் தொழில் வளர்ச்சியை
தடுப்பதாகத்தான் இருக்கிறது என்பதை நான் கோடிட்டுச்
சொல்ல விரும்புகிறேன். தொழில் துறையை வளர்க்க வேண்டும்
என்று சொன்னால் தொழில் முதலீடும் மின்சாரமும்,
போக்குவரத்தும் சிறப்பாக அமைய வேண்டும். இன்றைக்கு
தொழில் முதலீட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு
தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்
றக் கழகம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், மத்திய
அரசின் முதலீடுகள் போன்ற பல வகைகளிலும் முதலீடு
களைப் போட்டு அரசு சிறப்பாக செயலாற்றிக்கொண்டிருக்
கிறது. அந்த வகையில் மத்திய அரசின் முதலீடு தமிழ்நாட்
டில் அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன். மின்சாரத்தைப் பொறுத்த வரையில் தமிழகத்தில்
எவ்வளவு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை
அனைவரும் அறிவார்கள். மின் துறையில் பற்றாக் குறை
மாநிலமாக இருந்தாலும் புதிய திட்டங்களைப் போட்டு,
அவைகளைச் சிறப்பாக செயல்படுத்தியதால் இந்த அரசு
பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் பார்க்கிற
போது மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கும் பெரும்
அனல் மின் நிலையங்களான நெய்வேலி, கல்பாக்கம்,
போன்ற நிலையங்களில் உற்பத்தி ஆகக் கூடிய முழு மின்



1987 ஏப்ரல் 24] [திரு. க. அன்பழகன்]

சாரத்தையும் தமிழகத்திற்கு தருவார்களேயானால், தமிழகம்
மின் வளர்ச்சியில் சிறப்பாக முன்னேற்றம் அடையும். அதே
நேரத்தில் தமிழகத்தில் அனல் மின் நிலையங்களையும், அணு
மின் நிலையங்களையும் துவங்க மத்திய அரசு உதவிட வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில் மாண்பு
மிகு முருகானந்தம் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொன்
னார்கள். ஏதோ ஓசூர் பகுதியிலே தொழிலை துவங்குவதற்கு
ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தித் தரவில்லை என்று குறை
பட்டுக் கொண்டார்கள். அதே கேள்வியைத்தான் இன்
றைக்கு பல முறை கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய
அரசு செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும்.
எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கரூர்-திண்டுக்கல் அகல
ரயில் பாதை. அதே மாதிரி தமிழ்நாட்டில் இருக்கிற மீட்டர்
கேஜ் ரயில் பாதைகளையெல்லாம் அகல ரயில்பாதையாக
மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்
கிறது. இப்படிப்பட்ட காரியங்களை மத்திய அரசு செய்து
தருமானால் தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு
அது ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில் மத்திய அரசினுடைய
தொழில் கொள்கை தமிழகத்திற்கு எந்த அளவிற்கு பாதிப்பை
ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல
விரும்புகிறேன். மத்திய அரசு தொழில்களுக்கு உதவி செய்
வதில் புதிய தொழில்கள் தொடங்குவதானாலும் சரி,
தொடங்கப்பட்டிருக்கிற தொழில்களுக்கு சலுகை அளிப்பதா
னாலும் சரி ஒரு சில கொள்கைகளை வைத்திருக்கிறது. பின்
தங்கிய மாவட்டம் என்றும், தொழிலே இல்லாத மாவட்டம்
என்றும் அதாவது ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட் என்று
பகுதிகள் இருந்தால்தான் சலுகை என்று வைத்திருக்கிறது.
இந்தக் கொள்கையின் காரணமாக தமிழகம் எந்த அளவுக்கு
பாதித்து இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.
எந்த தொழிலும் இல்லாத மாவட்டத்தில் தான் மைய அர
சின் மானிய உதவித் தொகையுடன் புதிய தொழில் துவங்க
தகுதியான இடம் என்று மைய அரசு இன்றைக்கு சொல்லிக்
கொண்டிருக்கிறது. அதிலே பல கேட்டகரிகளைப் பிரித்து
உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். 30 கோடி
ரூபாய்க்கு மேல் முதலீட்டில் ஏதாவது ஒரு தொழில் மாவட்
டத்தில் அமைக்கப்பட்டிருக்குமானால் அந்தப் பகுதியில் மேலும்
தொழில் நடத்துவதற்கு மத்திய அரசின் மானியம்
கிடையாது. அந்த வகையில் பார்க்கிறபோது எங்களுடைய
வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை பகுதியில் பெல்
கம்பெனி இருக்கிறது. ஏறத்தாழ 30 கோடி ரூபாய் அளவிற்கு
முதலீடு போடப்பட்டு இன்றைக்கு அது நடந்து வருகிறது.
அந்தப் பகுதியில் புதியதாக தொழிலைத் துவங்க வேண்டுமென்
றால் அதற்கு மத்திய அரசு மானியம் கிடைக்காது. இப்படிப்
பட்ட இக்கட்டான சூழ்நிலை இருப்பதை இந்த நேரத்தில்

நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதே நேரத்தில் மாவட்டத்தில் ஏதோ ஒரு இடத்தில் தொழிலை ஆரம்பித்து விட்டால் அந்த மாவட்டம் வளம் பெற்றுவிடும் என்று சொல்லிவிட முடியாது. ஒரு மாவட்டத்தில் 30 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு இருக்குமானால் அதற்கு சப்சிடி இல்லையென்று சொல்கிறபோது என்னுடைய தொகுதி எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இரண்டு தாலுக்காக்கள் இருக்கின்றன. வாணியம்பாடி தாலுக்காவில் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அதுவும் சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலைக்கு அருகில் இருக்கிறது. ஜோலார்பேட்டை ரெயில் நிலையத்திற்கும் அந்த இடத்திற்கும் 5 கி.மீ. தூரம் தான். பக்கத்தில் பாலாறு இருக்கிறது. இவைகளைப் பயன்படுத்தி அங்கே புதியதாக சிப்காட் காம்ப்ளெக்ஸ் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. ஆனால் மத்திய அரசின் இந்த கொள்கை காரணமாக ஏற்கனவே அந்தப் பகுதியில் தோல் தொழிற்சாலைகள் இருக்கிற காரணத்தால், 30 கோடி ரூபாய்க்கு அதிகமாக முதலீடு போடப்பட்டிருக்கிற காரணத்தால் அங்கே தொழில் துவங்கினால் மானியம் கிடைக்காது என்று தெரிவித்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். மானியம் கொடுக்கவில்லையென்றால் எப்படி புதிய தொழிலைத் துவங்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவேதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொழில் துறையைப் பொறுத்த வரையில் பின் தங்கிய பகுதியாக அறிவிப்பதென்றாலும், தொழிலே இல்லாத மாவட்டமாக அறிவிக்கிற திட்டமாக இருந்தாலும், தாலுகா அளவிலே, ஒன்றிய அளவிலே செயல்படுத்தினால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மிக சிறப்பானதாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய அரசு அனுமதி தருகிற விஷயத்தில் மிக விரைவாக தருகிற வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் வேளாண்மையை அடிப்படையாக கொண்டு விவசாயிகளின் பொருளாதாரத்தை முன்னேற்றுகிற வகையிலும், அவர்களுக்கு வாழ்வளிக்கிற வகையிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற தொழிலாக இன்றைக்கு சர்க்கரைத் தொழில் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1976-ம் ஆண்டில் 16 சர்க்கரை ஆலைகள்தான் இருந்தன. ஆனால் இன்றைக்கு 25 சர்க்கரை



ஆலைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்து 12 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அவற்றிற்கு அனுமதி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு அனுமதியளிக்க வேண்டும். அதே நேரத்தில் ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தவும் மத்திய அரசு உடனடியாக அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கரும்பு விலையைப் பொறுத்தவரையில் என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கரும்பிற்கு விலை நிர்ணயிக்கிற போது மத்திய அரசு இந்திய அளவில் விலை நிர்ணயம் செய்கிறார்கள். 8.5 சதவீதம் சத்து என்ற அடிப்படையில் கரும்பின் விலையை மத்திய அரசு நிர்ணயித்து இருக்கிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் கரும்புசத்தின் திறனை ஒப்பிட்டு அதை அதிகப்படுத்தித் தருவதற்கு உத்தரவிட்டு அதற்கு 200 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்களுக்காக புரட்சித் தலைவர் அரசு எவ்வளவோ சலுகைகளைச் செய்திருக்கிறது. இந்த வகையில் நிர்ணயிக்கப்படுகிற தொகை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாமல் இருப்பதால் அதிக விலை கொடுக்க வேண்டும். இந்தியாவில் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கிறது. உற்பத்தித் திறனும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அந்த விலை கட்டுப்படியாகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறதால் கட்டுப்படியாகாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே 250 ரூபாயாகவாவது இதனை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சர்க்கரைத் தொழில் வளர்ச்சி பெறும். அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் அரைவை செய்கிற கரும்பிற்கு டன் ஒன்றிற்கு 5 ரூபாய் செஸ் வசூலிக்கப்படுகிறது. அப்படி பெறுகிற அந்த வரிப்பணம் கரும்பு வளர்ச்சி ஆராய்ச்சி சம்பந்தமாகவும், சர்க்கரை ஆலைப்பகுதிகளில் புதியதாக சாலைகள் போடுவதற்கும், போடப்பட்டிருக்கிற சாலைகளைப் பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டிலே இரண்டு கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான தொகையாக இருக்கிறது. திருப்பத்தூர் சர்க்கரை ஆலைப் பகுதிகளைப் பொறுத்தவரையில் பல சாலைகள் அனுமதி எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஒதுக்கப்படுகிற தொகை குறைவாக இருப்பதால் அதனை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எவ்வளவோ சிறப்பான பணிகளை நம்முடைய அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது.

[திரு. தி. அன்பழகன்] [1987 ஏப்ரல் 24

(பிற்பகல் 12-20)

சேலம் கஞ்சமலைப் பகுதியிலும், திருவண்ணாமலைப் பகுதியிலே கவுந்தி மலை, வேதியப்பன்மலை ஆகிய 2 மலைப் பகுதிகளிலும் இரும்புக் கனி இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை வெட்டி எடுப்பதற்கு மத்திய அரசு அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் செவ்வாத்தூர் என்ற பகுதியில் வெர்மகொலைட் என்னும் கனிமம் வெட்டி எடுக்கப்படுகிறது. இன்றைக்கு உலகத்திலேயே தரம் வாய்ந்த வெர்மகொலைட் என்னும் கனிமம் அங்கே கிடைத்துக் கொண்டு இருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் முதன் முதலாக அந்தப் பகுதியிலே அந்த வேலையைத் தொடங்குகிறபோது 1,100 அடி ஆழத்தில் துளையைப் போட்டு, அதிலே என்னென்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து ஒரு விவரமான அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். மேலே, வெர்மகொலைட் என்ற கனிமமும், மத்தியிலே அபடைட் என்ற பொருளும், அதற்குக் கீழே இரும்பும் செம்பும் கந்தகமும் கிடைக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அங்கே வெர்மகொலைட் என்ற கனிமம் மட்டும்தான் வெட்டி எடுக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு கொண்டிருக்கிறது. எனவே அங்கே கிடைப்பதாக சொல்லப்படுகின்ற அந்த அபடைட் மற்றும் இரும்பு போன்ற தாதுக்களையும் வெட்டி எடுப்பதற்கு, இந்தத் திட்டத்தை சற்று விரிவுபடுத்தி சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்று சர்க்கரை ஆலைகள், திருப்பத்தூர், ஆம்பூர், வேலூர் போன்ற பகுதிகளில் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அங்கு உற்பத்தி ஆகின்ற கரும்புச் சக்கையிலிருந்து ஒரு காகித தொழிற்சாலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் மாவட்டத்திலேயே பிற்பட்ட பகுதியாக இருக்கிற நாட்றாம்பள்ளியில் இந்த காகித தொழிற்சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நம்முடைய பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்கள், அண்ணா மாவட்டத்திலே இருக்கிற வேடசந்தூர் பகுதியில் உள்ள பாளையம் என்ற பகுதியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமாக பல கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்கள், பல முறை பேசியும் இருக்கிறார்கள். அங்கே 20 கோடி ரூபாய்ச் செலவில் அந்த ஆலையை அமைத்துத் தரவேண்டும் என்று 1981-ம் ஆண்டிலேயே முடிவு செய்யப்பட்டு, மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பி



1987 ஏப்ரல் 24] [திரு. தி. அன்பழகன்]

பட்டு இருக்கிறது., ஆனால் அங்கேயிருக்கிற ஒரு தனியார் நிறு
வனம் அதற்கு ஆட்சேபனை தெரிவித்ததன் காரணமாக,
இன்றைய வரையிலும், அது செயல்படுத்தப்படாமல் இருக்
கிறது. இந்தியன் சிமெண்ட் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் கூட, அங்கே
அரசுத் துறை பேக்டரிக்கு உரிய சுண்ணாம்புக்கல் இருக்கிறது
என்று சர்டிபிகேட் செய்திருக்கிறது. அது மட்டுமல்லாமல்,
ஈரச் சுண்ணாம்பு இருக்கிற காரணத்தாலேதான், பல சிமெண்ட
ஆலைகள் நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால்
இந்த வேடசந்தூர் பகுதியைப் பொறுத்தவரையில் ஒரு
சிறந்த, சிறப்பு வாய்ந்த தன்மையைப் பெற்று இருக்கிற கார
ணத்தால், அங்கே சிமெண்ட் ஆலை தொடங்கப்பட்டால் நிச்ச
யமாக அது லாபத்திலே நடக்கும். ஆகவே உடனடியாக அதற்கு
அனுமதி தந்து, அந்தப் பகுதியிலே சிமெண்ட் ஆலை உருவாக்கு
வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு
உடனடியாக அனுமதி தரவேண்டும் என்று சொல்லி, இந்தத்
தொழிற் துறையைப் பொறுத்த வரையில் மிகச் சிறப்பாக
இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, TAMIN பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தத்
தொழிற் துறையில் ஒரு சிறப்பான அம்சத்தைப் பெற்று,
மற்றவர்களுக்கு உதாரணமாகச் சொல்லுகின்ற அளவிற்கு,
ஒரு மாதிரி நிறுவனமாக அது செயல்பட்டுக் கொண்டு இருக்
கிறது. 6 ஆண்டுகளுக்கு முன்பு 72 லட்சம் ரூபாய் மூலதனத்தில்
ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் அளவிற்கு
நிகர லாபத்தைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால்,
எந்த அளவிற்கு சிறப்பாக TAMIN நிறுவனம் செயல்பட்டுக்
கொண்டு இருக்கிறது என்பதை இங்கே நான் எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். அதனுடைய அடிப்படையிலேதான் தமிழ்
நாட்டில் கிடைக்கிற உயர்தர கனிமங்களைக் கொண்டு ஜப்பா
னிய நிறுவனம் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு டாய
லோடு கூட்டு சேர்ந்து, இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு
இருக்கிறது. முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்
பட்ட தொழிற்சாலைகளை அமைத்து, தமிழகத்திற்கு மேலும்
பெருமை சேர்க்க வேண்டும் என்றும், இப்படிப்பட்ட நிறு
வனங்களைத் தொடங்கி, தொழிற்துறை வளர்ச்சிக்கு நீங்கள்
சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று சொல்லி, வாய்ப்பு
அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி
விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின்கீழ் நிதி
ஒதுக்கீடு செய்வதற்கு முன்பாக, இந்தத் துறை கடந்த காலத்
திலே ஆற்றிய பணிகளையும், ஆற்றத் தவறிய பணிகளையும்

எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளையும் என்னுடைய பேச்சின் மையமாக வைத்து, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில எண்ணங்களை இந்த மன்றத்தில் தெரிவித்திட விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே, விவசாயிகள் கடுமையான பஞ்சத்திற்கு ஆட்பட்டு, விவசாயக் கூலிகளுக்குக் கூட வேலை கிடைக்காத அவல நிலைக்கு அவர்கள் ஆட்பட்டிருக்கிறார்கள். காவிரிப் படுகை கூட வறண்டு போன இந்த சூழ்நிலையில் விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய மக்கள் கூட வேலையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருப்பது அவலமான கொடுமையாகும்.

அனல், புனல் மற்றும் அணு மின் நிலையங்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம், தமிழகத்தில் உள்ள விவசாயத் துறையானாலும் தொழிற் துறையானாலும் அவற்றிற்குப் போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தாலே தொழில் வளர்ச்சி என்பது இன்றைக்கு முடக்கப்பட்டு இருக்கின்ற இந்த நிலைமையில், தமிழகத்திலே தொழில் வளர்ச்சி ஏற்படுவது என்பது, தமிழக அரசினுடைய தொடர்ந்த முயற்சியாலும், மத்திய அரசு தொடர்ந்து செய்கின்ற ஆதரவினாலும்தான், தமிழகத்திலே நல்லதோர் தொழில் வளர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியும்.

இன்றைக்குப் புள்ளி விவரங்களைப் பொறுத்த மட்டில் தமிழக அரசு எந்த இடத்திலே, அகில இந்திய அளவில் தொழில் வளர்ச்சியிலே இருக்கிறது என்பது ஒரு கேள்விக் குறியாக ஆகும். மத்திய அமைச்சர்கள் தமிழகத்திற்கு வருகின்ற நேரத்திலே யெல்லாம் தமிழகம் தொழில் வளர்ச்சியிலே பின் தங்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் தமிழக அரசு முன்னேறிய மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாக இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். எனவே இந்தப் புள்ளி விவரத்தைப் பற்றி நான் கவலைப்பட தயாராக இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகம் தொழில் துறையில் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்பதை மட்டும் இங்கே நான் தெரிவித்திட விரும்புகிறேன். தமிழக அரசு தொழில் வளர்ச்சியை கண்ணுங்கருத்துமாகப் பார்த்திட வேண்டும். ஆனால் தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கைகளை கடந்த காலத்திலே பார்த்தீர்களேயானால் Welfare Schemes என்கிற மக்கள் நலத் திட்டங்களுக்காகத் தான் முக்கியத்துவம் கொடுத்து தொழில் வளர்ச்சி என்பது போதுமான அளவிற்கு ஏற்பாடு செய்வதற்கான நிதி ஒதுக்கத்தை கடந்த காலத்திலே தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கைகளிலே என்னால் பார்க்க இயலவில்லை. தமிழக அரசு சொல்லிவிடக் கூடும்; நாம் சத்துணவு போடுகிறோம். சத்துணவு போடுகின்ற ஒரு நல்ல காரியமே தமிழ்நாட்டிற்குச் செய்கின்ற ஒரு நிரந்தர நல்ல காரியம் ஆகும்.



அது ஒன்றே போதும் என்று தமிழக அரசு இன்றைக்கு எண்ணிட கூடும். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில், இந்தச் சந்தர் பத்திலே அரசுக்கு ஆலோசனையாக தெரிவிப்பது எல்லாம், ச துணவு என்பது ஒரு நிரந்தரப் பரிகாரமாகி விடாது. என்றைக் அனைவருக்கும் வேலைவாய்ப்பு, அனைவரும் வாங்குகின்ற தி னைப் பெற்றிருக்கிறார்களோ அன்றைக்குத்தான் தமிழக மக்கள் சுபிட்ச நிலையை அடைந்து இருக்கிறார்கள். அரசும் ஆற் வேண்டிய கடமையை முறையாகச் செய்திருக்கிறது என்று நம் மாலே கருதப்படும். ஆனால், இடைக்காலத்திலே சத்துணவு என்பது ஒரு தற்காலிக பரிகாரமே அல்லாமல், அதையே நிரந் தரப் பரிகாரமாக அரசு எண்ணிவிடக் கூடாது என்று நான் எச் சரிக்க விரும்புகிறேன். சமீபத்திலே கூட சிறந்த வழக்கறிஞர் என்று கருதப்படும் திரு. பல்கிவாலா அவர்கள் சத்துணவு என்பது வறுமையை வளர்க்கும் திட்டமேயல்லாமல் வறுமையை ஒழிக்கும் திட்டமல்ல என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சத்துண வைப் போட்டுக் கொண்டே இருப்போமேயானால் வறுமை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றுதான் பொருள். சத்துணவுத் திட்டத்தை அதிகமாக நாம் விஸ்தரித்து கொண்டே போவோமே யானால் வறுமையும் வியாபித்துக்கொண்டிருக்கிறது என்றுதான் பொருள்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஒரு நிரந்தரமான பரிகாரம் ஆகாது என்று திரு. பல்கிவாலா சொன்ன கருத்துக்களையெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சத்துணவு போடுவதை வேண்டாம் என்று சொல்கிறார்களா அல்லது போடலாம் என்று கூறுகிறார்களா ?

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கவனமாகத்தான் என்னுடைய வாதத்தை மன்றத்திலே எடுத்து வைக்கிறேன். அரசுக்குக் கவனப்படுத்துகிறேன். சத்துணவை நான் மறுக்கவில்லை. ஆனால் அதை அரசு நிரந்தரப் பரிகாரமாக எண்ணிவிடக் கூடாது. தற்காலிக பரிகாரம் என்ற அளவிலேதான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற பொருள்படத்தான் நான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே அந்த அடிப்படையில், குடை கூட நிழல் தருகிறது. ஆனால் குடை நிழல் தருகிறதே என்பதற்காக, குடையிலே குடித்தனம் நடத்திவிட முடியாது. எனவே, சத்துணவு என்பது தற்காலிகப் பரிகாரமாகத்தான் இருக்கிறது என்பதற்காக சத்துணவையே நம்பிக்கொண்டு தொழில் வளர்ச்சியை இந்த அரசு கைவிட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் எச்சரிக்கையாக ஒரு அபாய அறிவிப்பாக எதிர்காலத்திலே தமிழகத்தினுடைய பொருளாதாரம் சீர்குலைந்து போய்விடக்கூடாது என்பதற்காக, எதிர்காலத்திலே வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் தத்தளித்துவிடக் கூடாது என்பதற்காக, எச்சரிக்கையாக இந்த நேரத்திலே நான் தெரிவித்திட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்
கள் இந்த நாட்டிலே கல்வி வளர்ச்சிக்கு எல்லாவிதமான வாய்ப்பு
கள் தந்ததற்குப் பிறகும் பெரும்பான்மையானவர்கள் பள்ளிக்கு
செல்லாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுடைய வயிற்றுப்
பசிக்கு சோறிடவில்லை என்பதைத்தான் குறிப்பிட்டுக் காட்டி
இருக்கிறார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா கூட அவர்கள்
உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தருவது
நம்முடைய கோரிக்கைகளாக இருக்கவேண்டுமென்று சொன்னார்
கள். இன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித்
தலைவர் அவர்கள் இதனையெல்லாம் கருத்திலே கொண்டுதான்
நம்முடைய நாட்டிலே ஒரு நல்ல அறிவுள்ள சமுதாயம் உருவாக
வேண்டுமென்பதற்காகவும் வளமுள்ளவர்களாக எதிர்காலத்தில்
சந்ததி உருவாக வேண்டுமென்பதற்காகவும் இந்தச் சத்துணவுத்
திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இதை நிரந்தரப்
பரிகாரம் ஆகாது என்று எந்தவிதத்திலே மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை
பெரியார் ஆனாலும், என்னுடைய அரசியல் இதய தெய்வம்
அண்ணா அவர்கள் ஆனாலும் உணவு வழங்க வேண்டுமென்று
சொன்னது தனி மனிதன் வாங்குகிற சக்தியை பெறவேண்டும்
என்கின்ற பொருளிலேதான் தெரிவித்து இருக்கக்கூடும். எனவே,
அரசு நிரந்தரமாக உணவினை வழங்கிக்கொண்டு வரவேண்டு
மென்கின்ற பொருளில் நிச்சயமாக கருத்துக்களை அவர்கள்
தெரிவித்து இருக்க முடியாது என்று நான் திட்டவட்டமாகத்
தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

எனவே, அந்த அடிப்படையிலே தான் இதை ஒரு நிரந்தர
ஏற்பாடாக தயவுசெய்து கருத வேண்டாம். இது இருக்கட்டும்,
நான் மறுக்கவில்லை. ஆனால் இதே நிலையில், தொழில்
வளர்ச்சி பெருகி வாங்குகின்ற சக்தி மக்களுக்கு அதிகப்பட வேண்
டும் என்பதுதான் என்னுடைய ஆலோசனையாக இந்த மன்றத்
திலே நான் வைக்க விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி என்பது தமிழக அரசால்
மட்டுமே செய்துவிட முடியும் என்று நான் கருதவில்லை. மாறாக
மத்திய அரசு முதலீடு தமிழகத்தைப் பொறுத்தவரையில் எவ்
வளவு என்பதை தமிழக அரசு இங்கே தெரிவிக்கவேண்டும்.
கொள்கை குறிப்பில் கண்டுள்ளபடி இன்றைக்கு மத்திய அரசி
னுடைய முதலீடாக 2 தொழிற்சாலைகள் நிறுவ இருக்கிறார்கள்.
ஒரு தொழிற்சாலை இந்துஸ்தான் போட்டோ பிலிம் என்ற
தொழிற்சாலையை ஒட்டி அடுத்து நிறுவ இருக்கிற பாலியஸ்டர்
'எக்ஸ்' கதிர் படச் சுருள் தயாரிப்பு யூனிட் ரூ. 168.12 கோடி





செலவில் அமைய இருக்கின்ற மத்திய அரசினுடைய முதலீடாகும்.
அடுத்து மணலி எண்ணை சுத்தி கரிப்பு ஆலைக்கு அருகில் உள்ள
'அரோமாட்டிக் சேர்மங்கள்' தயாரிப்புத் தொழிற்சாலையாகும்.
இந்த இரண்டு மத்திய அரசின் முதலீட்டைத் தவிர வேறு
முதலீடு பற்றி இந்த கொள்கை குறிப்பில் குறிப்பிடப்படவில்லை.
எனவே தான் தமிழக அரசைப் பொறுத்த வரையில் நிச்சயமாக
இப்படிப்பட்ட காரியங்களில் எங்களுடைய ஒத்துழைப்பு என்பது
நிச்சயமாக இருக்கும். தமிழக மக்கள் உரிமைக்காகவும், தமிழக
அரசினுடைய சுயாட்சிக்காகவும் மத்திய அரசிடம் போராடிப்
பெறவேண்டும் என்பது தான் எங்களுடைய வேண்டுகோள்
ஆகும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய
அரசு மற்ற மாநிலங்களுக்கு முதலீடு செய்து இருக்கின்ற விகி
தாச்சாரத்தையும், தமிழக அரசுக்கு முதலீடு செய்து இருக்கின்ற
விகிதாச்சாரத்தையும் கணநேரம் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்
களானால் தமிழகம் எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டு இருக்கி
றது என்பது உங்களுக்கு நன்கு தெரியும். எனவே, தமிழக
அரசு, கேட்டுக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லுவதை
விட்டு மாறாக ஒரு படி உயர சென்று வற்புறுத்தி உரிமைக்காக
வாதாடி, போராடி நம்முடைய உரிமையை பெற்று ஆகவேண்டும்
என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே நம்முடைய தொழிற்சாலைகள் ஆரம்பிக்
கின்ற இந்த கால கட்டத்தில் தமிழகத்திலே 'இன்பிரா ஸ்டெக்
சர்' எனகிற தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான இந்த
சூழ்நிலையை நாம் உருவாக்கவேண்டும். அதற்கு மின்சார பற்
றாக்குறை தடையாக இருக்கிறது. மின்சார பற்றாக்குறை
தடையாக இருக்கிறது என்றால் மத்திய அரசு நிர்வகிக்கின்ற
நெய்வேலி அனல் மின் நிலையம், அதேபோல் கல்பாக்கம் அணு
மின் நிலையம், திருநெல்வேலி கூடம் குளத்தில் கட்ட இருக்கின்ற
ஆயிரம் மெகாவாட் சக்தியை கொண்ட அந்த அணு மின் நிலையம்
இவற்றையெல்லாம் மத்திய அரசு சீக்கிரம் செயல்படுத்துவதற்கு
நாம் தூண்டுவதோடு மட்டும் அல்லாமல் அதிலே நம்முடைய
பங்கை அதிகப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபடவேண்டும். கல்
பாக்கம் என்றால் அது மத்திய அரசு நிறுவனம் என்ற காரணத்
தாலே ஒரு குறிப்பிட்ட பங்கை தான் உங்களுக்கு தருகிறோம்
என்று சொல்லுகிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த
வரையில் மின்பற்றாக்குறை என்பது தொழில் வளர்ச்சிக்கு கடு
மையான இடைஞ்சலாக, தடை கற்களாக இருக்கின்ற காரண
தால் மத்திய அரசிடம் வாதாடி நம்முடைய அந்த பங்கை
அதிகப்படுத்துவதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபட
வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 ஏப்ரல் 24

அதேபோல் திருநெல்வேலியில் கூடம் குளத்தில் ஆயிரம் மெகா
வாட் உற்பத்தித்திறன் கொண்ட அந்த அணு மின் நிலையத்தை
சீக்கிரமாக கட்டி முடிப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசிடம்
கேட்டிட வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த அடிப்படையில்தான்
தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை உருவாக்கவேண்டும்.

இன்றைக்கு தமிழக அரசின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள
கொள்கை குறிப்பில் பல்வேறு தமிழக அரசினுடைய திருவனங்
களைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒன்று El
என்கிற எலக்ட்ரானிக் சம்பந்தப்பட்ட உற்பத்தி செய்கின்ற அந்த
பொருட்கள் பற்றிய விவரங்கள் ஆகும். இந்த எல்காட் என்கிற
இந்த நுண் இயல் பொருட்களை பொறுத்த வரையில், தமிழ்நாட்
டில் எல்காட் என்ற நிறுவனம். இந்த தொழிற்சாலைகளை
ஊக்கப்படுத்துவதற்காக, இந்த தொழிற்சாலைகளை உருவாக்கு
வதற்காக அமைக்கப்பட்டு இருந்தாலும் குறிப்பிடத்தக்க எலக்ட்
ரானிக் பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை
தமிழ்நாட்டில் இன்னும் உருவாக்கப்படவில்லை என்று நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நிதி நிலை அறிக்கையில் கூட 16.5 சதவீதமாக
இருந்த விற்பனை வரியை 11.5 சதவீதமாக தமிழக அரசு
குறைத்து இருக்கிறது. அதுபோல உள் நாட்டிலேயே மாநிலத்
தில் உற்பத்தி செய்யக்கூடிய எலக்ட்ரானிக்ஸ் பொருட்களுக்கு
இன்றைக்கு 7 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது.
ஆனாலும் கூட இவ்வளவு நிலைமைகளுக்குப் பின்னால் கூட
இன்றைக்கு 50 சதவீதம் இந்தத் தொழில்கள் மூடப்பட்டிருக்கி
றது என்பதை தான் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு
வர விரும்புகிறேன். இதற்கு என்ன காரணம்? அண்டை மாநிலங்
களான ஆந்திரா, கேரளாவில் 4 சதவீதம்தான் விற்பனை வரியாக
வசூலிக்கப்படுகிறது. கர்நாடகாவில் ஒரு சதவீதம் தான் விற்
பனை வரியாக வசூலிக்கப்படுகிறது. அண்டை மாநிலமான
பாண்டிச்சேரியில் கூட எந்த விற்பனை வரியும் வசூலிக்கப்பட
வில்லை. இந்த நிலையில் தான் யாரும் எலக்ட்ரானிக் குட்ஸ்
வாங்கவேண்டுமென்று சொன்னால், அண்டை மாநிலத்திலிருந்து
தான் வாங்குகிறார்களேயல்லாமல், தமிழகத்திலிருந்து யாரும்
வாங்குவதில்லை. இந்த விற்பனை வரியின் காரணமாக, அரசி
னுடைய கொள்கையின் காரணமாக, இந்த எலக்ட்ரானிக்ஸ்
குட்ஸ் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள். தமிழ்நாட்டில்
இன்றைக்கு இருந்த தொழிற்சாலைகள் மூடிப்போய் இருக்கின்றன.
அல்லது புதிய தொழிற்சாலைகள் உருவாவதற்கான சூழ்நிலைக்கு
இடம் இல்லை. எனவே இந்தக் கட்டத்தில் தான் SIRATA
என்கின்ற South Indian Radio Trade Association என்கின்ற அந்த
நிறுவனத்தினுடைய தலைவர் கருத்து தெரிவிக்கின்ற நேரத்தில்,
இது மற்றைய மாநிலங்களைப் போல் விற்பனை வரி என்பது



1987 ஏப்ரல் 24] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

சதவீதம் குறைக்கப்படவேண்டும். இந்த மாநிலத்தில் உற்
த்தி செய்யப்படக் கூடிய அந்த எலக்ட்ரானிக் குட்ஸ் என்கின்ற
அந்தப் பொருட்களுக்கு எல்லாம் ஒரு சதவீத விற்பனை வரி
போட வேண்டும். அத்தோடு எந்தவிதமான தொல்லைகளும்
இல்லாமல், மின்சாரம் வழங்கவேண்டும். விற்பனை வரிக்கு சர்
சார்ஜ் போடக் கூடாது என்ற சலுகைகளை தமிழக அரசு வழங்கு
மேயானால், இந்த எலக்ட்ரானிக் என்கின்ற ஆலைகள் தமிழகத்
திலே வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இவற்றையெல்லாம்
தமிழக அரசு செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில்
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழகத்தைப் பொறுத்தவரையில், இங்கே தொழிற்
சாலைகள் தொடங்காததற்கு காரணம் என்ன என்பதை ஆழ்ந்து
சிந்திக்கவேண்டும். தமிழகத்தில் ஏன் அதிகமாக தொழில் துவங்க
வர மறுக்கிறார்கள்? அதற்கு என்ன காரணம்? மராட்டிய
மாநிலத்தில் தொழில் துவங்குவோர் அதிகம் பேர் செல்கிறார்கள்.
தொழில் முனைவோர்கள் அதிகம் செல்கிறார்கள். ஆனால்
தமிழகத்திலே மட்டும் ஏன் அப்படி வரவில்லை? காரணம்,
தமிழகத்தில் நீங்கள் வழங்கக்கூடிய சலுகைகள் போதுமான
அளவிலே இல்லை. விற்பனை வரியானாலும், மற்ற சலுகை
களானாலும், மராட்டியத்திலே வழங்குவது போல் இங்கே வழங்கு
வதில்லை. ஒருவர் மராட்டிய மாநிலத்திலே தொழில் துவங்கு
வாரேயானால், அவருக்கு பல்வேறு சலுகைகள் இருக்கின்றன.
விற்பனை வரிச் சலுகை 9 ஆண்டுக் காலத்திற்கு இருக்கிறது.
அதுபோன்று அந்த மாநிலமே சப்சிடி தருகிறது. அதுபோன்று
மத்திய அரசும் சப்சிடி தருகிறது. பல்வேறு சலுகைகள் கொடுக்
கிறது. மராட்டிய மாநிலத்திலே பல்வேறு சலுகைகள் கிடைக்
கிறது. மராட்டிய அரசு என்ன வழங்குகிறது, மத்திய அரசு
என்ன கொடுக்கின்ற மானியத்தைத்தான் கொடுக்கிறது. தமிழக அரசு
கொடுக்கின்ற மானியம் எதுவும் கொடுப்பதில்லை. மாறாக Interest Free
Sales Tax Loans என்கின்ற வட்டியில்லாத விற்பனை வரிக்கடனை
மட்டும் நீங்கள் வழங்குகிறீர்கள். எனவே தான் தொழில் தொடங்
குவோர் மராட்டிய மாநிலத்தில் தொடங்குவதின் மூலமாக லாபம்
அடைகின்ற நிலை இருக்கிறது. ஆனால் தமிழகத்திலிருந்து எந்தவித
மான சலுகைகளும் இல்லாத காரணத்தால்தான் தொழில்கள்
நசித்துக்கொண்டே போகிறது என்பதை உங்களுடைய கவனத்
திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

அடுத்து அரசினுடைய ஏஜென்சி என்று சொல்கின்ற TIDCO,
SIPCOT போன்ற அந்த நிறுவனங்களைப் பற்றி சில கருத்துக்
களைத் தெரிவிக்க விரும்புகிறேன். TIIC போன்ற முதலீட்டு
நிறுவனங்கள் இன்றைக்கு பல்வேறு தொழில்களுக்கு முதலீடு
செய்திருக்கிறது. அதிலே ஒரு நிறுவனம் ' குமரி கெமிக்கல்ஸ்
அண்டு மினரல்ஸ் ' என்ற ஒரு நிறுவனமாகும். அதிலே, கடன்
கேட்ட நேரத்தில் ரு. 5 இலட்சம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1987 ஏப்ரல் 24

கிறது. ஆனால் ரூ. 20,000 மட்டும் அந்த குமரி ஏஜென்சியிலிருந்து பெறப்பட்டது. ரூ. 1½ இலட்சத்தில் அந்தக் கட்டிடம் உருவாக்கப்பட்டது. Public Health Department என்கின்ற பொதுச் சுகாதாரத்துறை இறுதியிலே வந்து, அதைக் கட்டக் கூடாது என்றவுடன் ரூ. 1½ இலட்ச முதலீட்டோடு அந்தக் கட்டிடம் அப்படியே நின்று கொண்டு இருக்கிறது. இதிலே முதலீடு செய்தவர்கள் எந்த நிலைக்கு ஆளாவார்கள்? ஏன் இந்தச் சங்கடம்? ஏன் ஏற்கனவே இந்த TIIC நிறுவனம் இப்படி Public Health Department சரி என்று சொன்னால்தான் நாங்கள் கடன் வழங்குவோம் என்று முன்பே சொல்லியிருந்தால் இந்த நிலைமைகள் உருவாகியிருக்காது. இதனால் சாதாரணமாக சிறு தொழில் தொடங்கக் கூடியவர்கள் எல்லாம் இந்த அளவிற்கு அவலமான சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை அருள்கூர்ந்து இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

TIDCO தொழில் வளர்ச்சிக் கழகம்தான் இன்றைக்குப் பல்வேறு தொழில்களை நடத்திக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 45 தொழில் நிறுவனங்களை இது நடத்தினாலும், 7 பொது நிறுவனங்களையும், 27 கூட்டு நிறுவனங்களையும் இன்றைக்கு நிர்வகித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் 12 நிறுவனங்கள் தொடங்காமலே இருந்து கொண்டிருக்கிறது. அதிலே முக்கியமான ஒன்று 'டான்செம்' என்கின்ற சிமெண்ட்டை நிர்வகிக்கக் கூடிய நிறுவனமாகும். இந்த 'டான்செம்' என்கின்ற சிமெண்ட் நிறுவனம் அரியலூர், ஆலங்குளம் போன்ற பொது நிறுவனங்களை நிர்வகித்துக்கொண்டிருக்கிறது. அரியலூர் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், கடந்த ஆண்டுகூட நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருந்த நிலையில், இந்த ஆண்டு லாபத்தோடு இயங்கி வருகின்றது என்று கொள்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சி. ஆனால் இந்த நிறுவனத்திற்கு அருகாமையிலுள்ள அழகப்பன் சிமெண்ட்ஸ்' என்கின்ற ஒரு மினி சிமெண்ட் தொழிற்சாலையை அமைச்சரவர்கள் எல்லாம் கூட திறந்து வைத்திருக்

(பிற்பகல் 12-40)

கிறார்கள். ஆனால் திறந்து வைத்த பின்னால் அதற்கு சுண்ணாம்புக்கல் கிடைக்கக்கூடிய நிலம் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். அதற்கு பின்னால் 28-5-1986 ஆம் நாள் அரசு ஆணை (ஜி.ஓ. எம்.எஸ். நம். 921)-யின்படி, இந்த சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கக்கூடிய அந்த நிலத்தை அரசே பறிமுதல் செய்திருக்கிறது. கொடுக்க மறுத்திருக்கிறது. அதற்கு பின்னாலே அந்த உரிமம் ரத்து செய்யப்பட்டு மத்திய அரசிற்கு தமிழக அரசின் சார்பாக கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. தொடங்கிய ஒரு மினி சிமெண்ட் ஆலையை, அமைச்சர் திறந்து வைத்துவிட்டு அதற்கு பின்னால், அதற்கு இந்தச் சலுகைகள் வழங்கவில்லை என்று சொன்னால், அதிலே முதலீடு செய்பவர்கள், சாதாரண தொழில் தொடங்க முனைபவர்களுடைய நிலை என்னாகும் என்பதை அருள்



1987 ஏப்ரல் 24] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

கூர்ந்து இந்த அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். தரணி என்ற மினி சிமெண்ட் ஆலை 125 ஏக்கர் சுண்ணாம்புக்கல் படிவம் உள்ள நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. டேன் இந்தியா மினி சிமெண்ட் ஆலை அதற்கு 133 ஏக்கர் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு பகுதியினருக்குச் சலுகைகள் காட்டியும் இன்னொரு பகுதியினருக்கு சலுகைகள் காட்டாத சூழ்நிலை ஏற்படுமேயானால் அரசையே சந்தேகிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகாதா என்பதைத்தான் என்னுடைய கேள்வியாக இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்க விரும்புகிறேன். அடுத்து முக்கியமான தொழிற்சாலை. காரைக்குடிக்கு அருகாமையில் கோவிலூரில் டெமல்நாடு கெமிக்கல்ஸ் தொழிற்சாலையாகும். இந்த தொழிற்சாலை 1971 ஆம் ஆண்டு ரூ. 7.65 கோடி முதலீட்டில் துவக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கூட்டு நிறுவனமாகும். அதிலே தமிழக அரசின் பங்கு ரூ. 1.88 கோடியாகும். இப்படி தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் லாபத்திலே தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட விவகாரங்கள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்ற காரணத்தினால் அந்த விவரத்திற்கு நான் செல்ல விரும்பவில்லை. அந்த நிறுவனம் லாபத்தில் ஓடிக்கொண்டு இருக்கின்ற டிட்கோவால் பராமரிக்கப்பட்டிருக்கிற ஒரு நிறுவனம். இன்றைக்கு அது தனியாருக்கு விற்கப்பட்டிருக்கிறது. அந்த தனியார் யார் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த தனியாருக்கு ஏன் விற்கப்படவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? எதற்காக அந்த நிறுவனம் விற்கப்பட வேண்டும் என்பதை தெரிவித்திடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த நிறுவனம் லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்ற அந்த நேரத்தில் இதை ஏன் விற்க வேண்டும்? இது போன்ற விவரங்கள் எல்லாம் 'ASIDE' ஆங்கில பத்திரிகையில் மிகத் தெளிவாக தெரிவித்திருக்கிறார்கள். அது யாருக்கு விற்கப்பட்டிருக்கிறது என்று. அது உடையார் மகன் வெங்கடாசலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஆலை விற்கவேண்டிய அவசியம் என்ன என்பதையும் ஆட்சியிலே உள்ளவர்கள் மக்களுக்கு தெரிவித்தாக வேண்டும். இந்தச் சூழ்நிலையில் இப்படி பொது நிறுவனங்களை லாபத்திலே ஓடிக்கொண்டிருக்கின்ற பொது நிறுவனங்களை விற்கவேண்டிய அவசியம் இல்லை என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே தொழில் பெருகுவதற்கு பல்வேறு திட்டங்களை தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி பெற்றாக வேண்டும். அப்படி பெறவேண்டிய திட்டங்களிலே சேது சமுத்திர திட்டம் ஒன்றாகும். சேது சமுத்திர திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்துவதன் மூலமாக தூத்துக்குடி திட்டத்தை விரிவுபடுத்துவதன் மூலமாக, கரூர்-தூத்துக்குடி திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக தமிழ்நாட்டிலே ஒரு infrastructure—தொழில் தொடங்குவதற்கான முன்னேற்பாடுகள் எல்லாம் இருப்பதாக எண்ணி, தொழில் தொடங்குபவர்கள் இங்கே முன்வருவார்கள். இவற்றையெல்லாம் தமிழக அரசு தொடர்ந்து கேட்டுக்கொண்டு வருகிற

தேவையில்லாமல் இந்த அரசு இதை உடனடியாக பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதோடு இன்றைக்கு எரிபொருள் எல்லாம் மின்சாரமாக இருந்தாலும், பெட்ரோலாக இருந்தாலும், குறைந்து கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் காவேரி படுகையில் நரிமணத்தில், இதுபோன்ற பல இடங்களில் நேச்சுரல் கேஸ் என்ற எரிவாயு இன்றைக்கு கிடைக்கிறது. அவற்றையெல்லாம் நடுத்தர, பெரிய, சிறிய தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்துவதற்கு தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு எச்.பி.ஜே. என்று 1760 கிலோ மீட்டர் நீளம் உள்ள பெரிய பைப்லைன் குஜராத்திலேயிருந்து போட்டு 640 கிலோ மீட்டர் முடியும் தருவாயிலே இருந்துகொண்டிருக்கிறது. எனவே எரிபொருள் மாற்றாக இந்த நேச்சுரல் கேஸ் என்ற இந்த எரி வாயுவை தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையையும் இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழக அரசுக்கு தெரிவித்திட விரும்புகிறேன். அதுபோன்று.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகி விட்டது. அதிகமாக நேரம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : ஸ்பின்னிங் மில் என்கின்ற நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் கடுமையான பாதிப்பிற்கு இன்றைக்கு ஆளாகியிருக்கின்றது. 'சைமா' என்கின்ற அதனுடைய தலைவர் இன்றைக்குக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். நூல் விற்பனையைப் பொறுத்தமட்டில், வடநாட்டைத் தான் நம்பி இருக்கவேண்டியிருக்கிறது. அதிலும் composite mill என்ற வட நாட்டு மில்லைத்தான் நம்பி இருக்கவேண்டியிருக்கிறது. நூலின் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. விலை குறைந்திருக்கிறது. ஆனால் வடநாட்டிலிருந்து பெறக்கூடிய பருத்தியினுடைய விலை ஏறியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், தென்னாட்டில் குறிப்பாக தமிழகத்தில் உள்ள நூற்பாலைகள் எல்லாம் கடுமையான சிக்கலில் இன்றைக்கு மாட்டிக் கொண்டிருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்கு—அந்த நூற்பாலைகள் இந்த தமிழ் நாட்டில் அதிகம்—அந்த ஆலைகளைக் காப்பாற்றி சரியான நிலைக்குக் கொண்டு வர அரசு என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பகுதியைச் சேர்ந்த பாளையத்தில்—தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டது. சிமெண்ட் தொழிற்சாலை தொடங்குவதற்கான ஏற்பாடு எல்லாம் முடிந்து விட்டது என்று தெரிவித்தும், என் தொடர்ந்து பல ஆண்டுகளாக சிமெண்ட்

தொழிற்சாலை அரசின் சார்பாக ஆரம்பிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கவேண்டும். துணை சபாநாயகருக்காகத் தான். எனக்குக் கூட நன்றாகத் தெரியும். அவர்கூட இங்கே பேசி இருக்கிறார்கள். எனவே, பக்கத்திலே செட்டிநாடு சிமென்ட்ஸ் இருக்கிற காரணத்தால் இது தொடங்கப்படவில்லையோ என்ற ஐயம் எல்லோருக்கும் வந்திருக்கிறது. அந்த ஐயத்தைப் போக்கவேண்டிய கடமை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்று மனதார நம்புகிறேன் என்று கருத்துத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கூடலூர் நீ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் ராசாராம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த தொழில் மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் ஒருசிலவற்றை வைத்து, இதை வரவேற்கின்றேன். இங்கே பேசிய நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் முருகானந்தம் அவர்கள் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி குன்றியிருக்கிறது. ஆகவே நீங்கள் எல்லாம் அதற்காக பெரு முயற்சி எடுக்கவேண்டும் என்று தன்னுடைய கருத்தை இங்கே சொன்னார்கள்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்—டிட்கோ, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்—சிப்காட், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் என்ற பல்வேறு நிறுவனங்களை வைத்து, தமிழ்நாட்டில் தொழில் முன்னேறவேண்டும் என்ற உணர்வோடு அதிகாரி பெருமக்களை வைத்துக்கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் பல நல்ல காரியங்களை இந்த நாட்டுக்கு, 10 ஆண்டுக் காலமாக செய்து கொண்டு வந்து இருக்கிறார்கள்.

அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு என்னுடைய வடாற்காடு மாவட்டத்தில் காட்பாடியிலே வெடிமருந்துத் தொழிற்சாலை ஒன்று உருவாக்கி அங்கே 612 பேருக்கு வேலைகொடுத்து, அனைவரும் பாராட்டு கின்ற வகையிலே இன்றைக்கு இலாபகரமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது.

அதேபோன்று ஆசியக் கண்டத்திலேயே இல்லாத ஒன்று, திருச்சி மாவட்டத்திலே கரூருக்குப் பக்கத்திலே இருக்கிற காகிதபுரத்திலே ஒரு மாபெரும் காகிதத் தொழிற்சாலையை நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே உருவாக்கி அது சீராகவும், செம்மையாகவும் நடைபெறுவது இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். 40 ஆண்டுக் கால சுதந்திர இந்தியாவில் தமிழகத்திலேயே எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு 12 சர்க்கரை ஆலை

களை இந்த நாட்டிற்குத் தந்தாகவேண்டும் என்ற உணர்வோடு தமிழக அரசு பல முயற்சிகளை எல்லாம் எடுத்து பரிந்துரை செய்து, அதற்கு வேண்டிய ஆயத்தமான நிலையிலே இன்றைக்கு மத்தியப் பேரரசுக்கு அதை அனுப்பி அவர்களுடைய இசைவைப் பெறுவதற்காக—அது வந்தவுடன் துவக்குவதற்கான அத்தனை ஆயத்தத்தோடு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு அண்டை மாநிலமாக இருந்தாலும், தமிழகமாக இருந்தாலும், பல தனியார் துறையாக இருந்தாலும், அரசுத் துறையாக இருந்தாலும், இலாபம் வருமா வராதா என்ற நிலையிலே சிலர் தொழில் துவக்குகிறார்கள். சில தொழிலில் இலாபமே இல்லாத சூழ்நிலை கூட ஏற்பட்டு விடுகிறது.

இதை நினைவுபடுத்துவதற்கு காரணம், சென்ற ஆண்டு, சட்டப்பேரவை உறுப்பினர் திரு. முருகானந்தம் இங்கு ஒன்றைக் குறிப்பிட்டார். தமிழ்நாடு கனிம வள நிறுவனம் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறதே, அதிலே சொற்ப இலாபங்கள்தான் வருகின்றன. அதற்கு என்னை தலைவராகப் போட்டால் நான் அதிகமான இலாபம் ஈட்டித் தருவேன் என்று போன சட்டமன்றக் கூட்டத்தில், தொழில் மானியத்தில் அவர் சொன்னார்.

(பிற்பகல் 12-50)

ஆக, அதற்குச் சேர்மனாக என்னைப்போட்டால் நான் அதிக லாபம் காட்டுவேன் என்று சொல்லுகிறார் என்றால் தமிழ் நாட்டில் இருக்கிற தொழில் நிறுவனங்கள் எல்லாம் மிகத் திறமையாகச் செயல்படுகின்றன என்றுதான் அர்த்தம். நான் தலைவராக வந்தால் அதிகமான லாபத்தை ஈட்டித் தருவேன் என்று சொல்லுகிற உணர்வு இருக்கிற காரணத்தால்தான் நான் சொல்லுவேன்- தமிழ்நாட்டில் தொழில்கள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதற்கு இதுவே சான்றாகும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம் 75 லட்சம் ரூபாய் முதலீட்டில் துவக்கப்பட்டு இந்த ஆண்டு தேய்மானச் செலவு, நிர்வாகத்திற்கான செலவு எல்லாம் போக ஒரு கோடி ரூபாய் அளவுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டியிருக்கிறது என்றால் தமிழ் நாட்டில் உள்ள தொழில் வளர்ச்சியைப்பற்றி தெரிந்து கொள்ள ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அடிப்படையின் இது அமைந்திருக்கிறது. இப்படி லாபம் வந்திருக்கிறது என்று சொல்லுகிறபோது அதிலே இருக்கிற அதிகாரிகள்—அந்தப் பெருமக்கள் இரவென்றும் பகலென்றும் பாராமல் வேலை செய்கிறார்கள். எங்கள் வடாற்காடு, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் அவர்களுக்காக அலுவலகங்கள் கூட இல்லை. அவர்களெல்லாம் ஆங்காங்கே இருக்கிற குடிசைகளிலிருந்து கொண்டே இரவு



நேரங்களில்கூட காவல் காத்துக் கொண்டு பெர்மிட் வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே இருந்துதான் அந்தக் கற்கள் துறைமுகத்திற்கு வருகின்றன. அந்த அளவுக்குக் கண்ணும் கருத்துமாக அதிகாரிகள் செயல்பட்டு லாபத்தை தமிழக அரசுக்கு ஈட்டித் தந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் அவர்களையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைந்த மூலதனத்தில் நிறைந்த லாபத்தை தந்து கொண்டிருக்கிற நிறுவனமாக தமிழ்நாடு கனிம நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் அதன் தலைவர் மாண்புமிகு அமைச்சர் மற்றும் அதன் அலுவலர்கள் ஆகியோருக்கு சட்டப் பேரவையின் சார்பில் இந்த நேரத்தில் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாரதி பாடினான்—உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று—ஆனால் இன்றைய பாரதியான நமது புரட்சித் தலைவர் அவர்களோ உழவையும் தொழிலையும் ஒன்றாக இணைத்துச் செயல்பட வைத்திருக்கிறார்கள். விவசாயத் துறையையும் தொழில் துறையையும் ஒன்றாக இணைத்து உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்கிற வகையில் ஒரே அமைச்சரை நியமித்து இன்றைக்குப் பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். அருமை நண்பர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைத் தெரிவித்தார். தமிழக அரசு தொழில் துறையில் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்று தம்முடைய வாதத்தில் குறிப்பிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் தமிழகத்தில் கரும்புத் துறையை மட்டும் எடுத்துக் கொண்டால், நாட்டிலேயே முதன்மையான இடத்தை நாம் பெற்றிருக்கிறோம். 1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே தமிழ் நாட்டில் இருந்த சர்க்கரை உற்பத்தி $3\frac{1}{2}$ லட்சம் டன்களாகும். ஆனால் 1987 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 8 லட்சம் டன். அந்த அளவுக்கு 8 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகியிருக்கிறது என்றால்—தமிழ்நாட்டில் இது நல்ல தொழில் வளர்ச்சியைக் காட்டுகிறது என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்.

அதுமட்டுமல்ல, 1977 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்த சர்க்கரை ஆலைகளின் மொத்தம் 19. ஆனால் இன்றைக்கு 1987-ல் தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆக இத்தனையும் சேர்ந்து 25 சர்க்கரை ஆலைகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

[திரு. கடலூர் இ. வி. வேலு] [1987 ஏப்ரல் 24

மேலும் இந்தியாவில் ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், உத்திரப் பிரதேசத்தில் மட்டும் 100 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. மகாராஷ்டிரத்தில் 90 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆந்திரத்தில் 30 சர்க்கரை ஆலைகளும், கருநாடகத்தில் 28 சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் இருப்பதோ 25 சர்க்கரை ஆலைகள்தான். கருநாடகத்தை எடுத்துக் கொண்டால் அங்கே நிலப்பரப்பும் இருக்கிறது, நீர்ப்பரப்பும் இருக்கிறது. அதைப் போலவே ஆந்திரத்தை எடுத்துக் கொண்டாலும் நிலப் பரப்பும் இருக்கிறது. நீர்ப் பரப்பும் இருக்கிறது. கேரளத்தை எடுத்துக் கொண்டால் நீர்ப் பரப்பு இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டிலே நிலப் பரப்பும் குறைவு; நீர்ப்பாசனமும் குறைவு. ஆனால் இறவைப் பாசனத்தின் மூலமாக நிலத்தடி தண்ணீரை வைத்துக் கொண்டுதான் தமிழகம் இந்தியாவிலேயே சர்க்கரை உற்பத்தியில் முன்னணியில் நிற்கிறது. இது தொழில் துறையில் ஏற்பட்டிருக்கிற சாதனை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் உத்திரப் பிரதேசத்தில் ஒரு ஏக்கர் கரும்பு உற்பத்தியானால் அங்கே Recovery rate 2½ டன் சர்க்கரை. 100 ஆலைகளைக் கொண்ட உத்திரப் பிரதேசத்தில் ஒரு ஏக்கருக்கு சர்க்கரை ரெக்கவரி 2½ டன். மகாராட்டிரத்தின் ஒரு ஏக்கர் கரும்பு உற்பத்திக்கு 3 டன் ரெக்கவரி கிடைக்கிறது. ஆனால் சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் தான் ஏக்கருக்கு 4 டன் ரெக்கவரி கிடைக்கிறது என்றால் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே சர்க்கரைத் தொழிலில் முன்னணியில் இருக்கிறது என்பது புரியும். இதற்குக் காரணம் புரட்சித் தலைவர் அரசின் தொழில் கொள்கை—அமைச்சருடைய அக்கறை, அமைச்சருடைய வழிகாட்டுதல் அதிகாரிகளுடைய ஆலோசனைகள், இவைகளுக்கெல்லாம் மேலாக தமிழகத்தில் இருக்கின்ற—அயராது உழைக்கிற ஏழை எளிய விவசாய மக்கள்—என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஓராண்டுக்கு 5 லட்சம் டன் சர்க்கரை இருந்தாலே போதும். ஆனால் இன்றைக்கு நாம் 8 லட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்கிறோம். அதாவது 3 லட்சம் டன் அளவுக்கு அதிகமாகச் சர்க்கரையை உற்பத்தி செய்கிறோம். இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஓரளவிற்கு குறிப்பிட்ட அளவிற்கு விலை கொடுக்கிறோம். அதே நேரத்தில் அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கெல்லாம் போனஸ் தருகிறார்கள். ஒரு சர்க்கரை ஆலையில் [illegible] சதவிதம் கொடுக்கிறார்கள். இன்னொரு சர்க்கரை ஆலையில் 14 சதவிதம் கொடுக்கிறார்கள். இன்னொரு சர்க்கரை ஆலையில் 17 சதவிதம் கொடுக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர்



1987 ஏப்ரல் 24] [திரு. கடலூர் இ. வி. வேலு]

ஆட்சியில் கரும்பு உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விலை கொடுப்பதைப் போலவே தொழிலாளர்களுக்கு சீரான முறையில் போனஸ் தர வேண்டும் என்று இந்த ஆண்டில் அனைத்து தொழிலாளர்களுக்கும் 20 சதவீதம் கொடுக்கப்படுகிறது.

அது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சர்க்கரை ரெகவரி 3 டன்னுக்கு அதிகமாக வருவதால் பொது மக்கள் எல்லாம் குறைந்த விலையில் சர்க்கரை வாங்கும் நிலை இருக்கிறது. சர்க்கரை உற்பத்தி தமிழ்நாட்டில் அதிகமாக இருப்பதால், இந்தியாவிலேயே முதன்மையாக இருப்பதால், பொது சந்தையில் குறைந்த விலையில் பொது மக்கள் சர்க்கரை வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இப்படி தமிழ்நாட்டிலே சர்க்கரை ரெகவரி மூன்று டன்னுக்கு அதிகமாக வரும் அளவிற்கு உற்பத்தி செய்கிறோம் என்றாலும் இந்திய பேரரசு வெளிநாட்டிலிருந்து ஆண்டுக்கு 90 டன் சர்க்கரையை வாங்கி கொடுக்கிறது. இந்த முரண்பாடு ஏன் என்று எனக்குப் புரியவில்லை. தமிழ்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்கிறோம். இதற்கு நல்ல விலை கொடுக்க முடியாத நிலையில் வெளிநாட்டிலிருந்து 30 டன் வாங்குகிறார்கள் என்றால் இந்த முரண்பாடு ஏன் என்று தெரியவில்லை. அதற்காக தமிழக அரசு மத்திய சர்க்காரிடம் விவசாயப் பெருங்குடி மக்களுக்காக பல கோரிக்கைகளை வைத்திருக்கிறது. விவசாயிகளுக்கு அதிக விலை கொடுங்கள், ரெக்கவரி வரவில்லை ஆகவே சப்சிடி கொடுங்கள், மானியம் தாருங்கள் என்று கேட்கிறோம். அதையெல்லாம் அவர்கள் கொடுப்பதில்லை. இப்படி உற்பத்தி திறனில் முன்னிலையில் உள்ள தமிழக அரசுக்கு அதிக மானியத்தைப் பெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து மத்திய அரசிலிருந்து பெற்றாக வேண்டும். அப்படி பல கோடி ரூபாயைப் பெற்று விவசாயிகளுக்கு மானியமாக வழங்க வேண்டும். இப்போது சர்க்கரை துறையிலே அதிக லாபம் வருகிறது என்பதால் பெரும்பாலான விவசாயிகள் கரும்பை பயிரிடுகிறார்கள். இந்தக் கரும்பு குறிப்பிட்ட நேரத்தில் ஆலைக்குக்கு போய்ச் சேருவதில்லை. காரணம் அவர்களுக்கு சரியான தகவல் தொடர்பு இல்லாததுதான். ஆகவே ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் ஒரு வி. எச். எப். என்ற ஒயர்லெஸ் அமைத்தாக வேண்டும். இப்படி ஒயர்லெஸ் அமைத்து அதிலே வாக்கி டாக்கியை இணைப்புக் கொடுத்தால் கரும்பு எந்த நேரத்திற்கு சர்க்கரை ஆலைக்கு வர வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க முடியும். குறிப்பிட்ட நேரத்தில் கரும்பு சர்க்கரை ஆலைக்கு வர முடியும். விவசாயிகள் கரும்பு வெட்டி மூன்று

மாதத்திற்குப் பிறகு சர்க்கரை ஆலைக்கும் வரும்போது காய்ந்துவிட்ட காரணத்தால் ரெகவரி சரியாக வராது. எனவே ஒயர்லெஸ் உருவாக்கி ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் வைத்து அதிலிருந்து ஃபீல்ட்மென் வரை உள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் ஒயர்லெஸ் இணைப்பு இருந்தால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அதாவது ஒரு ஏக்கருக்கு 4 டன் சர்க்கரை ரெக்கவரி என்பதற்கு மேல் நாலரை டன் என்ற அளவிற்கு வர வாய்ப்பு இருக்கும். எனவே இந்த திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் ஒன்றை சொன்னார்கள். எனக்கு நினைவு இருக்கிறது. நானும் ஒரு கரும்பு விவசாயி. சென்ற ஆண்டு எங்கள் பகுதியில் கள்ளக்குறிச்சி போன்ற பகுதியில் கரும்பு உற்பத்தி செய்தோம். குறிப்பிட்ட நாளில் கரும்பை கொண்டு போக முடியவில்லை. ஏனென்றால் கரும்பு காய்ந்துவிட்டது. ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் சர்க்கரை ஆலையை மூடிவிடுகிறார்கள். சர்க்கரை ஆலையை மூடிவிடுவதால் கரும்பு அரவைக்கு வராது. ஆனால் சென்ற ஆண்டு வந்தது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் தமிழக அரசையும் விவசாயப் பெருங்குடிகளான நாங்கள் கேட்டோம். ஜூன் ஜூலையில் அறுக்கச் சொல்லுகிறீர்களே ரெக்கவரி வராதே. இதே முன்பே அறுத்திருக்கலாமே என்றோம். ஆகவே மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தார்கள். இது மே மாதம் அறுக்க வேண்டியது. இப்போது ஜூன், ஜூலை வந்துவிட்டது எனவே இவர்களுக்கெல்லாம் சரியான ரெக்கவரி வாய்ப்பு இல்லை ஆகவே இவர்களுக்கு நீங்கள் மானியம் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவருடைய ஆலோசனையோடு மத்திய பேரரசுக்கு எழுதினார்கள். ஆனால் மானியம் கொடுத்தார்களா என்றால் மானியம் கொடுக்கவில்லை. சென்ற ஆண்டு மே மாதம் அறுத்திருக்க வேண்டும். இந்தக் காலதாமதத்திற்கு அரசு ஒன்றும் செய்ய முடியாது ஆகவே மானியம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இந்த ஆண்டு அதே மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காரணம் இந்தியாவில் வட பகுதியிலே உத்திரப் பிரதேசம் இருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் பின்தங்கி மழை பெய்த காரணத்தால் அங்கே இப்போது கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கெல்லாம் மே மாதத்திற்குப் பிறகு ஜூன் ஜூலையில் வரவிருக்கிறது. ஜூன், ஜூலையில் உத்திரப் பிரதேசத்தில் மகாராஷ்டிரத்தில் வரவிருக்கிறது என்பதால் இந்த ஆண்டு சப்சிடி கொடுக்கப்படும் மானியம் வழங்கப்படும் என்று மத்திய பேரரசு அறிவித்திருக்கிறது. நான் கேட்கிறேன்—இந்த மாற்றாந்தாய் மனப்





பான்மை ஏன்? சென்ற ஆண்டு தமிழக விவசாயப் பெருங்குடிகள் கேட்டோம் மானியம் கொடுக்க வேண்டும் என்று. அப்போது அந்த மானியத்தைக் கொடுக்க மத்திய பேரரசு மறுத்துவிட்டது. ஆனால் இந்த ஆண்டு மே மாதத்திலேயே அனைத்து சர்க்கரை ஆலைக்கும் அரவை முடிந்து விடும்.

(பிற்பகல் 1-00)

ஆனால் ஜூன், ஜூலை மாதங்களில் அரவைப் பருவத்துக்கு இங்கே கரும்பு இல்லை. ஆனால் உத்திரப்பிரதேசத்திலே அரவைக்கு கரும்பு இருக்கிறது. எனவே உத்திரப் பிரதேசத்திற்கு பணம் கொடுக்க வேண்டும். மானியம் கொடுக்க வேண்டும் என்ற மாற்றாந்தாய் மனப்போக்கு மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்துவிடுங்கள். பிற்பகல் 1 மணியாகிவிட்டது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: அடுத்து, சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த அளவில் கரும்பிலிருந்து வரும் சக்கையை வைத்து. கழிவுப் பொருள்களை வைத்து By Product industries வளர்வதற்காக புகளூரிலே ஒரு காகித ஆலையைத் துவக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே, புகளூரிலே, பகாசியை வைத்து காகிதம் தயாரிக்கும் ஆலையைத் துவக்கியிருக்கிறோம். அயல் நாடுகளில் பார்த்தால், இதிலிருந்து பல பொருள்களை உருவாக்குகிறார்கள். இன்னும் ஒன்று, பேப்பர் தயாரிக்க வேண்டுமென்றால் மரத்திலிருந்து கூட பேப்பர் தயாரிக்கிறார்கள். ஒரு மரம் வளர வேண்டுமென்றால் குறைந்தது 5 ஆண்டுகளாகும். ஓராண்டில் செடியாகத்தான் இருக்கும், மரமாகாது. மரம் பல ஆண்டுகள் வளர்ந்தால்தான், அதை உபயோகப்படுத்தி, பேப்பர் தயாரிக்க முடியும். காகித ஆலைகளில் 10 மாதங்களுக்குள்ளேயே கரும்பு ஓராண்டுக்குள்ளேயே, வைத்து இன்றைக்கு காகிதம் வளரும். அதன் சக்கையை வைத்து இன்றைக்கு காகிதம் தயாரிக்கும் நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது. எனவே கரும்பு உற்பத்தியை அதிகமாக்கி பல சர்க்கரை ஆலைகளை உருவாக்குவதன் மூலமாக பொருளாதாரத்திலே நாம் முன்னேற முடியும். தமிழ் நாட்டிலுள்ள காடுகளை வளர்க்க வேண்டும். மரங்களை வளர்க்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் நினைக்கிறார்கள். எனவே மரங்களை வெட்ட வேண்டுமென்ற அவசியமில்லை. சர்க்கரைத் துறையின் மூலமாக கரும்பு உற்பத்தியாளர்களின் அவல நிலையைப் போக்கி, கரும்பை அதிகம் உற்பத்தி செய்து, சர்க்கரை ஆலைகளை மேலும் உருவாக்குவதன் மூலமாக பத்திரிகைகளுக்கு வேண்டிய

பேப்பரை உருவாக்க முடியும். அதே நேரத்தில், இத்[illegible] ஒரு குழு போட வேண்டும். அயல் நாடுகளிலே, கியூபா [illegible]ய் போன்ற இடங்களில் பகாசி மூலமாக பி.வி.சி. [illegible]பைப்புகள், கெமிக்கல்ஸ் எல்லாம் உருவாக்குகிறார்கள். பூட்சுக்குப் போடும் பாலிஷைக் கூட அதிலிருந்து கியூபா நாட்டிலே உருவாக்குகிறார்கள். எனவே இதிலிருந்து பல உப பொருள்களைச் செய்ய முடியும். அதற்காக ஒரு குழு அமைத்து, பகாசியிலிருந்து பல பொருட்கள் வர, தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பிரேசில் என்கிற நாட்டிலே கார் ஓட்டுகிறார்கள். 80 சதவீதம் பெட்ரோலும், 20 சதவீதம் கரும்புச் சாறையும் கலந்து, கார் ஓட்டுகிறார்கள். ஆக இப்படி சர்க்கரையிலிருந்து பிழியப்படும் சாறிலிருந்து கார் ஓட்டும் அதிசயம் பிரேசில் நாட்டிலே நடக்கிறது. பல புரட்சிகளைச் செய்திருக்கும் தமிழ் நாட்டிலே, அதைச் செய்தாக வேண்டும்.

அதோடு மட்டுமல்ல. மொலாசஸ்-ஐ கணக்கு வைத்து[illegible] விவசாயிகளுக்கு பணம் கொடுக்கிறோம். அதை தனியார் [illegible]களின் டிஸ்டிலேரிகளுக்கு அனுப்புகிறோம். கூட்டுத் துறையி[illegible] பொதுத் துறையில் டிஸ்டிலரி கிடையாது. எனவே தனியா[illegible]களுக்கு அவற்றை விற்று வருகிறோம். அதில் எந்த அளவுக்கு [illegible]பில்ட் இருக்கிறது. ரெக்கவரி இருக்கிறது என்று அவர்கள் [illegible]க்கு போடுவது இல்லை. கூட்டுறவுத் துறையிலும், பொதுத் துறையிலும் டிஸ்டிலரியை ஏற்படுத்தினால், தனியாருக்கு மொலாசஸ் கொடுக்கும்போது நியாயமான விலைக்கு அதை எடுத்துக் கொள்கிறார்களா என்று பார்ப்பதற்கு அது பயன்படும். எனவே கூட்டுறவுத் துறை மூலமாகவும், பொதுத் துறை மூலமாகவும் டிஸ்டிலரிகளை உருவாக்க வேண்டுமென்று அரசை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்து 5 சர்க்கரை ஆலைகளுக்கு எக்சம்ப்ஷன் வாங்கி[illegible]யிருக்கிறார்கள். அவற்றை விரிவுபடுத்துகிற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். சுய நிதியிலே உருவாக்கியிருக்கிறார்கள். என் பகுதியிலுள்ள கள்ளக்குறிச்சி ஆலையில் அப்படிப்பட்ட நிலையில்லை. அதற்கு போதுமான நிதியில்லை. இந்த ஆண்டு மத்திய அரசும், மாநில அரசும் பெரும் முயற்சி எடுத்து, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையை விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





[illegible] அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் ஒட்டக்கல், [illegible]தியில் சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது. இதை சட்ட மன்றத்தில் பல முறை சொல்லியிருக்கிறேன். அவற்றை எல்லாம் பயன்படுத்தி ஒரு பெரிய தொழிற்சாலையை உருவாக்க முடியவில்லை என்றாலும், ஒரு மினி சிமெண்ட் பாக்டரியை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[illegible], சம்புவரையர் மாவட்டம் என்று ஒரு மாவட்டத்[illegible] வட ஆற்காடு மாவட்டத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். அந்த மாவட்டத்திலே ஒரு தொழிற்சாலைகூட கிடையாது. இன்றைக்கு வட ஆற்காடு மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால், 'பெல்' தொழிற்சாலையாக இருந்தாலும், வெடி மருந்து தொழிற்சாலையாக இருந்தாலும், சந்தனத் தைலம் தயாரிக்கிற தொழிற்சாலை இருந்தாலும் வட பாகத்திலேயே இருக்கிறது. வட பாகத்தில் இருந்தாலும் வட ஆற்காடு மாவட்டம் தென் பகுதியாகிய செய்யாறு முதல் செங்கம்வரை ஒரு தொழிற்சாலை கூட அங்கே கிடையாது. எனவே இந்த ஆண்டு நூற்பாலை கொடுப்பதாக அரசாங்கம் இருக்கிறது. அந்த நூற்பாலையை வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற, தென் பகுதியிலே செய்யாறு பகுதியிலிருந்து செங்கம் வரையில் உள்ள பகுதியில் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே நம்முடைய திருவண்ணாமலையைப் பொறுத்த வரையில், அதற்குப் பக்கத்தில் கருத்தி மலை என்று ஒரு மலை இருக்கிறது. அங்கே இரும்பு தாது பொருள் இருக்கிறது. நம்முடைய அவல நிலையைப் பாருங்கள். ஜப்பானுக்கு 10 பைசா விலையில் இரும்பு கொடுத்து விட்டு, அங்கேயிருந்து ரூ. 1,500-க்கும் ரூ. 3,000-க்கும் நாம் வாட்ச் வாங்கிக் கட்டுகிறோம். இங்கே உற்பத்தியாகின்ற 10 பைசா இரும்பு ஜப்பானுக்குப் போய் அங்கேயிருந்து திரும்பி வரும்போது ரூ. 1,500, ரூ. 3,000 மதிப்பில் வாட்சாக வருகிறது. இங்கே திருவண்ணாமலை பக்கத்திலே கருத்தி மலையில் இரும்பு கிடைக்கிறது. இரும்பு தொழிற்சாலை, சேலத்திலே கொடுத்தார்களே, உருக்காலை தருகிறேன் என்று சொல்லி தகர டப்பா உருக்காலை. தகர டப்பா கொடுத்தார்களே அது போல இல்லாமல், திருவண்ணாமலையில் ஒரு உருக்காலை ஆரம்பிக்கவேண்டும். அந்த உருக்காலையிலே உருவாக்கப்படுகின்ற அந்த இரும்பை வைத்துக்கொண்டு எலெக்ட்ரானிக் துறையிலே முன்னேற்றம் அடைந்து ஜப்பானை போன்று ஒரு குட்டி ஜப்பானை தமிழகம் உருவாக்கி அதன் மூலமாக, 10 பைசா இரும்பை வைத்துக்கொண்டு ரூ. 1,500 மதிப்புள்ள வாட்சை ஜப்பான் தயார் செய்வதுபோல செய்ய வேண்டும். தமிழ்நாட்டிலே பல பல புரட்சிகளைச் செய்திருக்கின்றார்கள் நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே,

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1987 ஏப்ரல் 24]

தமிழ்நாடு முதன்மை இடத்தைப் பெறுகிறது. எங்கும் புரட்சி எதிலும் புரட்சி என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொல்வது போல, கரும்புத் துறையிலே மாபெரும் மாற்றத்தை புரட்சித் தலைவரவர்கள் செய்திருக்கின்றார்கள் என்று சொல்லி எனக்கு இந்த மானியத்தில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(ஆ) கோரிக்கை எண். 51. தொழில்கள் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் வளர்ச்சியில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி அதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்க முடியும் என்பதுதான் கொள்கை சம்பந்தமான குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு ஆட்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடிந்திருக்கிறது என்பது சம்பந்தமான விவரங்கள் அதிகமாக இந்தக் கொள்கைக் குறிப்பில் இல்லையென்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆனால் என்ன குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது என்றால் 1986ஆம் ஆண்டு 106 புதிய இசைவுக் கடிதங்களும் 48 லைசென்ஸ்களும் பெறப்பட்டன என்பதுதான். எவ்வளவு தொழில்கள் அதிலே ஆரம்பிக்கப்பட்டன என்பது சம்பந்தமான விவரங்கள் இல்லை. ஆனால் இசைவுக் கடிதங்களைப் பொறுத்த வரையில்



1987 ஏப்ரல் 24] [திரு ஜே. ஹேமச்சந்திரன்]

அதாவது 1984—85ஆம் ஆண்டிலே பாலிசிநோட்டிலே என்ன சொல்லப்பட்டது என்றால் 1984 டிசம்பர் வரையில் இசைவுக் கடிதங்கள் 90-ம் லைசென்ஸ்கள் 75-ம் வழங்கப்பட்டன என்பது தான். இரண்டு வருடங்களுக்குப்பிறகு ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி என்பது 16 கடிதங்கள் கூடியிருக்கின்றன என்பதுதான். அதிலே எவ்வளவு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டது என்பது பற்றிய விவரங்கள் இல்லை.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் மத்திய அரசின் முதலீட்டு உதவித் தொகை மாநில அரசின் மூலதன உதவித் தொகைத் திட்டங்கள் என்று இரண்டு வகைத் திட்டங்கள் இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களைப் பயன்படுத்தி அதனால் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளைப் பயன்படுத்தி எத்தனை நபர்களால் எவ்வளவு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன ஒவ்வொரு வருடத்திலேயும் என்ற புள்ளிவிவரங்கள் இல்லை. எனக்குத் தெரிந்த அளவில் நாங்கள் கேள்விப்பட்ட வரையில் அந்த உதவிகளைப் பயன்படுத்தி பெரிய அளவில் தொழில்கள் மாநிலத்தில் ஏற்படுத்தப்படவில்லை. அதற்குப் பிரதானமான காரணம் என்னவென்றால் இன்றைக்கு இந்தியாவிலே ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடி, இந்தப் பொருளாதார நெருக்கடியில் நாம் சில உண்மைகளைப் பார்க்காது இன்றைக்கு இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணமுடியாது என்பது எங்களுடைய கருத்து.

ஏற்கனவே பெரிதும் சிறிதுமான பல தொழில்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விவரங்களைச் சொல்வதற்கு முன்னாலே பொருளாதார நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் இந்தியாவைப் பொறுத்த வரையில் மூலதனப் பொருட்களில் ஏற்கனவே 40 சதவீதம் தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ளவை இன்னும் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதுதான். ஏற்கனவே 40 சதவீதம் பயன்படுத்தியதால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களிலே இந்தியாவிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய கணக்கு 10 ஆயிரத்திற்கும் அதிகமான சிறிதும் பெரிதுமான தொழில்கள் மூடிக்கிடக்கின்றன என்பதுதான்.

மத்திய அரசாங்கம் மேற்கொண்டிருக்கக்கூடிய பொருளாதாரக் கொள்கை அதற்குக் காரணம். மத்திய அரசின் முதலீட்டைப் பொறுத்த வரையில் 10 ஆண்டுகளிலே இந்த கொள்கைக் குறிப்பை வைத்துப் பார்த்தால் 168.12 கோடிக்கு இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழில், 600 கோடிக்கு மெட்ராஸ் ரிபைனரீஸ் 70 கோடிக்கு ஹெவி அல்லாய் பெனட்ரேடர் பிராஜக்ட் இவைதான் வந்திருக்கிறதே தவிர தமிழகத்திலே மத்திய அரசு பெரிய அளவிற்கு முதலீட்டை ஏற்படுத்தவில்லை என்பதை நாம் பார்க்கவேண்டும். இன்னொரு பக்கத்திலே அதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா என்று கேட்டால் வாய்ப்புகள்

இருக்கின்றன. ஆனால் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை, இருபது ஆண்டுக் காலத்தில் தமிழகத்திற்காக மத்திய அரசு ஒதுக்கியுள்ள மதிப்பீட்டையும், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டு வரை ஒதுக்கியுள்ள மதிப்பீட்டையும் மத்திய அரசு தமிழகத்திற்காக பெரிய அளவில் முதலீட்டை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

ஓர் ஆண்டுக்கு முன்பு இதே அவையில் அன்றைக்கு இந்தத் துறையில் அமைச்சராக இருந்தவர் உட்பட, பல ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஒன்றை பற்றி குறிப்பிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட தொழிலை தமிழகத்தில் தொடங்க லைசன்ஸ் வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அன்றைக்கு நமக்கு அதற்கான லைசன்ஸை வழங்காமல் மத்திய அரசு அதற்கான லைசன்ஸை உத்தரப் பிரதேசத்திற்கு வழங்கியது. அதுபோல, டி.வி.எஸ். நிறுவனம் இங்கே ஆரம்பிக்க இருந்த ஒரு தொழில், அன்றைக்கு மத்திய அரசில் அமைச்சராக இருந்த திரு. என். டி. திவாரி, அவர்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக அத்தொழிலை அவர்கள் இங்கிருந்து உத்தரப்பிரதேசத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் இதை எதற்காக இங்கே சொல்ல வந்தேன் என்றால் நம்முடைய மாநிலத்தில் தொழில்களைத் தொடங்க நாம் லைசன்ஸ் கேட்டால் அவர்கள் அதனை வழங்காமல் காலதாமதத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்டுவதற்காகத்தான். இது குறித்து உண்மையிலேயே என்னென்ன நடவடிக்கைகளை பெரிய அளவில் எடுக்க வேண்டுமோ அந்த முறையிலே மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால்தான் இன்றைக்கு தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டிய முதலீடும் கம்மியாக இருக்கிறது.

இந்த நேரத்தில் ஓர் உண்மையை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. மத்திய அரசைப் பொறுத்த வரையில் அவர்களுடைய பொருளாதார கொள்கை என்ன என்பதைப் பற்றி இங்கே காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய பாலிசியைப் பற்றி குறிப்பிடுகையில் இறக்குமதியை அதிகப்படுத்தி, ஏற்றுமதியை, அதாவது இங்கிருந்து வெளிநாடுகளுக்கு செல்கிற பொருள்களைக் குறைத்துக் கொள்கிற முறையிலே எக்ஸ்போர்ட் அண்ட் இம்போர்ட் பாலிசி மத்திய அரசுக்கு இருப்பதன் காரணமாக மல்டி நேஷனல்சின் நிர்பந்தத்தின் காரணமாக, ஏகாதிபத்திய அமெரிக்காவுடன் சமரசம் செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தின் காரணமாக, முதலாளித்துவ நாடுகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாக இன்றைக்கு எனக்குக் கிடைத்த விவரப்படி 5,000 கோடி ரூபாய் வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் இருக்கிறது. இதன் காரணமாக இன்றைக்கு அவர்கள் 5,000 கோடி ரூபாயிலிருந்து ஏறக்குறைய 10,000 கோடி, 18 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்





இன்றைக்கு சில குறிப்பிட்ட கம்பெனிகள் 200 சதவிகிதத்திலிருந்து 300 சதவிகிதம் வரை லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். பலவிதமான நிர்ப்பந்தங்களின் காரணமாக இன்றைக்கு மத்திய அரசு மாநிலங்களுக்கு எவ்வளவு முதலீடு செய்ய வேண்டுமோ அதை செய்ய அவர்கள் தயாராக இல்லை. அதுமட்டுமல்ல அவர்களால் அது முடியாது என்கிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்த வரையில் ஒன்றை சொல்கிறேன். திட்டவட்டமாக ஒன்றை சொல்கிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் லாபம் வராத பல தொழில்களைத் தொடங்க இன்றைய தினம் அவைகள் எல்லாம் நொறுங்கிக் கிடக்கின்றன என்பதை நாம் மறந்து விடவேண்டாம். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் டெக்ஸ்டைல் மிகப் பெரிய அளவில் நெருக்கடியில் இருந்து கொண்டிருக்கிறது. ஹேண்ட்லூம் துணி பல கோடிக்கணக்கான மதிப்புள்ளவை சரியாக விற்பனையாகாமல் தேங்கி இருக்கிறது. என்ஜினியரிங் தொழிலை எடுத்துக் கொண்டால் அதுவும் முடம் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பெருந்தொழில்களை எல்லாம் எந்த அளவுக்கு உயிர் கொடுத்து மீண்டும் இயங்க வைக்க முடியுமோ அந்த அளவுக்கு உயிர் கொடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழ்நாட்டில் பிறகு தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தொழில்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்று நாம் சொல்கிறோம் என்றால், அந்தத் தொழிலில் வேலை செய்யக் கூடிய மனிதர்களுக்காக தான் அந்தத் தொழில் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, இங்கே தொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்று சொல்கிற நேரத்தில், உள்ளபடியே அவைகள் எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அடுத்து, ஒரு விஷயத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் நிறைய தொழில்கள் வருவதாக அரசு தரப்பில் சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த அளவுக்கு லாபகரமாக சர்க்கரை தொழிலை வளர்க்க முடியுமா ?

(மாலை 4—10)

அந்தத் தொழில்கூட இன்றைக்கு மிகப்பெரிய நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கரும்பு விவசாயம்கூட செய்ய முடியாத அளவுக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. கரும்பு விவசாயிகள் நேற்றைக்குத்தான் அவர்களுடைய உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இல்லையென்றால் அவர்கள் கரும்பு உற்பத்தியைக்கூட நிறுத்தக்கூடிய முறையிலே இன்றைக்கு விஷயங்கள் சென்றிருக்கின்றன.

[திரு. ஜெ. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 24

கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸைப் பொறுத்த அளவில் அது மிகப் பெரிய நெருக்கடியை இன்றைக்கு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதற்கும் மேலாக நாம் என்ன பார்க்கிறோம் என்றால் என்ஜினியரிங் தொழில்களைப் பொறுத்த அளவிலே, நூற்றுக் கணக்கான என்ஜினியரிங் தொழில்கள், சிறு தொழில்கள் இன்றைக்கு மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. அவர்களைப் பொறுத்த அளவிற்கு அவர்களுக்குத் தேவையான ரா மெட்டீரியல்ஸ் கிடைப்பதற்கான கியாரண்டி இல்லாத நிலை இன்றைக்கு இந்த மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸைப் பொறுத்த வரையில் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அவர்களுக்குத் தேவையான கோக், கோல், பிக் அயர்ன் போன்றவைகள் இன்றைக்குக் கிடைக்காத நிலை இருக்கிறது. அவைகள் கிடைப்பதற்குக் கியாரண்டி இன்றைக்கு இல்லை. நாம் என்ன பார்க்கிறோம் என்றால் அவர்கள் மேற்கு வங்காளத்திலேயிருந்து அல்லது பீகாரிலேயிருந்து இப்படிப்பட்ட பொருள்களை இங்கே கொண்டு வந்து தனியாக அந்த மாநிலத்திலே உள்ள தொழில்களோடு இன்றைக்குப் போட்டி போடுவதற்கு முடியாத நிலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, என்ன சொல்கிறார்கள் என்றால் ரைட் ஈக்குவலைசேஷன் பாலிசி பற்றி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தக் கொள்கை சரியா இல்லையா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். இந்தத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டுகிறேன். இப்படிப் பெரிய அளவிற்கு விலையைக் கொடுத்து அந்த மாநிலங்களிலேயுள்ள தொழில்களோடு அவர்களால் போட்டி போட முடியாது என்ற ஒரு நிலை வந்தால் இந்தத் தொழில்கள் எப்படிப் பாதுகாக்கப்பட முடியும்? இந்த தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ளவில்லை என்றால் பல்லாயிரக் கணக்கான மனிதர்கள் இந்தத் தொழில்களை நம்பியிருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பழைய ஆலைகளைப் பொறுத்த வரையில், அவர்களுடைய இன்ஸ்டால்ட் கெபாசிட்டியை இன்றைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. பழைய தொழில் ஸ்தாபனங்களைப் பொறுத்த வரையில் உள்ள நிலை அது. ஆகவே, இன்ஸ்டால்ட் கெபாசிட்டியை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதற்கான நிலை ஏற்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.



1987 ஏப்ரல் 24] [திரு. ஜெ. ஹேமச்சந்திரன்]

இன்னொரு மிகப் பெரிய பிரச்சினை என்ன என்றால், மின்சாரம். தேவையான மின்சாரம் கிடைப்பதில்லை. கிடைக்கக் கூடிய மின்சாரம்கூட ஒழுங்காகக் கிடைக்கக்கூடிய நிலையில்லை. ஆகவே, இன்றைக்கு மின்சார உற்பத்தியைப் பொறுத்த அளவிற்கு, தொழில்களை இயங்க வைப்பதற்கு இன்றியமையாத தேவை என்ற முறையிலே மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையில் என்ன முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அது எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை அரசு எடுக்க வேண்டும். இல்லையென்றால் நம்முடைய மாநிலத்திலே தொழில் வளம் ஒரு பயங்கரமான பாதிப்புக்கு ஆளாக்கப்படும்.

இன்னொரு பிரச்சினையைக் கூட நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். போக்குவரத்து இன்றைக்கு இன்றியமையாத ஒரு தேவை. இரயில்களைப் பொறுத்த வரையில் தூத்துக்குடி பிராட்கேஜ் இரயிலாக மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசு பரிசீலிப்பதற்குத் தயார் இல்லாத நிலை இருந்து கொண்டு இருக்கிறது. திண்டுக்கல் திட்டத்தைப் பொறுத்த வரையில் கூட அவர்கள் இழுக்கடிக்கிறார்கள். இப்படிப்பட்ட மிக முக்கியமான இரயில் பாதைகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு மத்திய அரசை அணுகி எந்த அளவிற்குச் சீக்கிரமாக இந்த நடவடிக்கையை எடுக்க... கோவார்டினேட் பண்ணி டிரான்ஸ்போர்ட், ரா மெட்டீரியல், மின்சாரம் போன்றவை அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலேயாவது கோவார்டினேஷன் ஏற்படுத்தப்படவில்லை என்றால் தொழில்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இன்றைக்குத் தொழில்களைப் பொறுத்த வரையில், சிக் இண்டஸ்ட்ரீகளைப் பொறுத்த வரையில், மூடப்பட்டிருக்கக் கூடிய ஆலைகளை எடுத்து நடத்துவதற்கு இந்த அரசு என்ன கொள்கையை, என்ன நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறது? இரண்டு நாட்களுக்கு முன்னாலே இந்த அவையிலே சொல்லப்பட்டது. இப்படி மூடப்பட்டக்கூடிய தொழில் ஸ்தாபனங்களை நடத்துவதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும். ஆனால் நான் என்ன சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்றால், மூடப்பட்டிருக்கக் கூடிய இந்தத் தொழில் ஸ்தாபனங்களை எடுத்து நடத்தாமல், அதற்கான ஒரு கொள்கை, அதற்கான ஒரு நடவடிக்கையை அரசு கண்டு பிடிக்காமல் இன்றைக்குத் தொழில்களைப் பாதுகாத்துக் கொள்ள இயலாது. இன்றைக்குத் தனியார் துறையிலுள்ள முதலாளிகள் இலாபத்தை ஏற்படுத்தி என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றிக் கண்காணிக்க, பரிசீலிக்க வேண்டாமா? அரசு அதைப்பற்றி என்றால்... வேண்டாமா? இன்றைக்கு நாம் என்ன பார்க்கிறோம் என்றால், தனியார் துறையிலே உள்ள முதலாளிகள், அவர்கள் ஏற்படுத்தக் கூடிய இலாபத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய இலாபம் இன்றைக்கு எங்கெங்கோ அவர்களுடைய இஷ்டப்படி செலவு செய்யப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

நிச்சயமாக அதைக் கண்காணித்து நாட்டின் வளர்ச்சிக்கு தொழில் வளர்ச்சிக்கு உடனடியாக மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். மூடி இருக்கிற ஆலைகளைத் திறந்து நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பின்னி என்சினியரிங் கம்பெனி பல ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. அதைத் திறந்து நடத்த அவர்களுக்கு நிதி ஆதாரம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மூடிக் கிடக்கின்ற ஆலைகளை, தொழில் நிறுவனங்களை, திறந்து நடத்த அரசாங்கம் முன்வரவில்லை என்றால் தொழில்களைப் பாதுகாக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் இங்கே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முதலாளிகள் எங்கே போனாலும் அவர்கள் முதலாளிகள்தான் என்று சொன்னார்கள். இன்றைக்கு இல் முதலாளிகள் பொதுத் துறையில் என்ன செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திலிருந்து 6 கோடி ரூபாய் மதிப்புள்ள பங்குகள் தூத்துக்குடி ஆல்கலின் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்யப்படுகிறது. பின்னர் அந்த பங்குகளை ஸ்பிக் நிறுவனத்திற்கு 2 கோடி ரூபாய்க்கு, குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டப்பட்டு, நடைமுறைப்படுத்தவிருக்கிறார்கள் என்று ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. மக்களிடையே இது பரவலாகப் பேசப்படுகிறது. ஏற்கனவே 'நியூஸ் பிரிண்ட் கார்ப்பரேஷன்' ஊழியராக இருந்த ஒருவர், 'மிஸ்அப்ராபிரியேஷன்' காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்ட நபர் இன்றைக்கு இதற்கான வேலைகளைச் செய்வதற்கு டிட்கோவில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால் இந்த ஆல்கலின் ஸ்தாபனம், டிட்கோ நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் அவர் எப்படி வேலை செய்கிறார் என்று தெரியவில்லை. பல ஆயிரம் கோடி ரூபாயை முதலீடு செய்து இன்றைக்கு ஸ்பிக் நிறுவனம் ஒரு தனியாரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகள் இப்படி வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவுகள் தனிப்பட்ட முதலாளிகள் தில்லுமுல்லு செய்வதற்கு காரணமாக இருக்கின்றன. முதலாளிகள் எங்கே சென்றாலும் முதலாளிகள்தான் என்று உணவு அமைச்சர் அவர்கள் சொன்னதால் அவர்களுக்கு இந்த விவரங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இன்றைக்கு பொதுத் துறையை கையில் வைத்துக் கொண்டு, அதிகாரிகளை கையில் வைத்துக் கொண்டு இப்படி விளையாட முயற்சி செய்கிறார்கள். இதிலே 2 கோடி ரூபாய்க்கு மேல் 'கும்பகோணம்' ஆகியிருக்கிறது என்று மக்களிடையே பேசப்படுகிறது. அமைச்சருக்குக்கூட இது தெரியாது என்பது ஒரு தகவல். இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்க [illegible]



என்னுடைய தொகுதியைப் பற்றி கூட அல்ல; என்னுடைய மாவட்டத்தைப் பற்றி இரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே, 'சிங்கிள் விண்டோ கமிட்டி' பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியினால் தொழில் தொடங்க எந்தவிதமான காரியமும் செய்ய முடியவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் நானே நேரில் பார்த்தேன். அங்கே ஒரு சில நபர்கள் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே கடனைப் பெற்றுக் கொண்டு இன்று வரையில் மின்சார இணைப்பு கிடைக்காமல் அவர்கள் தொழில் தொடங்க முடியவில்லை. அதே நேரத்தில் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சிங்கிள் விண்டோ கமிட்டியினால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் 50,000 ஏக்கருக்கு மேல் இரப்பர் பயிர் செய்யப்பட்டிருக்கிறது. அரசே 25,000 ஏக்கரில் இரப்பர் வைத்திருக்கிறது. அங்கே கிடைக்கின்ற இரப்பர் நல்ல தரமான இரப்பர். அரசு நிறுவனங்களில் ஏறத்தாழ 10,000 பேருந்துகள் இருக்கின்றன; அதைப்போன்று நிறைய கார்கள் இருக்கின்றன; லாரிகள் இருக்கின்றன. அவைகளுக்குத் தேவையான டயர்களை உற்பத்தி செய்வதற்கு பொதுத் துறையில் ஒரு டயர் பாக்டரி அங்கே ஆரம்பிக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் மத்திய அரசு முதலீட்டில் அல்லது மாநில அரசு முதலீட்டில் அங்கே ஒரு இரப்பர் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் டயர் உற்பத்தி ஒரு மிகப் பெரிய தொழிலாக அமையும். டயரினுடைய உற்பத்திப் பெருக்கத்திற்கு எந்த அளவுக்கு மத்திய அரசு பணம் ஒதுக்கியிருக்கிறதோ அந்த அளவுக்கு தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு நியாயமான முறையில் கிடைக்கவில்லை; நியாயமாகக் கொடுக்க வேண்டிய அளவுக்கு தமிழக அரசால் பெற முடியவில்லை என்று இந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள் சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, ஏ. வி. கருணாகரன் ஒரு ஆலை வைத்திருக்கிறார். டிட்கோ, சிப்காட் நிறுவனங்களிடமிருந்து பணம் கடன் வாங்கி ஆலை வைத்தார். அவருடைய பணம் அல்ல. இப்போது அந்த ஆலையை மூடிவிட்டு, அங்கே தில்லுமுல்லுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட தொழில்களை அல்லது தொழிற்சாலைகளை அரசு ஏற்று நடத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதைப் போன்று டைட்டேனியம் போன்ற விலை மதிப்பு மிக்க பல்வேறு மினரல்ஸ் அங்கே கிடைக்கின்றன. அட்டாமிக் எனர்ஜிக்குத் தேவைப்படுகிற பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 24

(மாலை 4-20)

அந்தப் பொருட்களையும் அங்கே ஆறுமுகநேரியிலே இடைக்கக்கூடிய உப்பையும் பயன்படுத்திக் கொண்டு ஒரு தனியார் நிறுவனம் இன்றைக்குக் கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அரசே அந்தத் தொழிலை நடத்துவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டு இன்றைக்கு.......(மணியடிக்கப் பெற்றது).

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு க்ளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது ஒன்றைக் கூறினார்கள். வெளிநாட்டு மூலதனத்தோடும், வெளிநாட்டுக் கம்பெனிகளுடைய ஒத்துழைப்போடும், வெளிநாட்டு தொழில் நுட்ப உதவியோடும் இங்கே துவக்கப்படுகின்ற தொழில்கள் என்பதைப் பொறுத்த வரையில் அவர்களுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாக தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சியே இல்லை என்று கூறுகிறார்கள். அப்படி என்றால், வெளிநாட்டு மூலதனமும், தொழில் நுட்ப உதவியும் தமிழகத்திற்கு, குறிப்பாக நமது தொழில் வளர்ச்சிக்கு தேவையா, இல்லையா என்பதைப் பொறுத்த வரையில் அவர்களுடைய கருத்து என்ன? அவர்களுடைய கட்சியின் நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நான் என்ன சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு இந்திய அரசு வெளிநாட்டு நிர்ப்பந்தத்திற்காகப் பணிந்து அவர்களுடைய நிபந்தனைகளை ஏற்று இன்றைக்கு தொழில்களை [illegible]டிய நிலைமை ஏற்பட்டதன் காரணமாக தொழில் வளர்ச்சி எந்த அளவுக்கு இந்த மாநிலத்தில் ஏற்பட வேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்படவில்லை. இந்த விஷயத்தில் இதுதான் எங்களுடைய கட்சியின் நிலை. மேற்கு வங்கத்தில் எங்களுடைய கட்சி பொறுப்பிலே இருந்து 'மல்டி நேஷனல்ஸ்'—உடைய கட்டுப்பாட்டை நாங்கள் கொள்கை அளவிலே எதிர்த்துக் கொண்டு, அங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்பது நாடறிந்த விஷயம்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தொழில் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்புகளின் கீழ் கேட்டிருக்கின்ற நிலையில் தமிழக அரசின் சார்பில் அதற்காக அவர்கள் எடுத்துச் [illegible] இருக்கிற நிலைகளைக் குறித்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தினுடைய முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டு ஏறக்குறைய 10 ஆண்டுக்



1987 ஏப்ரல் 24] [திரு. த. பழனி]

காலம் நிறைவு பெற்றிருக்கின்ற இந்த நிலையில் தமிழகம் பெற்றிருக்கிற தொழில் வளர்ச்சி குறித்தும், பல்வேறு சிறப்பியல்புகள் குறித்தும் இங்கே பல்வேறு கருத்துக்களை பல்வேறு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு தமிழகத்தினுடைய தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பல்வேறு அறிக்கைகளையும், அறிவிப்புகளையும் வரவேற்றுப் பேசுவதற்காக என்னுடைய கருத்துக்களை கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் ஆட்சியிலே தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் பல்வேறு அமைப்புக்களின் வாயிலாக தமிழகத்தில் ஏறக்குறைய 45 தொழில் நிறுவனங்களை பல்வேறு இடங்களில் மிகச் சிறப்பாக நடத்தி, இலாபத்தை ஈட்டி தமிழகத்திற்கும் பெருமை சேர்ந்திருக்கிறது என்பது நாட்டிலே இருக்கிற நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். இது நமக்கும், நம்மைச் சார்ந்திருக்கிற உறுப்பினர்களுக்கும் அளித்திருக்கின்ற உரிமை என்ற வகையில் இன்றைக்கு மரியாதைக்குரிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நாமெல்லாம் பெருமைப்படக்கூடிய அளவுக்கு பல்வேறு சிறப்பான எடுப்பான தொழில்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதற்காக புரட்சித் தலைவர் அவர்களை வாழ்த்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

டிக் நிறுவனத்தின் சார்பாகவும், சிப்காட் நிறுவனத்தின் சார்பாகவும் தொழில் முனைவோர்க்கு பல்வேறு பாதுகாப்பான வசதிகளைத் தமிழக அரசு செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. இங்கே காலையில் மரியாதைக்குரிய எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசுகிற போது புலவர்றைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி குறித்தும், மத்திய தொழில் அமைச்சர் என்ன பேசுகிறார் என்பது குறித்தும். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கிறது என்று தமிழகத்தினுடைய தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்களே, அது உண்மையா என்றும் எதிர்க்கட்சியினர் கேட்டார்கள். ஆனால் நாட்டிலே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே அதுதான் உண்மை. தினந்தோறும் தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளில் புரட்சித் தலைவர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு திட்டப் பணிகளையும், தொழில்களையும் தொடங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது நாம் உண்மை என்பதைத் தெரிந்தாக வேண்டும். நாம் [illegible] வைத்திருக்க வேண்டும் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திற்கு பல்வேறு சிறப்புகளை சேர்த்துக் கொண்டிருக்கிற இந்தத் துறை மிகப் பெரிய துறையாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய தொழில் துறை தமிழ்நாட்டிலே முதலீடு செய்வது மிக மிக குறைவாக இருக்கிறது

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 24

என்பதை பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் இந்த மாமன்றத்தில் என்பதை நான் சொல்லியாக வேண்டும். வடமாநிலங்களில் இருக்கிறவர்கள் தொழில் ஆரம்பிப்பதற்கு தேவையான முலதனத்தை மத்திய அரசாங்கம் தொழில் நிறுவனங்கள் மூலமாக கொடுக்கிறது. ஆனால் தென் மாநிலங்களுக்கு குறிப்பாக தமிழகத்திற்கு கொடுப்பதில்லை, கொடுத்திட வேண்டும் என்பதை இங்கே இருக்கிற சட்டப்பேரவை உறுப்பினர்கள் கேட்க வேண்டும். அதேபோன்று மத்திய அரசாங்கம் வாங்கக் கூடிய ஐ.டி.பி.ஐ. நிறுவனத்தின் சார்பாக வரக்கூடிய பல்வேறு வாய்ப்புகளை பெற்று தமிழகம் இங்கே இருக்கிற தொழில் முனைவர்களுக்கு பாதுகாப்பை உருவாக்கி தந்து கொண்டிருக்கிறது.

அதே போன்று தொழில் வளர்ச்சிக் கழகத்தின் வாயிலாக பல்வேறு தொழிற்சாலைகளை மிகச் சிறப்பாக தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மிகக் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தை நான் எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். காட்பாடியில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி அங்கே 452 பேர்களுக்கு மேலாக வேலை வாய்ப்பை உருவாக்கி மிகச் சிறந்த ஒரு தொழிற்சாலையை அந்தத் தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு மிகச் சிறப்பாக நடக்கக் கூடிய தமிழ்நாடு உருக்கு நிறுவனம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு அச்சுத் தொழில் காகித நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம் என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகக் கூடிய அளவுக்கு மிகச் சிறப்பான தொழிற்சாலைகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது.

மிகச் சிறப்பாக தொழில் வளத்தைப் பெருக்கி இந்த தமிழ்நாட்டிலே தொழிலை மேம்பாடு செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

அடுத்தாற் போல எல்லோருக்கும் மிகச் சிறப்பான ஒரு தொழிலாக, கிராமப் புறத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும் மிகச் சிறந்த ஒரு தொழிலாக இன்றைக்கு சர்க்கரைத் தொழில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தச் சர்க்கரைத் தொழிலுக்கு தேவையான பாதுகாப்பை இந்தத் தொழில் துறை தந்து கொண்டிருக்கிறது. கிராமப் புறத்தில் ஒரு சர்க்கரை ஆலை இருந்தால் போதும், 5 ஆயிரம் 10 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதியாகிறது. அப்படி மிகச் சிறப்பை உருவாக்கக் கூடிய அளவுக்கு சர்க்கரைத் தொழில் இருக்கிறது. கூட்டுத் தொழிலிலே இருக்கிற நிறுவனம் ஆக இருக்கட்டும், பொதுத் தொழிலிலே இருக்கிற நிறுவனமாக இருக்கட்டும் அல்லது மற்ற பல்வேறு துறைகளிலே இருக்கக் கூடிய நிறுவனமாக இருந்தாலும் சரி, அதற்கான பாதுகாப்பை வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. இந்த சர்க்கரை ஆலைகள் வருடத்தில் 9 மாதங்களுக்கு விவசாயிகளுக்கு வேலை தருகின்றன.



1987 ஏப்ரல் 24] [திரு. த. பழனி]

கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30 சர்க்கரை ஆலைகள் தேவை என்ற வேண்டுகோளை மத்திய அரசுக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ ஒரு சர்க்கரை ஆலைக்கு அனுமதி வந்ததாகக் கூட தகவல் இல்லை. கிராமப்புறத்திலே இருக்கின்றவர்கள் சர்க்கரை ஆலை தேவை என்று கேட்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். தண்ணீர் தட்டுப்பாடு உள்ள இந்த நேரத்திலே கரும்பு விவசாயம் செய்யக் கூட மனம் தளர்ந்து இருக்கிறார்கள் விவசாயிகள். இந்த நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு இந்தத் தொழில் துறைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுந்த வரையில் 3 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. திருப்பத்தூர், ஆம்பூர், வேலூர் என்ற சர்க்கரை ஆலைகளோடு திருவண்ணாமலை பக்கத்திலே கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையும் சேர்த்து, இப்போது புதியதாக துவங்கியிருக்கும் திருத்தணி சர்க்கரை ஆலையும் சேர்ந்து 5 சர்க்கரை ஆலைகள் கூட்டுத் துறையில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ளன என்பதை நான் சொல்லியாக வேண்டும்.

(மாலை 4-30)

இந்த சர்க்கரை ஆலையின் வாயிலாக சுற்றியிருக்கிற பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் மிகச் சிறப்பான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்று இருக்கிறார்கள். இருந்தாலும் கூட விவசாயிகள் கரும்பு பதிவு செய்ய வேண்டுமென்று மில்களுக்குச் சென்று சொன்னால் பதிவு செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலை வேலூர் மில்லிலும், பல்வேறு மில்களிலும் இருக்கின்றன. அந்த ஆலையை விரிவுபடுத்துகிற திட்டத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியிருப்பதாக அங்கே அந்த ஆலையில் இருக்கிற அலுவலர்கள் தெரிவித்தார்கள். அதைப் போல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிற போது '12 புதிய சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கேட்டிருக்கிறோம், புதிய ஆலைகள் விரைவில் வரு'மென்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் ஒவ்வொரு கிராமத்திலும் 300, 400 விவசாயிகள் என்ற அளவில் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இந்த கரும்புத் தொழிலை நம்பியிருக்கிறார்கள். இந்த விவசாயிகளுக்கு அரசு பாதுகாப்பை ஏற்படுத்திக் தர வேண்டும். சர்க்கரை ஆலையை உருவாக்குகிற போது, ஆரணி, செய்யாறு ஆகிய பகுதிகளுக்கு இடையில் இருக்கிற மாம்பாக்கம் பகுதியில் சர்க்கரை ஆலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கோரிக்கையை பல்வேறு உறுப்பினர்களும் வைத்திருக்கிறார்கள். அங்கு நிலங்களை வாங்கித் தருவதாக விவசாயிகளும் சொல்லியிருக்கிறார்கள். செய்யாற்றில் அருகில் இருக்கிற மாம்பாக்கத்தில் புதிய சர்க்கரை ஆலையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மரியாதைக்குரிய தொழில் அமைச்சர் அவர்களும் ஏற்படுத்திக் தர வேண்டும். அந்தப் பகுதி மக்களுடைய நலன் காக்கிற வகையில் அந்த சர்க்

கரை ஆலையை கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம், கூட்டுறவுத் துறையில் வேலூர் பகுதியில் இயங்கும் சர்க்கரை ஆலை மிகச் சிறப்பான ஆலையாக, அதிக அளவில் ரொக்கவரி கொடுக்கிற ஆலையாக இயங்கி வருகிறது. மிக அதிகமான பேர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்கக் கூடிய அளவிற்கு சிறப்பாக இந்தச் சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. ஆகவே கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு உதவியாக மேலும் 25 புதிய சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தித் தர வேண்டும். காரணம் இன்னும் 25 ஆலைகள் வந்தாலும் தமிழகம் தாங்கும் என்ற வகையில் விவசாயிகள் மிகச் சிறப்பாக கரும்பு விவசாயத்தை செய்து கொண்டு இருக்கிறார்கள். இந்தத் தொழிலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக ஆர்வம் காட்டிட வேண்டும். காரணம் இந்தத் தொழிலால் நேரடியாக பலன் பெறுகிறவர்களை விட மறைமுகமாக பயன் பெறுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கிராமப்புற விவசாயிகளுக்கு இந்தத் தொழிலில் மிகுந்த அளவில் வேலை வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் இருக்கிற சிப்காட் வளாகத்தைப் பற்றி சொல்லியாக வேண்டும். அங்கே பல்வேறு தொழிற்சாலைகள் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. இராணிப்பேட்டை சிப்காட் வளாகத்தில் இருக்கிற பி.எச்.இ.எல். நிறுவனம் திருச்சியில் இருக்கும் நிறுவனத்திற்கு உப நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இராணிப்பேட்டையில் இந்த நிறுவனம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகில் பாலாறு இருக்கிறது. அதன் மூலம் தண்ணீர் பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. மலைப் பகுதியான அந்தப் பகுதியில் தேவையான நிலம் இருக்கிறது. அந்த நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்துகிற வகையில் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அந்த மாவட்ட மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். 38.12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அந்த பி.எச்.இ.எல். தொழிற்சாலை ஆன்சிலரி யூனிட்டாக இன்றைக்கு செயல்பட்டு கொண்டிருக்கிறது. அந்த நிறுவனம் தமிழகத்தில் இருக்கிற அனைத்து நிறுவனங்களோடும் போட்டி போட்டுக் கொண்டு நல்லமுறையில் செயல்பட்டு வருவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியும். அந்த நிறுவனத்தை மேலும் விரிவுப்படுத்த வேண்டும். ஆன்சிலரி யூனிட்டாக இருக்கிற அந்த நிறுவனத்திற்கு மேலும் பல இணை யூனிட்டுகளை சேர்த்து அந்தப் பகுதியில் பெரிய நிறுவனமாக அதனை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல இராணிப்பேட்டை தொழில் வளாகத்தில் இருக்கிற என்பீல்ட் நிறுவனம். அந்த நிறுவனம் தயாரிக்கும் டூ வீலர்களுக்கு மார்க்கெட்டில் கடுமையான போட்டியிருப்பதன் காரணமாக இந்த நிறுவனம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்



கிறது. பாதிக்கப்பட்ட அந்த நிறுவனத்திற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அந்த நிறுவனத்தின் மூலமாக சிறப்பாக உற்பத்தி செய்யக் கூடிய அந்த டூ வீலர் மோட்டார் பைக்குகளை விற்பனை செய்வதற்குத் தேவையான மார்க்கெட்டிங் வாய்ப்புகளை மாநில அரசாங்கம், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து, மத்திய அரசின் ஒத்துழைப்போடு, செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மத்திய, மாநில அரசாங்கங்களின் ஒத்துழைப்போடு, ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இருக்கிற பல்வேறு உதிரி பாகங்களோடு, மிகச் சிறப்பான அந்தத் தொழில் கூட்டுறவோடு இன்றைக்கு என்பீல்டு நிறுவனம் நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அந்த நிறுவனம் சிறந்து செயலாற்றிடத் தேவையான வழிவகைகளை மாநில அரசு முனைப்போடு செய்து, அதைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்பீல்டு எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், இந்த நிறுவனம் ஆரம்பித்த குறுகிய காலத்திலேயே புகழ் பெற்ற ஒரு டி.வி.யை உருவாக்கிக் காட்டியிருக்கிறது. இந்த எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் தயாரிக்கின்ற அந்த கலர் டி.வி.க்கள், மற்ற டி.வி.க்களை விட 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய் விலை குறைவாக இருக்கிறது, சிறப்பாகவும் செயலாற்றுகிறது எனவே இந்தத் தொழில் நிறுவனத்திற்கு பாதுகாப்பு அளித்து, வரிச் சலுகை அளித்து, அங்கே உற்பத்தி செய்யக்கூடிய டி.வி.க்களுக்கு மார்க்கெட்டிங் வாய்ப்புகளை மிகச் சிறப்பாக செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். வெளியிலேயிருந்து வரக்கூடிய டி.வி.க்களின் விலையை விட குறைவாகக் கொடுக்கிறார்கள். வெளியிலே 10 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கக் கூடிய அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே அந்த சிறப்பான நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்திட நமது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் முனைப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எங்களுடைய பகுதியில் மிகவும் சிறப்பான துறையாக டி. சி. சி. கடந்த காலங்களில் பணியாற்றி வந்தாலும் இந்த நிறுவனத்தால் மிகக் கொடுமையான பொலுசன் ஏற்பட்டிருக்கிறது. டி. சி. சி. என்று சொல்லக்கூடிய அந்த தமிழ்நாடு குரோமைட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு மரியாதைக்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் வந்து போனார்கள். இந்த டி. சி. சி. நிறுவனம் என்பது தமிழகத்தினுடைய மற்றொரு போபால் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைக்கு கொடுமையான வாட்டர் பொலுசன், ஏர் பொலுசன்களை உருவாக்கிக்கொண்டு, வளர்ந்து வரக்கூடிய, வளர்ந்து வந்துகொண்டு இருக்கக்கூடிய தொழிற் சாலைகளை, வளர்ந்து வந்து கொண்டிருக்கக்கூடிய ராணிப்பேட்டை நகரத்தை, வளர்ந்து வந்து கொண்டிருக்கக்கூடிய வாலாஜா,

[திரு. த. பழனி] [1987 ஏப்ரல் 24]

ஆற்காடு போன்ற நகரங்களை பாதித்துக் கொண்டிருக்கிறது
அந்தப் பகுதியில் ஏற்பட்டு இருக்கக்கூடிய ஏர் பொலுசனும்
வாட்டர் பொலுசனும், அங்குள்ள குடிநீரையும், சுற்றுப்புறச்
சூழல்களையும் மிகவும் பாதித்து இருக்கின்றன. மாண்புமிகு
தொழில்துறை அமைச்சர் அவர்கள் குடிநீர் வழங்கு துறை
யையும் வைத்திருக்கிற காரணத்தால். அந்த தொழிற்
சாலையிலேயிருந்து வரக்கூடிய அந்த வாட்டர் பாலாற்றிலே
கலக்கிறது, இதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். டி. சி. சி. யிலிருந்து
வரக்கூடிய ஏர் பொலுசனால் அந்தப் பகுதியில் இருக்கிற பயிர்
கள் எல்லாம் அழிகின்றன. வாட்டர் பொலுசனால் தண்ணீர்
கெடுகிறது. எனவே பொலுட் ஆகியிருக்கிற அந்த வாட்ட
ரையும், பொலுட்டாகியிருக்கிற அந்த ஏரையும் சிராக்கு
வதற்கு என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறார்கள்
என்பதுதான் இன்றைக்கு அந்தப் பகுதி மக்களிடத்திலே
யிருந்து நமக்கு ஏற்பட்டு இருக்கிற மிகப் பெரிய சவாலாகும்.
ஏற்கனவே அந்தப் பகுதியிலே பல நிறுவனங்கள் மிகச் சிறப்பாக
நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பல்வேறு பொதுத்
துறை நிறுவனங்கள், பல்வேறு அரசுத்துறை நிறுவனங்கள்,
பல்வேறு தனியார் துறை நிறுவனங்கள் சிறப்பாக
நடந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டு
கழகத்தின் சார்பாக இன்றைக்கு நடத்திக்கொண்டிருக்கிற
இந்த டி. சி. சி. நிறுவனத்தின் வாயிலாக வரக்கூடிய
ஏர் பொலுசன் மிக மோசமான நிலையை ஏற்படுத்தியுள்ள
தால், அந்தப் பகுதி மக்கள் அதை மிகவும் கஷ்டப்பட்டு
அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதைப்
போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான
நடவடிக்கையை எடுத்தாக வேண்டும்; மிகச் சிறப்பான
நடவடிக்கை என்று சொன்னால், இந்த ஏர் பொலுசனால்,
வாட்டர் பொலுசனால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய
மக்களுக்கு பாதுகாப்பைத் தரக்கூடிய அளவிற்கு நிலைகள்
இருக்கவேண்டும் என்றும், அந்த பாதுகாப்பு நிலையை
உருவாக்கித்தர வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்திலே மிக
அதிகமான தொழிலாக இருக்கிற தோல் தொழில் பற்றிச்
சொல்லியாக வேண்டும். தோல் தொழிலிலே அதிகம்
நாட்டம் கொண்டிருக்கிற, எல்லாத் தொழில்களையும்
தெரிந்து வைத்திருக்கக்கூடிய மரியாதைக்குரிய
தொழில் அமைச்சர் அவர்களுக்கு தெரியாத தொழிலே
கிடையாது. அவர் அறிந்து இருக்கக்கூடிய அனைத்து
தொழில்களிலும் சிறப்பான தொழில் தோல் தொழில்
என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.
எங்கள் மாவட்டத்தை நீங்கள் பார்ப்பீர்களேயானால்,
திருப்பத்தூரிலிருந்து தொடங்கி, வாணியம்பாடி, ஆம்பூர்,
குடியாத்தம், வேலூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை,



1987 ஏப்ரல் 24] [திரு. த. பழனி]

வாலாஜா, ஆற்காடு, விசாரம் போன்ற பகுதிகள் எல்லாம்
தோல் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கிற பகுதிகளாகும்.
இந்திய நாட்டிலேயே, தமிழ்நாடு தோல் தொழிற்சாலைகளை
அதிகமாகப் பெற்றிருந்தாலும், தமிழ்நாட்டில் அதிகமான
தோல் தொழிற்சாலைகளைப் பெற்றிருக்கிற மாவட்டமாக,
வட ஆர்க்காடு மாவட்டம் இருக்கிறது. எங்களுடைய வட
ஆர்க்காடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய இந்தத் தோல்
தொழிற்சாலைகள்தான் அன்னியச் செலாவணியை அதிக
மாகப் பெற்றுத் தருகிறது என்பது அனைவரும் அறிந்த
உண்மையாகும். ஆனால் இந்தத் தோல் தொழிற்சாலை
களிலிருந்து வரக்கூடிய கசிவு நீர் எல்லாம் இன்றைக்கு
பாலாற்றிலே கலக்கின்றது. தோல் தொழிற்சாலைகள்
அனைத்திற்கும் பாலாற்றுக் கரையில் அனுமதி வழங்கப்படு
வதால் வட ஆர்க்காடு மாவட்டத்தினுடைய முழுமையான
பகுதிகளும், அனைத்து குடிநீர்த் திட்டங்களும், வட ஆர்க்
காடு மாவட்டத்தினுடைய பகுதிகளில் உள்ள கிராமக்
குடிநீர்த் திட்டங்கள், நகரக் குடிநீர்த் திட்டங்கள், பல்வேறு
பகுதிகளிலே தேங்கிக் கொண்டு இருக்கக்கூடிய தண்ணீர்
நிலைகள்—இதனால் கெட்டுப் போகின்றன.

(மாலை 4–40)

அதனால் அந்த தோல் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற
கழிவுப் பொருட்களெல்லாம் பாலாற்றில் கலக்கின்ற கார
ணத்தால் அந்தப் பகுதி மக்கள் அனைவரும் குடி தண்ணீர்
இல்லாமல் தவிக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு வந்து கொண்டி
ருக்கிறது. பல கோடிக்கணக்கான ரூபாய்க்கு இன்றைக்கு
குடிநீர் திட்டங்களை உருவாக்கி இருந்தாலும் உருவாக்கப்
பட்டிருக்கிற குடிநீர் திட்டங்கள் இன்றைய தினம் அழிந்து
கொண்டிருக்கின்றன என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வட ஆற்காடு மாவட்டம் அல்லாமல்,
செங்கல்பட்டு மாவட்டத்திற்கும் அது தொடர்ந்து வரக்
கூடிய ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது.
பாலாற்றிலிருந்து வரக்கூடிய பல்வேறு ஜீவநதிகள், கிளை
நதிகள், அனைத்து நதிகளிலும் அந்த பொலூட்டட் வாட்டர்
சேருவதால் அங்கே இருக்கிற பாலாற்றினுடைய குடிதண்ணீரின்
தன்மை செங்கல்பட்டு மாவட்டத்தையும் அழித்துக்
கொண்டிருப்பதை நான் சொல்லியாக வேண்டும். எங்கள்
மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்ற பல்வேறு திட்டப்
பணிகளை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன். 5 சர்க்கரை ஆலைகளை வைத்துக்
கொண்டிருக்கிற அந்த மாவட்டம், 3 சர்க்கரை ஆலைகளை
தன்னகத்தேயும், பக்கத்திலே திருத்தணி, கள்ளக்குறிச்சி
சர்க்கரை ஆலைகளையும் வைத்துக்கொண்டிருக்கிறது. இந்த

5 சர்க்கரை ஆலைகளுக்காக ஒரு காகித ஆலையை உருவாக்கித் தரவேண்டுமென்று காலையிலே பேசிய உறுப்பினர்கள், மரியாதைக்குரிய அருமை அண்ணன் அன்பழகன் அவர்களும் மரியாதைக்குரிய அருமை அண்ணன் வேலு அவர்களும் கேட்டுக்கொண்டார்கள். எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் ஏகோபித்து கேட்கின்ற நிலையிலே இருக்கின்ற அந்த காகித ஆலையை எங்கள் மாவட்டத்திற்கு உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற 3 சர்க்கரை ஆலைகள், திருத்தணி கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையோடு, மேலும் ஒரு தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியிலிருக்கிற அனைத்துப் பகுதிகளும் வறண்டு இருக்கிற பகுதிகள், தொழிற்சாலைகளை நம்பி இருக்கிற பகுதிகள், வேலையற்று இருக்கிற பகுதி, விவசாயக் குடிமக்கள் இருக்கிற பகுதி; வறட்சியாக இருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்கிற மிகச் சீரிய திட்டத்தின் அடிப்படையிலே புரட்சித் தலைவர் அவர்கள் தினந்தோறும் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு இருக்கிறார்கள். உடனிருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழில் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று அங்கே இருக்கின்ற பல்வேறு தொழிற்சாலைகளின் அடிப்படையிலே பார்க்கும்போது, மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டிலே முதலீடு செய்திருக்கிற தொகை மிகமிகக் குறைவாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு, தொழில் ஆரம்பிப்பதற்காக மனு செய்து கொண்டிருப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்து இருக்கிறது. அனுமதி அளித்திருக்கிற மனுக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தோடு போராட வேண்டும். மாற்றாந்தாய் மனப்பான்மை மத்திய அரசாங்கத்திற்கு தமிழகத்தைப் பொறுத்தவரையிலே வந்துவிடக்கூடாது. நாம் பெற்றிருக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய மூலதனம் மிகமிகக் குறைவு. மற்ற மாநிலங்கள் பெற்றிருக்கிற மத்திய அரசாங்கத்தினுடைய மூலதனத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தமிழகம் பெற்றிருக்கிற மூலதனம் மிகமிகக் குறைவு. அதை ஈடுசெய்கிற அளவிலே மத்திய அரசாங்கத்தினுடைய 'கன் பாக்டரி'-க்கு சோளிங்கர் தொகுதியிலே இருக்கிற பனப்பாக்கத்திலிருந்து அரக்கோணம் வரை ஏறக்குறைய 2,500 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அங்கே அந்த பாக்டரியை உருவாக்கித் தருவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).





*திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தொழில்கள், தொழில் வளர்ச்சி பற்றிய மூலதனச் செலவு மானியத்தில் ஜனதாக் கட்சியின் சார்பாக கருத்துக்களை நான் எடுத்துக்கூறும்போது சொல்ல விரும்புவது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் மற்றும் மத்திய அரசினால் துவங்கப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. அதிலே விஸ்தரிப்பு செய்திருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். புதிய தொழிற்சாலைகள் அதிகமாகத் துவங்கப்படவில்லை. சில தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசின் அனுமதியை எதிர்நோக்கிக் காத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதுதவிர, தனியார் தொழில் துவங்க அனுமதி கேட்டால் பல காலதாமதங்கள்; பல கட்டுப்பாடுகளை விதித்து, அவர்களை அலையவிட்டு, அவர்களுடைய தொழில் துவங்குகின்ற உற்சாகத்தையே குலைத்து விடுகிறார்கள். புதிய தொழில் துவங்க முன்வருபவர்களை ஊக்கப்படுத்தவேண்டிய இந்த அரசு இப்படிச் செய்யலாமா? உதாரணமாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள 11 ஆம் நெம்பர் கரிசல் குளம் என்ற ஊரிலே நெல் அரவை தொழிற்சாலை துவங்கவேண்டுமென்று அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் பல ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தார்கள்; அலைந்தார்கள்; அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் அங்கே நெல் எத்தனை மூட்டை விளைகின்றது, ஏற்கனவே அங்கே அரவை மில் இருக்கிறதா, அப்படி இருந்தால் அதற்கு அனுமதி இல்லை என்கிறார்கள். இது என்ன நியாயம்? தொழில் துவங்க அனுமதி கேட்டால் கொடுப்பது நம்முடைய கொள்கையாக இருக்க வேண்டும். லாப நஷ்டம் பார்ப்பது தொழில் துவங்குபவருடைய உரிமை. அதில் ஏதோ சட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதை தளர்த்தி நெல் அரவை தொழில் துவங்குவதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

மேலும், இந்த தொழில்கள் எல்லாம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்றால், அரசு தொழில்கள் ஆனாலும் சரி, தனியார் தொழில்கள் ஆனாலும் சரி, மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வேண்டும். இங்கே 40 சதவீத மின் வெட்டு இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. காலம் எல்லாம் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த மின் வெட்டை குறைப்பதற்கு எவ்வளவோ முயற்சி எடுப்பதாக சொல்கிறார்களே தவிர முடியவில்லை. இது ஏன்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 24

முடியவில்லை என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.
தொழிற்சாலைகளுக்கு இந்த மின்வெட்டு இருப்பதால் ஜென
ரேட்டர் வைத்துத் தான் ஓட்ட வேண்டியிருக்கிறது. அதனால்
செலவு அதிகமாகிறது. தொழிற்சாலையின் லாபத்தை இது
பாதிக்கிறது.

எங்களுடைய காமராஜ் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்
தில் உள்ள சிமெண்ட் ஆலையிலிருந்து வெளியே வரும் கழிவு
தூசியை கட்டுப்படுத்த இருக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு
மின்சாரம் இல்லை. ஜெனரேட்டர் வைத்தும் அந்த இயந்
திரத்தை அதனால் இயக்க முடியவில்லை. அதனால் அதிக
சக்தி கொண்ட ஜெனரேட்டரை வைக்க இருப்பதாக இந்த
அரசு சொல்கிறது. அதற்கு பல காலம் தாமதம் ஆகிறது.
அதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுடைய சுகாதாரம்
பாதிக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் வேளாண்மை செய்யப்
படும் விளைபொருட்களான வத்தல், பருத்தி, நெல், சோளம்
போன்றவைகள் எல்லாம் கலர் மாறி சந்தையில் விலை குறை
வாக விற்கிற நிலை ஏற்படுகிறது. மாடுகளுக்கு போடுகிற
தீவனம் மிகவும் தூசியாக இருப்பதால் அவை மாடுகள் தின்பதற்கு
அருகதை இல்லாமல் போய் விடுகின்றன. இந்த நிலையை எல்
லாம் மாற்றுவதற்கு மின் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும்
என்று இந்த் நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் தொழில்கள் அதிகமாக வருவதற்கு மின் வெட்டு
இல்லாமல் இருக்க வேண்டும். ஆந்திரா போன்ற மாநிலங்
களுக்கு தனியார் தொழில் துவங்க செல்கின்ற நிலைமையை
இது ஏற்படுத்துகிறது என்பதை அரசின் கவனத்திற்கு நான்
கொண்டு வர விரும்புகிறேன்.

அனல் மின் நிலையம், புனல் மின் நிலையம் மூலமாக அதிக
மின்சாரத்தை எடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள்.
அதனால் அணு மின் நிலையம் மூலம் மின் உற்பத்தியை அதிகப்
படுத்தலாம் என்று அரசு சொல்கிறது. நீங்கள் எப்படி செய்
வீர்களோ தெரியாது. அணு மின் நிலையத்தைப் பயன்படுத்தி
யாவது மின் தட்டுப்பாட்டை போக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில் அணு மின் நிலை
யம் வைத்தால் ஆயிரம் மெகா வாட் மின்சாரம் கிடைக்கும்
என்று சொல்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு வினா-விடை
வரும்போது அது மத்திய அரசினுடைய அனுமதிக்காக காத்து
இருக்கிறது என்று சொல்லப்பட்டது. இப்படி மத்திய அரசின்
அனுமதிக்காக நீங்கள் எவ்வளவு காலம் காத்து இருப்பீர்கள்?
இந்தக் காரணத்தால் சிறு தொழில்கள் மூடப்பட்டு இருக்கின்றன
என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

தூத்துக்குடியில் சிப்காட் நிறுவனம் தொழில் பேட்டை
அமைக்க 1,292 ஏக்கர் நிலத்தை அந்த நிறுவனம் கையகப்படுத்தி
இருக்கிறது. அதிலே ரயில்வே துறைக்கு 160 ஏக்கர் அளிக்கப்
பட்டு இருக்கிறது. அதேபோல் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகம் கட்ட 300 ஏக்கர் நிலம் அளிக்கப்பட்டு
இருக்கிறது. இவர்கள் கையகப்படுத்தி இருப்பது தொழில்
துவங்குவதற்கு. அதில் ரயில்வே துறைக்கும், மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகம் கட்டுவதற்கும் ஏன் கொடுத்துக் கொண்டு
இருக்கிறார்கள்? அவர்கள் கையகப்படுத்தமாட்டார்களா
வேறு இடத்தில்? இங்கே இருந்து நீங்கள் கொடுத்துக் கொண்டு
இருந்தால் நீங்கள் செய்வதாக இருந்த தொழில்கள் என்ன ஆவது?

வேதியியல் உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்
சாலைகளிடமிருந்து நிலத்திற்காக விண்ணப்பங்கள் வந்து
கொண்டு இருப்பதாகவும் அவர்களுக்கு நிலம் ஒதுக்கப்படுவ
தாகவும் சொல்லப்படுகிறது. இப்படி ஒரு நிலை. அந்த வேதி
யியல் உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை துவங்
கப்பட வேண்டும் என்று சொன்னால், தூத்துக்குடி துறைமுகம்
பெரிய துறைமுகமாக இருந்து கொண்டு இருக்கிறது. இன்னும்
மிகப் பெரிய துறைமுகமாக ஆகும். அப்படி அந்த தொழிற்
சாலைகள் அதிகமாக வரும்போது நீங்கள் எடுத்த 1,292 ஏக்
கரில் ரயில்வேக்கும், ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும்
500 ஏக்கர் வழங்கி விட்டீர்கள். இதை எல்லாம் இந்த நேரத்
தில் நீங்கள் சரி பார்த்து இந்த மாதிரி நிலை ஏற்பட விடக்
கூடாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

(மாலை 4-50)

அதே போல் மசகெண்ணெய் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு
சுமார் 2,70,000 டன் உற்பத்தி செய்யக் கூடிய திட்டம்.
110.60 கோடி ரூபாய் செலவில் ஏற்பட இருக்கிற திட்டம்
மத்திய அரசின் அனுமதிக்காக காத்து இருக்கிறது. அதே
போல் சர்க்கரை ஆலைகள். 12 சர்க்கரை ஆலைகளுக்கு பரிந்
துரை செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் மத்திய அரசின் அனு
மதிக்காக காத்து இருக்கிறது. இப்படி மத்திய அரசின் அனு
மதிக்காக காத்து இருக்கிறது, காத்து இருக்கிறது என்று சொன்
னால் எப்போது அனுமதி வாங்குவது? இங்குள்ள ஆளும் கட்சி
யும் மத்திய அரசில் உள்ள கட்சியும் கூட்டணி கட்சிகள். உங்க
ளுக்கு என்ன சிரமம் இருக்கிறது? நீங்கள் சொன்னால் என்ன?
அதில் என்ன தயக்கம் என்று தெரியவில்லை. இந்த சர்க்
கரை ஆலைகள் எல்லாம் பொதுத் துறையில் வரவேண்டுமென்
பது மத்திய அரசினுடைய கொள்கை. கரும்பு உற்பத்தியாளர்
களுக்கு அதிகமாக பணம் கொடுக்க வேண்டும். சென்ற
மூன்று தினங்களாக சென்னையில் கோட்டையின் முன்பாக கரும்பு
உற்பத்தி செய்யும் விவசாயிகள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.
அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்
கிறார்கள். அதிக அளவில் சர்க்கரை உற்பத்தி செய்வதற்கு
கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 24

அடுத்ததாக 'மொலாசஸ்' டன் ஒன்றுக்கு ரூ. 60 என்று கொடுத்து, மிகக் குறைந்த விலையில் வாங்கி அதை அதிக விலைக்கு தனியார் விற்கிறார்கள். இவ்வாறு அதிக விலைக்கு விற்று, லட்சாதிபதிகளாகவும், கோடீஸ்வரர்களாகவும் உருவாகிறார்கள். இதையெல்லாம் சரி பார்த்து, நியாயமான விலையை கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொலாசஸ் வருமானத்தை கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். மத்திய அரசினுடைய நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறதென்றால், கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி அகல ரயில் பாதை போடுவதில் தாமதம் என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு வருஷத்திற்கு ரூ. 4 கோடி கொடுக்கப்படுகிறது. அது சம்பளத்திற்குத்தான் கொடுக்கப்படுகிறது. இந்தியா பூராவும் அகல ரயில் பாதை வந்தால் தான் தொழில்கள் பெருகும். நமக்குப் பிறகு ஆரம்பித்த கேரளாவில் அனுமதிக்கப்பட்டு, அவர்கள் இன்றைக்கு நேரடியாக திருவனந்தபுரத்திலிருந்து டில்லிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் இன்னும் பெறவில்லை. இதையெல்லாம் மத்திய அரசிடம் சொல்லி, இந்த அகல ரயில் பாதைகளை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சேது சமுத்திரத் திட்டம். அது குறித்து இந்தச் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போடப் பட வேண்டும். இங்கே தீர்மானம் போட்டால், அது ஏகமனதாக நிறைவேற்றப் படக் கூடிய வாய்ப்பிருக்கிறது. அனைத்துக் கட்சியினரையும் டில்லிக்கு அழைத்துப் போய், பிரதமர் ராஜீவ் காந்தியை நேரில் சந்தித்து, சேது சமுத்திரத் திட்டமும், அகல ரயில் பாதைத் திட்டமும் தமிழக அரசுக்கு மிக அவசியம் என்று எடுத்துச் சொல்ல வேண்டும். மற்ற மாநிலங்களுக்கு ரூ. 100 கோடி, ரூ. 1,000 கோடி என்று ஒதுக்குகிறார்கள். இங்கே நமக்குக் கொடுப்பதில் மட்டும் என்ன தயக்கம்? சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படாததால் கொழும்பைச் சுற்றி கப்பல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதனால் 400 மைல்கள் சுற்றி வர வேண்டியிருக்கிறது. இதை நிறைவேற்றினால் எரி பொருள் மிச்சம், தாமதமும் குறைக்கப்படும்.

எகிப்தில் சூயெஸ் கால்வாய் மூலமாக அந்த நாட்டுக்கு வருமானம் வருவது போல், இங்கே நமக்கு ஒரு பெரிய வருமானத்தை இந்த சேது சமுத்திரத் திட்டம் கொடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

சென்னை அருகே தடையில்லாத வணிக மையம் அமைக்கப் பட்டிருக்கிறது. அதற்கு பெறப்பட்ட விண்ணப்பங்கள் 199, அனுமதிக்கப்பட்டது 104, அதிலே வெளி நாட்டவருடையது 41 என்றெல்லாம் கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. 12 முனைவர்கள் ஏற்றுமதி, இறக்குமதியைத் தொடங்கி



1987 ஏப்ரல் 24] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

டார்கள், 24,000 பேருக்கு வேலை கிடைக்கும், இரண்டாவது திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் 70,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அது சிங்கப்பூர் போன்ற ஒரு தடையில்லாத வணிக மையம் என்று நினைக்கிறேன். அங்கேயிருந்து என்னென்ன ஏற்றுமதி ஆகின்றன, என்னென்ன இறக்குமதி செய்யப்படுகின்றன, அது நியாயமான வகையில் ஏற்றுமதியாகிறதா, சரியான முறையில் அந்த அதிகாரிகள் எல்லாம் பணியில் ஈடுபடுகிறார்களா என்பதை எல்லாம் பதில் சொல்லும்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் மத்திய அரசினுடைய முதலீடுகள், ஊட்டியிலுள்ள இந்துஸ்தான் போட்டோபிலிம்ஸ் தொழிற்சாலை 1960-ல் சென்னையில் பெரம்பூர் ரயில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை 1955ல், நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கம் 1956ல், திருச்சியில் பாய்லர் தொழிற்சாலை 1965ல், மணலியில் ரிஃபைனரீஸ் தொழிற்சாலை 1969ல், இப்படி ஒவ்வொன்றாக பார்த்துக் கொண்டே வருவோமேயானால், மத்திய அரசாங்கத்தினுடைய தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் இந்த ஆட்சியில், மூன்று தடவை வந்து விட்ட நீங்கள் ஆளுகின்ற போது, மத்திய அரசால் எதுவுமே துவக்கப்படவில்லை. இந்த ஆட்சி மத்திய அரசாங்கத்தை அனுசரித்துச் செல்கின்ற ஆட்சி. அப்படியிருந்தும் கூட, எந்த ஒரு பெரிய தொழிற்சாலையும் இந்தப் பகுதியில், தமிழ்நாட்டில் வரவில்லையே என்று பார்க்கும் போது உள்ளபடியே வருத்தப்படக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. மணலியிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள், 600 கோடியில் நறுமணப் பொருள்கள் உற்பத்தித் திட்டம் என்ற ஒரு திட்டம். அது நிறைவேற 42 திங்கள்கள் ஆகும் என்று உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே போடப்பட்டு இருக்கிறது. என்னை மாதிரி விவரம் தெரியாதவனாக இருந்தால் 42 திங்கள் என்று சொன்னால் ஒரு வருடத்திற்குள் முடிந்து விடும் என்று கணக்குப்போட்டு பார்த்து ஏமாந்து விடக்கூடாது. ஆக 3½ வருடங்கள் ஆகும் என்று போட்டால் என்ன? அடுத்து சிப்காட் 1973 லே ஆரம்பிக்கப்பட்டது. நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை, தமிழ் நாட்டின் கொள்கை, இந்த ஆட்சியின் கொள்கை, ஏன் ஜனதா கட்சியின் கொள்கை என்று கூட சொல்வேன், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கின்றோம். இந்த தமிழ் நாட்டிலே மத்திய அரசின் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதன் மூலமாக கோடிக் கணக்கான ஆதாயம் வந்து கொண்டு இருக்கிறது. இதிலே ஒரு பங்கை தமிழக அரசு கேட்டால் என்ன? மத்திய அரசிடமிருந்து கேட்பதற்கு என்ன தயக்கம்? இதிலே என்ன சிரமம் இருக்கிறது? நீங்கள் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரையில் உள்ள லாபத்தில் ஒரு பங்கை தமிழ் நாட்டிற்குத் தர வேண்டுமென்று கேட்கவேண்டும். அதைப் போல ராணிப்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1987 ஏப்ரல் 24

பேட்டையில் உள்ள அரசு கெமிக்கல்ஸ் தொழிற்சாலையை தனியாருக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக எனக்கு செய்தி வந்து கொண்டிருக்கிறது. அது சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறுவார் என்று நம்புகிறேன். அதை விற்க முயற்சி செய்ததாகவும் இரண்டு ஆண்டுகளாக நஷ்டம் என்ற கணக்கு கொடுக்கப்பட்டதாகவும் எனக்கு தகவல் வந்திருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த தமிழ் நாட்டிலே தொழில்களுடைய நிலைகள், அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே அதிகமான அளவிலே நாம் முன்னேறி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். முன்னேறியிருப்பதைப் பற்றி சந்தோஷப்படுகிறேன். ஆனால் இன்னும் முன்னேற்றம் வேண்டும். இந்தியத் திருநாட்டினுடைய தொழிற்சாலைகள் இன்னும் அதிகமாக வர வேண்டும். பெரிய பெரிய தொழிற்சாலைகள் அதிகமாக வரவேண்டும். மாவட்டத்திற்கு ஒரு தொழிற்சாலையை நிறுவலாம். இப்போது லட்சக்கணக்கான பேர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய வேலை வாய்ப்பு அலுவலகத்தின் கணக்குகளை பார்த்தோம். நாங்கள் அதிலிருந்து தெரிந்து கொண்டது பல இலட்சம் பேர்கள் வேலை இல்லாமல் அவதிப் படுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பினை பெருக்கித்தர வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு மாவட்டத்திற்கு என்று ரூ. 100 கோடி ரூ. 10 கோடி என்று ஒதுக்கி தொழிற்சாலையை உருவாக்கி ஏழை எளியவர்களுக்கு வேலை கொடுத்து அந்த ஏழை எளியவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு உணவு, உடை, பாட புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஒரு சில உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன். பணத்தை விதைத்து, பயனை அறுவடை செய்து, பலனை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதே எங்கள் இதய தெய்வத்தின் வேட்கை. அந்தக் கொள்கைக்கு ஏற்பவே தொழில் கொள்கையை வகுத்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுவரையினும் இருந்த அரசுகள் கட்டிக் காத்து வளர்த்த நல்ல திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றியும், அவர்களால் விடப்பட்ட, அவர்களால் இயலாமல் போன, இதுவரையிலும் நிறை



1987 ஏப்ரல் 24] [டாக்டர் கே. சமரசம்]

வேற்ற முடியாத பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக்கூடிய வகையிலேயும், இந்தியத் துணைக் கண்டத்தில், தமிழகத்தின் தனித் தன்மையை பாதுகாக்கக்கூடிய வகையில் பல்வேறு தொழில் வளர்ச்சியில் அது முன்னோடியாக இருக்கிறது என்ற பெருமையைத் தருகிற வகையில் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதை நான் இங்கே முன்னுரையாகச் சொல்ல விரும்புகிறேன்.

(மாலை 5-00)

இங்கே பேசிய ஒரு உறுப்பினர் சத்துணவுத் திட்டத்தை இந்த நேரத்திலே சொன்னார்கள். தொழில் வளர்ச்சி வருகின்ற போது சத்துணவுத் திட்டம் எல்லாம் நிரந்தரமாக இருக்கக் கூடாது. அது தற்காலிகமாக இருக்கவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அந்த சத்துணவுத் திட்டம் வருவதற்குக் காரணமே, ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்டவர்கள், வளமான பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக, காடாக மாற்றிவிட்ட காரணத்தினால், எதிர்காலத்திலே இந்த நாடு—தமிழகம்—நலத்துடன், வளத்துடன், வலிவுடன், பொலிவுடன், துணிவுடன் துளிர் விட்டு நிற்க உருவானதுதான் சத்துணவுத் திட்டமே தவிர வேறு ஒன்றும் அல்ல என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே தொழில், தொழில் வளர்ச்சி பற்றிய கொள்கை குறிப்பிலே மிகத் தெளிவாக எல்லாவற்றையும் விளக்கமாகவே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, மேலும் இந்தத் தொழில்களை விரிவாக்கம் செய்வது குறித்தும், நவீனப்படுத்துதல் குறித்தும், வளர்ச்சி குறித்தும், பல்வேறு உணர்வுகளை, நாட்டு மக்களின், உணர்வுகளை இங்கே பகிர்ந்துகொள்வது நல்லதாக இருக்கும் என்று நான் சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

உதாரணமாக கரும்பு, அதைப்பற்றி இங்கே சொன்னார்கள். சர்க்கரை ஆலையில் நல்ல விலை தருகிறோம். நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நல்ல விளைச்சல் உருவாகியிருக்கிறது. அந்த வகையில் இன்றையதினம் அந்தக் கரும்பு வளர்ச்சி காரணமாக, சர்க்கரையினுடைய உற்பத்தி பெருகி, இந்தியத் துணைக் கண்டத்திலேயே, அதன் ஏற்றுமதியைப் பெருக்கக்கூடிய வகையிலேயும், இறக்குமதியைக் குறைக்கக்கூடிய வகையிலேயும் அந்நியச் செலாவணியைப் பெருக்கக்கூடிய வகையிலேயும் இந்தத் திட்டம் மிக நல்ல முறையில் வளர்ந்து வருகிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், சர்க்கரை ஆலைகள் வளமுடன் இருக்கின்ற காரணத்தினால் அதனையொட்டி தொழில் கல்லூரி, பொறியியல் கல்லூரி—இப்படி பல்வேறு கல்லூரிகளை அதோடு நாம் நடத்துவதற்கும் முன்வருகின்றோம்,

அந்த அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்திலே இருக்கின்ற பாலக்கோடு சர்க்கரை ஆலை கூட மிகச் சிறப்பான பெயரைப் பெற்று இருக்கின்ற காரணத்தினால் அங்கே அந்த மாவட்டம் பிற்படுத்தப்பட்ட நிலையிலே இருந்து, வளர்ச்சி பெறத்தக்க வகையில் பல்வேறு வகையில் முனைப்பாக வளர்ந்து கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் அந்த சர்க்கரை ஆலையின் வருவாயை வைத்து மேலும் அங்கே வேளாண்மைத் துறை பெருகக்கூடிய வகையிலேயும், அது ஸ்திரமாக அமைக்கப்படக்கூடிய நிலையிலேயும், தொழிலாளர்களுடைய வாழ்வு மலர்ச்சி அடையக்கூடிய வகையிலேயும் விவசாயக் கல்லூரிகளை இந்தத் துறையிலே ஏற்படுத்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே பாலிடெக்னிக் என்பது பாலக்கோடு சர்க்கரை ஆலையின் வளர்ச்சி காரணத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கே விவசாயக் கல்லூரிகள் நடத்தக்கூடிய அளவுக்கு அதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அதனால் வரக்கூடிய வருவாய் மேலும் பலவகையிலே அந்த மாவட்ட மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், தர்மபுரி மாவட்டத்திலே உற்பத்தி ஆகின்ற கரும்பு முழுவதையும் சர்க்கரையாகப் பிழிந்து எடுக்கக் கூடிய ஆற்றலை அந்த ஆலை பெறவில்லை. மேலும் ஒரு சர்க்கரை ஆலை தேவை என்கிற அளவில் அரசாங்கம் முயற்சி செய்து, இன்னொன்று கொடுப்பதற்கு அரசாங்கம் தயாரான நிலையில் இருக்கிறது. அந்த இடத்திலே மத்திய அரசுக்கு 30-க்கு மேற்பட்ட கோரிக்கைகளை வைத்து இருக்கிறோம்.

சர்க்கரை உற்பத்தி செய்வது இந்தியாவுக்கு நல்லது. கரும்பு வளர்ச்சி அடைவது அந்தந்த மாநிலங்களிலே இருக்கின்ற உழவர்களுக்கு நல்லது. மாநிலமும் வளர்ந்து, இந்தியாவும் வளர்ந்து, ஒரு நல்ல தன்னிறைவு பெறக்கூடிய நிலைக்கு மத்திய அரசு தாமதம் காட்டுவது சரியில்லை. அதை வேகமாக, எத்தனை முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கவேண்டும் என்ற உணர்வுக்கு வர வேண்டும். அவர்களுடைய கொள்கை அந்த அளவிலே வருகின்ற போதுதான், மத்திய அரசும், மாநில அரசும், விவசாயமும், தொழிலும் இரண்டுமே நல்லமுறையில் வளர்ந்து இந்த நாட்டிலே நிலை நிற்கமுடியும். அந்த வகையில் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு இன்னும் பலப்பல ஆலைகள் தேவை. அந்த அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கொண்டு வரவேண்டிய அளவுக்கு மேலும் முயற்சிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்ததாக, காகித ஆலை. 'உலகம் இதிலே அடங்குது, உண்மையும் பொய்யும் விளங்குது, என்று சொல்வார்கள்— காகிதத்தைப் பற்றி, செய்தித் தாளைப்பற்றிச் சொல்கிறபோது, பேப்பரைப் பற்றிச் சொல்கிறபோது. உலகமே இதில் அடங்கு கிறதாம் ; உண்மையும் பொய்யும் இதிலே விளங்குகிறதாம். அப்படிப்பட்ட செய்தித் தாள்களுக்குத் தேவையான காகிதத்தை நாம் எங்கு இருந்தோ, எப்போது எல்லாமோ இறக்குமதி செய்து கொண்டு இருந்தோம். ஆனால் அந்த காகிதத்தைச் செய்யக்கூடிய ஆற்றல்பெற இங்கே இருக்கின்ற ரா-மெட்டீரியல்லை மூலப்பொருளை—வைத்து, அதற்கு மரம் வளர்க்காமல், செடி வளர்க்காமல், மூங்கிலை உற்பத்தி செய்யாமல், சாதாரணமாக கழிவு என்ற கழித்து விடக்கூடிய சக்கையை வைத்துச் செய்ய வேண்டும் என்ற உணர்வு புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டது. அவர் உலகத்தைச் சுற்றிப் பார்க்கிறபோது, எந்த நேரத்தில் நம் நாட்டிற்கு எது உதவும் என்பதையெல்லாம் அங்கேயிருக்கிற வல்லுநர்களிடம் தெரிந்து, தெளிந்து வந்து, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கலந்து பேசி மிக அருமையான முறையில் இந்தக் காகித ஆலையை உருவாக்கியிருக்கிறார்கள். உலகத்திலேயே தலை சிறந்து விளங்குகிற அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில்கூட, கரும்பு சக்கையையே 80 முதல் 85 சதவீதம் வரை பயன்படுத்தி ஒரு காகித ஆலை துவக்கப்படவில்லை. இப்படி வேறு எங்கேயும் இல்லாத அளவுக்கு—இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு—உலக வங்கி உதவியோடு இங்கே காகித ஆலையை அமைத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அந்த அளவுக்கு சிறந்த தொழில் நுட்பத்தையும் கரும்புச் சக்கையையும் பயன்படுத்தி காகித ஆலையை நிறுவி இன்றைக்கு அதன் உற்பத்தி தன்னிறைவு பெறும் அளவுக்கு இருக்கிறது என்றால் அது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற வரப்பிரசாதம்—புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களின் ஆட்சியில் ஏற்பட்ட புதுமையாகும். இதன் காரணமாக இன்றைக்கு பெரு மளவுக்கு அன்னியச் செலாவணி நமக்கு மிச்சப்படுகிறது. இறக்கு மதி குறைகிறது. அதோடு நம்முடைய தேவையும் பூர்த்தியாகிறது. மாநிலத்திலும் தொழில் வளம் பெருகுகிறது. இந்திய அரசும் பல்வேறு வகைகளிலும் இந்தக் காகிதத்தைப் பயன்படுத்தி அன்னியச் செலாவணியையும் சேமிக்க முடிகிறது. எனவே அப்படிப் பட்ட காகித ஆலைகள் நமக்கு மேலும் தேவை. தமிழகத்தில் கிடைக்கும் கரும்புச் சக்கைகளையெல்லாம் பயன்படுத்தி— தற்போதுள்ள சக்கையைப் பயன்படுத்தி—மேலும் இரண்டு அல்லது மூன்று புதிய காகித ஆலைகளை நாம் உருவாக்க முடியும். இதுபோன்ற பெரிய அளவுக்கு அவைகள் இல்லாவிட்டாலும்கூட

ஆங்காங்கே ஓரளவுக்கு சிறிய சிறிய ஆலைகளையாவது உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் கிடைக்கும் அனைத்து கரும்புச் சக்கையையும் பயன்படுத்தி காகித ஆலைகளைத் தொடங்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் சிப்காட், டிக் ஆகியவையெல்லாம் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் மிக நல்ல முறையில் தொழில் தொடங்கக் கடன்களைக் கொடுக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் அத்தகைய கடன்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் கொடுக்க வேண்டும். ஒரு நேரத்தை முடிவு செய்துவிட்டால்—அது ரூ. 10 லட்சம் கடன் கொடுப்பதானாலும், 20 லட்சம் ரூபாய் கடன் கொடுப்பதானாலும், 30 லட்சம் அல்லது 50 லட்சம் ரூபாய் கடன் கொடுப்பதானாலும்— கொடுக்கப்படும் கடன் தொகையின் தராதரத்திற்கு ஏற்ப அந்தக் கடன் மனுக்களை 15 நாளில் பைசல் செய்ய வேண்டும் அல்லது 30 நாளில் பைசல் செய்ய வேண்டும் அல்லது 60 நாளில் பைசல் செய்ய வேண்டும். இப்படி குறிப்பிட்ட நாட்களுக்குள் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கொடுப்பதற்குரிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று சொல்லுகிற நிலை வர வேண்டும். அப்போதுதான் இங்கே தொழில்கள் வளர, வேகமாக வளர முடியும். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், வங்கிகளும் இத்தகைய நிறுவனங்களும் எந்த அளவுக்குக் கடன் கொடுப்பதில் காலதாமதம் செய்கின்றனவோ அந்த அளவுக்குத் தொழிலில் முடக்கம் ஏற்படும். அதுமட்டுமல்ல. கடன் வாங்கக் கூடியவர்கள் எங்கே சென்றால் உடனடியாக கடன் வாங்க முடியும் என்பதையும் அறிவிக்க வேண்டும். பொதுவாக அவர்கள் ஒரு 50 இடத்திற்குச் சென்று அலைந்து திரிந்து கடைசியாகத்தான் கடன் வாங்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அப்படி அவர்கள் கடன் வாங்குவதற்குள்ளாகப் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிற பரிதாப நிலை இருக்கிறது. தொழில் அதிபர்களானாலும் சரி, தொழில் தொடங்க முன்வருபவர்களானாலும் சரி, இத்தகைய இன்னல்களுக்கு ஆளாகிற நிலைமைதான் இன்றைக்கும் இருக்கிறது. எனவேதான், இதை எளிமைப்படுத்த வேண்டும். எளிமைப்படுத்துகிற போதுதான் தொழில் இங்கே வேகமாக வளரும். எங்கே போனால் என்ன தொழில் செய்யலாம், அதையும் எங்கே செய்யலாம், அதற்கு எவ்வளவு முதலீடு தேவை, அதற்குத் தேவையான ரா-மெட்டீரியல்ஸ் என்று சொல்லப்படுகிற மூலப் பொருள்கள் எங்கே கிடைக்கும், அதற்குப் பின்னாலே விற்பனை நிலையம் எங்கே இருக்கிறது என்று முழுமையான விவரங்களையெல்லாம் அவர்கள் தெரிந்து கொள்ளுகிற அமைப்பை நாம் உருவாக்கியாக வேண்டும். அதற்காக நாம் ஒரு அமைப்பையே உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கி அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்போதுதான்—இந்த விளக்கங்களை எல்லாம் அளிக்கிற போதுதான்—தொழில் செய்யக்கூடியவர்களும், படித்தவர்களும், பொறியியல் வல்லு-





நர்களும்—அவர்கள் சுய முயற்சியோடு வந்தாலும் சரி கூட்டுறவு முயற்சியில் வந்தாலும் சரி—நாட்டிலே வேகமாகத் தொழில் வளர்ச்சி பெறும். அவர்களும் ஊக்கத்தோடு தொழிலை நிலை நிறுத்துவார்கள். இன்றைய தினம் தொழில் தொடங்க வேண்டுமென்றால் பல்வேறு சிக்கலான சூழ்நிலைகள் இருக்கின்றன என்று எதிர்க் கட்சியினரும், வணிகர்களும், தொழில் அதிபர்களும் சொல்லுகிற நேரத்திலேயே இந்த அளவுக்கு தொழில் வளர்ந்திருக்கிறது என்றால் நாம் இன்னும் சில நல்ல முறைகளை கடைப்பிடித்தால் மேலும் சிறப்பாகவும் சீராகவும் வேகமாகவும் தொழில் வளர அது உதவி செய்யும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்த அடிப்படையில் கடன் கொடுக்க இந்த நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைய தினம் தொழில் வளர்ச்சியைப் பற்றி சொல்லும்போது தொழில் இல்லாத மாவட்டம், தொழில் இருக்கிற மாவட்டம் என்று சொல்லிக் கொண்டு—தொழில் இல்லாத வட்டம் என்றும் தொழில் இருக்கிற வட்டம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக தொழில் இல்லாத ஒன்றியம், தொழில் இருக்கிற ஒன்றியம் என்று பிரிக்கப்பட வேண்டும். அதாவது எந்த பிளாக்கில் தொழில் இல்லையோ அந்த பிளாக்கில் தொழிலை ஆரம்பிக்க வேண்டும். ஒரு பிளாக்கை எடுத்துக் கொண்டால் அங்கே என்ன மூலப் பொருள் இருக்கிறது, அந்த பிளாக்கில் எத்தகைய தொழிலாளர்கள் இருக்கிறார்கள், எந்தப் பொருளை அந்த பிளாக்கில் உற்பத்தி செய்யலாம். அதை எங்கே விற்கலாம், அதனாலே எந்த அளவுக்கு லாபம் வரும் என்று இதையெல்லாம் எண்ணிப் பார்த்து ரா-மெட்டீரியல்ஸ் எங்கே கிடைக்கிறதோ அங்கே அவர்களுக்குத் தொழில் ஞானம் இருக்கிறதா என்று பார்த்து அவர்களுக்கு எவ்வளவு முதலீடு தேவைப்படுகிறதோ அதைக் கொடுத்து தொழிலைப் பெருக்கக் கூடிய முறையை ஒன்றியவாரியாக உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-10)

அப்போதுதான் "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கு இல்லை ஒத்துக்கொள்" என்று சொன்னார்களே, அது நிறைவேறும். சிறு தொழில்கள் உருவாகி இந்த நாட்டில் நிரந்தரமாக நிலைபெற்றுவிட்டால் நாம் இன்பத்தைப் பெற முடியும், பொருளாதாரப் பிரச்சினைகள் தீரும். அது சிறுதொழில்களை நம்மை அறியாமலேயே பாதுகாக்கக் கூடிய வகையில் அமையும். நம்முடைய கலாச்சாரம், பண்பாடு, நாகரீகத்திற்கேற்ப நாம் செய்யக் கூடிய தொழில்கள், கற்றுவரக்கூடியவர்களுக்கு உதவும். இங்கே செய்யக்கூடிய பொருள்களை வெகுமதியாக கொடுக்கக் கூடியவர்களுக்கு அது உதவும். மாவட்டத்திற்கு மாவட்டம் போக்குவரத்தை பெருக்கிக் கொண்

[டாக்டர் கே. சமரசம்] [1987 ஏப்ரல் 24

டிருக்கக் கூடியவர்களுக்கு உதவக் கூடிய வகையிலே இருக்கும்.
அந்த வகையிலே அமைகின்றபோது அந்தந்த மாவட்டத்தின்
கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் பாதுகாக்கப்படுவதோடு
பொருளாதார வறட்சி ஏற்படாமல் பாதுகாக்கவும் வழிசெய்
யும். அந்தப் பணம் அந்தக் குடும்பத்தில் உள்ள தாய், தந்தை.
குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களுடைய வளர்ச்சிக்கு உத
வும் என்பதால் இந்த திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்
என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

அடுத்ததாக, 'டாமின்' பற்றி சொல்லுகிறபோது பலரும்
பல கருத்தைச் சொன்னார்கள். சாதாரணமாக ஒரு தனியார்
நிறுவனத்தைவிட அரசு நிறுவனம் இலாபத்தில் இயங்கமுடியும்
என்பதற்கு 'டாமின்' ஒரு எடுத்துக்காட்டு. அது மட்டுமல்லாமல்
'டாமின்' போன்ற நிறுவனம் இந்தியாவில் உள்ள எல்லா
மாநிலங்களிலும் இருக்கிறது. ஆனால் இந்தியாவில் உள்ள மற்ற
மாநிலங்களில் எல்லாம் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்
கின்றன. தமிழகத்திலே உள்ள நிறுவனம் மட்டும் இலாபத்தில்
இயங்குகிறது. 1975-79இல் ரூபாய் 1.40 இலட்சம் இலாபம்
என்று சொன்னால் 1986-87இல் இலாபம் ரூபாய் 820 இலட்சம்
என்றால் இதனுடைய நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்
டும். இந்த அளவிற்கு வளர்ந்து நல்ல முறையில் வளர்ச்சிபெற்று
இருப்பதற்கு என்ன காரணம் என்றால் புரட்சித் தலைவருடைய
தொழில் கொள்கைதான் காரணம். இதிலே எவ்வளவு இடைஞ்
சல்கள் ? தனியார் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். இன்னும்
25 சதவீதம் எடுக்கவே முடியவில்லை. அவர்கள் அரசாங்கத்
திற்கு பணம் கொடுக்கிறார்களா, அரசாங்கத்திற்கு அதனால்
இலாபமா என்பது தெரியவில்லை. அவர்கள் இன்னும் வெளி
நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அர
சுக்கு போய், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் எப்படியோ வண்டி
யை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் பார்க்க
வேண்டிய அளவிற்கு துர்பாக்கியமான நிலை இருக்கிறது. தனி
யார் பல்வேறு வகைகளில் இருக்கிறார்கள். இத்தனையும்
எதிர்த்து நின்று போராட வேண்டும். இவர்கள் தினந்தோறும்
கோர்ட்டுக்குப் போக வேண்டும். அதற்கென்று தனியாக ஓர்
அமைப்பே இருக்க வேண்டும் என்ற அளவிற்கு நிலைமைகள்
இருந்தாலும் கூட இன்றைய தினம் அந்நியச்செலாவணியை
பெருக்கக் கூடிய வகையில், ஏற்றுமதியை பெருக்கக் கூடிய
வகையில், அரசுக்கு நல்ல மூலதனம் வரக்கூடிய வகையில் மிக
வும் உதவக்கூடிய நல்ல நிறுவனமாக இது இருக்கிறது. இங்கே
யிருந்து கல்லை வெட்டியனுப்பும்போது அதிலேயும் மத்திய
அரசின் வம்பு சில வகைகளில் இருக்கிறது. இது தமிழ்நாடு
அரசாங்கம் எடுத்து நடத்துகிற Corporation. It is an undertaking
of Government of Tamil N?du. இங்கே மத்திய அரசுக்கும் இந்த
மாநில அர[illegible]ம் நல்ல உறவு இருக்கிறது என்றாலும் இடை
யிலே சில வி[illegible]ரங்களில் உணர்வு சரியில்லை. ஆகவே, கல்லை



1987 ஏப்ரல் 24] [டாக்டர் கே. சமரசம்]

வெட்டி பாலிஷ் போட்டு அனுப்ப வேண்டும், அப்படியே கல்லை வெட்டி அனுப்பக் கூடாது என்று உத்திரவு போட்டிருக்கிறது. இதனால் 60 இலட்சம் ரூபாய்க்கு மேல் நம் கைக்கு வரவேண்டியது வர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்று அறிகிறேன். அது உண்மையாக இருக்குமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி உடனடியாக எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அதிலிருந்து விடுதலை பெற வேண்டும். இந்த அடிப்படையிலே மத்திய அரசிடம் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெற்று நல்ல முறையிலே கொண்டு வரக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த 'டாமின்' வளர்ந்துள்ளதால் முதல்வர் நிவாரண நிதிக்கு உதவி, சமூகநலப் பணிக்கு உதவி, இலங்கை அகதிகளின் புனர்வாழ்வுக்கு உதவி, அறிவியல் தொழில் நுட்பத்திற்கு உதவி என்று செய்து வருகிறது. இப்படி உதவி செய்யக்கூடிய நிறுவனம் மேலும் பல வகைகளில் உதவி செய்யக் கூடிய வகையில் வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும், விரிவாக்கும் செய்ய வேண்டும். ஆகவே, என்னென்ன வகையில் நவீனப்படுத்தி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நவீனப்படுத்தி விரிவாக்கம் செய்தால் மேலும் இலாபத்தை தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 'சிங்கிள் கவுண்டர்' பற்றி முன்பே சொன்னேன். எந்த தொழிலுக்கும் ஒருவர் அப்ளிகேஷன் கொடுத்தால் அதனை பெற்றுக் கொண்டு அப்ளிகேஷன் பற்றி என்ன முடிவு செய்கிறார்கள், அதற்கு எவ்வளவு தொகை என்று தருகிறார்கள் என்பதைப் பற்றி முழுமையாக பதில் கொடுத்து, பணம், முதலீடு, தொழில் நடத்த வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு அரசாங்கம் பொறுப்பேற்று அந்த விண்ணப்பத்தை பெற்றதன் பின்பு, ஆய்வு நடத்தி, இடம் கொடுத்து, உரிமம் கொடுத்து, இயந்திரம் கொடுத்து, தண்ணீர், மின்சாரம், மூலப்பொருள்கள், விற்பனைத் திறன் ஆகியவற்றுக்கு விளக்கம் கொடுக்கக்கூடிய நிலையில் இருப்பதுதான் தலைசிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு முருகானந்தம் அவர்கள் பேசும்போது சில விஷயங்களைச் சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது ஹொசூர் தொழிற் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி பெறவில்லை என்று சொன்னார்கள். இன்னும் தேவையான அளவுக்கு லைசன்ஸ் ஏன் உடனடியாக மத்திய அரசிடம் பெறவில்லை என்று சொன்னார்கள். அவர் சார்ந்துள்ள கட்சி ஆளுங் கட்சியாக அங்கே இருப்பதால், எதிர்க்காமல், ஒரு வகையிலே எடுத்துச் சொன்னார்கள். கேட்டுப் பெறுவது பிச்சை, கேளாமல் தருவது தருமம். ஆனால் நிலைமைக்கேற்ப மக்களின் உணர்வுகளைப்

புரிந்துகொண்டு, தேவைகளை அறிந்துகொண்டு, நடைமுறைப் படுத்துவது கடமை. மத்திய அரசு அதனுடைய கடமை யிலிருந்து தவறிவிட்டது என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் குற்றம் சாட்டிச் சொல்லியிருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். மேலும் அந்தக் கடமையை நிறை வேற்றும் வகையில் நீங்களும் முயற்சி செய்ய வேண்டும், நாங் களும் முயற்சி செய்கிறோம். இருவரும் இணைந்து இந்த நாட டுக்கு சுபிட்சம் கிடைக்க வழிவகை செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். டாசல் நிறுவனம் இப்போது நஷ்டத்தில் இருக்கிறது. இந்த நிறுவனத்தை இழுத்து எப்படி மூடலாம் என்று எல்லா புள்ளி விவரங்கள் பற்றி கணக்கு வந்திருக்கிறது. அந்தத் தொழிலை மூடினால் 4,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற நிலை இருக்கிறது. அந்தத் தொழிலிலே அடிப்படைத் தேவையான வற்றைச் செய்கின்றோம். கலைப் பொருள்கள், மிக மிகத் தேவையான பொருள்களைச் செய்கின்ற இந்த நிறுவனம் நஷ்டத்தில் இருக்கிறது என்று சொன்னால், காரணத்தைக் கண்டுபிடித்து, நிவர்த்தி செய்ய வேண்டும். 4,000 தொழி லாளர்கள் அவதிப்பட காரணமாக இருக்கக்கூடாது. அந்த 4,000 தொழிலாளர்களும் மீண்டும் மறுமலர்ச்சி பெற்று தங்களுடைய தொழிலை, தங்களுடைய வாழ்க்கையை நிரந்தர மாக்கிக்கொள்ள உதவி செய்யும் வகையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத் தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. நான் ஏற்கனவே சொன்னேன். பல கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வேண்டுமென்று மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு முதலமைச்ச ரவர்கள், சிதம்பரம் பகுதியில் நீண்டகால கோரிக்கையாக உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கையெழுத்து போட்டிருக் கிறார்கள் என்று நினைக்கிறேன். இதை உடனடியாக நிறை வேற்றும் வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஜனதா கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். மத்திய அரசும், நீங்களும் ஒற்றுமை யாக, ஒன்றாக இருக்கிறீர்கள், இதை நிறைவேற்றக் கூடாதா என்று கேட்டார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது கூட, அவர்களோடு உறவாகத்தான் இருந்தது. பகையாக இல்லை. மாநில மக்க ளுடைய நன்மைகளைக் கருதி, தேவைகளைப் பூர்த்திசெய்யும்





மத்தியில் யார் ஆட்சியில் இருந்தாலும் அவர்களைப்
கையில், மாநில மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த
ன்படுத்தி, மாநில மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த
ஒரு அரசாங்கம் முயல வேண்டும். எனவே கட்சிப் பிரச்சினை
களில் நாங்கள் சம்பந்தம் வைத்துக்கொள்வது கிடையாது.
மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யத்தான் ஒரு
அரசாங்கம் இருக்கிறது. அந்த முறையிலே மத்திய அரசோடு
மாநில அரசு அப்போது தொடர்பு கொண்டிருந்தது. அந்த
நேரத்திலேயே இந்த நிலை இருந்துகொண்டிருந்தது. அப்
போதும் ஏராளமான லைசன்சுகள் கொடுக்கவில்லை. (மணி
அடிக்கப்பெற்றது). இப்படிப்பட்ட நிலையில் எந்த அரசாக
இருந்தாலும், அந்த அரசோடு ஒன்றிப்போய், மக்களுடைய
தேவைகளை நிறைவேற்றும் வகையில் இருக்கிறோமென்று
சொல்லி, நம் மாநிலத்திலே தொழில் வளம் மேலும் வளரும்
வகையிலே அடிப்படையிலே இருக்கும் சிறு சிக்கல்களைத் தீர்க்க
வேண்டுமென்று சொல்லி, மானியக் கோரிக்கையை வரவேற்று,
அமைகிறேன்.

திரு. பெ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, தொழில்கள் மற்றும் தொழில்
வளர்ச்சி பற்றிய மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கை
கள்மீது நான் சார்ந்திருக்கும் இந்திய தேசியக் காங்கிரஸ்
சார்பில் ஒருசில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.
தொழில் கொள்கையும், திட்டங்களும் குறித்த கொள்கைக்
குறிப்பிலே ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்''
என்ற பாரதியார் பாடலைச் சொல்லி, ஆரம்பித்திருக்கிறார்
கள். அந்த உழவும், தொழிலும் இணைந்த தொழில் சர்க்கரைத்
தொழில், அந்த சர்க்கரைத் தொழிலிலிருந்து என்னுடைய
பேச்சை ஆரம்பிக்கிறேன்.

(மாலை 5–20)

தமிழகத்திலே ஏறத்தாழ 3 இலட்சம் விவசாயக்
குடும்பங்கள் நேரடியாக கரும்பு சப்ளை செய்யக்கூடிய
தொழில் சர்க்கரைத் தொழில். 25 சர்க்கரை ஆலைகள் இருக்
கின்றன. 12 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும்,
3 சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையிலும், 10 தனியார்
துறையிலும் இருக்கின்றன. இந்த சர்க்கரை ஆலைகளுடைய
வளர்ச்சியால் கிடைக்கக்கூடிய பணம், லாபம் முழுமையாக
கிராமப்புற மக்களுக்குப் போய் சேர்கிற நிலைமைகள் இருக்
கின்றன. கிராமப்புறத்திலே உள்ள 3 லட்சம் மக்கள், விவசாய
மக்கள் அதில் வரக்கூடிய வருமானத்தை வைத்துதான் தங்கள்
வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அத்தோடு
மட்டுமல்ல, அந்த விவசாயிகளோடு பின்னிப்பிணைந்துள்ள

[திரு. பொ. செங்கோட்டையன்] [1987 ஏப்ரல் 24

ஏறத்தாழ 3 லட்சம் குடும்பங்கள், அதிலே உப தொழில் செய்பவர்கள், கரும்பு வெட்டுபவர்கள், வண்டி ஓட்டுபவர்கள், டிராக்டர் ஓட்டுபவர்கள் போன்ற வேலை செய்பவர்கள் இதிலேயிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து வாழக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அந்த சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சாகுபடி செய்து கொடுப்பவர்கள் நிலை சமீப காலத்திலே மிகவும் கவனிப்பார் அற்று இருக்கின்றது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். சென்ற ஆண்டு தமிழகத்திலே கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் தங்களுக்குக் கொடுக்கக்கூடிய விலை கட்டுப்படியாகாது என்று சொல்லி விவசாயிகள் சங்கத்தின் சார்பாக மெரினா பகுதியில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதன் காரணமாக இங்கே உரிமைப் பிரச்சினையாக கொண்டு வந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியில் அத்தனை பேர்களும் வெளி நடப்பு செய்தார்கள். மற்ற கட்சியினரும் அவர்களுக்கு ஆதரவாக வெளி நடப்பு செய்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்தோம். விவசாயிகள் ஒரு நாள் பூராவும் உண்ணாவிரதம் இருந்தும், தமிழகத்திலே அனைத்து எதிர் கட்சிகளும் வெளி நடப்பு செய்தும், இந்த ஆண்டு ஏனோ கரும்பு சாகுபடியாளர்களுக்கான கூடுதல் விலை கொஞ்சம் கூட அறிவிக்கப்படவில்லை. விவசாயிகள் போராடினாலும் இந்த அரசு அறிவிக்கவில்லை. இந்த ஆண்டு போராட்டத்திலேகூட இறங்கவில்லை. ஏனென்றால் நாம் போராடும்போது அரசுக்குக் கோபம் வந்துவிடும். அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வந்துவிடும். இந்த ஆண்டு போராடாமல் இருக்கின்றார்கள். அப்படி போராடாமல் இருந்தாலாவது தருவார்கள் என்று இருக்கின்றார்கள். ஆனால் அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இதுவரைக்கும் அறிவிக்கவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சென்ற ஆண்டும் அந்த விலையை அதிகமாக்கி அறிவிக்கவில்லை. ஏன் அறிவிக்கவில்லை என்று கேட்டபோது, 'சர்க்கரை ஆலைகளுக்கு கட்டுப்படியாகவில்லை என்று சொல்கின்றார்கள்' என்கின்றார்களே என்று சொல்கிறார்கள். உங்களுக்கு எப்படி அதிக விலை கொடுப்பார்கள் என்று சொல்கின்றார்கள். ஆனால் அந்த சர்க்கரை ஆலைகளின் அரவைக்குப் பிறகு அந்த சர்க்கரை ஆலைகளுடைய லாபம் எவ்வளவு என்று பார்க்கவேண்டும். அந்த 25 சர்க்கரை ஆலைகளும் சேர்ந்து ரூ. 40 கோடி அளவுக்கு லாபம் ஈட்டியிருக்கின்றது. அப்படி 40 கோடி ரூபாய் லாபம் அவர்கள் எப்படி ஈட்டினார்கள்? இந்த விவசாயிகள் 80 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்து கொடுத்த காரணத்தினாலேயேதான், அவர்கள் உற்பத்தி செய்து கொடுத்ததால்தானே இந்த ரூ. 40 கோடி லாபம் சம்பாதிக்கின்றார்கள்? ஒரு சர்க்கரை ஆலையினுடைய மூலதன பங்கு ரூ. 2 கோடிதான் இருக்கிறது.



1987 ஏப்ரல் 24] [திரு. பெ. செங்கோட்டையன்]

அதற்கு மேலே இல்லை. ஒரே ஒரு வருடத்திலே அவர்கள் லாபம் பூராவும் எடுத்துவிடுகின்றார்கள். விவசாயிகள் அவர்களுடைய பங்கைப் பெறவேண்டாமா? இதைத்தான் நான் கேட்கிறேன். மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஏற்கனவே சொல்லியிருக்கின்றது. தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளிலே கிடைக்கக்கூடிய உபரி வருமானத்தை கொண்டு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்யக்கூடிய விவசாயிகளுக்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அதை ஆரம்பத்திலேயே கூட கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. பிறகே கூட கொடுக்கலாம். அதற்கு உண்டான வருமான வரி விலக்கு அளிக்கிறோம் என்று சொல்கின்றார்கள். வருமான வரி விலக்கு அளிக்கிறோம் என்று சொல்கின்றபோது மத்திய அரசினுடைய பரந்த நோக்கம் தெரிந்து இருக்கவேண்டும். எப்படியாவது கரும்பு விவசாயிகளுக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி கரும்பு விவசாயிகள் விலை கூடுதலாகக் கேட்பது அரசுக்கும் புதியது அல்ல. நான் 25 ஆண்டுகள் கரும்பு விவசாயத்திலே அனுபவம் உள்ளவன். 1962-63 ஆண்டிலேயிருந்து தொடர்ச்சியாக இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய அரசுகளை எல்லாம் அணுகி கரும்பு விலையைப் பற்றி பேசியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர்கள் உடனடியாக அரசு தரப்பிலும், விவசாயிகள் தரப்பிலும், ஆலை முதலாளிகள் தரப்பிலும் முத்தரப்பு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து அவர்களுக்கு உண்டான விலையை நிர்ணயம் செய்வார்கள். திரு. பக்தவத்சலம் காலத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலும் சரி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இருந்தது. சென்ற ஆண்டு சட்டசபையிலே நடந்த நிகழ்ச்சிகளை பார்க்க வேண்டும். ஆனால் இந்த 2 ஆண்டுகாலமாக ஏனோ தமிழக அரசு விவசாயிகளையும், முதலாளிகளையும் கூட்டி முத்தரப்பு மகாநாட்டை கூட்ட தயங்குகிறது. கொண்டுவர யோசிக்கிறது. ஏதோ விவசாயிகள் கேட்கிற வகையிலே கேட்டு குறைபடுத்தி விடுவார்களோ, ஏதாவது சிக்கல் கொண்டு வந்துவிடுவார்களோ என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அஞ்சுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. விஷயம் தெரிந்த விவசாயிகளிடம் பேசினாலும்கூட பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நான் சொல்கிறேன். இந்த பிரச்சினையை எப்படித்தான் அரசின் கவனத்திற்கு கொண்டு வருவது? விவசாயிகள் போராட்டம் நடத்தினாலும் கவனிக்கவில்லை, கவலைப்படுவதில்லை. இங்கே எதிர் கட்சிகள் வெளிநடப்பு செய்தாலும் கவலைப்படுவதில்லை. கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. மகஜர்களைக் கொடுத்தாலும் இதுவரையிலே பரிசீலனை செய்தது கிடையாது. ரூ. 40 கோடி அளவுக்கு சென்ற ஆண்டு சர்க்கரை ஆலை முதலாளிகள் லாபம் பெற்று இருக்கின்றார்கள். அந்த 40 கோடி ரூபாயை எப்படி பிரித்து விவசாயிகளுக்கு பெற்றுத்

தரப்போகிறார்கள்? கூட்டுறவுத் துறையிலே இருக்குமானால் கூடுதல் விலையை பின்னாலே கொடுப்பார்கள். தெரியும். ஆனால் இந்த தனியார்கள், 10 கோடி, 5 கோடி, 7 கோடி ரூபாய் லாபம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கொடுப்பார்கள் என்று அரசு கருதுகிறதா?

ஏன் அந்தப் பணத்திலிருந்து ஒரு பகுதியை அந்தக் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடாதா? தமிழகத்தில் இருக்கிற 3 லட்சம் கரும்பு விவசாயிகளும் இந்த அரசுக்கு தங்களுடைய மனமார்ந்த ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். முன்பு பல சமயங்களில் இந்த அரசுக்கு அவர்கள் தங்களுடைய ஆதரவை தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலின்போது கூட அவர்கள் இந்த அரசுக்கு தங்களுடைய ஆதரவை தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கேட்க கேட்க, இந்த அரசு அவர்களுக்கு அதை கொடுக்காத நிலையிலும் அவர்கள் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தத் தயாராக இல்லை. இருப்பினும் கூட அவர்களுக்கு, கரும்புக்குரிய நியாயமான விலையை கொடுக்க அரசு முன்வரவில்லை. தேர்தலின்போது எங்கள் கட்சியும் தோழமை கட்சியாக போட்டியிட்டது. இப்படிப்பட்ட நிலையில், நல்லதோ கெட்டதோ உங்களுக்கு வருகின்ற பாதிப்புகள் நிச்சயமாக எங்களுக்கும் சேர்ந்துதானே வரும்? இன்றைக்கு கோடிக்கணக்காக சர்க்கரை ஆலைகள் சம்பாதிக்கக்கூடிய நிலையில் இந்த 3 லட்சம் கரும்பு விவசாயிகளின் நலன் கருதியும், அவர்களைச் சார்ந்திருக்கின்ற விவசாய கூலிகளின் நலன் கருதியும் அவர்களுடைய கரும்புக்கு நியாயமான விலையை உயர்த்திக் கொடுப்பதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்க முடியும்? இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக் கூடிய ஏதோ 9 சர்க்கரை ஆலை முதலாளிகளின் பிடிப்புக்குள் இந்த அரசு இருப்பதால்தான் 3 லட்சம் கரும்பு விவசாயிகளுக்காக பேச மாட்டோம் என்று அரசு சொல்கிறதோ என்கிற ஐயப்பாடு கூட இன்றையதினம் கரும்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, கரும்பு விவசாயிகளுக்கு 1972-73 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்தும், பொதுத் துறையிலிருந்தும் வருகிற லாபத்திலிருந்து ஒரு தொகையை பிரித்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு லாபம் வந்தால் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்கிற நார்ம்ஸ் எல்லாம் பிக்ஸ் பண்ணி, வரையறை செய்து இதனை நிர்ணயிக்க வேண்டும். ஏதோ கரும்பு விவசாயிகளுக்கு கடமைக்குக் கொடுப்பதுபோல கொடுக்காமல் கரும்பு விவசாயிகளுக்கு எவ்வளவு பெற தகுதியுடையவர்களோ அதனை அவசியம் கொடுக்க வேண்டும். மேலும் கரும்புக்கான விலையை நிர்ணயம் செய்யும்



போது தமிழகத்தில் கரும்பு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் யார் யார் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி கரும்புக்கு கூடுதல் விலையை நிர்ணயிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 10 ஆயிரம் தொழிலாளர்கள் அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இருக்கிற சர்க்கரை ஆலைகளில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு கணிசமான ஊக்க ஊதியம் 1985-86 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக நியாயம் வழங்க வேண்டுமென்று தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு தொழிற் சங்கங்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அணுகி கேட்டிருக்கின்றன.

ஆனால் உள்ளபடியே 1985-86 ஆம் ஆண்டுக்கான ஊக்க ஊதியம் அவர்களுக்கு இதுவரை கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஊக்க ஊதியம் என்று சொல்வது இன்செண்டிவ்-ஐ தான். போனஸை இப்படி 'இன்செண்டிவ்' என்று சொல்ல மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எல்லாம் தொடர்ந்து அதிகமாக லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிற நிலையில், லாபத்தில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென்றும், ஊக்க ஊதியம் வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த 10 ஆயிரம் சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் நலன் கருதி அவர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைத்து அவர்களையும் திருப்திபடுத்த வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கரும்புக்கு செஸ் என்று வருகிறபோது ஒரு டன் கரும்புக்கு 5 ரூபாய் என்கிற அளவில் வசூல் செய்கிறார்கள். இப்படி வருகின்ற வருமானத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளாக இருந்தாலும் சரி; பொதுத் துறை ஆலைகளாக இருந்தாலும் சரி அந்த வருமானம் எல்லாம் அரசுக்கு தான் வருகின்றது. ஆனால் இன்றைக்கு தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து அரசுக்கு இம்மாதிரி வருமானம் வராத நிலையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்தும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலிருந்தும் வருகிற வருமானத்திலிருந்து ரோடுகளை போடும்போது தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் சேர்த்தே போடுகிறார்கள். எந்தப் பகுதியிலே உள்ளபடியே செஸ் கொடுத்திருக்கிறார்களோ அந்த பகுதிக்கு மட்டும் ரோடு போட வேண்டும்.

[திரு. பெ. செங்கோட்டையன்] [1987 ஏப்ரல் 24

அடுத்து, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் பாலப்பட்டியிலிருந்து ராமநாயகன்வலசுக்கு ரோடு போடப்படுகிறது. ஆனால் ரோடு போடுகிற இடத்தில் குறுக்கே, ஒருவருடைய, தனியாருடைய நிலம் இருக்கிறது. அவர் அதனை விட்டுக்கொடுக்காமல் தகராறு செய்கிற காரணத்தால் அந்தப் பணி அப்படியே நிற்கிறது. ஆகவே, அரசு கம்பல்சரியாக அக்விசிஷன் பண்ணியாவது அந்த நிலத்தை எடுத்து, அந்த ரோட்டை முழுமையாகப் போட்டு, செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, பழங்கானூரில் ஏரிகிரிக்கு ரோடு போடுகிற திட்டத்தைப் பொறுத்தவரையில் அது இந்த ஆண்டுக்கான திட்டம். ஆனால் இந்த ரோட்டை போடும்போது குறுக்கே பள்ளிக்கூட கட்டடங்கள் இருக்கின்றன. எஸ்டிமேட்டில் கூட இதற்கான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் உடனடியாக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் வாளவந்தி வழியாக மாலப்பட்டி வரை சாலை வசதியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(மாலை 5-30)

தமிழகத்தில் இருக்கக் கூடிய லட்சக்கணக்கான விவசாயி களின் பிரச்சினைகளுக்குத் தொடர்புடைய சர்க்கரை இயக்ககம் இருக்கிறது. அதேபோன்று சர்க்கரைத் துறை செயலகம் தனியாக இருக்குமானால் சர்க்கரை விலை நிர்ணயம் செய்யச் சுலபமாக இருக்கும். சர்க்கரைத் துறை இயக்ககமானது இப்போது தொழில் துறையுடன் சேர்ந்திருக்கிறது. கரும்பு விவசாயமாக இருந்தாலும் நாங்கள் வேளாண்மைத் துறைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அது தனிச் செயலகமாக இருந்தால், கரும்பு பயிரிடுவது, கரும்பு கொள்கை, சர்க்கரை ஆலைகள் போன்றவைகளுக்கு அது உதவியாக இருக்கும். லட்சக்கணக்கான விவசாயி களின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு தனிச் செயலகமாக அமைத்துக் கொடுத்தால் சரியாக இருக்கும் என்று நான் சொல் லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டைப் பொறுத்த வரையில், 40 கோடி ரூபாய் தமிழக சர்க்கரை ஆலைக்கு லாபம் கிடைத்திருக்கும்பொழுது. கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 50 கொடுக்கப்படுகிறது. மேலும் ரூ. 25 கொடுப்பதாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு நடும்போதே கரும்பு விலையை அறிவித்துவிட்டது. 1986-87 ஆம் ஆண்டில் கரும்பின்



1987 ஏப்ரல் 24] [திரு. பெ. செங்கோட்டையன்]

விலையை டன் ஒன்றுக்கு ரூ. 170 என்று அறிவித்திருக்கிறது. நீங்கள் கரஸ்பாண்டிங் ரேட்டாக டன் ஒன்றுக்கு ரூ. 200 என்று அறிவித்தீர்கள். அதை நான் வரவேற்கிறேன். 1987-88 ஆம் ஆண்டின் விலையைக் கூட மத்திய அரசு ஏறத்தாழ 6 மாதங்களுக்கு முன்பாகவே அறிவித்து விட்டது. ஆனாலும் கூட தமிழக அரசு ஏனோ அந்த கொள்கையை இன்னும் சொல்லாமல் இருக்கிறது. அது ஏன் என்று புரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வராமல் அது விட்டுபோயிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிட்டு, தமிழக அரசு அந்த கொள்கையை அறிவிக்கவில்லையே. அது என்ன காரணம் என்று கேட்டு, அதை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 1987-88 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு டன் ஒன்றுக்கு ரூ. 180 என்று அறிவித்திருக்கிறது. அந்த அளவில், கரஸ்பான்டிங் ரேட்டாக மாநில அரசு டன் ஒன்றுக்கு ரூ. 210 என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த 210 ரூபாயை உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுவும் இன்றே சொன்னால் கரும்பு நடவு செய்யும் விவசாயிகளுக்கு அது நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று டிட்கோ மூலமாகவும், சிப்காட் மூலமாகவும் பல்வேறு தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்துகிற நிலைமையை உருவாக்கியிருக்கிறீர்கள். அது வரவேற்கக் கூடிய விஷயம். ஆனால் டிட்கோ மூலமாகவும், சிப்காட் மூலமாகவும் பணத்தைக் கொடுத்து விட்டு பேசாமல் இருக்கிறோம். பணத்தை மட்டும் கொடுக்கக்கூடிய ஏஜென்சியாக அவை இருக்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கொடுக்கக்கூடிய பணம் சரியாகச் செலவழிக்கப்படுகிறதா, அந்தப் பணத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலைகள் சரியாக நடக்கின்றனவா அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வரவேண்டிய வரவினங்கள் சரியாக வருகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு வர வேண்டிய வரவினங்கள் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும், அது 59 சதவிகிதமாக இருந்தாலும், அது போதாது.

அதேபோன்று தமிழ்நாடு கனிம நிறுவனத்தைப் பொறுத்த வரையில் அது சிறப்பான முறையில் செயலாற்றி வருவதால் தமிழக அரசு அதற்கு அதிகமான ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். கனிம நிறுவனத் தோடு தொடர்பு உடையவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்த தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நகரத்தில் இருக்க முடியாது. கிராமப்புறப் பகுதியில் அவர்கள் இருப்பார்கள். கிராமத்தில் இருக்கக் கூடிய வேலையில்லாத அந்த மக்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்தக் கனிம நிறுவனம் உதவி செய்ய இயலும். ஆகவே, அந்த கனிம நிறுவனத்திற்கு மேலும்

நிதி உதவி அளித்து அதை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கனிம நிறுவனத்தின் மூலமாக இராயப்புறத்தில் நிறையத் தொழிற்சாலைகளை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான கபிலர்மலைப் பகுதியில் காவிரி ஆற்றுப்படுகையில் 2,000 ஏக்கர் சமமான தரிசு நிலம் கிடைக்கிறது. அந்தப் பகுதியில் சித்தபூண்டி கிராமம், வடகரை ஆத்தூர், திடுமல், கௌண்டம்பாளையம், சீராப்பள்ளி, குன்னமலை, கூடச்சேரி, சுங்கக்காரப்பட்டி ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக 20 மைல் நீளம் வரை குவார்ட்ஸ் கற்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவை தரத்தில் சிறந்தவை. அந்தக் குவார்ட்ஸ் தொழிற்சாலையை தமிழக அரசு டாமின் நிறுவனத்தின் மூலமாக அமைப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கே 2,000 ஏக்கரில் சமமான தரிசு நிலம் இருப்பதால், காவிரிப்படுகையில் தேவையான தண்ணீர் இருப்பதால், அங்கே மூலப்பொருளான வெள்ளைக் கற்கள் 20 மைல் நீளம் வரை கிடைக்கின்ற காரணத்தால், மின் இணைப்பிற்கு அங்கே ஒரு சப் ஸ்டேஷன் இருப்பதால், இந்தக் குவார்ட்ஸ் தொழிற்சாலையை, கபிலர்மலைப் பகுதியில் சித்தபூண்டி கிராமத்தில் 2,000 ஏக்கர் சமமான தரிசு நிலம் இருப்பதால் அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

டிட்கோ மூலமாக பல்வேறு தொழிற்சாலைகளை இங்கே ஆரம்பித்திருக்கிறோம். பொதுத் துறையைக் காட்டிலும், கூட்டுறவுத் துறைக்குத் தான் அதிக முக்கியத்துவம் இந்தக் கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் லாபம் சம்பாதிக்கும் நோக்கோடும் தங்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெற்றுக் கொள்ளவும் அரசாங்கத்தை அணுகுகிறார்கள். அந்தக் கூட்டுறவுத் துறையைப் பார்த்தோமானால், நிச்சயமாக அங்கே வேலைவாய்ப்பு மிகக் குறைவாக இருக்கும். 1987-88 ஆம் ஆண்டு கொள்கை குறிப்பில் சில திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரூ. 270 கோடி செலவில் 2,700 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக் கூடிய ஒரு திட்டத்தைக் சொல்லியிருக்கிறார்கள். ரூ. 1.00 கோடி, செலவு செய்தால் சுமார் 10 பேர்களுக்குத் தான் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. எவ்வளவோ தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்பது முக்கியம் அல்ல. எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறோம். எவ்வளவு குடும்பங்களைக் காப்பாற்றியிருக்கிறோம். என்பது தான் முக்கியம். அதேபோன்று அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை உபயோகப்படுத்தி தொழிற்சாலைகளை ஆரம்பித்தாலும், அவை சில முதலாளிகள் பிழைக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை



சிப்காட் உதவியால் நடைபெறுகின்ற தொழிற்சாலைகளுக்கு பல்வேறு இடங்களில் தண்ணீர் மின்சாரம், இணைப்பு ரோடு இவைகள் கிடைக்காத காரணத்தால் அவர்கள் சரியாகச் செயல்படுவதில்லை பல இலட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் அரசிடம் கடன் வாங்குகிறார்களே தவிர, கடன் வாங்குகிற சமயத்தில் அதற்கு உரிய புரோக்கர்களின் மூலமாக சமாளித்து வாங்கிவிடுகிறார்களே தவிர, 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் நடைமுறை மூலதனம்கூட இல்லாத நிலையில் இலட்சக்கணக்கான ரூபாய்களை நம்மிடம் கடன் பெற்று அந்தத் தொழில்களைத் துவங்கியிருக்கிறார்கள். அரசு ஒரு குழு போட்டு, அந்தத் தொழிற்சாலைகளைத் துவக்கும்போது, நம்மிடம் கடன் வாங்கும்போது தேவையான கண்டிஷன்கள் நிறைவேற்றப் பெற்றனவா, அத் தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான தொழில் நுட்பம் இருந்ததா, அவைகளைத் தொடர்ந்து நடத்தும் வாய்ப்பு இருக்கிறதா என்று ஆராயப்பட்டதா என்று—அந்த விவரங்களையெல்லாம் ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய நிறுவனம், தமிழ்நாடு பத்திரிக்கை நிறுவனம். இது ரூபாய் 230 கோடி முதலீட்டிலே ஏற்படுத்தப்பட்டது. இதில் தமிழக அரசு மிகப் பெரிய முதலீட்டை போட்டிருக்கிறது. அந்த டி. என். பி.-யில் தொழில் நுட்பம்தான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்; அந்தத் தொழிற்சாலை நடத்துவதில் சங்கடங்கள் இருக்கின்றன. 230 கோடி ரூபாய் முதலீட்டிலே ஏற்படுத்தப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் ரூபாய் 55 இலட்சம் இலாபம் கிடைத்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. டிப்ரிசியேஷனுக்குத் தள்ளுபடி செய்யப்படாமலேயே இவ்வளவுதான்இலாபம் என்றால் அதற்குரிய தள்ளுபடியைக் கணக்கிட்டால் ரூபாய் 20 கோடி நஷ்டம் வரும். 230 கோடி ரூபாய் முதலீட்டிலே ஆரம்பித்த ஒரு நிறுவனத்தில் முதல் வருடமே ரூபாய் 20 கோடி நஷ்டம் என்றால்—ரிசர்வ் தொகை கூட ஒதுக்கப்படாத நிலையில்—இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றல்லவா ? இப்படி இருந்தால் இந் நிறுவனம் எத்தனை காலத்திற்கு நடக்கும்? இந்தப் புகளூர் காகித ஆலை வந்தவுடன் பல உறுப்பினர்களும் அதே போல் எங்கள் ஊரிலே ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், அதற்காகத்தான் உண்மை நிலையை நான் சொல்கிறேன். அந்த தமிழ்நாடு பேப்பர் நிறுவனம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. ஆனால் அதில் உற்பத்தி செய்யக்கூடிய காகிதத்தின் விலை அதிகமாக இருக்கிறது. அதனால் மார்க்கெட்டில் போட்டி போட முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழுவைப் போட்டாவது கண்டுபிடித்து அதைத் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் ஆசியாவிலேயே மிகப் பெரிய காகித ஆலை என்று நாம் சொல்லிக் கொள்கிற அந்த ஆலையை மூடவேண்டிய நிலை வந்துவிடும். அந் நிலை வந்துவிடக்கூடாது. அது சிறப்பாகச் செயல்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் அது காடுகளைக் காப்பாற்றுகிற ஒரு நல்ல காரியத்தையும் செய்கிறது. காட்டிலுள்ள மரங்களை அழித்து காகிதம் செய்கிற நிலையை மாற்றி, கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி—பகாஸைப் பயன் படுத்திஇந்தத் தொழிற்சாலையில் காகிதம் தயாரிக்கப்படுவதால், தேசிய சேமிப்பு ஏற்படுகிறது. அந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு சலுகைகள் கொடுக்கின்றோம் என்பது முக்கியம் அல்ல. அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற மானியங்களின் மீது பேசுகிற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> " இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல் "

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தொழில் துறைக்குப் பொறுத்தமான திறமையான ஒருவரை அமைச்சராக நியமித்திருக்கிறார்கள் என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இன்றைய தினம், இந்தியத் துணைக் கண்டம் மட்டும் அல்லாமல் அகில உலகத்திலே இருக்கிற ஜப்பான், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலே இருக்கின்ற அனைத்து தொழில் அதிபர்களையும் தெரிந்து வைத்திருக்கின்ற நம்முடைய அமைச்சர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தொழிலமைச்சராக நியமித்து அவர்கள் 48 தொழில்களை இன்றைய தினம் தமிழகத்திற்குப் பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், உதகையிலே இருக்கிற போட்டோ பிலிம் தொழிற்சாலையின் விஸ்தரிப்பு உத்திரப் பிரதேச மாநிலத்திற்குச் சென்றுவிடுமோ என்று இங்கேயுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களும், பல சட்டமன்ற உறுப்பினர்களும் ஐயத்தை எடுத்துக் காட்டினார்கள். அந்தச் சந்தேகத்தை நீக்கும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பெருமதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களும் அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மத்திய அரசின் மூலமாக இன்றைய தினம் ஊட்டியில் அந்த இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் விஸ்தரிப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.



(மாலை 5–40)

அதேபோன்று மணலியில் 600 கோடி ரூபாய் செலவிலே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையையும் இன்றையதினம் மத்திய அரசின் மூலமாக தமிழக அரசுக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

சிவகாசி எப்படிப்பட்ட தொழில் நகரம் என்பது மாண்புமிகு அருமை அண்ணன் அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். மேற்கு ஜெர்மனியிலும், ஜப்பானிலும் நடைபெறுகின்ற தொழிற்சாலைகளிலே அவர்கள் நேரடியாகச் சென்று அங்கேயிருக்கின்ற ஆக்கபூர்வமான தொழில்களையெல்லாம் பார்த்து வந்ததை இங்கே இருக்கின்ற தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் நன்கு தெரிந்திருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அவர்களும் ஜப்பானின் தலைநகராகிய டோக்கியோவிலேயிருக்கின்ற கோமாரி என்கின்ற அச்சு நிறுவனம் அச்சு இயந்திரங்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனத்தின் உரிமையாளரை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அச்சு நிறுவனத்தினுடைய உரிமையாளர் ஜப்பானிலே இருக்கின்ற கோமாரியோடு மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் நெருக்கமான நட்பைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய உதவியோடு தமிழகத்திலே இன்றைய தினம் பெருவாரியாக அச்சுத் தொழிலைச் செய்கின்ற சிவகாசி பெருநகருக்கு அருகிலே அந்த அச்சுக்கூடங்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையை ஜப்பானிய உறவோடு அருமை அண்ணன் அவர்கள் அமைத்துத் தர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய தொகுதியில்தான் தமிழக அரசின் மூலமா- ஆதரவுடன் சிமெண்ட் ஆலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அந்த சிமெண்ட் ஆலையின் மூலமாக எப்படிப்பட்ட நன்மைகளையெல்லாம் அந்தப் பகுதி மக்கள் பெற்றிருக்கிறார்கள், தொழிலாளர்கள் எவ்வளவு வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட நிறுவனங்களில் டிரை யூனிட்டாக மாற்றி விட்டார்கள். எப்பொழுது அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை வெட் யூனிட்டாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. டிரை செமி

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல் 24

யூனிட்டாக மாற்றுவதற்கு ஏறத்தாழ 13½ கோடி ரூபாய் செலவாகும் என்று அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் 13½ கோடி அல்ல ஒரு ஆண்டில் ஆலங்குளத்திலே இருக்கின்ற சிமெண்ட் ஆலை மட்டும் 15 கோடி ரூபாயைத் தமிழக அரசு இலாபமாக ஈட்டி வருகிறது. எனவே, ஓராண்டில் கிடைக்கின்ற 15 கோடியைத் தமிழக அரசு இந்த ஆண்டிலேயே ஆலங்குளத்தில் அரசுக்குச் சொந்தமான சிமெண்ட் ஆலையை டிரை யூனிட்டாக—டிரை செமி யூனிட்டாக மாற்றித்தர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி மாற்றித் தருகின்ற வண்ணம் அங்கே ஏராளமான விவசாயப் பெருங்குடி மக்கள் தமிழக அரசைப் பாராட்டுவார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் ஆறுமுகம் பேசும்பொழுது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நானும் அவர்களும் இந்தச் சட்டமன்றத்திலே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கூட இதைக் கொண்டுவந்தோம். ஏனென்றால் அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு இந்தத் தூசியானது பட்டு அங்கே இருக்கின்ற பயிர்கள், கிணற்று நீரெல்லாம் கெட்டுவிடுகின்றன. அதையெல்லாம் எண்ணிப்பார்த்து, இப்படி வறட்சியால் வாடுகின்ற விவசாயிகளுக்கு மேலும் தொந்தரவை அந்தத் துகள்கள் தூசி கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே விரைவிலே டிரை செமி யூனிட்டாக அந்த ஆலை மாற்றப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை அண்ணன் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு சிவகாசியிலே நடைபெறுகின்ற அத்தனை தொழில்களைப் பற்றியும் நன்றாகத் தெரியும். பட்டாசுத் தொழில், அச்சுத் தொழில், தீப்பெட்டித் தொழில் ஆகிய இத்தனைக்கும் உரிமங்கள் வாங்க வேண்டுமென்றால் ஏறத்தாழ ஆறு, ஏழு மாதங்கள் ஆகிவிடுகின்றன. அது எப்படி என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஒரு உரிமம் பெறுவதற்காக அதனுடைய நகல்கள் எங்கெல்லாம் போகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலிலே வருவாய்த் துறை, சுகாதாரத் துறை, தீயணைப்புத் துறை, காவல் துறை, உள்ளாட்சித் துறை ஆகிய இத்தனையும் ஒருங்கு சேர்ந்து, அந்தத் துறைகளெல்லாம் ஒருமனதாகப் பரிந்துரை செய்து, மீண்டும் வருவாய்த் துறை—மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வருகிறது. இங்கே இருக்கின்ற அலுவலர்களுக்கு வருகின்ற காலங்கள் ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு மேலாக ஆகிவிடுகின்றன. இதனால் அந்தத் தொழில் செய்கின்ற எண்ணம்கூட ஒரு சிலருக்கு நின்று விடுகின்றது. இதையெல்லாம் ஒருமுகமாக ஆக்கி



1987 ஏப்ரல் 24] [திரு. வி. பாலகிருஷ்ணன்]

வருவாய்த் துறை மூலமாகவோ அல்லது தொழில் துறை ஆலோசனை மூலமாகவோ வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வரவர்களும், மாண்புமிகு அமைச்சரவர்களும் உத்திரவிட வேண்டும். இப்படிப்பட்ட சிறிய சிக்கல்களை நீக்கி வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே நடைபெறுகின்ற முப்பெரும் பணிகளும் அருமையாக நடைபெற வேண்டும். அங்கே இருக்கின்ற தொழில் அதிபர்களெல்லாம் அதைப்பாராட்டுவார்கள் என்பதை இந்தநேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று இங்கே மத்திய அரசின் மூலமாக ஏறத்தாழ பத்து, பதினைந்து ஆண்டுக் காலமாக ஒரு தொழிலைக்கூட தமிழகத்திற்கு அவர்கள் தரவில்லை என்பதை இந்த நேரத்திலே வருத்தத்தோடு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பெரம்பூரில் இருக்கிற இரயில் பெட்டித் தொழிற்சாலை அப்போது ஏற்பட்டது. அதற்கு அடுத்தபடியாக திருச்சியிலே பெல் நிறுவனத்தை ஏற்படுத்தித் தந்தார்கள். அதற்குப் பிறகு பெட்ரோ காம்பிளக்ஸ் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தந்தார்கள். இதை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் இன்றைக்கு இப்படிப்பட்ட பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வடமாநிலங்களிலேதான் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன; தமிழ்நாட்டிற்கு ஒன்றும் வரவில்லை. தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் மத்திய அரசை இயக்குகின்ற பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களுக்கு நெருங்கிய நண்பர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிரதமரை நல்லமுறையிலே அணுகி, நல்ல உறவோடு இருக்கின்ற இந்த நேரத்தில் பெரிய தொழில்களை தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கின்ற வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு தூத்துக்குடியை நீங்கள் மையமாக வைத்துக் கொள்ள வேண்டும். அங்கே தனியார்கள் இணைந்து நடத்துகின்ற 'ஸ்பிக்' தொழிற்சாலை ஒன்றுதான் இருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். அது மட்டுமல்லாமல் அங்கே இருக்கிற அத்தனை மக்களுக்கும் உப தொழில்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் கிட்டும்.

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல் 24

அடுத்தபடியாக சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். சிங்கப்பூர் ஒரு சிறு நகரமாக இருந்தாலும் அங்கே அருமையான தொழிற்சாலைகளை நிறுவி, தொழில் வளத்தை உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். இந்த சேதுசமுத்திரத் திட்டத்தையும் மத்திய அரசு உதவியுடன் நீங்கள் நிறைவேற்றிக் காட்டினால் அயல் நாட்டுக் கப்பல்கள் எல்லாம் நேரடியாக அங்கே வந்து நிற்கின்ற வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டு, ஏற்றுமதியும் இறக்குமதியும் பெருக நல்ல வாய்ப்பு ஏற்படும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போன்று தொழில் முனைவர்களும், தொழில் செய்பவர்களும் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு இன்றைக்கு விற்பனை வரி விதித்திருக்கிறோம். இங்கே உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் உற்பத்தி குறைகிறது. அந்தத் தொழிலையே நிறுத்திவிடுகிற சூழ்நிலையில் தொழிலதிபர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே விற்பனை வரியை எடுத்துவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி, அதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து, நல்லமுறையில் ஆலோசனை செய்து, இந்த விற்பனை வரியை நீக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் சிவகாசியிலே இருந்து சென்ற ஒருவர் பூனா நகரிலே பட்டாசு தொழில் செய்கிறார். அந்த அரசிலே அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு விற்பனை வரி கிடையாது. அதைப்போன்று வேறு சில பொருள்களையும் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே இருந்துதான் பம்பாய் துறைமுகத்திற்கு பல பொருள்கள் செல்லுகின்றன. விற்பனைவரி அங்கே இல்லாத காரணத்தால் அச்சுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், மற்றும் பல தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் எல்லாம் அங்கே சென்றுகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய மாநிலத்தில் அந்தத் தொழில்கள் நலிவடைந்துவிடும். ஆகவே, விற்பனை வரியை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டை விட்டு பல தொழில்கள் போய்விடுகின்ற சூழ்நிலையை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு, அந்தத் தொழில்கள் இங்கே நல்லமுறையில் நடைபெறத் தக்க வகையில் வரிவிகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. வி. பாலகிருஷ்ணன்]

இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் பகுதியில் இருக்கிற தொழிலதிபர்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு தொழிலதிபர் மத்தியப்பிரதேச மாநிலத்திற்குச் சென்று அங்கே ஒரு சிமிண்ட் தொழிற்சாலையை 400 கோடி ரூபாய் செலவில் உருவாக்கியிருக்கிறார்கள். ஏன் அங்கே போய் தொழில் தொடங்கினீர்கள் என்று கேட்டபோது நம்முடைய மாநிலத்தில் அடிக்கடி தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டு விதிக்கிறார்கள்; மூலப்பொருள்கள் சரியாகக் கிடைப்பதில்லை. மூலப் பொருள்கள் வேண்டுமென்றால் நிலக்கரி, இரும்பு போன்ற மூலப் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்றால் கல்கத்தா, பீகார் போன்ற மாநிலங்களிலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது, மதுரை, கோவை போன்ற இடங்களில் எப்படி ஒரு மூலப் பொருளுக்கு ஒரே விலை இருக்கிறதோ அதைப் போன்று இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் மூலப் பொருள்களை எங்கே கொண்டு கொடுத்தாலும் சரி, ஒரே விலைக்குக் கிடைப்பதற்கு உத்தரவாதம் தந்தால், மத்திய அரசின் உதவியோடு நீங்கள் உத்தரவாதம் செய்து தந்தால் தமிழ்நாட்டில் நாங்கள் தொழில்களைத் தொடங்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கினால் இன்னும் பல தனியார்கள் பெரிய, பெரிய தொழிற்சாலைகளை நிச்சயமாக ஆரம்பிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போன்று மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டம் முடிந்த பிறகு திடீரென்று மத்திய அரசு பெட்ரோல் விலையையும், டீசல் விலையையும் இடையிடையே உயர்த்திவிடுகிறார்கள்.

(மாலை 5-50)

இதன்காரணமாக நிறைய இடங்களில் மில் வேலைகளும் இன்னும் பல தொழில்களும் அதாவது ஜெனரேட்டர் மூலமாக இயங்குகிற அத்தனை தொழில்களும் முடங்குகின்ற நிலைமை ஏற்படுகிறது. திடீரென்று டீசல், பெட்ரோல் போன்றவற்றின் விலை உயர்கிறது. எனவே மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி ஒரு சீரான திட்டத்தை வகுத்து எந்த நேரத்திலும் திடீர், திடீர் என்று உயர்த்தாத வகையில் இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். காமராஜர் மாவட்டம் எப்படிப்பட்ட பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே அங்கே ஒரு சிப்காட் தொழில் பேட்டையை இந்த ஆண்டில் அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1987 ஏப்ரல்

அடுத்து ஏறத்தாழ 9 சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் அனுமதி பெறுவதற்காக அனுப்பி இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ராஜபாளையம் பகுதியில் தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோயில், சிவகிரி போன்ற பகுதிகளில் எல்லாம் ஏராளமாக கரும்பு விளைகிறது. அதை மூலப்பொரு ளாகக் கொண்டு ராஜபாளையம் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை தொகுதி. அதுபற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஒரு தொழிற்சாலை கூட அங்கே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனது வைத்தால் நிச்சயமாக ஒரு நூற்பாலையை அந்தப் பகுதியில் ஏற் படுத்தித் தர முடியும். அந்த வகையில் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டு உங்களுடைய மானியக் கோரிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. கே. அன்பழகன் : மாண்புமிக்க பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் மானியக் கோரிக்கையின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

முற்றிலும் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு காகித ஆலை அமைப்பதில் வெற்றி கண்டுள்ளதற்காக நான் பாராட்டுகிறேன். மணலியில் கரும்பாறை மற்றும் கற்களை மெருகூட்டும் தொழிற்சாலை உருவாக்குவது குறித்து காங் கிரஸ் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். 20 கோடி ரூபாய் செலவில் சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்சாலை அமைத்திருப்பது வரவேற்கக்கூடியது. தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் பாராட்டுகிறோம். தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் மூலம் வெப்பம் தாங்கிக் கற்களை உருவாக்கக் கூடிய தொழிற்சாலை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்திருப்பதையும் நாங்கள் வரவேற்கிறோம்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வர்களும் தமிழகத்தில் மத்திய அரசின் முதலீடு அதிகமாக இல்லை என்றும் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை யோடு நடக்கிறது என்றும் லைசன்ஸ் சரியாக வழங்குவதில்லை என்றும் அதிலே காலதாமதத்தை உருவாக்குகிறது என்று சொன்னார்கள். அப்படி என்றால் பணம் கொடுப்பதற்கும் மத்திய அரசு வேண்டும், பழியைப் போடுவதற்கும் மத்திய அரசு வேண்டும் என்பது சரியல்ல. தமிழகத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் முதலீடு பாராட்டத் தக்க அளவில்,



1987 ஏப்ரல் 24] [திரு. கே. அன்பழகன்]

போற்றத்தக்க அளவில் இருக்கிறது என்பதைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். அகில இந்திய அளவில் 1947 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் மத்திய அரசின் முதலீடு 47,323 கோடி ரூபாய். அதில் தமிழ கத்திற்கு மட்டும் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை 2,548 கோடி ரூபாய் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இந்த ஆண்டு ஊட்டியில் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் மூலமாக 168.12 கோடி ரூபாய் செலவில் எக்ஸ்ரே பிலிம் தயாரிக்கும் திட்டத்தையும், மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் 600 கோடி ரூபாய் செலவில் ஆரோமாட்டிக் காம்ப்ளக்ஸ் நிறுவும் திட் டத்தையும் ஏற்படுத்த மத்திய அரசு இசைந்து இருக்கிறது. திருச்சியில் 70 கோடி ரூபாய் செலவில் உலோகக் கலவை ஊடுருவல் தொழிற்சாலை நிறுவியுள்ளது. ஆக இந்தியா விலே பல மாநிலங்கள் பின்தங்கிய நிலையிலே இருந்தும் கூட இளைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும், மத்திய அரசும் தமிழகத்தில் நிறைய அளவில் முதலீடு செய்திருப்பதை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன், பாராட்டு கிறேன்.

இந்திய அரசினுடைய நிதி நிறுவனங்களை எடுத்துக் கொண்டாலும் ஐ.டி.பி.ஐ., ஐ.எப்.சி.ஐ., ஐ.சி.ஐ.சி.ஐ. போன்ற நிதி நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிலை வளர்க்க வேண்டுமென்ற வகையில் அதிகமான நிதியுதவியை வழங்கி இருக்கின்றன. 1982—83-ல் 217.47 கோடி ரூபாயை இந்த நிதி நிறுவனங்கள் வழங்கி இருக்கின்றன. 1983—84-ல் 345.58 கோடி ரூபாயை இந்த நிதி நிறுவனங்கள் வழங்கி இருக் கின்றன. 1984—85-ல் 360.20 கோடி ரூபாயை இவை தமிழ கத்தின் தொழில் வளர்ச்சிக்காக வழங்கி இருக்கின்றன.

இன்றைக்கு நிதி நிறுவனங்களின் உதவி பெறுவதிலேயும் மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களுக்கு அடுத்தபடி யாக தமிழகம், இருந்து கொண்டிருக்கிறது. மத்திய மூலதன மான்ய உதவியை எடுத்துக் கொண்டால் 1971ஆம் ஆண்டிலே இந்த திட்டம் துவங்குகின்ற காலத்திலே இருந்து இன்று வரையில் அந்த உதவியினைப் பெறுவதிலே தமிழகம் முன் அணியில் இருந்து வந்திருக்கிறது. 1983—84-லே 7.9 கோடியும், 1984—85லே 9.26 கோடியும், 1985—86-லே 10.69 கோடியும், ஆக மொத் தம் 49.13 கோடி ரூபாயும் மத்திய மூலதன மான்ய அரசின் உதவி திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு வந்திருக்கிறது.

[திரு. கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 24

அதேபோல லைசன்ஸ் பெறுவதைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டால் இந்தியாவிலேயே அதிக அளவில் இசைவு கடிதங்களையும் தொழில் லைசன்ஸ்களையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. 1985ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால் அகில இந்திய அளவிலே மைய அரசு வழங்கியிருக்கிற லைசன்ஸ் 985. அதிலே தமிழகத்திற்கு மட்டும் 177 லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1986ஆம் ஆண்டை எடுத்துக்கொண்டால் 106 இசைவு கடிதங்களையும் 48 தொழில் உரிமங்களையும் தமிழகத்திற்கு மைய அரசு வழங்கியிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் வெளிநாட்டு உடன் உழைப்பு ஒப்பந்தங்கள் அனுமதி என்ற வகையில் 113-க்கு மத்திய அரசு ஏற்பளிப்பு அளித்திருக்கிறது.

மைய அரசின் மான்ய உதவித் திட்டமானாலும் அல்லது இந்திய அரசு நிதி நிறுவனங்களானாலும் எல்லாவற்றிலும் தமிழகம் முதல் இடத்திலும் இரண்டாவது இடத்திலும் இருக்கிறது. ஆனால்நிதி உதவி பெறுவதிலேயும், லைசன்சுகள் பெறுவதிலேயும் 1வது 2வது இடத்தைப் பெற்றிருக்கிற தமிழகம் தொழில் வளர்ச்சியில் எந்த இடத்தில் இருக்கிறது என்பதை ஆளும் கட்சி நண்பர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் 3வது இடத்தில் இருந்துகொண்டிருந்தது. இன்றைய தினம் தமிழகம் தொழில் வளர்ச்சியிலே பின் தங்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடித்தால் அகில இந்திய அளவில் தமிழகம் 13வது இடத்திற்கு சென்றால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

லைசன்சுகளைப் பெற்றுவிட்டால் மாத்திரம் போதாது. பெற்ற லைசன்சுகளை அமல் படுத்தி தொழிற்சாலைகளை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பெறப்பட்ட லைசன்சுகளில் எவ்வளவு இம்பிளிமென்ட் செய்யப்பட்டிருக்கின்றன எவ்வளவு லைசன்சுகள் செயல்படாமல் இருக்கின்றன. எவ்வளவு லைசன்சுகள் ரத்தாகி இருக்கின்றன என்று கொள்கைக் குறிப்பிலே விவரங்கள் கிடையாது. பெரும்பாலான லைசன்சுகள் வாங்கப்படுகின்றன. இந்த அரசு லைசன்ஸ் வேட்டை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த லைசன்சுகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. பெரும்பாலான லைசன்சுகள் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. கே. அன்பழகன்]

அதே போல இன்பிராஸ்டிரக்சர் பெசிலிட்டீஸ் என்று சொல்லுவார்கள். அந்த அடிப்படைத் தேவைகளான நிலம், தண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகளை செய்து தருவதில் தமிழக அரசு ஆர்வம் காட்டவில்லை. அதனால்தான் நிறைய பேர்கள் தொழில்கள் துவங்க முடியாமல் போகிறது. எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் சுட்டிக் காட்டியது போல தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய ஒருவர் மத்தியப் பிரதேசத்திற்குப் போய் சிமென்ட் தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறார். அப்படிப் பல பேர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் இன்றைய தினம் கர்நாடகத்திற்கும், ஆந்திராவிற்கும் தொழில் துவங்க சென்றுகொண்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலை என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது மதிப்பிற்குரிய ஆர். வி. அவர்கள் மூலமாக தனியார் தொழில் முனைவர்களை அழைத்து வந்து பேசி, உங்களுக்கு என்ன வசதி வேண்டும். தொழில் துவங்க ஆரம்பியுங்கள், உங்களுக்கு வேண்டிய சலுகைகளையும் வசதிகளையும் அரசு செய்து தரும் என்று ஊக்குவித்த அளவிலேதான், ஆவடி, அம்பத்தூர் போன்ற பொட்டல்காடான இடங்கள் எல்லாம் இன்று தொழிற்சாலைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஏன் நீங்கள் அப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்கக்கூடாது. நம்முடைய தமிழகத்திலே இருக்கிற தொழில் முனைவர்களை அழைத்துப் பேசி தொழிற்சாலைகளை உருவாக்க அரசு ஏன் முன் வரக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். 5 கோடி ரூபாய் முதலீட்டில் தனியார் யாரும் தொழில் துவங்க தமிழகத்திற்கு முன் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக அடிப்படை வசதிகள், மின் பற்றாக்குறை கச்சாப்பொருள்களின் பற்றாக்குறை, தொழில் முறையில் சரியான அணுகுமுறை இல்லாதது, உற்பத்தியான பொருளுக்கு உரிய மார்க்கெட் கிடைக்காதது போன்ற குறைபாடுகளின் காரணமாக இன்றைய தினம் தமிழகம் தொழில் வளர்ச்சியிலே இருண்ட நிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 6—00)

தமிழ்நாட்டில் அடிக்கடி ஏற்படக்கூடிய மின்வெட்டு தொழில் உற்பத்தியை பாதிக்கிறது என்பது மட்டுமல்லாமல் பொருளாதார சீர்குலைவையும் தமிழகத்தில் அது உருவாக்கியிருக்கிறது. ஆலங்குளம் சிமென்ட் ஆலையை எடுத்துக் கொண்டால் அடிக்கடி ஏற்படும் மின் வெட்டினால்' அது தன்னுடைய முழு உற்பத்தித் திறனை அடைய முடியவில்லை. அதைப்போல் அரியலூர் சிமென்ட் ஆலை, தமிழ்நாடு அஸ்பெஸ்டாஸ் போன்ற நிறுவனங்களிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவது வேதனைக்குரியது. இது தொழிற்சாலைகளின் அடிப்படை வசதிகளைப் பாதித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிர்வாகங்கள் சரிவர நடைபெறவில்லை.

[திரு. கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 24

அடுத்து தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை வசதிக்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கான திட்டங்களைத் தீட்டவில்லை. உத்திரப் பிரதேசம், கர்நாடகம், ஒரிஸ்ஸா, இராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் இன்றையதினம் Projec reports for infrastructure Development என்பதைத் தயார் செய்து இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் கடனுதவிப் பெற்று திட்டங்களைச் செயல்படுத்தி தொழில் துறையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அப்படிப் பட்ட Project reports for infrastructure Dovelopment கொண்டு திட்டங்களை தமிழகத்தில் நிறைவேற்ற தமிழக அரசு தவறிவிட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல ஆலங்குளம் சிமென்ட் ஆலையின் உற்பத்தித் திறன் 4 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 5 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என்று அரசு அறிவித்தது. ஆனால் நடைமுறையில் அந்த ஆலையில் 3.20 லட்சம் டன் சிமென்ட்தான் உற்பத்தியாகி இருக்கிறது. அரியலூர் சிமென்ட் ஆலையை எடுத்துக் கொண்டால் 5 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 10 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசு இசைவை அளித்திருக்கிறது. ஆனால் ஏற்கெனவே இருக்கிற குறியீட்டு அளவான 5 லட்சம் மெட்ரிக் டன்னை கூட இன்றைய தினம் இந்த இரண்டு தொழிற்சாலைகளும் உற்பத்தி செய்ய முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற பரிதாபமான சூழ்நிலை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து புதிய சர்க்கரை ஆலைகளை எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் கரும்பு உற்பத்தி அதிகரித்துள்ளது வரவேற்கக் கூடியதுதான். மத்திய அரசு கரும்புக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்திருந்தாலும் தமிழக அரசு கரும்பு விவசாயிகளை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்குக் கூடுதல் மானியம் வழங்கி வருகிறது. பெயருக்கு சர்க்கரை ஆலைகளை ஏற்படுத் துவதை விடுத்து, இருக்கிற சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்தி புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு வர வேண்டும். அதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தவகையில் கரும்பு விளைச்சல் தொழில் நுட்ப அம்சங்களைக் கவனத்தில் கொண்டு புதிய சர்க்கரை ஆலைகளை அரசு ஏற்படுத்த வேண்டும். அப்படி உருவாகக் கூடிய சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையில் உருவாக்குவது நன்மை பயப்பதாக அமையும். கிராம விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு அது உதவிகரமாக இருக்கும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. அதோடு ஆலைக்கு வருகிற இலாபத்திலிருந்து



1987 ஏப்ரல் 24] [திரு. கே. அன்பழகன்]

கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் விலையும் கிடைக்கிறது ஆனால் தனியார் ஆலைகளில் கொள்ளை இலாபம் சம்பாதித்து விவசாயிகள் கூடுதல் விலை கேட்டால் அதனை அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் முடிந்தவரையில் சர்க்கரை ஆலைகளை அமைக்க கூட்டுறவுத் துறைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். கூட்டுறவுத் துறையும், பொதுத் துறையும் முன்வரவில்லையென்றால் தனியார் துறைக்கு அதனை கொடுப்பதைப் பற்றி காங்கிரஸ் கட்சிக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் தமிழக அரசு புதிய சர்க்கரை ஆலைகளை அமைப்பதில் தனியார்களுக்கு முன்னுரிமை கொடுத்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆதி பராசக்தி ஷுகர்ஸ், வடாற்காடு, வாணியார் ஷுகர் மில்ஸ், அரூர் தாலுகா, ஆரூரான் ஷுகர்ஸ், கும்பகோணம், கே.வி. கந்தசாமி மில், பொள்ளாச்சி போன்ற பல்வேறு விண்ணப்பங்கள் இன்றைய தினம் தனியார்களுக்கு சொந்தமானவை பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. ஆகவே முடிந்தவரையில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளை உருவாக்குவதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஓமலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் 'டாசல்' நிறுவனத்தின் பீங்கான் மையம் ஒன்று இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு மூடுவிழா நடத்துவதற்கு இன்றைய தினம் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இதுவரையில் அங்கே செயல்பட்டு வந்த பீங்கான் மையத்திற்கு மூடுவிழா நடத்துவதற்கான முயற்சியை முறியடித்து அந்த பீங்கான் நிறுவனம் அங்கே செயல்படுவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனால் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்கள்தான். அந்த நிர்வாகத்திலே தவறு நடக்கிறது என்று சொன்னால், நிர்வாகம் சரியாக இல்லை என்று சொன்னால், அந்த நிர்வாகத்தை சீரமைத்து, செப்பனிட்டு, அந்த பீங்கான் மையம் சிறப்பாக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. காரணம் சேலம் மாவட்டத்திலிருந்து வந்திருக்கக்கூடிய, இன்றைய தினம் தமிழக அமைச்சரவைக்கு பெருமை சேர்க்கக்கூடிய நமது அமைச்சர் அவர்கள் காலத்தில், சேலம் மாவட்டத்தில் உள்ள ஓமலூரில் இருக்கக்கூடிய இந்த பீங்கான் நிறுவனத்திற்கு இப்படிப்பட்ட நிலை வந்தது என்ற சூழ்நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஓமலூர் தாலுக்காவை தொழில்துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவித்து, அங்கே தொழில் வளர்ச்சியை உருவாக்கித்தரவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. அன்பழகன்] [1987 ஏப்ரல் 24

தமிழ்நாடு மாக்னசைட் தொழிலாளர்கள், சேலம் மாக்ன
சைட்டில் பணிபுரிந்த காலத்திற்கு உரிய கிராஜுவிட்டி முழுமை
யாக உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
கிராஜுவிட்டி வழங்கவேண்டும் என்று அந்தத் தொழிலாளர்கள்
பல ஆண்டுக்காலமாக தெரிவித்து வருகிறார்கள். நானும் இந்த
மாமன்றத்திலே பலமுறை இதைப் பற்றிப் பேசி இருக்கிறேன்.
ஆகவே இந்த கிராஜுவிட்டி பிரச்சினையை விரைவாக முடித்துத்
தரவேண்டும். அரசு போட்ட ஒரு ஒப்பந்தத்தை ஒரு தனிப்
பட்ட முதலாளி மீறி அந்த ஒப்பந்தப்படி தரவேண்டிய பணத்
தைத் தர மறுக்கிறார் என்று சொன்னால், அரசு கடுமையான
நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு உரிய முழு கிராஜு
விட்டியைப் பெற்றுக்கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம்-திருவிடைமருதூர் தாலுக்காவை, தொழிற்
துறையில் பின்தங்கிய தாலுக்காவாக அறிவித்து அங்கே தொழில்
வளர்ச்சியை உருவாக்கித்தரவேண்டும் என்று அருமைக்குரிய
சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சார்பாகக்
கேட்டுக்கொண்டு, மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத்
தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தற்காலிகத் தலைவர்
அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்
கூடிய தொழில் துறை மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில
கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்ல
விழைகிறேன். தொழில் துறை என்பது இன்றைக்கு ஒரு நாட்டுக்கு
மிகமிக அவசியமான துறையாகும். ஆகவே தொழில்கள், தொழிற்
சாலைகள் அதனால் ஏற்படுகின்ற உற்பத்திகள் எந்த அளவிற்கு
ஒரு நாட்டிலே ஏற்படுகிறதோ, அந்த அளவிற்குத்தான் அந்த
நாட்டினுடைய ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் அந்த நாட்டி
னுடைய வளர்ச்சிக்கும் அவைகள் உதவிகரமாக இருக்கமுடியும்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் கூட சொன்னார்கள்.
தனியார் துறைக்கு வழங்கக்கூடாது, கூட்டுறவுத் துறைக்கு,
பொதுத் துறைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்
என்று சொன்னார்கள். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு
முழு உடன்பாடு உண்டு. ஆனால் இன்றைக்கு மத்திய சர்க்காரி
னுடைய கொள்கை, முழுக்க முழுக்க பொதுத்துறை, கூட்டுறவுத்
துறைக்குப் பதிலாக முதலாளித்துவக் கொள்கையை வளர்க்கக்
கூடிய ஒன்றாகத்தான் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட கொள்
கையைக் கொண்டு இருப்பதால்தான், இளம் பாரதப் பிரதமர்
அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதலில் ஒரு கொள்கையை அறி
வித்தார்கள். அந்தக் கொள்கை என்னவென்றால், பொதுத்



1987 ஏப்ரல் 24] [திரு. பொ. உத்திராபதி]

துறை, கூட்டுறவுத்துறை ஆகியவற்றில் உள்ள தொழிற்சாலை
களுக்கு நலிவு ஏற்பட்டால் அதை அத்தோடு விட்டுவிட்டு,
தனியார் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதைப் பெருக்க
வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்து இருக்
கிறார்கள். இந்தக் கொள்கையினால் ஏற்படுகின்ற நெருக்கடி
இன்றைக்கு ஒவ்வொரு மாநிலத்தையும் பாதிப்பது மட்டுமல்ல.
நமது மாநிலத்திலேயும் இன்றைக்கு தொழில் துறை பின்னுக்குத்
தள்ளப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணம் இந்தக்
கொள்கையினுடைய அமைப்பாகும்.

நமது அரசு 12 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கேட்டு
1 ஆண்டுக் காலம் ஆகிறது. ஆனால் இன்னமும் அந்த 12 ஆலை
களுக்கு அனுமதி கிடைக்காமல் காலம் கடத்துவதால் மாநிலத்தில்
தொழில் கொள்கையை எப்படி வளர்க்க முடியும், அந்தக்
கொள்கை எப்படி வளரும்? ஆகவே தமிழக அரசை நான் கேட்
டுக்கொள்வது, மத்திய அரசினுடைய கொள்கையைப் பின்பற்று
வதினுடைய விளைவு, தமிழகத்தினுடைய தொழில்துறை இன்
றைக்கு 12-வது இடத்திலே தள்ளப்பட்டு இருப்பதாக சொல்கி
றார்கள். இது உண்மையா? பொய்யா? என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது தெரிவிக்கவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த அடிப்படை
யில் பொதுத்துறைக்கும், கூட்டுறவுத்துறைக்கும் தமிழக அரசு
அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்
பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறைக்கு
ஒரு சர்க்கரை ஆலையை வழங்கி, தஞ்சை மாவட்டத்தில் ஒரு
தொழிலை உருவாக்கியதற்காக, நான், என்னுடைய நன்றியைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தஞ்சை
மாவட்டம் என்பது முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி வாழக்
கூடிய மாவட்டம். ஆகவே, இன்றைக்கு விவசாயத்திலே ஒரு
நம்பிக்கை இல்லாத நிலைமை வருகிறபோது மேலும் மேலும்
தஞ்சை மாவட்டத்திற்கு தொழிற்சாலைகளை உருவாக்கிக்
கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

(இரவு 6—10)

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நரிமணத்தில்
எண்ணெய் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் கோவில் களப்பாலில்
எண்ணெய் எடுக்கலாம் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. சோவியத்
நிபுணர்கள் காவேரிப் படுகையில் கனிவளங்களும், எண்ணெய்
வளங்களும் அதிகமாக இருப்பதாக இன்றைக்குச் சொல்லியிருக்
கிறார்கள். அங்கே எடுக்கக் கூடிய எண்ணெயை சென்னை, மணலி
யிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு எடுத்து வருவதால்
அதிகச் செலவு ஆகிறது. எனவே, அமைச்சர் அவர்களை நான்
கேட்டுக்கொள்வதெல்லாம், தஞ்சை மாவட்டத்தில், அங்கே

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 24

எடுக்கக்கூடிய எண்ணெயை சென்னைக்கு கொண்டு வரக்கூடிய
செலவை மிச்சப்படுத்தக்கூடிய அளவுக்கு அந்த மாவட்டத்தி
லேயே ஒரு தொழிற்சாலையை உருவாக்கி அதன் மூலமாக விவ
சாயக் குடும்பத்தில் பிறந்து, படித்துவிட்டு வேலையில்லாமல்
இருக்கக்கூடியவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற வகையில்
எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை தஞ்சை மாவட்டத்தில்
உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன். இரண்டாவது, உப்பு இரசாயனத் தொழிற்சாலைக்காக
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1980ஆம் ஆண்டில் மறவக்
காட்டில் கால்நடு விழாவைச் செய்தார்கள். இன்றைக்கு 6, 7
ஆண்டுகளாகப் போகிறது. அது இந்தக் கால்நடு விழாவோடு
அப்படியே இருக்கிறது. அதனால் வேதாரண்யத்தில் கிடைக்கக்
கூடிய உப்பு இன்றைக்கு தூத்துக்குடிக்குச் சென்று கொண்டிருக்
கிறது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் கால்நடுவிழா செய்த
அந்த அடிப்படையில் ஒரு உப்பு இரசாயனத் தொழிற்சாலையை
தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது, தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு கரும்பு ஆலை
கள் அதிகமாக இருப்பதனால், கரும்புச் சக்கைகள் அதிகமாகக்
கிடைக்கின்றன. வைக்கோலும் அதிகமாகக் கிடைக்கிறது. இது
இரண்டையும் பயன்படுத்தி ஒரு காகிதத் தொழிற்சாலையை
தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச்
சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், நான்காவது, பட்டுக்கோட்டையில் வனஸ்பதி
தொழிற்சாலை ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சையில் இன்றைக்கு அரிசி ஆலைகள் அதிகமாக
இருக்கின்றன. இந்த அரிசி ஆலைகளில் கிடைக்கக்கூடிய தவிடு
எதற்கும் பிரயோசனம் இல்லாமல் வீணாகப் போய்க்கொண்டிருக்
கிறது. ஆகவே, இந்த தவிட்டைப் பயன்படுத்துவதற்கு ஒரு
தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம். தவிட்டி
லிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய அளவுக்கு ஒரு சிறிய தொழிற்
சாலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்
பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து நெல்
உலர்த்தும் ஆலைகள் மத்திய சர்க்காரால் கட்டப்பட்டு அந்த
ஆலைகள் எதற்கும் பயன்படுத்தப்படாமல் தஞ்சை மாவட்டத்
தில் அதிகமான எண்ணிக்கையில், 20 ஆண்டுக் காலமாக அப்
படியே கிடக்கின்றன. இந்த நெல் உலர்த்தும் ஆலைகள் மத்தி-



1987 ஏப்ரல் 24] [திரு. பொ. உத்திராபதி]

[illegible]-க்கு சொந்தமானவை. கோடிக்கணக்கான ரூபாயில் இந்த
[illegible]லைகள் பல இடங்களிலே கட்டப்பட்டு பிரயோசனம் இல்லா
மல் கிடக்கின்றன. இதுகுறித்து மத்திய சர்க்காரை அணுகி,
அந்த ஆலைகளை எடுத்து நமது மாநிலத்தில் அந்தந்த மாவட்
டங்களிலுள்ள, நெல்லையும், அரிசியையும் அவைகளில் பயன்
படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு,
அதிகாரிகளை அனுப்பி அந்த நெல் உலர்த்தும் ஆலைகளை என்ன
செய்யலாம் என்று கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டு
மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோல், மாம்பழம், தக்காளி, சாத்துக்குடி இப்படி பல
பழங்களிலிருந்து பழரசம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்
சாலைகள் இன்றைக்கு பெங்களூரில் அதிகமாக இருக்கின்றன.
தமிழ்நாட்டில்தான் அதிகமாக பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டு
இன்றைக்கு பெங்களூருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகவே
அந்தப் பழங்களைக் கொண்டு தமிழகத்திலேயே பழச்சாறு
உருவாக்கக்கூடிய அளவுக்கு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த
வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, இன்றையதினம், கரும்பு விவசாயிகள் மூன்று
தினங்களாக உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருக்கிறார்கள்.
இன்றைக்கு கரும்பு அதிகமாக அபிவிருத்தி செய்யக்
கூடிய அளவுக்கு சர்க்கார் முன்வந்திருக்கும்போது, கரும்பு
உற்பத்தியை அதிகமாக்க வேண்டும். கரும்பு உற்பத்தி
செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் அதை நம்பி வாழக்
கூடிய தொழிலாளர்களுக்கும் அவர்கள் வாழ்வில் முன்னேற்
றத்தை உண்டாக்கவேண்டும். அந்த அடிப்படையிலே
பார்க்கிறபோது இன்றைக்கு மஹாராஷ்டிராவில் 300 ரூபாய்;
கர்நாடகாவில் 240 ரூபாய்; ஆந்திராவில் 230 ரூபாய் என்று அரசே
ஆலைகளில் விலை நிர்ணயம் செய்து அங்குள்ள விவசாயிகளுக்கு
ஊக்கம் அளிக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள விவ
சாயிகளுக்கு மத்திய சர்க்கார் 170 ரூபாயும், நமது சர்க்கார்
30 ரூபாயும், ஆக 200 ரூபாய் என்பது எந்தக் காரணத்தைக்
கொண்டும் அவர்களுக்குக் கட்டுப்படியாகாது. நான் நமது
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அவர்கள் 300 ரூபாய்
கேட்கிறார்கள்; இருந்தாலும் இடைக்கால ஏற்பாடாக 250
ரூபாயாவது கரும்பு விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு நமது அமைச்
சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, 1986—87ஆம் ஆண்டு கருங்குளம் சர்க்கரை ஆலை
யிலே 240 ரூபாய், வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையிலே 230
ரூபாய், கோத்தாரி சர்க்கரை ஆலையிலே 220 ரூபாய் கொடுத்திருக்கி
றார்கள். கோத்தாரி, வடபாதிமங்கலம் பகுதிகள் நல்ல மண்
வளம் நிறைந்த பகுதி, ஆனால் சர்க்கரையினுடைய சத்து குறை
வாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம்

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 24]

என்று தெரியவில்லை. இந்தப் பகுதிகளிலே இருக்கிற மண்
நல்ல தரமாக இருக்கிறபோது. கரும்பில் மட்டும் சத்து அதிகமாக
இல்லை என்று கணக்கு காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே,
விவசாயிகள் இன்றைக்கு நம்பிக்கையை இழந்துகொண்டு இருக்கி
றார்கள். அரசு, அதிகாரிகளை அனுப்பி அந்த கரும்பு எந்த அள
வுக்கு சத்து உள்ள கரும்பு என்று பார்த்து அதற்குத் தகுந்தபடி
அவர்களுக்கு விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
அதைப்போல கோ. 671 என்று கரும்பு ரகம் இருக்கிறது. அந்த
ரகக் கரும்பு போடுபவர்களுக்கெல்லாம் ஒரு ஏக்கருக்கு ஆயிரம்
ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. இபபோது அது நிறுத்தப்
பட்டு விட்டது. அதை எந்தக் காரணத்திற்காக நிறுத்தினார்கள்
என்று தெரியவில்லை. விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக புது
புது விதைகளை நாம் கொடுக்கிறபோது அந்த மானியத்தைத்
தொடர்ந்து கொடுத்தால் தான் விவசாயிகள் உற்பத்தியைப்
பெருக்குவார்கள். அதேபோல் விவசாயிகளுக்கு இந்த 671 நம்பர்
ரக கரும்பு உற்பத்தி செய்து அதிக சத்துள்ள கரும்பைக் கொடுப்
பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோல் இன்றைக்கு சர்க்கரை முதலாளிகளுக்கு 440
ரூபாய் குவிண்டாலுக்கு என்று இருந்ததை இன்றைக்கு 480
ரூபாயாக மத்திய அரசு சர்க்கரை விலையை உயர்த்தி இருக்
கிறார்கள். அப்படி சர்க்கரை விலையை உயர்த்தியது மட்டும்
அல்லாமல் 65 சத விகிதம், 35 சத விகிதம் என்று லெவி இருந்
ததை இன்றைக்கு சர்க்கரை ஆலைகளுக்கு 50 சத விகிதம் லெவி
யாகவும், 50 சதவிகிதம் வெளி மார்க்கெட்டில் விற்கலாம் என்
றும் மத்திய அரசு அறிவித்து இருக்கிறது. ஆக இதி
லிருந்து பார்க்கிறபோது மத்திய அரசு யாரைப் பாதுகாக்கிறது?
சர்க்கரை ஆலை முதலாளிகளைப் பாதுகாக்கிறதே
தவிர வேறு அல்ல. சர்க்கரை முதலாளிகள் அதிக விலைக்கு
விற்று அவர்கள் மேலும் அதிகமான லாபத்தைப் பெறுவதற்கு
மத்திய அரசு வழி வகுத்து இருக்கிறதே தவிர உற்பத்தி
செய்கிற விவசாயிகளுக்கு அதிகமான விலை கொடுப்பதற்கு
மத்திய அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே
இதை எல்லாம் பார்க்கிறபோது எதிர்காலத்தில் தமிழக
அரசாவது கரும்பு விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்றைக்கு சர்க்கரை ஆலைகளுக்கு தண்ணீருக்கு உத்திரவாதம்
இல்லை. மின்சார இணைப்புக்கு உத்திரவாதம் இல்லை.
தொழிற்சாலைகள் முழுமையான நாட்கள் ஓடுவது இல்லை.
இதனால் யார் பாதிக்கப்படுகிறார்கள்? முதலாளிகள் அதிகமாகப்
பாதிக்கப்படுவது இல்லை. 2 மாதம் பாதிக்கப்பட்டாலும் பிறகு
அடுதலாக 2 மாதங்கள் ஓட்டிக்கொள்கிறார்கள். ஆனால் இடை



1987 ஏப்ரல் 24] [திரு. பொ. உத்திராபதி]

யில் பாதிக்கப்படுபவர்கள் அங்கே பணியாற்றக்கூடிய தொழி
லாளர்கள் தான். கரும்பு 2 மாதம் ஆகிவிட்டா கரும்புக்கு
வெயில் பட்டு விடுகிறது. ஆகவே இதை நம்பி கிராமப்புறத்தில்
வேலை செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படு
கிறார்கள். ஆக கரும்பு விவசாயிகள், விவசாயத் தொழிலா
ளர்கள், சர்க்கரை ஆலையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்
கள் இவர்களை எல்லாம் பாதிக்கக்கூடிய அளவுக்கு இன்றைக்கும்
தண்ணீரும், மின்சாரமும் அவர்களுக்கு தடங்கலாக இருக்கிறது.
ஆகவே இவைகள் எல்லாம் அவர்களுக்கு ரெகுலராக
கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஒரு சர்க்கரை ஆலை ஒரு ஆண்டில் 8 மாதம், 10 மாதம்
ஓடவேண்டும். ஆனால் பரவலாக பார்த்தால் 5 மாதம், 7 மாதம்
தான் சர்க்கரை ஆலை ஓடுகிறது. இடையில் 2 மாதங்கள் அதை
சுத்தம் செய்வதற்கு நிறுத்திவிடுவார்கள், அந்த 10 மாதத்தில்.
ஆனால் சராசரியாக 8 மாதம் ஓட வேண்டும். இப்போது 5
மாதம், 7 மாதம் என்று வைத்துக்கொண்டாலும் கூட சராசரி
யாக இன்றைக்கு 6 மாதம் தான் சர்க்கரை ஆலைகள் ஓடு
கின்றன. ஆகவே அதை கூடுதலான நாட்கள் ஓட்டுவதற்கு
எப்படி செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

இன்று புதிதாக சர்க்கரை ஆலைகள் மயிலாடுதுறையில்
கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்த இருக்கிறீர்கள். ஆனால்
பெரும் பகுதி இன்றைக்கு தனியார்கள் தான் சர்க்கரை ஆலைக்கு
அனுமதி கேட்டு இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு தனியார்
நடத்துவதற்கும், கூட்டுறவுத் துறையும், பொதுத் துறையும்
நடத்துவதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டால், அந்த
கழிவு நீர் வருகிறபோது கூட்டுறவுத் துறையும், பொதுத்துறை
யும் அதை கடைசிவரையில் ஓட்டி சர்க்கரையை உருவாக்கு
கிறார்கள். ஆனால் தனியார் துறையில் அந்த கழிவு நீரை
பாதியில் நிறுத்தி அதை எடுத்து சாராயத் தொழிற்சாலைக்கு
அனுப்பி விடுவதால் அந்த கரும்பு கொடுக்கக்கூடிய விவசாயி
களுக்கு அந்த சர்க்கரை அதிகமான தரம் இல்லாததால் அவர்
களுக்கு அந்த விலை குறைவாக கிடைக்கிறது. ஆகவே கூட்டுற
வுத் துறையிலும், பொதுத் துறையிலும் எப்படி இந்த கழிவு நீரை
கடைசி வரைக்கும் வைத்து சர்க்கரை ஏடுக்கிறார்களோ, ஒரு
டன்னுக்கு 100 கிலோவுக்கு ஒரு மூட்டை சீனி எடுக்கிறார்களோ
அதேபோல் இன்றைக்கு தனியார் துறையில் இல்லை. ஆகவே
ஒரு டன்னுக்கு ஒரு மூட்டை சீனி எடுக்கக்கூடிய அளவுக்கு
கூட்டுறவுத் துறையும் பொதுத் துறையும் எடுத்துக்கொண்டு
இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் கூட்டுற
வுத் துறைக்கும் பொதுத் துறைக்கும் முக்கியத்துவம் கொடுக்க
வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக்
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 24

இந்த கரும்பு விவசாயிகளுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கு
இதற்கு முன்பு முத்தரப்பு மாநாடு கூட்டுவது வழக்கம். விவ
சாயிகள், ஆலை முதலாளிகள், அரசு தரப்பு அதிகாரிகள் இவர்
களை வைத்து முத்தரப்பு மாநாடு நடத்தி விலையை நிர்ணயம்
செய்வார்கள். ஆனால் இன்றைக்கு அந்த முத்தரப்பு மாநாட்டை
கூட்டுவது என்பதை கைவிட்டு ஆகிவிட்டது. நான் மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது எல்லாம், இந்த
முத்தரப்பு மாநாட்டை இந்த ஆண்டிலாவது கூட்டி விவசாயி
களை, அரசு அதிகாரிகளை, ஆலை முதலாளிகளை அழைத்து
முத்தரப்பு மாநாட்டை கூட்டி எந்த எந்த ஆலைகளிலே எந்த
எந்த விவசாயிகளுக்கு எல்லாம் நெருக்கடி இருக்கிறது. விலை
எந்த அளவுக்கு கொடுத்தால் கட்டுப்படி ஆகும் என்பதைப் பற்றி
எல்லாம் பார்த்து செய்யவேண்டும். மத்திய அரசு ஒரு அறிவிப்பு
தருகிறது, மாநில அரசினர் விலையை கூட்டிக் கொடுக்கவேண்டும்
என்று போராடிக் கொண்டு இருக்கிறார்கள். இடையில்
இந்தப் பிரச்சினையை தீர்க்கவேண்டுமானால் முத்தரப்பு மா
நாட்டின் மூலமாகத்தான் விவசாயிகளுக்கும், சர்க்கரை ஆலை
முதலாளிகளுக்கும் அரசுக்கும் ஒரு சுமுகமான தீர்வு காண முடி
யும் என்ற அந்த அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
எதிர்காலத்தில் இந்த ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்
டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த தொழில் துறையும், மாசு கட்டுப்பாட்டுத்
துறையும் இன்றைக்கு தனித் தனியாக இருக்கின்றன. சர்க்கரை
ஆலையிலிருந்து வரக்கூடிய அந்த கழிவு நீரினால்—வடபாதி
மங்கலத்தில் உள்ள சர்க்கரை ஆலையிலிருந்து வெளியே வருகிற
கழிவு நீரினால் பக்கத்தில் உள்ள அன்னுக்குடி போன்ற இன்னும்
10 கிராமங்களில்—சுகாதாரக் கேடு இன்றைக்கு ஏற்பட்டு இருக்
கிறது. இதே மாதிரி தான் ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலிருந்தும்
இந்த கழிவு நீர் போய் சுகாதாரக் கேடு அதிகமாகிக் கொண்டு
இருக்கிறது.

(இரவு 6-20)

ஆகவே இந்தக் கழிவு நீரைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒருதுறை
தனியாகவும், தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கக் கூடிய
ஒரு துறை தனியாகவும் செய்யப்பட்டு வருகிறது. தொழில்துறை
யைச் சார்ந்த அதிகாரிகள் சொன்னால்கூட, இந்த மாசு கட்டுப்
பாட்டுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் கேட்கமாட்டேன் என்
கிறார்கள். ஆகவே எதிர்காலத்தில் இந்த 2 துறைகளையும்
ஒன்றாக இணைத்து செயல்படுத்தினால்தான் இப்பேர்ப்பட்ட
காரியங்களைத் தடுக்கமுடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. பொ. உத்திராபதி]

கரும்பு டன்னுக்கு விலையாக ரூ. 300 கொடுக்கவேண்டும்.
முத்தரப்பு மாநாட்டை கூட்டவேண்டும். கரும்பு மானியத்தை
வழக்கம்போல் வழங்கவேண்டும். அந்தந்த ஆண்டு சர்க்கரைச்
சத்து அடிப்படையில் விலையை நிர்ணயம் செய்யவேண்டும்.
ஆலையின் லாபத்தை, ஆலையை நவீனப்படுத்தவும், விவசாயி
களை ஊக்குவிக்கவும் பயன்படுத்தவேண்டும். ஆலையின் விதி
முறைகளை, விவசாயிகளைக் கொண்ட கமிட்டியால் நிர்ணயிக்க
வேண்டும். தனியார் ஆலையில் ரெக்கவரி குறைவு. விவசாயி
களின் சந்தேகம் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசுத்
திட்டத்திலுள்ள சர்க்கரை ஆலைகளை அரசு கூட்டுறவுத் துறை
யில் கொண்டுவரவேண்டும். ஆகவே இந்த அடிப்படையில் நமது
அமைச்சரவர்கள் எதிர்காலத்தில் தமிழகத்தினுடைய தொழில்
துறையை முன்னேற்றுவதற்காக, மத்திய சர்க்கார் இன்று காலங்
கடத்துவதைப் போக்க, மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும்,
ஆளுங்கட்சி சொல்வது போன்று கணவன்—மனைவி உறவின்
அடிப்படையில் மேலும் உறுதிப்படுத்தி, அந்த 12 சர்க்கரை
ஆலைகளுக்கு இந்த ஆண்டே அனுமதி வாங்கி, தமிழகத்தி
னுடைய கரும்பு விவசாயிகள், உற்பத்தியைப் பெருக்குவதற்கும்,
தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கும் சர்க்கரை உற்
பத்தியை பெருக்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, அமை
கிறேன். வணக்கம்.

திரு. ஜி. கே. ஜே. பாரதி : மாண்புமிகு பேரவையின் துணை
நாயகர் அவர்களே, தொழிற் கொள்கை பற்றிய மானியக் கோரிக்
கையின் கீழ் நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின்
சார்பாக என்னுடைய கருத்துப் பெட்டகங்களை வைக்கலாம்
என்று நான் எண்ணுகின்றேன். எங்களுடைய இந்தி
யப் பேரரசினுடைய தலைமை அமைச்சராக, என்னுடைய
இதய வேந்தன், இந்தியப் பேரரசினுடைய தலைமை அமைச்ச
ராக இருக்கின்ற இந்தியப் பேரரசினுடைய எழுச்சிமிகு தலை
வன், ராஜீவ் காந்தியினுடைய எண்ண மூலங்களைப் பிரதிபலிக்
கின்ற வகையில் தொழிற் கூடங்கள், தமிழகத்தில் மலர வேண்டும்
என்ற எண்ண உணர்வோடுதான் சில கருத்துக்களை இங்கே
வைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

காங்கிரஸ் பேரரசு தமிழகத்திலே செங்கோலோச்சியபோது
இங்கேயிருந்த தொழிற்சாலை பட்டியல்களை பல்வேறு பேரவை
மன்ற உறுப்பினர்கள் இங்கே படம் பிடித்துக் காட்டினார்கள்.
நானும் படம் பிடித்துக் காட்டுவதிலே தவறு ஒன்றுமில்லை
என்று எண்ணுகின்றேன். காரணம், அரவங்காட்டிலே துப்பாக்கித்
தொழிற்சாலை, திருவரம்பூரிலே பாய்லர் தொழிற்சாலை,
திருச்சி, ராணிப்பேட்டையில் படைக்கலன் தொழிற்சாலை, ஆவடி
யிலே டாங்குத்தொழிற்சாலை, நெய்வேலியில் லிக்னைட் கார்ப்
பொரேஷன், மணலியின் ரிஃபைனரீஸ் என்று சொல்லுகின்ற
மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ், பெரம்பூர் கோச் ஃபேக்டரி என்று

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 ஏப்ரல் 24

இன்னும் சொல்லப்போனால், இப்படிப்பட்ட தொழிற்கூடங்களை காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது பெருந் தலைவர் காமராஜ் அவர்கள், அங்கே நடுவண் அரசுப் பொறுப் பிலே இருந்தவர்களைத் தட்டி எழுப்பி, இந்தத் தொழிற் கூடங் களை உருவாக்கினார்கள். ஆனால் அன்றைய தினம் இந்தியா முழுவதும் காங்கிரஸ்தான் செங்கோலோச்சியது. பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும், அந்த மாநிலங்களிலே இல்லாத பெருமையை எல்லாம் தமிழகத்திலே கொண்டு வந்து சேர்த் தார்களே, அந்தத் தமிழ் இனத்தினுடைய பெருமையை எண்ணி, இன்றும் இறும்பூது எய்துகின்றோம், இந்த எய்துகின்ற இன்பத் திலே தான் இன்றைய தமிழ் மண்ணிலே இந்தத் தொழிற் கூடங்கள் பல்கி, பெருகி வளர்ந்திருக்கிறது என்ற எண்ண நெகிழ்ச்சியை இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

ஆனால் இப்படிப்பட்ட தொழிற்கூடங்கள் வளர்ந்து இருந் தாலும் இந்தத் தொழிற்கூடங்களுக்கு உரிமங்களை வழங்குவதில் நம்முடைய தமிழக அரசு எப்படியிருக்கிறது என்ற எண்ண உணர்வை நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்தத் தொழிற்கூடங் களுக்கான உரிமங்களை வழங்குவதில் சில நேரங்களில் முட்டுக் கட்டைகள் இருப்பதாக தொழில் வல்லுநர்கள் சொல்கிறார்கள். இந்தத் தொழிற்கூடங்களை செம்மைப்படுத்தவேண்டுமென்று உரிமங்களைக்கோரி வருகின்றவர்களுக்கு சிறப்பான உரிமங்களைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற அளவில், ஒரு புதுமையான, பாலிசி என்று சொல்கிறார்களே ஒரு கொள்கை உணர்வினை செம்மைப்படுத்துவதாக, ஒரு 'அட் ரேக்ஷன்' என்று சொல்வார்களே, ஒரு ஆர்வம் மிக்க செயல் கொள்கை இங்கே இல்லை. ஆனால் இங்கே நம்முடைய சிறப்பான உடன் பணி முடிப்பு அமைப்பு என்கின்ற நம்முடைய 'சிங்கிள் விண்டோ சிஸ்டம்' அல்லது ஏஜென்சீஸ் என்று சொல்கின்ற ஒரு அமைப்பை வைத்திருப்பதாக நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறீர்கள். இந்த 'சிங்கிள் விண்டோ சிஸ்டம்' என்று சொல்லப்படுகின்ற அந்த அமைப்பின் மூலமாக இங்கே மின்சாரத்தைப் பெறவேண்டு மானால், அதற்கு ஒரு சிக்கல், நிதியைப் பெற வேண்டுமென்றால் அதற்கு ஒரு சிக்கல், அழகான ஒரு கட்டிடத்தைக் கட்டவேண்டு மென்றால், அதனுடைய பிளான் 'அப்ரூவல்' பெறுவதிலே ஒரு சிக்கல், தொலைபேசி பெறவேண்டுமென்றால், அதிலே ஒரு சிக் கல், இன்னும் இப்படி பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்ற அந்த உரிமங்களைப் பெற்று, ஒரேயிடத்தில் வலிமை பொருந்திய ஒரு இயக்கமாக மாற்றுவதற்கு இந்தத் தொழிற்கூட அமைப்பு களை செம்மைப் படுத்துவதற்காக நாம் என்ன முறையில் திட் டங்களை உருவாக்கப்போகிறோம் என்ற உணர்வினை நாம் நன் றாக எண்ணிப் பார்க்கவேண்டும்.



[திரு. ஜி. கே. ஜெ. பாரதி]
1987 ஏப்ரல் 24]

அதனால் மட்டும் இந்த தொழிற்கூடங்களை செம்மையான
முறையிலே உருவாக்கமுடியுமா என்ற உணர்வினை எண்ணிப்பார்க்
கின்ற போது அதற்கு மின்சாரம் தேவைப்படுகிறது. மின்சாரம்
என்று சொல்லுகின்ற போது electricity is one of the most powerfull
instruments of social and economic change and a most vital part of the
infrastruc ure necessary for economic growth என்று சொல்கிறார்கள்.
இந்த வளர்ச்சி பொருந்திய மின்சாரத்தை நம்முடைய தமிழ்
மண்ணிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு என்ன திட்டங்களை
நாம் வைத்திருக்கிறோம் என்று கூர்ந்து ஆய்ந்து பார்த்தால்
பழைய திட்டங்களைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால்
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மாற்றாந்தாய் மனப்
பான்மையோடு நடுவண் அரசு நடந்து கொள்கிறது என்று சொல்
வார்கள். ஆட்சிக் கட்டிலிலே செங்கோலோச்சுகின்ற டெல்லி
மாநகரத்து நண்பர்கள்தான், ஆட்சியாளர்கள்தான் செய்ய
வேண்டுமென்று சொல்வார்கள். ஆனால் இங்கே கொள்கைக்
குறிப்பிலே கூட 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக சிறிய தொழிற்
சாலைகள், தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற நேரத்தில்
அங்கே சிறிய மின் நிலையம் அமைக்க வேண்டும் என்ற ஒரு
திட்டத்தினை தமிழக அரசு உருவாக்கப் போகிறது என்று ஆட்சிக்
கட்டிலின் தலைமைப் பொறுப்பிலே இருந்த அமைச்சர் பெருந்
தகை அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது பல்வேறு
தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மின்சாரத் தட்டுப்பாட்டின்
காரணமாக பல்வேறு தொழிற்கூடங்கள் மூடிக் கிடக்கின்றன.
எங்கே மூடிக் கிடக்கிறது என்று ஆதாரம் சொல்ல முடியுமா
என்று அமைச்சர் பெருந்தகை கேட்பார்கள். கொடுங்கையூரில்
சிப்காட் தொழிற்சாலையில் 48 இடங்கள் இருக்கின்றன. அங்கே
16 இடங்கள் தான் நடைபெறுகின்றன. மீதியெல்லாம் மூடிக்
கிடக்கின்றன. அந்த 16 நடைபெறுகின்றதிலே அதற்குக் கூட
இரண்டு மணிநேரம்தான் மின்சாரம் கிடைக்கின்றது. அதுவும்
மின்சாரம் இல்லாமல், தண்ணீர் இல்லாமல் மூடிக் கிடக்கின்ற
அந்த தொழிற் கூடங்களை செம்மைப் படுத்துவதற்கு முன்னாலே
சிப்காட் நிறுவனம் ஓடி வருகின்றது. கடன் கொடுத்த கடன்
காரர்களைப் போல் ஓடி வருகின்றார்கள். கடன் பெற்றார் நெஞ்
சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று சொல்வதைப்
போல கடன் பெற்ற தொழிற்கூட வல்லுநர்கள் அந்த தொழிற்
சாலை உரிமையாளர்கள் பணம் கட்ட முடியாமல் தொழிலையும்
இயக்க முடியாமல், ஊதியத்தையும் பெற முடியாமல் இலாபத்தை
பெற முடியாமல், அந்த தொழிற்பேட்டைகளை நம்முடைய
அதிகார நண்பர்கள் சீல் வைத்துவிட்டு அமைதியாக சென்று
விடுகின்ற காட்சியைப் பார்க்கின்றோம். இந்தக் காட்சியை நம்
முடைய அமைச்சர் அவர்கள் உளப்பூர்வமாக எண்ணிப்பார்க்க
வேண்டும்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 ஏப்ரல் 24

இன்றைய தினம் காற்றாலைகள் மூலமாக மின்சாரம் எளி
தாக பெறமுடியும் என்ற நம்பிக்கை மலர்களை கடல் கடந்து
சென்று கனிவான தமிழ் மொழியிலே, அறிவிலே கனிந் இளைத்த
அமைச்சர் பெருந்தகை கற்றதினுடைய பாங்கினாலே அவர்கள்
தந்நறிந்த மின் அலைகள் ஏராளம். நீங்கள் ஸ்வீடன் நாட்டிலே
சென்று பார்த்திருக்கிறீர்கள். காற்றாலைகள் மூலமாக 500
மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அளவிற்கு வலிவு
பொருந்திய இயக்கமாக ஒரு காற்றாலையை உருவாக்க முடியும்
என்ற உணர்வினை நீங்கள் பெற்றிருக்கிறீர்களே, அந்த உணர்
வினை ஜப்பான், ஜெர்மனி, தாய்லாந்து போன்ற நாடுகளில்
இன்னும் அறிவியலால் வளம் பொருந்திய நாடுகளில் எல்லாம்
எண்ணிப்பார்க்கின்ற அந்த காற்றாலை மின்சாரத்தை வழங்கு
வதில் கூட நடுவண் அரசினுடைய அதிகாரத்தை கேட்க வேண்
டுமா ? நான் கேட்கிறேன். அமைச்சர் பெருந்தகை அவர்களே,
நீங்களே செய்யலாமே. உங்களுடைய உணர்விலே உங்களுடைய
அதிகாரத்தின் கீழே செய்யலாமே. அதைச் செய்தால் முடங்கிக்
கிடக்கின்ற தொழிற்பேட்டைகள் எல்லாவற்றையும் சிறப்
பான தொழிற் கூடங்களாக உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை
எங்களைப் போன்றவர்களுக்கு எழுகின்றது என்ற உணர்விலே
சொல்கிறேன். மேலும் இந்த வளர்ச்சி பொருந்திய விஞ்ஞான
உலகத்தில் நாம் கம்ப்யூட்டரைஸ் பண்ணியிருக்கின்ற அறிவுப்
பூர்வமான தொழிற் கூடங்களை எந்த நிலையிலே நாம் ஆக்கப்
போகிறோம் என்ற உணர்வுகளை நாம் தெரிவித்தாக வேண்டும்.
இந்தந்த திட்டங்கள் செய்வதற்கு முன்னாலே இந்த அறிவியல்
பூர்வமான தொழிற் கூடங்களை நாம் எதையோ சாதிக்கப்
போகிறோம் என்ற உணர்வினை நாம் வைத்தாக வேண்டும்
அப்படி வைக்கின்ற சூழ்நிலை வருமேயானால் இந்தியாவாக இருந்
தாலும் சரி, உறங்கிக் கிடக்கின்ற செழுமையான தமிழகமானா
லும் சரி—இந்தத் தமிழ் மண்ணிலே வேளாண்மை குடிமக்கள்
65 சதவீதம் வாழ்கின்றார்கள். அந்த 65 சதவீதம் வாழுகின்ற
வேளாண் மக்களுடைய வாழ்விலே தொழிற்கூட வளர்ச்சி பெற
வேண்டுமானால் அந்த அக்ரிகல்ச்சுரல் பேஸ்ட் இண்டஸ்ட்ரி உரு
வாக வேண்டுமானால் அதற்கு நல்ல டிராக்டர் தொழிற்சாலை
களை உருவாக்கலாம். அங்கே டிராக்டர் தொழிற்சாலையை
உருவாக்கினால் அங்கே கலப்பைகள், ஏர் கலப்பைகள், கார்
போன்றவைகள் விதை விதைக்கின்ற கருவிகள் இவைகளை
எல்லாம் உருவாக்கி அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு வாழ்
வும், வளமும், அதே நேரத்தில் நம்பிக்கையான ஊதியத்தையும்
தருகின்ற உணர்வினை உருவாக்க முடியும் என்ற சிந்தனையை
நாம் பெற வேண்டும். மேலும் இங்கே அந்த விவசாயிகளுக்கு
வளர்ச்சிக்காக சர்க்கரை ஆலைகளை உருவாக்கியிருக்கிறீர்கள்.
இந்த சர்க்கரை ஆலையினுடைய உணர்வெல்லாம் சர்க்கரை
யாக செய்தி இனிக்கிறது. ஆனால் இந்த சர்க்கரை உரிமங்கள்
வழங்குவதிலே எங்கெல்லாம் விண்ணப்பங்கள் தருகின்றார்களோ
அந்த விண்ணப்பங்களை எல்லாம் நம்முடைய தமிழகத்தினுடைய
தலைமை அமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களும்,
அமைச்சர் பெருந்தகை அவர்களும் நடுவண் அரசுக்கு தட்டு
செய்து ஒப்புவிக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 24] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

(இரவு 6-30)

அதிலே இடைஞ்சலாக இருக்காமல் இருப்பீர்களேயானால், யாருக்கெல்லாம் அங்கே பெயரிலே, யாருக்கெல்லாம் அதிர்ஷ்டம் என்ற சிறப்பு இருக்கிறதோ அவர்கள் அதைப் பெறுவார்கள். நான் இன்னும் சொல்கின்றேன். கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி, யாரெல்லாம் நன்மை பெற முடியும் என்ற உணர்வு இருக்கிறதோ அந்த உணர்வைப் பெறுவதற்காக இங்கே இருக்கின்ற நமது அன்பிற்குரிய அமைச்சர் பெருந்தகை அவர்கள், வருகின்ற—சர்க்கரை ஆலையினுடைய உரிமம் கேட்டு வந்திருக்கிற விண்ணப்பங்களை நடுவண் அரசினுடைய * * * சமர்ப்பிப்பீர்களேயானால், ஒரு செம்மையான சூழ்நிலையை தமிழகத்தில் உருவாக்க முடியும். 25 சர்க்கரை ஆலைகளைச் செய்த மகிழ்ச்சியினாலே சர்க்கரையான செய்திகள் இருந்தாலும் அந்த சர்க்கரையினுடைய உணர்வுகளை எண்ணிப் பார்த்து மகிழ்கின்ற தமிழகத்து மக்கள் இன்னும் வளமான வாழ்வுக்கு ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நடுவண் அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லுங்கள் **என்பது வேண்டாம். அதை நீக்கி விடுகிறேன். (குறுக்கீடு).

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : ஆக, இந்த எழுச்சி பொருந்திய இந்த சர்க்கரை ஆலை வளர்ச்சியை, இங்கே செம்மை பொருந்திய சிறப்பான சூழ்நிலைக்கு உருவாக்க வேண்டும் என்ற உணர்வினை எண்ணிப் பார்த்து மகிழ்கிறோம். அந்த சர்க்கரை ஆலைகள் மூலமாக விவசாய மக்கள் செம்மைப் படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று மேலும் சொல்லி நம்முடைய வணக்கத்திற்குரிய, தமிழகத்து மக்கள்-விவசாய பெருங்குடி மக்களைச் சேரும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய வங்கக் கடற்கரையினுடைய—அழகான வங்கக் கடல் தாய் தன்னுடைய கடற்கரையோரம் முழுவதும் மீனவக் குடிசைகளில், நெய்தல் நிலத்து மக்கள் தொய்தலாக வாழ்கிறார்கள். அந்த நெய்தல் நிலத்து மக்களுக்கு, ஃபிஷிங் இண்டஸ்ட்ரி என்று சொல்வார்களே, அந்த மீன் வள மக்களுக்கு ஒரு தொழிற் கூடம் அமைத்துத் தந்தால், அந்த மீன் வளத் தொழிலாளர்கள், அந்த மீன் பிடித்து உண்டு, வாழ்ந்து களிக்கின்றவர்கள், மீனை நமக்கும் தருகிறார்களே, சுவை மிக்க வைட்டமின்-ஏ உணவாக, அந்த நல்ல மக்களுக்கு அழகான இண்டஸ்ட்ரி-பிஷிங் இண்டஸ்ட்ரியை உருவாக்கினால் அங்கே நைலான் வலைகளை உருவாக்கலாம். அங்கே ஒரு வாஞ்சை உருவாக்கலாம்.

---

*மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜி.கே.ஜெ. பாரதி] [1987 ஏப்ரல் 24

அந்தக் கடற்கரையோரம் என்னுடைய தொகுதி முழுவதும் கூட 23 குப்பங்கள் இருக்கின்றன. இன்னும் கடலைச் சார்ந்து இருக்கிற தமிழகத்தினுடைய பகுதிகளில் ஒரு ஃபிஷிங் இன்டஸ்ட்ரி உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் லெதர் இன்டஸ்ட்ரியைப் பொறுத்த வரை, இங்கே நாம் செழுமையான வளர்ச்சியைப் பெறுவதாகச் சொல்ல முடியாது. லெதர் இன்டஸ்ட்ரி மிகப் பெரிய தோலை செம்மைப் படுத்தி, உலகம் முழுவதும் அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு தொழில் டத்தை செம்மைப்படுத்துங்கள் என்று மேலும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய வணக்கத்திற்குரிய அசோக் லேலண்டு தொழிற்சாலை, நான் அதைச் சொல்வதற்குக் காரணம், அந்தப் பகுதியிலே பெண்ணைக் கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும், தொழிலாளி, எங்கே வேலை செய்கிறாய் என்று கேட்பார்கள். அசோக் லேலண்டு என்று சொன்ன உடனேயே எதையும் பேசாமல் பெண் கொடுக்கி றேன் என்று முன் வருவார்கள். ஆகவே, இப்படி பெண்ணையும் கொடுத்து, கண்ணைப் போன்ற பொருளையும் கொடுத்து ஒரு செம்மைப்படுத்துகின்ற அசோக் லேலண்டு நிறுவனத்திலே உரு வாகின்ற அந்த அசோக் லேலண்டு சேஸிகளை நம்முடைய தமிழக அரசு வாங்காமல், 'ஃபர்கோ,' பென்ஸ், 'ஃபோர்டு' இவைகளை ஏன் வாங்கினீர்கள்? இதைக் கேட்டால்—நான் தவறாகச் சொல்லவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று நான் பார்க்கமாட்டேன். இங்கே நம்முடைய தொழில் கூடம் அது. செந்தமிழ் நாட்டினுடைய செம்மை பொருந்திய வங்கக் கடலோரம், என்னுடைய தொகுதியிலே எண்ணூரிலே எண்ணற்ற வண்டிகளைக் குவிக்கின்ற அந்த வண்டிகளை வாங்காமல், ஃபர்கோ, பென்ஸ்-ஆக—இன்னும் அது போல் வடபுலத்தைச் சொல்லமாட்டேன். ஆனால் இங்கே வளமையாக வாழ்ந்திருக் கின்ற நம்முடைய தமிழக மக்கள் மத்தியிலே, அங்கே கட்டுகின்ற வண்டிகளை வாங்கக் கூடாதா என்ற ஏக்கத்தில் சொல்கிறேன்.

ஆனால் ஒரு காரணத்தை—அதற்கு நம்முடைய போக்கு வரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. இருந்தால் மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்களே இங்கே என்ன சொல்வார்கள் தெரியுமா? ஃப்யூயல் கன்சம்ப்ஷன் அந்த அசோக் லேலண்டு கன்சர்னுக்கு இல்லை என்று சொல்வார்கள். ஆனால் அந்த ஃப்யூயல் கன்சம்ப்ஷன் கூட, இப்போது மாடர்ன் டெக்னாலஜி என்று சொல்கிற அளவுக்கு அசோக் லேலண்டிலே உயர்ந்திருக்கிறது. வடபுலத்து மக்கள் கூட விரும்பி, அங்கே தடம் கண்டு, அதனுடைய செம்மைப் பணி பெருக வேண்டும் என்று, அசோக் லேலண்டு தொழிற்கூடத்திலிருந்து வாங்குகிறார் கள்.



1987 ஏப்ரல் 24] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

எல்காட், எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன்
இன்னொன்று நம்முடைய டிஜிட்டல்
ஆஃப் தமிழ்நாடு என்று சொல்கிற அந்த வாட்ச்சை
வாட்ச்சை தமிழக அரசு உற்பத்தி செய்கிறது. பெருங்குடி
நம்முடைய தமிழ் மண்ணிலே வாழுகிற தமிழ்ப் மாண்புமிகு
மக்கள் குறிப்பாக சட்டப் பேரவை உறுப்பினர்கள், நான்கூட
அமைச்சர் பெருந்தகையார் கட்டி இருக்கிறார்கள். சொல்வீர்
எச். எம். டி. வாட்ச் கட்டியிருக்கிறேன் என்று குறை இல்லை.
கள். ஆனால் அந்த எல்காட் வாட்ச்சின் தரம் சிறப்பாக செம்மைப்
அதனுடைய விலை அதிகமாக இருக்கிறது. அதைச் உயர்த்தி,
படுத்த வேண்டுமானால், அதனுடைய தரத்தை எல்லோருக்கும்
விலையைக் குறைத்துத் தந்தால்—அதிகமாக உயர்த்தி விலை
வேண்டும் என்று கேட்கமாட்டேன். தரத்தை நிர்
யைக் குறைப்பீர்களேயானால், அந்த வாட்சினுடைய சிறப்பாகக்
வாகம் செம்மைப்படும் என்ற உணர்வில் மிகச் (மணியடிக்கப்
கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
பெற்றது).

நம்முடைய வணக்கத்திற்குரிய கொடுங்கையூர் பகுதியை
இன்டஸ்டிரியல் ஏரியா என்று அறிவித்து இருக்கிறார்கள்.
எம்.எம்.டி.ஏ. துறையினர். ஆனால் அங்கே மூன்று கிரௌண்ட்
இருந்தால்தான் 20 எச். பி.—ஹார்ஸ் பவர் மின்சாரத்தை
கொடுக்க முடியும் என்று மின்சாரத் துறை கூறுகிறது.

ஆனால் ஒரு கிரவுண்டு, இரண்டு கிரவுண்டு, 2½ கிரவுண்டு
நிலம் வைத்திருக்கிற ஒரு சாதாரண மனிதர் ஒரு தொழில் கூடத்
தைத் தொடங்க வேண்டுமென்றால் மின்சாரத் துறையைச்
சார்ந்தவர்கள் இணைப்பு கொடுக்க மறுக்கிறார்கள். எனவே
இதற்கு ஒரு வழிகண்டாக வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். ஒரு கிரவுண்டு நிலம் வைத்திருந்தாலும் கொடுக்கலாம்
என்கிற உணர்வை தயவு செய்து அவர்களுக்கு உருவாக்க வேண்
டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

அடுத்து தனியார் துறையாக இருந்தாலும் சரி, அரசுத்
துறையானாலும் சரி எந்த ஒரு தொழில் கூடத்திலும் கத
வடைப்பு செய்கிறபோது அரசின் அனுமதியைப் பெற வேண்
டும் என்கிற உத்திரவை—தாக்கீதை நீங்கள் தயவு செய்து
அனுப்பியாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்
போலவே தொழிற்கூடங்களில் ஆட்குறைப்பு செய்தாலும்
அதைப்பற்றிய அறிக்கையை தமிழக அரசுக்கு அவர்கள் அனுப்
பியாக வேண்டும் என்றும் சொல்ல வேண்டும். மேலும் தொழிற்
கூடங்களில் பணி புரியும் தொழிலாளர்களுடைய குழந்தை
களுக்குப் பணி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கும் வாய்ப்
பையும் வழங்க வேண்டும். தொழிற்சாலைகளின் தொழிலாளர்
கள் பணி புரிந்து வளமான செல்வத்தை தொழில் அதிபர்களுக்கு
ஈட்டித் தருகிறபோது அந்தச் செல்வத்தில் ஒரு பகுதியைப் பிடித்
துக்கொண்டு அதன் மூலமாகத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்
கொடுக்கிற திட்டத்தை உருவாக்கினால் நன்றாக இருக்கும் என்ற
என் உணர்வையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜி.கே.ஜெ. பாரதி] [1987 ஏப்ரல் 21

அடுத்து நாம் போற்றக்கூடிய டேமின் தொழிற்சாலைக்கு வருகிறேன். என்னுடைய தொகுதியில் அண்மையில்தான் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். அந்தத் தொழிற் கூட்டத்திலே டெக்னீஷியன்கள் இல்லை. அதற்குத் திறமையான டெக்னீஷியன்களைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலை கடந்த ஆண்டு மட்டும் ரூ. 36 லட்சம் லாபம் ஈட்டியிருக்கிறது. இன்னும் அதிகத் தொகையை அது லாபமாக ஈட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர் களிடம் ஒன்றைக்கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மைனர் அண்டு மினரல்ஸ் ஆக்ட், 1952—சட்டப்படி 3 ஏக்கர் நிலத் திற்கும் குறைவான குவாரிகளை வைத்திருந்தால் தனியாருக்குக் கொடுத்து விடலாம் என்று ஆலோசனையை வழங்க விரும்பு கிறேன். 3 ஏக்கருக்கு மேல் குவாரி இருந்தால் மட்டும் அரசு வைத்துக் கொள்ளலாம். 3 ஏக்கருக்குக் கீழே இருந்தால் சாதாரண கிராம பக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு படித்த பட்டதாரி களுக்கு வேலையற்றவர்களுக்கு அளித்தால் அதன் மூலம் அவர்கள் நன்மை பெற வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அதைக் கொடுப்பீர்கள் என்றும் எண்ணி மகிழ்கிறேன்.

மேலும் சென்னையில் உள்ள ஈசன் எஞ்சினீயரிங் குரூப்பை சேர்ந்த தொழிற்சாலை திருவொற்றியூரில் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை தற்போது சிக்காக இருக்கிறது. காரணம் அத னுடைய தலைவர் சிக்காக இருந்து இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்ட காரணத்தால் அந்தத் தொழிலும் சிக்காக மாறி இன்றைக்கு செயல்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். அந்த சிக் யூனிட்டை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். அதைப்போலவே தமிழகத்தில் எத்தனை சிக் தொழிற்சாலைகள், சிக் யூனிட்கள் இருக்கின்றன என்ற விவரத்தையும் மக்களுக் குத் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கார்போரண்டம் யூனிவர்சல் தொழிற்சாலை ஒன்று திருவொற்றியூரில் செயல்பட்டு வருகிறது. அந்தத் தொழிற் சாலையைச் சார்ந்தவர்கள் இங்கே இன்னொரு தொழிற் கூடத் தைத் தொடங்க வேண்டுமென்று தமிழக அரசை அணுகிக் கேட் டிருக்கிறார்கள். நம் அரசிடமிருந்து சரியான ஒத்துழைப்பு இல்லாத காரணத்தாலே இன்றையதினம் அது கருநாடக மாநிலத்திற்குச் சென்று விட்டது என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட குறைகளை நீக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் படித்த இளைஞர்கள் மாவட்ட தொழில் மையங் களால் கொடுக்கப்படுகிற பணத்தைக் கொண்டு தொழிற் கூடங்களைத் தொடங்குகிறார்கள். அந்தத் தொழிற்கூடங் களில் உற்பத்தி செய்யும் பொருள்களையெல்லாம் தமிழக அரசு நிறுவனங்களே கண்டிப்பாக வாங்க வேண்டும். அதற்கு முறையில் ஊக்கம் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. ஜி.கே.ஜெ. பாரதி]

உப்புக் கழகம் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற் கிறேன். மழை பெய்தால் கோட்டை போல் குவிந்திருக்கும் அந்த உப்பு கரைந்து போய்விடுகிறது. உப்போடு அதன் உரிமை யாளரின் மனமும் கரைந்து கலங்கிப் போய்விடுகிறது. எனவே அப்படிப்பட்ட நேரங்களில் அவர்களுக்கு உப்பு நிதியிலிருந்து உதவி நிதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மேலும் அவர்கள் எத்தனை டன் உப்பைச் சேமித்து வைத்திருந் தார்கள் என்கிற கணக்கு இல்லாமல் இருக்கிறது. எத்தனை டன உப்பை சேர்த்து வைத்திருந்தாலும் அது மழையில் கரைந்துவிடும். ஆகவே அதற்கு ஒரு வரையறை செய்து அந்த உப்பைக் காப பாற்றும் வகையில் அவர்களுக்கு இலவசமாக பாலிதீன் பையைத் தந்து உப்புக் களத்திற்கு மேலே போட்டு உப்பை காப்பாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் உப்புத் தொழிலையே வாழ்க்கையாகக் கொண்டிருக் கிறவர்களுக்கு நிரந்தரமான ஓய்வூதியம் தருவதற்கும் வழி வகை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அடுத்து டிக் நிறுவனத்தின் சார்பில் கடன் வழங்கும் போது ''மார்ஜின் மணி' என்கிற வகையில் 20 அல்லது 25 சதவீதம் கொண்டு வர வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். தொழில் தொடங்குபவர்கள் அதற்கு மேல் நிலமும் வாங்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். நிலம் வைத்திருந்தாலே அவர் களுக்கு கடன் கொடுக்கும் நிலையை உருவாக்க வேண்டும் நிலத்தையும் வாங்கி அதற்கு மேல் 20 சத விகிதம் மார்ஜின் மணியைக் கொண்டு வந்தால்தான் கடன் என்றால் ஏழைகள் தொழில் தொடங்கி முன்னுக்கு வரமுடியாது. எனவே நிலம் வைத்திருந்தாலே அதைக் கணக்கில் கொண்டு கடன் தருகிற வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கொடுங்கையூர் சென்னையைச் சார்ந்த ஒரு பகுதி அங்கே தொழில் தொடங்க உரிமங்களைப் பெற வேண்டுமென றால் செங்கை மாவட்டம் காஞ்சி மாநகருக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இதலையும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எம். ஆர். எல். என்கிற மணலியில் இருக்கிற நிறு வனம் ஒரு மிகச் சிறந்த தொழிற்சாலை. அது பல கோடிக்கணக் கான ரூபாயை தமிழக அரசுக்கும் ஈட்டித் தருகிறது—நடுவண் அரசுக்கும் தருகிறது. அதன் மூலயாகப் பல்வேறு தொழிலாளர் களின் வாழ்க்கை செழுமையடைகிறது. அந்தத் தொழிற்சாலை என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு சிறப்பான திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது தமிழகத்திற்கே ஏன் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருக்கிறது. நிரந்தரமில்லாத நிலையில் வேலை செய்து கொண்டிருக்கக் கூடிய 6,000 பேர்களுக்கு '' இன்கோசர் '' என்று சொல்லப்படுகிற தொழிலாளர்கள் இன்டஸ்டிரியல் கோவப்பரேட்டிவ் சொசைட்டி என்ற ஒரு அமைப்பை உருவாக்கி அதிலே ஏறத்தாழ

2,500 தொழிலாளர்களை எடுத்துக் கொண்டு நிரந்தரமாக ஆக்கி
அந்தத் தொழிற்சாலையில் எல்லா உரிமைகளையும் தந்து அவர்
களுக்கு ஐ.டி.ஐ. எஜுகேஷன், பாலிடெக்னிக் எஜுகேஷன்
ஆகியவற்றையும் அந்த நிர்வாகம் அளித்து இன்றையதினம் சிறப்
பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(இரவு 6-40)

ஒப்பந்தக்காரர்களால் சுரண்டப்படுகிறவர்கள்.
களுடைய உழைப்பை குருதியை ஒப்பந்தக்காரர்கள் இவர்களுர்
கிறார்கள். ஒப்பந்தக்காரர்களுடைய பிடியிலிருந்து சுரண்டு
பாதுகாக்கக் கூடிய அருமையான திட்டம் அவர்களை
திட்டம். இந்த திட்டத்தை என்னூர் தெர்மல் இந்த "இன்கோசர்"
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்டேஷனில்
இந்த திட்டத்தை தமிழகம் முழுவதும் உருவாக்கியிருக்கிறார்கள்.
காரர்களுடைய பிடியிலிருந்து அவர்களை விரிவாக்கி ஒப்பந்தக்
மிகு அமைச்சர் அவர்கள் செம்மைப்படுத்த காப்பாற்றி மாண்பு
கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) வேண்டும் என்று
வைண்டிங் அப செய்வதால் கொஞ்சம் நேரம் கடைசியாக
சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். தர வேண்டும்.

மணலி ரெஃபைனரி லிமிட்டெட்டில் ஒரு சிறப்பைப் பார்த்
தேன். அந்த சிறப்பான திட்டத்தைச் சொல்லுகிறேன். தமிழகம்
தொழில் துறையில் வெற்றி பெற வேண்டுமானால் அதற்கென
தனியாக ரிசர்ச் அண்டு டெவலப்மெண்டு சென்டரை உரு
வாக்க வேண்டும். மணலியில் கூட ரிசர்ச் டெவலெப்மெண்ட்
டிப்பார்ட்மெண்டை மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு
திவாரி அவர்கள் உருவாக்கினார்கள். அந்த திட்டத்தால் தரம்
உயரும். அந்த இன்ஸ்டிட்யூட்டில் சிமெண்ட், கெமிக்கல்ஸ், எலெக்ட்
ரிக்கல், என்ஜினியரிங், மைன்ஸ் அண்டு மெட்டல்ஸ், பேப்பர்ஸ்
அஃகர்ஸ், டெக்ஸ்டைல்ஸ், டிரான்ஸ்போர்ட் பிளான்டேஷன்
ஆகிய அனைத்து தொழில் கூடங்களுக்கும் ஒன்றாகச் சேர்த்து
ஒரே ஒரு இன்ஸ்டிடியூட்டில் ரிசர்ச் செய்தால் அதனால் அந்த
பொருள்களின் தரம் உயரும், அந்த தொழில்களும் வளர்ச்சி
பெறும், அந்தப் பொருள்களை மார்க்கெட்டில் செம்மையாக
வாங்குகிற சூழ்நிலையும் உருவாக்க முடியும். தமிழக அரசைப்
பொறுத்த வரையில் சிஸ்டர் கன்சேர்னாக மூலப் பொருள்களி
லிருந்து கிடைக்கிற பை-புராடெக்ட் இண்டஸ்டிரிஸ்தான்
உருவாக்குகிறார்கள். மற்றவற்றை உருவாக்குகிற நிலை அதிக
மாகஇல்லை.





மதராஸ் ஃபெர்ட்டிலைசர் மூடப்பட்டுக் கிடக்கிறது. இதற்குக் காரணம் தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை என்பதுதான். அழகான அந்த உரத் தொழிற்சாலை உலக வரலாற்றை படைத்திருக்கிறது. அந்த நிறுவனம் மனித உழைப்பில் 17 சதவீதத்தில் மிகப் பெரிய அளவிற்கு 13 இலட்சம் மெட்ரிக் டன் சக்தியை தந்து உலக வரலாற்றை ஏற்படுத்திய அந்த தலைசிறந்த தொழிற்சாலையை 1985–86-ல் மூடிவிட்டோம். 12 ஆண்டுக் காலமாக கோடிக்கணக்கான இலாபத்தை ஈட்டிய அந்த உரத் தொழிற்சாலை இப்போது உறங்கிக் கிடக்கிறது. அதற்கு உற்சாகம் ஊட்ட வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

அடுத்து என் தொகுதியைப் பற்றிச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதியைப் பற்றி முதலிலே பேச வேண்டும். கடைசியாகவா தொகுதியைப்பற்றி பேசுவது? இருந்தாலும் சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. ஜி.கே.ஜெ. பாரதி: வணக்கத்திற்குரிய தலைவர் அவர்களே, மாதவரம் நகரில் ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஒரு தொழிற் பேட்டையை அமைத்தால் அது சிறப்பாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் ஒரு வேண்டுகோளை விட்டிருக்கிறார்கள். அதைச் சொல்ல விரும்புகிறேன். கள்ளக்குறிச்சியிலே ஒரு சர்க்கரை ஆலை வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அங்கே அதிகமாக கரும்பு இருப்பதால் அங்கே ஒரு சர்க்கரை ஆலையை அமைத்துத் தர வேண்டும். மேலும் அண்ணா மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாகும். அதை பொதுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லி இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி மானிய கோரிக்கையின் மீது காலையிலே திரு. முருகானந்தம் தொடங்கி திரு பாரதி வரையில் 13 பேர் தங்களுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

தொழில் வளர்ச்சி நிலை குறித்தும், சென்னை ஏற்றுமதி தொழில் மையம் குறித்தும், எல்காட் குறித்தும் காகித ஆலை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பற்றியும், மத்திய அரசின் முதலீடுகளைப் பற்றியும் சர்க்கரை ஆலைகளைப் பற்றியும் சிப்காட் பற்றியும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சதர்ன் ஸ்டரக்ட்சரல்ஸ், 'டாமின்', புஷியியல், 'டான்மாக்' டிட்கோ, தமிழ்நாடு செராமிக்ஸ் ஆகிய

பதினாறு பொருள்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நேரமின்மை காரணமாக பெரியார் அறிவியல் மையம் பற்றி யாரும் குறிப்பிடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே காலையிலே தொடங்கி இதுவரையில் இந்த மாமன்றத்திலே தொழில் துறை பற்றிய பல்வேறு கருத்துக்களை அளித்திருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் அவர்கள், நீங்கள் விளம்பரப் பிரியர்களாக மட்டும் இருந்துவிடக் கூடாது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நல்ல இளைஞர், முன்னுக்கு வர வேண்டியவர். விளம்பரத்தைப் பற்றி, அதுவும் நான் இருக்கிற இலாக்கா பற்றி சொல்கிறாரே என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இப்போது பேசுகிறோம். அதுகூட நாளைக்கு தினத் தந்தியில் வராது. என்னுடைய படத்தையேகூட வெட்டி வெட்டிப் போடுகிறார்கள். அதையெல்லாம் அந்தத் தம்பி பார்த்தால்தான் தெரியும். ஆக விளம்பரம் எனக்குக் கிடையாது. இதையெல்லாம் பெர்சனலாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

தொழில் இலாக்கா வளர்ந்தாலும், வளராவிட்டாலும் தொழில் அமைச்சர் கையிலே இரண்டு கடிகாரம் இருக்கிறது என்று சொன்னார்கள். 2 கடிகாரம் கட்டிய ஒரு புரட்சிக்காரர் இன்றைக்கு இருக்கிறார். அதைத் தெரிந்து கொள்ளவேண்டும். செய்தியாகச் சொல்கிறேன். கியூபா நாட்டிலே 80 பேரோடு விடுதலை வாங்கித் தந்தவர் இன்றைக்கு இருக்கிறார். அவர் ஃபிடல் காஸ்ட்ரோ. அவர் இரண்டு கடிகாரம் கட்டிக் கொண்டிருந்தார். அவரை லைஃப் பத்திரிக்கைக்காரன், என் இரண்டு கடிகாரங்கள் கட்டியிருக்கிறீர்கள் என்று கேட்டான்.. எனக்கு கையைத் திருப்ப நேரம் கிடையாது. ஆகவே இரண்டு பக்கமும் 2 கடிகாரம் கட்டியிருக்கிறேன் என்று சொன்னார். அவரைப் பார்க்க பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இங்கிலாந்தில் காமன்வெல்த் மாநாட்டுக்குச் சென்றபோது 2 மணி நேரம் காத்திருந்து அவரைச் சந்தித்தார். அவர்தான் கூட்டு சேரா மாநாட்டுத் தலைவராக இருந்து, முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியிடம் அந்த தலைவர் பதவியைக் கொடுத்தார். இந்த சரித்திரத்தை நீங்கள் தெரிந்து கொண்டால் நல்லது. ஆக 2 கடிகாரம் கட்டினால் தப்பில்லை. நான் கட்டியிருக்கிற இரண்டில் ஒன்று பினட் பிரஷருக்காக கட்டியுள்ள செயின். இன்னொன்று கடிகாரம். மலேசிய மக்களால் கொடுக்கப்பட்ட கடிகாரம். ஒன்றியாரு கடிகாரம். அதனால் அதைக் கட்டியிருக்கிறேன். ஒன்றிற்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது. 61-வது பிறந்த நாள் விழாவில் மலேசிய மக்கள் கொடுத்தது.





அடுத்து சேலம் பிளாஸ்ட் பற்றி திரு. முருகானந்தம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே ஏற்றுமதியாகாமல் இருக்கிறது. அவை ஏற்றுமதியாகாமல் இருக்க மத்திய அரசிலே சில அதிகாரிகள் தடை செய்துகொண்டிருக்கிறார்கள். அதை நான் 6 மாதங்களாக சொல்லிப் பார்க்கிறேன். அவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. நேற்று முன்தினம் மத்திய அமைச்சர் திரு. சிவசங்கர் அவர்களிடத்தில் தொலைபேசியில் பேசி, உடனடியாக இதைப் பார்க்க வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் திரு. அருணாசலம் அவர்களிடத்திலும் சொல்லி, இதைப் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அவரும் பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். திரு. சிவசங்கர் அவர்களும், பார்க்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். நல்ல வேளையாக 1-ஆம் தேதி பாரதப் பிரதமர் அவர்கள் என் ஊருக்கு, சேலத்திற்கு வருகிறார். அவரிடமும் ஒரு விண்ணப்பம் தரலாமென்று நினைக்கிறேன். 6 மாதங்களாக அது தேங்கிக் கிடக்கிறது. இனி பொறுத்திருப்பதில் "பிரயோசனமில்லை. மாநில அரசின் தனிப்பட்ட நிறுவனம் அது. நல்லபடி பணியாற்றிக்கொண்டிருக்கிறது. பாரதப் பிரதமர் மறைந்த இந்திரா காந்தி அம்மையாருக்கு ஒரு நினைவாலயம் டெல்லியிலே அமைக்கிறார்கள். அதற்கு தேவையான பேன்டட் ஜாஸ்பர் ஹேமடைட் என்கிற கடினமான பாறையே தமிழ் நாட்டிலுள்ள 'டாமின்' நிறுவனம் அறுத்துக் கொடுத்திருக்கிறது. அதற்காக் பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு நற்சான்றிதழை எழுதி, எங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே டாமின் நிறுவனம் நல்லபடி நடந்து வருகிறது.

அதைப்போல. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் ஒவ்வொரு தாலுக்காவிலும் சிப்காட் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். எல்லா இடங்களிலும் சிப்காட் அமைப்பது கஷ்டம். வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையில் சிப்காட் இருக்கிறது. அது நல்லமுறையில் பயன்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் சில பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். தொழில் துறை இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்று சொன்னாகள். ஆகவே தொழில் துறையிலே என்ன நடந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

(இரவு 6-50)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒடலூர் அன்பழகன் அவர்கள்கூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திரு. காமராஜர் காலத்திலே 3-ஆம் இடத்தில் தமிழகம் இருந்தது. இப்போது எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். இப்போதும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மகாராஷ்டிர மாநிலத்திற்கு 1980 முதல் 1986 வரை வழங்கப்பட்ட தொழில் உரிமங்கள் 859. குஜராத் மாநிலத்திற்கு வழங்கப் பட்ட உரிமங்கள் 585. மூன்றாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. 506 உரிமங்கள் பெற்றிருக்கிறது. பஞ்சாப் நான்காம் இடத்தில் இருக்கிறது. அது 421 உரிமங்களைப் பெற்றிருக்கிறது. உத்திரப்பிரதேசம் 5-ஆம் இடத்தில் இருக் கிறது. அது 400 உரிமங்களைப் பெற்றிருக்கிறது. ஆகவே நம்முடைய இடம் எங்கேயும் போகவில்லை. அந்த இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறோம். நல்ல வகையிலே அது பயன்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், 1979—86-ல் 7 சதவீதம் வளர்ச்சி காணப்பட்டது. 1979ம் ஆண்டைவிட இப்போது 5.7 சதவீதம் தொழில் வளர்ச்சி காணப்பட்டது. இப்போது 1984-ஆம் ஆண்டில், 1983-ம் ஆண்டைவிட, 6.5 சதவீதம் தொழில் வளர்ச்சி காணப்பட்டது அதே ஆண்டில் 19.2 சதவீதம் அதிக வளர்ச்சி அடைந்து இருக்கின்றது. அது இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியால் தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். 1976-ம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு முடிய அகில இந்திய ரீதியில் 4.7 சதவீதம் தொழில் வளர்ச் சிதான் உயர்வு காணப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் 6.8 சதவீதம் தொழில் வளர்ச்சி காணப்பட்டிருக்கிறது. தொழில் முன்னேற்றத்தில் நிதியுதவி பெறுவதில் தமிழ் நாட்டினுடைய பங்கு, 1981-ஆம் ஆண்டு முதல் 1985 வரை, தொழில் நிறுவனங்களுக்கு கடன் உதவி அளிப்பதில் தமிழகத் திலே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. 1985—86-ல் அளிக்கப்பட்ட மொத்த தவணைக் கடன் உதவி ரூ. 210 கோடியே 20 லட்சம். இதிலே விநியோகம் செய்யப்பட்டது ரூ. 130 கோடியே 49 லட்சம். ஆனால் அகில இந்திய ரீதியில் தொழில் நிறுவனங்களுக்கு தவணைக் கடன் அளிக்கப்பட்டதில் தமிழகம் 3-வது இடத்திலே இருக்கின்றது. மகாராஷ்ட்ரா ரூபாய் 339 கோடியே 42 லட்சம், 1985—86-ல் அதே போல, குஜராத்தில் ரூபாய் 300 கோடியே 68 லட்சம். தமிழகம் ரூபாய் 210 கோடியே 20 லட்சம். ஆகவே தமிழகம் அந்த வகையிலே மூன்றாவது இடத்திலே இருக்கிறது. 1984—86 வரையில் அந்த ஆண்டுக்காலத்தில் பல்வேறு மாநில நிறுவனங்களால் தொழில்களுக்குப் பட்டு வாடா செய்யப்பட்ட தொகைகளைப் பொறுத்து பிஃபோட்



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

நிறுவனம் இரண்டாவதாக வந்திருக்கின்றது. முதல 3 நிலையில் உள்ள மாநிலங்கள் பற்றிய விவரங்களைத் தரு கிறேன். மகாராஷ்ட்டிரா ரூ. 37 கோடியே 14 லட்சம். தமிழ்நாடு ரூபாய் 31 கோடியே 20 லட்சம், உத்திரபிர தேசம் ரூபாய் 30 கோடியே 77 லட்சம். ஆகவே அதிலேயும் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலே இருக்கின்றது. அதோடு திரு. வெங்கல்ராவ் அவர்கள் சென்ற மாதம் இங்கே வந்திருந்தார்கள். அவர்கள் வந்திருந்தபோது அவர்கள் தமிழ் நாட்டைப்பற்றிச் சொன்னார்கள்.

"Tamil Nadu had played an important role in the industrial transformation of the country. It occupied second position in terms of net value added by factory sector and third place in terms of value of gross output in factory sector. Its share in letters of intent had gone up from 5.5 per cent in 1980 to 9.2 per cent in 1986. In Central investment subsidy too, the State had registered a 183 per cent growth against the national average of 163 per cent. All this shows that the State is poised for an accelerated rate of industrial growth."

இது திரு. வெங்கல்ராவ் அவர்கள் நமக்கு அளித்திருக்கின்ற நற்சான்று ஆகும். அத்தோடு இன்னொன்றையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. வெங்கல்ராவ் அவர்கள் வந்தபோது கிண்டியிலே இருக்கின்ற தொழில் பேட்டையில் பிளாஸ்டிக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்தார்கள். அதற்கு நான்தான் தலைமை தாங்கினேன். அப்போது நான் கேட்டேன். நீங்கள் தமிழகத்திற்கு ஒரு நாப்தா கிராக்கர் தொழிற்சாலை இங்கே இருக்கின்ற பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலைக்குத் தரவேண்டும், அந்த உரிமத்தை தாங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். உடனே பதில் சொல்வார்கள் என்றுகூட நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் உடனே சொன்னார்கள். விசாகப்பட்டினத்திற்கும் தமிழகத்திற்கு சென்னைக்கு இரண்டு நாப்தா தொழிற்சாலைகள் தருவதற்கு உத்தேசித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். தரப்போகிறோம் என்ற அறிவிப்பை செய்தார்கள். அந்த நாப்தா கிராக்கர் தொழிற் சாலைக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். அது சாதாரண காரியம் அல்ல. ஏற்கனவே இருந்த திரு. திவாரி அவர்கள் ரூ. 600 கோடி மதிப்பில் ஆரோமேடிக்ஸ் பிளாண்ட்ஸ் தொழிற்சாலை அளித்திருக்கின்றார்கள். அதுவும் பெட்ரோ லியம் சுத்திகரிப்பு ஆலையிலேதான் வர இருக்கிறது. அது ஆயிரம் கோடி ரூபாய். இது 600 கோடி ரூபாய். அதோடு

உதக்மண்டலத்திலே பிலிம் தொழிற்சாலை. அது 120 கோடி
ரூபாய். அவர்கள் ஏற்கனவே உரிமம் வழங்கியிருக்கின்றார்கள்.
ஆகவே மத்திய சர்க்கார் இப்போது ஒன்றும் தரவில்லை
என்று சொல்வது தவறானது. நம்முடைய ஜனதா
கட்சிக்காரர்கள் மத்திய சர்க்காரிடத்திலே நீங்கள் ஒன்றும்
பெறவில்லை, பெறவில்லை என்று சொன்னார்கள். தற்
போது ஆறுமுகம் அவர்கள் கூட மன்றத்தில் இல்லை. ஜனதா
கட்சியினரும் கொஞ்ச காலம் ஆட்சியில் மத்திய சர்க்காரிலே
இருந்தார்கள். நான் அப்போது தோஸ்த் ஆக இருந்தேன்.
எனக்கு திரு. மொரார்ஜி தேசாய் எல்லாம் நன்றாகப் பழக்கம்.
எல்லோரும் ரொம்ப ஆனந்தமாக வரவேற்பார்கள். காபி
தருவார்கள். வேறு ஒன்றும் தந்தது கிடையாது. மத்திய
சர்க்கார் பற்றி என்னைவிட என் நண்பர்களுக்கு நன்றாகத்
தெரியும். அவர்கள் அழைப்பார்கள். நன்றாக வரவேற்பார்
கள். உபசரிப்பார்கள். வந்தவுடனே எல்லா உபசாரமும்
நடக்கும். ஆனால் கேட்டால் காரியம் நடக்காது. நல்லவேளை
யாக திரு. வெங்கல் ராவ் அவர்களும், திரு. திவாரி அவர்களும்
நல்லபடியாக நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு பெரிய
அளவுக்கு உதவியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏன் அதை சொல்கிறேன் என்றால், இன்றைக்கு நாப்தா
கிராக்கர் வருவதன் காரணமாக உபதொழில் மூலமாக 10 கோடி
ரூபாய் அளவுக்கு 20 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகத்திற்கு
தொழில்கள் வரக்கூடிய பெரிய வாயப்புகள் எல்லாம் இருக்கின்
றன. இப்போது மத்திய அரசு நமக்காக பல நல்ல காரியங்
களை செய்துகொண்டு வருகிறது.

அடுத்து. தமிழகத்திற்கு மத்திய அரசு முக்கியத்துவம்
அளித்து வருகிறது. முதலில் அது சம்பந்தமாக ஒன்றை சொல்
கிறேன். 7வது திட்டக் காலத்தில் மின் சக்தி இலக்கு பற்றி
குறிப்பிடுகிறேன். உத்தரப்பிரதேசத்திற்கு 7வது திட்டக் கால
ஒதுக்கீட்டில் 23,395 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.
மின் சக்தி இலக்கு 1,794 மெகாவாட். மகாராஷ்டிரத்திற்கு
3,048.87 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.
இலக்கு 1,239 மெகாவாட். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த
வரையில் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதுடன் 1,416
மெகாவாட் அளவுக்கு மின் சக்தி இலக்கை உருவாக்குகிற
வேலையையும் நாம் இன்றைய தினம் செய்துகொண்டிருக்கி
றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்
சம்பந்தப்பட்ட அமைச்சரின் மானியம் இங்கே வரும்போது அது
பற்றி விவரமாக அறிவீர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்
கிறேன்.





அடுத்து இரண்டு சக்கர மோட்டார் வண்டிகளுக்கு 9
சதவிகிதம் விற்பனை வரி இருந்த காரணத்தால் நம் மாநிலத்தி
லிருந்து வேறு பிற மாநிலங்களுக்கு போய் வண்டிகளை வாங்கு
கின்ற நிலை இருந்த காரணத்தால் நமக்கு வர வேண்டிய
வருவாய் வேறு மாநிலங்களுக்கு சென்று கொண்டிருந்த கார
ணத்தால் அதனை நாம் தவிர்க்க 5 சதவிகிதமாக குறைத்
துள்ளோம். அதுபோல 50 சி.சி. கொள்ளளவுள்ள இரண்டு
சக்கர வண்டிகளான மொபட் போன்றவற்றைப் பொறுத்த
வரையில் ஒரு டைப் வண்டிகளுக்கு 8 சதவிகிதத்திலிருந்து
4 சதவிகிதமாகவும், இன்னொரு டைப்புக்கு 15 சதவிகிதத்தி
லிருந்து 8 சதவிகிதமாகவும் விற்பனை வரியை குறைத்துள்
ளோம். அதுபோல பிளாஸ்டிக் மற்றும் நாப்தால் போன்ற
ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கான விற்பனை வரியும்
குறைக்கப்பட்டிருக்கிறது. மின் பொருள்களுக்கான விற்பனை
வரி 6 சதவிகிதமாக முன்பு குறைக்கப்பட்டிருந்தது. வளர்ந்து
வருகின்ற தொழிலுக்கு அது துணை செய்வதால் இந்த ஆண்டு
அது 4 சதவிகிதமாக குறைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தைப் பொறுத்த
வரையில் முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.
இந்த வரி விலக்கு 3 ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்றுமதி வர்த்தக மண்டலம்
என்பது மத்திய அரசாலும் மாநில அரசாலும் நடத்தப்படுகிற
ஓர் இயக்கம். இன்றைக்கு அது மிக நல்ல விளைவுகளை
உருவாக்கிக் கொண்டு வருகிறது. இது சம்பந்தமாக பல
வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் எல்லாம் என்னைச் சந்திக்
கிறார்கள். அவர்கள் எல்லாம் அதனைப் பார்க்க பெரு
முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள். ஏற்றுமதி வர்த்தக
மண்டலத்தைப் பார்வையிட்டு ஆச்சரியப்பட்டு, வரவேற்றிருக்
கிறார்கள். அதுமட்டுமல்ல, வடக்கு மத்திய அமெரிக்காவி
லுள்ள ஒகயோ மாநிலத்திலிருந்து வந்திருந்த வர்த்தகக் குழு
இன்றைக்கு இங்கே முதலீடு செய்ய தங்களுடைய விருப்பத்தைத்
தெரிவித்திருக்கிறார்கள். அதுபோல ரோட்டர்டேம் மேயர்
தலைமையில் வந்திருந்த 25 பேர் அடங்கிய குழு அந்த
இடத்தைப் பார்வையிட்டது. அங்கே மேலும் பல தொழி
களைக் கொண்டு வருவதாக அவர்களும் வாக்குறுதி அளித்
திருக்கிறார்கள். அமெரிக்காவிலிருக்கிற பல நபர்கள் அந்த
இடத்தைப் பார்த்துவிட்டு நாங்கள் தொழில்களை ஆரம்பிக்க
இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆக,
அந்த ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தைப் பொறுத்த வரையில்
அது வளர்ந்துகொண்டு தான் இருக்கிறது. அதுபோல இங்கே
தமிழகத்தில் உள்ளவர்களும் அதனை அதிகமாக பயன்படுத்திக்
கொள்ள முன் வர வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

அடுத்து, தமிழகத்தில் மின்சார பற்றாக்குறைப் பொறுத்த வரையில் முடிந்த அளவுக்கு மின் வெட்டை கொண்டு வந்தாலும் அது 40 சதவீதத்திற்கு மேல் இல்லை. மற்ற மாநிலங்களோடு இந்த மின்சார வெட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தில் இருப்பது சாதாரணமானது தான். அந்த வகையிலே தமிழக அரசு மின் உற்பத்தியிலே தனி கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். நம்மைப் பொறுத்த வரையில் 1984—85 ஆம் ஆண்டில் தொழில்கள் விரைவாக முன்னேற மின்சாரம் தயாரிப்பதற்காக திட்டமிட்டது 6,975 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். 1985—86ல் 7,640 மில்லியன் யூனிட் ஆகும். 1986—87ல் 8,362 மில்லியன் யூனிட், 1987—88ல் 9,413 மில்லியன் யூனிட் ஆகும். அதுபோல 1988—89ல் திட்டமிட்டிருப்பது 9,996 மில்லியன் யூனிட் ஆகும். ஆனால் 1989—90-ஐ பொறுத்த வரையிலும் 10 ஆயிரத்து 900 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக இந்த அரசு திட்டமிட்டு நல்ல முறையில், பணியாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 7—00)

குறைந்த அழுத்த மின்சாரத் தொழிற்சாலைகளுக்கு இப்பொழுது மின் வெட்டு கிடையாது. அதைப் போல புதிதாகத் தொடங்கும் தொழில் நிறுவனங்களுக்கு முதல் மூன்றாண்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. சிப்காட் தொழில் இணையத்தில் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகளுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஆகவே, இந்த வகையிலேயும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்னோடியாக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதி நீங்கலாக மற்ற இடங்களில் நிறுவப்படும் உயர் அழுத்த தொழில் நிறுவனங்களுக்கு உற்பத்தி தொடங்கியதிலிருந்து முதல் ஐந்தாண்டுகளுக்குக் கீழ்க்கண்டவாறு மின் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. முதல் மூன்றாண்டுகளுக்கு 66 2/3 சதவீதம் உயர் அழுத்த கட்டணத்தில்; நான்காவது வருடம் 80 பர்சென்ட் உயர் அழுத்த கட்டணத்தில்; ஐந்தாவது வருடம் 90 சதவீதம் உயர் அழுத்த கட்டணத்தில், தொழில் நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் வருஷத்திலேயிருந்து மேற்கண்ட சலுகைகள் கிடையாது என்பதையும் அறிவித்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிகளிலே தொடங்கும் புதிய தொழிற்சாலைகள் இந்தமின் கட்டணச் சலுகையைப் பெறத் தகுதிபெற்றவை அல்ல என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

ஏற்கனவே ஏற்றுமதிக் தொழில் மையத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் 240 கோடி முதலீட்டிலே, 1,500 நபர்களுக்கு நேரடியாகவும், 5,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை அளித்திருக்கிறது. அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே நாட்டுக்கு 24—5—1985-இல் அர்ப்பணிக்கப்பட்டது. உலகத்திலேயே கரும்பு சக்கையிலேயிருந்து இயங்குகின்ற மிகப் பெரிய தொழிற்சாலை இது தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிறுவனம் உற்பத்தி தொடங்கிய முதலாண்டிலேயே 79 சதவீதம் உற்பத்தித் திறன் அடைந்து இலட்சத்து ஏழாயிரத்து எண்பத்தாறு டன்கள் செய்தித்தாள்கள் மற்றும் காகிதங்களைத் தயாரித்து சாதனை புரிந்துள்ளது. முதல் ஆண்டிலேயே இந்த நிறுவனம் 96.21 இலட்சம் ரொக்க லாபம்-கேஷ் பிராஃபிட் பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்த வரையில் 1987—88-இல் 110 கோடி கடனாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் 25,000 நபர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

வைப்புக் கடன் திட்டத்தின்கீழ் 1 சதவீத வட்டியில் தொழில் முனைவோர்களுக்கும், தொழில் வினைஞர்களுக்கும் கடன் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1985—86-ஆம் ஆண்டு 194 இலட்சத்திற்கும், 1986—87-ஆம் ஆண்டில் 290 இலட்சம் அளவிற்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

சிக் இண்டஸ்ட்ரீஸ்—நலிந்த தொழில்களைப் புதுப்பிக்க வழங்கப்படும் கடன் தொகை கடந்த ஆண்டு 69 இலட்சம் ரூபாயாக இருந்தது. 1986—87-இல் 125 இலட்சம் ரூபாயாக உயர்த்திருக்கிறது.

கிராம, புறநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் மருத்துவமனைகள் அமைக்கவும், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உள்நாட்டு வெளிநாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும், தனியார் மருத்துவ மனைகள் தொடங்குவதற்கும், தற்போது கடன் வழங்கப்படுகிறது. 1985—86-இல் 195.40 இலட்சம் ரூபாயும், 1986—87-இல் சுமார் 200 இலட்சம் ரூபாயும் இலாபம் ஈட்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் மைய அரசினுடைய முதலீட்டைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டிலே நான் ஏற்கனவே சொன்னதைப் போல உரகமண்டலத்திற்கு அவர்கள் உரிமம் வழங்கியிருக்கிறார்கள். மணலியிலேயும் உரிமம் வழங்கியிருக்கிறார்கள்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24]

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சர்க்கரைத் தொழிலை அவர்கள் நன்கறிந்திருக்கிறார்கள். அந்த வகையிலே சர்க்கரைத் தொழில் தமிழ்நாட்டிலே மிகச் சிறந்த முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் 12—ம் பொதுத் துறையிலே 3-ம் தனியார் துறையிலே 10-ம் இருக்கின்றன. ஆக 25 இருக்கின்றன. கடந்த ஆண்டு சர்க்கரை உற்பத்தி 8.11 இலட்சம். ஆகவே, என்ன சாதனை என்று கேட்டால் நாம் அதிகமாகச் சர்க்கரை உற்பத்தி செய்ததின் விளைவாக இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை நாம் மீதப்படுத்தியிருக்கிறோம்.

சர்க்கரைத் தொழிலைப்பற்றிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் சொல்கின்றபொழுது, கரும்பு விவசாயிகளுக்கு அதிகம் பணம் தர வேண்டும் ; கிளர்ச்சியெல்லாம் நடத்துகிறோம். கிளர்ச்சி நடத்தினால் இந்த அரசு கவனிப்பதில்லை என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாநில அரசும், மைய அரசும் சேர்ந்துதான் சர்க்கரை—கரும்பு விலையை நிர்ணயிக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் நானேதான் விவசாயத் துறைக்கும் அமைச்சர்; நானேதான் தொழில் துறைக்கும் அமைச்சர். விவசாயிகளைக்கெடுத்து தொழில் துறையை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு என்றைக்கும் கிடையாது ; இந்த அரசுக்கும் அந்த எண்ணம் கிடையாது. ஆகவே, நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது மயிலாடுதுறையில் சென்ற வாரம் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது கிராமம் கிராமமாக நான் சுற்றி வருகின்ற வாய்ப்பைப் பெற்றிருந்தேன். 60 டன் கரும்பு விளைகிறது. அவர்கள் அவ்வளவு மகிழ்ச்சியோடு எனக்கு மலர் மாலையெல்லாம் கொண்டு வந்து போட்டார்கள். இப்பொழுது விலை எங்களுக்கு கிடைத்துவருவது மகிழ்ச்சி தரத் தகுந்தது என்று சொன்னார்கள்.

விலை கட்டுப்படியாகவில்லை என்று யாரும் குறைபட்டுக் கொள்ளவில்லை. இதை அடுத்து இனிமேல் எப்படி விலை நிர்ணயம் செய்வது என்பது குறித்து நான் உள்ளபடியே கவலைப்பட்டு, அதிகாரிகள் மட்டத்திலே பேசிக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 25 சர்க்கரை ஆலைகள் இருந்தாலும் அதில் 14 சர்க்கரை ஆலைகளை நாங்கள் அரசுத் துறையிலே நடத்திக் கொண்டிருக்கிறோம். அத்தனையையும் நிர்வாகம் செய்ய வேண்டியிருக்கிறது. ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது. கிடைக்கும் தொகை பூராவும் இலாபம் அல்ல. எல்லாமே இலாபம் என்று கணக்குப் போட்டுவிட முடியாது. சில வருஷங்களில் தனியார் சர்க்கரை ஆலைகள் சில நட்டத்தைத் தாங்க முடியாமல் மூடக்கூடிய நிலை ஏற்பட்டது என்பது யாருக்குத் தெரியாவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் செங்காளியப்பன் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். கரும்புக்கு விலை எந்த அளவிற்குத் தரவேண்டுமென்று நாம் அடுத்து ஆண்டு தீர்மானித்து விலையை அறிவிக்க இருக்கிறோம்.



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

மொலாஸஸ் விலையை உயர்த்த வேண்டுமென்று சிலபேர் குறிப்பிட்டார்கள். அந்த விலையை மத்திய சர்க்கார்தான் நிர்ணயித்து வருகிறது. தற்போது ரூபாய் 60 என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். இதை ரூ. 100 ஆகக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்த நிலைமையை அவர்கள் பரிசீலனை செய்த பிறகு அதனை மேலும் கூட்டுவது குறித்து இந்த அரசு பரிசீலனை செய்யும்.

30 சர்க்கரை ஆலைகள் வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 12 சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்காக உரிமம் வேண்டி, மைய அரசுக்கும் பரிந்துரைத்திருக்கிறோம். திரு. பாரதி அவர்கள் பேசுகிறபோது, விண்ணப்பங்களை எல்லாம் மத்திய அரசுக்கு அனுப்பி வருகிற விண்ணப்பங்களை எல்லாம் மத்திய அரசுக்கு அனுப்பி விட்டு, நீங்கள் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைத் தவிர என்ன வேலையைச் செய்கிறீர்கள்? என்று கேட்டார். அனுமதிக்கப்படுகிற 12 ஆலைகளில் எத்தனை ஆலைகளை தனியாரிடம் கொடுப்பது, எத்தனை ஆலைகளை பொதுத் துறையில் நிர்வகிப்பது, எத்தனை ஆலைகளை கூட்டுறவுத் துறையில் விடுவது என்பன போன்ற முக்கிய முடிவுகளை எடுத்து மைய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டியது மாநில அரசுதான். இது வரையிலும் மத்திய சர்க்கார் சர்க்கரைக் கொள்கையை வகுக்கவில்லை. இப்போது தான் வகுத்திருக்கிறார்கள். அதன் பேரில் அவர்கள் எத்தனை ஆலைகளை எவ்வெவ்வகைகளில் அனுமதிக்கிறார்கள் என்பது இனிமேல் தான் நமக்குத் தெரியும். அது தெரிந்த பிறகுதான் மத்திய அரசின் கொள்கை என்னவென்று மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரியும்.

'அறிஞர் அண்ணா' சர்க்கரை ஆலை அகில இந்திய அளவில் உற்பத்தித் திறனுக்கான இரண்டாவது பரிசைப் பெற்றிருக்கிறது. அந்த அளவிற்கு தமிழகத்திலே நல்ல முறையில் சர்க்கரை உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது.

கரும்புக்கு தமிழகத்திலே வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை டன் ஒன்றுக்கு ரூபாய் 253 விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறது. விலை ஒன்றும் குறைவாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசிடமிருந்து சர்க்கரை செஸ் நிதியில் இருந்து 6 சதவீத வட்டியில் மாநில அரசு உத்தரவாதக் கடன் ரூபாய் 15 கோடி வாங்கி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு மருந்து அளித்தல், ஒட்டுண்ணி அளித்தல் ஆகிய பணிகளுக்குச் செலவிடப்படும்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

கரும்புச் சத்து குறைந்து விடுதல் என்ற ஒரு பயங்கரம் ஏற்படுவது விவசாயிகளுக்குத் தெரியும். இதனைத் தவிர்ப்பதற்கு வயலுக்குப் பொட்டாஷ் உரம் போடுவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25 மானியமாகத் தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் உதவி செய்கிறோம். இதற்காக ரூபாய் 32 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

வயல்களில் வைக்கப்பட்டிருக்கும் கரும்பை ஆலைகளுக்கு உடனுக்குடன் கொண்டு வராததால் சத்து குறைந்து விடும் அபாயம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் குறிப்பிட்டார்கள் இதைத் தவிர்ப்பதற்கு வயர்லெஸ் மூலம் ஆலைகளையும், வயல்களையும் இணைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். இந்த ஆண்டு வயர்லெஸ் மூலம் கரும்புத் தோட்டங்கள் எல்லாவற்றையும் ஆலைகளுடன் இணைக்கக் கருதியுள்ளோம். இதனை அரசு ஆலைகளிலும், கூட்டுறவு ஆலைகளிலும் செய்யக் கருதியிருக்கிறோம். தனியார் ஆலைகளிலும் அவ்வாறே செய்யக் கேட்டுக் கொள்ள இருக்கிறோம். அவர்களும் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கரும்பு பயிரிடுகின்ற நிலங்களில் தண்ணீர் வாய்க்கால்களின் ஓரப்பயிராக தென்னங் கன்றுகள் நடுவதன்மூலம் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு சர்க்கரை ஆலைப் பகுதியிலும் 20,000 தென்னங்கன்றுகள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 6 இலட்சம் தென்னங்கன்றுகள் இம்மாதிரி நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு சலுகை விலையில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விவசாயிகளின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அவைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்.

கரும்பு சாகுபடி செய்யும் முறைகளில் புதிய கண்டுபிடிப்புகளுடன் இணைந்த செயல் முறைகளை வீடியோ படக் காட்சிகள் மூலம் ஆலைப் பகுதியில் உள்ள கிராமங்களில் விளக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீடியோ கருவிகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டில் இருக்கிற தொழில் தொடங்க வேண்டிய இந்தியர்கள் இப்போது சிப்காட்டிலே வந்து என்னென்ன செய்ய முடியும் என்று அறிந்து கொண்டிருக்கிறார்கள். சென்ற வாரம் ஏப்ரல் 6-ந் தேதி சிப்காட் நிறுவனம், சிங்கப்பூரில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் கலந்துக் கொண்டது. அந்தக் கண்காட்சிக்கு வந்திருந்த நிறையபேர் என்னஎன்ன காரியங்களைச் செய்ய முடியும் என்று சிப்காட் கண்காட்சியில் கேட்டிருக்கிறார்கள். அங்கே 30 அயல் நாட்டு இந்தியர்கள் ஒரு கூட்டத்தில் கலந்து



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

கொண்டிருக்கிறார்கள். அப்போது 30 தொழிலதிபர்கள் இந்தியாவில் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களிலே 6 பேர் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். பொருட்காட்சியில் பங்கு பெற்ற தொழில் அதிபர்கள் அவர்களுடைய பொருள்களை, சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பைப் பெறவும் விவாதங்களை நடத்தினர். அதற்கான விவரங்களையும் அனுப்பியிருக்கிறார்கள்.

(இரவு 7-10)

இப்காட் நிதியுதவி பெற்று சரியாக இயங்க முடியாத நிலையிலுள்ள தொழில் நிறுவனங்களை பரிசீலனை செய்து, தேர்ந்தெடுத்து, அவைகளுக்கு செய்ய வேண்டிய உதவிகளை செய்து வருகிறது. இப்படிப்பட்ட 34 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைகளில் 15 நிறுவனங்கள் பலன் அடைந்துள்ளன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் கிண்டியில் இப்போது மிகப் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் இப்போது இரண்டு கோடி ரூபாய் செலவில் பிர்லா பிளானட்டோரியம் ஒன்று கட்டப்பட்டுக் கொண்டு வருகிறது. 1987 ஆம் ஆண்டிற்குள் அதாவது 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திறக்கப்பட்டுவிடும். அது மாணவர்களுக்கான விஞ்ஞான கருத்துக்களை நல்லபடியாக வாரி வழங்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மைய கட்டட வேலை துரிதமாக நடந்து வருகிறது. 1987 ஆம் ஆண்டிற்குள் அறிவியல் மையத்தின் முதற் கட்டமாக நான்கு அரங்குகள் பொதுமக்கள் பார்வைக்காக தயாரிக்கப்பட்டுவிடும். விஞ்ஞான வளர்ச்சியில் அக்கறையுள்ள தொழில் நிறுவனங்கள் இதற்கு நன்கொடை வழங்கலாம். இந்த நன்கொடைக்கு முழு வருமான வரி விலக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன். ஜப்பானிய நிபுணர் இந்த பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் நல்லபடியாக இயங்குவதற்கு தன்னுடைய அறிவியல் பொருள்களை எல்லாம் தர முன் வந்திருக்கிறார். அதுமட்டுமல்ல. ஜெர்மனி, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாட்டு மக்களும் தங்களால் ஆன உதவிகளைச் செய்வதோடு அந்தந்த நாட்டிலே உற்பத்தி செய்கிற பொருள்களை விலைக்கு எடுத்துக் கொள்வதற்கும் முன் வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987-88 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றம் ஆராய்ச்சி வளர்ச்சிப் பணிகளுக்காக 10 இலட்சம் ரூபாய் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதைப்போன்று 'தொழில் முனைவோர்கள் பூங்கா' ஒன்று ஏற்படுத்த திட்டமிடப்பட்டு அதுவும் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. அதன்படி திருச்சி வட்டார பொறியியல்

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

கல்லூரியில் 150 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க உத்
தேசிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு தமிழ்நாடு அரசிற்கு 20.5
இலட்சம் ரூபாய் செலவாகும். நடப்பாண்டில் இரண்டு இலட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்
துக்கொள்கிறேன்.

பல்வேறு 'பாலி டெக்னாலட்ஜ் ட்ரான்ஸ்ஃபர் சென்டர்ஸ்'
சி.எஸ்.ஐ. ஆரின் 50 சதவீத உதவியுடன் 1987-88 ஆம் ஆண்டில்
அறிவியல் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை பெறு
வதற்காக மாநில அரசுத் துறைகள், தொழிற்சாலைகள் ஆகிய
வற்றிற்கு தொடர்பு முனையாகவும் இணைப்பு மையமாகவும்
செயலாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (தமிழ்நாடு எனர்ஜி
டெவலப்மென்ட் ஏஜென்சி) மூலமாக 1987–88 ஆம் ஆண்டில்
வடாற்காடு மாவட்டத்தில் 5 லட்ச ரூபாய் செலவில் ஒருங்
கிணைந்த ஊரக எரிசக்தி திட்டப்பணி மேற்கொள்ளக் கருதப்
பட்டுள்ளது. அதைப் போன்று நீரேற்றுவதற்கு காற்றாலைகள்
நிறுவப்பட்டு வருகின்றன. சூரிய வெப்ப அடுப்புகளைப் பயன்
படுத்திக் காண்பித்து குறைந்த விலையில் விற்க ஏற்பாடு செய்வ
தோடு அதிக வெப்பத் திறன் கொண்ட அடுப்புகளை வழங்கவும்
சுஜாலா புட்வால்வுகளை வழங்கவும், பல்வகை உபகரண
ஊர்திகளை சிறு உழவர்களுக்கு அதன் மொத்த விலையில் 75
சதவீதத்தை உதவித் தொகையாக வழங்கவுமான பணிகள்
நடந்தேறி வருகின்றன.

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தைப் பற்றி இன்று காலை
யிலே இங்கே குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனம் இலாபத்தில்
நடந்து வருகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன். 1984–85 ஆம் ஆண்டில் 1,069.11 இலட்சம் ரூபாய்க்கு
விற்பனை செய்து 43 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது.
அதைத் தொடர்ந்து 1986–87 ஆம் ஆண்டில் 1,586.26 இலட்சம்
ரூபாய்க்கு விற்பனை செய்து 44.37 இலட்சம் ரூபாய் இலாபம்
பெற்றுள்ளது.

இந்நிறுவனத்தின் திறமையான செயல்பாட்டிற்கு எடுத்துக்
காட்டாகச் சொல்ல வேண்டுமானால், நெய்வேலி பழுப்பு
நிலக்கரி நிறுவனத்திடம் பெறப்பட்ட பக்கட் வீல் எக்ஸ்லேட்டர்
கள் உற்பத்தி செய்யும் வேலை; நெய்வேலி பழுப்பு நிலக்கரி
நிறுவனத்தில் ஏற்றுக்கொண்டுள்ள 11.50 கோடி ரூபாய் மதிப்
புள்ள எஃகு கட்டுமானப் பணி; மேட்டூர் அனல் சக்தி நிலையத்
தின் முதல் பிரிவினை நிறுவுதல்; காடம்பாறை பம்பு ஸ்டோரேஜ்
திட்டம், கீழ் மேட்டூர் நீர் மின்சக்தித் திட்டம் போன்றவற்றைக்
குறிப்பிடலாம். இப்படிப்பட்ட பல்வேறு பணிகள் மூலம் இந்
நிறுவனம் மிகச் சிறப்பாக பணியாற்றி வருகிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

சிவகங்கையில் டாமின் நிறுவனம் 1978 ஆம் ஆண்டு நிறு
வப்பட்டது. அதிலே சென்ற ஆண்டு 826 இலட்சம் ரூபாய்
வருமானம் வந்தது. மொத்த நிகர இலாபம் 97.5 இலட்சம்.
சென்ற ஆண்டு கூட நண்பர் முருகானந்தம் அவர்கள் பேசுகிற
போது நான் தலைவராக இருந்தால் ஒரு கோடி ரூபாய் பெறு
வேன் என்று சொன்னார்கள். அவர்கள் தலைவராக இல்லா
மலேயே ஒரு கோடி ரூபாய் வருகிறது என்பதை நான் தெரி
வித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிவகங்கையில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கிரா
ஃபைட் திட்டம் உருவாக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்தத்
திட்டத்தின் மொத்தச் செலவு 24 கோடியே 25 இலட்சம்.
அதிலே அரசின் பங்கு 450 இலட்சம் ரூபாய். மேற்கு ஜெர்மனி
அம்போல்ட் நிறுவனத்தின் தொழில் நுட்பத்தைப் பெற்று, நிறுவ
ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து உரி
மம் கிடைத்ததும் இந்தத் தொழிற்சாலையின் பணிகள் தொடங்
கப்படும். இந்தத் தொழிற்சாலையை உருவாக்கினால் ஆண்டு
ஒன்றுக்கு 8 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியை ஈட்டும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணலி பாறை அறுத்து மெருகூட்டும் தொழிற்சாலை 640
இலட்சம் ரூபாய் செலவில் 100 பெர்சன்ட் ஏற்றுமதி நோக்கத்
தோடு உருவாக்கப்பட்டிருக்கிறது. 1986–87–ல் 38 இலட்சம்
மெருகூட்டப்பட்ட கற்பலகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
1987–88–ல் 200 இலட்சம் மெருகூட்டப்பட்ட கற்பலகைகளை
ஏற்றுமதி செய்ய இருக்கிறது. ஏற்கெனவே, இந்திராகாந்தி அம்
மையார் அவர்களின் சிலையை உருவாக்குவதற்காக இங்கே
யிருந்து கற்கள் அனுப்பப்பட்டு இருப்பதைப்பற்றி நான் சொன்
னேன்.

தட்டிய இடத்திலே எல்லாம் தங்கம் கிடைக்கிறது. வெட்
டிய இடத்திலே எல்லாம் இரும்பு கிடைக்கிறது என்று வசனம்
பேசியே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்று நம்முடைய மாண்பு
மிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் சென்ற வாரம்
பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். அறிஞர் அண்ணா
அவர்கள் கூட தெரியாமல் சொல்லி விட்டார்களோ என்று கூட
ஒரு கணம் வியப்புற்றேன். ஏனென்றால் நானெல்லாம் அறிஞர்
அண்ணாவோடு ரொம்பக் காலம் வளர்ந்தவன். ஆகவே, தட்
டிய இடத்தில் தங்கம் கிடைக்கிறதா என்பதைப் பொறுத்த
வரையில் இன்றைக்கு இந்த மன்றத்தில் தெரிவிக்க வேண்டும்
என்பது என்னுடைய ஆசையாகும். மாநில புவியியல் மற்றும்
சுரங்கத்துறை மூலம் தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி, வட்டத்
தில் மகாராசகடை, நாலபள்ளி, சேமிப்புக்காடு பகுதியில் 3 கிலோ
மீட்டர் நீள பாதை அமைப்பு முறையில் புவி பௌதீக ஆய்வுகளை
மேற் கொண்டது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

கடந்த இரண்டாண்டுகளாக விரிவான ஆய்வு செய்யப்பட்டது. நீள்வகை சோதனைக் குழிகள் வெட்டப்பட்டன. சுமார் 78 சோதனை மாதிரிகள் மற்றும் மண் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த மாதிரிகளின் மூலம் டன்னுக்கு 0.1 கிராம் முதல் 6.6 கிராம் வரையில் தங்கச் சத்து காணப்படுவது தெரியவந்தது.

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் இப்போது நல்லபடியாக நடக்கிறது. சுழலும் சூளைத் திட்டம் என்பது 8.57 கோடி ரூபாயில் துவங்கப்பட்டு கடந்த ஆண்டு 18,385 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு 18,972 டன்கள் விற்பனை செய்து 520.76 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரும்பு உருக்காலைத் தொழிலில், ஏற்பட்டுள்ள தொழில் நுட்பத்திறன் மாற்றங்களால் வெப்பம் தாங்கிக் கற்கள் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 56 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாராக இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்து வருகிறோம்.

டிட்கோ நிறுவனம் 8 தொழிற்சாலைகளை இலாபகரமாக நடத்துகிறது. அவை 331 கோடியே 16 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் இலாபம் ஈட்டி இருக்கிறது. 15 தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. 36 கோடியே 27 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. மூன்று நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. கங்கப்பா பேப்பர் மில்ஸ், சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட், சதர்ன் போராக்ஸ் லிமிடெட் ஆகியவை மூடப்பட்டிருக்கின்றன. கட்டுமானத் திட்டங்கள் 17-ஐ டிட்கோ வைத்திருக்கிறது. மொத்தத் திட்டச் செலவு 960 கோடி ரூபாயாகும். இதன் மூலம் 6,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு பெறுகிற நபர்களைப் பொறுத்தவரையில் 40,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. அந்த வகையில் டிட்கோ பணியாற்றுகிறது.

பீங்கான் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் அது நட்டத்தில்தான் இயங்குகிறது. பெரிய வளர்ச்சி என்று சொல்ல முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராசன் அவர்கள் தொழிலாளர்களின் சார்பாக ஒரு விண்ணப்பம் அளித்து இருக்கிறார்கள். அதாவது, அந்தத் தொழிலை டிவிடாதீர்கள், என்ன உதவி வேண்டு



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

மானாலும் தொழிலாளர்கள் செய்கிறோம் என்று சொல்லி முன் வந்திருக்கிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்டவர்களுடன் மீண்டும் கலந்து பேசி என்ன என்ன செய்ய முடியுமோ அவற்றைச் செய்யலாம் என்று கருதுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 7–20)

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது ஒரு அதிகாரி இரண்டு இடத்திலே இருந்து வேலை செய்து வருகிறார் என்ற குற்றச்சாட்டை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது யார் என்று விசாரித்ததில் ஹரி என்பவர் கம்பெனி செக்ரட்டரியாக பணியாற்றுகிறார். அவர் எந்த தவறும் செய்யவில்லை என்றும் அவர் அப்படிப்பட்டவர் இல்லை என்றும் எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. அவர் அடிஷனல் சார்ஜில் போஸ்ட்டட் ஆஸ் செக்ரட்டரி டிட்கோ, ஸ்டாப் கேப் அரேன்ஜ்மென்ட் என்ற வகையில் தற்காலிகமாக பதவியிலே நியமிக்கப்பட்டிருக்கிறாரே தவிர, நிரந்தரமான பதவியில் இல்லை என்பதையும், டிட்கோ புதிய தாக நபர் வேண்டும் என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்ஜினீயரிங் தொழில்கள் சரிவர இயங்கவில்லை என்பதையும் நம்முடைய உத்திராபதி அவர்களும் ஹேமச்சந்திரன் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பழைய இயந்திரங்களைப் பயன்படுத்துவதனாலே தான் என்ஜினீயரிங் தொழில்களிலே உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு வெளிச் சந்தையிலே சரியான மார்க்கெட் இல்லை என்பது இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அங்கே புதிய இயந்திரங்களை வாங்கிப் போடும்படி, நலிவுற்ற தொழிலகங்களுக்கு அரசு உத்தரவு இட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி நலிவுற்ற தொழிற் கூடங்களுக்கு மறுவாழ்வு திட்டத்திற்கு சிப்காட், டி.ஐ.ஐ.சி. மூலம் உதவி அளிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மின் அணு தொழிற்சாலைகளைப் பற்றி பொன் முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்டை மாநிலங்களின் விற்பனை வரி விகிதத்தைக் கொண்டுதான் நாம் மின் தொழிற்சாலைகளுக்கு தேவையான விற்பனை வரியைக் குறைத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டிலே மின் அணு தொழிற்சாலைகள் உருவாக்குவிக்கும் பொருட்டு எங்கேனும் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படுமானால் அதற்கு உதவித் தொகையாக 10 சதவீதம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தில் 9 இடங்

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24]

களில் மின் அணு தொழிற்கூடங்கள் மேம்படுத்தப்பட்டு மனை
கள் மற்றும் ஷெட்டுகள் கட்ட மின் அணு தொழில்களுக்கு
வழங்கப்பட்டு வருகிறது. மின் அணு தொழிற்கூடங்களுக்கு எல்
காட் நிறுவனம் கூட்டு முயற்சியில் உதவிகரமாக இருந்து வரு
கிறது. தற்போது 6 கூட்டுத் தொழில் துறைகள் உள்ளன.
அவை வணிக முறையில் உற்பத்தியை ஏற்கனவே தொடங்கி
விட்டன. 5 கூட்டுத்துறை தொழில்கள் முன்னேற்றமான
நிலையில் இருக்கின்றன. மேலும் 5 கூட்டுத்துறை தொழில்கள்
அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. இம்மாதிரியான
முயற்சிகள் தனியார் மற்றும் கூட்டு தொழிலில் உள்ள அனைத்து
மின் அணு தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு பேருதவியாக
இருந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

1985–86இல் தமிழகத்தில் மின் அணு தொழிற்சாலை உற்
பத்தியில் 120 கோடியாக இருந்தவை 86–87இல் 230 கோடி
யாக உயர்ந்திருக்கிறது. புதிய தொழில்களுக்கு ஏன் அதிகமான
உரிமங்களை வழங்குவதில்லை என்று கேட்டார்கள். உரிமம்
வழங்குவதற்கு மத்திய அரசுக்குத்தான் முழு அதிகாரம் இருக்
கிறது. நிலையான நடைமுறையை இதில் மைய அரசு பின்
பற்றுவதில்லை. அவ்வப்போது அறிவிக்கிறார்கள். அந்த வகை
யில் உரிமங்களைத் தருகிறார்கள். உரிமங்களை அதிகமாக
வழங்க வேண்டும் என்று நாம் வாதாடிக்கொண்டு வருகிறோம்
என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். டி.ஐ.ஐ.சி.யிலே
கடன் வழங்குவது பற்றியெல்லாம் கூட கேட்டார்கள். டி.ஐ.
ஐ.சி.யைப் பொறுத்தவரையில் 37 ஆண்டுகளில் வழங்கப்பட்ட
மொத்தக் கடன் தொகை ரூ. 585.21 கோடி. தள்ளுபடி செய்ய
உத்தேசித்து கணக்கில் காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகை
ரூ. 4 கோடியே 70 இலட்சம். இது மொத்தத்தில் 1 சதவீதம்
மட்டும் தான். ஆக அதிகமான அளவில் எந்த வகையிலும்
தவறுகள் டி.ஐ.ஐ.சி.யில் நடந்து விடவில்லை என்பதையும்
தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். டி.ஐ.ஐ
சி.யில் அவ்வளவாக தொழிற்சாலைகள் மூடியதாககூட
இல்லை. 34 ஆயிரம் தொழிற்சாலைகளுக்கு 37 ஆண்டுகளில்
கடன் வழங்கியிருக்கிறது. அவற்றில் 130 தொழிற்சாலைகள்
மட்டும் தான் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. அது ஒன்
றும் பெரிய சங்கடமான நிலையில் இல்லை. தமிழ்நாட்டில்
தொழில் ஒழுங்காக நடந்து வருகிறது என்பதையும் தெரிவித்
துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு கடந்த 5
ஆண்டுகளில் இந்த ஆட்சி என்ன செய்தது என்று கேட்டார்கள்.
கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 16 ஆயிரம் தொழில் நிறு
வனங்கள் 327 கோடி ரூபாய் கடனுதவியாக டி.ஐ.ஐ.சி.யிலிருந்து
பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியாகச் சொல்லிக்
கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

தர்மபுரி மாவட்டம் ஓசூரில் இருக்கிற கிணறுகளில் தண்ணீர்
இல்லை. கேலவரப்பள்ளி அணை வந்தால் தான் உண்டு.
இல்லாவிட்டால் என்னவாகும் என்று கேட்டார்கள். ஓசூர்
தொழில் நகரத்தில் 32 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்
கின்றன. 26 கிணறுகளில் நீர் ஊற்று சரியான முறையில் இயங்கி
வருகிறது. ஓசூரின் தண்ணீர் தேவை சரியான முறையில்
சிப்காட் நிறுவனத்தால் கவனிக்கப்பட்டு வருகிறது. தினமும்
8 இலட்சம் கேலன் தண்ணீர் அந்த இடத்தில் வழங்கப்படுகிறது.

வடாற்காடு மாவட்டம் இராணிப்பேட்டை சிப்காட் நிறு
வனம் காவல் நிலையம் செயல்பட்டு வருவதைப் பற்றி கேட்
டார்கள். அங்கே நிரந்தர காவல் நிலையம் அமைக்க சிப்
காட் நிறுவனம் 2.84 ஏக்கர் நிலம் காவல் துறைக்கு ஒதுக்கி
யுள்ளது. அந்த இடத்தில் கட்டிடம் அமைக்க மதிப்பீடுகள்
தயார் செய்யப்பட்டு மேல் நடவடிக்கையெடுக்கப்பட்டு வரு
கிறது.

தர்மபுரி மாவட்டம் ரெயில் அகலப் பாதை ஏற்படுத்துவதைப்
பற்றி மாண்புமிகு உறுப்பினர் முருகானந்தம் கேட்டார்கள்.
நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். சேலம்-பெங்களூர் ரெயிலே நான் நாடாளுமன்ற
உறுப்பினராக இருந்தபோது அரும்பாடுபட்டு கொண்டு வந்தது.
அப்போது தாசப்பா அவர்கள் ரெயில்வே அமைச்சராக இருந்தார்
கள். மறைந்த அனுமந்தையா அவர்கள் பெங்களூர் நாடாளு
மன்ற உறுப்பினராக இருந்தார்கள். எங்களுடைய ஊரைச்
சேர்ந்த எஸ். வி. இராமசாமி அவர்கள் ரெயில்வே துணை
அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியில்
இருந்தார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்
தேன். நாங்கள் நான்கு பேரும் கலந்து பேசி மத்திய அரசை
ஏமாற்றி, கொண்டு வந்த திட்டம்தான் அது. இல்லா விட்டால்
அது வந்திருக்காது. நான் இதைச் சொல்வதில் ஒன்றும்
பிரச்சினை இல்லை. யாரும் கோபித்துக் கொள்ளாதீர்கள்.
(குறுக்கீடு) மாண்புமிகு மனோகரனுக்கு அந்த உரிமையுண்டு.
காங்கிரஸ் கட்சி தலைவர்கள் வீட்டிற்கு போனேன் நான்
ஆகவே அதைச் சொல்வதில் தவறில்லை. ஏமாற்றி என்ற
வார்த்தையை வேண்டுமானால் எடுத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது மக்கள் நலனுக்
காக யாரையும் ஏமாற்றலாம். அதை எடுக்க வேண்டாம்.
அது இருப்பதில் தவறில்லை.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏன் சொல்கிறேன்
என்றால் தாசப்பா அவர்கள் அப்போது ரெயில்வே அமைச்சர்
என்னுடைய அடுத்த தொகுதியைச் சார்ந்தவர். அவர் எவ்
வளவோ முயற்சி எடுத்தார்கள். ரெயில்வே போர்டு கடைசி
வரையில் அகலப் பாதை ஏற்படுத்துவதற்கு ஒப்புக் கொள்ளவே

[திரு. க. இராசாராம்] [1987 எப்ரல் 24

இல்லை. மறுத்து விட்டது. ஆகவே அகலப் பாதை வரும்
என்பதில் எனக்கு அந்த நம்பிக்கையே கிடையாது. வேண்டு
மானால் டெல்லிக்கு போகிறபோது நீங்கள் யாரையாவது பார்த்து
கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். எனக்கிருக்கிற அனுபவத்தில் அது வருமென்ற
நம்பிக்கை கொஞ்சம்கூட கிடையாது.

அடுத்து பாளையம் சிமெண்ட் ஆலைத் திட்டம், அண்ணா
மாவட்டம், அண்ணா மாவட்டத்தில் பாளையம் என்ற இடத்தில்
ஆண்டு ஒன்றுக்கு நான்கு இலட்சம் டன் உற்பத்தித்திறன் கொண்ட
சிமெண்ட் ஆலை நிறுவுவதற்கு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்
மத்திய அரசின் இசைவைக் கோரி விண்ணப்பித்திருக்கிறது.
மத்திய அரசு இந்த சிமெண்ட் தொழிற் சாலைக்குத் தேவையான
முக்கிய மூலப் பொருளான சுண்ணாம்புக் கல் போன்றவை கிடைப்
பதைக் குறித்த விவரங்களை நமது அரசிடம் கேட்டுள்ளது.
இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்பு
மிகு துணைத் தலைவர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் தூசியைப் கட்டுப்படுத்து
வது பற்றி குறிப்பிட்டார்கள். அங்கே தூசியை கட்டுப்படுத்து
வதற்குத் திட்டமிடப்பட்டு வேலை நடந்து கொண்டு வருகிறது.
அதனால் ஓரளவிற்கு தூசியைக் கட்டுப்படுத்த முடிந்திருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல் அண்ட் பெர்டிலைசர்ஸ் நிறு
வனத்தில் 'டிட்கோ' 46 சதவீதம்—ரூ. 5.88 கோடி மதிப்பில் மூல
தனம் வைத்துள்ளது. இதிலே 20 சதவீதமாகிய 2½ கோடி ரூபாய்
மதிப்புள்ள மூலதனத்தை ஸ்பிக் நிறுவனத்திற்கு விற்க ஆவன
செய்திருக்கிறோம் என்ற செய்தியைத் தெரிவித்து இருக்கிறார்
கள். ஏன் காரைக்குடியில் இருக்கிற கெமிக்கல் தொழிற்சாலையை
விற்று விட்டார்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் தெரி
வித்துக் கொள்கிறேன். டிட்கோ நிறுவனம் உருவாகியதே பல
புதிய தொழில்களை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்
தான். அந்தத் தொழில்களை வளர்க்க வேண்டுமென்பதற்காகத்
தான். ஏனென்றால் தனியார் அப்படிப்பட்ட தொழில்களை
துவங்க முன் வருவதில்லை. வளர்ந்து இலாபம் வருமானால்
யாராவது தனியார் விலைகக்குக் கேட்டால் அதை விற்று விடுவது
தான் டிட்கோவிற்கு இருக்கிற வேலை. நல்ல பங்குத் தொகைக்கு
நல்ல இலாபம் வந்தவுடன் அதை விற்பார்கள். அந்தப்
பணத்தையெடுத்து மீண்டும் புதிய தொழில்களைத் துவக்குவது
தான் டிட்கோவினுடைய கொள்கை. டிட்கோவினுடைய இந்தக்
கொள்கை இந்த அரசால் வளர்க்கப்பட்டதல்ல. ஏற்கெனவே



[திரு. க. இராசாராம்]
1987 ஏப்ரல் 24]

இருந்த அரசுகள் இந்தக் கொள்கையை நாட்டிற்குச் சொல்லி
அதை நடைமுறைப்படுத்தி வருகிறோமென்பதே தவிர இது
புதிய கொள்கையல்ல. ஆகவே அதை விற்றதில் அதிசயப்
படவோ, ஆச்சரியப்படவோ, திடீரென்று திகைக்கவோ வேண்
டிய தேவையில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அழகப்பா சிமெண்ட் ஆலையைப் பற்றி குறிப்பிட்டார்
கள். அவர்களுக்கு நிலத்திலிருந்து சுண்ணாம்புக் கல்லை வெட்டி
யெடுக்க 20 ஆண்டுகளுக்கு சுரங்கக் குத்தகை கோரியிருக்கிறார்
கள். அந்த நிறுவனத்தினர் கோரிய 167.10 ஏக்கர் நிலம் உட்
பட மொத்தம் 1,283.62 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு சிமெண்ட்
நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்து அரசு நிலை ஆணை எண் 921,
நாள் 25—8—86-ல் ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதனால்
திருவாளர்கள் அழகப்பா சிமெண்ட் நிறுவனத்தினர் அவர்களுக்குச்
சொந்தமான 167.10 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு சிமெண்ட்
நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ததை எதிர்த்து ஹைகோர்ட்டிலே
ரிட்மனு கொடுத்திருக்கிறார்கள்.

(இரவு 7-30)

உயர்நீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்திருக்கிறது. மேலும்
இதைத் தொடர்ந்து 30—9—86-லே அழகப்பா சிமெண்ட் நிறு
வனத்தினர் மத்திய அரசுக்கு சீராய்வு மனுச் செய்ததன் பேரில்,
இந்த அரசு தேவையான விளக்கத்தை மத்திய அரசுக்கு அனுப்பி
யிருக்கிறது. மத்திய அரசு இதன் மீது இறுதி ஆணை பிறப்பித்த
பின்புதான் இதன் மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரணி சிமெண்ட் ஆலையைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள்.
வெளிநாட்டில் வாழும் இந்தியருக்குக் கொடுத்திருப்பதைப் பற்றி
அவர்கள் குறிப்பிட்டார்கள். இது ஒன்றும் சலுகை அல்ல.
வெளிநாட்டிலே இருக்கிற இந்தியர்கள் இங்கே வந்து தொழில்
தொடங்க வேண்டும் என்று நாம் அன்றாடம் விண்ணப்பித்துக்
கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், தமிழ்
நாட்டில் இருப்பது 30, 40 குடும்பங்கள்தான் தொழில் குடும்பங்
கள். தமிழ்நாட்டில் தொழில் குடும்பங்கள் ஒன்றும் பெரியதாக
இல்லை. ஆகவே வெளிநாட்டிலே இருக்கிற, நம்மை விட்டுப்
போன தமிழர்கள் பணம் சம்பாதித்து இருக்கிறார்கள். அதைக்
கொண்டு வந்தால் நல்லது. நீங்கள் எல்லாம் அங்கே போகும்
போதுகூட அவர்களைக் கூப்பிடலாம். யார் வந்தாலும் வர
வேற்கத் தயாராக இருக்கிறோம். ஆகவே சட்டமன்ற உறுப்
பினர் பாரதி அவர்கள் இங்கே சிக்கல், அங்கே சிக்கல் என்று
சொன்னார்கள். எந்தச் சிக்கலும் இல்லாமல், அவர்கள் நேராக
என்னிடம் வந்தால் நான் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டு
இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

திருப்பத்தூர் வட்டத்தில் வெர்மிகுலைட் என்கிற மைக்கா கிடைத்து வருகிறது. அதை எடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்து கொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடைசியாக சில அறிவிப்புகளைத் தந்து விடைபெறலாம் என்று நான் கருதுகிறேன். சர்க்கரைத் தொழிலின் மேம்பாட்டிற்குத் தேவைப்படும் ஆக்க சக்தியைத் தோற்றுவிக்க சர்க்கரை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்றினைத் துவக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது. இந்த நிலையம் அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளின் பொருளாதார ஆதரவு பெறுவதுடன் அரசு ஆதரவும் பெறும். இந்த நிலையத்தின் செயல்பாடு குறித்து ஆராய ஒரு சர்க்கரைத் தொழில் நுட்ப வல்லுநரின் தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

1987–88 ஆம் ஆண்டில் 1.5 மெகாவாட் திறனுள்ள காற்றாலையை தமிழ்நாட்டில் நிறுவ மத்திய அரசின் ஒப்புதலை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை இன்று பெற்றுள்ளது. இது தூத்துக்குடியில் அமைக்கப்பட்ட காற்றாலைகளைப் போன்றதேயாகும். ஆனால் இது 100 கிலோ வாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் திறன் வாய்ந்த ஜெனரேட்டர்களைக் கொண்டதாகும். இதற்கான ஜெனரேட்டர்கள் டென்மார்க்கிலிருந்து, ஆகஸ்டு 1987-ல் கிடைக்கும் என இந்திய அரசு கூறியிருக்கிறது.

இதற்கான திட்டம் தூத்துக்குடியில் செயல்முறையில் அமைக்கப்பட்டுள்ள 1.1 மெகாவாட் திறனுள்ள காற்றாலைப் பண்ணையை போன்று செயல்படுத்தப்படும். இதில் 100 கிலோ வாட் திறனுள்ள 15 ஜெனரேட்டர்கள் நிறுவப்படும். இயந்திரங்கள் மற்றும் அதனைப் பொருத்தி தொடங்குவதற்கான செலவை மத்திய அரசு ஏற்கும். கட்டுமானப் பணி மற்றும் மின் இணைப்பிற்கான செலவினை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையும், தமிழ்நாடு மின்சார வாரியமும் ஏற்றுக் கொள்ளும்.

இக்காற்றாலைப் பண்ணையை தூத்துக்குடியில் அமைக்கலாமா அல்லது சுல்தான் பேட்டை (கோவை, மாவட்டம்) முப்பந்தல் (கன்னியாகுமரி மாவட்டம்), கயத்தாறு (சிதம்பரனார் மாவட்டம்) ஆகிய ஏதேனும் ஒரு இடத்தில் நிறுவலாமா என்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

'நிப்பன் செராமிக்ஸ்' என்ற உலகப் பிரசித்தி பெற்ற ஜப்பான் நிறுவனத்தின் கூட்டமைப்பில் எலக்ட்ரானிக் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வெகு தூய்மையான சிலிகா பவுடர்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை டாமின் நிறுவனம் அமைக்க இருக்கிறது. இது தமிழ்நாட்டில் சுற்றுப்புறச் சூழல்



1987 ஏப்ரல் 24] [திரு. க. இராசாராம்]

வெகு தூய்மையாக இருக்கும் இடத்தில்தான் அமைக்க முடியும் என்ற காரணத்தினால் ஜப்பானிய தொழில் நுணுக்கக் குழு ஏப்ரல் திங்கள் கடைசியில் அல்லது மே திங்கள் முதல் வாரத்தில் சென்னைக்கு வந்து மலைப்பாங்கான கொடைக்கானல், ஜவ்வாது மலை ஏலகிரி மலை போன்ற இடங்களைச் சுற்றி ஆராய்ந்து தொழிற்சாலைக்குத் தகுந்த ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க உள்ளது. இந்தத் திட்டம் ஏறக்குறைய 10 முதல் 12 கோடி செலவில் அமைக்கப்படும். விரிவான திட்ட அறிக்கை ஜப்பானிய தொழில் நுணுக்க வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

''ஸிர்கான்-ரூடைல்''; மைய அரசின் அணு மின் துறை கடற்கரை ஓரங்களில் கிடைக்கும் அரிய மண் வளத்தில் கலந்திருக்கும் ''ஸிர்கான்'' மற்றும் 'ரூடைல்' கனிமத்தைப் பயன்படுத்தி 'ஸிர்கோனியம்' மற்றும் 'டைடேனியம்' உலோகங்களைத் தயாரிக்கும் ஒரு கனரகத் தொழிற்சாலையை அமைக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இது சம்பந்தமான இடத்தேர்வுக் குழு தமிழ்நாடு உட்பட சில மாநிலங்களைப் பார்வையிட்டுள்ளது. தமிழ்நாட்டில் வ.உ.சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியை ஒட்டியுள்ள பழையகாயல் என்ற இடத்திலுள்ள நிலங்களைப் பார்வையிட்டு மேற்படி தொழிற்சாலை அமைக்கத் தகுந்த சூழ்நிலைகள் அங்கிருப்பதாகக் கண்டறிந்துள்ளது. இத்தொழிற்சாலையை அமைப்பதால் மத்திய அரசு ரூ. 100 முதல் 150 கோடி வரை தமிழ்நாட்டில் முதலீடு செய்யவும் அதன் மூலம் 1,000 நபர்களுக்கு மேல் வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கவும் முடியும் என்பதால் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருவதாக தமிழக அரசு மைய அரசுக்கு உறுதியளித்து மேற்படி தொழிற்சாலையை தூத்துக்குடியில் அமைக்கும்படி வலியுறுத்தி வருகிறது. இதுபற்றி ஏறகெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்றபோது நேரிலும் பாரதப் பிரதமரிடத்திலே வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். அது வருமேயானால் மத்திய அரசினுடைய 100 கோடி ரூபாய் தொழிற்சாலை நமக்குக் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத திட்டக் காலத்தில் தமிழகத்தில் 11 மாவட்டங்களிலே புதியதாக தொழில் மையங்கள் அமைக்க ஆணையிடப்பட்டிருக்கிறது. இந்த 11 மாவட்டங்களில், மதுரை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி தொகுதியில், மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூரிலே நடப்பு ஆண்டிலே அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, நடப்பு ஆண்டில் திட்டமிட்டு 'சிப்காட்' தொழிற் பேட்டையை அமைக்கலாம் என்பதையும் அரசு ஆய்வு செய்து வருகிறது.

[திரு. க. இராசாராம்] [1987 ஏப்ரல் 24

உரத் தொழிற்சாலை. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 15 புதிய உரத்தொழிற் சாலைகளை நிறுவுவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இவற்றில் ஒன்றை தமிழ்நாட்டிலே நிறுவும்படி இவ்வரசு ஏற்கெனவே மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. மத்திய தொழில் அமைச்சர்களிடம் கடிதம் மூலமும், நேரடியாகவும் இதுபற்றி தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இவ்வரசின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாட்டிலே ஒரு உரத் தொழிற் சாலையை நிறுவ மத்திய அரசு முடிவெடுத்தால், அதனால் 500 முதல் 650 கோடிக்கு தமிழ்நாட்டிலே மேல் முதலீடு செய்ய மத்திய அரசாலே முடியும். சுமார் 3,500 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை இது உருவாக்கும். ஆகவே, மாநில அரசு மத்திய அரசுடன் தொழில் துறையிலே முடிந்த அளவிற்கு ஒத்துழைக்கிறார்கள். மூன்றாவது இடம் தக்க வைக்கப்பட்டிருக் கிறது. நல்லபடி தொழில் முதலீடு செய்வதற்கு, வெளிநாட்டுக் காரர்கள் ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தொழில் துறை ஒன்றும் சோடை யாக இல்லை; சொத்தையாக இல்லை; சுணங்கிப்போய் இருக்க வில்லை; சிக்கலும் இல்லை என்பதைத் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை அருள் கூர்ந்து திரும்பப் பெறவேண்டுமென்று வேண்டிக் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆவது ஆண்டு நம்முடைய மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையினுடைய தலைவராக இருந்தபோதே. மதுரை மாவட்டம் பிரிக்கப்படாமல் இருக்கும் போது சிப்காட்டில் இருந்து 1,000 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு இண்டஸ்டிரியல் காம்ப்ளெக்ஸ் ஆரம்பிக்கவேண்டுமென்று கோரி அதற்காக நிலமும் பார்க்கப்பட்டு, அதற்கு அதிகாரிகளை நிய மித்து, அதற்காகவே ரூ. 1 லட்சத்து 39 ஆயிரம் செலவு செய்யப் பட்டிருந்ததே, இப்போது அதுபற்றி ஒரு குறிப்புகூட இல்லையே அதுவும் திண்டுக்கல் பகுதியைப் பிரித்து அதற்கு அண்ணாவினு டைய பெயரை வேறு வைத்து இருக்கிறீர்களே. மிகவும் பின் தங்கிய அந்தப் பகுதிக்கு, வேடசந்தூர் தொகுதிக்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலையைக் கொடுத்து இருக்கிறீர்களே— அதைப்போல தயவுசெய்து மறுபடியும் இதுபற்றி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் ஏற்கெனவே சொன்னேன், 11 இடங்களிலே இருக்கிறதென்று. அதிலே 3 இடங் களில் நடப்பு ஆண்டிலே வேலை எடுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அண்ணா மாவட்டத்திற்கு தொழிற்சாலை வருவதைப்பற்றியெல்லாம் என்னிடத்தில் தற்போது குறிப்புகள் எதுவும் இல்லை. அதுபற்றி பிறகுநான் ஆலோசித்து உங்களுக்குத் தகவல் தருகிறேன்.



1987 ஏப்ரல் 24] திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் வட்டம், செவ்வாத்தூர் பகுதியில் ஏற்கெனவே வெர்மிகுலைட் வெட்டி எடுக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு இன்றைக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதே பகுதியிலே அப்படைட் என்ற ஒரு கனிமப் பொருளும் இருக்கின்ற காரணத்தால் அதை வெட்டியெடுக்க அரசு நட வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கனிமப் பொருள்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றாகத்தான் வெட்டியெடுக்கிற வேலையிலே அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது. அதிலே, அங்கிருக்கிற கனிமப் பொருள் இருக்கும் இடத்தில் தண்ணீர் நிறைய இருக்கிறது. அதை ஆவியாக போக்கவேண்டிய வேலையெல்லாம் இருக்கிறது. லாபகரமாக இயங்குமா என்பதுகூட சற்று சந்தேகம். அதையும் பார்த்துத்தான் அந்தக் கனிமப் பொருளை வெட்டியெடுக்கக் கூடிய வேலையை அரசு ‘டாமின்’ மூலமாக செய்ய இருக்கிறது.

திரு. ஜி. கே. ஜெ பாரதி : மாண்புமிகு பேரவைத் தலை நாயகர் அவர்களே, இந்தியப் பேரரசினுடைய ஆட்சிக் கட்சி யினுடைய நாடாளுமன்ற உறுப்பினர், நம்முடைய வணக்கத்திற் குரிய, காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தங்கபாலு அவர்கள் மாநிலங்கள் அவையிலே ஒரு கேள்வியைத் தொடுத்தார்கள். அப்போது, மாநிலங்கள் அவையினுடைய தகுதிபெற்ற அமைச்சர் மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள், தமிழகத்திலிருந்து உரிமங்கள் கேட்டு வந்திருக்கிற கோப்புகளையெல்லாம் உடனுக் குடன் நாங்கள் தொடர்ந்து பைசல் செய்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தினுடைய அமைச்சர் அவர் கள் போராடவேண்டுமென்று சொல்கிறார்கள். அதேநேரத்தில் பப்ளிக் செக்டார் மூலமாக, ஜாயிண்ட் செக்டார் மூலமாக, பிரை வேட் செக்டார் மூலமாக இங்கேயிருந்து மத்திய அரசினிடம் உரிமங்கள் கேட்டு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள் எத்தனை, அவைகளில் எத்தனை தேங்கி இருக்கின்றன என்று தெரிவித்தால் அதை எங்கள் கட்சியின் சார்பாகவும் நாங்கள் போராடுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் போராடுவதாக ஒன்றும் சொல்ல வில்லை. நாங்கள் கேட்கிறோம். அவர்கள் தந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதிலே ஒன்றும் பெரிய பிரச்சினைகளெல்லாம் கிடையாது. திரு. வெங்கட்ராமனும் தென்னாட்டைச் சேர்ந்தவர் கள்தான்; திரு. அருணாசலம் அவர்களும் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள்தான். நான்தான் சொன்னேனே, 1,000கோடி ரூபாய்க்கான ஒரு தொழிற்சாலையை கேட்ட மாத்திரத்திலேயே

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 ஏப்ரல் 24

தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியைச் சொன்னேன். அதற்காக காங்கிரஸ் உறுப்பினர்கள் மகிழ்வார்கள் என்று நம்புகிறேன். எந்தப் பிரச்சினையும் அதிகமாக இப்போது இல்லை. நிறைய உரிமங்களை நாம் கேட்டிருக்கிறோம். உரிமங்கள் நிறைய வந்திருக்கின்றன. அவைகள் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அதைத்தான் நான் சொல்ல விரும்பினேன். ஏனென்றால் நாம் ஏற்கெனவே நிறைய உரிமங்கள் கேட்டு அந்த உரிமங்களெல்லாம் நடைமுறைக்கு வந்திருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[இரவு 7–40]

அது தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது என்கிற எண்ணம் தவறாகக் கருதப்படுகின்றது. உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1970 முதல் 1986 வரை தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ள இசைவுக் கடிதங்கள்—லெட்டர் ஆப் இன்டென்ட் 1,141. இவற்றுள் 1,082 இனங்கள் தொழில் உரிமங்களாக மாற்றப்பட்டுள்ளன. அதாவது தொழில் திட்டங்களாக அமல்படுத்தப்படுகின்றன. எனவே அதிக தொழில் உரிமங்கள் கேட்டு கடிதங்கள் அனுப்பிய இந்த அரசு தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிற கருத்து சரியானது அல்ல என்ற தகவலைக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே 1,1[illegible] 1,082 நடைமுறைக்கு வந்திருக்கிறது.

திரு. வே. பொ. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 500 கோடி ரூபாய் செலவில் ஒரு உரத் தொழிற்சாலை அமைக்க இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த உரத் தொழிற்சாலையை தேனி உள்ளடக்கிய பெரியகுளம் கோட்டத்தில் தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக இருக்கிற அந்தப் பகுதியில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 உரத் தொழிற்சாலைகளை மத்திய அரசு உருவாக்குவதாக இருக்கிறது. அதில் ஒன்று நாம் கேட்டு இருக்கிறோம். அது வந்த பிறகு எங்கே வைப்பது என்பது பற்றி பிறகு சிந்திக்கலாம்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு விண்ணப்பம் செய்து அதைத் தமிழ்நாடு அரசு டெல்லிக்கு பரிந்துரை செய்து இருக்கிறது. அதுபற்றி இப்போது நீங்கள் அறிவிப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். லைசென்ஸ் வழங்கப்பட்டதா? அறிவிக்கப்படவில்லையே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைக் கொள்கையை சமீபத்தில்தான் உருவாக்கியது. இன்னும் உரிமங்கள் அங்கிருந்து வரவில்லை. வந்த பிறகு எவ்வளவு வருகிறது என்று தெரியும். அதை நான் இந்த மன்றத்திற்கு அறிவிக்கிறேன். அறிவித்ததற்குப் பிறகு மேற்கொண்டு, மத்திய அரசிடம் எவ்வளவு கேட்கலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். அங்கே போய்க் கேட்கலாம். ஏன் என்றால் தமிழ்நாடு தான் இன்றைக்கு சர்க்கரை உற்பத்தியில் தன்னிகர் அற்ற இடத்தை அடைந்து இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னது போல் ரூ. 50 கோடி அன்னியச் செலாவணியாக ஈட்டியிருக்கிறது. சாத்தூர் பற்றி நான் குறிப்பிட்டுச் சொன்னேன். சிப்காட் மையம் ஒன்று அமைப்பதாக, அது மேற்கு ராமநாதபுரத்தில் என்று சொல்லிவிட்டேன். அது மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய மாவட்டத்தில் அமைய இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பிழியும் திறன் 2,000 டன்னிலிருந்து 3,000 டன்னாக உயர்த்தப்படவேண்டும். அப்படி உருவாக்கவேண்டும், அதை விரிவு செய்ய வேண்டும் என்று கேட்டேன். அந்தச் சர்க்கரை ஆலையில் அதற்கு சுய நிதி இல்லை. அந்த சுய நிதி இல்லாத காரணத்தால் மத்திய அரசும், மாநில அரசும் அறந்து உரிய சுமார் 4 கோடி ரூபாயைச் செலவு செய்து இந்த ஆண்டு விரிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டேன். அதற்கு பதில் இல்லை. மேலும் சர்க்கரை ஆலையில் பிழிந்தது போக எஞ்சிய மொலாசஸ் என்று சொல்லப்படுகின்ற அந்தக் கழிவுப் பொருளை குறிப்பிட்ட விலையில் தனியார் டிஸ்டிலரியில் எடுத்துக்கொள்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே கூட்டுறவுத் துறை மூலமாகவும், பொதுத் துறை மூலமாகவும் டிஸ்டிலரியை உருவாக்கி வைத்தால் உரிய பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு இருக்கும். எனவே அதை உருவாக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா என்று காலை வேளையில் நான் கேட்டேன். அதற்கும் பதில் இல்லை.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் எல்லாம் நல்ல ஆலோசனைகள். இதை ஆலோசிக்கலாம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் இருக்கின்ற பேரறிஞர் அண்ணா பெயரால் இயங்குகின்ற சர்க்கரை ஆலையை விரிவுபடுத்துகிற திட்டம் அரசிடத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 24] [திரு. கடலூர் இ. வி. வேலு]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் இருக்கின்ற பேரறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையை விரிவு செய்கிற திட்டம் தற்போது இருக்கிறது. ஆகவே ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக்கொள்வதாக இருக்கிறோம். ஏன் என்றால் எல்லாவற்றையும் ஒரேயடியாக விரிவுப்படுத்த முடியாது. கூட்டுறவுத் துறையில் இருக்கிற ஆலைகளுக்குப் பணம் தேவை. அந்தப் பணத்தை எல்லாம் பெற்று தான் ஒவ்வொன்றாக நாம் விரிவாக்க முடியும். அந்த முறையில் அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதி மாண்புமிகு முதலமைச்சருடைய தொகுதி. அந்தத் தொகுதியும் வறட்சியான பகுதியில் ஒன்று தான். அங்கே சிப்காட்டினுடைய ஒரு காம்ப்ளக்ஸ் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வரவேற்கிறேன் என்று எல்லாம் பேச வேண்டாம். கிளாரிபிகேஷன் இருந்தால் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டிக்குக் கிடைத்து இருப்பதை நீங்கள் வரவேற்கவேண்டும். அங்கேயும் முதுகுளத்தோர் தான் இருக்கிறார்கள். ஆகவே ஒன்றும் அதில் பிரச்சினை இல்லை. வந்த பிறகு உங்கள் ஊரில் இருப்பவர்கள் தொழில் தொடங்குகிறார்களா என்பதுதான் எனக்கு இருக்கிற கவலையே தவிர, தொழில் தொடங்கவேண்டும். அதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் செய்ய வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் கூட சொன்னார்கள். அசோக் லேலண்டு வண்டி வாங்காமல் ஏதேதோ வண்டியை வாங்குகிறீர்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அசோக் லேலண்டு தமிழ் நாட்டில் உற்பத்தி ஆகிறது. ஃபோர்டும் தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகிறது. எல்லா வண்டிகளையும் நாம் வாங்குகிறோம். இன்னது தான் வாங்குகிறோம் என்று இல்லை.

வண்டி வாங்குவது எல்லாம் போக்குவரத்துத்துறை. அந்த மானியம் முடிந்துவிட்டது. அந்த மானியத்திலே நீங்கள் கேட்டிருக்கவேண்டும். ஆனால் என்னைக் கேட்டிருக்கிறீர்கள். இருந்தாலும் சொல்ல வேண்டியதற்காகச் சொல்கிறேன். அசோக் லேலண்டிலிருந்தும் வாங்குகிறோம். ஃபோர்டிலிருந்தும் வாங்குகிறோம். இரண்டிலேயும் கலந்து தான் வாங்குகிறோம். அது தனிக் கம்பெனி, இது தனிக் கம்பெனி என்று நினைக்கவில்லை.



1987 ஏப்ரல் 24]

திரு. பொ. உத்திராபதி : தஞ்சை மாவட்டத்தில் பட்டுக் கோட்டை தாலுக்காவில் அரவங்காட்டில் 1980-ல் முதலமைச்சர் அவர்கள் ரசாயனத் தொழிற்சாலைக்கு கல் நடு விழா செய்தார்கள். அதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கிடைத்ததா அல்லது அந்தத் தொழிற்சாலை கைவிடப்பட்டு விட்டதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. அதை ஆராய்ந்து மாண்புமிகு உறுப்பினருக்கு தகவலை அறிவிக்கிறேன்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 3 சர்க்கரை ஆலைகளையும், திருத்தணி மற்றும் கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலைகளையும் இணைத்து ஒரு காகிதத் தொழிற்சாலையை மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டேன். அதற்கான பதிலும், வயலூர் சர்க்கரை ஆலையின் விரிவாக்கப் பணியும் எந்த இடத்தில் இருக்கிறது என்ற நிலையையும் எடுத்துச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இப்போது தான் ஒரு காகிதத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு, அது நல்லபடியாக நடந்து வருகிறது. ஒரு காகிதத் தொழிற் சாலைக்கு 5 சர்க்கரை ஆலைகளிலிருந்து கரும்புச் சக்கை தேவைப்படுகிறது. அத்தோடு அதை லாபகரமாகக் கொண்டு வந்து ஆகவேண்டும். இப்போது விற்கிற நியூஸ்பிரிண்டினுடைய விலையை மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறார்கள். இப்போது மிகக் குறைந்த விலையாக இருக்கிறது. ஆகவே அந்தக் குறைந்த விலைக்குத்தான் பத்திரிகைக் காரர்களுக்குத் தரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த விலையில் தந்து கொண்டிருக்கிறோம். விலையை அதிகப்படுத்தினால் தான், மேற்கொண்டு ஒரு காகிதத் தொழிற் சாலையை, கரும்புச் சக்கையை கொண்டு அமைப்பதைப் பற்றி நல்லபடி சிந்தித்து, செயல்படுத்தமுடியும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. ப. பூலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவித் தொகுதியில் கடந்த ஆண்டு சர்க்கரை ஆலை அமைப்பதைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர்கள் மானியக் கோரிக்கையில் சொன்னார்கள். எனவே சர்க்கரை ஆலை இல்லையென்றாலும், உர ஆலையாவது அமைக்கப்படுமா? அவ்வாறு அமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்று பல இடங்களில் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமையுங்கள்.

மாண்புமிகு திரு. க. ராசாராம் : தலைவர் அவர்களே, இப்படி தொகுதி பற்றி நீங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆக ஏதாவது ஒன்று வரட்டும். வந்த பிறகு எங்கே அமைப்பது என்று கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு:

கோரிக்கை எண் 24—தொழில்கள்

திருவாளர்கள் கே. அன்பழகன், பி.கே.எம். முத்துராமலிங்கம், எஸ். ரெத்தினராஜ் ஆகிய அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :





''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,76,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு

திருவாளர்கள் கே. கல்லன், கே. சுப்பராயன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,07,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25–4–1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

80. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளின் படிவம் 1-ல் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 24–12–1986 ஆம் நாளிட்ட 1260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்டஅறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1987 ஏப்ரல் 24

81. 1985–86 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

179. தொழில் கொள்கையும், திட்டங்களும் (பெரும் தொழில்கள்), 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

180. மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

181. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1987–88, (தமிழ், ஆங்கிலம்).

182. சர்க்கரைத் தொழில் பற்றிய செயல்முறைத் திட்டம், 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

183. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

184. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண் 1 முதல் 50 வரை).



1987 ஏப்ரல் 24]

## இணைப்பு I.

382-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 2976க்கான விடையைக் காண்க.

| மாவட்டத்தின் பெயர். | பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கும் டிராக்டர்கள் ஒன்றியம் வாரியாக. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. வட ஆற்காடு மாவட்டம். | துரிஞ்சாபுரம் .. | 1 |
| | கலசபாக்கம் .. | 1 |
| | அணைக்கட்டு .. | 1 |
| | திமிரி .. | 1 |
| | ஆற்காடு .. | 1 |
| | மாதனூர் .. | 1 |
| | வாலாஜா .. | 1 |
| | கந்திலி .. | 1 |
| | ஆலங்காயம் .. | 1 |
| | குடியாத்தம் .. | 1 |
| | வந்தவாசி .. | 1 |
| | தெள்ளாறு .. | 1 |
| | | 12 |
| 2. தென்னாற்காடு | மேல்மலையனூர் .. | 1 |
| | நல்லூர் .. | 1 |
| | திருவந்தியம் .. | 1 |
| | | 3 |
| | ர் .. | 1 |
| | ாத் .. | 1 |
| | ம் .. | 1 |
| | ருர் .. | 1 |
| | .. | 1 |
| | ம் .. | 1 |
| | குன்றம் .. | 1 |
| | ல .. | 1 |
| | | 8 |

[1987 ஏப்ரல் 24

| மாவட்டத்தின் பெயர். | பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கும் டிராக்டர்கள் ஒன்றியம் வாரியாக. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4. கோயம்புத்தூர் | காரமடை | 1 |
| | பெரியநாயக்கன்பாளையம் | 1 |
| | மடத்துக்குளம் | 1 |
| | இணத்துக்கடவு | 1 |
| | பல்லடம் | 1 |
| | சுல்தான்பேட்டை | 2 |
| | பொங்கலூர் | 1 |
| | | 8 |
| 5. கன்னியாகுமரி | அகஸ்தீஸ்வரம் | 1 |
| | குருந்தங்கோடு | 1 |
| | தக்கலை | 1 |
| | | 3 |
| 6. காமராஜர் | திருச்சுழி | 1 |
| | விருதுநகர் | 1 |
| | காரியாப்பட்டி | 1 |
| | சாத்தூர் | 1 |
| | வெம்பக்கோட்டை | 1 |
| | சிவகாசி | 1 |
| | வத்திராயிருப்பு | 1 |
| | இராஜபாளையம் | 1 |
| | | 8 |
| 7. பெரியார் | மொடக்குறிச்சி | 1 |
| | கொடுமுடி | 1 |
| | ஊத்துக்குளி | 1 |
| | நம்பியூர் | 1 |
| | பவானிசாகர் | 1 |
| | தாராபுரம் | 1 |
| | காங்கேயம் | 1 |
| | வெள்ளக்கோயில் | 1 |
| | | 8 |



1987 ஏப்ரல் 24]

| மாவட்டத்தின் பெயர். | பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கும் டிராக்டர்கள் ஒன்றியம் வாரியாக. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 8. புதுக்கோட்டை | ஆவுடையார் கோவில் | 1 |
| | குன்னாண்டார் கோயில் | 1 |
| | | 2 |
| 9. ராமநாதபுரம் | கமுதி | 1 |
| | கடலாடி | 1 |
| | ஆர். எஸ். மங்கலம் | 1 |
| | திருவாடானை | 1 |
| | | 4 |
| 10. சேலம் | புதுச்சத்திரம் | 1 |
| | எருமப்பட்டி | 2 |
| | சேந்தமங்கலம் | 1 |
| | மோகனூர் | 1 |
| | பரமத்தி | 1 |
| | கபிலர்மலை | 1 |
| | இராசிபுரம் | 2 |
| | சங்ககிரி | 1 |
| | பனமரத்துப்பட்டி | 1 |
| | வீரபாண்டி | 2 |
| | ஆத்தூர் | 1 |
| | தலைவாசல் | 1 |
| | கொளத்தூர் | 1 |
| | நங்கவல்லி | 1 |
| | நாமக்கல் | 1 |
| | வெண்ணந்தூர் | 1 |
| | நாமகிரிப்பேட்டை | 1 |
| | கொங்கணாபுரம் | 1 |
| | திருச்செங்கோடு | 2 |
| | எலச்சிபாளையம் | 1 |
| | | 24 |

[1987 ஏப்ரல் 24

| மாவட்டத்தின் பெயர் | பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கும் டிராக்டர்கள் ஒன்றியம் வாரியாக. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11. திருச்சிராப்பள்ளி | மணிகண்டம் .. | 1 |
| | அந்தநல்லூர் .. | 1 |
| | தொட்டியம் .. | 2 |
| | முசிரி .. | 1 |
| | தாத்தையங்கார்பேட்டை .. | 1 |
| | உப்பிலியாபுரம் .. | 1 |
| | இலால்குடி .. | 2 |
| | மணச்சநல்லூர் .. | 1 |
| | புள்ளம்பாடி .. | 1 |
| | அரியலூர் .. | 1 |
| | ஆலத்தூர் .. | 1 |
| | செயங்கொண்டம் .. | 1 |
| | ஆண்டிமடம் .. | 1 |
| | பெரம்பலூர் .. | 1 |
| | வேப்பூர் .. | 1 |
| | வேப்பந்தட்டை .. | 1 |
| | கிருஷ்ணராயபுரம் .. | 1 |
| | அறவக்குறிச்சி .. | 1 |
| | | 20 |
| 2. திருநெல்வேலி | நாங்குநேரி .. | 1 |
| | தூத்துக்குடி .. | 1 |
| | ஆழ்வார்திருநகரி .. | 2 |
| | திருவைகுண்டம் .. | 1 |
| | சங்கரன்கோவில் .. | 2 |
| | குருவிகுளம் .. | 1 |
| | வாசுதேவநல்லூர் .. | 1 |
| | மேலநீலிதநல்லூர் .. | 1 |
| | கோவில்பட்டி .. | 2 |
| | கயத்தார் .. | 2 |
| | ஒட்டபிடாரம் .. | 1 |
| | புதூர் .. | 1 |
| | விளாத்திகுளம் .. | 1 |
| | | 17 |



1987 ஏப்ரல் 24]

| மாவட்டத்தின் பெயர். | பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கும் டிராக்டர்கள் ஒன்றியம் வாரியாக. | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 13. தஞ்சாவூர் — | ஒரத்தநாடு .. .. | 1 |
| | பேராவூரணி .. | 1 |
| | மன்னார்குடி .. .. | 1 |
| | திருத்துறைப்பூண்டி .. | 1 |
| | கோட்டூர் .. .. | 1 |
| | நீடாமங்கலம .. | 1 |
| | சேதுபாவாசத்திரம் .. | 1 |
| | திருவிடைமருதூர் .. | 1 |
| | பாபநாசம் .. .. | 1 |
| | சீர்காழி .. .. | 1 |
| | திருமருகல் .. .. | 1 |
| | வலங்கைமான் .. | 1 |
| | | 12 |
| 14. தருமபுரி .. | தருமபுரி .. .. | 1 |
| | பாப்பிரெட்டிப்பட்டி .. | 1 |
| | பாலக்கோடு .. .. | 1 |
| | | 3 |
| 15. பசும்பொன் மூத்துராமலிங்கம் | கல்லல் .. .. | 1 |
| | காளையார்கோவில் .. | 1 |
| | | 2 |

## இணைப்பு II.

(383ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 3376க்கான விடையைக் காண்க.)

| மாவட்டம். (1) | நிறுவனங்கள்/நபர்களின் பெயர். (2) | நிலப் பரப்பு (ஏக்கரில்). (3) | குத்தகை வழங்கப்பட்ட ஆண்டுகள். (4) |
|---|---|---|---|
| 1 கோயம்புத்தூர் .. | 1 அசோசியேட் சிமெண்ட் கம்பெனி, மதுக்கரை. | 505.25 | 1963<br>1968<br>1984 |
| | 2 ஸ்டீல்ராக் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட், திருப்பூர். | 73.86 | 1984 |
| .. | 1 இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் .. | 69.15 | 1976<br>1977<br>1982<br>1984 |
| | 2 மேட்டூர் கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன். | 2.56 | 1973 |
| | 3 திரு. வி. செங்கோடி கவுண்டர் .. | 15.70 | 1974 |
| | 4 சேலம் மினரல்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் | 48.72 | 1973 |
| | 5 ஸ்ரீவெங்கடேஸ்வரா மைன்ஸ் .. | 5.21 | 1974 |
| | 6 கருணா மைன்ஸ் அண்ட் மினரல்ஸ் | 37.12 | 1974 |
| | 7 சுரேஷ் மைன்ஸ் அண்ட் மினரல்ஸ் .. | 1.16 | 1982 |
| | 8 டேன் இந்தியா வேட்டல் எக்ஸ்டிராக்ட் கம்பெனி, குமாரபாளையம். | 1.53 | 1984 |
| 3 தர்மபுரி .. | தமிழ்நாடு மினரல்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ், சேலம். | 326.79 | 1971 |
| 4 செங்கல்பட்டு .. | 1 திரு. கே. ஏ. அப்துல் ரசாக் .. | 236.30 | 1973 |
| | 2 ஓம் இஞ்சினியரிங் இண்டஸ்டிரிஸ் .. | 534.00 | 1967 |
| .. | 3 திரு. எம். ஜெயவேல் .. .. | 17.00 | 1978 |
| 5 தென்னார்க்காடு | 1 திரு. எம். ரமணி .. .. .. | 23.00 | 1983 |
| | 2 தமிழ் நாடு கனிம நிறுவனம் .. | 846.08 | 1984 |
| 6 திருச்சிராப்பள்ளி | 1 செட்டிநாடு சிமெண்ட் கார்பொரேஷன் லிமிடெட். | 696.74 | 1965,<br>1980 |
| | 2 டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியாபுரம் | 272.98 | 1967,<br>1970<br>1975<br>1983 |
| | 3 தமிழ்நாடு சிமெண்ட் கார்பொரேஷன், சென்னை. | 89.26 | 1980 |
| | 4 சவுத் இந்தியா விஸ்கோஸ், கோயம்புத்தூர் | 85.08 | 1969,<br>1978 |
| | 5 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் .. | 46.28 | 1968 |
| | 6 இண்டஸ்டிரியல் கெமிகல்ஸ் அண்ட் மோனோமர்ஸ். | 43.00 | 1972,<br>1981<br>1982 |

| மாவட்டம். | நிறுவனங்கள்/நபர்களின் பெயர். | நிலப் பரப்பு. (ஏக்கரில்). | குத்தகை வழங்கப்பட்ட ஆண்டுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | 7 தமிழ்நாடு கனிம நிறுவனம் .. | 65.71 | 1978, 1981 |
| 7 இராமநாதபுரம் | தமிழ்நாடு கனிம நிறுவனம் .. .. | 1,330.99 | 1984 |
| 8 காமராசர் .. | 1 மதராஸ் சிமெண்ட் லிமிடெட் .. | 104.42 | 1970 1971 1974 1980 1982 |
| | 2 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் | 385.21 | 1968 1973 1981 |
| 9 பசும்பொன் முத்து ராமலிங்கம். | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்பொரேஷன் | 100.00 | 1971 |
| 10 திருநெல்வேலி .. | 1 இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் .. | 722.31 | 1967 1971 1973 1976 |
| | 2 அக்ரிகல்சுரல் பார்ம்ஸ் லிமிடெட் .. | 21.63 | 1967 |
| | 3 திரு. கே. எஸ். வைத்தியநாதன் .. | 81.42 | 1972 |
| | 4 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன். | 60.11 | 1968 |



| | | | |
|---|---|---|---|
| | 5 திரு. ஜே. ஜெயந்த்குமார் .. | 6.00 | 1977 |
| | 6 தூத்துக்குடி ஆதி திராவிட ஜல்லிக்கல் கரங்கத் தொழில் கூட்டுறவு கழகம். | 83.33 | 1981 |
| | 7 திரு. சதாசிவராஜா, இராஜபாளையம். | 67.14 | 1981 |
| | 8 அடையகருங்குளம் சுண்ணாம்புக் கல் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம். | 11.02 | 1981 |
| | 9 தமிழ்நாடு கனிம நிறுவனம் .. | 50.00 | 1982 |
| | 10 மெட்ராஸ் சிமெண்ட் லிமிடெட் .. | 2.65 | 1982 |
| | 11 திரு. பி. தனபாலன், திருநெல்வேலி. | 30.00 | 1984 |
| | 12 ராம்சந்த் ஆர்கானிக் கெமிக்கல்ஸ். | 20.00 | 1985 |
| | 13 திரு. ஆர். அருணாசலம் .. .. | 6.35 | 1984 |
| | 14 திரு. எஸ். வாசுதேவா .. .. | 26.95 | 1985 |
| | 15 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்பொரேஷன். | 0.54 | 1979 |
| | 16 ஓம் சக்தி மைனிங்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் மற்றும் ஓம் சக்தி கிரானைட்ஸ் மற்றும் மார்பில்ஸ். | 60.00 | 1984 |
| | 17 திருமதி இந்திரா .. .. | 1.47 | 1984 |
| 11 அண்ணா .. | 1 செட்டிநாடு சிமெண்ட் கார்பொரேஷன். | 97.95 | 1985 |
| | 2 திரு. எஸ். இளங்கோவன் .. .. | 0.40 | 1985 |

## இணைப்பு III

[390—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண்
6346—க்கான விடையைக் காண்க.]

பெரியார் மாவட்டம் பெருந்துறை அருகே புதையுண்ட நகரம்
குறித்து தமிழ்ப் பல்கலைக் கழகம் 1985 ஆம் ஆண்டில் ''கொடு
மணல் அகழாய்வு''ன் அறிக்கை எண் 1.

கொடுமணல் ஈரோட்டிலிருந்து தென் மேற்கில் 40 கிலோ
மீட்டர் தொலைவில் நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்
துள்ளது. இந்த ஊரின் பகுதியாக ஊருக்குக் கிழக்கில் 1/2 கிலோ
மீட்டர் தூரத்தில் உள்ள பழைய நத்தமேட்டுப் பகுதியின் மேற்
பரப்பிலிருந்து கடந்த ஏழாண்டுகளாக புலவர் செ. இராசு,
ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தினர், தமிழ் நாடு அரசு தொல்
பொருள் துறையினர் முதலியோர் கள ஆய்வுசெய்து எடுத்த
டல அரிய பன்மணிகள், சங்கு வளையல்கள், வண்ணம் பூசிய
மண்கலங்கள் ரோமானிய மண்கலச் சில்லுகள் ஆகியன இம்
மேட்டின் தொல்லியல் வளப்பத்தைப் புலப்படுத்தின. தமிழ்ப்
பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறை கொங்குப் பகுதியில் 1984
ஜூலை-செப்டம்பர் மாதங்களில் மேற்கொண்ட தீவிர மேற்பரப்
பாய்விலும் இது உறுதிப்பட்டது. இந்த இடத்தில் நத்தப்பகுதிக்கு
பக்கத்திலேயே பெருங்கற்படை ஈமக்காடும் இருக்கிறது. ஆகவே
இந்த இடத்தில் அகழாய்வு செய்வதன் மூலம் பெருங்கற்படைக்
காலத்தைப் பற்றியும், பெருங்கற்படை ஈமக்காட்டுக்கும் நத்தப்
பகுதிக்கும் இருந்த தொடர்பைப்பற்றியும் தமிழ் நாட்டுக்கும்
ரோமானியப் பேரரசுக்கும் இருந்த வணிகத்தொடர்பு பற்றியும்
அறிய மிகுந்த வாய்ப்பு உண்டு என்ற கருத்தில் இங்கு முறையான
அகழாய்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

அகழாய்வின் முதல் கட்டம் 1985 மார்ச்-ஜூன் மாதங்களில்
மேற்கொள்ளப்பட்டது. நத்தமேட்டுப் பகுதியில் மூன்று குழி
களும் ஈமக்காட்டில் மூன்று குழிகளும் தோண்டப்பட்டன.
நத்தப் பகுதியில் தோண்டப்பட்ட குழிகளில் வீட்டுத் தரை
எச்சங்கள் தெளிவாகக் காணப்பட்டன. வீட்டுத் தரைகள்
செம்மண்ணையும் சுண்ணாம்புக் கல்லையும் சேர்த்துக் கட்டிக்
கெட்டிப்படுத்தப்பட்டுச் சுண்ணாம்பால் மெழுகப்பட்டிருந்தன.

இந்தக் குழிகளில் வரியிட்ட கூரை ஓடுகளில் சில்லுகளும்
உடைந்த செங்கல் துண்டுகளும் இரும்பு செம்புப் பொருள்கள்,
சங்கு வளையல், பளிங்கு, பச்சைகல், சூது பவளம் முதலிய
அரிய கற்களைக் கொண்டு செய்த மணிகள், வண்ணம் பூசப்
பெற்ற சிவப்பு, கறுப்பு-சிவப்பு மண்கலங்கள் ஆகியன கிடைத்
தன. சில மண்கலச் சில்லுகளில் பழைய தமிழ் எழுத்துக்கள்
கீறப்பட்டிருந்தன. ஒரு குழியின் அடிப்பகுதியில் மூன்று எலும்புக்
கூடுகள் ஒன்றாகக் கிடத்தப்பட்டிருந்தன.







ஈமக்காட்டில் தோண்டிய குழிகளில் கற்பலகைகளைக் கொண்டு
செய்யப்பட்ட பெரிய கல்லறைகள், ஈமத்தாழி ஆகியன காணப்
பட்டன. கல்லறைகளில் சில எலும்புகளே புதைக்கப்பட்டிருந்
தன. ஆனால் படையல் பொருள்களாக ஏராளமான புதிய
மண்கலங்கள், இரும்பினால் செய்த ஆயுதங்கள், செம்பினால்
செய்த புலி போன்ற சில பொருட்கள் இருந்தன.

இந்த அகழாய்விலிருந்து எடுக்கப்பட்ட அடுப்புக்கரிக்கு அணுக்
கதிரியக்கக் காலக்கணிப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கணிப்பி
லிருந்தும், பழைய தமிழ் எழுத்துக்கள், மண்கல வகைகள் ஆகிய
வைகளை வைத்தும் இந்த ஊர் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு
தொடங்கி கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முடிய செழிப்பாக இருந்தது
என்று கூறலாம்.

கிடைத்த பொருள்களை வைத்து மேலே குறிப்பிட்ட காலக்
கட்டத்தில் நிலவிய பண்பாடு எத்தகையது என்பதை ஓரளவு
முடிவு செய்யலாம். பெரும்பாலும் மண்சுவராலும், சில போது
செங்கல் சுவராலும் வீடுகள் கட்டப்பட்டன. வீட்டுத் தரைகள்
செம்மண்ணும், சுண்ணாம்புக்காரையும் சேர்த்துக் கெட்டிப்படுத்
தப்பட்டன. சுவர்களுக்கும் சுண்ணாம்புப் பூச்சு பூசியிருக்கலாம்.
கூரைகளுக்கு வரியிட்ட ஓடுகள் பயன்படுத்தப்பட்டன. நத்த
மேட்டுக் குழிகளில் விலங்கு, பறவைகளின் எலும்புகள் நிறைய
இருப்பதிலிருந்து மக்கள் புலால் உணவை விரும்பிச் சாப்பிட்டார்
கள் எனலாம். இந்த ஊர் உழவு தவிர்த்த மற்ற தொழிலை
பெரிதும் நம்பியிருந்தது என்று தெரிகிறது. சங்கு வளையல்
செய்தல், அரிய கல் மணிகள் செய்தல், இரும்புத் தொழில் ஆகி
யன இங்கு முக்கியத் தொழில்களாக இருந்தன. இரும்பு தாராள
மாகப் பயன்படுத்தப்பட்டது. ஓரளவு செம்பும் பயன்படுத்தப்
பட்டது

''கொடுமணம் பட்ட வினைமான் நன்கலம்'' பதிற்றுப்பத்தில்
புகழப்படுகிறது. கொடுமணல் சேர அரசனுக்குரியதாக இருந்
தது. ''கொடுமணலில்'' அரிய கல்மணிகள் மிகுதியாகச் செய்யப்
பட்டதற்கான தடயங்கள் அகழ்வில் கிடைத்துள்ளன. கொடு
மணலிலும் சுற்றியுள்ள இடங்களிலும், குறிப்பாக, நொய்யலுக்கு
தெற்கே படியூர்ப் பகுதியில் ''பெரில்'' என்ற பச்சை/நீலக்கல்
போன்ற அரிய கல் வகைகள் வெட்டி எடுக்கப்பட்டன என்று
தெரிகிறது. ''பெரிப்ளூஸ்'' என்ற முதல் நூற்றாண்டு கிரேக்க
பயண நூல் கேரளக் கடற்கரையிலுள்ள முசிறித் துறைமுகத்தி
லிருந்து ஒளி ஊடுருவக்கூடிய எல்லா வகையான கல்களும்
வயிரம் நீலக்கல் ஆகியனவும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று
அறிவிக்கிறது. இந்தப் பொருள்கள் கேரளப் பகுதியில் இயற்கை
யாகக் கிடைப்பதில்லை. கொங்குப் பகுதியில் பல ரோமானியக்
காலப் புதையல்களும் கிடைத்துள்ளன. கொடுமணலிலும் ஒரு
காசு (டைபேரியஸ் என்ற மன்னனுடையது) கண்டெடுக்கப்
பட்டது. ரோமானிய நாட்டு மண்கலச் சில்லுகள் சில அகழ்வில்

கிடைத்தன. ரோமானிய வீரனின் தலை உருவத்தில் பொம்மையொன்றும் கள ஆய்வில் எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சான்றுகளையெல்லாம் மொத்தமாக வைத்துப் பார்த்தால் கொடுமணமும் கொடுமணலும் ஒன்றே என்று ஊகிப்பது சரியே.

கொடுமணல் ஒரு தொழில் வளம்மிக்க பெரிய ஊராக இருந்தது என்று இந்த அகழாய்வு தெரிவிக்கிறது. முடிவாக, கொடுமணல் அகழாய்வு கொடுத்துள்ள செய்திகள் சங்க காலத்தைப் பற்றி விளங்கிக் கொள்ள ஓரளவு துணைபுரிகின்றன எனலாம்.

முதற்கட்ட அகழாய்வில் கிடைத்த செய்திகளை உறுதிப்படுத்தவும் மேலும் புதிய செய்திகளைக் கண்டறியவும், இந்த ஆண்டு 1986 ஏப்ரலிலிருந்து மீண்டும் இரண்டாம் கட்ட அகழாய்வு விரிவாகத் தொடங்கப்பட்டுள்ளது. இது வரைக்கும் கிடைத்துள்ள பொருள்கள் எதிர்பார்த்த அளவுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுப்பதாக உள்ளன.

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகம், கல்வெட்டியல் துறை 1986 ஆம் ஆண்டில் கொடுமணல் அகழாய்வில் புதிய கண்டு பிடிப்புக்கள் பற்றிய அறிக்கை எண் 2

தமிழ்ப் பல்கலைக் கழகம் கல்வெட்டியல் துறை, பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டத்தில், சென்னிமலைக்குத் தென் மேற்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் நொய்யல் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொடுமணல் என்ற ஊரில் நடத்திய இரண்டாம் அகழாய்வில் பல புதிய கண்டு பிடிப்புகள் செய்யப்பட்டு உள்ளன.

இவ்வூர் சங்க இலக்கியத்தில் கொடுமணம் என்னும் பெயரில், விலை உயர்ந்த கற்களைக் கொண்டு அணிமணிகள் செய்யும் புகழ் பெற்ற இடமாக வருணிக்கப்பட்டுள்ளது. இவ்வூரின் கிழக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேட்டுப் பகுதியில் பழைய ஊர் இருந்தமைக்கான எச்சங்களும், அதனருகாமையில் பெரிய கல்லறைகளைக் கொண்ட ஈமக்காடும் உள்ளன.

சென்ற ஆண்டு (1985) இப் பகுதியில் செய்த முதற்கட்ட அகழாய்வில் பல அரிய பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வாண்டும் (1986) கடந்த மூன்று மாத காலமாக அகழாய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த அகழாய்வில் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறையோடு சென்னை பல்கலைக் கழகத் தொல்லியல் துறையின் சார்பாக ஓர் இணைப் பேராசிரியரும், ஆய்வாளர்களும் பங்கேற்றனர். இங்குக் கிடைத்த பொருட்களிலிருந்து சங்க இலக்கியத்தில் குறிப்பிட்டது போல அரிய அணிமணிகளும் இரும்பு, செம்புப் பொருட்களும் செய்த தொழிற்கூடமாக இவ்வூர் விளங்கியது என்று தெளிவாகத் தெரிய வருகிறது.





சுமார் ஐம்பது ஏக்கர் பரப்பளவு உள்ள ஊர் இருக்கைப் பகுதியில் மொத்தம் பதின்மூன்று இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டது. இக்குழிகளில் பல அடுக்குகளில் சுண்ணாம்புச் சரளைக் கல்லும், செம்மண்ணும் கொண்டு கெட்டிப்படுத்தப் பட்ட வீட்டுத் தரைகள் காணப்பட்டன. இவைகளோடு சேர்ந்து தூண்கள் நட்டு இருந்த குழிகளின் அடையாளங்கள் உள்ளன. மேலும் மண் சுவரின் அடிப்பகுதி சிறிது காணப்பட்டது. சில நிலைகளில் செங்கற்களும் ஒரு வகையான கூரைத் தட்டோடுகளும் கிடைத்து உள்ளன. தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு நிலத்திற்கடியில் வெட்டப்பட்ட வட்ட வடிவமான பெரிய குழிகள் காணப்படுகின்றன.

சில சமயம் வீட்டிற்கு அருகிலும் இறந்தவர்களைப் புதைத்தார்கள் என்று தெரிகிறது. ஒரு வீட்டிற்கருகில் ஒரு வயதான ஆணின் எலும்புக் கூடும், ஒரு குழந்தையின் எலும்புக் கூடும் கண்டெடுக்கப்பட்டன. வயதான ஆணின் எலும்புக்கூடு கால்களை மடித்து அமர்ந்த நிலையில் இருப்பது போல் காணப்படுகிறது. குழந்தையின் எலும்புக்கூடு வடக்கு நோக்கி ஒருக்களித்த நிலையில் குறுக்கிக் கிடத்தப்பட்டு இருந்தது. வயதான ஆணின் வலது கைச் சுண்டு விரலில் ஒரு செம்பு மோதிரம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய ஆய்வுக் குழியில் வண்ணக் கோடுகள் தீட்டப்பட்ட கருப்பு-சிவப்புப் பானை ஓடுகள் நிறைய கண்டெடுக்கப்பட்டன. இவற்றோடு சில ரோமானிய பானைச் சில்லுகளும் (Rouletted Poutry) இருந்தன. கருப்பு சிவப்பு ஓடுகள் பலவற்றில் பழைய தமிழ் எழுத்துக்கள் (தென் பிராமி) கீறி எழுதப்பட்டு இருந்தன. இவற்றில்,

''கண்ணன் ஆதன்'', ''வருணியகள்''
''கூலந்தை வம்பன் அகல்''—போன்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

இரும்பினால் செய்யப்பட்ட மணிகள், அம்பு நுனி, கத்தி, அரம், உளி, கம்பி, ஆணி வளையங்கள் போன்ற பொருட்களும், செம்பினால் செய்யப்பட்ட சிறிய ஒலிமணி, துளையிடும் ஊசிகள், மீன் தூண்டில், சுருள் வடிவமான காதுத் தொங்கட்டான், கை விரல் மோதிரம் ஆகியவையும் கிடைத்துள்ளன.

இரும்புத் தாதுவை உருக்கி, காய்ச்சி பல பொருட்களைச் செய்தமைக்கான தடையங்களும் கிடைத்துள்ளன. பளிங்குக்கல், கார்னிலியன், நீலம், பெரில், ஜேஸ்பர் முதலிய அரிய கற்களைக் கொண்டு செய்த மணிகள் (பாசிகள்) கிடைத்தன. இவை யாவும் இந்த ஊரிலேயே செய்யப்பட்டன என்பதை நிரூபிக்கும் வகையில் இக்கற்களின் கட்டிகளும், சில்லுகளும் பல நிலைகளில் காணப்பட்டன.

பவளத்தினாலும் அணிமணிகள் செய்யப்பட்டன. சங்கு கொண்டு செய்த வளையல்களும் பாசிகளும் கிட்டியுள்ளன. சுடு மண்ணால் சிறிய பம்பரங்கள் போல் செய்யப்பட்ட நூல் நூற்கும் கருவியான தக்கிளியினுடைய அடிப்பகுதி பல இருந்தன. இவைகளில் ஓரிரண்டு, இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்ட நிலையில, பழையபடியே இருந்தன. சங்கினாலும் தக்கிளிகள் செய்யப்பட்டன என்று தெரிகிறது.

ஒரு குழியினுள் வெள்ளியால் செய்யப்பட்ட முத்திரை நாணயம் (Punch Marked Coin) கிடைத்தது. இதைப் போன்ற வேறொரு வெள்ளிக்காசு இந்த மேட்டின் மேற் பரப்பில் இருந்தும் கிடைத்தது. இந்தக் காசுகள் கி.மு. முதல், இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று சொல்லலாம்.

அருகில் உள்ள ஈமக்காட்டில் கற் குவியலோடு கூடிய நூற்றுக்கு மேற்பட்ட கற் பதுக்கைகள் சுமார் நூறு ஏக்கர் பரப்பளவில் காணக் கிடைக்கின்றன. இவைகளில் மூன்று பதுக்கைகள் இவ்வாண்டு அகழப்பட்டன. (இப் பதுக்கைகள் இறந்தவர்களின் உடலை முழுமையாகவோ, சில எலும்புகளையோ புதைக்கச் செய்யப்பட்ட புதை குழிகளாகும். இதில் ஒரு பதுக்கை, கற் பலகைகளால் ஆன சுமார் 14 மீட்டர் விட்டம் கொண்ட வெளி வட்டமும் 13 மீட்டர் விட்டமும் கொண்ட உள் வட்டமும் அதனுள் மையத்தில் மூன்று கல்லறைகளும் கொண்டிருந்தது. கல்லறைகள் மிகப் பெரிய கற்பலகைகளை வைத்து அறைகளாகக் கட்டப்பட்டு இருந்தன. இவற்றில் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்ட ஒரு பெரிய கல்லறையும், இதற்கு முன்புறம் பக்க வாட்டிற்கு ஒன்றாக இரு சிறிய அறைகளும், நடுவில் முற்றம் போன்ற பகுதியும் இருந்தன. கல்லறைக்கும் உட் கல் வட்டத்திற்கும் இடையில் படையல் பொருட்களாக இரும்பினால் செய்யப்பட்ட கத்தி, கேடயம், வாள் போன்ற நீண்ட ஆயுதங்கள் இருந்தன. இரண்டு நீண்ட ஆயுதங்கள் கத்திரி வடிவில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக வைக்கப்பட்டு இருந்தன. இவை இறந்தவரின் படைக்கலன்களாக இருக்கலாம். படையல் பொருட்களாக நிறைய மண்கலங்கள் கறுப்பு நிறத்திலும், சிவப்பு நிறத்திலும் மெருகூட்டப்பட்டு பளப்பளப்போடு காணப்பட்டன. இவற்றில் நான்கு கால்களைக் கொண்ட பெரிய சாடிகளும், உடுக்கை வடிவிலான பாத்திரத் தாங்கிகளும் சிறிய குவளைகளும், மூடிகளும் இருந்தன செம்பினால் ஆன ஒரு கிண்ணமும், தட்டும் இங்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு குழியில் சாம்பல் மண்ணோடு பல நூற்றுக்கணக்கான கார்னீலியன் என்ற அரிய கல்லைக் கொண்டு செய்த மணிகளும், ஈயக் கம்பிச் சுருள் மாலையும் வைக்கப்பட்டிருந்தன. கல்லறைக்குள் இரும்பு ஆயுதங்களும் கார்னீலியன் மணிகளும் கலைமான் கொம்பு ஒன்றும் வேறு சில விலங்குகளின் எலும்புகளும் இடப்பட்டு இருந்தன.



மற்றொரு பதுக்கைக் குழியில் கல்லறையைச் சுற்றி சுண்ணாம்பு சரளைக் கற்களால் ஆன சுவர் இருந்தது. இக் கல்லறையிலும் வட்ட வடிவ கார்னீலியன் மணிகள் கிட்டின. மனித எலும்புக் கூட்டின் ஓரிரு பகுதிகள் இருந்தன. மூன்றாவது பதுக்கைக் கல்லறைக்குள் இரண்டு இரும்புக் கத்திகளும் அழகிய செம்புக் கரண்டியும் மணிகளும் இரண்டு சிறிய தங்க மோதிரங்களும் கிடைத்தன.

இந்த வாழிருக்கைப் பகுதியும், ஈமக்காடும் ஏறக்குறைய கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சேர்ந்தவை என்பது இந்த அகழாய்வில் பெறப்பட்ட பழைய தமிழ் எழுத்துக்கள், முத்திரை, நாணயம், மண்கல வகைகள் ஆகியவற்றிலிருந்து கணிக்க முடிகிறது. ரோமானிய நாட்டோடு தொடர்பு இருந்தது என்பதற்கு அந்நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பானைகளின் சில்லுகள் சான்று பகர்கின்றன.

கார்னீலியன் கல், கடற் சங்கு, பவளம் போன்ற மூலப் பொருள்களும் தென்னிந்தியாவின் வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்டன என்று சொல்ல வேண்டும். இவை கொங்குப் பகுதியில் கிடைப்பதில்லை. ஆகவே, கொடுமணல் ஒரு சிறந்த தொழிற் கூடமாகவும், உள் நாட்டு, வெளி நாட்டு வாணிகத் தொடர்பு மையமாகவும் திகழ்ந்து இருந்தது எனலாம்.

இவ்வகழ்வாராய்ச்சி தமிழ்நாட்டின் தொன்மை வரலாற்றை அறிந்துக் கொள்ள பல முக்கிய சான்றுகளை வழங்கியுள்ளது. இவ்வூரில் மேலும் விரிவாக அகழாய்வு மேற்கொண்டால் தமிழக வரலாறு மேலும் விளக்கமுறும் என்று கருதப்படுகிறது.

## பிணைப்பு IV.

(394ம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா எண். 7764க்
கான விடையைக் காண்க.)

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | 1985–86-ல் இடைநிலை ஆசிரியப் பயிற்சி தொடங்கப் பட்ட மொத்த மேல்நிலைப் பள்ளிகள். | இவற்றுள் அரசு மேல்நிலைப் பள்ளிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சென்னை .. .. | 4 | 2 |
| 2 செங்கல்பட்டு .. .. | 17 | 12 |
| 3 தென்னாற்காடு .. | 10 | 5 |
| 4 வட ஆற்காடு .. .. | 27 | 24 |
| 5 தஞ்சாவூர் .. .. | 36 | 17 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 20 | 12 |
| 7 புதுக்கோட்டை .. | 5 | 5 |
| 8 சேலம் .. .. .. | 8 | 5 |
| 9 தர்மபுரி .. .. | 1 | .. |
| 10 கோவை .. .. | 18 | 7 |
| 11 பெரியார் .. .. | 14 | 9 |
| 12 நீலகிரி .. .. | 5 | 4 |
| 13 மதுரை .. .. | 32 | 17 |
| 14 அண்ணா .. .. | 6 | 2 |
| 15 இராமநாதபுரம் .. | 4 | .. |
| 16 காமராஜர் .. .. | 27 | 11 |
| 17 பசும்பொன் .. .. | 1 | .. |
| 18 திருநெல்வேலி .. .. | 32 | 7 |
| 19 கன்னியாகுமரி .. .. | 14 | 3 |
| மொத்தம் .. | 281 | 142 |



## பிணைப்பு V.

[438ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தொழில் கொள்கையும் திட்டங்களும்.

'' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற
பொன்மொழிக்கேற்ப தமிழக அரசு உணவு உற்பத்திக்கும்,
தொழில் வளர்ச்சிக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து அதற்
கேற்ப தனது கொள்கையை வகுத்து வருகிறது. சீரான தொழில்
வளர்ச்சியால் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி அதன்
மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்க முடியும்
என்பதை இவ்வரசு உணர்ந்து அதற்கேற்ற வகையில் தொழில்
திட்டங்களைத் தீட்டி வருகிறது. கிராமப்புறப் பொருளாதார
வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும் ''சிறு தொழில்'' பெருக்
கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வரசு அதே நேரத்தில்
நடுத்தர மற்றும் பெருந்தொழில்கள் அதிகம் உருவாகி வேலை
வாய்ப்புகள் பெருகவும் அதன் மூலம் தமிழகம் முழுவதும் பொரு
ளாதார முன்னேற்றம் அடையவும் வழிவகுக்கிறது. தொழிலில்
பின்தங்கிய பகுதிகளைத் தனியாகப் பிரித்துச் சிறப்புச் சலுகை
கள் வழங்குவதன் மூலம் மாநிலம் முழுவதும் சீரான தொழில்
வளர்ச்சிக்கு இவ்வரசு ஊக்கமளிக்கிறது. பின்தங்கிய பகுதிகளில்
தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் நோக்குடன் அதற்கு
வேண்டிய சலுகைகளையும் வழிகளையும் உருவாக்கிக் கொடுத்து
உதவுகிறது இவ்வரசு. இதன் காரணமாகத் தொழில் வளர்ச்சி
யில் முன்னேறிய ஒரு சில மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழகம்
தொடர்ந்து இருந்து வருகிறது. தொழில் வளர்ச்சியில் முதலி
டத்தைப் பெறுவதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்
கைகள் அனைத்தையும் இவ்வரசு எடுத்து வருகிறது.

2. பல்வேறு தொழில்கள் அமைப்பதற்குத் தேவையான
இசைவு கடிதங்களும், தொழில் உரிமங்களும் கோரி தொழில்
முனைவோரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் அவ்வப்போது
ஆய்வு செய்யப்பட்டு மைய அரசுக்கு உடனுக்குடன் பரிந்துரைக்
கப்பட்டு வருகின்றன. 1986 ஆம் ஆண்டு 106 புதிய இசைவுக்
கடிதங்களும், 48 தொழில் உரிமங்களும் தொழில் முனைவோர்க்கு
மைய அரசிடமிருந்து பெறப்பட்டு மேலும் 132 டி.ஜி.டி.டி.
(DGTD) பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

3. தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் சீரான தொழில்
வளர்ச்சி ஏற்படுத்துவதற்காகப் புதிய தொழில்களை அமைக்க
முன்வருவோருக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தங்கு தடை
யின்றி செய்து வருவதே இவ்வரசின் நோக்கமாகும். தமிழகத்
தில் தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் புதியதாகத் தொழில்கள்
தொடங்குவோருக்குச் ''சலுகை ஊக்க நிதி'' அளிக்கப்பட்டு
வருகிறது. மைய அரசின் மூலதன மானியத் திட்டத்தின் கீழ்
அவர்களுக்கு நிதிச் சலுகை அளிக்கப்படுகின்றது. மேலும், புதி
யதாகத் தொழில் தொடங்குவோருக்கு 5 ஆண்டுகளுக்கு வட்டி

யில்லா விற்பனை வரிக்கடன் அளிக்கப்பட்டு வருகின்றது. இக்
கடனுதவி, புதிய தொழில்களைத் தொடக்க நிலையில் தொய்
வுறாதவாறு பாதுகாக்கிறது. புதிய தொழிற்சாலைகளுக்கு,
முதல் 5 ஆண்டுகளுக்கு மின் கட்டணச் சலுகையும் வழங்கப்
பட்டு வருகிறது. பின்தங்கிய பகுதிகளில் புதிய தொழில்கள்
தொடங்கப்பட்டால், மேலும் 15 சதவீதம் மின் கட்டணச்
சலுகை வழங்கப்படுகிறது.

4. தமிழகம் தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேற்
றம் காண வசதியாக இவ்வரசு இருவகையான நடவடிக்கைகளை
மேற்கொண்டுள்ளது. ஒன்று, புதியதாகத் தொழில் தொடங்கு
வோருக்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளையும்
ஏற்படுத்திக் கொடுத்து புதிய தொழில்களை ஊக்குவிப்பது
மற்றொன்று. தமிழக அரசே புதிய தொழிற்சாலைகளை திறம்
பட நடத்தி மற்றவர்களுக்கு முன்னோடியாகச் செயல்படுவது.

5. தமிழகத்தில் புதியதாகத் தொழில் தொடங்குவோர்க்குத்
தேவையான நிதியுதவியை அளிப்பதற்காகத் தமிழ்நாடு தொழில்
முதலீட்டு நிறுவனம் (TIIC) மற்றும் தமிழ்நாடு தொழில்
வளர்ச்சி நிறுவனம் (SIPCOT) ஆகிய இரு அமைப்புகள் செயல்
பட்டு வருகின்றன.

(1) தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC):

தமிழகத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்
சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவதற்காகவும் குறிப்பாகப் பின்
தங்கிய பகுதிகளில் பல புதிய தொழில்கள் ஏற்படுவதற்கு உதவி
செய்வதற்காகவும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்
தொடங்கப் பெற்றுள்ளது. இந்நிறுவனம், தொழில் நிறுவனங்
களுக்கு வேண்டிய நிலம், கட்டடம், இயந்திரம் போன்றவற்
றிற்குத் தேவையான கடனுதவியை அளித்து வருகின்றது. அதிக
பட்சம் ரூ. 60.00 இலட்சம் வரை கடனுதவி அளிக்கப்படுகின்றது.
பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்பெறும் சிறு தொழில் நிறு
வனங்களுக்கு கடனுதவியளிப்பதில் முன்னுரிமை தரப்படுகிறது.
இந்நிறுவனம் அளித்துள்ள மொத்தக் கடனுதவியில் 90 சதவீதம்
சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த
ஐந்தாண்டுகளில் இந்நிறுவனத்திற்கு கிடைத்துள்ள நிகர இலாபம்
ரூ. 699.36 இலட்சம் ஆகும். போக்குவரத்து வாகனங்கள்,
ஜெனரேட்டர்கள் ஆகியவை வாங்குவதற்குக் கடனுதவி அளிப்
பது போன்ற சிறப்புத் திட்டங்களையும் இந்நிறுவனம் மேற்
கொண்டுள்ளது.



(2) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT):

தமிழகத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு எளிய
தவணை முறைகளில் நிதியுதவியும் தொழில்நுட்ப உதவியும் இந்
நிறுவனம் அளித்து வருகின்றது. தொழில் முனைவோர்களு
டைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள பல சலுகைத் திட்
டங்களை செயல்படுத்துதல், தமிழகத்தில் பின்தங்கிய பகுதி
களில் வளர்ச்சி மையங்களை உருவாக்குதல் போன்ற பணிகளை
இந்நிறுவனம் செய்து வருகின்றது. இந்நிறுவனம் அளித்துள்ள
மொத்த நிதியுதவியில் 75 சதவீதம் பின்தங்கிய பகுதிகளில் புதிய
தொழிற்சாலைகள் தொடங்குவதற்காக அளிக்கப்பட்டுள்ளது.

அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் அதிக
அளவில் முதலீடு செய்து தொழில்கள் தொடங்க விரும்புகிறார்
கள். அவர்களை ஊக்குவிப்பதற்காகத் தனி அமைப்பு ஒன்று
இந்நிறுவனத்தில் இயங்கி வருகின்றது. தொடக்க காலத்தில்
அவர்களுக்கு ஏற்படும் வீணான காலதாமதத்தைத் தவிர்த்துக்
குறுகிய காலத்தில் அனைத்து நடைமுறைகளையும் முடித்து,
அவர்கள் சார்பாக தொழில் உரிமங்களையும் இந் நிறுவனம்
பெற்றுத் தருகின்றது.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) யின் உதவி
யுடன் மறு நிதியுதவித் திட்டத்தை இந்நிறுவனம் திறம்படச்
செயல்படுத்தி வருகின்றது. தொழில் முனைவோருக்கு மாநில
மற்றும் மைய அரசுகளின் மூலதன மானியத் திட்டத்தின் கீழ்
நிதிச் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மைய அரசு,
மானியத் திட்டத்தின் கீழ் நிதிச்சலுகை வழங்குவதில் நம் நாட்டி
லேயே தொடர்ந்து முதலிடத்தைத் தமிழகம் வகித்து வருகின்
றது. இத் திட்டத்தை மேலும் அதிக அளவில் பயன்படுத்தித்
தமிழகத்தில் பல புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏது
வாக நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் ஒன்றேனும் இல்லாத
52 வட்டங்களையும், பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து ஆணை
யிடுமாறு மைய அரசை இவ்வரசு கேட்டுள்ளது.

தொழில் முனைவோர்க்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துப்
புதிய தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் அமைக்க விரும்பும்
தமிழக அரசு தானே பல தொழிற்சாலைகளை அமைத்துத்
திறம்பட நடத்தி வருகின்றது.

6. (1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் :

தமிழகத்தில், அளவில் அதிக முதலீடு செய்து பெருந்தொழில்
களைத் தொடங்க விரும்புவோருக்கு வாய்ப்புகளும் வசதிகளும்
இல்லையென்றாலும், அவர்கள் வைத்திருக்கும் தொழில் உரிமங்
களைப் பயன்படுத்தியும், புதியதொழில் உரிமங்களைப் பெற்றும்,

[1987 ஏப்ரல் 24

அவர்களோடு இணைந்து கூட்டுறவுத் துறையில் பெருந்தொழில்களைத் தொடங்கத் திறம்பட நடத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கடந்த ஆறு ஆண்டுகளாக இலாபத்தில் இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்தின் ஈடுபாட்டினால் தமிழகத்தில் மொத்தம் 45 தொழில்கள் தொடங்கப்பெற்றுள்ளன. அவற்றுள் 7 தொழில்கள் பொதுத் துறையிலும், 26 தொழில்கள் கூட்டுத் துறையிலும் இயங்கி வருகின்றன. இத் தொழில்கள் பெருமளவு தமிழகத்தின் பிற்பட்ட பகுதிகளிலேயே தொடங்கப் பெற்றுள்ளன. அவற்றுள் முக்கியமான சில தொழில்கள் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

(2) தமிழ்நாடு உருக்கு நிறுவனம் :

தமிழ்நாடு உருக்கு நிறுவனத்தின் திட்டச் செலவு ரூ. 7.88 கோடியாகும். ஆண்டொன்றுக்கு 50,000 டன் உருக்குப் பொருள்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது இந்நிறுவனம். தற்போது இந்நிறுவனத்தில் 629 பேர் பணியாற்றுகிறார்கள். இதனை ரூ. 92 இலட்சம் செலவில் நவீனப்படுத்தும் திட்டம் 1989–90 ஆம் ஆண்டில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனம் :

இந்நிறுவனம் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள குடியாத்தம் வட்டத்தில் இயங்கி வருகின்றது. இத்தகைய நிறுவனம் தென் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதல் நிறுவப்பட்டுள்ளது. 9–2–1986 அன்று இந்நிறுவனம் வாணிப ரீதியில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. 542 பேருக்கு வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றது.

(4) தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் :

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் சிமெண்டு தயாரிப்பதுடன் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் போன்ற பொருள்களைத் தயாரிப்பதற்கான பிரிவுகளையும் அமைத்துள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அரியலூரில் சிமெண்டு தொழிற்சாலை ஒன்றினை அமைத்துத் திறம்பட நடத்தி வருகின்றது. இத் தொழிற்சாலையை ரூ. 53 கோடி செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.



1987 ஏப்ரல் 24]

(5) தமிழ்நாடு அச்சுத்தாள் மற்றும் காகித நிறுவனம் :

தமிழ்நாடு அச்சுத்தாள் மற்றும் காகித நிறுவனம் கரும்புச் சக்கைகளை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்திச் செய்தித்தாள், அச்சுத்தாள் மற்றும் எழுதும் தாள் ஆகியவற்றைத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், காகிதபுரத்தில் காகித ஆலை ஒன்றினை நிறுவியுள்ளது. இவ்வாலை ஆண்டொன்றுக்கு 50,000 டன் செய்தித் தாளும் 40,000 டன் அச்சிடும் மற்றும் எழுதும் தாளும் உற்பத்தி செய்யும் திறனுடையது. 24–5–1986 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாலையை நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள்.

(6) தமிழ்நாடு கனிம நிறுவனம் :

தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் பயன்படுத்தும் சில முக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டி எடுப்பதற்கும் கரும்பாறை மற்றும் சால்நிறப் பாறைகளை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாடு கனிம நிறுவனம் நிறுவப்பட்டது.

25–3–1986 அன்று சென்னைக்கு அருகில் உள்ள மணலியில் கரும்பாறை மற்றும் சால்நிறப் பாறைகளுக்கு மெருகேற்றும் தொழிற்சாலை ஒன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத் தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கி வருகிறது.

இந்நிறுவனம் உருக்கப்பட்ட குவார்ட்ஸ் மற்றும் இதர உயர்ந்த தொழில் நுட்பம் வாய்ந்த பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினையும் நிறுவத் திட்டமிட்டுள்ளது. ரூ. 20 கோடி செலவில் சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை ஒன்றும் விரைவில் அமைக்கப்படும்.

(7) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் :

கச்சா மாக்னசைட்டை வெட்டி எடுத்து விற்பனை செய்வதற்காகத் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தொடக்கத்திலிருந்தே நல்ல இலாபத்தில் இயங்கி வருகின்றது. இந்நிறுவனம் 2,300 பேருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது.

ரூ. 8.50 கோடி செலவில் செங்கல் சூளை ஒன்றினைத் தொடங்கி நடத்தி வருகின்றது. இரசாயன முறையில் தரம் உயர்த்தும் தொழிற்சாலை ஒன்றினையும் வெப்பந்தாங்கிக் கற்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினையும் தொடங்குவதற்காக நடவடிக்கைகளை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

(8) தமிழ்நாடு உப்பு நிறுவனம் :

வேளாண்மை மற்றும் வாணிபத் தொழிலோ அன்றி வேறு
எந்தத் தொழிலோ இல்லாத இராமநாதபுரம் மாவட்டக் கடற்
கரைப் பகுதிகளில் வாழ்வோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்
நோக்கத்துடன் தமிழ்நாடு உப்பு நிறுவனம் அமைக்கப் பெற்
றுள்ளது. இங்கு சமையலுக்கு வேண்டிய உப்பும் தொழிற்
சாலைக்கு வேண்டிய உப்பும் தயார் செய்யப்படுகின்றன.
கடந்த பத்து ஆண்டுகளில் இங்கு உற்பத்தியாகும் உப்பின்
அளவு 90 பங்காகப் பெருகி உள்ளது.

(9) சர்க்கரைத் தொழில் :

சர்க்கரைத் தொழில் விவசாயத்தை அடிப்படையாகக்
கொண்ட தொழிலாக விளங்குவதுடன் இம் மாநிலத்தின்
கிராமப்புற வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. அரசின் முழு
கண்காணிப்பில் 12 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் 3 பொதுத்
துறை சர்க்கரை ஆலைகளும் திறம்பட இயங்கி வருகின்றன.
இவ்வாலைகள் கிராமப் புறங்களில் 10,000-த்திற்கும் மேற்
பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன. இவ்வாலைகள்
திறம்பட இயங்கி வரும் காரணத்தால் 1985–86 ஆம் ஆண்டுக்கு
இரண்டு ஆலைகளைத் தவிர எஞ்சிய ஆலைகளின் ஊழியர்கள்
ஒரு கணிசமான ஊக்க ஊதியம் பெற முடிந்தது. அதிகபட்ச
ஊக்க ஊதியம் வழங்கி பொதுத்துறை சர்க்கரை ஆலை
களை அமைத்து நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு
சர்க்கரை நிறுவனம் சர்க்கரைத் துறையில் பெரும்பங்கு வகித்து
வருகிறது. இந்நிறுவனம் மறைமலை நகரில் சர்க்கரை ஆலைக்கு
வேண்டிய கரும்பு அரைவைக்கு பயன்படும் உருளைகளை சீர்
அமைக்கவும் உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்யும் பட்டறை
ஒன்றினை அமைத்துள்ளது. சர்க்கரை ஆலைகளில் உயர்
அழுத்த கொதிகலன்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும்
செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. கரும்பு விளைச்
சல் மற்றும் இதர அம்சங்களைக் கருத்திற் கொண்டு மாநிலத்தில்
மேலும் சர்க்கரை ஆலைகளை அமைக்க அரசு திட்டமிட்டுள்
ளது. மைய அரசு சமீபத்தில் புதிய சர்க்கரைக் கொள்கையை
அறிவித்துள்ளது. இதன்படி, புதிதாக அமைக்கப்படும் சர்க்கரை
ஆலைகள் நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 2,500 டன் பிழி
திறன் கொண்டதாக இருக்க வேண்டும். புதிய ஆலைகள் அமைக்க
உரிமம் கோரி 43 விண்ணப்பங்கள் அரசுக்கு வந்த போதிலும்,
இதுவரை மைய அரசுக்கு கூட்டுறவுத்துறை மற்றும் தனியார்
துறைகளிலிருந்து ஆலைகள் அமைக்க 12 விண்ணப்பங்கள் பரிந்
துரைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்சமயம் இயங்கும் ஆலை
களில் 5 கூட்டுறவு ஆலைகளும், 2 பொதுத்துறை மற்றும் 3
தனியார் துறை ஆலைகளின் பிழிதிறனை அதிகப்படுத்த வரப்
பெற்ற விண்ணப்பங்கள் மைய அரசுக்கு உரிமம் கோரி பரிந்
துரைக்கப்பட்டுள்ளன.





(10) சென்னை ஏற்றுமதித் தொழில் மையம் :

மைய அரசு சென்னையில் தாம்பரத்திற்கு அருகே சென்னை
ஏற்றுமதித் தொழில் மையம் என்று அழைக்கப்படும் தடையிலா
வணிக மண்டலம் ஒன்றினை அமைத்துள்ளது. இம் மையத்திற்கு
தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் தமிழக
அரசே செய்து தருவதோடு தமிழக அரசின் தலைமைச் செய
லாளருடைய தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு ஒன்று
அவ்வப்போது கூடி, இம்மையத்தின் பல்வேறு பணிகளை விரைவு
படுத்துகின்றது.

இம்மையத்தின் தொழில்கள் தொடங்க 180 விண்ணப்பங்
கள் வரப் பெற்றுள்ளன. அவற்றுள் 93 விண்ணப்பங்களுக்கு
சென்னை ஏற்றுமதித் தொழில் மைய வாரியம் இசைவளித்
துள்ளது. தற்போது 20 தொழிற் பிரிவுகள் இம்மையத்தில்
உள்ளன. அவற்றுள் 5 தொழில் பிரிவுகள் ஏற்கனவே
உற்பத்தியைத் தொடங்கி விட்டன.

தமிழகத்தில் தொழில் தொடங்க முனைவோருக்கு ஏற்படு
கின்ற நடைமுறை சிக்கல்களையும் காலதாமதத்தையும் தவிர்க்
கும் நோக்கோடு முதுநிலை அதிகாரிகளை உறுப்பினர்களாகக்
கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தொழில் முனை
வோர்களுடைய பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்து அவர்க
ளுடைய குறைகளைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை இக்
குழு மேற்கொண்டு வருகிறது.

(11) நலிவுற்ற நிறுவனங்கள் :

தவறான நிருவாகம் மற்றும் முறைகேடுகள் போன்ற காரண
ங்களால் நலிவுறும் பல தொழில் நிறுவனங்களுக்குத் தமிழக
அரசு உதவி அளித்து வருகின்றது. இதனால், இத்தொழிற்
சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து
வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது. தமிழக அரசின் இத்
தகைய சீரிய முயற்சியின் மூலம் பல தொழில் நிறுவனங்கள்
புத்துயிர் பெற்று இயங்கி வருகின்றன.

(12) மைய அரசு முதலீடுகள் :

கடந்த ஓராண்டாக தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர்
எம்.ஜி.ஆர். மேற்கொண்ட இடைவிடாத முயற்சியால், உதக
மண்டலத்தில் ரூ. 168.12 கோடி செலவில் இந்துஸ்தான் போட்
டோ பிலிம்ஸ் நிறுவனம் மேற்கொள்ளவிருக்கும் பாலியஸ்டர்
எக்ஸ்ரே படத்தயாரிப்புத் திட்டத்திற்கும், மணலியில் ரூ. 600.00
கோடி செலவில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்
மேற்கொள்ளவிருக்கும் ஆரோமேடிக் காம்ப்ளெக்சுக்கும் மைய
அரசு தனது இசைவை அளித்துள்ளது.

[1987 ஏப்ரல் 24

தமிழகத்தில் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்காக இவ்வரசு மேற்கொண்டுவரும் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். தமிழகத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்க முன்வருவோர்க்கு தேவையான உதவிகள் அனைத்தையும் இவ்வரசு செய்துத் தருவதோடு புதிய தொழில்கள் பலவற்றைத் தொடங்கித் திறம்பட நடத்தி வருகின்றது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் தொழில் முனைவோர் பலருக்குக் கடனுதவியளிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பகுதிகளில் பல்வேறு தொழில்கள் தொடங்கத் தொழில் முனைவோரை ஊக்குவிக்க முதலீட்டு மானியம், வட்டியில்லா விற்பனை வரிக்கடன் போன்ற சலுகைகளை இவ்வரசு அளித்து வருகிறது.

இதுகாறும் மேற்கூறிய விவரங்களிலிருந்து தமிழகம் தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கி வருகிறது என்பது தெளிவாகும்.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ).

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 75 கோடி. அதில், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 65.23 கோடி ஆகும்.

2. முதலில் டிட்கோ நிறுவனம ஆலங்குளத்தில் ஒரு சிமென்ட் ஆலை மற்றும், அரக்கோணத்தில் ஒரு எஃகு ஆலை நிறுவ ஏற்படுத்தப்பட்டது. தற்போது பொதுத் துறையில் துணை நிறுவனங்களை நிறுவுவதுடன், உரங்கள், இரசாயனம், மருந்துப் பொருட்கள், பதனிடப்பட்ட தோல் பொருட்கள், தொலைக் காட்சிப் பெட்டிகள், சிகரெட்டுகள் போன்ற பல்வேறுபட்ட பொருட்களை உற்பத்திச் செய்யக் கூடிய பெருந்தொழிற்சாலைகளையும் மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளையும் கூட்டுத் துறையில் நிறுவுவதில் தன் பணியை விஸ்தரித்துள்ளது. இம்மாநிலத்தில் எல்லா பகுதிகளிலும் தொழிற்சாலைகள் ஏற்படுவதற்காக, தனியார் தொழில் முனைவர்களை கவரக்கூடிய தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் முடிந்த அளவில் குறைந்த அளவில் டிட்கோ தொழிற்சாலைகளை நிறுவி வருகிறது.

3. பொது மற்றும் கூட்டுத்துறைத் திட்டங்களில் டிட்கோவின் மொத்த முதலீடு சுமார் ரூ. 70 கோடியாகும். நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பின் மூலம் 35,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.



1987 ஏப்ரல் 24]

4. இதுவரையில், டிட்கோ நிறுவனம் 45 தொழிற்சாலைகளை பொது மற்றும் கூட்டுத் துறையில் வளர்த்துள்ளது. இத்தொழிற்சாலைகள் குறித்த விபரங்கள் பின்வருமாறு :—

| | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| 1. பொதுத் துறை— (அ) உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள் | 7 | 87.00 |
| (ஆ) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 2 | 26.00 |
| 2. கூட்டுத் துறை— (அ) உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள். | 26 | 260.00 |
| (ஆ) நிறைவேற்றப்பட்டு வரும் தொழிற்சாலைகள். | 10 | 269.00 |
| மொத்தம் .. | 45 | 642.00 |

5. கூட்டுத் துறையில் நிறைவேற்றப்பட்டுவரும் 10 தொழிற்சாலைகளில், கீழ்வரும் தொழிற்சாலைகள் வணிக ரீதியிலான உற்பத்தியை விரைவில் எய்தும் :—

| தொழிற்சாலைகள். | திட்டச் செலவு. (ரூபாய் கோடியில்). | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|
| (1) ஆட்டோமோடிவ் காஸ்டிங்ஸ் லிமிடெட். | 4.50 | 300 |
| (2) நார்த் ஆர்காட் லெதர்ஸ் லிமிடெட் | 1.53 | 140 |
| (3) பென்டாசியா கெமிக்கல்ஸ் லிமிடெட் | 19.00 | 200 |
| மொத்தம் .. | 25.03 | 640 |

6. 1987-88 ஆம் ஆண்டில், மேல்வரும் திட்டங்கள் வணிக ரீதியிலான உற்பத்தியை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது :—

| திட்டங்கள். | திட்டச் செலவு (ரூபாய் கோடியில்.) | வேலை வாய்ப்பு (நபர்களின் எண்ணிக்கை.) |
|---|---|---|
| 1. பொதுத்துறை— | | |
| (1) மக்னீசியம் [illegible] | 5.85 | 110 |
| (2) டிட்டோனேட்டர்ஸ் மற்றும் டிட்டோனேட்டிங் ப்யூசஸ் | 20.55 | 500 |
| 2. கூட்டுத்துறை— | | |
| (1) மதராஸ் மாக்னெட்டிக் மீடியா லிமிடெட் | 1.44 | 75 |
| (2) தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் | 142.00 | 425 |
| (3) டைடான் வாட்சஸ் .. | 50.00 | 1,200 |
| (4) யூனி ஆர்கானிக் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட். | 1.95 | 100 |
| (5) அமோனியம் நைட்ரேட் மற்றும் நைட்ரிக் அமிலம் திட்டம். | 23.00 | 200 |
| (6) சுமார் பெட்ரோ கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் லிமிடெட் | 13.00 | 100 |
| மொத்தம் .. | 257.79 | 2,710 |

7. இத்திட்டங்கள் தவிர, சுமார் ரூ. 960 கோடி திட்ட மதிப்பீட்டில் அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய 17 புதிய திட்டங்கள் டிட்கோவின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்களுக்கு சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல், தொழில் உரிமங்கள் பெறுதல் போன்ற ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் டிட்கோவால் எடுக்கப்பட இருக்கின்றது.

8. டிட்கோ நிறுவனம் சென்ற ஆறு ஆண்டுகளாக இலாபத்தில் இயங்கிக்கொண்டு வருகிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் ஏற்பட்ட திரண்ட நட்டமான ரூபாய் 631.93 இலட்சங்கள் முழுவதும் சரிக்கட்டப்பட்டு, 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நிலவரப்படி ரூ. 136.47 இலட்சங்கள் டிட்கோவின் சேமிப்பாக உள்ளது. வரும் ஆண்டுகளிலும், இந்த வளர்ச்சியைத் தொடர்ந்து நீட்டிக்க அனைத்து முயற்சிகளையும் டிட்கோ மேற்கொள்ளும்.



## டிட்கோவின் துணை நிறுவனங்கள் உற்பத்தியிலுள்ள தொழிற்சாலைகள்.

(1) (அ) தமிழ்நாடு "ஸ்டீல்ஸ்" நிறுவனம் :

தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் திட்டச் செலவு ரூ. 788 இலட்சங்களாகும். இது ஆண்டொன்றுக்கு 50,000 டன் பில்லட்ஸ் (Billets) மற்றும் மோல்டன் ஸ்டீல்ஸ் (Molten Steels) தயாரிக்கும் நிறுவுத் திறன் கொண்டதாகும். 1-1-1986 முதல் 30-9-1986 வரை இத்தொழிற்சாலை 98 சதவீதம் நிறுவுத் திறனைப் பயன்படுத்தியுள்ளது. தற்போது இந்நிறுவனத்தில் 629 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நிதி நிறுவனங்களின் உதவியுடன் ரூ. 92 இலட்சம் செலவில் இந்நிறுவனத்தை நவீன மயமாக்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இது 1989-90-ல் நிறைவுபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) மீள் உருளை ஆலை :

இதன் திட்டச் செலவு ரூ. 782 இலட்சங்களாகும். இது ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் பார்ஸ் அண்டு ரவுண்ட்ஸ் தயாரிக்கும் நிறுவுத் திறன் கொண்டதாகும். 114 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கியுள்ளது. 1-1-1986 முதல் 30-9-1986 வரையில், இந்நிறுவனம் உற்பத்தித் திறனில் 76 சதவிகிதம் பயன்படுத்தியுள்ளது.

(2) தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம் :

இந்நிறுவனம் வட ஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, தாரபடவேடு, வண்டறந்தாங்கல் என்ற கிராமங்களில் நிறுவப்பட்டுள்ளது. இது, சுரங்கப் பணிகள் மற்றும் இதர கட்டுமான தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும், நைட்ரோ கிளிசரினை அடிப்படையாகக் கொண்ட தொழிலியல் வெடி மருந்துகளை ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் தயாரிக்க நிறுவப்பட்டிருக்கிறது. இது முக்கிய துறையை (Key Sector) சார்ந்த தொழிற்சாலையாகும். தென் பிராந்தியங்களில் இத்துறையில் நிறுவப்பட்ட முதல் தொழிற்சாலையும் இதுவேயாகும். கட்டடம் மற்றும் இராணுவத் துறைகளில் பயன்படுத்தப்படும் வெடிமருந்துகளுக்குப் பிரசித்தி பெற்ற ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் போஃபோர்ஸ் நோபல் செம்மதூர் (Messrs. Bofors Nobel Chematur) நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 9-2-1986 முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை தொடங்கியுள்ளது. இந்நிறுவனம் சுமார் [illegible] நபர்களுக்கு வேலை வாய்ப்புக்களை நல்கியுள்ளது. 1986-87 ஆம் ஆண்டு இந்நிறுவனம் பொதுமக்கள் பங்கு [illegible] முறையில் ரூ. 496.86 இலட்சங்கள் பங்கு மூலதனம் பெற்றுள்ளது.

நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் :

மக்னீஷியம் உலோகம் திட்டம் :

(அ) தமிழ்நாடு கெமிக்கல் புராடெக்ட்ஸ் நிறுவனத்தில் டிட்கோவின் பங்குகளை விற்றதன் காரணமாக, மக்னீஷியம் உலோகம் திட்டம் டிட்கோ நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட இருக்கிறது. இராமநாதபுரத்தில் வாலிநோக்கம் என்ற இடத்தில் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. விமானங்கள், விண்வெளி கலன்கள் மற்றும் அலுமினிய தொழிற்சாலைகளில் பெரிதும் பயன்படுத்தப்படும் மக்னீஷிய உலோகத்தை ஆண்டொன்றுக்கு 600 டன் உற்பத்தித் திறனளவு கொண்டது இத்தொழிற்சாலையாகும். காரைக்குடியிலுள்ள மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தின் கண்டுபிடிப்பான உப்புத் தொழிற்சாலையில் உபபொருளான உப்பு கரிப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்பத்துடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் திட்டச் செலவு ரூ. 585 இலட்சங்களாகும். 1987-88 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் சுமார் 110 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) டிடோனேட்டர்ஸ் மற்றும் டிட்டோனேட்டிங் ப்யூசஸ் திட்டம் :

சுரங்கம் மற்றும் பிற தொழிற்சாலைப் பணிகளில் தொழில்நுட்ப வெடிமருந்துடன் துணைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படும் டிடோனேட்டர்ஸ் மற்றும் டிட்டோனேட்டிங் ப்யூசஸ் என்ற திட்டம் வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடியில் நிறுவப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் ஆரம்ப கட்டமாக 45 மில்லியன் டிடோனேட்டர்ஸ்கள் மற்றும் 10 மில்லியன் மீட்டர் டிட்டோனேடிங்ஸ் ப்யூசஸ் தயாரிக்க உள்ளது. இதன் திட்டச் செலவு ரூ. 2,055 இலட்சமாகும். இது சுமார் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். 1987-88 ஆம் ஆண்டில் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்)

பொது :

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) முழுவதும் உடைமை ஆக்கப்பட்ட துணை நிறுவனமான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் 1-4-1976 முதல் தன் வணிகத்தைத் துவக்கியது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்





ரூ. 12.50 கோடியாகும். இதில் ரூ. 12.36 கோடி செலுத்தப்பட்டுள்ளது. சிமெண்ட் மற்றும் சிமெண்ட் பொருட்களை உற்பத்தி செய்து, விற்பனை செய்தல் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

2. தற்போது பின்வரும் நான்கு ஆலைகள் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தால் இயக்கப்பட்டு வருகின்றன :—

| சிமெண்ட் ஆலைகள். | உற்பத்திப்பொருள். | நிறுவுத்திறன். |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| | | (ஆண்டொன்றுக்கு) (மெ.டன்கள்.) |
| (அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை. | சிமெண்ட் | 4 இலட்சம். |
| (ஆ) அரியலூர் சிமெண்ட் ஆலை. | சிமெண்ட் | 5 இலட்சம். |
| ஆஸ்பெஸ்டாஸ் ஆலைகள் : | | (மெ. டன்கள்.) |
| (அ) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ். | ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள். | 36,000 |
| (ஆ) தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள் திட்டம். | ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்கள். | 36,000 |

### 3. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

3.1. ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன்கள் நிறுவுதிறன் கொண்ட இந்த ஆலை 1970 ஆம் ஆண்டிலிருந்து வணிக ரீதியில் தனது உற்பத்தியைத் துவக்கியது. ரான்சேம் இந்த ஆலையை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து 1-4-1976 அன்று ரூ. 666 இலட்சம் நிகரக் கணக்கு மதிப்பிற்கு எடுத்துக் கொண்டது. இந்த ஆலை இப்பொழுது தனது 16 வருட காலப் பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. ரூ. 490 இலட்சம் செலவில் இந்த ஆலையில் நவீனமாக்கல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தல் திட்டத்தை செயல்படுத்தியதின் பயனாக, இந்த ஆலையில் உற்பத்தி சலவரி 1984-ல் இருந்து நன்கு நிலைப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாடு மின் வாரியத்தால் அடிக்கடி விதிக்கப்படும் மின்வெட்டின் காரணமாக, இவ்வாலையால் தனது முழு உற்பத்தித் திறனை அடைய இயலவில்லை. ஆலங்குள ஆலையின் மின் பற்றாக் குறையைச் சமாளிக்க தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ரூ. 881 இலட்சம் செலவில் இரு 2,500 கே.வி.ஏ. ஜப்பானிய டீசல் ஜெனரேட்டர் எந்திரங்களை நிறுவியுள்ளது. இந்த டீசல் ஜெனரேட்டர் எந்திரங்கள் நிறுவும் பணி டிசம்பர் 1986-ல் நிறைவு பெற்றுள்ளது. இது மின் வெட்டுக் காலங்களிலும் ஆலை தனது முழு உற்பத்தித் திறனையும் அடைய உதவும்.

3.3. நிலக்கரி நுகர்வினைக் குறைக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், இவ்வாலையை ஈரப்பதச் செயல்முறையிலிருந்து பாதி உலர்ச் செயல் முறைக்கு மாற்றிட ரூ. 13.5 கோடி திட்டச் செலவில் திட்ட முன்வடிவு செய்தது. இத்துடன் தேர்வுப் பொறி இணைந்த ஓர் அடிப்படை அரவை இயந்திரம் ( Primary crusher ) ரூ. 7.5 கோடி மதிப்பில் நிறுவுவதென திட்ட முன்வடிவு செய்யப்பட்டது. இவ்விரு திட்ட முன்வடிவுகளும் சிமெண்ட் உற்பத்திக்கு ஆகும் மிகுதிச் செலவை குறைக்கவும். உற்பத்தியை அதிகரிக்கவும் உதவுகின்றது. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த திருவாளர்கள் ரக்பி சிமெண்ட் கன்சல்டன்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர் ஆலையை ஈரப்பதச் செயல் முறையிலிருந்து பாதி உலர்ச் செயல் முறைக்கு மாற்றியமைத்தலுக்குரிய விரிவான வழிமுறைகளை அளிக்கும் ஆலோசனைப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வரவை இயந்திரம் [illegible] உள்நாட்டு நிபுணத்துவம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.





3.4. இந்த ஆலையில் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் 1-4-1976 முதல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி | ஆண்டின்போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்களில்). | (மெட்ரிக் டன்களில்). |
| 1976-77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977-78 .. .. .. | 3,09,105 | 3,07,807 |
| 1978-79 .. .. .. | 3,19,277 | 3,20,379 |
| 1979-80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980-81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981-82 .. .. .. | 2,93,515 | 2,93,399 |
| 1982-83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |
| 1983-84 .. .. .. | 2,43,435 | 2,38,158 |
| 1984-85 .. .. .. | 3,40,031 | 3,44,096 |
| 1985-86 .. .. .. | 3,20,672 | 3,10,895 |
| 1986-87 .. .. .. (31-12-1986 வரை). | 2,31,188 | 2,37,098 |

3.5. இவ்வாலை ஆதாயம் ஈட்டத் தொடங்கி உள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் 31-12-1986 வரை இவ்வாலையால் ஈட்டப்பட்ட நிகர லாபம் ரூ. 163.82 இலட்சங்களாகும்.

3.6. ஆலங்குளம் ஆலை இப்பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், அப்பகுதியிலேயே கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பினையும், மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்து வகையிலும் வழங்கி வருகிறது.

[1987 ஏப்ரல் 24

### 3. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

3.1. ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன்கள் நிறுவுத் திறன் கொண்ட இந்த ஆலை 1970 ஆம் ஆண்டிலிருந்து வணிக ரீதியில் தனது உற்பத்தியைத் துவக்கியது. இந்த ஆலையை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் 1-4-1976 அன்று ரூ. 666 இலட்சம் நிகரக் கணக்கு மதிப்பிற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து எடுத்துக் கொண்டது. இந்த ஆலை இப்பொழுது தனது 16 வருட காலப் பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. ரூ. 490 இலட்சம் செலவில் இந்த ஆலையில் நவீன மாக்கல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தல் திட்டத்தை செயல்படுத்தியதின் பயனாக, இந்த ஆலையில் உற்பத்தி 1984-ல் இருந்து நன்கு நிலைப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாடு மின் வாரியத்தால் அடிக்கடி விதிக்கப்படும் மின்வெட்டின் காரணமாக, இவ்வாலையால் தனது முழு உற்பத்தித் திறனை அடைய இயலவில்லை. ஆலங்குள ஆலையின் மின் பற்றாக்குறையைச் சமாளிக்க தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ரூ. 281 இலட்சம் செலவில் இரு 2,500 கே.வி.ஏ. ஜப்பானிய டீசல் ஜெனரேட்டர் எந்திரங்களை நிறுவியுள்ளது. இந்த டீசல் ஜெனரேட்டர் எந்திரங்கள் நிறுவும் பணி டிசம்பர் 1986-ல் நிறைவு பெற்றுள்ளது. இது மின் வெட்டுக் காலங்களிலும் ஆலை தனது முழு உற்பத்தித் திறனையும் அடைய உதவும்.

3.3. நிலக்கரி நுகர்வினைக் குறைக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், இவ்வாலையை ஈரப்பதச் செயல்முறையிலிருந்து பாதி உலர் செயல் முறைக்கு மாற்றிட ரூ. 13.5 கோடி திட்டச் செலவில் திட்ட முன்வடிவு செய்தது. இத்துடன் தேர்வுப் பொறி இணைந்த ஓர் அடிப்படை அரவை இயந்திரம் ( Primary crusher ) ரூ. 7.5 கோடி மதிப்பில் நிறுவுவதென திட்ட முன்வடிவு செய்யப்பட்டது. இவ்விரு திட்ட முன்வடிவுகளும் சிமெண்ட் உற்பத்திக்கு ஆகும் எரிபொருள் செலவை குறைக்கவும், உற்பத்தியை ஊக்குவிக்கவும் உதவுகின்றது. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ரக்பி சிமெண்ட் கன்சல்டன்டர்ஸ் லிமிடெட் நிறுவனத்தினர் ஆலையை ஈரப்பதச் செயல் முறையிலிருந்து பாதி உலர்ச் செயல் முறைக்கு மாற்றியமைத்தலுக்குரிய விரிவான வழிமுறையை அளிக்கும் ஆலோசனைப் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வரவை இயந்திரம் நிறுவுவதில் உள்நாட்டு நிபுணத்துவம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.



1987 ஏப்ரல் 24]

3.4. இந்த ஆலையில் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் 1-4-1976 முதல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. (1) | ஆண்டின்போது உற்பத்தி (2) (மெட்ரிக் டன்களில்). | ஆண்டின்போது விற்பனை. (3) (மெட்ரிக் டன்களில்). |
|---|---|---|
| 1976-77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977-78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978-79 .. .. .. | 3,19,277 | 3,20,379 |
| 1979-80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980-81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981-82 .. .. .. | 2,93,515 | 2,93,399 |
| 1982-83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |
| 1983-84 .. .. .. | 2,43,435 | 2,38,158 |
| 1984-85 .. .. .. | 3,40,031 | 3,44,096 |
| 1985-86 .. .. .. | 3,20,672 | 3,10,895 |
| 1986-87 .. .. .. (31-12-1986 வரை). | 2,31,188 | 2,37,096 |

3.5. இவ்வாலை ஆதாயம் ஈட்டத் தொடங்கி உள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் 31-12-1986 வரை இவ்வாலையில் ஈட்டப்பட்ட நிகர லாபம் ரூ. 163.82 இலட்சங்களாகும்.

3.6. ஆலங்குளம் ஆலை இப்பின்தங்கிய பகுதியில் சுமார் 1,600 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், அப்பகுதியிலேயே கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பினையும், மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்து வாயிலாகவும் வழங்கி வருகிறது.

4. அரியலூர் சிமெண்ட் ஆலை :

4.1. ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் மெ. டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் அரியலூர் சிமெண்ட் ஓர் உலர் செய்முறை ஆலை (Dry Process Plant) ஆகும். இத்திட்ட மதிப்பீட்டான ரூ. 2,876 இலட்சம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து, மூலதன பங்களிப்புத் தொகையாக ரூ. 575 இலட்சமும், அனைத்திந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் நிதி உதவியாக ரூ. 1,800 இலட்சமும், வணிக வங்கிகளிடமிருந்து ரூ. 501 இலட்சமும் பெற்று நிதியூட்டம் செய்யப்பட்டது.

4.2. இவ்வாலையின் கட்டடப் பணி 1977 சனவரியில் ஆரம்பித்து 1-8-1979 முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை தொடங்கியது. எனவே இவ்வாலை குறிப்பிடத்தக்க வேகத்துடன் நிறைவேற்றப்பட்டது மட்டுமன்றி, திட்டச் செலவினை அடிக்கல் நாட்டப்பெற்று முப்பது திங்களுக்குள் தனது வணிக உற்பத்தியை தொடங்கியுள்ளது.

4.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| ஆண்டு. | ஆண்டின்போது உற்பத்தி. | ஆண்டின்போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்கள்). | (மெட்ரிக் டன்கள்). |
| 1979–80 (8 மாதங்களுக்கு). | 1,15,919 | 1,15,525 |
| 1980–81 .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1981–82 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| 1982–83 .. .. .. | 2,47,300 | 2,47,836 |
| 1983–84 .. .. .. | 3,01,366 | 2,99,377 |
| 1984–85 .. .. .. | 2,84,366 | 2,80,569 |
| 1985–86 .. .. .. | 2,81,507 | 2,76,092 |
| 1986–87 (31–12–1986 வரையில்). | 2,55,984 | 2,54,928 |





4.4. மின் கட்டுப்பாட்டினைச் சமாளிக்கும் பொருட்டு தனது அரியலூர் ஆலையில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஜூலை 1986-ல் மூன்று 2,500 கே.வி.ஏ. ஜப்பானிய டீசல் ஜெனரேட்டர் எந்திரங்களை (மின் பெருக்கக் பெரும் பொறிகள்) ரூ. 404 இலட்சம் மதிப்பில் நிறுவியுள்ளது.

4.5. எப்போதும் இல்லாத அளவில் ஆலையைப் பாதிக்கும் அடிப்படைச் காரணங்களால் உற்பத்தி நுட்பமானது நலிவடைந்து ஆலையின் உற்பத்தித் திறன் பின் தங்கி இழப்புகளுக்கு உள்ளாகியது. வளர்ச்சி ரீதியிலான பல்வேறு ஊக்குவிக்கும் உற்பத்திச் செயல் முறையினால், இவ்வாலை போதிய ஆதாயத்தை ஜூலை 1986 முதல் ஈட்டத் துவங்கி, டிசம்பர் 1986 வரை நிகர லாபம் ரூ. 185.94 இலட்சம் ஈட்டியது.

4.6. அரியலூர் சிமெண்ட் ஆலை சுமார் 900 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், கணிசமான அளவில் நேரடி அல்லாத வேலை வாய்ப்பினையும் மூலப் பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையினிலும் வழங்கி உள்ளது.

4.7. அரியலூர் சிமெண்ட் ஆலையை நவீனமாக்குர் மற்றும் விரிவாக்குர் திட்டம் :

அரியலூர் சிமெண்ட் ஆலை வணிக உற்பத்தியை ஆரம்பித்ததிலிருந்து, நிர்ணய அளவை எய்திட இடையூராக கச்சாப் பொருளான சுண்ணாம்புக் கற்களில் இருந்த ஈரப்பசை இயல்பு மற்றும் இதர இடர்பாடுகளைக் களைவதற்காக இவ்வாலையை நவீனமயமாக்க திட்டமிட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் இவ்வாலையின் திறனை ஆண்டுக்கு 5 இலட்சம் மெ. டன்னிலிருந்து 10 இலட்சம் மெ. டன்களாக அதிகரித்துக் கொள்ள இசைவுக் கடிதத்தை மைய அரசிடமிருந்து பெற்றுள்ளது. எனவே டான்சம் நிறுவனம் ரூ. 53 கோடி திட்டச் செலவில், இவ்வாலையின் "நவீனமாக்கல் மற்றும் விரிவாக்கப் திட்டத்தை" மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அரியலூர் சிமெண்ட் ஆலையினைப் பாதிக்கும் பெரும் இடர்பாடுகளைக் கண்டறிந்து நீக்க தகுதியான அறிவுரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த திருவாளர்கள் ஹோல்டா பாங்க் மனேஜ்மெண்ட் கன்சல்டன்ட் என்ற நிறுவனம் தனது அறிக்கையை இப்போது கொடுத்துள்ளது. 1990–91-ல் இத் திட்டம் நிறைவு பெறும்.

[1987 ஏப்ரல் 24

5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடுகள் ஆலை)—

5.1. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பல்வகைத் தொழில் புரியும் பொருட்டு, முதற்படியான அனைத்து இந்திய நிறுவனங்களின் நிதி உதவியுடன் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 36,000 மெட்ரிக் டன் அளவில் சிமெண்ட் தகடுகளை உற்பத்தி செய்ய ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் ஆலை ஒன்றை அமைத்துள்ளது. இந்த ஆலை ரூ. 259 இலட்சம் செலவில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைப் பகுதியிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை, தன் வாணிக உற்பத்தியை 1–10–1981 இல் தொடங்கியது.

5.2. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி | ஆண்டின் போது விற்பனை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெ.டன்.) | (மெ.டன்.) |
| 1981–82 (ஆறு மாதங்கள்) .. | 8,251 | 5,067 |
| 1982–83 .. .. .. | 19,091 | 19,867 |
| 1983–84 .. .. .. | 17,839 | 16,886 |
| 1984–85 .. .. .. | 25,606 | 26,612 |
| 1985–86 .. .. .. | 27,443 | 23,376 |
| 1986–87 (31–12–1986 வரை) .. | 19,472 | 20,973 |

5.3. 1984–85 ஆம் ஆண்டின் போது மின் வெட்டின் காரணமாக ஆலை 91.5 சதவிகிதம் தான் உற்பத்தியை எட்ட முடிந்தது. ஏப்ரல் 1986 முதல் டிசம்பர் 1986 முடிய ஆலையின் சராசரி உற்பத்தி 86 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது.

5.4. இந்த ஆலை சுமார் 250 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மேலும் கணிசமான அளவில், கச்சாப் பொருட்கள், செய் பொருட்கள் முதலியவற்றின் போக்குவரவு வகையில் நேரடியில்லாத வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.



1987 ஏப்ரல் 24]

6. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் ஆலை, மாயனூர், திருச்சி மாவட்டம் :

6.1. இந்த ஆலை, ஆண்டொன்றுக்கு 36,000 மெ. டன். அளவில் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இது திருச்சி மாவட்டம், மாயனூரில் அமைந்துள்ளது. இதன் திட்டப் பணிகள் பிப்ரவரி திங்கள் 1983-ல் துவங்கப்பட்டன. ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்ட் குழாய் ஆலை வணிக அடிப்படையில் 1–10–1984 முதல் திட்ட அட்டவணைப்படி துவங்கியது.

6.2. இத்திட்டம் ரூ. 945 இலட்சம் செலவு மதிப்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) மற்றும் அனைத்திந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட்டது.

6.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி. | ஆண்டின் போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்களில்) | |
| 1984–85 (ஆறு மாதங்கள்) .. | 8,427 | 2,558 |
| 1985–86 .. .. .. | 10,007 | 6,684 |
| 1986–87 (டிசம்பர் 1986 வரை) | 4,223 | 3,733 |

6.4. சுமார் 300 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மேலும் கணிசமான அளவு நேரடி இல்லாத வேலை வாய்ப்பும் இத்திட்டம் வழங்கியுள்ளது.

[1987 ஏப்ரல் 24

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்.)

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பின்தங்கிய பகுதிகளிலும்,
தொழில் வளர்ச்சி குன்றிய பகுதிகளிலும் பெரிய மற்றும்
நடுத்தர தொழில்களை மேம்படுத்துவதிலும், வளர்ச்சி அடையச்
செய்வதிலும். அவற்றின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும்
சிப்காட் முக்கிய பங்கு வகிக்கிறது. சிப்காட் தொழில்
கள் வளர்ச்சி அடைவதற்கும் நிதி உதவிகள் வழங்குவதற்கும்
பின்வரும் வழிவகைகளைச் செய்து வருகின்றது:—

(1) தொழில் முனைவோரின் பயனுக்காக ஊக்க முனைப்
புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்;

(2) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில்
வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துதலும் தொழிற்சாலைகளுக்கு
மேம்படுத்திய நிலங்களை அளித்தலும் ;

(3) பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு
இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி ஒதுக்கீட்டிற்கான
திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்க வகை செய்தல் ;

(4) தொழில் முனைவோருக்குத் துணைப் பணி வச
களுக்கு வகை செய்தல்.

2. சிப்காட் தன்னுடைய 15 ஆண்டுக்கால வெற்றிகரமான
பணியில், தமிழக அரசிடமிருந்தும், இந்திய தொழில் வளர்ச்சி
வங்கியிடமிருந்தும் தீவிர ஆதரவு பெற்று இம்மாநிலத்தில்
தொழில் வளர்ச்சியை விரைவு படுத்துவதற்குப் பல புதிய
திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தியுள்ளது. மறுநிதி
உதவி திட்டத்தின் கீழ் சிப்காட்டை தகுதி வாய்ந்த நிறுவனமாக
இந்திய தொழில் வளர்ச்சி வங்கி 1976 ஆம் ஆண்டு செப்டம்பர்
திங்களில் ஏற்றது. இதனால் இந்நிறுவனத்தின் தவணைக் கடன்
வழங்கும் பணி அண்மைக் காலத்தில் பெருமளவில் உயர்ந்
துள்ளது.

3. மத்திய அரசு அளிக்கும் முதலீட்டு உதவித் தொகை,
மாநில அரசு அளிக்கும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன்,
தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்ட
தொழில் பிரிவுகளுக்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு
நிதியுதவி திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட சலுகை நிதியுதவி
போன்ற ஊக்கத் திட்டங்கள், தொழில் வளர்ச்சியில் பின்தங்கி
பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக சிப்காட்
டால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன. உண்மையில்
இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இந்நிறுவனம் அளித்த



1987 ஏப்ரல் 24]

நிதியுதவியில் 75 சதவீதத்திற்கும் அதிகத் தொகை, இம்மாநிலத்
தில் தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட மாவட்டங்கள் ஒன்றில்
அல்லது மற்றொன்றில் தொழிற்சாலைகளை அமைப்பதற்
கென்றே செலவிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பல்வேறு திட்
டங்களின் கீழ், 31—12—1986 வரை அனுமதித்த மொத்த
நிதியுதவி 337.00 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும். இதனால்
சுமார் 97,000 பேர் நேரடி வேலை வாய்ப்பு பெற்றனர்.

4. என். ஆர். ஐ. பிரிவு (N.R.I. Cell)

அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழ் நாட்டில் தொழில்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 'சிப்காட்' நிறுவனத்தில் பன்னாட்டு தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அனுமதிக் கடிதம் கிடைக்கப் பெற்று தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளை அமைக்க தொழிற்சாலை அமைக்கும் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்ய அரசு, நிலைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. தொழில் முனைவோர் எதிர்நோக்க வேண்டிய பிரச்சினைகள் எவையேனும் இருப்பின் அவை குறித்துப் பரிசீலிக்கவும், பணி முன்னேற்றத்தை உறுதி செய்யவும், அனுமதிக் கடிதங்கள் பெற்றவர்களின் திட்டங்களைச் செயற்படுத்துவது குறித்து ஆய்வு செய்யவும் 'சிப்காட்' நிறுவனம் நிலைக்குழுக் கூட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கூட்டுகிறது.

5. உடன் பணி முடிப்பு அமைப்பு.

தொழில் முனைவோர் நடுத்தர, பெருந் தொழில்களைத் திட்டமிடுகையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசு உடன் பணி முடிப்பு உயர்நிலை அமைப்பு ( Single Window Agency ) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவின் முன் வைக்கப்பட்ட செயற்குறிப்புகளின் அனைத்துக் கூறுகளையும் நுணுக்கமாக ஆய்வு செய்து கொள்கையளவில் அத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த பின்னர்தான் சம்பந்தப்பட்ட முகவரமைப்பு அவற்றை வகைதொகைப்படுத்தி ஒப்புதலளிக்க ஒவ்வொரு செயற் குறிப்பையும் எடுத்துக்கொள்ள முடியும். இந்த அமைப்பு 1985 பிப்ரவரியில் ஏற்படுத்தப்பட்டது. முறையீடுகள் யாவும் மின் அனுமதி, விரைந்து மின்சாரம் வழங்குதல், தூய்மைக்கேடு கட்டுப்பாடு வாரிய அனுமதி, ஊராட்சி அனுமதி, தவணைக் கடன் வழங்குதல், தொலைபேசி இணைப்பு வழங்குதல் முதலியன கோரியே வருகின்றன.

6. பலவகைத் திட்டங்களுக்கான ஊக்கத் தொகை.

(1) சாத்தியக்கூறு ஆய்வுகளுக்கு உதவித் தொகை :

இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வசதியாகக் குறைந்த செலவில் சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரித்து வழங்கப்படுகிறது. இந்த அறிக்கைகளை ஆய்வின் மொத்த செலவில் 10 சதவீதத்தை முதலில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் எஞ்சிய 40 சதவீதத்

தொகை கடனாக மாற்றப்படும். இத்தொகை தொழில் திட்டத்தை தொடங்கிய பின்னர் வசூலிக்கத்தக்கதாகும். எஞ்சிய 50 சதவிதம் 'சிப்காட்' நிறுவனத்திடமிருந்து பெறப்படும் உதவித் தொகை மானியமாகக் கருதப்படும். இப்புதிய திட்டத்தின்கீழ் இதுவரை 30 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மூன்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதற்காகத் தீவிர பரிசீலனையிலுள்ளன. இதுவரை 35 தொழில் முனைவோர் இத்திட்டத்தின் கீழ் இந்த சாத்தியக்கூறு அறிக்கைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

(2) வட்டியில்லா விற்பனை வரிக் கடன் :

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் அளிக்கும் பல்வேறு சலுகைகளுள் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்குதல் முதன்மையானதாகும். இக்கடனை மாநில அரசின் சார்பில் 'சிப்காட்' நிறுவனம் வழங்கி வருகிறது. இம்மாநிலத்தில் தொழில் துறையில் பின்தங்கிய 11 மாவட்டங்களில் ஏதாவது ஒரு மாவட்டத்திலும், திருநெல்வேலி, செங்கற்பட்டு, நீலகிரி, சேலம், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட வட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலைநகர் தொழில் மையத்திலும், குன்றத்தூர் வளர்ச்சி வட்டாரத்திலும் மற்றும் ஓர் இலட்சமும் அதற்கு மேலும் மக்கள் தொகை உள்ள நகர்ப்பகுதியும் நீங்கலாக, உதவித் தொகை பெறும் பகுதிக்குள் அமையவிடின் எட்டு கிலோ மீட்டர் எல்லைப் பகுதியுடன் மதுரை, திருச்சிராப்பள்ளி நகர்ப்புற கூட்டுப்பகுதியும், தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும்.

இத்திட்டம் 3—10—1981—லிருந்து எளிதாக்கப்பட்டுள்ளது. இது இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் பாகம் I-ன் கீழ், தற்போது செயல்படும் நடுத்தர பெரிய அளவிலான தொழில்களுக்கும் தகுதியுள்ள பகுதியில் கணிசமான அளவிற்குத் தொழிலை விரிவுபடுத்துவதன் மூலம் அல்லது பல்திறப்படுத்துவதன் மூலம் சிறிய தொழிலிலிருந்து நடுத்தரத் தொழில்களாக விரிவுபடுத்தப்பட்ட தொழில்களுக்கும், விரிவுபடுத்தப்படும், திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிலையான இருப்புகளின் மதிப்பில் உயரளவு 25 சதவீதத்திற்கு அல்லது தற்போதுள்ள நடுத்தர பெரிய தொழிற்சாலைகளுக்கு 50 இலட்சம் ரூபாய்க்கு, இதில் எந்தத் தொகை குறைவோ, அந்தத் தொகைக்கு உட்பட்டு, தற்போதுள்ள தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும் ஆண்டுக்கு முந்தைய 3 ஆண்டுகளுக்கு ஏற்கனவே செலுத்திய விற்பனை வரித் தொகை அளவிற்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அளிக்கப்படுகிறது. விற்பனை வரிக் கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள்



முடிந்த பின்னர் 3 ஆண்டுத் தவணைகளில் சம தொகைகளாக வட்டியின்றி இக்கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படத் தக்கதாகும்.

பகுதி II திட்டத்தின் கீழ் புதிய தொழில் பிரிவுகள் முதல் ஆறு ஆண்டுக் காலத்திற்கு அதாவது அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் 24 காலாண்டுகளுக்கு அவ்வாண்டில் அத்தொழிற் பிரிவு செலுத்திய விற்பனை வரிக்குச் சமமான வட்டியில்லா விற்பனை வரிக் கடன் தொகையை ஆண்டுதோறும் பெறும். இத்தொகை திட்டத்தில் வகை செய்யப்பட்ட அல்லது அத்தொழில் பிரிவு உண்மையில் உருவாக்கிய மொத்த நிலையான இருப்புகளில் 20 சதவீதம் அளவிற்கு அல்லது ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபாய்க்கு, இதில் எந்தத் தொகை குறைவோ, அந்தத் தொகைக்கு உட்பட்டு இக்கடன் அளிக்கப்படும். 24 காலாண்டுக்கு ஒரு மொத்த அனுமதி 100 இலட்சம் ரூபாய்க்கு மேற்படக்கூடாது (திங்கள் தோறும் வழங்கும் வகையிலும்கூட எளிமைப்படுத்தப்பட்டது). கடன் வழங்கப்பட்ட 9 ஆண்டுகளுக்குப் பின்னர் இத்தொகை 3 சம ஆண்டுத் தவணைகளில் வட்டியின்றி திருப்பிச் செலுத்தப்படத்தக்கதாகும்.

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் சலுகைத் திட்டத்தின் கீழ், இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து 1986 டிசம்பர் திங்கள் வரை, 283 தொழில் பிரிவுகளுக்கு மொத்தம் 3,318.16 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் அளித்து, அதில் 3,056.95 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

(3) மத்திய அரசின் முதலீட்டு உதவித் தொகை :

தமிழ்நாட்டிற்கு மத்திய அரசின் ஒட்டு மொத்த உதவித் தொகை அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட 30 பின்தங்கிய வட்டங்களில் (பி வகைப் பகுதிகள்) நிறுவப்படும் ஒரு தொழில் பிரிவு, அதன் நிலையான மொத்த முதலீட்டில் (நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் முதலியவற்றில் செய்த முதலீடுகள் உட்பட) 15 சதவீதத்தை ஒட்டு மொத்த உதவித் தொகை அல்லது உதவித் தொகையாகப் பெறும் தகுதியுடையதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத பின்தங்கிய பகுதிகளுக்குத் தளவாடம் இயந்திரங்களை மாற்றினாலும்கூட, அவை 15 சதவீத உதவித் தொகை பெறத் தகுதி உடையவை ஆகும். ஆனால், அவை முன்பு கூறப்பட்ட இயந்திரங்களுக்கு உதவித் தொகை பெற்றிருக்கக் கூடாது. ஒவ்வொரு தொழில் பிரிவும் பெறத்தக்க மானியத்தின் உச்சவரம்பு 15 இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்னர் மானியத்தின் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்னர், மீதித் தொகையும் வழங்கப்படும்.

[1987 ஏப்ரல் 24

ஒன்பது பின்தங்கிய மாவட்டங்களில் நிறுவப்பட்டு சலுகை அடிப்படையில் நிதியுதவி பெறத் தகுதியுடைய தொழிற் பிரிவுகள் (சி வகைப் பகுதிகள்) 1-4-1983-லிருந்து 10 சதவீத மத்திய முதலீட்டு உதவித் தொகை (உயர்ந்த பட்ச நிதியுதவி 10 இலட்சம் ரூபாயாகும்) பெறத் தக்கவையாகும். இத்தொகை ஏற்கனவே 15 சதவீத உதவித் தொகை அறிவிக்கப்பட்டுள்ள 'பி' வகைப்பகுதிகளைச் சேர்ந்த வட்டங்கள், வளர்ச்சி வட்டங்களுக்கும் 31-3-1983-ம் நாளன்றுள்ளபடி 30 கோடி ரூபாய்க்கு மேல் தொழில்களில் முதலீடு செய்துள்ள வளர்ச்சி வட்டங்களுக்கும் பொருந்தாது.

(4) மாநில அரசின் மூலதன உதவித் தொகை திட்டம் :

மாநில அரசின் மூலதன உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் அரசு 33 அறிவிக்கையிடப்பட்ட பின்தங்கிய வட்டங்களை அறிவித்துள்ளது. இவையும் சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரி லும் அமைக்கப்படவிருக்கும் புதிய தொழிற்சாலை மையங்கள் உயரளவு 15.00 இலட்சம் ரூபாய்க்கு உட்பட்டு 15 சதவீத மாநில மூலதன உதவித் தொகை பெறத் தகுதியுடையவை களாகும். இவற்றில் 22 வட்டங்கள் 'இ' வகைப் பகுதியின் கீழ் வருகின்றன. இவை 10 சதவீத மத்திய அரசின் உதவித் தொகையைப் பெற தகுதியுடையவையாகும். மேற்குறிப் பிட்ட 22 வட்டங்களில் தொடங்கப்பட்ட தொழில் பிரிவுகள் 10 சதவீத மத்திய அரசின் மூலதன உதவித் தொகையையும் 5 சதவீத மாநில மூலதன உதவித் தொகையையும் பெறத் தகுதி உடையவையாகும். எஞ்சிய 11 வட்டங்களும் மேற்குறிப்பிட்ட தொழில் மையங்களும் மாநில அரசின் 15 சதவீத மூலதன உதவித் தொகையைப் பெறத் தகுதி உடையவையாகும். இத்திட்டத்தின் கீழ் சிறிய, நடுத்தர, பெரிய தொழிற்சாலைகள் வருகின்றன. இத்திட்டம் 3-10-1981 முதல் பயன்பெறும். 1986-87-ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட அனுமதி இலக்கு 400 இலட்சம் ரூபாயாக இருக்க 1986 டிசம்பர் வரை 252.197 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 1986-87-ம் ஆண் டிற்கு தொகை வழங்கும் இலக்கு 300 இலட்சம் (திருத்திய மதிப்பீடு) ரூபாயாக இருக்க 1986 டிசம்பர் வரை 202.39 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

(5) தெரிந்தெடுக்கப்பட்ட சில வகைத் தொழில்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் :

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத் துடன் தமிழக அரசு தெரிந்தெடுக்கப்பட்ட சில வகைத் தொழில்களுக்கு உதவித் தொகை வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலும் நிறுவப்பட்டவையும் மத்திய அல்லது மாநில அரசின் உதவித்



1987 ஏப்ரல் 24]

தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வராதவையுமான பின்வரும் வகைத் தொழிற் பிரிவுகள் உருவாக்கப்படவிருக்கும் நிலைச் சொத்துக்களின் மதிப்பு மீது 10 சதவீத உதவித் தொகை அல்லது வேலைக்கமர்த்தப்பட்ட நிரந்தர பணியாளர் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாய் அல்லது 10 இலட்சம் ரூபாய் இதில் எது குறைவோ அத்தொகை பெறத் தகுதியுடையவைகளாகும்.

(1) மின் அணுக் கருவிகள்.

(2) மருந்துகள் அட்டவணையிட்ட மருந்துகள் தயாரித்தல்.

(3) மோட்டார் வாகன உபரித் தொழில் பிரிவுகள்.

(4) சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட சாதனங் கள்.

(5) 6 வட்டங்களில் சணல் பதப்படுத்தும் தொழிற்சாலை.

இத் திட்டம் இந்தியாவின் எப்பகுதியிலும் இதுவரை செயற்படுத்தப்படாத, தனித் தன்மை வாய்ந்த தமிழக அரசின் திட்டமாகும். இத்திட்டம் 3-10-1981-லிருந்து செயற் படுத்தப்படுகிறது. தனிப்பட்ட தோல் பதனிடும் தொழிற் சாலைகள் தங்களுக்குச் சொந்தமாக தொழிற்சாலை நீர்க் கழிவுகளைத் தூய்மைப்படுத்தும் இயந்திரத்தை அமைத்துக் கொள்ளும் பொருட்டு மாநில அல்லது மத்திய அரசின் மூலதன உதவித் தொகை திட்டத்தின் கீழ் வராத பகுதிகள் அனைத்திலும் தனிப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலை களால் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலை, கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் இயந்திரத்தை அமைக்க வேண்டும் என்று அரசு உத்திரவிட்டுள்ளது. அந்நிறுவனங்கள் உயரளவு 5.00 இலட்சம் ரூபாய் என்பதற்குட்பட்டு ஏற்படுத்தவிருக்கும் நிலையான சொத்துக்களின் மதிப்பில் 10 சதவீதம் தனி மூலதன உதவித் தொகை பெறத் தகுதியுடையவைகளாகும்.

(1) நேரடி நிதியுதவி :

(1) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1986 டிசம்பர் வரை ஒப்புதலளிக்கப்பட்ட, வழங்கப்பட்ட குறித்த காலக்கடன் முறையே ரூ. 21,183.48 இலட்சம், ரூ. 14 060.80 இலட்சம் ஆகும்.

(2) உத்தரவாதம் அளித்தல்/நேரடி சந்தா :

பொறுப்புகளுக்கு உத்தரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தாவழியிலாக கடந்த 15 ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்ட உத்தரவாதம் வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் முறையே ரூ. 218.80 இலட்சம், ரூ. 54.53 இலட்சம் ஆகும்.

(3) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்த மற்றும் வழங்கிய தொகை முறையே ரூ. 540.74 இலட்சம் மற்றும் ரூ. 473.46 இலட்சம்.

(4) ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவருக்கு சலுகைகள் :

ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது: —

(1) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் தொடங்கி னாலும், தொழில் முனைவோர் தொழிற்சாலை தொடங்க ஆகும் மொத்தச் செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதன மாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும் (இதுவே முன்பு பின்தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன் னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது).

(2) உத்தரவாதமளித்தல், நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங் களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் தொழிற் சாலைகளுக்கான வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண் டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும், ஏனைய பகுதிகளில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இத்தகைய தொழில் முனைவோர் அமைத் துள்ள தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்ட வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.



(3) வளர்ச்சி மையங்கள் :

| இணையத்தின் பெயர். | பரப்பு (ஏக்கர்). | மேம்பாடு குறித்த செலவு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இராணிப்பேட்டை 1 .. | 570.63 } | 158.73 |
| இராணிப்பேட்டை 2 .. | 141.03 } | |
| ஓசூர் .. .. .. | 938.26 | 412.47 |
| மானாமதுரை .. .. | 382.20 | 116.93 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 650.00 | 135.18 |
| புதுக்கோட்டை .. .. | 330.50 | 125.17 |
| கடலூர் .. .. .. | 371.00 | 192.78 |
| தூத்துக்குடி .. .. .. | 595.40 | 32.39* |
| மதுரை .. .. .. | .. | 1.39 |

* விரிவுபடுத்த எடுத்துக் கொள்ளப்பட்டது.

4 (1) இராணிப்பேட்டை :

சிப்காட் முதன் முதலாக வட ஆற்காட்டில் இத்தொழில் இணையத்தினை 1973 ஆம் ஆண்டில் அமைத்தது. இது எல்லா அடிப்படை வசதிகளும் அமைந்த முழுவதும் மேம்படுத்தப் பட்ட இணையமாகும். சிப்காட் இந்த இணையத்தின் I & II நிலைகளுக்காக முறையே 729.80, 143.96 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது. நிலை I-ல் 545.25 ஏக்கர் நிலமும், நிலை II-ல் 51.89 ஏக்கர் நிலமும் 72 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதி அடிப்படை வசதிகளை அளிப்பதற்காகும். 60 தொழில் பிரிவுகள் வணிக உற்பத்தி நிலையை அடைந்துள்ளன. இந்த இணையத்திற்கான திட்டச் செலவு ரூ. 165.00 இலட்சமாகும்.

(2) ஓசூர் :

பெங்களூரிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓசூரில் சிப்காட் நிறுவனம் 1976 ஆம் ஆண்டில் மற்றொரு தொழில் இணையத்தை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. நிலை I-ல் 1,235.86 ஏக்கர் நிலத்தையும் நிலை II-ல் 456.82 ஏக்கர் நிலத்தையும் சிப்காட் கையகப்படுத்தியது. இதில் 105 தொழில் பிரிவுகளுக்கு நிலை I-ல் 811.67 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதி அடிப்படை வசதி அளிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. 65 தொழிற்சாலைகள் வணிக உற்பத்தி தொடங்கியுள்ளது. எல்லாத் தொழிற்சாலைகளும் சேர்ந்து பயன்படுத்தியுள்ள மொத்த முதலீடு ரூ. 100.00 கோடிக்கும் அதிகமாகும்.

(3) மானாமதுரை :

இவ்வளர்ச்சி மையம் மதுரையிலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த இணையத்திற்காக 492.41 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 382.20 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 122.56 ஏக்கர் நிலம் 38 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 7 தொழில் பிரிவுகள் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இந்த இணையத்தில் எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டிருப்பினும், இன்னும் முழுமூச்சுடன் செயல்படத் தொடங்கவில்லை. திட்டச் செலவு ரூ. 210.00 இலட்சமாகும்.

(4) புதுக்கோட்டை :

இந்த இணையம் திருச்சி, புதுக்கோட்டை மாநில நெடுஞ்சாலையில் புதுக்கோட்டைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம் 437.69 ஏக்கராகும். 330 ஏக்கர் நிலம் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. 30 தொழில் பிரிவுகளுக்கு 82.00 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 7 பிரிவுகள் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. திட்டச் செலவு ரூ. 346.00 இலட்சமாகும்.

(5) கும்மிடிப்பூண்டி.

சென்னைக்கு அருகே 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த இணையம் பல தொழிலதிபர்களை ஈர்த்துள்ளது இதன் தனி அம்சமாகும். கையகப்படுத்தப்பட்ட 735.78 ஏக்கர் நிலத்தில் 640 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. 450 ஏக்கர் நிலம் 138 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 37 தொழிற் பிரிவுகள் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்தில் தற்போது செய்யப்பட்ட முதலீடு ரூ. 20 கோடிக்கும் அதிகமாகும். திட்டச் செலவு ரூ. 963.00 இலட்சமாகும்.



(6) கடலூர்

இந்த வேதியியல் இணையம் கடலூரிலுள்ள பழைய நகருக்கு அப்பால் அமைந்துள்ளது. இதற்காக 443.12 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 310.43 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. 150 ஏக்கர் நிலம் 16 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 4 தொழிற்சாலைகள் வணிக உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

(7) தூத்துக்குடி

இதற்காக சிப்காட் 1,292.79 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது. 160.00 ஏக்கர் தென்னக இரயில்வேக்கு அளிக்கப்பட்டது. 300 ஏக்கர் சிதம்பரம் மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத் தொகுதிக்காக அளிக்கப்பட்டது. வேதியியல் உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளிடமிருந்து நிலத்திற்காக விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. இந்த இணையத்திற்கு வரைபடம் தயாராக உள்ளது. நிலங்கள் தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது.

ஆதாய இழப்பு விவரம்.

சிப்காட் நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டில் ஈட்டிய நிகர ஆதாயம் ரூ. 116.56 இலட்சமாக இருக்க, 1985—86-ஆம் ஆண்டில், வரித் தொகை ஒதுக்குவதற்கு முன்னர் ஆனால் அனைத்துச் செலவுகளுக்கும், தேய்மானச் செலவுக்கும் தொகை ஒதுக்கிய பின்னர், ஈட்டிய நிகர ஆதாயம் 203.62 இலட்சம் ரூபாயாகும்.

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம்.

சென்னைக்கு அருகில் தடையில்லாத வணிக மண்டலம் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ஒப்படை செய்யப்பட்ட 231.60 ஏக்கர் நிலத்தில், முதற்கட்டமாக 98.81 ஏக்கர் நிலம் ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைக்க ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதி தொழில் மண்டலம் அமைப்பதற்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்கின்றது.

'சிப்காட்' நிறுவனம் முக்கிய முகவரமைப்பாகச் செயல்படுகிறது. இதற்காக இந்நிறுவனம் பயன்பாட்டிற்கான மொத்தச் செலவில் ஒட்டுமொத்த சேவைக் கட்டணமாக 5 சதவீத தொகையைப் பெற்றுக்கொள்கிறது. இந்த மண்டலத்தின் முழு வளர்ச்சி குறித்த அடிப்படை வசதிகள் அனைத்தும் அளிக்கும்

பொறுப்பு சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப, நிருவாக, நிதி மூலதனம் போன்ற இனங்களில் அனுமதி பெற ஒரு அதிகாரக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. தேவையான செலவை சிப்காட் முதலில் செய்துவிட்டு பின்னர் மத்திய அரசிடமிருந்து காலாண்டு முறையில் பணத்தைத் திருப்பிப் பெற்றுக்கொள்கிறது.

இம்மண்டலத்தை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு சிவில் பணிகளுக்கு 734 இலட்சம் ரூபாய் செலவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை தற்போது ரூ. 1,044.00 இலட்சமாகத் திருத்தி அமைக்கப் பட்டுள்ளது. வேலியமைத்தல், அறையுடன் கூடிய காவலர் கோபுரம் அமைத்தல் (Watchman Tower) சாலைகள் அமைத்தல், ஸ்டாண்டர்டு வடிவமைப்புத் தொழிற்சாலை அமைத்தல் ஆகியவை உள்பட எல்லைச் சுவர் கட்டுதலுக்கான பெரிய பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுச் சுவர் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகியவை செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஸ்டாண்டர்டு வடிவமைப்புத் தொழிற்சாலை கட்டிடத் தொகுப்புகள் (ப்ளாக்) 1,2,3, 5 ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள கட்டிட தொகுப்புகள் கட்டி முடிக்கப்பெறும் தருவாயில் உள்ளன. நில மேம்பாடு, இக்கட்டிடங்களுக்கு நீர் வழங்கல், கழிவு நீரகற்றுக் குழாய்களை அமைக்கும் பணி, மின்சாரம் வழங்குதல், தெரு மின் விளக்குகள் அமைத்தல் ஆகிய ஏனைய சில இனங்களுக்கான பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள சில இனப் பணிகளான நீர் வழங்கும் உயர்நிலை நீர் தேக்கம், உயிரக இணைப்புக் குட்டை (Oxididation Pond) ஆகியவற்றை அமைத்தல், நிழல் தரும் மரங்களை நடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இம்மண்டலத்தில் தொழிற்சாலைகள் தொடங்க அனுமதி கேட்டு இதுவரை 199 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அவற்றில் 104 விண்ணப்பங்களுக்கு சென்னை ஏற்றுமதி தொழில் மண்டல வாரியம் இசைவளித்துள்ளது. இவற்றுள் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் 41 பேர். இவற்றுள் 48 இனங்களில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 12 முனைவோர்கள் ஏற்கனவே கட்டுமானப் பணிகளை முடித்து உற்பத்தியைத் துவங்கிவிட்டனர். மேலும் 12 இனங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை சுமார் ரூ. 9.40 கோடி அளவிற்கு இறக்குமதியும் ரூ. 10.59 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டுள்ளன. இம்மண்டலத்தின் முதற் கட்டம் நடப்பு ஆண்டு இறுதியில் முழுவதும் வளர்ச்சி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது, ஆண்டிற்கு சராசரி ரூ. 400 கோடி ஏற்றுமதித் திறனுடைய 120 தொழிற் பிரிவுகள் இம்மண்டலத்தில் இயங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. முதல் கட்டம் முடிவுறும்போது சுமார் 24,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர் என எதிர்பார்க்கலாம்.



இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தில் பங்கு பெற அதிக ஆர்வம் காட்டுவதால், இம்மண்டலத்தின் இரண்டாம் கட்டத்திற்காக 223 ஏக்கர் நிலத்தைத் கூடுதலாக கையகப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. இம்மண்டலத்தின் இரண்டாம் கட்டம் முடிவுற்றதும் ஆண்டுக்கு ரூ. 1,000 கோடி ஏற்றுமதித் திறனுடைய சுமார் 350 தொழில் பிரிவுகள் இம்மண்டலத்தில் இயங்க வாய்ப்புள்ளது. இரண்டாவது கட்டம் முடிவுற்ற நிலையில் மொத்தம் சுமார் 70,000 நபர்கள் வேலை வாய்ப்பு பெற இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

### 1. முன்னுரை.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் 1949ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act) கீழ் துவக்கப்பட்ட முதல் மாநில நிதியுதவி நிறுவனம். இக் கழகம் தொழில் தொடங்குபவர்களுக்கு வேண்டிய நிலம், கட்டிடம், இயந்திரம் முதலியவைகளுக்காக அதிகபட்சம் ரூ. 60.00 இலட்சம் வரை நிதியுதவி வழங்குகிறது. இது சிறிய சின்னஞ்சிறிய தொழில் நிறுவனங்கள் பிற்பட்ட பகுதிகளில் தொடங்குவதற்கு முதன்மையளிக்கிறது. இந்நிறுவனத்தில் மொத்த நிதியுதவியில் 90 சதவீதத்திற்கும் மேல் சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 2. நிறுவனமும் மாநில நிதியுதவிச் சட்டமும்.

இந்நிறுவனம் 1949ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டபோதிலும், 1951-ஆம் ஆண்டு மாநில நிதி உதவி நிறுவனச் சட்டத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இயங்கிவரும் மாநில நிதியுதவி நிறுவனமாகும். தற்போது நம் நாட்டில் மேகாலயா உட்பட 19 மாநில நிதியுதவி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில நிதி உதவி நிறுவனச் சட்டத்தின் சில பிரிவுகளுக்கு ஏற்ப இயங்கிவருகிறது. இந்நிறுவனம் கிட்டத்தட்ட இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெறும் மற்ற மாநில நிதியுதவி நிறுவனங்கள்போல் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் நிதி ஆதாரம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியில் (Industrial Development Bank of India) மறு நிதியுதவி (Refinance) பத்திரங்கள் (Bonds) மற்றும் பங்கு மூலதனங்களின் மூலமும் கிடைக்கிறது. 1986ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் அன்று நிதி ஆதாரத்தின் விவரம் கீழே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | மறு நிதியுதவி (இந்திய தொழில் வளர்ச்சி வங்கி). | 127.10 |
| 2. | பத்திரங்கள் .. .. .. .. | 65.99 |
| 3. | பங்கு மூலதனம் .. .. .. | 29.99 |

தற்சமயம் இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 40.00 கோடியாகும். இந்நிறுவனத்தின் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் வரையான பங்கு ஒதுக்கீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| (1) | பங்கு மூலதனம் மார்ச் 31 அன்றுள்ளபடி 1986. (2) (ரூபாய் இலட்சத்தில்) | சதவீதம் மார்ச் 31 அன்றுள்ளபடி 1986. (3) சதவிகிதம். |
|---|---|---|
| 1. தமிழ்நாடு அரசு .. .. | 1,602 | 53.42 |
| 2. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி | 1,350 | 45.00 |
| 3. பாண்டிச்சேரி அரசு .. | 15 | 0.50 |
| 4. ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா அதன் கிளைகள் .. | 8 | 0.26 |
| 5. இந்திய ஆயுள் காப்புறுதி நிறுவனம் .. .. | 4 | 0.13 |
| 6. கூட்டுறவு வங்கிகள் உட்பட ஏனைய வங்கிகள் .. | 20 | 0.69 |
| | 2,999 | 100.00 |





4. கடன் அனுமதிப்பு மற்றும் விநியோக வரம்பு :

இந்நிறுவனத்தின் அலுவலர்கள்/அதிகாரிகளின் தற்போதைய கடன் அனுமதிப்பு வரம்பு :

| | | |
|---|---|---|
| 1. கிளை அலுவலகம் | .. | ரூ. 2.00 இலட்சம் வரை. |
| 2. மண்டல அலுவலகம் | .. | ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 5.00 இலட்சங்கள் வரை. |
| 3. தலைமை அலுவலகம் | | ரூ. 5.00 இலட்சங்களிலிருந்து ரூ. 10.00 இலட்சங்கள் வரை |
| 4. செயற்குழு .. | .. | ரூ. 10.00 இலட்சங்களிலிருந்து ரூ. 25.00 இலட்சங்கள் வரை. |
| 5. இயக்குநர் குழு | .. | ரூ. 25.00 இலட்சங்களுக்கு மேல். |

இது தவிர கிளை மேலாளர்கள் ரூ. 10.00 இலட்சங்கள் வரை மண்டல மற்றும் தலைமை அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட கடனுதவியை விநியோகிக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

5. நிதியுதவி செய்யும் திட்டங்கள் :

இந்நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது:

1. நடுத்தர தொழில் நிறுவனங்கள்.
2. சிறு தொழில் நிறுவனங்கள்.
3. கலபக் கடன் உதவி.
4. ஜெனரேட்டர்.
5. உணவு விடுதிகள்.
6. பதிவு பெற்ற மருத்துவர்கள்.
7. போக்குவரத்து வாகனங்கள் ஓட்டுநர்.
8. சிறு வகைக் கடன் (Mini Loan) ரூ. 50,000-க்குட்பட்ட உதவி.

9. மீன் பிடி படகுகள்-இயந்திரப் படகுகள்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக, துணி வகைகள், இரசாயனம் மற்றும் இரசாயனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் உற்பத்தி, உலோகப் பொருட்கள், காகிதம் மற்றும் காகிதப் பொருட்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள், உலோகமல்லாத கனிப் பொருட்கள் முதலிய தொழில்களுக்கு செய்துள்ள நிதியுதவியில் இந்நிறுவனத்தின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இந்நிறுவனம் திருப்பூர்—பனியன் உற்பத்தி, கோவை—துணி உற்பத்தி தொழில், உலோக வார்ப்பு பட்டரை (Foundries) சேலம், தர்மபுரி—பட்டு நூல் உற்பத்தி, ஜவ்வரிசி உற்பத்தி, சிவகாசி—வண்ண அச்சுத் தொழில், தீப்பெட்டித் தொழில் போன்ற சிறப்புத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு பெருமளவு உதவியுள்ளது.

6. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் :

நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் அனுமதி வழங்கப்பட்ட கடன் விநியோகம், வசூல் பற்றிய விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:

| வருடம். | | ஒப்புதல். | விநியோகம். | வசூல். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1949 முதல் 1978 வரை. (30 வருடங்கள்) | | 121.29 | 98.90 | — |
| 1978–79 | .. | 12.06 | 9.05 | 10.15 |
| 1979–80 | .. | 17.19 | 10.67 | 10.55 |
| 1980–81 | .. | 36.90 | 22.59 | 12.15 |
| 1981–82 | — | 52.13 | 35.07 | 13.76 |
| 1982–83 | .. | 55.87 | 39.56 | 19.85 |
| 1983–84 | .. | 59.74 | 41.11 | 25.23 |
| 1984–85 | .. | 68.11 | 48.70 | 32.38 |
| 1985–86 | .. | 92.39 | 63.44 | 42.30 |
| 1986–87 (1–4–1986 முதல் 31–12–1986 வரை) | .. | 70.17 | 11.87 | 31.32 |





7. சிறு தொழில்களுக்கு நிதியுதவி :

நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி பின்வருமாறு :

| வருடம். | | மொத்த ஒப்புதல். | சிறு தொழில் களுக்கு ஒப்புதல். | மொத்தத்தில் சிறு தொழில் களுக்கு |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் கோடியில்.) | (சதவிகிதம்) |
| 1949–78 வரை | | 121.29 | 29.63 | 24.4 |
| 1978–79 | .. | 12.06 | 5.80 | 48 |
| 1979–80 | .. | 17.19 | 8.86 | 52 |
| 1980–81 | .. | 36.90 | 22.68 | 61 |
| 1981–82 | .. | 52.13 | 44.44 | 85 |
| 1982–83 | .. | 55.87 | 48.59 | 87 |
| 1983–84 | .. | 59.74 | 53.53 | 90 |
| 1984–85 | .. | 68.11 | 62.69 | 92 |
| 1985–86 | .. | 92.39 | 86.06 | 93 |
| 1986–87 (1–4–1986 முதல் 31–12–1986 வரை) | .. | 70.17 | 66.45 | 95 |

8. மான்யம் :

மத்திய மற்றும் மாநில அரசு, மாநிலத்தில் உள்ள சில தாலுக்காக்களை திட்டத்தின் நிரந்தர சொத்தில் 15 சதவிகிதம்/ 10 சதவிகிதம் மானியத்திற்கு தகுதியுள்ளதாக அறிவித் துள்ள இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் மத்திய, மாநில மானிய உதவித் தொகையை வட்டியில்லாமல் மாநில அளவிலான குழு ஒப்புதல் அளித்த பிறகு தனது நிதியிலிருந்து வழங்குகிறது

[1987 ஏப்ரல் 24

அவ்வாறு அளிக்கப்பட்ட மானிய நிதியுதவித் தொகை இந்நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் 31-12-1986 ஆம் நாள் வரை பின் வருமாறு ஆகும் :—

| | எண். | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| மத்திய மானியம் 15 சதவிகிதம் | 2174 | 639.68 |
| மாநில மானியம் 10 சதவிகிதம் | 745 | 469.78 |
| | 2919 | 1,109.49 |

9. நிறுவனத்தின் நிகர லாபம் :

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்திற்கு கிடைத்த நிகர லாபம் (வரி ஒதுக்கீட்டிற்குப் பின்) பின்வருமாறு :—

| வருடம். | | தொகை. |
|---|---|---|
| (1) | | (2) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1981-82 | — | 13.11 |
| 1982-83 | — | 161.15 |
| 1983-84 | — | 133.16 |
| 1984-85 | — | 196.54 |
| 1985-86 | — | 195.40 |



1987 ஏப்ரல் 24]

10. வேலை வாய்ப்பு :

இந்நிறுவனத்தால் உதவி பெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம் கடந்த 8 ஆண்டுகளில் (1978-79 லிருந்து 1985-86 வரை) வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை 2,43,443 ஆகும். நடப்பு ஆண்டு 1-4-1986 முதல் 31-12-1986 வரை 16,300 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

11. சிறப்புத் திட்டங்கள் :

(i) சுலபக் கடன் :

சொந்தத்தில் போதுமான அளவு வசதிகள் இல்லாமல் ஆனால் தொழில் நுணுக்கம் தெரிந்த முதல் தலை முறை தொழில் வினைஞர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் இந்நிறுவனம் 'சுலபக் கடன்' திட்டத்தின் கீழ் அதிக பட்சம் ரூ. 4.00 இலட்சங்கள் மிகக் குறைந்த வட்டியாக 1 சதவீதத்தில் கடனாகக் கொடுக்கிறது. இந்தத் தொகை தொழில் தொடங்குபவரின் பங்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் அளித்த நிதியுதவி வருமாறு :—

| வருடம். | | | | எண்ணிக்கை | தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | | | | (2) | (3) |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1981—82 | .. | .. | .. | 57 | 7 |
| 1982—83 | .. | .. | — | 59 | 24 |
| 1983—84 | .. | .. | .. | 181 | 59 |
| 1984—85 | .. | .. | .. | 206 | 102 |
| 1985—86 | .. | .. | .. | 362 | 194 |
| 1986—87 | .. | .. | .. | 137 | 100 |

ரூபாய் 4.00 இலட்சங்களுக்கு மேல் சுலபக் கடன் தேவைப் பட்டால் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் 'விதை மூலதனக்' கடன் இதே நிபந்தனைகளுடன் கிடைக்கும். 31-12-1986 ஆம் நாள் வரை இந்நிறுவனம் 1,977 நிறுவனங்களுக்கு சுலபக் கடன் திட்டத்தில் 5ரு. .30 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

(ii) மின் உற்பத்தி இயந்திரம் வாங்க நிதியுதவி :

தடையில்லாமல் உற்பத்தி செய்ய வேண்டி, தொழில் நிறுவனங்களுக்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் வாங்க முதன்மை அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. 31–3–1986 ஆம் நாள் வரை இக்கழகம் 1,191 நிறுவனங்களுக்கு ரூ. 11.57 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது.

(iii) போக்குவரத்துத் திட்டம் :

வாடகைக் கார்கள், லாரிகள், டிரக்குகள், சாமான்கள், வண்டிகள் போன்ற போக்குவரத்து வாகனங்கள், சொந்தமாக ஓட்டுபவர்களுக்கும், அல்லாதவர்களுக்கும் வாங்குவதற்கு இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. 31–12–1986 ஆம் நாள் வரை இத்திட்டத்தின் கீழ் 7,144 விண்ணப்பங்களுக்கு ரூ. 76.44 கோடிகள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(vi) பதிவு பெற்ற மருத்துவர்கள் திட்டம் :

மருத்துவ தகுதி பெற்ற நபர்களுக்கு அதிகபட்சம் ரூ. 15 இலட்சங்கள் வரை இந்நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது. அதாவது கிராமப் புற / புறநகர் பகுதிகளில் சிகிச்சை இல்லம் கிளினிக் கட்டுவதற்கு ரூ. 5 இலட்சங்களும், தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் மருத்துவத் தொழிலுக்கு உதவும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ. 15 இலட்சங்களுமாகும். இதுவரை 31–12–1986 ஆம் நாள் வரை 261 மருத்துவர்கள் ரூ. 4.19 கோடிகள் கடனுதவி பெற்று பயனடைந்துள்ளார்கள்.

(v) புதுப்பிக்கும் திட்டம் :

உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய உபகரணங்களை சம்பாதித்தல், பழைய இயந்திரங்கள் தளவாடங்களை மாற்றுதல் அல்லது புனர் நிர்மாணம செய்தல் போன்றவைகளுக்குத் தான் இப்புதுப்பிக்கும் திட்டமாகும். தொழில் நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ள இடத்தைப் பொருட்படுத்தாமல் வட்டி விதம் 11.5 சதவீதமாக்கபபட்டுள்ளது. இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது.

(vi) உபகரண மறு நிதியுதவித் திட்டம் :

நன்கு நிறுவப்பட்ட மற்றும் சிறப்புப் பெற்ற நிறுவனத்திற்கு உள்நாட்டு அல்லது இறக்குமதிகள் செய்த உபகரணங்கள் வாங்குவதற்கு விரைவில் நிதி தேவைப்பட்டால், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கடனுதவி அளிக்கிறது. அதற்குரிய தகுதிகள் :—





1. கடந்த நான்கு ஆண்டுகளாக நிறுவனம் செயல் முறையில் இருக்க வேண்டும்.

2. முந்திய இரண்டு நிதியாண்டுகளிலும் இலாபம் பெற்றிருக்க வேண்டும் அல்லது மூலதன பங்கிற்கு இலாபப் பங்கு அறிவித்திருக்க வேண்டும்.

3. வங்கிகள்/நிறுவனங்களுக்கு தவணை செலுத்தத் தவறி இருக்கக் கூடாது. வாங்க வேண்டிய மூலப் பொருள்கள் / உபகரணங்களின் விலையில் 80 சதவீதம் கடனுதவியளிக்கப்படும். அதற்கு வட்டி 14 சதவீதமாகும்.

12. எதிர்காலத் திட்டங்கள் :

1985–86 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட குறியீடும் சாதனைகளும் பின்வருமாறு :—

| | குறியீடு. | சாதனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்) | |
| கடன் அனுமதி .. .. .. | 71.00 | 92.39 |
| கடன் விநியோகம் .. .. | 61.00 | 63.44 |
| கடன் வசூல் .. .. .. | 38.00 | 42.30 |

1986–87 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட தோராய செயல் முறைகள் பின்வருமாறு:—

1–4–1986 முதல் 31–12–1986 வரை சதவிகிதம்.

| | குறியீடு. | சாதனை. | சதவீதம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்). | |
| கடன் அனுமதி .. .. | 100 | 70.17 | 70.2 |
| கடன் விநியோகம் .. | 75 | 44.39 | 59.2 |
| கடன் வசூல் .. .. | 530 | 31.32 | 59.1 |

[1987 ஏப்ரல் 24

தற்போது இந்நிறுவனம் 17 கிளை அலுவலகங்களையும், 4 மண்டல அலுவலகங்களையும் கொண்டு இயங்குகிறது. இதன் தலைமை அலுவலகம் சென்னையிலுள்ளது.

இந்நிறுவனம் அதன் பல்வேறு திட்டங்களின் மூலம் புதிய 20 அம்ச திட்டத்தை நிறைவேற்ற அக்கறை கொண்டுள்ளது.

உற்பத்தியையும் வேலைவாய்ப்புகளையும் அதிகரிக்கும் வாய்ப்புகளுடைய தொழில்களை தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் துவங்குவதற்கு வேண்டிய நிதியுதவியை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று பயனடைய தொழில் வினைஞர்களை இந்நிறுவனம் அழைக்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனம்.

தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் பயன்படுத்தும் சில முக்கிய கனிமங்களை வணிக முறையில் வெட்டியெடுப்பதற்கும் கரும்பாறை மற்றும் சாம்பல் நிறப் பாறைகளை வெட்டியெடுத்து, ஏற்றுமதி செய்வதற்கும், தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூ. 3,600 இலட்சத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2,07,050 இலட்சம் ஆகும்.

2. 1986–87 ஆம் ஆண்டின் (1986 டிசம்பர் முடிய) உற்பத்தி மற்றும் விற்பனை 1985–86 ஆம் ஆண்டு செயல்பாட்டுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| உற்பத்தி விவரம். | 1985–86 | | 1986–87 (1986 டிசம்பர் முடிய) | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. | அளவு. | மதிப்பு. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) | (4) | (5) |
| கரும்பாறை | 4,487 க.மீ. | 156.47 | 5,394 க.மீ. | 187.90 |
| சாம்பல் நிறப்பாறை. | 3,479 க.மீ. | 48.77 | 1,993 க.மீ. | 25.93 |
| உயர்வகை கனிமங்கள் | 1,69,872 மெ.டன். | 69.25 | 1,11,485 மெ.டன். | 56.25 |
| அறுக்கப்பட்ட மெருகிடப் பட்ட கற் பலகைகள். | 311 ச.மீ. | 3.17 | 4,070 ச.மீ. | 41.50 |
| | | 277.76 | | 311.58 |



1987 ஏப்ரல் 24]

விற்பனை :

| விவரம். | 1985–86 | | 1986–87 (1986 டிசம்பர் முடிய) | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. | அளவு. | மதிப்பு. |
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்) | (4) | (5) (ரூபாய் இலட்சத்தில்) |
| கரும்பாறை | 4,251 க.மீ. | 325.42 | 4,077 க.மீ. | 299.73 |
| சாம்பல் நிறப்பாறை. | 3,537 க.மீ. | 128.04 | 2,209 க.மீ. | 111.20 |
| உயர்வகை கனிமங்கள் | 1,54,875 மெ.டன். | 135.39 | 1 04,406 மெ.டன். | 99.33 |
| அறுக்கப்பட்ட/ மெருகிடப் பட்ட கற் பலகைகள். | 159 ச.மீ. | 3.13 | 812 ச.மீ. | 36.33 |
| | | 5,91.98 | | 5,46.59 |

1986–87 ஆம் ஆண்டில் விற்பனையின் அளவு ரூ. 800 இலட்சத்திற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. டாமின் கிரானைட்ஸ், மணலி :

100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய மணலியிலுள்ள டாமின் கிரானைட்ஸ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டது. இத்தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கி வருகிறது. முதலாண்டிலேயே லாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. சிவகங்கை கிராபைட் திட்டம் :

டாமின், சுத்திகரிப்பு மற்றும் மூசைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை, சிவகங்கையில் ரூ. 3,40.00 லட்சம் மூலதனத்தில் நிறுவ அரசு ஒப்புதல் அளித்தது. தமிழ்நாடு கனிம நிறுவனம், தற்பொழுது இத்திட்டத்தை அயல் நாட்டு தொழில் நுட்பத்துடன் தொடங்க உத்தேசித்துள்ளது. அதனால் நல்ல விலையில் உடனே விற்பனையாகும் 96 விழுக்காடு முதல் 99 விழுக்காடு

[1987 ஏப்ரல் 24

வரை நிலையான கார்பன் அடங்கியுள்ள கிராபைட்டைத் தயாரிக்க முடியும். மேற்கு ஜெர்மனியிலுள்ள திருவாளர்கள் ஹம் போல்ட்வேதக் ஏஜி என்ற நிறுவனத்தின் உதவியுடன் இத்திட்டம் 100 விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய திட்டமாக செயல்படுத்தப்படும் திட்டத்தின் மதிப்பீடு சுமார் ரூ. 2,000 லட்சமாகும். குறைந்த வட்டியில் அயல்நாட்டுக் கடனாக ரூ. 14.00 லட்சத்தைக் கொண்டும் அரசின் பங்கு மூலதனம், மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் இத்திட்டம் நிறைவேற்றப்படும். திட்டம் விரைவில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. உருக்கப்பட்ட குவார்ட்ஸ் தொழிற்சாலை :

தமிழ்நாடு கனிம நிறுவனம், உருக்கப்பட்ட குவார்ட்ஸ் மற்றும் இதர பொருள்களைத் தயாரிக்கும் உயர்ந்த தொழில் நுட்பம் வாய்ந்த தொழிற்சாலையை, நிறுவ உத்தேசித்துள்ளது. திருவாளர்கள் நிப்பன் செராமிக்ஸ், தொழிற்சாலைகளைத் தமிழ் நாட்டில் வணிகக் கூட்டுறவில் அமைக்க பேரார்வம் காட்டி வருகின்றனர். தொழிற்சாலைகளைத் தொடங்க அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன.

நிறுவனம், 1984–85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளில் வரிக்கு முன்பும் வரிக்குப் பின்பும் ஈட்டிய லாப விவரங்கள் வருமாறு :—

| | 1984–85. | 1985–86. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| வரிக்கு முன்பு .. | 39.57 | 1,34.22 |
| வரிக்கு பின்பு .. | 6.40 | 55.00 |

தமிழ்நாடு கனிம நிறுவனம், 3,200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. அவர்களில் சுமார் 3,000 பேர்கள் கிராமப்புறங்களில் வேலை செய்கின்றனர்.

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், சேலம்.

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட், கச்சா மேக்னசைட்டை வெட்டியெடுத்து விற்கும் நோக்குடன் 17-1-1979-ல் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 கோடியாகும். அரசு பங்கு மூலதனமாக ரூ. 1,015 இலட்சம் இதுவரை வழங்கியுள்ளது. தமிழ்நாடு மேக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட், தமிழ்நாடு, மேக்னசைட் லிமிடெட்டின் துணை நிறுவனமாகும்.



1987 ஏப்ரல் 24]

கடந்த மூன்று ஆண்டுகளில் லாபம் மற்றும் நஷ்டம், உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ்வருமாறு :—

வரி செலுத்திய பின் லாபம்.

| வருடம். | தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட். | தமிழ்நாடு மேக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட். |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1983-84 .. .. .. | 24.82 | 2.82 |
| 1984-85 .. .. .. | 34.57 | 1.26 |
| 1985-86 .. .. .. | (40.37)* | 3.82 |

(*அடைப்புக் குறியிலுள்ள எண்கள் நஷ்டத்தைக் குறிக்கிறது.)

*1985-86ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள நஷ்டமான ரூபாய் 40.37 இலட்சம், அந்த ஆண்டிற்கு தேய்மானத்திற்காக ரூ.170.78 இலட்சம் தள்ளுபடி செய்ததால் ஏற்பட்டதாகும். நிறுவனம் அந்த ஆண்டில், ரூ. 130.41 இலட்சம் ரொக்க லாபம் (தேய்மானத் தொகையைத் தள்ளுபடி செய்யு முன்பு) ஈட்டியுள்ளது.

உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்.

| வருடம். | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்னில்). | |
| 1983-84 .. .. .. | 1,17,856 | 1,07,818 |
| 1984-85 .. .. .. | 1,09,845 | 1,02,474 |
| 1985-86 .. .. .. | 1,33,398 | 1,09,921 |

[1987 ஏப்ரல் 24

## தமிழ்நாடு மேக்னசைட் புராடக்ட்ஸ் லிமிடெட்.

| வருடம். | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|
| | மிதமாக எரிக்கப்பட்ட மேக்னசைட். | முழுவதும் எரிக்கப்பட்ட மேக்னசைட். | மிதமாக எரிக்கப்பட்ட மேக்னசைட். | முழுவதும் எரிக்கப்பட்ட மேக்னசைட். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | டன். | டன். | டன். | டன். |
| 1983-84 .. | 4,631 | 3,000 | 4,605 | 3,852 |
| 1984-85 .. | 3,166 | 6,332 | 6,654 | 3,194 |
| 1985-86 .. | 6,275 | 3,162 | 6,017 | 3,066 |

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் சுமார் 2,300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. நிறுவனம் விரிவாக்க திட்டங்களை கீழ்க்கண்டபடி மூன்று கட்டங்களாக செயல்படுத்த உத்தேசித்துள்ளது :—

(1) சுழலும் சூளைத் தொழிற்சாலை.

(2) இரசாயனமுறை தரம் உயர்த்தும் தொழிற்சாலை.

(3) வெப்பந்தாங்கி கற்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை.

**1. சுழலும் சூளைத் தொழிற்சாலை :**

சுமார் ரூ. 8.5 கோடி செலவில், முழுவதும் எரிக்கப்பட்ட மேக்னசைட்டை உற்பத்தி செய்வதற்கான சுழலும் சூளைத் தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையின் வருட உற்பத்தித்திறன் 30,000 டன்கள் ஆகும். உற்பத்தி வெற்றிகரமாக நடை பெற்று வருகிறது.



1987 ஏப்ரல் 24]

**2. இரசாயன முறை தரம் உயர்த்தும் தொழிற்சாலை.**

சுமார் ரூ. 58 கோடி செலவில் ஸ்விட்சர்லாந்தில் வின்டர்தூரிலுள்ள திருவாளர்கள் கல்சர் பிரதர்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து தொழில் நுட்பம் பெற்று ஆண்டொன்றுக்கு 30,000 டன்கள் உயர்தர சின்டர் மேக்னீஷியாவை உற்பத்தி செய்வதற்கான இரசாயனமுறை தரம் உயர்த்தும் திட்டத்தை செயல்படுத்துவது முற்போக்கான நிலையிலுள்ளது. இயந்திரங்கள் கருவிகள் மற்றும் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கான விலைப்புள்ளிகள் வரவேற்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. நிதி நிறுவனங்கள் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலனை செய்கின்றன. அந்நிறுவனங்கள், திட்டத்திற்குத் தேவையான நிதியுதவியை வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசு இத்திட்டத்திற்கு பங்கு மூலதனமாக ரூ. 7 கோடி ஏற்கெனவே வழங்கியுள்ளது. தொழிற்சாலை 1988ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தியை தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**3. வெப்பந்தாங்கி கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை :**

சுழலும் சூளைத் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் முழுவதும் எரிக்கப்பட்ட மேக்னசைட்டையும், இரசாயனமுறை தரம் உயர்த்தும் தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் உயர்தர சின்டர் மேக்னிஷியாவையும் உபயோகப்படுத்தி, சுமார் ரூ. 52 கோடி செலவில் ஆஸ்திரியாவிலுள்ள திருவாளர்கள் ரிப்ரேக்டரீஸ் கன்சல்ட்டிங் மற்றும் இன்ஜினியரிங் ஜி.எம்.பி.எச், நிறுவனத்திடம் தொழில் நுட்பம் பெற்று 30,000 டன்கள் தனித்தன்மை வாய்ந்த வெப்பந்தாங்கி கற்களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு மேக்னசைட் உத்தேசித்துள்ளது. ஒப்பந்தம் முன்பே நிறைவேற்றப்பட்டுவிட்டது.

## தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடுகள்.

இசைவளிக்குமாறு கோரி இந்த ஆண்டில் அதிக அளவிற்குத் தொடர்ந்து முயற்சி செய்ததன் பயனாக உதகமண்டலம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்தின் திட்டமான ரூ. 168.12 கோடி செலவில் பாலியஸ்டர் எக்ஸ்ரே பிலிம் தயாரிக்கும் திட்டத்திற்கும் மணலியிலுள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ரூ. 600 கோடி செலவில் நறுமணம் பொருட்கள் தயாரிப்புத் தொகுதியை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பிற்கும் மத்திய அரசு இசைவளித்தது. மேலும் திருச்சியில் ரூ. 70 கோடி செலவில் மிகு உலோகக் கலவை ஊடுருவல் தொழிற்சாலையையும் (Heavy Alloy Penetrator Project) நிறுவியுள்ளது.

மேலும் மணலியிலுள்ள சென்னை உரத் தொழிற்சாலை ரூ. 550 கோடி செலவில் அதன் உற்பத்தித் திறனை இருமடங் காக்குவதற்கான செயற் குறிப்பிற்கும் மேற்கொண்டும் தமிழ் நாட்டில் 15 புதிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றை நிறுவுவதற் கும் இசைவளிக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது. உதகமண்டலம், இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்தில் வண்ணத்திரைப்படச் சுருள் தயாரிப்பிற்கான செயற் குறிப்புக்கு விரைவில் இசைவளிக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

## இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை.

சென்னை, இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை உலகிலுள்ள அதிகமான எண்ணிக்கையில் இரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஒன்றாகும். சுவிட்சர்லாந்து ஜுரிச் திருவாளர்கள், சுவிஸ் கார் எலிவேட்டர் நிறுவனத்தின் உட னுழைப்புடன் இரும்பில் உருக்கி பற்றவைக்கப்பட்ட இலேசான எடையுள்ள இணைப்புப் பெட்டிகளைத் தயாரிப்பதற்காக இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

இத் தொழிற்சாலையின் உற்பத்தியை 2—10—1955 அன்று காலஞ்சென்ற பாரதப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு தொடங்கி வைத்தார். ஆரம்பத்தில் இத் தொழிற்சாலையில் வேலை நிறைவு பெறாத மேற்கூடுகளை மட்டுமே உற்பத்தி செய்வதற்கு ஏற்றவாறு இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டிருந் தது. வேலையை நிறைவு செய்யும் பொருட்டு அவை பல்வேறு மண்டல இரயில்வே பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டன. பின்னர், இத்தகைய மேற்கூடுகளின் வேலைகளை நிறைவு செய்ய மண்டல இரயில்வே பணிமனைகளின் திறன் குறிப்பிட்ட அளவிற்கே உள்ள தைக் கருத்திற் கொண்டு சென்னை இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையிலேயே மேற் கூடுகளின் வேலையை நிறைவு செய்யவும், அதிக எண்ணிக்கையில் பெட்டிகளைத் தயாரிப்பதற் கான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு மேற்கூடுகளின் வேலையை நிறைவு செய்யும் தொழிற்சாலை 1962-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை இது வரையில் 31—12—1986 வரையில் 19,240 மேற்கூடுகளையும், 75-க்கு மேற்பட்ட வேறுபட்ட வகைகளிலான 17,267 பெட்டிகளையும் தயாரித்துள்ளது. ஏற்றுமதி வணிகத்தைப் பொறுத்த வரையில் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை கடந்த டிசம்பர் திங்கள் வரையில் 346 பெட்டிகளையும், 359 போகிகளையும் (Bogies) ஏற்றுமதி செய்துள்ளது.



இத்தொழிற்சாலை, உற்பத்தி ஆண்டான 1986-87-ஆம் ஆண் டில் 850 பெட்டிகளையும், 1987-88-ஆம் ஆண்டில் 900 பெட்டி களையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. 1987-88-ஆம் ஆண்டிற் கான திட்டத்தில் மின்சார இரயில் பெட்டிகள் (EMU) மோட்டார் பெட்டிகள் தொடர் வண்டிகள், குளிர் வசதியுடன் கூடிய தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள், குளிர் வசதியுடன் கூடிய காம்போசிட் பெட்டிகள், சரக்கறைக் கார்கள் ஆகிய வற்றைத் தயாரிப்பதும் பொதுவான இரண்டாம் வகுப்புப் பெட்டிகள், தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள் ஆகியவற்றைத் தயாரிப்பதும் அடங்கும். இத்தொழிற்சாலை நவீன எந்திரங் களையும் செய்முறைகளையும் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நுட்ப உத்திகளை உயர்த்தி நவீனப் படுத்தல் திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டில் 1,000 பெட்டிகளைத் தயாரிக்கத் திட்ட மிட்டுள்ளது. 1987-88-ல் நவீனப்படுத்தலுக்கான மூலதனச் செலவு ரூ. 15 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### தொழிற்சாலை—ஒரு கண்ணோட்டம்.

| | |
|---|---|
| உற்பத்தி தொடங்கியது .. | 2—10—1955 |
| திட்டச் செலவு .. .. | ரூ. 22.38 கோடி. |
| மொத்தப் பரப்பளவு (தொழிற் சாலையும் நகரியமும்). | 191.3 எக்டேர். |
| கடைகள் அமைந்துள்ள பரப்பளவு. | 1,54,500 சதுர மீட்டர். |
| இணைக்கப்பட்ட மின்பளு | 42,410 எச்.பி. |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 15,589. |
| நிறுவுத் திறன் .. .. | ஆண்டொன்றுக்கு 850 பெட்டிகள். |
| திரண்டுவந்த மொத்த உற்பத்தி (31—12—1986 வரையில்). | வேலை நிறைவு பெறாத மேற் கூடுகள்—19,240. வேலை நிறைவு பெற்ற பெட்டிகள் 17,267. |

[1987 ஏப்ரல் 24

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் 1956 ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட நிறுவனமாகும். இது ஒருங்கிணைந்த தொழில் தொகுதி ஆகும். இதில் பின்வரும் தொழில் பிரிவுகள் அடங்கும் :—

| பிரிவு. | உற்பத்தி செய்யும் பொருள். |
|---|---|
| (அ) திறந்த வகையிலான பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்—2. | லிக்னைட். |
| (ஆ) அனல் மின் நிலையம்—2 .. .. | மின் சக்தி. |
| (இ) உரத் தொழிற்சாலை .. .. .. | யூரியா. |
| (ஈ) நிலக்கரி பாளங்கள் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை. | லீகோ கரி, கல் கரி அதன் துணைப் பொருள்கள். |
| (உ) களிமண் சுத்தப்படுத்தும் ஆலை .. | நிகோலின். |

இச் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி அனல் மின் நிலையத்திற்கும் நிலக்கரி கட்டித் தயாரிப்பு கரிம ஆலைக்கும் மூலப் பொருளாக உள்ளது. இரசாயன ஆலைகளில் பயன்படுத்தத் தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்யவும் மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

தொழிற்சாலையின் நிறுவு திறன் வருமாறு :—

(அ) சுரங்கம் I ஆண்டொன்றுக்கு 6.5 மில்லியன் டன்.

(ஆ) சுரங்கம் II (நிலை I) ஆண்டொன்றுக்கு 4.7 மில்லியன் டன்.

(இ) அனல் மின் நிலையம் I—600 மெ. வா.

(ஈ) அனல் மின் நிலையம் II—நிலை I 3×210 மெ.வா. (2 பிரிவுகள் தொடங்கப்பட்டன).

(உ) உரத் தொழிற்சாலை—ஆண்டொன்றுக்கு 1,29,200 டன் யூரியா.

(ஊ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலை ஆண்டொன்றுக்கு 2,62,000 டன் கல்கரி (கல்கரி லீக்கோக் கரி).



1987 ஏப்ரல் 24]

(எ) களிமண் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை—6,000 டன் களிமண் சுத்தப்படுத்தப்பட்டது.

(ஏ) நிலக்கரி பாளம் தயாரிப்பு மற்றும் கரியாக மாற்றும் ஆலையில் உற்பத்தியாகும் தார்ப் பொருள்களிலிருந்து கீழ்க் கண்ட துணைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன :—

| | ஆண்டுத் திறனளவு. (டன்களில்) |
|---|---|
| 1. தார் .. .. .. .. .. | 29,500 |
| 2. நியூட்ரல் எண்ணெய் .. .. .. | 2,900 |
| 3. கார்பாலிக் அமிலம் .. .. .. | 880 |
| 4. ஆர்த்தோ கிரிசால் .. .. .. | 120 |
| 5. எம். பி. கிரிசால் .. .. .. | 590 |
| 6. கைலினோ .. .. .. .. | 135 |
| 7. எம். வி. பினால் .. .. .. | 290 |

31-12-1986 அன்று உளளபடி முதலீடு/ரூபாய் 1,026.28 கோடியாகும்.

நடப்பாண்டில் சாதனை (1986 ஏப்ரல் முதல் 1987 ஜனவரி வரை).

| | |
|---|---|
| 1. லிக்னைட் (இலட்சம் டன்) .. .. | 65.2 |
| 2. மின்சக்தி (மில்லியன் யூனிட்டுகள்) .. | 3,992.52 |
| 3. யூரியா (டன்) .. .. .. | 1,04,759 |
| 4. கல்கரி (டன்) .. .. .. | 1,52,963 |
| 5. நெக்கோலின் (டன்) .. .. .. | 720 |

(ஆ) இரண்டாவது அனல் மின் திட்டத்தின் முதலாம் பிரிவு (பிரிவு எண் III) 1986 மார்ச்சில் தொடங்கப்பட்டது. இது 1986-87 ஆம் நிதியாண்டிற்கு 1-1-1987 அன்று (அதாவது திட்டமிட்டபடி மூன்று மாதத்திற்கு முன்னரே) மைய மின் அமைப்பின் (CEA's) 690 மில்லியன் யூனிட்டு ஆண்டு இலக்கைக் கடந்தது.

(ஆ) மின் சக்தித் துறை, முதலாம் அனல் மின் நிலையத்திற்குத் தொடர்ந்து மூன்றாவது முறையாக 1985 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திறன் பரிசு வழங்கியது. தொடங்கி 24 ஆண்டுகளாகும் இந்த மின் நிலையத்தில் உள்ள அனைத்தும்

பிரிவுகளும் வேலை நேரத்தில் ஒரு இலட்சம் யூனிட்டிற்கும் மிகை யாக மின்சக்தி உற்பத்தி செய்து மேற்படி பரிசைப் பெற்றிருப்பது மகத்தான சாதனையாகும்.

(இ) சுரங்கங்கள், அனல் மின் நிலையங்கள், உரத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் திறன் பயன்பாடு 4/86 முதல் 1/87 வரையிலான கால அளவில் இலக்கு அளவைவிட 100 சதவீதம் மிகையாக இருந்தது.

## புதிய திட்டங்கள்.

இரண்டாவது சுரங்கம்—நிலை I :

மேற்பரப்பில் படியும் பொருளை அகற்றும் திட்டங்கள் மூன்றும் நல்ல முறையில் செயல்படுகின்றன. சுரங்கத்தை முழுமையாக மேம்படுத்த மேற்பரப்பில் படியும் பொருளை 270 எல்.எம். 3 அளவுக்கு அகற்ற வேண்டும். இவ்வாறு அகற்றும் பணி 1985 ஜூன் மாதத்தில் முடிவடைந்தது. 1986 ஏப்ரல் முதல் ஜனவரி 1987 வரை 186.07 எல். எம். 3 அளவில் மேற்பரப்பில் படியும் பொருளை அகற்றியிருப்பது திட்டமிட்ட இலக்கினைக் காட்டிலும் 55 சதவீதம் கூடுதலாகவே உள்ளது. இச்சுரங்கம் தொடங்கப்பட்டதிலிருந்து 1987 ஜனவரி வரை அகற்றப்பட்ட மேற் பரப்பில் படியும் பொருளின் மொத்த அளவு 632.71 எல். எம். 3 ஆகும்.

லிக்னைட்டு திட்டம் 27–3–1985 அன்று செயற்படத் தொடங்கியது. இது நாள் வரை 11.13 இலட்சம் டன் லிக்னைட் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அனல்மின் உற்பத்தி நிலையம் முதல் கட்டப் பணி :

முதலாவதாக 210 மெகாவாட் திறனுள்ள (யூனிட் III) மின் உற்பத்தி நிலையம் 1986 மார்ச்சில் தொடங்கப்பட்டது. இரண்டாவது பிரிவு திட்டமிட்டதற்கு முன்பாக ஒரு வாரத்திற்கு முன்னதாகவே, அதாவது 6–2–1987 அன்று மேற்படிப் பிரிவுடன் சேர்த்துத் தொடங்கப்பட்டது. மூன்றாம் பிரிவை (யூனிட் I) அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. இது 1988 மார்ச்சில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலாம் பிரிவு 1986 ஏப்ரல் முதல் 1987 ஜனவரி வரையிலான கால அளவில் 530 மி.யூ. உற்பத்தி செய்ய வேண்டுமென்று இலக்கிடப்பட்டிருக்க 811.75 மி.யூனிட்டு உற்பத்தி செய்துள்ளது.



விரிவாக்கத் திட்டங்கள்.

மத்திய அரசு கீழ்க்காணும் விரிவாக்கத் திட்டங்களுக்கு 1983 பிப்ரவரி மாதத்தில் அனுமதி வழங்கியது. உபகரணங்களைத் தயாரிக்கும் பணி நடந்தேறி வருகிறது.

(அ) இரண்டாவது சுரங்கம் நிலை II விரிவாக்கம் 4.7 மெட்ரிக் டன்னிலிருந்து 10.5 மெட்ரிக் டன்னாக அதிகரித்தல்.

(ஆ) இரண்டாவது அனல் மின் நிலையம் நிலை II 630 மெ. வாட்டிலிருந்து 1,470 மெகா வாட்டாக அதிகரித்தல்.

எதிர்காலத் திட்டங்கள் :

பின்வரும் செயல் திட்டங்கள் பற்றிய தொடக்க அறிக்கைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(அ) சுரங்கம் I—(விரிவாக்கம்—6.5 மெட்ரிக் டன்னில் இருந்து 10.5 மெட்ரிக் டன்னாக அதிகரித்தல்).

(ஆ) அனல் மின் நிலையம் I—விரிவாக்கம் 600 மெகா வாட்டிலிருந்து 1,020 மெகா வாட்டாக அதிகரித்தல்.

(இ) சுரங்கம் III—ஆண்டொன்றுக்கு 11.0 மெட்ரிக் டன் லிக்னைட் வெட்டியெடுத்தல்.

(ஈ) அனல் மின் நிலையம் III—1,500 மெகா வாட் (3×500 மெகா வாட்).

(உ) III–வது அனல் மின் நிலையத்திற்கு 400 கே.வி. மின் கம்பித் தொடர்களை அமைத்தல்.

## வேலை வாய்ப்பு.

நடைபெற்று வரும் புதிய செயல் திட்டங்கள் நேரடி மறைமுக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இரண்டாவது சுரங்கத்தையும், இரண்டாவது அனல் மின் நிலையத்தையும் விரிவாக்கும் பணி கூடுதல் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சுமார் 22,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

[1987 ஏப்ரல் 24

இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் :
உதக மண்டலம் :

இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் ஓரளவு தற்சார்பு நிலையை எய்த பெரிதும் முயன்று வந்துள்ளது. மிக நுண்ணிய மாறுபாடுகளையும் பதிவு செய்து காட்டக்கூடிய நிழற்பட பொருள்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்தியாவில் திரைப்படத் தொழிலுக்கு மூலத்திரைப்படச் சுருள்களை முறையாக வழங்குதல் மருத்துவ மனைகளுக்கு எக்ஸ் கதிர்படச் சுருள்களை வழங்குதல், தொழில் ரீதியிலான பொழுது போக்கு ரீதியிலான நிழற்படக் கலைஞர்களுக்கு சிறப்பு நிழற்பட கலைஞர்களுக்கு சிறப்பு நிழற்படி பொருள்களை வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்வது அவசியமாயிற்று. மத்திய அரசு இந்த நோக்கத்துடன், 1960 ஆம் ஆண்டில் இந்துஸ்தான் நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனத்தை அமைத்தது. இந்தியாவில் உள்நாட்டு நிழற்படச் சுருள் தயாரிப்புத் தொழில் தொடங்கப்படும் வரையில் கொடாக், ப்யூஜி, இல்ஃபார்டு ஆர்வோ, அஃபா ஆகிய நிழற்படச் சுருள் தயாரிப்பு நிறுவனங்கள் பிரசித்தி பெற்றிருந்தன. இந்துஸ்தான் நிழற்பட சுருள் தயாரிப்பு நிறுவனம் 1967 ஆம் ஆண்டில் தனது உற்பத்தியைத் தொடங்கியது.

உற்பத்தி அளவு :

இந்நிறுவனம் மிக நுண்ணிய மாறுபாடுகளையும் பதிவு செய்துக் காட்டக்கூடிய நிழற்படச் சுருள்களையும், காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு உதகமண்டலத்திலும், சென்னைக்கு அருகில் அம்பத்தூர் தொழிற்பேட்டையிலும் நிழற்படச் சுருள் தயாரிக்கும் இரண்டு தயாரிப்புத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் உதகமண்டலத்தில் உள்ள முதன்மைத் தொழிற்சாலை, நிழற்படச் சுருள்கள் / காகிதம் தயாரிக்கும் பணியை எல்லா நிலைகளிலும் மேற்கொண்டுள்ளது. அம்பத்தூரில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலை தொழில் எக்ஸ் கதிர் நிழற்படச் சுருளையும் கிராபிக் ஆர்ட்ஸ் நிழற்படச் சுருள்களையும் தயாரிக்கும் பணியை இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களை கொண்டு மேற்கொண்டுள்ளது.

நிறுவுத் திறன் :

இந்நிறுவனம் தொடக்கத்தில் 6.15 மில்லியன் சதுர மீட்டர் திரைப்படச் சுருள்களையும் காகிதங்களையும் உற்பத்தி செய்யும் திறன் பெற்றிருந்தது. 1981–82 ஆம் ஆண்டில் இத் தொழிற்சாலை நவீனமயமாக்கப்பட்டதையும், 1967 ஆம் ஆண்டில் வர்த்தக ரீதியிலான உற்பத்தித் தொடங்கியதிலிருந்து செய்யப்பட்டுள்ள வசதிகளையும் கருத்தில் கொண்டு இந்நிறுவனம் ஒருங்கிணைந்த நிறுவு திறனை 7.673 மில்லியன் சதுர மீட்டர்



1987 ஏப்ரல் 24]

களைத் திருத்தியமைத்தது. நிறுவனம, நிறுவு திறனைத திருத்தி அமைத்த பின்னர். உதகமண்டலத்திலும், சென்னைக்கு அருகில் அம்பத்தூரிலும் உள்ள இந்நிறுவனத்தின் தொழிற் சாலைகளில் ஒருங்கிணைந்த உற்பத்திக்கும், ஜம்போ கன்வர்ஷன் பணிக்கும் ( Jumbo Conversion ) உரிய மொத்த நிறுவு திறன் 15.324 மில்லியன் சதுர மீட்டர்களாக ஆகிறது.

சாதனை :

| (1) | 1985-86 கணக்குகள். (2) | 1986-87 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி இலக்கு. (3) |
|---|---|---|
| உற்பத்தி அளவு (மில்லியன் சதுர மீட்டர்). | 12.277 | 12,500 |
| உற்பத்தி மதிப்பு .. ... (ரூபாய் இலட்சத்தில்). | 10.885 | 12,000 |
| விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 10.606 | 11,900 |
| ஆதாயம் (ரூபாய் இலட்சத்தில்) | 637 | 700 |

முதலீடு :

இந்நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 1,632 இலட்சமாகும். இது தவிர, 31–3–1986 ஆம் நாளன்றுள்ளபடி மத்திய அரசிடமிருந்து நீண்ட காலக் கடனாகப் பெற்ற தொகை ரூ. 1,489 இலட்சம் ஆகும். மேலும் அரசு பங்கு மூலதனம் தொடர்பாக ரூ. 2,200 இலட்சம் வழங்கியுள்ளது. அறிக்கையாண்டில் இது இன்னும் ஒதுக்கப்படாமல் உள்ளது.

வேலை வாய்ப்பு :

31–3–1986 ஆம் நாளன்றுள்ளபடி இந்நிறுவனத்தில் 3,599 பேர் பணிபுரிகின்றனர். அவர்களில் 643 பேர் ஆதி திராவிடர் பழங்குடியினர் ஆவர். இது தவிர, இந்நிறுவனத்திற்கு தேவைப்படும் சிப்பங்கட்டும் பொருட்கள், நுண்ணிய இரசாயனப் பொருள்கள் துணைப் பாகங்கள், ஆகியவற்றிற்காக இந்நிறுவனம் அமைத்துள்ள 30 துணைத் தொழில் பிரிவுகள் மூலம் 1,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு வேறுவகையில் வேலை வாய்ப்பளித்துள்ளது.

**நடப்பு ஆண்டில் சாதனை :**

நடப்பு ஆண்டில் 12,500 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்ய இலக்கு வரையறுக்கப்பட்டிருக்க, 1986 டிசம்பர் வரையில் ரூ. 8,522 இலட்சம் மதிப்புள்ள 8.636 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. அதே போன்று, இக்கால அளவிற்கான விற்பனை ரூ. 8,013 இலட்சம் என இலக்கு வரையறுக்கப்பட்டிருக்க, ரூ. 7,989 இலட்சம் அளவுக்கு விற்பனைச் செய்யப்பட்டது.

**விரிவாக்கற் திட்டம் :**

ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டு மூலதனச் செலவில் அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டப்பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இந்நிலையம் விரைவில் செயல்படத் தொடங்கும்.

**புதிய திட்டங்கள் :**

**காந்த நாடா தயாரிப்புத் தொழிற்சாலை:**

உதகமண்டலத்தில் ரூ. 925 இலட்சம் முதலீட்டில் பல்வேறு வகை, காந்த நாடாக்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது [illegible] ஒத்துழைப்பு பற்றிய இந்நிறுவனத்தின் கோரிக்கைக்கும் அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டம் செயலபடுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிறசாலை 1988 ஆம் ஆண்டு பிற்பகுதியில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பாலியஸ்டர் எக்ஸ் கதிர் கிராபிக் ஆர்ட் படச் சுருள்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் :**

மத்திய அரசு ரூ. 168.12 கோடி முதலீட்டில் பாலியஸ்டர் எக்ஸ் கதிர், கிராபிக் ஆர்ட் படச்சுருள் தயாரிக்கும் பிரிவை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பிற்கு 1986 மார்ச்சில் ஒப்புதலளித்துள்ளது. மேற்படி திட்டப் பணி தொடங்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை 1990–91 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கத் தயாராகி விடும்.





**புகைப்படங்களை எத்து விரைந்து பிரதிகளை வழங்கும் தானியங்கு புகைப்படக் கருவித் தொகுதி :**

உற்பத்திப் பணியைப் பல்திறப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக நிறுவனம் இந்தியாவில் தானியங்கு புகைப்படக் கருவித் தொகுதி தயாரிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தானாகவே படம் எடுத்து செய்முறைப் படுத்தி நான்கு நிமிடங்களில் விரைந்து பிரதிகளை வழங்கும் தானியங்கு புகைப்படக் கருவித் தொகுதிகளை நிறுவனம் விரைவில் விற்பனைக்குக் கொண்டு வரும். இச் சாதனங்கள் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படங்கள் எடுக்கும் தொழிலை மட்டுமல்லாது சிறப்பு நிகழ்ச்சிகளின் போது அல்லது பொழுது போக்கு நிகழ்ச்சிகளின் போது திடீர் புகைப் படங்கள் எடுக்கும் கலையையும் வளரச் செய்யும். இந் நிறுவனம் இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றின் தொழில் நுட்ப உடனுழைப்புடன் இந்தியாவில் இத்தகைய கருவித் தொகுதிகளைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளும்.

**பாரத கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி.**

திருச்சியிலுள்ள உயர் அழுத்தக் கொதிகலன் ஆலை 1960ஆம் ஆண்டிற்கு முன்னரே திட்டமிடப்பட்டு 1965ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது. இந்திய-செக்கோஸ்லேவோக்கியா பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தத்தின் கீழ் செக்கோஸ்லேவோக்கியா ஒத்துழைப்புடன், ரூ. 24.5 கோடி தொடக்க முதலீட்டில் ஆண்டொன்றிற்கு 750 MWC கொதிகலன் உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் வகையில் இத்தொழிற்சாலை வடிவமைக்கப்பட்டது.

இந்த ஆலை குறிப்பிட்ட காலத்திற்குள் அதன் நிர்ணய உற்பத்தித் திறனை எட்டியது. இந்த ஆலை முறையே ரூ. 4.08 கோடி, ரூ. 17.86 கோடி கூடுதல் முதலீடு செய்து தனது உற்பத்தித் திறனை 1,100 மெகாவாட் ஆகவும், பின்னர் 2,500 மெகாவாட் ஆகவும் உயர்த்தும் வகையில், தொடர்ந்து விரிவாக்கத் திட்டங்களை மேற்கொண்டது.

இந்த ஆலை தனது உற்பத்தித் திறனை ஆண்டொன்றிற்கு 4,000 MWC ஆக உயர்த்தும் வகையில் ரூ. 35.48 கோடி முதலீடு செய்து அடுத்தக் கட்ட விரிவாக்கப்பணி முடிக்கப்பட்டது. கொதிகலன் ஆலைகளின் துணைப்பாகங்கள் தயாரிப்பதற்காக ரூ. 32.80 கோடி அளவில் முதலீடு செய்து, ஒரு புதிய ஆலை வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில் தொடங்கப்பட்டது. புதிய ஆலை துணைப் பாகங்களை உற்பத்தி செய்கிறது. திருச்சி ஆலை கொதிகலன்கள் தயாரிப்பதில் முழுக் கவனம் செலுத்துகின்றது.

[1987 ஏப்ரல் 24

இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குப் பதிலாக அதற்கிணையாக வேறு பொருட்களைத் தயாரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக ரூ. 58.2 கோடி முதலீட்டில் பற்றவைப்பு இணைப்பில்லாத உருக்குக் குழாய் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இப்போது இத் தொழிற்சாலை வணிக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கி உள்ளது.

திருச்சியில் தொழிலக வால்வுகள் ( Valves ) தயாரிப்பதற்கான தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ரூ. 5.67 கோடி முதலீட்டின் மூலம் உயர்த்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (UNIDO) உதவியுடன் உலோக பற்றவைப்பு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந் நிறுவனம் உலோகப் பற்றவைப்பில் புதிய வழி முறைகள் செய்முறைகள் கருவிகள் ஆகியவற்றை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்துகிறது.

இங்கு 5,100 குடியிருப்புகளுடன் ஏற்படுத்தப்பட்ட நகரியம் ஒன்று உள்ளது. நகரியத்தில் செய்யப்படும் முதலீடு ரூ. 11 கோடியாகும். ரூ. 2 கோடி முதலீட்டில் 190 குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுத் துறை நிறுவனங்கள் நலம் பேணும் கொள்கையைக் கருத்தில் கொண்டு, 'பெல்' நிறுவனம் எளிய சிக்கலில்லாத வகைப் பொருள்களைத் தயாரிக்கும் சிறு தொழிற்சாலைகளின் வளர்ச்சியைப் பேணி வந்துள்ளது.

திருச்சியிலுள்ள பாரத கனரக மின் நிறுவனத்தில் 18,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். திருச்சி பாரத கனரக மின் நிறுவனத்தின் பயிற்சி நிலையம், மனித ஆற்றலை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. 'பெல்' நிறுவனம் உழைப்பவர்கள் தொடர்பான உடல் நலப் பிரச்சினைகளைக் கவனிப்பதில் முன்னோடியாக விளங்குகிறது. அந்த வகையில் அது தன்னுடைய வளாகத்திலேயே "உழைப்பவர் உடல் நலப் பணிகள் மையத்தை" ஏற்படுத்தியுள்ளது. (Occupational Health Service Centre) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிதியின் மூலம் கிடைத்த இடு பொருள்கள் வாயிலாகப் பெற்ற 638,000 டாலர்களைக் கொண்டும் மத்திய அரசின் (பெல்) மூலம் கிடைத்த இடு பொருள்கள் வாயிலாகப் பெற்ற ரூ. 102 இலட்சத்தைக் கொண்டும் "உழைப்பவர் உடல் நலம் பணிகளுக்கான மாதிரி மையம்" ஒன்று ஏற்படுத்தப்பட்டது.



1987 ஏப்ரல் 24]

துணை/சிறு தொழிற் பேட்டை 1969ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 'பெல்' நிறுவனத்தின் துணை/சிறு தொழில் பிரிவுகள் இன்று சுமார் 12,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளித்துள்ளன. அன்று அதாவது 1969–ஆம் ஆண்டில் 200 பேருக்கு வேலை வாய்ப்பளித்தது. துணை/சிறு தொழில் பிரிவுகள் அண்டை மாவட்டங்களான தஞ்சாவூரிலும் புதுக்கோட்டையிலும் உருவாகியுள்ளன. துணை/சிறு தொழில் பிரிவுகளின் வளர்ச்சி 'பெல்' நிறுவனப் பணிகளின் விரைந்த வளர்ச்சிக்கு ஒத்ததாக உள்ளது.

திருச்சி'பெல்' நிறுவனத்தின் பணிகள் 1967-68ஆம் ஆண்டில் ஆதாய-இழப்பற்ற நிலையை எய்தின. 1986–87 ஆம் ஆண்டுக்கான திட்டச் சாதனை விவரம் வருமாறு :

| | கொதிகலன்களும் துணைப் பாகங்களும். | எஃகு குழாய்கள். |
|---|---|---|
| திட்ட இலக்கு (மெ. டன்களில்) | 1,60.157 | 17,000 |
| நிதி (ரூ. இலட்சத்தில்) .. | 69,624 | 4,445 |
| 1986 டிசம்பர் வரை சாதனை : | | |
| திட்ட இலக்கு (மெ. டன்களில்) | 1,05,581 | 9,386 |
| நிதி (ரூ. இலட்சத்தில்) .. | 42,756 | 2,744 |

'பெல்' நிறுவனம் சமூக விழிப்புணர்வைக் காட்டி வருவதுடன் சமுதாயப் பணியினையும் ஆற்றி வருகிறது. இந்நிறுவனம் அருகிலுள்ள நான்கு கிராமங்களான கிருஷ்ண சமுத்திரம், காந்தளூர், தோகூர், கீழகுறிச்சி ஆகியவற்றை பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் தத்து எடுத்துக் கொண்டு அங்கு பள்ளிக் கட்டிடங்கள், சமுதாய நல்வாழ்வுக் கூடங்கள் தெருவிளக்குகளாகியவற்றை அமைத்ததன் மூலம், அக்கிராமங்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளது. அண்மையில் திருச்சி "பெல்" நிறுவனம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அருகிலுள்ள கீழக்குறிச்சி கிராமத்தில் சூரிய வெப்ப ஆற்றலால் இயங்கும் தெருவிளக்குகளை அமைத்துள்ளது. இந் நிறுவனம் சூரிய வெப்ப ஆற்றலால் இயங்கும் காற்றாலைகள், நீரேற்று பொறிகள் ஆகியவற்றையும் வானொலி, தொலைக்காட்சி ஆகிய செய்தித் தொடர்பு வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. திருச்சி "பெல்" நிறுவனம், அப்பகுதியில் பணி புரியும் மகளிர் பாதுகாப்புக்காக வசதியுடன், தங்குவதற்கு தன்னுடைய நகரியத்தில் "பணிபுரியும் மகளிர்" இல்லம் ஒன்றைக் கட்டியுள்ளது.

[1987 ஏப்ரல் 24

**சென்னை எண்ணெய் சுததிகரிப்பு ஆலை, மணலி.**

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மணலியில் 1980-ல நிறுவப்பட்டது.

இதன் தொடக்க நிறுவு திறன், ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் டன் குரூட் எண்ணெய் சுத்திகரிக்கும் வகையில் இருந்தது. உள்நாட்டில் கிடைக்கக் கூடிய பொருள்களைப் பயன்படுத்தி, 43 கோடி ரூபாய் மொத்தச் செலவில் 1969 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை கட்டுமானப் பணி முடிக்கப்பட்டது. இந்த ஆலை 1969ஆம் ஆண்டு தொடக்கத்தில் தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலை தொடங்கப்பட்டதிலிருந்து பெட்ரோலியம் பொருள்களுக்கு அதாவது மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய், அதிவேக டீஸல், மிதவேக டீஸல், ஆஸ்பால்ட், ஊதுலை எண்ணெய் வகைகள், மசகெண்ணெய், சமையல் எரிவாயு, நாப்தா முதலியன போன்றவற்றிற்கு இம் மாநிலத்தின் முழுத் தேவைகளும், சுத்திகரிப்பு ஆலையின் உற்பத்திப் பொருள்களிலிருந்து நிறைவு செய்யப்பட்டன.

உற்பத்தித் தடை நிலைகளை நீக்க நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொள்வதன் மூலமும், சில சமச்சீர் சாதனங்களை நிறுவுவதன் மூலமும் 2.5 மில்லியன் டன்னாக இருந்த நிறுவு திறன், பின்னர் 2.8 மில்லியன் டன்னாக உயர்த்தப்பட்டது. இச் சுத்திகரிப்பு ஆலை பின்னர் ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன் அளவிற்கு அதன் திறனை இருமடங்காக்கியுள்ளது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, 17.74 கோடி ரூபாய் செலவில் 1984-ல் பாரபின் மெழுகு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கியது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மெழுகை சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நேரிடையாகவே விற்பனை செய்கிறது. தமிழ்நாட்டில் தீப்பெட்டிகள் மெழுகுவத்திகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்காக தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் பிரிவுகளால் பயன்படுத்தப்படுகிற தீப்பெட்டி மெழுகு, நிர்ணய தர மெழுகு முதலியவற்றிற்காக சென்னை எண்ணெய் சுத்தகரிப்பு ஆலையின் விநியோகஸ்தர்களாக சிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

இரசாயனப் பொருள்களைப் பொடியாக்கும் திரவ ஊக்கி தயாரிப்புப் பிரிவு (FCCU ) 1985 மார்ச்சில் அட்டவணையிட்டபடி தொடங்கப்பட்டு இவ்விரிவாக்கத் திட்டம் நிறைவு செய்யப்பட்டது. இவ்விரிவாக்கத்தின் மூலம் இடையில் வடித்தெடுக்கப்பட்ட பொருள் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 1.1 மில்லியன் டன்னிலிருந்து 2.7 மில்லியன் டன்னாக உயரும் திரவ பெட்ரோலிய வாயு (சமையல் எரிவாயு) உற்பத்தி ஆண்டொன்றிற்கு 47,000 டன்களிலிருந்து 1,15,000 டன்னாக உயரும்.



1987 ஏப்ரல் 24]

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை விரிவாக்கத் திட்டம் இரு கட்டங்களில் முடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி சம்பந்தப்பட்ட மனையிடத்துடன் குருட் எண்ணெய்ப் பிரிவு அமைப்பதாகும். இப்பணி 29-10-1984-ல் செயல்படத் தொடங்கியது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணி அதாவது (F.C.C.) பிரிவு 29-3-1985-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு சுமார் 170 கோடி ரூபாய் ஆகும்.

புதிய திட்டங்கள்.

(அ) மசகெண்ணெய் உற்பத்தி விஸ்தரிப்பு :

மசகெண்ணெய் அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உற்பத்தித்திறனை ரூபாய் 110.60 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு சுமார் 270,000 டன்னாக (ஆண்டொன்றுக்கு 50,000 டன் நிலையான இருப்பு (Brigh: Stock) உட்பட) விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டப் பணியைச் செயற்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) புரோபைலின் உற்பத்தி :

ஆண்டொன்றுக்கு சுமார் 16,000 டன் முதல் 17,000 டன் உற்பத்தி செய்ய ரூபாய் 13.8 கோடி மதிப்பீட்டுச் செலவில் புரோபைலின் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றினை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இச்செயற் குறிப்பிற்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளது. இத்திட்டப்பணி 1988 மத்தியில் முடிக்கப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. கரைமங்களையும், ஏனைய இரசாயனப் பொருள்களையும் தயாரிக்க பல துணைப் பொருள் தயாரிப்புத் தொழில்களுக்கு புரோபைலினை மூலப் பொருளாகப் பயன்படுத்தலாம்.

(இ) லீனியர் ஆல்கைல் பெஞ்சேன் உற்பத்தி :

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் மண்ணெண்ணெய் இருப்பைப் (Kerosene Fuel Stock) பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 50,000 டன் லீனியர் ஆல்கைல் பெஞ்சேன் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு (டிட்கோ/ஸ்பிக்) கூட்டு முயற்சி உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தேவையான ஒப்புதல்கள் பெறப்பட்டு, இத்திட்டம் தொடர்பான பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பெட்ரோலியப் பொருள்கள் உற்பத்தி நிறுவனத்திற்குத் தேவையான இருப்பை பொருளை அளித்து, பாரபின்ஸ் மெழுகுகளை வடித்தெடுத்த பின்னர், கிடைக்கும் துணைப் பொருள்களை மீண்டும் பெறுவதற்குத் தேவையான வசதிகள் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 1987 அக்டோபரில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

[1987 ஏப்ரல் 24

(ஈ) நறுமணப் பொருள்கள் உற்பத்தி :

மணலியில் நறுமணப் பொருள்கள் உற்பத்தியைத் தொடங்குவதற்காக மத்திய அரசு, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு முன் அனுமதிக் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு சுமார் 600 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் அன்னியச் செலாவணி சுமார் 180 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க 42 திங்கள் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தில் சைலீன்ஸ் தொழிற்பிரிவும், சுத்திகரிக்கப்பட்ட பட்ட 'டெரிப்தாலிக்' அமிலத் தொழிற்பிரிவும் அடங்கும். ஆண்டொன்றுக்கு சுமார் 105,000 டன் "பாரா சைலீன்" 30,000 டன் "ஆர்த்தோ சைலீன்" சுமார் 10 முதல் 15 ஆயிரம் டன் "பென்சீன்" ஆகியவை "சைலீன்" தொழிற்பிரிவில் உற்பத்தி செய்யப்படும்.

"சுத்திகரிக்கப்பட்ட டெரிப் தாலிக் அமிலம்" பிரிவு (PTA) ஆண்டொன்றுக்கு சுமார் 15,000 டன் சுத்திகரிக்கப்பட்ட டெரிப் தாலிக் அமிலம் தயாரிப்பதற்காக சைலீன் பிரிவில் தயாராகும். பாரா சைலீனை வரையறுக்கப்பட்ட அளவிற்குப் பயன்படுத்துகிறது. செயற்கையிழை ஸ்டேபில் இழை Polyster Strapple (Fibfre PSF) பாலியஸ்டர் நூல் இழை Polyster Filament ஆகியவற்றிற்கான முக்கிய கச்சாப் பொருள் சுத்திகரிக்கப்பட்ட டெரிப்தாலிக் அமிலமேயாகும்).

(உ) காவிரி ஆற்றுப் படுகையில் எண்ணெய் எரிவாயு ஆகியவை கிடைக்குமென்று அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டதால் மேற்சொன்ன கச்சாப் பொருள்களை எரிபொருளாக மாற்றிப் பயன்படுத்தவும் பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் உற்பத்திக்குப் பயன்படுத்துவது பற்றியும் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. தொடக்க ஆய்வுப் பணிகள நடைபெற்று வருகின்றன.

(ஊ) தற்போதுள்ள ஊதுலைகளைச் சீரமைத்தல் :

எரி சக்தி பாதுகாப்புத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் ஒரு பகுதியாகத் தற்போதுள்ள ஐந்து 'செய்முறைப்படுத்தும் சூடாக்கும் கருவிகளை அவற்றின் அனல் திறனை சுமார் 85 முதல் 90 சதவீதம் உயர்த்தும் வகையில் அவற்றின் தற்போதைய அளவான 60 முதல் 65 சதவீதத்திற்கு சீரமைக்க கருதப்பட்டுள்ளது. தற்போதுள்ள சுருள் வகை "விஸ்பிரேக்கர்"ருக்கு பதிலாக "ஸோக்கர் விஸ்பிரேக்கர்" என்கிற புதிய தொழிலைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.



1987 ஏப்ரல் 24]

(எ) ஹெலேன் தயாரிப்பு :

பழைய எண்ணெய சுத்திகரிப்பு ஆலையில் இறக்குமதி செய்யப்பட்ட பாரசீக நாட்டு சுத்தம் செய்யப்படாத எண்ணெயைச் செய்முறை படுத்துகையில் கிடைக்கின்ற கற்பூரத் தைலத்திலிருந்து (Naphtha) ரூ. 8.8 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு ரூ. 25,000 டன் " புட்கிரேட் ஹெலேன் தயாரிப்பதென்று கருதப்பட்டுள்ளது.

(ஏ) எரிவாயு (Flare Gas) சேகரிப்பு :

பயன்படுத்துகையில் வீணாகும் எரிவாயுவை மீண்டும் எரிவாயுவாகப் பயன்படுத்தும் பொருட்டு ரூ. 1.95 கோடி மதிப்பீட்டுச் செலவில் திட்டம் ஒன்றை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்கினால் ஆண்டொன்றிற்கு 3,600 டன் எரி எண்ணெய் மீதமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ) ஆராய்ச்சி—வளர்ச்சி மையம் :

அரிய அளவு சாதனைக்குக் கிடைக்கக் கூடிய பயனை முன்னரே அனுமானிக்கும் பொருட்டு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை பெற்றுக் கொண்ட தூய்மை செய்யப்படாத எண்ணெயைப் பகுப்பாய்வு செய்தல் துணைப் பொருள் தொழிற்சாலைகளை அமைத்து இயன்றவரை பயன்படுத்தும் பொருட்டு துணைப் பொருட்களை விரிவாக ஆய்வு செய்தல், பல்வேறு செயல்முறைகளுக்கான கிரியா ஊக்கிகளை மதிப்பிடுதல் "ப்ளுயுட் கெட்டாலிட்டிக் கிராக்கின் யூனிட்" டுக்கான முக்கிய தொழிற்சாலை வசதிகளைச் செய்தல் ஆகிய வசதிகளுடன் கூடிய ஆராய்ச்சி — வளர்ச்சி (R and D centre) மையம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஒ) நவீன கட்டுப்பாட்டு முறையும் உரிய அளவு பயனடைதலும் :

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலுள்ள புதிய சுத்திகரிப்பு பிரிவு, நவீன கணக்கிடும் கருவி முறையிலானதாகும் (டிஜிட்டல் முறை). இதில் மேற்பார்வையிடும் கணக்கிடும் பொறியும் உள்ளது. இத்தகைய நவீன முறையால், சில நவீன தொழில் முறைக் கொள்கைகளைச் செயலாக்கக் கருதப்பட்டுள்ளது. இதன் விளைவாக சுத்திகரிப்புப் பணி உரிய அளவு நடைபெறும். மேலும் வடிசாலைத் துணைப் பொருட்கள் அதிக அளவு கிடைப்பதுடன் அதிக மதிப்புள்ள ஏனைய பொருட்களும் கிடைக்கும். இவை தவிர எரிசக்திப் பயன்பாடும் குறையும். இதனால் ஒட்டுமொத்தமாக அதிக ஆதாயம் கிடைக்கும். இதன் பொருட்டு, அமெரிக்க நாட்டு செட்பாயின்ட் நிறுவனத்திடமிருந்து உயரிய தொழில் நுட்ப கணக்கிடும் பொறிக்கான இடுபொருட்கள் வாங்கப்பட்டு வருகின்றன.

1986-87-ல் சாதனை :

1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையில் கிடைத்த தற்காலிகப் புள்ளி விவரங்களின்படி 1986-87 ஆம் ஆண்டில் சாதனை மனநிறைவளிப்பதாக உள்ளது. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளுடன் முடிவடைந்த ஒன்பது மாத கால அளவில் குரூட் எண்ணெய் உற்பத்தி 3.8 மில்லியன் டன்னாகும். இக்கால அளவில் விற்பனையில் கிடைத்த தொகை சுமார் 817 கோடியாகும். வரி விதிப்பதற்கு முன்னர் கிடைத்த தற்காலிக ஆதாயத் தொகை சுமார் 18 கோடியாகும்.

கருவூலத்திற்குக் கிடைத்த தொகை :

பணி தொடங்கிய முதலாண்டு முதல் செலுத்தப்பட்ட மொத்த ஆதாயப் பங்கு 207.5 சதவீதமாகும்.

இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையால், மாநிலக் கருவூலத்திற்குக் கணிசமான அளவு பயன் கிடைத்துள்ளது. இம் மாநிலம் விற்பனை வரி வசூல் மூலமாக நாளது வரையில் ரூ. 191.90 கோடி ஈட்டியுள்ளது. நடப்பு விலையில், இக் கணக்கில் உள்ள வருவாய் ரூ. 6.46 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சென்னை சுத்திகரிப்பு ஆலை, பெட்ரோலியப் பொருட்களைத் தொடர்ந்து ஒரே சீராக இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கும் ஏனைய நுகர்வோருக்கும் வழங்கி வருகின்றது. இது பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து சுமூகமாக நடைபெறப் பெரிதும் உதவுகிறது.

சென்னை உரத் தொழிற்சாலை, மணலி.

சென்னை உரத் தொழிற்சாலை பொதுத் துறை நிறுவனமாகும். இதன் 67 சதவீதம் பங்கு மத்திய அரசும் 33 சதவீதம் பங்கு தேசீய இராணியன் எண்ணெய் நிறுவனமும் வைத்துள்ளன. முதலில் சென்னை, உரத் தொழிற்சாலை மத்திய அரசாலும், அமோகோ இந்தியா இன்கார்ப்போரேட்டர் நிறுவனத்தாலும் வளர்ச்சி அடைந்தது. பின்னர், தேசீய இராணியன் எண்ணெய் நிறுவனம் இதில் ஒரு பங்குதாரராகச் சேர்ந்தது. அண்மையில் அமோகோ இந்தியா இன்கார்ப்பரேட்டட் நிறுவனம் சென்னை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தன்னுடைய பங்கு முழுவதையும் அளித்து விட்டது. மத்திய அரசும் தேசீய இராணியன் எண்ணெய் நிறுவனமும் அமோகோ இந்தியா இன்க் நிறுவனமும் வைத்திருந்த எல்லாப் பங்குகளையும் வாங்கியுள்ளன.



இந்த ஆலை, சென்னை அருகே மணலியில் அமைந்து உள்ளது. இந்த ஆலை நாளொன்றுக்கு 750 மெட்ரிக் டன் அம்மோனியா, 885 மெட்ரிக் டன் யூரியா, 1,800 மெட்ரிக் டன் N.P.K. உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை கட்டுமானம் எந்திரம் நிறுவும் பணி 1967 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1971 ஆம் ஆண்டின் இடையில் முடிக்கப்பட்டது. சென்னை உரத் தொழிற்சாலை 1-11-1971 அன்று வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

ஆலையின் செயல் திறன் :

சென்னை உரத் தொழிற்சாலை உற்பத்தித் திறன் அதன் வணிகப் பணிகள் தொடங்கப்பட்டதிலிருந்து கணிசமான அளவுக்கு சிறப்பாக உள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் சென்னை, உரத் தொழிற்சாலையின் உற்பத்திப் பணிகள் குறித்த விவரங்கள் வருமாறு :—

| | 1981-82. | 1982-83. | 1983-84. | 1984-85. | 1985-86. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| விற்பனை செய்யத் தக்க பொருள்கள் (1,000 மெட்ரிக் டன்) .. | 696 | 688 | 522 | 720 | 618 |
| திறன் பயன்பாடு (சதவிதம்) | 101 | 99 | 80 | 104 | 89 |

பாதுகாப்பு :

அமெரிக்காவிலுள்ள மான்சடோ கெமிக்கல்ஸ் நிறுவனம் எய்திய '' விபத்துக்களில்லாத 11.71 மில்லியன் மனித உழைப்பாற்றல் மணி நேரங்கள் பணிபுரிந்திருத்தல் என்ற உலக சாதனையை சென்னை உரத் தொழிற்சாலை 18-4-1980 அன்று முறியடித்து அதனை மிஞ்சியது. இந்த உலக சாதனையைத் தொடர்ந்து இந்த ஆலை விபத்துக்களில்லாத 19.8 மில்லியன் மனித உழைப்பாற்றல் மணி நேரங்கள் (390 நாட்கள்) என்ற குறிப்பிடத்தக்க சாதனையை 5-11-1983 அன்று எய்தியது. 28-8-1984 அன்று புதிதாகத் தொடங்கப்பட்ட சென்னை, உரத் தொழிற்சாலை பாதுகாப்பு சாதனைப் பதிவு 31-3-1986 நாள் நிலவரப்படி விபத்துக்கள் இல்லாத 3.9 மில்லியன் மனித உழைப்பாற்றல் மணி நேரங்களை எட்டியது.

**விற்பனை வழங்கல் :**

சென்னை உரத் தொழிற்சாலையின் பொருள்கள் ''விஜய்'' என்ற வாணிகப் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றன. இந் நிறுவனம் தன்து உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் தானே நேரடியாக விற்பனை செய்கிறது. இந் நிறுவனம் எங்கு தன் பொருள்களை அறிமுகப்படுத்தினாலும், அவை வெற்றிகரமாக விற்பனையாகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் விற்பனை சாதனை 7.8 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். (உரத் தொகுப்பு உட்பட) இச்சாதனையளவு இதுவரை எட்டிய சாதனைகளின் சிகரமாகும். கடந்த ஐந்தாண்டுகளாக இந் நிறுவனத்தின் விற்பனை செயல் திறன் வருமாறு :—

| 1981-82. | 1982-83. | 1983-84. | 1984-85. | 1985-86. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 631 | 641 | 665 | 720 | 780 |

தொழில் உறவுகள் :

சென்னை உரத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்களின் மொத்த எண்ணிக்கை 1,350 ஆகும். இந்நிறுவனம் தன்னுடைய பணியாளர்களுக்குப் பல பயன்களையும் வசதிகளையும் அளித்துள்ளது. இது மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடுகையில் மிகச் சிறந்ததாகும். தொழிலாளர்-தொழிலதிபர் உறவுகள் தொடர்ந்து சுமூகமாக உள்ளன.

நிதிப் பயன் விளைவுகள் :

சென்னை உரத் தொழிற்சாலையின் நிதிப்பயன் விளைவுகளும் மற்ற சாதனைகளைப் போலவே சிறப்பாக அமைந்துள்ளது. இந் நிறுவனம் 1973-74 ஆம் ஆண்டிலிருந்து அதாவது வணிக வகையில் உற்பத்திப் பணியைத் தொடங்கிய மூன்றாம் ஆண்டிலிருந்து ஆதாயம் ஈட்டியுள்ளது. 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆதாயம் ஈட்டிவந்த பின்னர் இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக 1985-86 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் பணிகள் ஆதாயம் தரத்தக்கதாக இல்லை.



தேசிய கருவூலத்திற்குக் கிடைத்த தொகை :

1985-86 ஆம் ஆண்டில் சென்னை உரத் தொழிற்சாலை தேசிய கருவூலத்திற்கு அளித்த தொகை ரூ. 29 கோடியாகும். இந் நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தேசிய கருவூலத்திற்கு அளித்துள்ள மொத்தத் தொகை ரூ. 282 கோடியாகும்.

படைக்கலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி :

இத் தொழிற்சாலை 3-7-1966 அன்று தொடங்கப்பட்டது. சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக இத்தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இத் தொழிற்சாலையில் சுமார் 2,414 பேர் பணி புரிகின்றனர்.

சேலம் உருக்காலை, சேலம்.

சேலம் உருக்காலை, மத்திய அரசு நிறுவனமான இந்திய உருக்காலை நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். ( SA1 ) 2,20,000 டன் எவர்சில்வர், மின் உருக்குகள், ஏனைய தனி உருக்குகள் ஆகியவற்றை இரு நிலைகளில் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றினை அமைக்க உள்ளதென்று சேலம் உருக்காலை தனது விரிவான திட்ட அறிக்கை குறிப்பிடுகிறது. ஆனால், இத்திட்டத்தைத் தொடங்குவதற்கு இத்திட்டத்தின் முதல் கட்டப்பணிக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது. முதற்கட்டப் பணி 13–9–1981 அன்று தொடங்கப்பட்டது. வணிக அளவிலான உற்பத்தி 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தொடங்கப்பட்டது

இந்த முதல் கட்டப் பணியில் இந்த ஆலை, ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர்சில்வர் மென் உருக்குத் தகடுகள், சுருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டுள்ளது. தற்சமயம் உருக்குப் பட்டைகள், இடுபொருட்கள் ஆகியவை இறக்குமதி செய்யப்படுகின்றன. மூலப்பொருட்களை உள் நாட்டிலேயே பெறுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேலை வாய்ப்பு.

இத் தொழிற்சாலை முதற் கட்டத்தில் 1,295 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திறன் கொண்டுள்ளது. 1–1–1987 ஆம் நாள் நிலவரப்படி இந்த ஆலையில் உற்பத்திப் பிரிவு பராமரிப்பு, கட்டுமானம், பொது நிருவாகப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சி பெறுபவர்கள் உட்பட 1,197 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

[1987 ஏப்ரல் 24

பணியிடத்தில், கட்டுமான காலத்தில் பணி நிலையில் [illegible] பெற்றுக் கொண்டிருக்கையில் சுமார் 4,000—6,000 பேர் பணி புரிந்தனர்.

**நிதி நிலை :**

இத் தொழிற்சாலையின் முதற்கட்டப்பணிக்கான மூலதனச் செலவு 181.19 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகையில் 1986 டிசம்பர் திங்கள் வரை 179 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

**உற்பத்தி :**

இத் தொழிற்சாலை திட்டமிட்டவாறு 1981 செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டு, இந்நாட்டின் தொழில் பிரிவுகளுக்கும் வீட்டுப் பயனுக்கும் தேவையான எவர்சில்வர் கலங்களைத் தயாரித்து நல்ல விளைவை ஏற்படுத்தியுள்ளது.

இத் தொழிற்சாலை தொடங்கப்பட்டதிலிருந்து 1986 டிசம்பர் வரை, 77,691 டன் உற்பத்தி செய்துள்ளது. மேலும் இத்தொழிற்சாலை, இத்தகைய அனைத்து ரக உலோகங்களையும் தரப்படுத்தி பணி நிறைவு செய்து பல்வேறு பருமன்களில் அவற்றை தயாரிப்பதில் திறம்பட செயலாற்றி வருகிறது. AISI 309, 309 தரங்கள் கொண்ட ஆஸ்டெனிடிக் எவர் சில்வர் பொருள் 1986 செப்டம்பரில் முதன் முறையாக இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டன.

இரசாயனத் தொழிற்சாலை சாதனம், பஞ்சாலை எந்திரங்கள், பால் பண்ணை இரசாயன உர உற்பத்திச் சாதனங்கள் முதலியவை போன்ற பல்வேறு சாதனத் தயாரிப்பாளர்களின் வதவைக் குறியீடுகளையும் இந்தப் பொருள்கள் நிறைவு செய்தோய் அமைந்துள்ளன.



1987 ஏப்ரல் 24]

கடந்த மூன்றாண்டுகளிலும், நடப்பாண்டில் 1986 டிசம்பர் திங்கள் வரையிலும் உற்பத்தி இலக்கும், இலக்கு எய்தப்பெற்ற சதவீதமும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| ஆண்டு. | உற்பத்தி. | நிறைவேற்றிய சதவீதம். |
|---|---|---|
| (1) | (2) (டன்களில்.) | (3) |
| 1983–84 .. .. .. .. | 6,934 | 73 |
| 1984–85 .. .. .. .. | 17,127 | 102 |
| 1985–86 .. .. .. .. | 24,373 | 113 |
| 1986–87 .. .. .. .. (1986 டிசம்பர் வரை) | 19,296 | 101 |

1986–87 ஆம் ஆண்டிற்கான இலக்கு 26,000 டன்னாகும். இது பயன்காட்டுத் திறன் 10.3 சதவீதத்திற்கு நிகரானதாகும்.

**நகரியம் :**

இத்தொழிற்சாலைக்கருகில், 785 வீடுகள் அடங்கிய நவீன நகரியம் ஒன்று கட்டப்பட்டது. இக்குடியிருப்புப் பகுதிகளில் 18 படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவமனை தற்போது விரிவுப் படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கப்பள்ளி நல நிலையம், கடைத் தொகுதி போன்ற குடியிருப்பு அல்லாத கட்டிடங்களும் அடங்கும்.

இந்நகரியம் உருக்கு சுரங்கங்கள் அமைச்சகத்தின் முன்னாள் மத்திய அமைச்சரான திரு. மோகன் குமாரமங்கலத்தின் பெயரில் ''மோகன் நகர்'' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**உற்பத்தித் திறனைப் பெருக்குதல் :**

எவர்சில்வர் உருக்கிற்குப் பெருகிவரும் கணிசமான அளவுத் தேவையை எதிர்பார்த்தும், இத்தொழிற்சாலையின் நிறுவு வசதிகளை முற்றிலுமாகப் பயன்படுத்துவதைக் கருத்திற் கொண்டும், 21.55 கோடி ரூபாய்க்கு FE துணைப் பாகங்கள் உட்பட 61.68 கோடி ரூபாய் மதிப்பீடு செலவிலும், இரண்டாம் சென்ட்ஸிமிர் ஆலை ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசிடமிருந்து அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், அனுமதி கிடைக்கப்பெற்ற நாள்

லிருந்து 42 திங்களுக்குள் இத்திட்டம் முடிக்கப்படும். தொடங்கப்படவுள்ள இரண்டாம் சென்ட்சிமிர் ஆலை நிறுவப்பட்ட பின்னர், எவர்சில்வர் உருக்குத் தகடுகள், பட்டைகள் முதலியவற்றின் உற்பத்தி ஆண்டிற்கு 65 ஆயிரம் டன்னிற்கு இரட்டிப்பாக்கப்படும்.

மூலப்பொருள்களை உள்நாட்டிலேயே கிடைக்கச் செய்தல் :

தற்போது வெளிநாட்டிலிருந்து சேலம் உருக்காலை இறக்குமதி செய்யும் உருக்குச் சுருள்களை உள்நாட்டிலேயே கிடைக்க, அரக்கோணம் உருக்காலை நிறுவனத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கப்பணி வகை செய்யும். அரக்கோணம் உருக்குத் தொழிற்சாலை, பொக்காரோ மற்றும் சேலம் உருக்குத் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கப்பெறும் எவர்சில்வர் உருக்குச் சுருள்களை செய்முறைப்படுத்தும் பொருட்டு, சேலம் உருக்காலையில் 1.15 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கூடுதல் வசதிகள் சில செய்யப்பட்டுள்ளன.

இராணிப்பேட்டை பாரத கனரக மின் நிறுவனம்.

(கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை).

இத்தொழிற்சாலை வட ஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் 32.80 கோடி ரூபாய் முதலீட்டுத் தொகையுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன், சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புக்ம இயந்திரம் திருச்சியிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

மின் துறையில், தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் தரமான சாதனம், மின் திட்டம், பணி ஆகியவற்றை வழங்கும் மிகச் சிறந்த நிறுவனம் என்ற நிலையை எய்துவதும், அதே நிலையைப் பாதுகாப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். மின் துறை தொழில் போக்குவரத்துத் துறைகளில் பயன்படுத்துவதற்கு மின் சக்தியை மாற்றுதல், கொண்டு செல்லுதல், பயன்படுத்துதல், பாதுகாத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். தொழில் நுட்ப வகையில் மேம்பாடடைவதும், அங்காடியில் தனித்தன்மை பெற்று விளங்குவதும் இதன் நோக்கமாகும்.





திறன் உற்பத்தி.

| இனம். | திறன். (மெ. டன்னில்.) | | உற்பத்தி. (மெ. டன்னில்.) | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | 84–85 | 85–86 | 84–85 | 85–86 |
| (உற்பத்திப் பொருள்) கொதிகலன் நிலைய துணைப் பாகங்கள். | 57,000 | 57,000 | 38,697 | 47,065 |

| இனம். | உற்பத்தி மதிப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) | | ஏற்றுமதி. | |
|---|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) | (9) |
| | 84–85 | 85–86 | தரம். | மதிப்பு. |
| (உற்பத்திப் பொருள்) கொதிகலன் நிலைய துணைப் பாகங்கள். | 8,023 | 11,995 | .. | .. |

* ஒப்பந்தங்களும் (ஏற்றுமதிக்கானவை) சேர்க்கப்பட்டுள்ளன.

| | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | ஏனையோர். | மொத்தம். |
|---|---|---|---|---|
| | நிருவாகத்தினர். | மேற்பார்வையாளர்கள். | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) 1984–85 | 238 | 502 | 1,263 | 2,003 |
| (ஆ) 1985–86 | 268 | 549 | 1,773 | 2,586 |

[1987 ஏப்ரல் 24

விரிவு படுத்துதல் நவீனப் படுத்துதலுக்கான திட்டம்.

தயாரிக்கப்பட்டுவரும் மூன்று பொருள்களுக்கான உற்பத்தி முழு அளவில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. எலக்டிரோஸ்டாடிக் பிரசிபிடேட்டருக்காக 1 கோடி ரூபாய் அளவில், புதிய அகலமான கலெக்டிங் மின்வாய் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.; இதனுடன், நவீனப்படுத்தும் திட்டங்களின் ஒரு பகுதியாக 1 கோடி ரூபாய் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டு செலவில் முழு அளவில் இயங்கும் ஃபேன்டெஸ்டிங் ஸ்டேஷன் பணித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதம் நிறுவனம்.

தமிழக அரசு ஏற்படுத்திய தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்) ஆண்டிற்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதத்தையும் 40,000 டன் அச்சிடும் எழுதும் காகிதத்தையும் உற்பத்தி செய்ய திருச்சிராப்பள்ளி மாவட்டம் காகிதபுரத்தில் காகித ஆலை ஒன்றை அமைத்துள்ளது. இதன் வணிக உற்பத்தி வெற்றிகரமாக 18—10—1985 அன்று தொடங்கப்பட்டது.

2. இதன் முதலாண்டு செயல் முறையைப் பொறுத்தவரையில் 1—4—1985லிருந்து 30—9—1986 வரையிலான 18 திங்கள்களில் இவ்வாலை 89,315 டன் செய்தித்தாள் காகிதமும் 17,771 டன் அச்சிடும் எழுதும் அடங்கிய 7,07,086 டன் காகிதத்தை உற்பத்தி செய்தது. இது 79 சதவீத உற்பத்தி திறன் பயன்பாட்டுத் திறன் சாதனையாகும். 1986 அக்டோபரிலிருந்து 1987 ஜனவரி வரையிலான காலத்தில் இந் நிறுவனம் 22,593 டன் செய்தித்தாள் காகிதத்தையும் 6,523 டன் அச்சிடும் எழுதும் காகிதத்தையும் உற்பத்தி செய்தது. இந்நிறுவனம் இவ்வாண்டில் அச்சிடும்/எழுதும் காகிதங்களில் உற்பத்தியோடு ' மேப்லித்தோ என்ற வகையினையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த உற்பத்திப் பொருள் அங்காடியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந் நிறுவனம் 1986–87-ம் ஆண்டில் அதன் உரிமம் பெற்ற திறனுக்கும் அதிகமாக 1,02,000 டன் உற்பத்தி செய்ய உத்தேசித்துள்ளது.

3. செய்தித்தாள் காகித விநியோகக் கட்டுப்பாட்டை வகிக்கும் மத்திய அரசு, 1986–88-ம் ஆண்டிற்கான புதிய ஒதுக்கீட்டுக் கொள்கையை அறிவித்துள்ளது. புதிய கொள்கையின்படி தேவையில் 65 சதவீதம் உள்ளூரிலுள்ள தொழிற் பிரிவுகளின் உற்பத்தி மூலம் சரிகட்டப்படும். இதில் இந்நிறுவனத்தின் பங்கு 16 சதவீதமாக இருக்கும். அதாவது ஆண்டொன்றுக்கு 65,000 டன்களாகும்.



1987 ஏப்ரல் 24]

4. இந்நிறுவனம் 5,000 பேர்களுக்கு வேறு வகையில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் 1,500 பேர்களுக்கு நேரடியான வேலை வாய்ப்பும் அளித்துள்ளது.

5. இந்நிறுவனம் இதன் கழிவு நீரைச் சுத்தம் செய்து பயன்படுத்தி 200 ஏக்கர் வறண்ட நிலத்தை பாசனத்தின் கீழ்க் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறது. திருச்சி மாவட்டம் முசிறி வட்டத்தில் ஆண்டிற்கு 2,500 டன் உற்பத்தி திறன் கொண்ட சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த இந் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

6. முதலாண்டின் செயல்முறையில் இந் நிறுவனம் ரூ. 55.28 இலட்சம் ரொக்க ஆதாயம் ஈட்டியுள்ளது. இருப்பினும் தேய்மானச் செலவுக்கு ரூ. 2,089.50 இலட்சம் தொகை ஒதுக்கிய பின்னர் இதன் நிகர இழப்பு ரூ. 2,034.29 இலட்சமாகும்.

புவிஇயல் மற்றும் சுரங்கத்துறை.

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் பணிகள் கனிம ஆய்வுப்பணிகள் மற்றும் கனிம நிர்வாகம் என இருவகைப்படும்.

இத்துறை கனிமம் சார்ந்த தொழில்களை அமைப்பதற்கென பொருளாதார ரீதியில் பயன்படுத்தக்கூடிய கனிமப்படிமங்களையும் அவைகளின் இருப்பளவு தரம் ஆகியவைகளை கண்டறிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்கின்றது.

இத்துறை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மேக்னைசட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிராமிக்ஸ் நிறுவனம் போன்ற அரசுத்துறை கழகங்கள், தங்களின் விரிவாக்கம் மற்றும் பிரித்தமைக்கும் பணிகளுக்குத் தேவையான அவைகளின் சுரங்க குத்தகைப் பகுதிகளில் காணப்படும் கனிம இருப்பளவினை மறுமதிப்பீடு செய்வதுடன், புதிய பகுதிகளிலும் விரிவான கனிம ஆய்வுகளை மேற்கொள்கிறது. இத்துறை மேற்கொள்ளும் கனிம ஆய்வுகளின் மூலம் சுரங்கக் குத்தகை பகுதியில் காணப்படும் கனிம இருப்பளவு மற்றும் தரம் முதலியனபற்றி அதிகாரப் பூர்வமான தொழில் நுட்ப அறிக்கைகளை இவ்வர்த்தக ரீதியான கழகங்கள் பெறுகின்றன. இவ்வறிக்கைகள் இந்நிறுவனங்கள் நிதி உதவிக் கழகங்களை அணுகுவதற்கு பெரிதும் உதவுகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில் மாநிலத்தின் கனிம வருவாய் ஏற்றுமுகமாக உயர்ந்துள்ளது. மேலும், சிறந்த ஒத்துழைப்பையும் தவிர, முறைகளை மேற்கொள்ளவும் மண்டல அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு இத்துறை திட்டமிட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 24

## 1. கனிம ஆய்வுப்பணிகள்.

### (அ) தொடர் ஆய்வுப்பணிகள்.

1986—87 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட களப்பணி ஆய்வுகளின் ஊக்க மூட்டும் முடிவுகளின் மூலம் 1987—88 ஆம் ஆண்டிலும் இந்த ஆய்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

(1) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் பகுதியில் சுண்ணாம்புக்கல் படிவ விரிவான ஆய்வு.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தங்களின் தற்போதைய ஆண்டு உற்பத்தித் திறனான 5 இலட்சம் டன்களிலிருந்து 10 இலட்சம் டன்களாக உயர்த்தத் திட்டமிட்டு, தங்களின் விரிவாக்கத் திட்டத்தின் மூலப்பொருள் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்குடன் திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் பகுதியில் காணப்படும் படிந்த வகை சுண்ணாம்புக்கல் படிமங்களை மறுமதிப்பீடு செய்ய இத்துறையினை கேட்டுக்கொண்டது. இங்கு சுமார் 6 மில்லியன் டன்கள் சுண்ணாம்புக்கல் இருப்பளவு உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. அமீனாபாத் மற்றும் கைருலாபாத் பகுதியில் 9.0 மில்லியன் டன்கள் சுண்ணாம்புக்கல் இருப்பளவு கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், வாலாசா நகரம் ஆய்வுப் பகுதியில் அனைத்துவகை சுண்ணாம்புக்கல் இருப்பளவு சுமார் 26.5 மில்லியன் டன்கள் உள்ளதென கண்டறியப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நவீனமயமாக்குதலுக்குத் தேவைக்கென சுண்ணாம்புக்கல் ஆய்வு.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் சுரங்கக் குத்தகை பகுதியின் துறப்பண ஆய்வுக்குட்பட்ட விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்துடன் ஆலையின் சுரங்கக் குத்தகை பகுதியின் துறப்பண ஆய்வுக்குட் இந்த ஆலையைச் சுற்றி சுமார் 20 கி. மீ. ஆரப்பகுதியில் காமராசர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட பகுதியில் சுரங்கக் குத்தகையற்ற பகுதியில் சுண்ணாம்புக்கல் ஆய்வும் எடுத்துக்கொள்ளப்பட்டன. இங்கு சுமார் 9 மில்லியன் டன்கள் இருப்பளவு உள்ளதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆய்வுப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



1987 ஏப்ரல் 24]

(3) தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டத்தில் தங்கம் கிடைப்பது பற்றிய அறிய விரிவான ஆய்வு (திட்டவகைப் பணி).

இந்திய புவியியல் ஆய்வுக் கழகம் மகராசகடை பகுதியில் 3 கி. மீ. நீளபாறை அமைப்பு முறையில் புவிபௌதீக ஆய்வுகளை மேற்கொண்டது. புவிபௌதீக கனிம முரண்பாடுத் தன்மை காணப்பட்ட இடங்களில் 27 நீள்வகை சோதனைக் குழிகளும் இடப்பட்டன. 78 சோதனை மாதிரிகளும் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. இம்மாதிரிகளின் 0.1 முதல் 6.6 கிராம் டன் வரை தங்கச்சத்து காணப்படுகிறது. மூலப் பாறைகளில் இருந்து பெறப்பட்ட புவி இரசாயன மண் மாதிரிகள் புவிபௌதீக ஆய்வுக்கென 100 மீ. இடை வெளி நேர்க்கோடுகளில் 10 மீ. இடைவெளியில் மொத்தம் 590 சோதனை மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. ஆய்வுநிலை பகுதியில், புவிபௌதீக கனிம முரண்பாட்டு மதிப்புகளின் மூலம் நீள்குழிகள் மாதிரிகளிலிருந்து பெறப்பட்ட தங்க மதிப்பீடுகளின் மூலமும் துறப்பண ஆய்வு துவங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கென கனரக வகை துறப்பணக்கருவி பெறப்பட்டுள்ளது.

(4) தஞ்சாவூர் மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் கனகனிம மணல்களுக்கென ஆய்வு.

தரங்கம்பாடி அம்பனாருக்கு இடைப்பட்ட கடற்கரைப் பகுதியில் கனகனிம மணல்களுக்கான களப்பணி தொடர்ந்து நடைபெற்றது. முறையான அளவில் 45 கிருகுவகை துறப்பணத் துளைகளிட்டு 180 மாதிரிகள் பெறப்பட்டன. இம்மணல்களில், சுமார் 8 சதவீதம் இல்மனைட், 1.65 சதவீதம் மானசைட், 9 சதவீதம் கார்னட் மற்றும் 24 சதவீதம் பைரிபோலுடம் உள்ளது. ஆய்வுப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### (ஆ) புதிய ஆய்வுப்பணிகள்.

(5) தென்னாற்காடு மாவட்டத்தில் சுரங்கக் குத்தகையற்ற பகுதியில் பழுப்பு நிலக்கரிக்கென விரிவான ஆய்வு (திட்ட வகைப் பணி).

இந்த களப்பணி ஆய்விற்கென சுமார் 30 சதுர கிலோ மீட்டர் பகுதி தனிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் வெள்ளார் நதிக்கு வடக்கில் ரீமங்கலம், தேவங்குடி மற்றும் த. பவளங்குடி முதலிய கிராமங்களைக் கொண்ட 15.20 ச.கி. பகுதியும் வெள்ளார் நதிக்கு

[1987 ஏப்ரல் 24

தெற்கில் தீத்தாம்பட்டி, ஸ்ரீமுஷ்ணைப்புதூர் மற்றும் பிற கிராமங்களைக் கொண்ட சுமார் 10.15 ச.கி காட்டுமன்னார்குடி வட்டப் பகுதிகளும் அடங்கும். பூர்வாங்க ஆய்வுப்பணிகள் முடிவடைந்துள்ளன. ஆய்வுநிலை 1ல் வெள்ளாருக்கு வடக்கு திட்டப்பகுதியில் 400 சதுர முறையான இடைவெளியில் 30 துறப்பணத் துளைகளிட திட்டமிடப்பட்டு இதற்கென நேர்முகசுற்றுவகை துறப்பணக் கருவியும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(6) மதிப்பீட்டு சோதனைகளுக்கென பாக்சைட் மாதிரிகள் சேகரித்தல்.

இந்திய அரசின் சுரங்கத்துறையின் வேண்டுகோளுக்கிணங்க மாநிலத்தில் காணப்படும் பாக்சைட் மற்றும் லாட்டிரைட் பாறை அமைப்புகளை மறு மதிப்பீடு செய்து அவைகளில் காலியம், குரோமியம், வனேடியம், நிக்கல், கோபால்ட், ஸ்ரான்சியம் போன்ற மூலகங்கள் இருப்பதை உறுதி செய்வதற்கென இத்துறை ஆய்வுப்பணிகளை மேற்கொண்டது. சேலம் மாவட்டம் சேர்வராயன் குன்றுகளிலும், நீலகிரி மலைப்பகுதிகளிலிருந்தும் 55 சோதனை மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சேலம் மாவட்டம் கொல்லிமலையிலும், அண்ணா மாவட்டம் கொடைக்கானல் மலைத் தொடர்களிலும் இப்பணி மேற்கொள்ளப்படும்.

(7) திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம்—

திரணிபாளையம் கிராமத்தில் தீக்களிமண் ஆய்வு :

தமிழ்நாடு சிராமிக்ஸ் நிறுவனத்தின் வேண்டுகோளிற்கிணங்க அவர்களின் திரணிபாளையம் சுரங்கக் குத்தகைப் பகுதியில் 13 திருகு வகை துறப்பணத்துளைகளிட்டு 116 களிமண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அவர்களின் சுரங்கக் குத்தகைப் பகுதியில் சுமார் 15 மீட்டர் ஆழ அளவிற்கும் 60 சத விகிதம் கனிம பெறுதலுக்கும் உட்பட்ட சுமார் 2.5 மில்லியன் டன்கள் தீக்களிமண் இருப்பளவு உள்ளதென கணக்கிடப்பட்டுள்ளது.

(8) தஞ்சாவூர் மாவட்டத்தில் சிலிக்கா மணலுக்கான ஆய்வு :

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி மற்றும் வேதாரண்யம் வட்டங்களில் செட்டிபுலம், வடமலை மற்றும் தனிக்கோட்டம் கிராமங்களில் சிலிக்கா மணலுக்கான பூர்வாங்க ஆய்வுகள் நிறைவு பெற்றுள்ளது. விரைவில் இங்கு துறப்பண ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.



1987 ஏப்ரல் 24]

II. புவிநுட்பவியல் ஆய்வுகள்.

(9) வளர்ச்சிப்பணி திட்டங்களுக்கு நிலச்சரிவு கண்ணோட்டத்தில் அனுமதி வழங்கல்.

குன்னூரில் அமைந்துள்ள புவிநுட்பவியல் அமைப்பு பல் துறையினரால் பெறப்பட்ட 138 தளங்கள் பகுதிகளை ஆய்வு செய்து நிலச் சரிவுகளால் ஏற்படக்கூடிய சேதங்களை தவிர்ப்பதற்கான முறைகளை அறிவித்துள்ளது.

(10) நிலச்சரிவுப் பகுதிகளை புவிநுட்பவியல் முறைகள் மூலம் ஆய்வு செய்தல் (மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்டவகைப் பணி).

சுமார் 300 ச.கி. பரப்பில் பல்வகை நிலச்சாய்வு வாட்டங்களை விளக்கும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்துடன் 470 ச.கி. பரப்பில் நிலப்பயன்முறை வரைபடங்களும் பாறை மண் அமைப்பு வரைபடங்கள் 30 ச.கி. பரப்பிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில் திட்டப்பகுதியில் (நிலை 1) மேற்கொள்ளப்பட்ட பணிகளைக்கொண்ட அறிக்கை அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் புவிநுட்பவியல் பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

III. சிறப்பு ஆய்வுகள்.

(11) புவி இரசாயனத் தகவல்களை சென்னை இந்திய நுட்பவியல் கழகத்தின் கனிப்பொறி மூலம் G. Ex. Fc. முறை மூலம் சேகரித்தல்.

இரசாயன பகுப்பாய்வு.

இத்துறையின் ரசாயன பகுப்பாய்வகம் 1,160 மாதிரிகளை சோதித்துள்ளன. இம்மாதிரிகளில் சுண்ணாம்புக்கல், களிமண், பாக்சைட், வெங்கக்கல், பெல்ஸ்பார் முதலியன அடங்கும். மேலும் தங்கம், வெள்ளி பிஸ்மத், கோபால்ட், வனேடியம் மற்றும் டங்ஸ்டன் போன்ற மூலகங்களைக் கண்டறிய 952 சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் கீழ் சேலத்தில் இதுவரை இயங்கிவந்த கனிம மேம்பாட்டு ஆய்வகம், இதன் சொத்துக்கள் மற்றும் கடன்களுடன் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்திற்கு 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாற்றி அளிக்கப்பட்டது. இங்கு தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் தரம் குறைவான மாக்னசைட் பற்றிய மேல் ஆய்வு மற்றும் வளர்ச்சி பற்றிய பணிகளை மேற்கொள்ளும்.

### புதிய திட்டவகைப் பணிகள்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை கூட்டு ஆய்வுப்பணி முறைகளை மேற்கொள்வதற்கென அரசு புவிபௌதீக மற்றும் புவி இரசாயன பிரிவுகளை ஏற்படுத்த அங்கீகரித்துள்ளது.

### கனிம நிர்வாகம்.

**கனிம வருவாய் :**

கடந்த ஐந்தாண்டுகளின் கனிம வருவாய்த் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. புவியியல் மற்றும் சுரங்கத்துறை தனியே அமைக்கப்பட்டபின் கனிம வருவாய் முறையாக உயர்ந்துள்ளதை தெளிவாக காணலாம்.

| | (இலட்சங்கள்) |
|---|---|
| 1981–82 .. .. .. .. | 173.08 |
| 1982–83 .. .. .. .. | 266.62 |
| 1983–84 .. .. .. .. | 283.08 |
| 1984–85 .. .. .. .. | 394.02 |
| 1985–86 .. .. .. .. | 442.00 |

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய பெறப்பட்ட கனிம வருவாய் ரூ. 2.62 கோடி (262 இலட்சங்கள்) மற்றும் இவ்வாண்டில் 475 ஒப்புதல் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டுள்ளன. 150 கனிம சலுகை மனுக்கள் மற்றும் 5 உயர்நீதி மன்ற வழக்கு பற்றிய அறிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டன. 31–12–1986 முடிய 68 முறையீட்டு மனுக்கள் மீது ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதன் மூலம் 1.50 இலட்சங்கள் வருவாய் இடைத்துள்ளது.

### சர்க்கரைத் தொழில்.

வேளாண்மையை மையமாகக் கொண்ட சர்க்கரைத் தொழிலுக்கு தமிழ்நாடு மிகவும் வாய்ப்பாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில், இத்தொழில் அடைந்துள்ள முன்னேற்றமே இதனை சிறப்பாக விளக்கும். 1975–76 ஆம் ஆண்டில் மொத்தம் 16 சர்க்கரை ஆலைகளே இருந்தன. கூட்டுறவுத் துறையில் 7–ம் மற்றும் தனியார் துறையில் 9–ம் ஆக இருந்தது; இன்று மொத்தம் 25 சர்க்கரை ஆலைகள் இயங்குகின்றன. கூட்டுறவுத் துறையில் 12, பொதுத் துறையில் 3 மற்றும் தனியார் துறையில் 10 ஆலைகள் உள்ளன. சர்க்கரை ஆலைகள் அமைப்பது கரும்பு பயிரிடுதலையொட்டி இருப்பதால், புதிய ஆலைகள் அமைவதும், இருக்கின்றன. ஆலைகள் விரிவாக்கம் ஆவதும் இயல்பாகி



விடுகிறது. சர்க்கரைத் துறையில் வளர்ச்சி ஏற்படுத்தும் நோக்குடன் அரசு ஒரு தனி இயக்கத்தை ஏற்படுத்தியது சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் மறைமுக வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது.

**2. சர்க்கரைத் தொழிலின் பொதுவான செயல்பாடுகள் :—**

1985–86 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் மொத்தத்தில் 84.91 லட்சம் டன்கள் கரும்பை அரைவை செய்து, 9.55 சதவீத சர்க்கரை கட்டுமானத்தில் 8.11 லட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. நடப்பு 1986–87 ஆம் பருவத்தில் மொத்தம் 86.00 லட்சம் டன்கள் கரும்பு அரைவையாகும் என மதிப்பிடப்பட்டு, கடந்த ஆண்டை விட சிறிது உயர் அளவு சர்க்கரை உற்பத்தி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டின் சர்க்கரை உற்பத்தி இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 10 சதவீதமாகும். கடந்த சில வருடங்களாகவே இதை இம்மாநிலம் நிலை நிறுத்தி வருகிறது.

**3. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளுடன் தனியார் ஆலைகளின் செயல்பாட்டை ஒப்பிடல் :**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் நாளொன்றுக்கான மொத்த அரவைத் திறன் 23,200 டன்கள். தனியார் துறை ஆலைகளின் மொத்த அரவைத் திறன் 24,420 டன்கள் ஆகும். கடந்த 3 ஆண்டுகளில் இவ்விரு துறைகளின் மொத்த செயல்பாடுகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | மொத்த கரும்பு அரவை செய்த அளவு (இலட்சம் டன்களில்). | மொத்த சர்க்கரை உற்பத்தி (இலட்சம் டன்களில்). | சராசரி சர்க்கரை கட்டுமானம் (சத வீதத்தில்.) | பயன் படுத்திய அரவைத் திறன் (சத வீதத்தில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள் : | | | | |
| 1983–84 .. | 22.05 | 2.09 | 9.47 | 62 |
| 1984–85 .. | 32.07 | 3.08 | 9.61 | 86 |
| 1985–86 .. | 43.36 | 4.21 | 9.70 | 114 |

[1987 ஏப்ரல் 24

| ஆண்டு. | மொத்த கரும்பு அரவை செய்த அளவு (இலட்சம் டன்களில்). | மொத்த சர்க்கரை உற்பத்தி (இலட்சம் டன்களில்). | சராசரி சர்க்கரை கட்டுமானம் (சத விதத்தில்). | பயன் படுத்திய அரைவைத் திறன் (சத விதத்தில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2. தனியார் துறை ஆலைகள் : | | | | |
| 1983–84 .. | 23.59 | 2.15 | 9.18 | 59 |
| 1984–85 .. | 30.80 | 26.92 | 9.47 | 79 |
| 1985–86 | 41.55 | 3.90 | 9.30 | 99 |
| 3. மாநிலத்தின் மொத்தம்/சராசரி :— | | | | |
| 1983–84 .. | 45.64 | 4.24 | 9.30 | 60 |
| 1984–85 .. | 62.87 | 6.00 | 9.54 | 83 |
| 1985–86 .. | 84.91 | 8.11 | 9.55 | 106 |

4. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் :

பொதுத் துறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவுவதற்கென தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. தற்பொழுது இம் மாநிலத்தில் கீழே குறித்துள்ள மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் இயங்கி வரு கின்றன.—

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சி ராப்பள்ளி மாவட்டம்;

(3) மதுரா சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.



1987 ஏப்ரல் 24]

மேலும் இந்நிறுவனம் மலறமலை நகரில் சர்க்கரை ஆலைக்கு வேண்டிய கரும்பு அரைவைக்கு பயன்படும் உருளைகளை சீர் அமைக்கவும், உதிரி உறுப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற் பட்டறை ஒன்றினை ரூ. 40 இலட்சம் செலவில் நிறுவியது. இது 1—8—1986 முதல் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை பல அளவுகளில் 14 உருளைகளை சீர் அமைத்து அந்தந்த ஆலை களுக்கு திரும்ப அனுப்பப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் சுமார் 180லிருந்து 200 உருளைகளை சீர் அமைக்க திட்டமிட் டுள்ளது.

5. கரும்பு விலை மற்றும் கூடுதல் கரும்பு விலையளித்தல் :

1986–87 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு சட்டபூர்வ குறைந்த பட்ச கரும்பு விலை டன் ஒன்றுக்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சதவீத சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை ரூ. 170 என அறிவித்தது. தமிழக அரசு, கரும்பு உற்பத்தியாளர்களின் வேண்டுகோள் மற்றும் கரும்பு உற்பத்திச் செலவு, தொழிலாளர் களின் ஊதியம் இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழக சர்க்கரை ஆலைகள் 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானத்திற்கு இணைத்து டன் ஒன்றுக்கு கரும்பு விலை ரூ. 200 என வழங்க உத்தரவிட்டது.

மேலும் ஆம்பூர், தர்மபுரி, சேலம் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகள் ஈட்டிய லாபத் தொகையிலிருந்து ஒரு பகுதியை கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலை அளித் தது.

கடந்த 2 ஆண்டுகளில் இவ்வாலைகள் அளித்த கூடுதல் கரும்பு விலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும் ஆலையின் பெயரும். | கூடுதல் விலை டன் ஒன்றுக்கு ரூபாய். | |
|---|---|---|
| | 1983–84. | 1984–85. |
| (1) | (2) | (3) |
| 1 ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 25.00 | 35.00 |
| 2 தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை. | 32.00 | 30.00 |
| 3 சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 32.15 | 30.00 |
| 4 பெரம்பலூர் சர்க்கரை ஆலை .. | 40.00 | 40.00 |

இது ஒரு சீரிய, சமூக பொருளாதார முயற்சி. இதனை கூட்டுறவு ஆலைகள்தான் நாடு தழுவிய அளவில் நடைமுறைப் படுத்தியுள்ளது.

6. புதிய சர்க்கரை ஆலைகள் :

மைய அரசு புதிய சர்க்கரை கொள்கை வெளியிட்டதைத் தொடர்ந்து, 12 இடங்களில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க வரப்பெற்ற 12 விண்ணப்பங்களை மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இவ்வாலைகள் ஒவ்வொன்றும் நாள் ஒன்றுக்கு 2,500 டன்கள் அரவைத் திறன் கொண்டவையாக இருக்கும்.

மேலும் 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் 2 பொதுத்துறை ஆலைகளும், 3 தனியார் துறை ஆலைகளும், தங்களது அரவைத் திறனை விரிவுபடுத்த அனுப்பியுள்ள விண்ணப்பங்களை மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

7. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிப்புத் திட்டம் (கோஜெனரேஷன் திட்டம்) :

சர்க்கரை ஆலைகளில் அதிக அழுத்தமுள்ள கொதிகலன் களை நிறுவி தற்போது பயன்படுத்தும் அதே அளவு கரும்பு சர்கையை பயன்படுத்தி அதிக அளவு மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இத் திட்டத்தை செயல்படுத்த அனைத்து வழிவகைகளும் ஆராயப் பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கான செலவு சுமார் ரூ. 10 கோடி இருக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

8. கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம் :

ஆலைக்கு வழங்கப்படும் கரும்பு தாமதமின்றி உடனுக்குடன் கொண்டு செல்ல ஏதுவாக மாவட்ட சாலைகளுக்குச் சமமான புதிய சாலைகள் அமைத்தல், பழைய சாலைகள் பழுது பார்த்தல், பாலங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. ஆலைக்கு வழங்கப்படும் கரும்பின் விலையிலிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கரும்பு மேல் வரி பிடித்தம் செய்யப்பட்டு அத் தொகை கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 206 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இணைப்பு.

சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு பிழிந்த கரும்பின் அளவு உற்பத்தி செய்த சர்க்கரை அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம். :

| வரிசை எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1984-85. பிழியப் பட்ட கரும்பின் அளவு (டன்களில்). | 1984-85. உற்பத்தி செய்த சர்க்கரை யின் அளவு (டன்களில்). | 1984-85. சராசரி சர்க்கரை கட்டுமானம் (விழுக்காடு களில்). | 1985-86. பிழியப்பட்ட கரும்பின் அளவு (டன் களில்). | 1985-86. உற்பத்தி செய்த சர்க்கரை யின் அளவு (டன்களில்) | 1985-86. சராசரி சர்க்கரை கட்டு மானம் (விழுக்காடு களில்). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| கூட்டுறவுத் துறை— | | | | | | |
| 1 ஆம்பூர் | 1,97,666 | 20,577 | 10.41 | 4,10,779 | 40,238 | 9.80 |
| 2 மதுராந்தகம் | 2,58,438 | 24,117 | 9.33 | 4,22,763 | 39,313 | 9.30 |
| 3 அமராவதி | 2,87,180 | 30,142 | 10.50 | 3,17,025 | 32,511 | 10.26 |
| 4 சேலம் | 3,31,287 | 31,530 | 9.52 | 4,69,952 | 44,011 | 9.37 |
| 5 கள்ளக்குறிச்சி | 2,76,140 | 26,055 | 9.44 | 4,11,915 | 40,260 | 9.77 |
| 6 நேஷனல் | 2,36,829 | 23,451 | 9.90 | 2,70,090 | 27,064 | 10.02 |
| 7 தர்மபுரி | 2,23,143 | 23,174 | 10.39 | 1,81,031 | 19,036 | 10.52 |
| 8 வேலூர் | 2,32,880 | 22,069 | 9.48 | 3,01,975 | 29,834 | 9.88 |
| 9 திருப்பத்தூர் | 1,75,001 | 17,888 | 10.22 | 2,38,518 | 23,915 | 10.03 |
| 10 செங்கல்ராயன் | 3,27,750 | 29,944 | 9.14 | 2,63,372 | 25,368 | 9.63 |
| 11 திருத்தணி | 1,23,624 | 10,275 | 8.31 | 3,03,016 | 27,732 | 0.15 |
| கூட்டுறவுத் துறை மொத்தம் | 26,69,938 | 2,59,222 | 9.70 | 35,90,436 | 3,49,282 | 9.72 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| தனியார் துறை— | | | | | | |
| 12 இ.ஐ.டி. பாரி .. .. .. .. | 2,92,049 | 25,373 | 8.69 | 5,38,043 | 49,492 | 9.18 |
| 13 காவேரி .. .. .. .. | 1,64,300 | 15,987 | 9.73 | 1,81,441 | 16,572 | 9.13 |
| 14 டெக்கான் .. .. .. .. | 2,65,088 | 23,783 | 8.97 | 2,13,908 | 18,944 | 8.87 |
| 15 சௌத் இந்தியா .. .. .. | 3,19,090 | 27,366 | 8.58 | 3,93,921 | 34,067 | 8·65 |
| 16 அருணா .. .. .. .. | 5,83,732 | 54,759 | 9.38 | 7,48,647 | 71,533 | 9.56 |
| 17 சக்தி .. .. .. .. .. | 6,97,491 | 70,103 | 10.05 | 7,04,626 | 72,150 | 10.24 |
| 18 கோத்தாரி .. .. .. .. | 2,79,523 | 26,822 | 9,60 | 3,92,851 | 33,494 | 8,53 |
| 19 திரு. ஆரூரான் .. .. .. | 2,38,546 | 24,116 | 9.05 | 3,40,086 | 32,715 | 9.62 |
| 20 பொன்னி : .. .. .. .. | 2,40,290 | 23,352 | 9.72 | 3,40,564 | 33,208 | 9.75 |
| 21 பன்னாரியம்மன் .. .. .. | .. | .. | .. | 3,00,797 | 27,974 | 9.30 |
| தனியார் துறை—மொத்தம் .. | 30,80,109 | 2,91,661 | 9.47 | 41,54,884 | 3,90,149 | 9.39 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| பொதுத் துறை— | | | | | | |
| 22 தஞ்சாவூர் .. .. .. .. | 2,34,058 | 21,494 | 9.10 | 2,59,468 | 24,497 | 9.59 |
| 23 பெரம்பலூர் .. .. .. .. | 2,54,375 | 23,961 | 9.42 | 2,73,623 | 26,731 | 9.77 |
| 24 மதுரா .. .. .. .. .. | 49,308 | 3,602 | 7.31 | 2,16,230 | 20,073 | 9.28 |
| பொதுத்துறை—மொத்தம் .. | 5,37,741 | 49,057 | 9.12 | 7,45,321 | 71,301 | 9.56 |
| ஆக மொத்தம் .. | 62,87,788 | 5,99,940 | 9.54 | 84,90,641 | 8,10,732 | 9.55 |

[1987 ஏப்ரல் 24

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்:

நிதியுதவி, தவறான நிர்வாகம் மற்றும் வேறு பல காரணங்களினால் நலிவுறும் பல தொழில் நிறுவனங்களுக்கு அரசு உதவி அளித்து வருகின்றது. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதற்காக அரசு இவ்வுதவிகளை அளித்து வருகின்றது. நலிவுற்ற நிறுவனங்கள், மீண்டும் புத்துயிர் பெறக் கூடியவைகளை அரசு தமிழ்நாடு விடுப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ல் கீழ் விடுப்பு நிறுவனமாக அறிவித்துள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் புத்துயிர் பெற உதவி அளிக்கின்றது. இதன் மூலம் கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத்திற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

கீழ்வரும் நிறுவனங்கள், விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன :—

(1) ஒமேகா கேபில்ஸ் லிமிடெட், சென்னை.

(2) சதர்ன் ஸ்விட்ச் கியர் லிமிடெட், சென்னை.

(3) மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(4) அருணா லெதர்ஸ் மற்றும் எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.

(5) பிளாஸ்டிக் ரெசின்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், சாகுபுரம், திருநெல்வேலி.

(6) மாருதி கிரிஸ்டல்ஸ் சால்ட் கம்பெனி லிமிடெட், சென்னை.

(7) சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட், புதுக்கோட்டை.

(8) குன்னியூர் பேப்பர் மற்றும் போர்டு லிமிடெட், சென்னை.

(9) கங்கப்பா பேப்பர் மற்றும் போர்டு லிமிடெட், சென்னை.

(10) தி ஜெனரல் ரிப்லெக்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(11) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட்.



1987 ஏப்ரல் 24]

தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. மிகவும் பின்தங்கிய இடமாகவும், வேறு தொழிற்சாலைகளோ விவசாயம் அல்லது வியாபாரம் மூலம் வேலை வாய்ப்பும் அளிக்க இயலாத கிராமங்களில் வாழும் மக்களுக்கு உப்பு உற்பத்தித் திட்டத்தின்மூலம் வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில், வங்காள விரிகுடா கடற்கரை ஓரமாக உள்ள இடங்களில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம், ரூ. 165 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது கடல் நீரிலிருந்து உணவு உப்பு மற்றும் தொழிற்சாலைக்குகந்த உப்பு மற்றும் எல்லா வகையான உப்பும் தயாரிப்பதுடன் உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உபபொருட்களை தயாரித்து விற்பனை செய்வதாகும். இந் நிறுவனம இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கம் என்னுமிடத்தில் மாரியூர் வாலிநோக்கம் உப்பு திட்டத்தையும் தஞ்சாவூர் மாவட்டத்தில் தம்பிக்கோட்டை என்னுமிடத்தில் சர்தார் வேதரத்னம் உப்புத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத்திட்டத்தில் 1986 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 60,000 டன் உப்பு உற்பத்தியில் 55,175 டன் (92 விழுக்காடு) உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ் உற்பத்தியானது 1982 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிறந்த அதிக அளவான 36.000 டன் உற்பத்தியைவிட அதிகமாகும். 1986 ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் பெய்த இடைவிடாத மழையின் காரணமாக சர்தார் வேதரத்னம் உப்புத் திட்டத்தில் உப்பு உற்பத்தியானது பெரிதும் பாதிக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டில் குறிப்பிட்டளவான 10,000 டன்னில் 5,185 டன் மட்டுமே உற்பத்திச் செய்ய முடிந்தது.

உப்புத் திட்டங்களானது எந்தவித அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ளது. கடந்த பத்து வருடத்திற்குள் மொத்த உப்பு உற்பத்தியானது 700 டன்னிலிருந்து 60,000 டன்னுக்கும், ஒரு ஹெக்டேர் பரப்பளவில் 3 டன்னிலிருந்து 136 டன்னுக்கும் கடந்தகாலங்களில் உயர்ந்துள்ளது. போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் உப்பு விற்பனை செய்வதில் ஏற்படும் அதிக செலவுகளால் தமிழகத்தில் அதிக அளவில் உப்பு உற்பத்தி செய்யும் தூத்துக்குடி போன்ற இடங்களில் உப்பு தயாரிக்கும் தனியார் நிறுவனங்களிடம் உப்பு விற்பனையில் போட்டி போட முடியவில்லை.

1987 ஆம் ஆண்டின் மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்துக்கு, 60,000 டன்னும் சர்தார் வேதரத்னம் உப்புத் திட்டத்துக்கு 12,000 டன்னும் உற்பத்திக் குறியீட்டளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் முழுமையாக மேம்பாடு அடையும்பொழுது 500 முதல் 600 நபர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிப்பதுடன் 1,500 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் அளிக்கும். தற்பொழுது இத்திட்டத்தில் 230 தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 250 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும் அளித்து வருகிறது. இத்திட்டங்களில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் 50 நபர்களாகும்.

மெக்னீசியம் உலோகத் திட்டத்திற்கான உப்புக் கழிவு நீர் :

வாலிநோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டு வரும் மெக்னீசியம் உலோகத் தொழிற்சாலைக்கு 36 உப்புக் கழிவு நீரை (பிட்டர்ன்ஸ்) வழங்க இந்நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. இது ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டத்திற்குத் தேவையான உப்பு கழிவு நீரைத் தேக்கி வைப்பதற்குத் தேவையான தொட்டியை கட்ட தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

இரும்பு ஊட்டச் சத்து கலந்த உப்பு :

நமது நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் பரவி வரும் இரத்தச் சோகை வராமல் தடுக்க இரும்புச் சத்து கலந்த உப்பை 15,000 டன் உற்பத்தி செய்ய ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. யூனிசெப் (Unicef) மற்றும் மத்திய அரசு (உணவுத்துறை) உதவியுடன் ரூ. 12 இலட்சம் செலவில் சிறந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரும்புச் சத்து கலந்த உப்பை மதிய சத்து உணவு திட்ட மையங்களுக்கு வழங்குவதன் மூலம் சிறுவயதிலேயே இரத்த சோகை வராமல் தடுக்க இந்நிறுவனம் அரிய முயற்சி செய்து வருகிறது.

II. மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை.

நாட்டு மக்களின் ஏழ்மையை போக்கி, தங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் அறிவியல், தொழில் நுட்பவியல் ஆற்றும் அரும்பணியினை, உணர்ந்து தமிழ்நாடு அரசு 1984 ஆம் ஆண்டில், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையை அமைத்தது. இத்துறை, தற்போது மாநிலத்தில் மின்னணுவியல், முறைசாரா எரிசக்தி ஆதாரங்கள் அறிவியல், தொழில் நுட்பம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.





இத்துறையுடன், பின்வரும் அமைப்புகள் இணைக்கப் பட்டுள்ளன :—

1. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (எல்காட்).

2. தொழில் வாணிபத் துறை இயக்குநர் அலுவலகத்தின் மின்-மின்னணுவியல் பிரிவு.

3. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA).

4. தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்.

5. தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மையங்கள்.

6. தொலைநோக்கு உணர்வு நிலையம், அண்ணா பல்கலைக் கழகத்தில் சிறப்பு ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஏனைய ஏழு மையங்கள்.

மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டங்களையும், மாநில அரசு ஏற்பளித்துள்ள திட்டங்களையும் இத்துறை செயல் படுத்தி வருகிறது. தருமபுரி மாவட்டத்தில், தற்போது "ஸ்டெட்" (STED) என்று புதிதாக அழைக்கப்படும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வாய்ப்புத் திட்டமும் இந்த திட்டங்களில் அடங்கும். 1987–88 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில், அறிவியல் தொழில் நுட்பத் தொழில் முனைவோர் திட்டத்திற்கும், மாநிலத்தில், பல்தொழில் நுட்பவியல் மாற்று மைய்த் திட்டத்திற்கும் ஆதரவு தரக் கருதப்பட்டுள்ளது.

மத்திய அரசின், தேசிய தகவல் மையத் திட்டத்தைச் செயல் படுத்துவதிலும் இத்துறை தன்னுடைய ஒத்துழைப்பை நல்கி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், 550 ND மின் ஆற்றலுடைய கணக்கீட்டுப் பொறி ஒன்று சென்னையில் அமைக்கப்பட உள்ளது. அரசின் பல துறைகளில் கணக்கீட்டுப் பொறி பயன்படுத்த இது ஆதாரமாக விளங்கும். அனைத்து மாவட்டங்களிலும் கணக்கீட்டுப் பொறியை நிறுவும் பணி படிப்படியாக மேற் கொள்ளப்படும். இந்த கணக்கீட்டுப் பொறிகள் அனைத்தும், ஐதராபாத்திலுள்ள வட்டார கணக்கீட்டுப் பொறி மையத்துடனும், துணைக் கோள் இணைப்புடனும் புது டில்லி, தேசிய மையத்துடனும் இணைக்கப்படும், இது குறித்த முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்கும். இன்றியமையா அடிப்படை வசதிகளுக்கு மாநில அரசு வகை செய்கிறது. மாநில அரசுத்துறைகளில் இம்முறையைப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டில் இது தயார் நிலையில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

[1987 ஏப்ரல் 24

மாநிலத்தில், குறிப்பாக மின்னணுவியல் தொழில்களை மேம்படுத்துவதற்கென, பின்வரும் நிதியுதவியை அரசு அளித்து வருகிறது ;—

(i) மாநிலத்தில் எங்குவேண்டுமானாலும் தொடங்கப் படும் புதிய மின்னணுவியல் தொழில் பிரிவுகளுக்கு 10 சதவீத மூலதன உதவித் தொகை வழங்கப்படுகிறது.

(ii) சென்னை, காக்களூர், ஒசூர், திருச்சி, கோயம் புத்தூர், மதுரை ஆகிய இடங்களுக்கருகே உள்ள மின்-மின்னணு வியல் தொழிற்பேட்டைகளில், கொட்டகைகளுக்கும், மேம் படுத்தப்பட்ட மனைகளுக்கும் வகை செய்யப்படுகின்றன. சேலம், வேலூர் ஆகிய இடங்களிலும் அதுபோன்ற தொழிற் பேட்டைகள் அமைக்கப்படும்.

(iii) மாநிலத்திற்கு வெளியே தயாரிக்கப்படும் மின்னணு பொருட்களின் விற்பனைமீது உயர் வீதத்தில் விற்பனை வரி விதிக்கப்படுகையில், மாநிலத்திற்குள் தயாரிக்கப்படும் மின்னணு வியல் பொருட்களின் விற்பனை மீது 4 சதவீதம் என்ற வீதத்தில் விற்பனை வரி குறைக்கப்பட்டுள்ளது.

(iv) பங்குகளில் முதலீடு செய்யும்பொழுது சில பொருத்த மான இனங்களில் சுமார் 26 சதவீதம் வரை மூலதனப் பங்குத் தொகை செலுத்துவது பற்றி எல்காட் பரிசீலிக்கிறது.

மாநிலத்திலுள்ள அனைத்து தொழில்களுக்கும் வாலாயமாக கிடைக்கப்பெறும் ஊக்க உதவியுடன் இது கூடுதலாக கிடைக்கப் படுகிறது.

தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (எல்காட்).

எல்காட் நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு மட்டுமே முழுவதும் சொந்தமான நிறுவனமாகும். இந்நிறுவனம் மாநிலத்தில் மின் னணுவியல் தொழில்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5 கோடியாகும். இந்நிறுவனம், தன்னுடைய சொந்தப் பொறுப்பில் சில பணிகளை மேற்கொண்டுள்ளது.



1987 ஏப்ரல் 24]

(100 சதவீதம் பொது நிறுவனம்). மேலும் இந்நிறுவனம், கூட்டுத் துறையில் பல பணிகளை மேற்கொண்டுள்ளது. அவற் றில் 26 சதவீதம் வரையில் மூலதனப் பங்கைச் செலுத்துகின் றது. இத்தகைய பணி பின்வரும் துறையைச் சேர்ந்தவை யாகும்:—

தொலை செய்திப் போக்குவரத்து.
தொழில்களுக்கான மின்னணுவியல் பொருள்கள்.
கணக்கீட்டுப் பொறிகள்.
நுகர்வோர் மின்னணு சாதனங்கள்.

ஏனைய துணைப் பொருள்கள் தயாரிப்பு உயர் தொழில் நுட்பவியல் துறைகள்.

நம் அடைவுகளின் முக்கிய கூறுகள்:—

ஒசூரில் அலுமினியம் எலக்டிரோலிடிக் கப்பாசிடர் தயாரிக் கும் தொழிற் பிரிவை ஏற்படுத்தியது நம் அடைவுகளில் மிக முக்கியமானதாகும். உள்நாட்டு உற்பத்திக்குத் தேவையான பைபோலார்—கரக்சன் கப்பாசிடர்கள் இப்பிரிவின் சீரிய ஆராய்ச்சிப் பணியின் விளைவாகவே தயாரிக்கப்படுகிறது. இந்த முக்கிய மாற்று உதிரிப் பாகம் தயாரிப்பு பணி எல்காட் நிறுவனத்தின் புகழை உயர்த்தியதோடு அதன் வணிகத்திறனை யும் மேம்படுத்த உதவியது. இப் பிரிவில் தயாரிக்கப்படும் பல்வேறு கப்பாசிடர்கள் விற்று முதல் 1986—87-ல் ரூபாய் 200 இலட்சமாக உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த ஆண்டு விற்பனையைவிட 40 சதவீதம் அதிகமாகும். கடந்த ஆண்டு அதாவது 1985—86-ல் விற்பனை ரூ. 142 இலட்ச மாகும்.

சென்னையில் அமைந்துள்ள மற்றொரு தொழிற் பிரிவில் வி.எச்.எப். கம்பியில்லாத் தந்தித் தகவல் தொடர்பு அமைப்பிற் கான கருவிகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இப் பிரிவு கம்பியில்லா தகவல் தொடர்பு அமைப்பு ஒன்றையும், கம்பியில்லா தந்தி சாதனத்துடன் புள்ளி விவரத் தகவல் தொடர்பு கொள்ளும் வகையிலான சாதனம் ஒன்றையும் தயாரித் துள்ளது. மேலும் பொதுத் தொலைபேசி அமைப்பிற்கான கருவியையும் தயாரித்துள்ளது. இத் தொழிற் பிரிவில் 1985—86 ஆம் ஆண்டில் விற்று முதல் ரூ. 57 இலட்சமாகும். இது 1986—87-ல் ரூ. 90 இலட்சத்தை (அதாவது 50 சதவீதம் உயர்வு) அடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

எல்காட் நிறுவனம், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறு வனம், பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஆகியவற்றுக்கான சாதனங்களைத் தயாரிக்கும் ஒப்பந்தப் பிரிவு ஒன்றை வைத்துள் ளது. அப் பிரிவில் நடப்பு ஆண்டில் சுமார் ரூ.
விற்று முதல் கிடைத்துள்ளது. மின்னணு லை

தயாரிக்கும் தொழில் பிரிவு ஒன்று இந்நிறுவனத்தில் செயல்படுகிறது. அதில் குறைந்த விலையில் பல வண்ணங்களிலான பிளாஸ்டிக் மின்னணுக் கைக்கடிகாரங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் விற்பனை உதவித் திட்டம் ஒன்றையும் எல்காட் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் குவார்ட்ஸ் அனலாக் கடிகாரங்கள் ஈ.எம்.டி. கடிகாரங்கள், மின்னணு பாதுகாப்பு கருவிகள் போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன.

கூட்டு முயற்சித் தொழில் பிரிவுகள்:

அரசுக்கு முழுவதும் சொந்தமான மேற்சொன்ன தொழிற் பிரிவுகள் தவிர எல்காட் நிறுவனம் தம்மிடமுள்ள குறிப்பிட்ட நிதி வாயில்களைக் கொண்டு மின்னணுவியல் தொழிலை விரைவாக வளர்ச்சி அடையச் செய்வதற்காகத் தனியார் துறையிலிருந்து கிடைக்கக் கூடிய நிருவாக, தொழில் நுட்ப நிதி வாயில்களை முழுமையாக பயன்படுத்தி தனியார் தொழில் முனைவர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியில் பல தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. தனியார் தொழில் முனைவோர்களின் பங்கேற்பு, பொதுமக்களின் பங்கேற்பு ஆகியவற்றினால், இந்நிறுவனத்தின் முதலீடு மிகவும் பெருகியுள்ளது. பொதுத் துறையில் இந்நிறுவனங்களை ஏற்படுத்தியிருந்தால் நிலைமை என்னவாக இருக்கும் என்று ஒப்பிட்டு நோக்குமிடத்து நிறுவனம் தனியாக முயற்சிகளை மேற்கொண்டிருப்பின் இந்த அளவுக்கு தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியிருக்க முடியாது என்பது தெரிய வருகிறது.

தற்போது, இக்கழகத்திடம் 6 கூட்டுத் துறை தொழிற்பிரிவுகள் உள்ளன. அவை வணிக முறையில் உற்பத்தியினை ஏற்கனவே தொடங்கியுள்ளன. மேலும் 4 கூட்டுத் துறை தொழிற் பிரிவுகள் 1987–88 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சில கூட்டு முயற்சி தொழிற் பிரிவுகளை அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றை ஏற்படுத்தும் பணி தொடக்க நிலையில் உள்ளது.

1987–88 ஆம் ஆண்டில் உற்பத்தியை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படும் தொழிற் பிரிவுகள் வருமாறு:—

1. மேற்கு ஜெர்மனி திருவாளர்கள் சிமென்ஸ் நிறுவனத்தின் தொழில் நுட்ப உடனுழைப்புடன் ரூ. 675 இலட்சம் மூலதனச் செலவில் தொலைப்பேசி கருவிகள் தயாரிப்பு.

(2) அமெரிக்க ஐக்கிய நாட்டின் திருவாளர்கள் ஏ... ரைடு மைக்ரோ நிறுவனத்தின் தொழில் நுட்ப உடனுழைப்புடன் கணக்கீட்டுப்பொறி கருவிகளைத் தயாரித்தல். மூலதனச் செலவு ரூ.187 இலட்சம்.





(3) தென் கொரியா திருவாளர்கள் சம்மி என்டர்...ரைசஸ் நிறுவனத்தின் தொழில் நுட்ப உடனுழைப்புடன் ஒலிபெருக்கி பாகங்கள் தயாரித்தல். மூலதனச் செலவு ரூ. 1.46 இலட்சம்.

(4) அலுமினியம் எலக்ரோலிடிக் கபாசிடர்கள் தயாரிப்பிற்குத் தேவையான லெட்டேப்ஸ் பாகங்களைத் தயாரித்தல்.

கூட்டுத் துறையில் திட்டமிடப்பட்டுள்ள தொழிற் பிரிவுகளின் செயலாக்க நிலைகளை விளக்கும் விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை செய்துள்ள முதலீடு :

பொதுத்துறை தொழிற் பிரிவுகளில் இக்கழகம் மூலதன பங்குத் தொகையாக ரூ. 1.29 இலட்சம் முதலீடு செய்துள்ளது. பதிலாக நிதி நிறுவனங்களிலிருந்து குறித்த கால கடன்கள் மூலம் ரூ. 1.80 இலட்சம் பெற்றுள்ளது. இதைத் தவிர, ரொக்கக் கடன் உதவியாக ரூ. 90 இலட்சத்தை வங்கிகளிடமிருந்து பெறும் வசதியை இக் கழகம் பெற்றுள்ளது. 15–2–1987 அன்றுள்ளபடி இந்நிறுவனம் கூட்டுத்துறை தொழிற்பிரிவுகளில் பங்குத் தொகையாக ரூ. 93 இலட்சம் மூலதன முதலீடு செய்துள்ளது.

1987–88 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு :

எல்காட் நிறுவனத்திலும், அந்நிறுவனத்தின் மூலமும் மூலதனப் பங்கு வகையில் முதலீடு செய்வதற்காக 7 ஆம் திட்டக் காலத்தில் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1987–88 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2,50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தொழில் — வணிகத்துறையிலுள்ள மின்—மின்னணுவியல் தொழிற்பிரிவுகள்.

மின்னணுவியல் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, இத்துறை பின்வரும் பணிகளையும் வசதிகளையும் செய்துக் கொடுத்துள்ளது.—

1. தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் வளர்ச்சி மையங்களில் மின்னணுவியல், அது தொடர்பான தொழில்களுக்கு மட்டுமே தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துதல்.

2. அனைத்து வசதிகளுடன் கூடிய சோதனை நிலையங்கள் மூலம் குறைந்த செலவில் சோதனை, தரக்கட்டுப்பாடு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

3. உற்பத்தி, மனித சக்தி வளர்ச்சி வசதிகளைச் செய்துக் கொடுத்தல்.

4. மின்னணுவியல் மருந்துச் சாதனங்கள் மையம்/மின்னணுவியல் சோதனை ஆய்வுக்கூடங்களின் மூலமாக, மின்னணுவியல் மருத்துவச் சாதனங்கள் பழுது பார்த்தல்/சரி பார்த்தல் வசதிகளைச் செய்துக் கொடுத்தல்.

அடிப்படை வசதிகள்.—மின் சாதனம், மின்னணுவியல், மின்னணுவியல் தொடர்பான தொழில்கள் ஆகியவற்றிற்காகவே 9 மையங்களில் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை, அடையாறு டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்டிரானிக் தொழிற்பேட்டையில் 104 கொட்டகைகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத் தொழிற்பேட்டையைத் தவிர, பெருங்குடியில் 106 ஏக்கர் பரப்பளவில் தொழிற்பேட்டையை இத்துறை அமைத்துள்ளது. தொழிற்பிரிவுக்கான 174 மனைகள் தொழிலதிபர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பல பிரிவுகள் நன்னிலையில் முன்னேற்றமடைந்துள்ளன. சென்னை மாநகரை சுற்றியுள்ள பகுதிகளில் மின்னணுவியல் தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தும் எண்ணம் பெருகி வருவதால் தொழில் மனைகளுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. பெருங்குடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிற்பேட்டைக்கு அருகே தொழிற் பிரிவுகளுக்கான மனைகளுக்காகக் கூடுதலாக, நிலத்தை கையகப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. காக்களூர், ஒசூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 5 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏனைய தொழிற்பேட்டைகளில் அரசு 34 தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்காக கொட்டகைகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் 40 மேம்படுத்தப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கான கொட்டகைகள், ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களால் கட்டப்பட்டுள்ளன. சேலம் மற்றும் நந்தம்பாக்கம் ஆகிய இடங்களிலும் தொழிற்பேட்டைகள் நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மின்னணுவியல் ஆய்வு—வளர்ச்சி குறித்த படிப்புத்துறைகள்: காக்களூரில் உள்ள மத்திய மின் ஆய்வுக் கூடமும் அடையாறில் உள்ள மின் அணுவியல் ஆய்வு—வளர்ச்சி மையமும் இம்மாநிலத்தின் மின் ஆய்வு மின் உற்பத்திப் பொருள் மேம்பாட்டு வசதி ஆகியவற்றிற்குப் பெரிதும் வகை செய்கின்றன.

1. காக்களூரில் உள்ள மத்திய மின் ஆய்வுக் கூடத்தை இந்தியத் தர நிர்ணய நிறுவனம் பொருள் வழங்கல் விற்பனை இயக்குநர் அலுவலகம் தொழில் நுட்பம் வாய்ந்த மின் பொருட்களுக்காக இந்தியத் தர நிர்ணயக் குறியீடுகளின் கீழ் வருகின்ற மின்னணுவியல் பொருள் ரயில்வே அமைச்சகம் ஆகியவை ஏற்



பளித்துள்ளன. அரசுத் துறைகள் மின் சாதனங்கள் வாங்குவதில் அவற்றுக்கு இந்த ஆய்வுக்கூடம் மின் சாதனங்களின் தரம் பற்றிய ஆலோசனை வழங்கும் அமைப்பாகவும் செயல்படுகிறது. 1985–86-ல், இந்த ஆய்வுக்கூடத்தில் சோதனை வசதிகளை நவீனமாக்குவதற்குத் தேவைப்படும் நிதிகளையும் அரசு அனுமதித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட நிதியிலிருந்து வாங்கிய உபகரணங்களைக்கொண்டு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

2. அடையாறில் உள்ள, மின்னணுவியல் ஆய்வு வளர்ச்சி மையத்தில் தொழில் தர ஆய்வு அளவிடும் உபகரணங்களைப் பயன்படுத்துவதில் திறமையை வளர்ப்பதற்கான வசதிகளும், உற்பத்திப் பொருள் மேம்பாட்டு வசதிகளும், சுற்றுப்புறச் சூழல் ஆய்வு வசதிகளும் உள்ளன. மத்திய அரசின் மின்னணுவியல் துறை, சோதனை செய்யும் உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்காக, உதவி மானியம் வழங்கியுள்ளது. மேலும், தொழில் நுட்ப உதவியும் அளிக்கிறது. இம்மையம் 1986–87-ல் (1986 டிசம்பர் வரை) 3,057 மாதிரிகளை ஆய்வு செய்துள்ளது. அடிப்படை அளவீடு ஆய்வு வசதிகளும், ஓசூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ளன.

அடையாறில் உள்ள தகவல் தொகுப்பு வங்கியும் தகவல் மையமும்.—புதிய மின்னணுவியல் பிரிவுகளைத் தொடங்கக்கருதியுள்ள தொழில் முனைவர்களுக்கும் அனைத்துவகை அடிப்படைத் தகவல்களையும் வழி முறைகளையும் இம்மையம் அளித்து உதவுகிறது. இதில் பின்வருவன அடங்கும் :—

1 உற்பத்தித் திட்டத்திற்கு ஒப்புதலளித்தல், லேப் பொருட்கள், கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்தல் அடிப்படை வசதிகள், தனி ஊக்கத்தொகைகள் முதலியவற்றைப் பொறுத்தமட்டில், அரசின் கொள்கை-நடைமுறை பற்றிய நெறிமுறைகள்.

2. உற்பத்திப் பொருள் குறித்த தொழில்நுட்பத் தகவல், தொழில்நுட்ப உத்தியின் ஆதாரங்கள், தொழில் நுட்பத்தை மாற்றுதல்.

3. உற்பத்திப் பொருட்கள், அவற்றின் நடப்பு நிலை, வருங்கால அங்காடித் தேவை பற்றிய வணிகத் தகவல்.

4. பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற நிதி உதவித்திட்டம்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட சில உற்பத்திப் பொருட்கள் பற்றிய, தயார் நிலையிலுள்ள சுருக்கமான திட்ட அறிக்கைகள்.

1987 ஏப்ரல் 24]

தொழில் முனைவோரின் பயனுக்காக, தகவல்களைச் சேக
ரித்து வழங்கும் பொருட்டு கண்ப்பொறியும், ஏனைய வசதிகளும்
அமைப்பதன் மூலமாக, இம்மையம் நிலை உயர்த்தப்பட்டு நவீன
மாக்கப்பட்டுள்ளது.

தகவல்களை, ஒன்று திரட்டி, வழங்கும் பொருட்டு இம்
மையம், பல ஆண்டுகளாக, தொழில் முனைவோரின் பயனுக்
காகவும் ஏனையோரின் பயனுக்காகவும் சிறந்த தொழில்நுட்பக்
குறிப்புத் தொகுப்பு நூலகம் ஒன்றை வைத்து வருகின்றது.
மின்னியல், மின் அணுவியல், கனிப் பொறியியல் துறை சம்பந்
தப்பட்ட 900 புத்தகங்களும் 35 உள்நாட்டு, வெளிநாட்டுப்
பத்திரிகைகளும் பார்வைக்காக உள்ளன. இந் நூலகம் பலரை
யும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது.

நம்நாட்டில், மின் அணுவியல் தொழில்கள் சரியான முறை
யில் வளருவதைக் கண்காணிக்கும் பொருட்டு, மத்திய அரசு,
இந்நாட்டில், புதிய மின் அணுவியல் தொழில்களைத் தொடங்கு
வதற்கு, முன் தேவையான உற்பத்தித் திட்டத்திற்கு முன் ஒப்பு
தல் பெற வேண்டுமெனச் செய்துள்ளது. புதிய மின் அணுவியல்
பொருட்கள் 130 உள்ளன. இவற்றின் உற்பத்தித் திட்டத்திற்கு
ஒப்புதலளிக்கும் அதிகாரம், தொழில் துறை ஆணையாளர்,
தொழில்-வணிகத் துறை இயக்குநரின் தலைமையின் கீழ் உள்ள
மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுவிடம் உள்ளது. எஞ்
சிய மின்னணுவியல் பொருட்களைத் தயாரிக்கும் திட்டத்திற்குத்,
தொழில்துறை, ஆணையாளர், தொழில்-வணிகத் துறை இயக்
குநரின் பரிந்துரையின் பேரில், புது டில்லியிலுள்ள சிறு தொழில்
வளர்ச்சி ஆணையாளர் ஒப்புதல் அளித்துள்ளார். இத்தகைய
ஒப்புதல்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, இந்த முக்கியத்
துறையில் பணிகள் நாளுக்கு நாள் விரைந்து அதிகரித்து வரு
வதையே காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, 1983-ல் 156,
1984-ல் 162, 1985-ல் 203 ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருக்க,
இந்த ஆண்டில் 1986 டிசம்பர் இறுதியிலேயே 231 இனங்களுக்கு
ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இவற்றில், 199 இனங்களுக்கு
மாநில அளவிலான குழு ஒப்புதலளித்துள்ளது. எஞ்சியவற்றிற்கு
புது டில்லியிலுள்ள சிறுதொழில் வளர்ச்சி ஆணையாளர் ஒப்புத
லளித்துள்ளார்.

1986–87-ல் செயலாக்கும் பொருட்டு அரசு பின்வரும் திட்
டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது :—

1. கோயம்புத்தூர் தொழிற்பேட்டை விரிவாக்கம்.

2. தேசிய ஆய்வுக்கூடங்களிலும், இந்தியத் தர நிர்ணய
நிறுவன ஆய்வுக் கூடங்களிலும் அதிகாரிகள், தொழில்நுட்பப்
பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.



1987 ஏப்ரல் 24]

3. ஓசூரிலுள்ள பொது வசதி மையத்தை நவீனமாக்கல்.

4. ஓசூர் தொழிற்பேட்டை விரிவாக்கம்.

மேற்கூறிய இத்திட்டங்கள் செயலாக்கப்பட்டுள்ளன. பின்
வரும் திட்டங்கள் 1987–88-ல் செயலாக்கக் கருதப்பட்டுள்ளன—

1. காக்களூரில் உள்ள மைய மின்னியல் ஆய்வுக் கூடத்
தில், இந்தியத் தரக் குறியீடுகளின்படி மின்சக்தி மீட்டர்களைப்
பரிசோதனை செய்வதற்கான ஆய்வு வசதிகளைச் செய்தல்.

2. காக்களூரில் மின்னியல் தொழிற்பேட்டையில் உள்ள
எஞ்சிய நிலத்தை மேம்படுத்துதல்.

3. தொழில் கூட்டுறவுப் பிரிவு முதலியவற்றில் கனி பொறி
பயன்பாட்டை நீட்டித்தல்.

4. மைய அலுவலகத்திலுள்ள மின்னியல், மின்னணுவியல்
பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதி
கரித்தல்.

5. வேலூரில் மின்னியல், மின்னணுவியல் தொழிற்
பேட்டை அமைத்தல்.

6. திருநெல்வேலியில், மின்னணுவியல் உற்பத்திப்பொருள்
மேம்பாட்டுப் பயிற்சி மையம் ஒன்றை அமைத்தல்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (டீடா).

சூரிய வெப்பத்தினால் நீரைச் சூடேற்றும் கருவி, நீரேற்றத்
திற்கான காற்றாலை, மின் உற்பத்தி செய்யும் காற்றாலை,
கதிரொளி மின்னியக்க ஆற்றலால் தெரு விளக்குப் போடும்
பிரிவுகளும், நீரேற்றும் முறைகளும், சமுதாய கரி எரி வாயுத்
தொட்டிகளை நிறுவுதல் போன்ற பல் வேறு புதிய, புதுப்பிக்கத்
தக்க எரி சக்தி முறைகளை இயக்கிக் காட்டி வழங்கும் மாநிலம்
தழுவிய திட்டமொன்றை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு
முகமை மேற்கொண்டுள்ளது. மத்திய திட்டக்குழு ஏற்று நடத்
துகின்ற ஒருங்கிணைந்த ஊரக எரி சக்தித் திட்டத்தின் மூல
மாக, ''டீடா'' எரிசக்தி திட்டமிடலை விளம்பரப்படுத்தும்
பணியையும் மேற்கொண்டுள்ளது.

வட ஆர்காடு மாவட்டத்திலுள்ள வாலாஜா என்கின்ற புதிய
வட்டாரத்தில், 1987–88-ல் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித்
திட்டமிடும் பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.
1987–88 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கக்
கருதப்பட்டுள்ளது. இவ்வட்டாரத்தில் பின் வரும் எரி சக்தி
சிக்கன முறைகளை விளம்பரப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

1. நீரேற்றுவதற்கு காற்றாலைகளை நிறுவுதல்.

2. 5 பரித்திறனுடைய மோட்டார் பொருத்தப்பட்ட எந்திரத்துடன் சமுதாயக் கரிமவாயுத் தொட்டி ஒன்றை அமைத்தல்.

3. சூரிய வெப்ப அடுப்புகளைப் பயன்படுத்திக் காண்பித்து குறைந்த விலையில் விற்றல்.

4. அதிக வெப்பத் திறன் கொண்ட அடுப்புகளை வழங்குதல்.

5. சுஜாலா புட் வால்வுகளை வழங்குதல்.

6. பல்வகை உபகரண ஊர்திகளை (Tropiculators) சிறு உழவர்களுக்கு, அதன் மொத்த விலையில் 75 சதவீதத்தை உதவித் தொகையாக அளிப்பதன் மூலம் வழங்குதல்.

7. மண் சூளைகளை நிறுவுதல்.

தூத்துக்குடியில் உள்ளதைப் போன்ற பெரிய அளவிலான காற்றாலைப் பண்ணையை அமைக்கும் பொருட்டு, அதற்கான காற்று வளத்தை உறுதி செய்வதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு என்கிற இடத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சுல்தான் பேட்டை என்கிற இ—த்திலும் செயல்முறை அடிப்படையில் காற்றின் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்யும் எந்திரம் (75—100 கிலோ வாட்) ஒன்றை அமைக்க கருதப்பட்டுள்ளது.

1986—87 ஆம் ஆண்டிலும், 1987-88ஆம் ஆண்டிலும் பின்வரும் புதிய திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு, மத்திய அரசு அவற்றுக்கு அனுமதி அளித்துள்ளது—

1. தமிழ்நாட்டில் நீரேற்றுவதற்காக 150 காற்றாலைகளை நிறுவுதல், சுமார் ரூ. 13,500 மதிப்புள்ள காற்றாலை ஒவ்வொன்றும் உழவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

2. கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 9 இடங்களில் காற்றடிப்பதைக் கண்காணிக்கும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் உள்ள 9 இடங்களில் காற்று வீசும் வேகத்தை அளவிடும் பொருட்டு, காற்று அளவிடும் கருவியுடன் இணைந்ததும், சங்கிலியால் சமநிலையில் பிணைக்கப்பட்டதுமான, ஒவ்வொன்றும் 20 மீட்டர் உயரமுள்ள 9 கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நீரேற்றுவதற்காக, காற்றாலைகளை அமைக்கும் பொருட்டு, காற்று வளத்தை காட்டும் வரைபடம் வரைவதற்காக தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலும், படிப்படியாக அமைந்த திட்டத்தின் கீழ் 30 இடங்களில் காற்றைத் திட்டமிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.





பத்து காற்று மின் உற்பத்திக் கருவிகளுடன் 18—1—1986 முதல் தூத்துக்குடியில் தொடங்கப்பட்ட காற்றாலைப் பண்ணை 31—1—1987 வரையில் 9.09 இலட்சம் யூனிட் மின்சாரம் தயாரித்துள்ளது. மேலும், 10 மின் உற்பத்திக் கருவிகளை அமைப்பதன் மூலம் இது விரிவாக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் குழு—

அரசு, " தமிழ்நாடு அறிவியல், தொழில்நுட்பவியல் மாநில மன்றம்" என்கிற உயர்நிலை நிறுவனமொன்றை ஏற்படுத்தி உள்ளது. இம்மன்றத்திடம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பற்பல கூறுகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்படும் இடங்களைக் கண்டுபிடித்து அவைகளுக்கான திட்டங்களைத் தீட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம்மன்றம் ஒரு புகழ்பெற்ற சமூக விஞ்ஞானித் தலைமையில் தன்னாட்சி அமைப்பாக இயங்கி வருகிறது. இம்மன்றம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் திட்டங்கள் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான அறிவுரைகளை அரசுக்கு வழங்கும். இதில் புகழ்வாய்ந்த கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், அறிவியலாளர்கள் குறிப்பிட்ட வளர்ச்சித் துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கும் நிருவாகிகள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இம்மன்றம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்காகத் திட்டமிடுவதில் அரசுக்கு ஆலோசனையும் வழங்கும்.

1986—87-ம் ஆண்டு அரசு ரூ. 4.68 இலட்சங்களை கீழ்காணும் திட்டங்களுக்காக இம் மன்றத்திற்கு வழங்கியுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கல்வி ஆராய்ச்சி—பயிற்சி— | |
| (i) தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் படிப்பை அரைகுறையாக நிறுத்துவதைத் தடுப்பதற்கான கொள்கைத் திட்டம். | 1.00 |
| (ii) சத்துணவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய தகவல். | 0.80 |
| (iii) தொழில் நுட்பப் பணியாளர்களின் தொழில் நுட்பக் கல்வித்தரத்தையும் தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்ள அவர்களுக்குள்ள திறனையும் மதிப்பிடுதல். | 1.10 |

2. சமூக அறிவியல்—

| | |
|---|---|
| (i) கிராமப்புற மகளிருக்கு தொலைக்காட்சி மூலமாகத் தொழில் நுட்ப முறைகளைத் தெரிவித்தல். | 1.43 |
| (ii) சமூக அறிவியலுக்காக, கணிபொறி முறை விவர பகுப்பாய்வு பற்றிய பயிற்சி. | 0.25 |
| மொத்தம் .. | 4.68 |

மன்றம் தெரிந்தெடுத்து இதைப்போன்ற ஆராய்ச்சி வளர்ச்சி பணிகளுக்கு 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் ஒப்புத லளிக்கக் கருதப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி பணியாளர்களுக்கும், களநிலை நிருவாகிகளுக்கு மிடையே கூட்டங்கள் விவாதங்கள் ஆகியவற்றை இம்மன்றம் நடத்துகிறது. இதனால், மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவு கள், களத்தில் பயன்படுத்தப்படுகிறது. களத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு, நடைமுறைக்கு உகந்த தீர்வு காண்பதற்காக ஆராய்ச்சி அறிவியல் வல்லுநர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. 1986–87 ஆம் ஆண்டில் மன்றம் பின்வரும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தது :—

(1) எரிசக்தி அறிவியல் வல்லுநர்கள் பயன்படுத்துவோர் களிடையிலான சந்திப்புக் கூட்டம்—1986 அக்டோபர்.

(2) தமிழ்நாட்டில் சாலைகள், போக்குவரத்து குறித்து ஆராய்ச்சி அறிவியல் வல்லுநர்கள், நிருவாகிகள் ஆகியோ ரிடையே விவாத அரங்கு—1987 பிப்ரவரி.

(3) தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு குறித்து ஆராய்ச்சி அறிவியல் வல்லுநர்கள் நிர்வாகிகளிடையிலான விவாத அரங்கு —1987 பிப்ரவரி.

(4) தமிழ்நாட்டில் தொழில் மேம்பாட்டுப் பயிற்சியாளர் மாநாடு—1987 ஜனவரி.

(5) கிராம வீட்டுவசதிக் குறித்து ஆராய்ச்சி அறிவியல் வல்லுநர்கள்—கள நிர்வாகிகளிடையில் விவாத அரங்கு—1987 பிப்ரவரி.

(6) குடிநீர் வழங்கல் என்ற பொருள் பற்றி அறிவியல் வல்லுநர்களும் களப்பணியாளர்கள் கூட்டம்—1987 மார்ச்.





பல்கலைக் கழகங்களுக்கு தொண்டு 'முகவரமைப்புகளுக்கு/ கல்லூரிகளுக்கு நிதியுதவி செய்யும் மத்திய அரசின் முகவரமைப்பு களிடமிருந்து கிடைக்கும் தகவல்களை அவற்றுக்கு வழங்குவதிலும் இம்மன்றம் தீவிரமாகச் செயலாற்றி வந்துள்ளது. இத னால், தமிழ்நாட்டிலுள்ள, பல்கலைக்கழகங்கள் தொண்டு நிறு வனங்கள் கல்லூரிகள் ஆகிய மத்திய அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களிலிருந்து பயனை உரிய காலத்தில் அடைய இயலும். சில எடுத்துக் காட்டுகளாவன.—பொறியியல் கல்லூரிகளில் தொழில் மேம்பாட்டுப் பிரிவுகளை ஏற்படுத்தல், பல்கலைக் கழ கங்களில்/கல்லூரிகளில் தொழில் முனைவர் விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்துதல், உதவிகேட்டு, ஆராய்ச்சிப் பணியாளர் களிடமிருந்து வரப்பெறும் ஆராய்ச்சி செயற்குறிப்புகளை, மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறைக்கு அனுப்புதல்.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பவியல் மையம் :

அறிவியலைப் பெருமளவில் மக்களிடையே பரவச் செய்வதற் காக, ''தமிழ்நாடு அறிவியல்—தொழில் நுட்பவியல் மையம்'' என அழைக்கப்படும் தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு சங்கத்தை அரசு அமைத்துள்ளது. அறிவியல்-தொழில் நுட்பத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் இந்த அமைப்பின் தலைவராவார். இளம் தலைமுறையினரிடையே அறிவியல் உளப்பாங்கினையும், சிந்தனையையும் மேம்படுத்துவதே அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் நோக்கமாகும். சென்னையில் ரூ. 3.85 கோடி செலவில் பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் ஒன்றினை அமைக்கவும் ரூ. 1.59 கோடி செலவில் விண்மின் அரங்கு அமைக் கவும் அரசு ஒப்புதலளித்துள்ளது. மேற்சொன்ன திட்டப் பணி களுக்கான திட்டச் செலவு முறையே ரூ. 6.82 கோடியாகவும், ரூ. 2.00 கோடியாகவும் திருத்த கருதியுள்ளது. ''விண்கோள்கள் காட்சி அரங்கு'' (Planetarium) கட்டுவதற்கான மொத்தச் செலவும் தொழிலதிபர் திரு. சி. கே. பிர்லாவால் நன்கொடையாக அளிக்கப்படுகிறது.

2. பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் ஏற்படுத்தும் பணி முழு வேகத்துடன் நடைபெற்று வருகிறது. 6,448 ச.மீட்டர் பரப்பில் கட்டப்படும் கட்டிடத்தின் முதல் நிலை 1987 இல் தயாராகிவிடும். ''இயற்பியல் சார்ந்த அறிவியல் அரங்கு'' (Physical Sciences Gallery) பெரியார் அரங்கு (Periyar Gallery) போக்குவரத்து இயல் அரங்கு (Transportation Gallery மின்னணு வியல், செய்தித் தொடர்பியல் அரங்கு (Electronics and Communication Gallery) ஆகிய நான்கு அரங்குகள் 1987 ஆம் ஆண்டு இறுதிக்குள் பொதுமக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப் படும். 1988 ஆம் ஆண்டு இறுதிக்குள் மேலும் நான்கு அரங்குகள் தயாராகிவிடும்.

[1987 ஏப்ரல் 24

3. 1987—88 ஆம் ஆண்டில் 4,800 ச.மீட்டர் பரப்பில் இரண்
டாம் நிலையை எடுத்துக்கொண்டு, 1989 ஆம் ஆண்டில், முடிப்பு
தற்குக் கருதப்படுகிறது. இங்கு மேலும் 8 அரங்குகள் அமைக்கப்
படும். இம் மையம் 16 அரங்குகளுடன் 1989 ஆம் ஆண்டில் கட்டி
முடிக்கப்பட்ட பின்னர், தமிழ்நாட்டில் இதுதான் முதலாவதாக
இருக்கும். அரங்குகளில், நுட்பத்திறம் மேம்பட்ட காட்சிப்
பொருள்களையும், பங்குகொள்ளும் பலதுறைகளின் சார்பில்
காட்சிப் பொருள்களையும் காட்சிக்கு வைப்பதற்கு முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1,500 ச. மீட்டர் பரப்பளவில் 271 பேர் அமர்ந்து பார்க்கக்
கூடிய ''விண் கோள்கள் காட்சி அரங்கை'' ஏற்படுத்தும் பணி
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்விண் கோள்கள் காட்சி
அரங்கில் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஜி.எம். 2
புரொஜக்டர் இருக்கும்.

விண்ணகத்தில் நட்சத்திரங்களின் நிலை, சூரியன், சந்திரனின்
விரிவான தோற்றங்கள், விண்கலம், வால்நட்சத்திரங்கள், சூரிய
சந்திர கிரணங்கள் தோன்றும் விதம் முதலான வானவியல்
சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் புரொஜக்டர் மூலம் காண்பிக்கப்
படும்.

இதைப்போன்று, நடுத்தர அளவிலான அறிவியல் மையங்களை
திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் ஏற்படுத்தக் கருதப்
படுகிறது.

தொலை உணர்வு மையம், மற்றும் அண்ணா பல்கலைக் கழகத்
தின் ஏனைய மையங்களும் :

தொலை உணர்வு என்பது பூமியின் பௌதிக இயல்புகள்
நிலைத் தன்மைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்வதற்காக
விண் வெளியிலிருந்தும் செயற்கைக் கோள்களிலிருந்தும் எடுக்கப்
பட்ட புகைப்படங்களைப் பயன்படுத்தும் தொழில் நுட்ப உத்தி
யாகும். தொலை உணர்வு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி
தமிழ்நாட்டின் இயற்கை வளங்களைக் கண்டறிந்து மதிப்பிடும்
பொருட்டு, அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் தொலை உணர்வு
மையம் 1982 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்
பட்டது. இந் நோக்கத்திற்காக அரசு ஐந்தாண்டுகளில் ரூ. 76
இலட்சம் மானியம் அளித்தது. விண்வெளியிலிருந்து எடுத்த
புகைப்படங்களையும், செயற்கைக் கோள் அளித்த புள்ளி விவரங்
களையும் விரிவாக விளக்குவதற்கு இந்நிறுவனத்தில் நவீன
சாதனங்கள் உள்ள ரூ. 160 இலட்சம் செலவில் இறக்குமதி செய்
யப்பட்ட சக்திவாய்ந்த அறிவியல் கணக்கிடு பொறியை (VAX



1987 ஏப்ரல் 24]

11/780) வாங்கியதன் மூலம் வசதிகள் மேலும் வலுப்படுத்தப்
பட்டு வருகின்றன. மேற்கு ஜெர்மனியிலிருந்து தொழில் நுட்ப
உதவியாக ரூ. 90 இலட்சம் மதிப்புள்ள புகைப்பட தகவல்வரை
படத் தகவல் விளக்கச் சாதனத்தை இந்நிறுவனம் பெற்றுள்ளது.
இந்நிறுவனத்தின் குறிக்கோள்களாவன :

(1) தொலை உணர்வைப் பயன்படுத்தும் பல்வேறு துறை
அதிகாரிகளுக்குப் பயிற்சியளித்தல்.

(2) நிலம், வானம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த தகவல்
விவரங்கள் அடங்கிய தகவல் மையம் ஒன்றை ஏற்படுத்துதல்
இயற்கை விவரங்கள் குறித்த தகவல் அளிப்பு ஏற்பாடு ஒன்றை
உருவாக்குதல்.

(3) இயற்கை வளங்களை ஆராய்ந்து நிருவகிக்கத் தொலை
உணர்வு ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளுதல்,

(4) உற்பத்தி நோக்கிலான களப் பணிப் பிரச்சினைகளில்
தொலை உணர்வைப் பயன்படுத்தும் துறைகளுக்கு உதவி செய்
தல்.

(5) எம். டெக் திட்டத்திற்கு (தொலை உணர்வு) கல்விப்
பயிற்சி சார்ந்த ஆதரவு அளித்தல் ;

பயிற்சித் திட்டங்கள் :

தொலை உணர்வு மையம் இதுவரை பல பயிற்சித் திட்டங்
களையும் கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது. தொலை
உணர்வைப் பயன்படுத்துவதில் 120 பேருக்குப் பயிற்சியளிக்கப்
பட்டுள்ளது.

தகவல் விவரங்கள் :

தொலை உணர்வு மையம் தமிழ்நாடு மாநிலம் முழுவதற்
கும் தொடர்பான இட அமைப்பியல் தாள்கள் விண் வெளி
யிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் துணைத் கோள்
அளித்த தகவல் விவரங்கள் போன்ற இடு பொருள்களை, மத்திய
அரசின் இந்திய நில அளவை. விண்வெளித்துறையிடமிருந்து
பெறுகிறது. மாநிலத்தில் நலத் திட்டங்களை வகுக்கும்போது
குறிப்புக்காக தொலை உணர்வு பயன்பாட்டுத் துறைகளுக்கு
உதவி செய்வதற்காக பல தகவல் விவரங்கள் அடங்கிய மையம்
ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ஆலோசனைத் திட்டங்கள் :

தொலையுணர்வு மையம் தேசிய அளவில் அங்கீகரிக்கப் பட்டதால், இந்நிறுவனம் மேற்கொண்ட ஆலோசனைத் திட்டங் களில் மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழ்நிலைத் துறை நிதி உதவி அளிக்கும் ''மேற்கு மலைத் தொடரில் உயிரின வாழ்க்கைச் சூழல் சீரழிவை மதிப்பிடும் திட்டம்'' மத்திய அரசின் தேசிய தரிசுநில மேம்பாட்டு வாரியம், முதல் நிலையில் சேலம், தரும புரி ஆகிய மாவட்டங்களில் தரிசு நிலங்களை மதிப்பிடுதல், போன்ற மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் குறிப் பிடத்தக்கவையாகும்.

தொலை உணர்வு பயன்பாட்டுத் துறைகளுக்கு உதவி :

இரு வட்டங்களில்—அதாவது செஞ்சி, வந்தவாசி ஆகிய வட்டங்களில்—கிராம வரைபடங்களை நாளது வரை புதுப்பித் துள்ள விவரங்களுடன் வைத்திருப்பதற்காக, நில அளவை நில பதிவேட்டுத் துறைப் பணியாளர்களுக்குப் பணியகப் பயிற்சியும், வல்லுநர்களின் ஆலோசனையும் அளிக்கப்பட்டன.

2. தகவல் புள்ளிவிவரங்களை கணக்கிட்டுப் பொறியின துணை கொண்டு வகைப்படுத்துவதற்கும் தொலை உணர்வு வாயில் செயல்முறை திட்டங்களுக்காக, பல்வகை விளக்க வரை படங்களில தகவல் விளக்கத்திற்கும் வேளாண்மைப பொறியியல் துறைக்கு வசதிகள் அளிக்கப்பட்டன.

3. மண் வளத்தைப் பற்றி ஆராய்வதற்காக வேளாண்மைத் துறைக்கு கருவிகளும் வல்லுநர் ஆலோசனையும் கிடைக்கச் செய்யப்பட்டன.

கல்விசார்ந்த ஆதரவு :

தொலை உணர்வு மையம், பல்வேறு இயற்கை வளங்களுக்கு தொலை உணர்வை பயன்படுத்துவது குறித்து விருப்பு உரிமை பாடம் அளிப்பதில் அண்ணா பல்கலைக் கழகம் நடத்திய எம்.டெக் திட்டத்திற்கு (தொலை உணர்வு) கல்வி சார்ந்த ஆதரவளித்தது. அறிவியல் வல்லுநர்களும் எம். டெக். படிப்பவர்களுக்கு அவர் களுடைய பாடத் திட்டப் பணியில் வழிகாட்டுகின்றனர். முது கலை பட்டப்படிப்பில் சேருவதற்கு அனுமதிக்கப்பட்ட மொத்தம் 10 இடங்களில், தகுதியான மாநில அதிகாரிகளுக்காக ஒவ் வோராண்டும் 50 சதவீதம் ஒதுக்குவதன் மூலம் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.





ஏனைய மையங்கள் :

அண்ணா பல்கலைக் கழகத்தின் பின்வரும் மையங்கள் 1986 ஆம் ஆண்டில் மின்னணுவியல், அறிவியல் தொழில் நுட்பத் துறை யுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தனிச்சிறப்பு மையங்களாக உருவாக்கக் கருதப்படுகிறது.

1. நீர்வள மையம்.

2. சுற்றுப்புறச் சூழல் ஆய்வு மையம்.

3. மனித குடியிருப்பு ஆய்வு மையம்.

4. புதிய, மீண்டும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதார மையம்.

5. படிக வளர்ச்சி மையம்.

6. உயிரியியல்-தொழில் நுட்பவியல் மையம்.

7. ஒருங்கிணைந்த கடல் ஆய்வு நிர்வாக மையம்.

இம் மையங்கள் பாசன நீர்ப் பயன்பாடு, சுற்றுப்புறச் சூழல் தொலை உணர்வு, மனிதர் குடியிருப்பு உயிரியியல் தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளில் முன்னோடிப் பணியைச் செய்து வருகின்றன. இதுவரை மேற்கொண்ட பணிகளில் குறிப்பிடத் தக்கது நவீனமயமாக்கல் குறித்த ஆராய்ச்சித் திட்டமாகும். கொசுக் கொல்லி நுண்ணுயிர்களைப் பயன்படுத்தி கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கு ரூ. 2.25 இலட்சம் செலவில் சோதனைத் திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம் உயிரின தொழில்நுட்ப மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம் (வாய்ப்புப்பற்றிய குறிப்பு வழங்கும் திட்டம்).

இந்திய அரசு, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை அமைச்சகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை யைச் சேர்ந்த தேசிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தின் (NSTEDB) கூட்டு முயற்சியுடன் தருமபுரி மாவட்டத்திற்கு தொழில் வாய்ப்புப் பற்றிய தகவல் குறிப்பு தயாரிப்புத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்திற்கு தற்போது அறி வியல் மற்றும் தொழில்நுட்பவியல் தொழில் முனைவோர் திட் டம் (STED) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

[1987 ஏப்ரல் 24

இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனங்களிலும், பல்கலைக்
கழகங்களிலும், பொறியியல் கல்லூரிகளிலும் பயிற்சிபெற்றவர்
களிலிருந்து பல தொழில் பயிற்சிப்பள்ளிகளிலும், தொழில் பயிற்சி
நிலையங்களிலும் பட்டம் பெற்றவர்கள் வரையில் எல்லா நிலை
களிலுமுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பணியாளர்
களுக்கு சுயவேலை வாய்ப்பை உருவாக்குவதற்காகவே இத்
திட்டம் முக்கியமாக வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரண்டு கட்டங்களில் செயல்படுத்தப்படத் திட்ட
மிடப்பட்டுள்ளது. முதற் கட்டத்தின்போது பொருளாதாரத்
தில் எல்லாத்துறைகளிலும் கிடைக்கப்பெறும் இதுவரையில்பயன்
டடுத்தப்படாத வாய்ப்புக்களைக் கண்டறிந்து, ஒருங்கிணைந்த
தகவல் அளிக்க வாய்ப்பு ஆதாரங்கள் குறித்த தகவல் சேகரிக்
கப்படும். இந்திய புவி அமைப்பியல் ஆய்வுத்துறை, இந்திய விலங்
கியல் ஆய்வுத்துறை, இந்திய அறிவியல் தொழில் ஆராய்ச்சி
ஆய்வுக் கூடங்கள் ஆய்வுக்குழு, இந்திய நில அளவைத்துறை
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்குழு முதலிய மத்திய துறை
களிலும் மற்றும் மாநில துறைகளில் பணியாற்றி வருகின்ற
நிபுணர்களையும் மற்றும் சிறப்பு அறிவுத்திறனுடையவர்களையும்
பயன்படுத்தி இத்திட்டம் நடத்தப்படும். இந்த ஆய்வுப் புள்ளி
விவரத்தில் இயற்கை வளவாயில்கள் கிடைக்கின்ற மனித ஆற்
றல், இருக்கின்ற அடிப்படை வசதிகள் முதலியவை தொடர்
பான தகவல்கள் அடங்கும். ''ஆதாரங்கள் குறித்தத் தகவல்
குறிப்பு'' வழங்கும் தகவலைப் பயன்படுத்தி, அறிவியல் மற்றும்
தொழில் நுட்பவியல் பணியாளர்கள் தலைமீட்டின் மூலம்
ஆட்கள் எந்திரங்கள், பொருள்கள், பணம் (M'S) ஆகிய
உள்ளூர் ஆதாரங்களின் அடிப்படையில் ''தொழில் வாய்ப்புப்
பற்றிய குறிப்புத்'' தயாரிக்கப்படும். சுயவேலைவாய்ப்பில் அக்
கரையுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பணியாளர்
களைக் கண்டறிந்து தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சியளிக்
கப்படுகிறது என்பதோடு, எந்தத் திட்டத்தைத் தொடங்க
விரும்புகிறார்களோ அந்தத் திட்டத்தைத் தெரிந்தெடுப்பதிலும்
நிறுவன நிதியைப் பெறுவதிலும், தொழில் பிரிவுகளை அமைப்
பதிலும் அவர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தொழில் வளர்ச்சிக்காக, தருமபுரி
மாவட்ட வளர்ச்சிக் கழகமும், தருமபுரி தொழில் மையமும் மூன்
றாண்டு தொலை நோக்குத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளன.
1986 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தயாரிக்கப்பட்ட நான்கு
தொகுதிகளையுடைய ஆவணம் பின்வருவனவற்றைக் கொண்
டுள்ளது:—

(அ) தொலை நோக்குத் திட்டம் ....

(ஆ) திட்டக்குறிப்புகள் — பட்டுப்புழு வளர்ப்பு அடிப்படையிலானத் தொழில்கள்.



1987 ஏப்ரல் 24]

(இ) திட்டக் குறிப்புகள் .. கனிமம் அடிப்படையிலானத் தொழில்கள், இரசாயனப் பொறியியல், அது சார்ந்தத் தொழில்கள், கைவினைப் பொருள்கள், துணைத் தொழில்கள்.

(ஈ) திட்டக் குறிப்புகள் ... வேளாண்மை அடிப்படையிலான தொழில்கள்.

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம், புதிய தொழில் வாய்ப்
புகளைக் கண்டறியவும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட குறிப்பு
களை மேற்கொண்டும் நாளது தேதிவரையிலானதாக ஆக்கவும்
பல தொழிற்சாலைகளுடனும், ஆராய்ச்சி நிலையங்களுடனும்
தொடர்புகொண்டுள்ளது. கண்டறியப்பட்ட தொழில்கள் பற்
றிய சிறு புத்தகம் ஒன்று தயாரிக்கப்பட்டு, பரந்த அளவில்
வழங்கப்பட்டுள்ளது. ஓசூர், கிருஷ்ணகிரி தவிர பென்னகரம்
தோப்பூர், மொரப்பூர் ஆகிய இடங்கள் தொழில் வளர்ச்சி,
மையங்களாக மேம்படுத்தத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.
புதிய தொழில் முனைவர்களுக்குரிய பயிற்சித்திட்டங்கள் மேற்
கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டப்பணிக்காக தருமபுரி மாவட்டத்திற்கு மத்திய
அரசு ரூ. 2.09 இலட்சம் வழங்கியுள்ளது.

அறிவியல்—தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள்
மேம்பாட்டுத் திட்டத்தை தொழில் (வாய்ப்புப் பற்றிய குறிப்பு
தயாரிக்கும் திட்டத்தை) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்
டத்திலும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசின் அறிவியல் மற்
றும் தொழில் நுட்பவியல் துறை ஒப்புதலளித்துள்ளது. இது
மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருச்சிராப்பள்ளி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் பூங்கா (STEP) :**

இந்திய அரசு அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை கொண்டு
வந்துள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில்
முனைவர் பூங்காத் திட்டம் (STEP), அறிவியல் மற்றும்
தொழில் நுட்பவியல் பிரிவில் உள்ள செயல்படும் ஆற்றல்
வாய்ந்த தொழில் முனைவர்களுக்கு குறிப்பிடத்தக்க, பொரு
ளார்ந்த உதவியை நல்கிவருகிறது. கல்வி நிறுவனங்கள் மற்றும்
பரிந்துரைக்கும் தொழில் துறைகளைச் சேர்ந்த பணிபுரிந்துவரும்
பொறியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோரின்
வழிகாட்டுதலுடனும், ஆதரவுடனும் தற்போதைய தொழில்
தொடங்கியுள்ள தொழில் முனைவர்கள் பரிட்சார்த்த முறை

யிலும் மூல முன்மாதிரியைத் தயாரிக்கும் வகையிலும் ஈடுபடுவதற்குரிய கலன்களை உருவாக்கப்பட்ட வளர்ச்சிக்குரிய சூழ்நிலையை இந்திட்டம் அளிக்கிறது. இந்த மூல மாதிரியை வெற்றிகரமாகத் தயாரித்த பின்னர், தாங்களாகவே சொந்தமாகச் சிறு தொழிலைத் தொடங்க முன்வரும் இளந் தொழில் முனைவோர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப தொழில் முனைவோர் திட்டம் ("ஸ்டெப்") உரிய வங்கிகளிலிருந்து நிதிகளை முதலியவற்றைப் பெறுதல் ஆகியவற்றிலும் உதவி புரிகிறது. கல்வி, ஆராய்ச்சி நிலையங்கள், நிதி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே ஓர் இணைப்புப் பாலமாகச் செயல்படுவதின் மூலம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையில் தொழில்களை மேம்படுத்துவதே "ஸ்டெப்" திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

"ஸ்டெப்" திட்டம் புதிய அறிவியல் மற்றும் நுட்பவியல் சார்ந்த தொழில் முனைவர்களாக்குவது அல்லாமல், அறிவியல் தொழில் நுட்பவியல் உத்திகளை தொழில் உற்பத்தி நடைமுறைகளில் பின்பற்றுமாறு தற்போதுள்ள தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் பணியையும் புரிகிறது. இவ்வாறாக அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் திட்டம் பல்கலைக் கழகம் / ஆராய்ச்சி நிலையங்களுக்கும் தொழில்துறைக்கும் இடையில் ஓர் இணைப்புப் பாலமாக செயலாற்றவும் வகை செய்கிறது.

திருச்சிராப்பள்ளியில் வட்டாரப் பொறியியல் கல்லூரியின் வளாகத்திற்குள் "ஸ்டெப்" திட்டத்தைத் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் திட்டத்தை செயல்படுத்துவதற்கான மூலதனச் செலவு ரூ. 150 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அறிவியல் மற்றும் நுட்பவியல் தொழில் முனைவர்கள் திட்டத்திற்கு நிதியுதவிச் செய்வது பற்றிய விவரம் பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|
| 1. தமிழ்நாடு அரசு | 20.50 |
| 2. மாநில அளவிலான நிறுவனங்கள், வணிக வங்கிகள் | 30.00 |
| 3. "பெல்" நிறுவனம், திருச்சிராப்பள்ளி | 6.00 |
| [illegible] .. | |



| | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|
| நிதியுதவி நிறுவனங்கள் : | |
| இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஐ.டி.பி.ஐ. (I.D.B.I.) / ஐ.சி.ஐ.சி.ஐ. (I.C.I.C.I.) | 41.50 |
| | 106.00 |
| குறைந்த வட்டி வீதத்திலான கடன் .. | 44.00 |
| மொத்தம் .. | 150.00 |

இத்திட்டத்திற்காக, 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் அனுமதியளிக்கக் கருதப்பட்டுள்ளது.

பல்வகைத் தொழில் நுட்ப மாற்று மையங்கள் :

சி.எஸ்.ஐ.ஆர். ஆய்வுக்கூடங்களிலிருந்து தனித்துறை சிறப்பறிவுத் திறனுடைய வாயில்களிலிருந்து அறிவியல்-தொழில் நுட்ப உதவிகளைப் பெறுவதற்காக மாநில அரசுத் துறைகள், தொழிற் நிறுவனங்கள் மேம்பாட்டு சாலைகள், அதனைச் சார்ந்துள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும், தொடர்பு முனையாகவும் [illegible] வரையமைப்புகள் ஆகியவற்றுக்கும், மாநிலங்களில் பல்வகைத் இணைப்பு மையமாகவும் செயலாற்ற மாநிலங்களில் பல்வகைத் தொழில் நுட்ப மாற்று மையங்களை (Polytechnology Transfer Centre) அமைப்பதற்கு சி.எஸ்.ஐ.ஆர். திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளது. தற்போது, பத்து மாநிலங்களின் தலைநகரங்களில் பல்வகை தொழில் நுட்ப மாற்று மையங்கள் உள்ளன (கேரளா, [illegible] உட்பட). சி.எஸ்.ஐ.ஆர். [illegible] 1987–88 ஆம் ஆண்டில் [illegible] 5 [illegible] இம்மாநிலத்திலும் அத்தகைய மையம் ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

க. [illegible]ராசாராம்,

[illegible] மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்.

## இணைப்பு I.

### தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் (எல்காட்)

ஏற்கனவே வணிக உற்பத்தியில்ஈடுபட்டுள்ள கூட்டுறவுத் துறைத் திட்டங்கள்.

| நிறுவனத்தின் பெயர். | திட்டச் செலவு. | வணிக உற்பத்தியைத் தொடங்கிய ஆண்டு. | உற்பத்திப் பொருள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| திருவாளர்கள் ஹேப்பிஹெளஸ், டி.வி. மேனிபேக்சரிங் டிவிசன் லிமிடெட், (இது சியேர்ஸ் எலக்ட்ரானிக்ஸ் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.) | 143.30 | 1984–85 | கருப்பு வெள்ளை, வண்ண டி. வி. |
| திருவாளர்கள் ருக்மினி எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட். | 55.00 | 1984–85 | மின்னணுவியல் இணைப்பு பாகங்கள். |
| திருவாளர்கள் அட்வென்ட் கம்ப்யூட்டர் சர்விசஸ் லிமிடெட். | 24.60 | 1984–85 | கம்ப்யூட்டர் சாப்ட்வேர் |
| திருவாளர்கள் எல்காட் பவர் கண்ட்ரோல்ஸ் லிமிடெட். | 53 80 | 1985–86 | எலக்ட்ரானிக் பவர் கண்ட்ரோல்ஸ் முறைகள். |
| திருவாளர்கள் கோடி எல்காட் லிமிடெட். | 60.00 | 1986–87 | மருத்துவம் சார்ந்த மின்னணுவியல். |
| திருவாளர்கள் ஸாம்ப்டா எல்காட் லிமிடெட். | 16.30 | 1985–86 | மின்னணுவியல் சாதனம். |



## இணைப்பு II.

ஏற்கனவே ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டின்கீழ் உள்ள கூட்டுத்துறைத் திட்டங்கள்.

| நிறுவனத்தின் பெயர். | திட்டத்தின் பெயர். | தேவையான திட்டச் செலவு. | திட்டத்தின் நிலைகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| திருவாளர்கள் இன்போடெக் லிமிடெட். | கம்ப்யூட்டர் முறைகள். | 187.00 | இதன் செயற்பாட்டு நிலைமை முன்னேற்றம் அடைந்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் வணிக உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| திருவாளர்கள் எல்காட் விஸ்டாஸ் லிமிடெட். | ஒலிபெருக்கியின் இணைப்பு பாகங்கள். | 146.00 | இதன் செயற்பாட்டு நிலைமையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் வணிக உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| திருவாளர்கள் டெலிமேட்டிக்ஸ் சிஸ்டம்ஸ் லிமிடெட். | தொலைபேசிக் கருவிகள். | 675.00 | இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலைமையில் உள்ளது. வணிக உற்பத்தி 1987–88ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |

| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சத்தில்.) | (4) |
|---|---|---|---|
| திருவாளர்கள் விஸ்பில்டு எலெக்ட்ரானிக் (பி) லிமிடெட். | கெபாசிட்டர்களுக்கான எந்திர உறுப்புகளும் லெட் டேப்புகளும். | 23.20 | இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1987–88ஆம் ஆண்டில் வணிக உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. |
| திருவாளர்கள் தமிழ்நாடு மைக்ரோவேவ் காம்பொனெண்ட்ஸ் லிமிடெட். | 'சா' பில்டர்கள். | 75.00 | செயற்பாட்டின் தொடக்க நிலையில் உள்ளது. தொழில் நுட்ப ஒத்துழைப்பு குறித்து முடிவு இறுதி செய்யப்பட்டு வருகின்றது. |



இணைப்பு III.

அரசு ஒப்புதலளிக்கப்பட்டு செயற்பாட்டின் தொடக்க நிலைகளில் உள்ள திட்டங்கள்.

| திட்டத்தின் பெயர். (1) | தோராயமான திட்டச் செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| அச்சிட்ட சர்க்யூட் போர்டுகள் | 300.00 |
| இரவில் பார்க்கத்தக்க பைனாகுலர்களும் ஆப்டோ எலக்ட்ரானிக்ஸ்களும் | 530.00 |
| வணிகப்புள்ளி விவரங்களைக் கையாளுவதில் பயன்படுத்தத்தக்க உறுப்புக்களையும் பெரிபிரல் கருவிகளையும் தயாரித்தல். | 150.00 |
| சோலார் போட்டோவோல்டிக் சிஸ்டம்ஸ் | 720.00 |
| டிப்லக்ஷன் இணைப்புப் பாகங்கள் | 300.00 |

136524
V211,31 N87
N87-40-2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, C[illegible]
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirapalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

©